வெளியீடு : 27-02-2020 Issued: 27-02-2020

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, ஜூலை 17, 2019—தொகுதி 65

Wednesday, the 17th July 2019—Volume 65

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

17–7–2019

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
Governor and Council of Ministers	xiii-xvii
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxxi
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	*1-54*
2. தகவல் கோரல்—	*54-77*
(அ) 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக் கோரும் இரண்டு மசோதாக்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளது குறித்து மத்திய அரசின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது	*54-69*
திரு. மு.க. ஸ்டாலின்	*55-56, 62-63, 67-69*
*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்	*56-61, 63-64, 68-69*
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	*65-68*
(ஆ) உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தால் செயலாக்க மானியம் வழங்கவில்லை என மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருப்பது	*69-73*
திரு. மு.க. ஸ்டாலின்	*69-70*
*திரு. கரி. இராமசாமி	*70-71*
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	*71-73*

பக்கங்கள்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் ஆழியாறு–மணக்கடவு வரை கூடுதல் தடுப்பணைகள் கட்டுதல் 73-75

*முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் 73-75

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 75

(ஈ) வெள்ளையாறு சீரமைப்பினையொட்டி மன்னார்குடி தொகுதி, ஆயக்குடி கிராமம், அராபத் தெருவிலுள்ளவர்களை மறுகுடியமர்வு செய்தல் மற்றும் பாலம் கட்டுதல் 75-77

திரு. டி.ஆர்.பி. ராஜா 76-77

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 77

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்— 78-82

(அ) காஞ்சிபுரம், புற்றுநோய்க்கான மேன்மைமிகு மையம் ஏற்படுத்துதல், ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்துதல், விபத்துகளில் தலைக்காயம் அடையும் நபர்களைக் காக்க மாவட்டந்தோறும் தீவிர சிகிச்சை மையம் அமைத்தல், சென்னை, கே.கே. நகர் அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் இயன்முறை சிகிச்சை அளிக்க மறுவாழ்வு மையம் அமைத்தல், ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்துதல், அரசு மருத்துவமனைகளை ‘எனது மருத்துவமனை; எனது பெருமை’ என்ற பெயரில் மேம்படுத்துதல் உள்ளிட்டவை பற்றிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை 78-80

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 78-80

பக்கங்கள்

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஆ) நடப்பாண்டில் 2,000 புதிய பேருந்துகள் அறிமுகம் மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளைத் தரமுயர்த்தி நவீனப்படுத்துதல் தொடர்பான போக்குவரத்துத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 80-81

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — 80-81

(இ) கரூர், தருமபுரி, தேனி, தூத்துக்குடி மற்றும் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்குதல் தொடர்பான பால் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 81-82

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — 81-82

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் பால் வளத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 82-85

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் — 82-83

*மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி — 83-84

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் — 84-85

5. கவன ஈர்ப்பு—

மடத்துக்குளம் தொகுதி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமை — 85-91

*திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் — 85-90

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 85-86, 89-91

	பக்கங்கள்
6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
(அ) கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	*91-260*
மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	*92, 112, 126, 129-131 134-135, 141-150, 152, 154, 158-162 204, 210-213, 220-257*
திரு. மா. சுப்பிரமணியன்	*124, 126-129, 133, 135-138, 140-141, 144, 146, 149-151, 153-158, 257*
*மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்	*132-133*
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	*138*
மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்	*139-140*
திரு. இ. பெரியசாமி	*140*
*திரு. கு. பிச்சாண்டி	*151-152*
*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	*152-153*
*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	*156*
திரு. கே.ஏ. பாண்டியன்	*160, 162-173*
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	*173*
*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்	*108, 174-180, 258*
*திரு. கோ. சம்பத்து	*181-194*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. எஸ். ஈஸ்வரன் 195-204

திரு. டி.கே.ஜி. நீலமேகம் 110, 205-210, 213-218, 257-258

திரு. உ. மதிவாணன் 211-212

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 218-219

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 219-220

(இ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 260-376

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி 260, 280, 283, 296-297, 308, 337-340, 346-349, 359-373, 375

*திரு. ப. ஆடலரசன் 267, 280-285, 287-288, 290-296, 373-374

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் 282, 340-341

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 284

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ் 285-286, 289-290

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 286, 296, 358

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 287, 290, 351, 353

திரு. ப. பலராமன் 297-308

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

திரு. வி.எஸ். காளிமுத்து — *268, 308-318, 374-375*

திரு. ஆர்.எம். சின்னதம்பி — *318-324*

திரு. பா. ஆறுமுகம் — *325-334*

திரு. S. காத்தவராயன் — *334-336, 338, 341, 345, 348-358, 374*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் — *297, 337-339, 350*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* — *342, 344-345*

**திரு. அர. சக்கரபாணி* — *343-344*

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — *376-378*

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

 பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

2. **துணை முதலமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

 நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

3. **வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:**

 வனம்

4. **பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**

 பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்

7. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்

8. மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)

9. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

10. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

11. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள்

13. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

14. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**

கைத்தறி மற்றும் துணிநூல்

16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**

கால்நடை பராமரிப்பு

17. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்

20. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு மற்றும் பேரிடர் மேலாண்மை

21. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்

23. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

24. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்

25. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்

26. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

27. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:**

தகவல் தொழில்நுட்பம்

28. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:**

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்பொருளியல்

30. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்*
31. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*
32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – THIRU BANWARILAL PUROHIT

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	.. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports
2.	**Deputy Chief Minister**	.. **The Hon. Thiru O. Panneerselvam:** Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
3.	**Minister for Forests**	.. **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:** Forests
4.	**Minister for School Education, Youth Welfare and Sports Development**	.. **The Hon. Thiru K.A. Sengottaiyan:** School Education, Youth Welfare and Sports Development Department
5.	**Minister for Co-operation**	.. **The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

6.	**Minister for Electricity, Prohibition & Excise**	.. **The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act
7.	**Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme**	.. **The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme
8.	**Minister for Fisheries and Personnel & Administrative Reforms**	.. **The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training)
9.	**Minister for Law, Courts & Prisons**	.. **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons, Mines & Minerals
10.	**Minister for Higher Education**	.. **The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
11.	**Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme**	.. **The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme

12.	**Minister for Industries**	.. **The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control and Special Initiatives
13.	**Minister for Environment**	.. **The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control
14.	**Minister for Food & Civil Supplies**	.. **The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
15.	**Minister for Handlooms & Textiles**	.. **The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles
16.	**Minister for Animal Husbandry**	**The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Animal Husbandry
17.	**Minister for Health & Family Welfare**	**The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare
18.	**Minister for Agriculture**	.. **The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
19.	**Minister for Information & Publicity**	.. **The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press

20. **Minister for Revenue and Disaster Management** .. **The Hon. Thiru R.B. Udhayakumar:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies and Disaster Management

21. **Minister for Tourism** **The Hon. Thiru Vellamandi N. Natarajan:**

Tourism, Tourism Development Corporation

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru K.C. Veeramani:**

Commercial Taxes, Registration and Stamp Act

23. **Minister for Milk & Dairy Development** .. **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Milk and Dairy Development

24. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru P. Benjamin:**

Rural Industries including Cottage Industries, Small Industries

25. **Minister for Labour** .. **The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board

26. **Minister for Transport** .. **The Hon. Thiru M.R. Vijayabhaskar:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

27. **Minister for Information Technology** .. **The Hon. Dr. M. Manikandan:**

Information Technology

28. **Minister for Adi Dravidar & Tribal Welfare** .. **The Hon. Tmt V.M. Rajalakshmi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29.	**Minister for Tamil Official Language & Tamil Culture**	.. **The Hon. Thiru K. Pandiarajan:** Tamil Official Language & Tamil Culture and Archaeology
30.	**Minister for Khadi & Village Industries Board**	.. **The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan
31.	**Minister for Hindu Religious & Charitable Endowments**	.. **The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments
32.	**Minister for Backward Classes & Minorities Welfare**	.. **The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. எஸ்.பி. சண்முகநாதன்

திரு. சு. ரவி

திரு. இரா. குமரகுரு

திரு. சு. குணசேகரன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

\# *4–1–2019 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	..	சிறப்புச் செயலாளர்
திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	..	பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல்.	..	பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	இணைச் செயலாளர்
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	..	துணைச் செயலாளர்

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி.	.. குழு அலுவலர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர்
திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. குழு அலுவலர்
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்.	.. தலைமை நிருபர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அம்பேத்குமார், திரு. எஸ்.	.. வந்தவாசி (செ.வ.)
2.	அம்மன் கே. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் தெற்கு
3.	அரசு, டாக்டர் ஆர்.டி.	.. செய்யூர் (செ.வ.)
4.	அரவிந்த் ரமேஷ், திரு. எஸ்.	.. சோழிங்கநல்லூர்
5.	அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி.	.. கோயம்புத்தூர் வடக்கு
6.	அலெக்சாண்டர், திரு. வீ.	.. அம்பத்தூர்
7.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
8.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
9.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
10.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
11.	அன்பழகன், திரு. ஜெ.	.. சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி
12.	அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
13.	ஆடலரசன், திரு. ப.	.. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14.	ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ.	.. நத்தம்
15.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	.. கவுண்டம்பாளையம்
16.	ஆறுமுகம், திரு. பா.	.. கந்தர்வகோட்டை (செ.வ.)
17.	ஆஸ்டின், திரு. எஸ்.	.. கன்னியாகுமரி
18.	இதயவர்மன், திரு. L.	.. திருப்போரூர்
19.	இரத்தினசபாபதி, திரு. ஏ.	.. அறந்தாங்கி
20.	இரவிச்சந்திரன், திரு. கே.எஸ்.	.. எழும்பூர் (செ.வ.)
21.	இராமசாமி, திரு. கரி.	.. காரைக்குடி
22.	இராமச்சந்திரன், திரு. ஆர்.டி.	.. குன்னம்
23.	இராமச்சந்திரன், திரு. எம்.	.. ஒரத்தநாடு
24.	இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர்.	.. அருப்புக்கோட்டை

25.	இராமலிங்கம், திரு. கே.வி.	..	ஈரோடு மேற்கு
26.	இராஜன் செல்லப்பா, திரு. வி.வி.	..	மதுரை வடக்கு
27.	இராஜா, திரு. எஸ்.ஆர்.	..	தாம்பரம்
28.	இராஜேந்திரன், திரு. இரா.	..	சேலம் வடக்கு
29.	இராஜேந்திரன், திரு. சி.வி.	..	பர்கூர்
30.	இன்பசேகரன், திரு. பி.என்.பி.	..	பெண்ணாகரம்
31.	இன்பதுரை, திரு. ஐ.எஸ்.	..	ராதாபுரம்
32.	ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல்.	..	ஆற்காடு
33.	ஈஸ்வரன், திரு. எஸ்.	..	பவானிசாகர் (செ.வ.)
34.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	..	உடுமலைப்பேட்டை
35.	உதயகுமார், திரு. ஆர்.பி.	..	திருமங்கலம்
36.	உதயசூரியன், திரு. தா.	..	சங்கராபுரம்
37.	எடப்பாடி கே. பழனிசாமி, திரு.	..	எடப்பாடி
38.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	..	காஞ்சிபுரம்
39.	கடம்பூர் ராஜு, திரு.	..	கோவில்பட்டி
40.	கணேசன், திரு. வெ.	..	திட்டக்குடி (செ.வ.)
41.	கணேஷ், திரு. ஆர்.	..	உதகமண்டலம்
42.	கந்தசாமி, திரு. ப.	..	சூலூர்
43.	கருணாநிதி, திரு. இ.	..	பல்லாவரம்
44.	கருணாஸ், திரு. சே.	..	திருவாடனை
45.	கருப்பணன், திரு. கே.சி.	..	பவானி
46.	கலைச்செல்வன், திரு. V.T.	..	விருத்தாசலம்
47.	கஸ்தூரி வாசு, திருமதி வி.	..	வால்பாறை (செ.வ.)
48.	காத்தவராயன், திரு. S.	..	குடியாத்தம் (செ.வ.)
49.	காந்தி, திரு. ஆர்.	..	ராணிப்பேட்டை
50.	காமராஜ், திரு. இரா.	..	நன்னிலம்
51.	கார்த்திகேயன், திரு. க.	..	ரிஷிவந்தியம்
52.	கார்த்திகேயன், திரு. ப.	..	வேலூர்
53.	கார்த்திக், திரு. நா.	..	சிங்காநல்லூர்
54.	காளிமுத்து, திரு. வி.எஸ்.	..	தாராபுரம் (செ.வ.)
55.	கிரி, திரு. மு.பெ.	..	செங்கம் (செ.வ.)

56.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (செ.வ.)
57.	கீதா, திருமதி ம.	.. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
58.	கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
59.	குணசேகரன், திரு. சு.	.. திருப்பூர் தெற்கு
60.	குமரகுரு, திரு. இரா.	.. உளுந்தூர்பேட்டை
61.	கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
62.	கோவிந்தராசு, திரு. மா.	.. பேராவூரணி
63.	சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
64.	சக்திவேல், திரு. எ.பி.	.. சேலம் தெற்கு
65.	சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (செ.வ.)
66.	சண்முகநாதன், திரு. எஸ்.பி.	.. ஸ்ரீவைகுண்டம்
67.	சண்முகம், திரு. அ.	.. கிணத்துக்கடவு
68.	சண்முகம், திரு. சி.வி.	.. விழுப்புரம்
69.	சண்முகையா, திரு. செ.	.. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
70.	சதன் பிரபாகர், திரு. நி.	.. பரமக்குடி (செ.வ.)
71.	சத்திய நாராயணன், திரு. ப.	.. தியாகராய நகர்
72.	சத்யா, திருமதி ப.	.. பண்ருட்டி
73.	சத்யா, திரு. S.A.	.. ஓசூர்
74.	சந்திரசேகரன், திரு. சி.	.. சேந்தமங்கலம் (ஆ.வா.)
75.	சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
76.	சந்திரசேகர், திரு. இரா.	.. மணப்பாறை
77.	சந்திரபிரபா, திருமதி மு.	.. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
78.	சம்பத், திரு. எம்.சி.	.. கடலூர்
79.	சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (செ.வ.)
80.	சம்பத்து, திரு. கோ.	.. சோளிங்கர்
81.	சரவணக்குமார், திரு. க.சு.	.. பெரியகுளம் (செ.வ.)
82.	சரவணன், திரு. எஸ்.எஸ்.	.. மதுரை தெற்கு
83.	சரவணன், டாக்டர் ப.	.. திருப்பரங்குன்றம்
84.	சரஸ்வதி, திருமதி பொன்.	.. திருச்செங்கோடு
85.	சரோஜா, டாக்டர் வி.	.. ராசிபுரம் (செ.வ.)

86. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
87. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வா.)
88. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (செ.வ.)
89. சிவசுப்பிரமணி, திரு. வே.பொ. .. மொடக்குறிச்சி
90. சின்னதம்பி, திரு. ஆர்.எம். .. ஆத்தூர் (செ.வ.)
91. சின்னப்பன், திரு. P. .. விளாத்திகுளம்
92. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
93. சீத்தாபதி, திருமதி பெ. .. திண்டிவனம் (செ.வ.)
94. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
95. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
96. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
97. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
98. சுப்ரமணி, திரு. பெ. .. தருமபுரி
99. சுரேஷ் ராஜன், திரு. என். .. நாகர்கோவில்
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிச்செட்டி-பாளையம்
102. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
103. செந்தில் பாலாஜி, திரு. V. .. அரவக்குறிச்சி
104. செம்மலை, திரு. S. .. மேட்டூர்
105. செல்லூர் கா. ராஜூ, திரு. .. மதுரை மேற்கு
106. செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ். .. தென்காசி
107. செல்வம், திரு. கு.க. .. ஆயிரம் விளக்கு
108. செல்வராசு, திரு. எம். .. முசிறி
109. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
110. சேகரன், திரு. கே.வி. .. போளூர்
111. சேகர், திரு. C.V. .. பட்டுக்கோட்டை
112. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
113. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
114. சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. .. ஆரணி

115.	சௌந்தரபாண்டியன், திரு. அ.	.. லால்குடி
116.	தங்கப்பாண்டியன், திரு. சௌ.	.. ராஜபாளையம்
117.	தங்கமணி, திரு. பி.	.. குமாரபாளையம்
118.	தங்கம் தென்னரசு, திரு.	.. திருச்சுழி
119.	தமிமுன் அன்சாரி, திரு. எம்.	.. நாகப்பட்டினம்
120.	தமிழ்ச்செல்வன், திரு. ரா.	.. பெரம்பலூர் (செ.வ.)
121.	தனபால், திரு. ப.	.. அவினாசி (செ.வ.)
122.	தனியரசு, திரு. உ.	.. காங்கேயம்
123.	திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	.. திண்டுக்கல்
124.	திராவிடமணி, திரு. மு.	.. கூடலூர் (செ.வ.)
125.	தினகரன், திரு. டிடிவி	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
126.	துரை. கி. சரவணன், திரு.	.. புவனகிரி
127.	துரைக்கண்ணு, திரு. இரா.	.. பாபநாசம்
128.	துரைமுருகன், திரு.	.. காட்பாடி
129.	தூசி கே. மோகன், திரு.	.. செய்யாறு
130.	தென்னரசு, திரு. கே.எஸ்.	.. ஈரோடு கிழக்கு
131.	தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (செ.வ.)
132.	நடராஜன், திரு. அ.	.. பல்லடம்
133.	நடராஜ், திரு. ஆர்.	.. மயிலாப்பூர்
134.	நந்தகுமார், திரு. ஏ.பி.	.. அணைக்கட்டு
135.	நரசிம்மன், திரு. பி.எம்.	.. திருத்தணி
136.	நல்லதம்பி, திரு. அ.	.. திருப்பத்தூர்
137.	நாகராஜன், திரு. எஸ்.	.. மானாமதுரை (செ.வ.)
138.	நிலோபர் கபில், டாக்டர் (திருமதி)	.. வாணியம்பாடி
139.	நீதிபதி, திரு. பா.	.. உசிலம்பட்டி
140.	நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
141.	நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி மேற்கு
142.	பரமசிவம், டாக்டர் V.P.B.	.. வேடசந்தூர்
143.	பரமேஸ்வரி, திருமதி மு.	.. மணச்சநல்லூர்

144.	பலராமன், திரு. ப.	.. பொன்னேரி (செ.வ.)
145.	பவுன்ராஜ், திரு. எஸ்.	.. பூம்புகார்
146.	பழனி, திரு. கே.	.. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
147.	பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை மத்தி
148.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
149.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
150.	பன்னீர்செல்வம், திரு. வி.	.. கலசப்பாக்கம்
151.	பாண்டி, திரு. ச.	.. முதுகுளத்தூர்
152.	பாண்டியராஜன், திரு. க.	.. ஆவடி
153.	பாண்டியன், திரு. கே.ஏ.	.. சிதம்பரம்
154.	பாரதி, திரு. பி.வி.	.. சீர்காழி (செ.வ.)
155.	பாஸ்கரன், திரு. க.	.. சிவகங்கை
156.	பாஸ்கர், திரு. கே.பி.பி.	.. நாமக்கல்
157.	பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
158.	பிரகாஷ், திரு. ஒய்.	.. தளி
159.	பிரபு, திரு. அ.	.. கள்ளக்குறிச்சி (செ.வ.)
160.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
161.	புகழேந்தி, திரு. சு.	.. மதுராந்தகம் (செ.வ.)
162.	பூங்கோதை, டாக்டர் (திருமதி)	.. ஆலங்குளம்
163.	பூண்டி கி. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
164.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	.. திருப்பத்தூர்
165.	பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
166.	பெரியண்ணன் அரசு, திரு.	.. புதுக்கோட்டை
167.	பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
168.	பென்ஜமின், திரு. பா.	.. மதுரவாயல்
169.	பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
170.	பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
171.	மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
172.	மணிகண்டன், டாக்டர் எம்.	.. இராமநாதபுரம்

173.	மணியன், திரு. ஓ.எஸ்.	.. வேதாரண்யம்
174.	மதிவாணன், திரு. உ.	.. கீழ்வேளூர் (செ.வ.)
175.	மருதமுத்து, திரு. அ.	.. கெங்கவல்லி (செ.வ.)
176.	மனோகரன், திரு. அ.	.. வாசுதேவநல்லூர் (செ.வ.)
177.	மனோ தங்கராஜ், திரு. த.	.. பத்மநாபபுரம்
178.	மனோரஞ்சிதம், திருமதி நா.	.. ஊத்தங்கரை (செ.வ.)
179.	மனோன்மணி, திருமதி ப.	.. வீரபாண்டி
180.	மஸ்தான், திரு. கே.எஸ்.	.. செஞ்சி
181.	மாசிலாமணி, டாக்டர் இரா.	.. மயிலம்
182.	மாணிக்கம், திரு. கி.	.. சோழவந்தான் (செ.வ.)
183.	முருகன், திரு. பி.	.. வேப்பனஹள்ளி
184.	முருகுமாறன், திரு. என்.	.. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
185.	முருகையா பாண்டியன், திரு. ஆர்.	.. அம்பாசமுத்திரம்
186.	முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம்.	.. கடையநல்லூர்
187.	மூர்த்தி, திரு. கே.எஸ்.	.. பரமத்தி—வேலூர்
188.	மூர்த்தி, திரு. பி.	.. மதுரை கிழக்கு
189.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	.. ஆலங்குடி
190.	மைதீன்கான், திரு. டி.பி.எம்.	.. பாளையங்கோட்டை
191.	மோகன், திரு. எம்.கே.	.. அண்ணா நகர்
192.	ரகுபதி, திரு. எஸ்.	.. திருமயம்
193.	ரங்கநாதன், திரு. ப.	.. வில்லிவாக்கம்
194.	ரவி, திரு. சு.	.. அரக்கோணம் (செ.வ.)
195.	ராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி
196.	ராதாகிருஷ்ணன், திரு. வி.	.. மயிலாடுதுறை
197.	ராமர், திரு. எ.	.. குளித்தலை
198.	ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என்.	.. ஜெயங்கொண்டம்
199.	ராமு, திரு. அ.	.. குன்னூர்

200.	ராஜலெட்சுமி, திருமதி வி.எம்.	.. சங்கரன்கோவில் (செ.வ.)
201.	ராஜவர்மன், திரு. M.S.R.	.. சாத்தூர்
202.	ராஜா, திரு. சி.	.. சங்கரி
203.	ராஜா, திரு. டி.ஆர்.பி.	.. மன்னார்குடி
204.	ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர்.	.. அந்தியூர்
205.	ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி.	.. சிவகாசி
206.	ராஜேந்திரன், திரு. சு.	.. அரியலூர்
207.	ராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
208.	ராஜேஷ் குமார், திரு. செ.	.. கிள்ளியூர்
209.	லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ்.	.. திருநெல்வேலி
210.	லோகநாதன், திரு. கோ.	.. கீழ்வைத்திணான்-குப்பம் (செ.வ.)
211.	வரலட்சுமி, திருமதி ம.	.. செங்கல்பட்டு
212.	வளர்மதி, திருமதி சீ.	.. ஸ்ரீரங்கம்
213.	வாகை சந்திரசேகர், திரு.	.. வேளச்சேரி
214.	விருகை V.N. ரவி, திரு.	.. விருகம்பாக்கம்
215.	வில்வநாதன், திரு. அ.செ.	.. ஆம்பூர்
216.	விஜயகுமார், திரு. க.நா.	.. திருப்பூர் வடக்கு
217.	விஜயதரணி, திருமதி எஸ்.	.. விளவங்கோடு
218.	விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர்.	.. கரூர்
219.	விஜய பாஸ்கர், டாக்டர் சி.	.. விராலிமலை
220.	விஜியகுமார், திரு. கே.எஸ்.	.. கும்மிடிப்பூண்டி
221.	வீரமணி, திரு. கே.சி.	.. ஜோலார்பேட்டை
222.	வெங்கடாச்சலம், திரு. என்.டி.	.. பெருந்துறை
223.	வெங்கடாஜலம், திரு. கோ.	.. சேலம் மேற்கு
224.	வெல்லமண்டி ந. நடராஜன், திரு.	.. திருச்சிராப்பள்ளி கிழக்கு
225.	வெற்றிவேல், திரு. ச.	.. ஓமலூர்
226.	வேலு, திரு. எ.வ.	.. திருவண்ணாமலை
227.	வேலுமணி, திரு. எஸ்.பி.	.. தொண்டாமுத்தூர்

228. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே.	..	*கம்பம்*
229. ஜெயக்குமார், திரு. டி.	..	*இராயபுரம்*
230. ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா.	..	*மடத்துக்குளம்*
231. ஸ்டாலின், திரு. மு.க.	..	*கொளத்தூர்*
232. ஸ்டாலின் குமார், திரு. செ.	..	*துறையூர் (செ.வ.)*
233. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி)	..	*நியமனம்*
*234. வெற்றிடம்**	..	*நாங்குநேரி*
235. வெற்றிடம்	..	*விக்கிரவாண்டி*

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. விஜய் நாராயன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

* *நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து, 29-5-2019 அன்று ராஜினாமா செய்தார்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2019 ஜூலை 17]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆடி 1, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 17, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

பொருள் வரும் வழிகளைப் பெருக்கி, வளம் உண்டாகும்படி மேலும் வளர்த்து, இடையில் ஏற்படும் தடைகளை ஆராய்ந்து நீக்குபவரே தொழில்புரியத் தக்கவர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

துணை மின் நிலையம்

***12768—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், அய்யூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அய்யூர் கிராமத்தில் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் 33/11 KVA துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு, அது செயல்பாட்டிலுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் எங்கள் சிங்கத் தலைவி, முத்தமிழ் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். யாராவது மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பார்க்கச் சென்றால், 5 நிமிடங்கள்கூட தாமதமில்லாமல் பார்க்கின்ற ஒரே முதல்வர், மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல; எத்தனை பேர் அவரைப் பார்க்க வந்தாலும், சிரித்த இன்முகத்தோடு அவர்களுக்கு பதில் சொல்கின்ற பாங்கினைப் பார்க்கின்றபோது "இது எப்படி இவரால் முடிகிறது?" என்று நான் ஆச்சரியப்பட்டுள்ளேன்; ஆனந்தம் அடைந்துள்ளேன். அப்படிப்பட்ட ஈடு இணையில்லாத தமிழக முதல்வர், நல்லாட்சி நாயகர், மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவரது நல்லாட்சிக்கு பங்கம் விளையாமல் பார்த்துக்கொள்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் தேனியார் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் என்றால், இப்படித்தான் இருக்க வேண்டுமென்று இலக்கணம் வகுத்து, சபையை நடத்திச் செல்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

> "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
> அதனை அவன்கண் விடல்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப, மின்சாரத் துறையை இவரிடம் கொடுத்தால்தான் சிறப்பாக இருக்கும் என்று கருதி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மின்சாரத் துறையை நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒப்படைத்தார். அந்த வகையில், தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி, இருளிலே கிடந்த தமிழக மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு

2019 ஜூலை 17]

வந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தபால் துறையில் பணி நியமனத்திற்கு இந்தி மற்றும் ஆங்கிலத்தில் நடைபெறவிருந்த தேர்வை, தமிழிலும் எழுதலாம் என்று அனுமதி வழங்கக் காரணமாக இருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், நமது பாராளுமன்ற உறுப்பினரையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைக் கொஞ்சம் விரிவாகக் கேட்க அனுமதிக்க வேண்டுகிறேன். அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், அய்யூரில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேள்வி கேட்டிருந்தேன். அந்தக் கேள்வி அவைக்கு வரும் முன்பே, அங்கே துணை மின் நிலையத்தை அமைத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் அதற்கு திறப்பு விழா நடைபெற்றிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'எள்' என்று கேட்டால், எண்ணெய்யைத் தருகின்ற மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசு, எவ்வளவு வேகமாகவும், விவேகமாகவும் செயல்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஆண்டிமடம் ஒன்றியம், பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க மின்சார வாரியம் முடிவு செய்து, அதற்கு இடத்தைத் தேர்வு செய்கின்றபோது சரியான இடம் கிடைக்கவில்லை. அதற்காக மயானப் புறம்போக்கில் ஐந்தரை ஏக்கர் இடம் கேட்டதற்கு, இடம் கொடுக்க மாவட்ட நிருவாகம் மறுத்துவிட்டது. ஆனால், திருச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மயானப் புறம்போக்கில் துணை மின் நிலையம் அமைக்க உத்தரவு வழங்கியுள்ளார். அந்த உத்தரவின் நகலினை, நானும், கொறடா அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அரியலூர் வந்திருந்தபோது, காண்பித்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைப் படித்துவிட்டு, "திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி கொடுக்கின்றபோது, நீங்களும் கொடுக்கலாம்" என்று அருகிலிருந்த அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்த உத்தரவின் நகலினைக் கொடுத்தார். ஆனால், அதற்குப்பிறகு இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரிய கிருஷ்ணாபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க

ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்திலே பிரச்சினை இருக்கிறதென்று சொல்லிவிட்டார். ஒரு சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மயானப் புறம்போக்கு என்றாலும், அதற்கு இடம் கொடுத்துவிடுகின்றார்கள். ஒரு சிலர் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற பிரச்சினைகளின் அடிப்படையில் இடம் கொடுப்பதற்கு மறுத்துவிடுகின்றார்கள். இருந்தாலும், மாற்று இடத்தைத் தேர்வு செய்யுமாறு திருச்சியிலுள்ள C.E.-யிடம் சொல்லியிருக்கின்றோம். மாற்று இடம் கிடைத்தவுடன், அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று இடம் தேர்வு செய்து, துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜெயங்கொண்டத்தில் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பதாக அறிவித்துள்ளீர்கள். அதனைத் துவக்கி வைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் வர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்கரிப்பூர்

2019 ஜூலை 17]

ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் செங்கத்திற்கு உட்பட்ட புதிய குயிலம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் மக்கள் 40–50 ஆண்டு காலமாக அரசின் மூலமாக வழங்கப்பட்ட பட்டா இடத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் வாழ்கின்ற பகுதியில், வீட்டிற்கு மேலே உயரழுத்த மின் கம்பிகள் செல்கின்றன. இந்தத் தொகுதியில் மட்டுமல்ல; பல இடங்களில் 40–50 ஆண்டு காலமாக சாதாரண, ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இதுபோன்ற மின் கம்பிகள் செல்கின்றன. 234 தொகுதிகளிலும் இதுபோன்ற பிரச்சினை இருக்கின்றது. Real estate *மூலமாகப் போடப்பட்ட* layouts *இல்லையென்றாலும், அரசின் மூலமாகக் கொடுக்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில் கட்டப்பட்டுள்ள அந்த வீடுகளின்மேல் செல்லும் உயர் மின்னழுத்தக் கம்பிகளை சிறப்புத் திட்டத்தின் மூலமாக, எந்தவிதக் கட்டணமும் கட்டாமல் அரசே மாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அந்தப் பகுதியில் ஏற்கெனவே உயர் மின்னழுத்தக் கம்பி சென்றுகொண்டிருக்கின்றது; அதற்கடியில் இப்போது வீடு கட்டி வாழ்கின்றார்கள்" என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று பல இடங்களில் இப்படித்தான் உயர் மின்னழுத்தக் கம்பி செல்கின்ற பாதைக்கு அருகில் வீடுகளைக் கட்டிவிடுகின்றார்கள். வீடுகளைக் கட்டியதற்குப் பின்னால் அந்த உயர் மின்னழுத்தக் கம்பிகளை அகற்ற வேண்டும் என்று சொன்னால், அதற்கு செலவு அதிகம் ஆகின்றது. மேலும் அதனைக் கொண்டு செல்வதற்கு மாற்று இடம் தேடுகின்றபோது, பக்கத்தில் இருப்பவர்கள் யாரும் அதற்கு மாற்று இடத்தைக் கொடுப்பதற்கு முன்வருவதில்லை; மறுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது குறித்து அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

மேம்பாலம்

***3600—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, கெருகம்பாக்கம்–கவுல்பஜார் இடையே அடையாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலந்தூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சி, அடையாறு ஆற்றின் குறுக்கே 8 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கடந்த 2016 ஆம் ஆண்டு போடப்பட்டது. இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட கெருகம்பாக்கம்–கவுல்பஜார் இடையே அடையாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுகின்ற பணி 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பணியானது இப்போது 60 சதவிகிதம் முடிவுற்றிருக்கின்றது. அந்தப் பணியை வருகின்ற மழைக் காலத்திற்குள் விரைவாக முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கவுல்பஜாரிலிருந்து வெளியில் செல்லும் ஒன்றியச் சாலை மிகவும் பாழ்பட்ட நிலையில்

இருக்கின்றது. அந்தச் சாலையையும் மழைக் காலத்திற்கு முன்பாக அமைத்து விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கெருகம்பாக்கம் கிராம ஊராட்சியில், அடையாறு ஆற்றின் குறுக்கே 5 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 172.84 மீட்டர் நீளமுள்ள உயர்மட்டப் பாலம் NABARD திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உத்தரவின் பெயரில் 14–06–2018–ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட உயர்மட்டப் பாலத்திற்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகள் 77 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், பாலத்திற்கான தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் 2 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன. இந்த உயர்மட்டப் பாலம், இருபுறத் தடுப்புச் சுவர் மற்றும் இணைப்புச் சாலை ஆகியன அமைப்பதற்கான பணிகள் NABARD திட்டம் மற்றும் மாநில நிதி ஆதாரங்கள்மூலம் மொத்தம் 8 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பாலப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இருபுற தடுப்புச் சுவர் மற்றும் இணைப்புச் சாலைப் பணிகள் அனைத்தும் 30–11–2019–க்குள் முழுமையாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்த ஒன்றியச் சாலைகள் குறித்து துறை அதிகாரிகள்மூலம் முழுமையாக ஆய்வு செய்து, அவசியம் இருப்பின், கண்டிப்பாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அவையில் பேசி, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கின்றார். இன்றைக்கு சென்னை புறநகர்ப் பகுதிகளில் இருக்கின்ற பல ஊராட்சிகளில் போதிய நிதி ஆதாரம், வருவாய் இல்லை. அதாவது, மின் இணைப்பிற்குக்கூட பணம் கட்ட முடியாமல், அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த ஊராட்சிகளில் பார்த்தீர்களென்று சொன்னால், தெருக்கள் இன்னும் போடப்படாமல் இருக்கின்றன. 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட அந்தச் சாலைகள் எல்லாம் இன்றைக்குப் பாழ்பட்டிருக்கின்றன. 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு சிமென்ட் சாலை போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்தச் சிமென்ட் சாலைகளில், கற்கள் எல்லாம் பெயர்ந்துள்ள நிலையில் நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சென்னை புறநகர்ப் பகுதிகளில் இருக்கிற அந்த ஊராட்சிகளிலெல்லாம் ஆய்வு செய்து, அந்தச் சாலைகளை எல்லாம் போடுவதற்கு இந்த அரசு ஆவன செய்திட வேண்டும்.*

அதோடு மட்டுமல்லாமல், சென்னை புறநகர்ப் பகுதியிலே, மக்கள் தொகை அதிகரித்துள்ளதன் காரணமாக, குப்பைகள் அதிகமாக சேருகின்றன. 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த எண்ணிக்கையில்தான் பணியாளர்கள் இன்றும் இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வாகனங்கள் போதிய அளவில் இல்லை. ஆகவே, இந்த அரசு தயவு செய்து அந்த ஊராட்சிகளிலெல்லாம் ஆய்வு செய்து, போதிய வண்டி வாகனங்களை வழங்கி, தேவையான பணியாளர்களை நியமனம் செய்து, குப்பை பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும். அதேபோன்று, அந்தச் சாலைகள் எல்லாம் சீரமைக்கப்பட வேண்டும் என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜுலை 17]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூலக் கேள்வியான பாலத்திலிருந்து, அடுத்த subject–க்குச் சென்றிருக்கிறார். இருந்தாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார். இன்றைக்கு ஊராட்சிகளில் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிறது என்பது போன்ற சூழ்நிலைகள் இல்லை. இருந்தாலும்கூட, அவசியத்தைக் கருதி தேவையான நிதியை ஒதுக்கியிருக்கிறோம். அதேபோல, கிராமச் சாலைகளைப் பொறுத்தளவில், இதற்குமுன்பு மொத்தமாக சுமார் 1,02,000 கிராமச் சாலைகள்தான் இருந்தன. நாங்கள் 47,000 ஊராட்சி சாலைகளைக் கூடுதலாகச் சேர்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறுகலான ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும் சின்ன சாலைகளைப்பற்றிச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். அந்தச் சாலைகளுக்குக்கூட கடந்த முறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உத்தரவின்பேரில் 200 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் தடவையும் கூடுதலாக எடுக்கப்படவுள்ளது. அவர் சொல்வது போன்ற ஊராட்சி சாலைகளில் ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும் சாலைகள்தான் இன்னும் எடுக்கப்படாமல் உள்ளன. அதில் கொஞ்சம் சிரமம் இருந்தது. அதையும்கூட நாங்கள் எடுத்திருக்கிறோம். இந்த முறையும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சாலைகளும் கண்டிப்பாக எடுக்கப்படும்.

அதைப்போல, திடக் கழிவு மேலாண்மையைப் பொறுத்தளவில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதிக கவனம் மேற்கொண்டு வருகிறது. அது மிகப் பெரிய சவாலான ஒரு பிரச்சினை என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சி, மாநகராட்சிப் பகுதிகள் எல்லாவற்றையும் சேர்த்தால், ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 19,000 டன்னுக்குமேல் குப்பை சேகரிக்கப்படுகிறது. இது பெரிய சவாலான பணி. இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு அதிகமான நிதியினை ஊராட்சிகளுக்கு ஒதுக்கி, தேவையான உபகரணங்களை வாங்கியிருக்கிறது. எந்தப் பகுதியிலாவது அதுபோன்ற பிரச்சினை இருந்தால், அதனை ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பாலமூர் ஊராட்சி முற்றிலுமாக ஒரு மலைக் கிராமம். அதற்குச் செல்கின்ற சாலை, தடிக்காரன்கோணம், பாலமூர் வழியாக மாறாமலை வரை செல்கின்ற சாலையாகும். அந்தச் சாலையின் இடையிலே ஒரு சப்பாத்து பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் பழுதடைந்துள்ள நிலையில், ஒகி புயலில் மீண்டும் அதிக அளவில் பழுதடைந்துள்ளது. அந்தச் சாலை முழுவதுமாக பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், தடிக்காரன்கோணம் முதல் பாலமூர், மாறாமலை செல்கின்ற சாலையில், வழியில் இருக்கக்கூடிய சப்பாத்து பாலத்தை மாற்றி, சிறு பாலமாக அமைத்து, அந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தர மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்மநாபபுரம் தொகுதியில், மலைவாழ் மக்கள் வாழ்கின்ற அந்தச் சாலை குறித்து தெரிவித்தபோது, அந்தப் பாலம் அவசியமாகத் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல, ஒகி புயலில்கூட அது பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு இதுகுறித்து எடுத்துச்சென்று, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அவசியம் இருப்பின், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

123—

வண்ணமீன் விற்பனை மையம்

***12603—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரம் மற்றும் பரங்கிப்பேட்டை ஆகிய பகுதிகளில் வண்ண மீன் விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை, சிதம்பரம் நகரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியில் அரசு மற்றும் தனியார் வண்ண மீன் உற்பத்தி நிலையங்கள் ஏதும் இல்லை. எனவே, வண்ண மீன் விற்பனை மையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருடைய சோலையிலே வசந்தங்கள் உதிர்கிறதோ, யாருடைய பாதையிலே நடைபாதை சுடுகிறதோ, யாருடைய விழிகளிலே கண்ணீர் வழிகிறதோ, அவர்களுக்கெல்லாம் போராடிய அன்புமனத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழ் தந்த வரமே; துன்பம் கண்டு துவளாத மனமே; துள்ளி வரும் பகையை கிள்ளி எறிந்த வீரமே; தன்னலம் கருதாது தமிழர் நலத்திற்கே நாளெல்லாம் உழைத்திடும் எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் துணை நிற்கும் மாண்புமிகு தமிழக*

துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிதம்பரம் தொகுதியில் சுமார் 20–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. மாறிவரும் சமூகச் சூழ்நிலையால், இன்றைக்கு எல்லோருடைய வீடுகளிலும் வாஸ்துக்காகவும், அழகுக்காகவும், மன அமைதிக்காகவும், கண்ணாடிப் பெட்டிகளில் வண்ண மீன்களை வளர்த்து வருகின்றனர். பெரும்பாலும் தனி நபர்களே இந்த வண்ண மீன்களை வளர்த்து, விற்பனை செய்து வருகின்றனர். எனவே, இந்த வண்ண மீன்கள் வளர்ப்பினையும், விற்பனையையும், மீன் வளத் துறைமூலம் அரசே மேற்கொண்டால், அரசுக்கு வருமானம் கிடைக்கும். எனவே, என்னுடைய சிதம்பரம் தொகுதியில் வண்ண மீன்கள் விற்பனை நிலையம் தொடங்கிட அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளர்ப்புத் தொழில் மிகவும் இலாபகரமான தொழில். தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், இதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ள நிலையில், தனியார் முன்வருகிற நிலையில், அவர்களை நாம் ஊக்கப்படுத்தி, மீன் வளர்ப்பில் ஈடுபடுத்தலாம். குறிப்பாக, அலங்கார மீன் என்று சொல்லக்கூடிய ornamental fish-ஐ உலகளவில் marketing செய்யக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கின்றது. இந்த நிலையில் அதனைச் செய்திட தனியார் முன்வருகின்றபட்சத்தில், அவர்களுக்கு எல்லாவிதமான ஊக்கமும், ஆக்கமும் அரசு நிச்சயமாகக் கொடுக்கும்.

குறிப்பாக, அலங்கார மீன்களைத் தவிர, வேகமாக வளரக்கூடிய மீன்கள் இருக்கின்றன. மீன்களில் புரதச் சத்து மிகவும் அதிகம். எனவே, மீன்களைப் பொறுத்தவரையில், நல்ல ஆரோக்கியமான புரதச் சத்து உள்ள உணவு. Carotene கண்ணுக்கு முக்கியமான வைட்டமின் A; தோல் மினுமினுப்பாக இருப்பதற்கு வைட்டமின்

2019 ஜூலை 17]

D; இதுபோன்ற நல்ல சத்துக்கள் இருக்கின்ற காரணத்தினால், மீன்களை உட்கொள்வதன்மூலம் நிச்சயமாக ஓர் ஆரோக்கியமான வாழ்வை மனிதச் சமுதாயம் வாழக்கூடிய நிலை ஏற்படும்.

அதைப்போல, உள்நாட்டு நீர்நிலைகளைப் பொறுத்தவரையில், வேகமாக வளரக்கூடிய மீன் வகைகள் உண்டு. கட்லா, மிருகால், ரோகு, காமன் கார்ப், சில்வர் கார்ப், கிஃப்ட் திலேப்பியா போன்ற மீன்கள் வேகமாக வளரக்கூடியவை. ஒரு ஹெக்டேரில் சாகுபடி செய்தால்கூட, மாதத்திற்கு ரூ.30,000/– அளவிற்கு வருமானம் வரக்கூடிய நிலை இருக்கிறது.

அதேபோன்று, கடலைப் பொறுத்தளவில், sea bass என்று சொல்லக்கூடிய கடல் கொடுவா, sea weed என்று சொல்லக்கூடிய கடற்பாசி போன்றவை; கடலில் cage culture; கூண்டுகளில் வளர்ப்பதன்மூலம் நல்ல இலாபத்தைப் பெற முடியும். எனவே, இதுபோன்ற நிலைகளெல்லாம் இருக்கின்றன. அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. சுய வேலைவாய்ப்பு என்ற முறையில், இளைஞர்களும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டால், அவர்கள் முன்னேற்றம் அடைகின்ற வகையில் தங்களை இதிலே ஈடுபடுத்திக்கொண்டால், நிச்சயமாக அவர்களுக்கு எல்லாவிதமான ஊக்கமும், ஆக்கமும் அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

குறிப்பாக, ornamental fish–ஐப் பற்றி அறியும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் ஆச்சரியப்படுவார்கள். உலகளவில் கிட்டத்தட்ட 125 நாடுகளில் ornamental fish வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மொத்த demand எவ்வளவு என்று பார்த்தால், USD 338 பில்லியன் ஆகும். இந்தியாவைப் பொறுத்தளவில், இந்த வண்ண மீன்களின் ஏற்றுமதி மதிப்பு ரூ.300 கோடி. இன்னும் ஐந்து ஆண்டுகளில் ரூ.1,600 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோன்று, ornamental fish–ல் பல வகைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றின் பெயர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். டின்ஃபோயில் பார்ப், டைகர் பார்ப், பிளாக் ரூபி பார்ப், க்ளோவ்ன் பார்ப், நீண்ட வால் ரோஸி பார்ப், கத்தரி வால் ரஸ்போரா, மஞ்சள் வால் ரஸ்போரா, சிவப்பு வால் ரஸ்போரா, குள்ள ரஸ்போரா, ஹர்லெக்வின் ரஸ்போரா, பசுமைக்கோடு ரஸ்போரா, மெல்லிய

தங்க ரஸ்போரா, வரிக்குதிரை பார்பர், ஃபயர்மவுத் சிச்லிட், ஃபிளவர் ஹார்ன், பேர்ல் கவுரா, குள்ள கவுராமி, திக்–லுப்ட் கவுரா, ஜெயண்ட் கவுராமி, தங்க மீன், க்ளவுன் லோச், வெள்ளி லோச், வாள் வால், பிளாட்டி, கோய் கார்ப், ஃபைட்டர் மீன், பட்டாம்பூச்சி மீன், டாம்செல் மீன், ஏஞ்சல் மீன், நீல டிஸ்கஸ், ஆரஞ்சு க்ளோன் மீன், நியான் டெட்ரா, பிளாக் நியான் டெட்ரா, எலுமிச்சை டெட்ரா, கார்டினல் டெட்ரா, மஞ்சள் வாள் பேரரசர், பசுமை நியான் டெட்ரா, ஆஸ்கார் சிசில்ட், மஞ்சள் முகம் தேவதை மீன்;— பாருங்கள்; அந்த மீனுக்குக்கூட மஞ்சள் முகம் தேவதை மீன் என்ற அழகான பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.—மேலும் ஹம்ஹெட் ரேசே போன்ற நிறைய வகை மீன்கள் இருக்கின்றன. 40 வகையான மீன்களுக்கு உலகளவில் marketing–க்கு நல்ல வாய்ப்பு இருக்கின்ற சூழ்நிலையில், அவற்றை வீடுகளிலேயே வளர்க்கலாம். வீடுகளிலேயே 10x10 இடம் இருந்தாலே போதும். அவற்றை ஈடுபாட்டோடு வளர்த்தால் மாதம் ரூ.30,000/– அளவிற்கு சம்பாதிக்கக்கூடிய அளவிற்கு ஒரு வழியிருக்கிறது.

மேலும், இதனை உணர்ந்துதான் வண்ண மீன் வானவில் mall–ஐ மாதவரத்தில் ஏற்பாடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். தற்போது ரூ.11 கோடி செலவில் வண்ண மீன் உற்பத்தி செய்வதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, இதில் தனியார் முன்வந்தால், அரசைப் பொறுத்தளவில் நிச்சயமாக எல்லாவிதமான உதவிகளையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கிள்ளை, சின்னவாய்க்கால், பில்லுமேடு, பட்டரைஅடி, முழுக்குத்துறை போன்ற மீனவக் கிராமங்களிலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க சின்னவாய்க்கால் முகத்துவாரம்மூலம் படகுகளில் கடலுக்குச் சென்று வந்தனர். தற்போது சின்னவாய்க்கால் முகத்துவாரம் தூர்ந்துள்ளது. இதனால்

2019 ஜூலை 17]

இப்பகுதி மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதற்கு, வெள்ளாறு முகத்துவாரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மீனவர்களுக்குக் கால விரயம் ஏற்படுவதோடு, பொருட்செலவும் அதிகமாகிறது. எனவே, மீனவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, சீரமைக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்க்கால்களில் முகத்துவாரத்தை ஆங்கிலத்தில்* Estuary *என்று சொல்வார்கள். இந்த முகத்துவாரத்தை நாம் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, நிலைப்படுத்துவதன்மூலம் 3 நன்மைகள் உள்ளன. ஒன்று, மீனவர்கள் பாதுகாப்பாக கடலுக்குள் சென்று தொழில் செய்ய முடியும். இரண்டாவதாக, மீன் இனவிருத்தி. பொதுவாகவே அனைவருக்கும் தெரியும்; மீன் இனவிருத்தி கடலில்தான் ஏற்படுவதாக சிலர் சொல்வார்கள். அப்படி கிடையாது. மீன்களின் இனவிருத்தி கடலில் 50 சதவிகிதம் என்றால், முகத்துவாரங்களில்தான் 50 சதவிகிதம் அளவிற்கு நடைபெறுகிறது. எனவே, மீன் இனவிருத்தியைப் பொறுத்தளவில், முகத்துவாரத்தை* breeding ground *என்று சொல்வார்கள். மகப்பேறு மருத்துவமனை என்றால் நாம் முகத்துவாரத்தைத்தான் சொல்ல வேண்டும். எனவே, பழவேற்காடு பகுதியில் ஒரு காலத்தில் மீன் பிடிப்புக்கு 'பாடு' என்று சொல்லக்கூடிய அளவிற்கு, நல்ல வருமானம் ஈட்டக்கூடிய ஒரு தொழிலாக இருந்தது. தற்போது முகத்துவாரம் அடைபட்ட நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிலையான அளவிற்கு அந்த முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, அகலப்படுத்திட நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.*

அதேபோன்று sea erosion; *கடல் அரிப்பு ஏற்படும்போது, பொதுவாக தட்பவெப்ப சூழ்நிலைகள் மாறும்போது,* High tide *வரும்போது கடல்நீரை உள்வாங்கும் நிலை ஏற்படும். அவ்வாறு உள்வாங்கும்போது, முகத்துவாரம் அடைந்திருந்தால், அதன் காரணமாகக் கடல் அரிப்பு ஏற்படுகின்ற நிலை ஏற்படும். இதுபோன்ற*

மூன்று விஷயங்களில் முகத்துவாரம் முக்கியமான பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 36 முகத்துவாரங்கள் உள்ளன. அரசு இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 36 முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்திட நடவடிக்கை எடுத்து வருகிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருதியும், கடலரிப்பினைத் தடுப்பதற்கும், மீன்வளம் பெருகுவதற்கும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துவருகிறது. இதனை ஒரே நாளில் செய்துவிட முடியாது. எனவே, 2 வருட காலத்திற்குள் 36 முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, நிலைப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

124—

நெல் கொள்முதல் நிலையம்

***5138—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியில் தற்போது 8 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவருகின்றன. மேலும், மயிலாடுதுறையில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

2019 ஜூலை 17]

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, இதனைக் கனிவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா அவர்களின் வழியில், அம்மாவின் அரசை வழிநடத்தும் குடிமராமத்து நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் O.P.S. அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதி முப்போகமும் விளைச்சல் தரும் பகுதி. நெல் அறுவடை ஆரம்பமாகிவிட்டது. ஆகையால், மயிலாடுதுறை தொகுதியில் பரவலாக நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும். அதேபோன்று, தற்போது 8 ஊராட்சிகளில் நெல் கொள்முதல் செய்வதற்கு அரசுக்குச் சொந்தக் கட்டடம் உள்ளது. மேலும், ஆனந்த தாண்டவபுரம், நமச்சிவாயபுரம், மகாராஜபுரம், திருச்சிற்றம்பலம், மாப்படுகை ஆகிய ஊர்களில் அரசு நெல் கொள்முதல் செய்வதற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியில், நெல் அறுவடை தொடங்கிவிட்டது. அதனால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அதிகமாகத் திறக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். எந்தெந்த இடங்களிலெல்லாம் தேவைப்படுகிறதோ, அந்த இடங்களிலெல்லாம் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதனை இந்த நேரத்தில்*

தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆனந்த தாண்டவபுரம், நமச்சிவாயபுரம், மகாராஜபுரம், மாப்படுகை மற்றும் திருச்சிற்றம்பலம் என கூடுதலாக 5 ஊர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றில், திருச்சிற்றம்பலத்தில் தற்போது 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் நெல் கொள்முதல் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. மற்ற இடங்களில் எல்லாம் 40 சென்ட் இடத்தை அடையாளப்படுத்திக் காட்ட வேண்டும். அங்கு புறம்போக்கு நிலம் இருந்தாலோ அல்லது விவசாயிகள் தானாக முன்வந்து நிலத்தை வழங்கினாலோ, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அவர்கள் அந்த நிலத்தைப் பதிவு செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு பெறப்படுகின்ற நிலத்தில் நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். மேலும், அந்தப் பகுதி அதிகமாக நெல் விளைகின்ற பகுதி. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு permanent கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் கட்டிக்கொடுக்கப்படும் எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதியில் சுமார் ஒன்றரை இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்போது சேமிப்புக் கிடங்கு மயிலாடுதுறை—கும்பகோணம் சாலையில் சித்தர்காடு பகுதியில் உள்ளது. இந்தப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, 50,000 மெட்ரிக் டன் நெல்லை சேமிக்க, நவீன வசதியுடன்கூடிய சேமிப்புக் கிடங்கை மயிலாடுதுறையில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

2019 ஜூலை 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள், மயிலாடுதுறை பகுதியில் ஒன்றரை இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேலாக நெல் கொள்முதல் செய்யப்படுவதாகவும், அதற்கு சேமிப்புக் கிடங்கு வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார். அதற்கு சித்தர்காடு பகுதியில் இன்னும் கூடுதலாக சேமிப்புக் கிடங்கு வேண்டுமென்று கோரியுள்ளார். அதாவது, மயிலாடுதுறை மற்றும் பூம்புகார் தொகுதிகளுக்கு உட்பட்ட அந்தப் பகுதிகளில் நடப்பு ஆண்டு 75,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 75,000 மெட்ரிக் டன் நெல்லை சேமிப்பதற்கு அங்கே போதுமான வசதி இருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தமிழ்நாடு முழுவதும் 360 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைக் கட்டுவதற்கு 122 கோடியே 45 இலட்சம் ரூபாயும், 435 நெல் உலர்களங்கள் கட்டுவதற்கு 38 கோடியே 92 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளது.*

அதுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பரிட்சார்த்தமாக எருக்கூர் என்ற இடத்தில் 64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் ஒரு SILO *கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது அதுவும்* function *ஆகிறது. எனவே, தேவையான இடங்களில் கிடங்குகள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சித்தர்காடு குடோனைப் பற்றித் தெரிவித்துள்ளார். சித்தர்காடு பகுதியில் உள்ள அந்த MRM*–ஐ நான் தொடர்ந்து பலமுறை பார்த்திருக்கிறேன். அங்கு இடவசதி இல்லை. வருங்கால தேவையைக் கணக்கில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வினாவை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, அவர் வேறு ஓர் இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால், வேறு இடத்தில் அல்லது அதன் பக்கத்திலேயே இடம் கிடைக்குமானால், உடனடியாக கிடங்கினைக் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

125—

கால்நடைக் கிளை நிலையம்

***6212—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, கீழ்சக்கரக்கோட்டையில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, கீழ்சக்கரக்கோட்டையில் 1,400 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழ்சக்கரக்கோட்டையில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும்,

2019 ஜூலை 17]

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, கீழ்சக்கரக்கோட்டையில் வாழும் மக்கள் கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்புத் தொழிலை பெரிதும் நம்பியுள்ளனர். அங்கு உள் மாகாணம் மற்றும் வெளி மாகாணம் என 20 பஞ்சாயத்துகள் உள்ளன. அங்கு பெரிய அளவில் மழை இல்லாததால், அப்பகுதி மக்கள் விவசாயத்தை நம்பி இல்லை. அங்குள்ள மக்கள் கால்நடைகளை நம்பியிருக்கிறார்கள். ஆனால், கால்நடைகளின் அடர்வு குறைவாக உள்ளது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். இருப்பினும், கால்நடைகளின் அடர்வைக் கருத்தில்கொள்ளாமல், அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மனதில்கொண்டும், அந்தப் பகுதி மக்கள் வளர்க்கும் கால்நடைகளுக்குப் போதிய மருத்துவ வசதி இல்லாததைக் கருத்தில்கொண்டும், அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்யுமாறு தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிலை ஊராட்சியின்கீழ், மேல்சக்கரக்கோட்டை, கீழ்சக்கரக்கோட்டை, வெள்ளாளப்பட்டி, சோறுதொண்டியூர், இளையபெருமாள்பட்டி, காக்காவீரியம்பட்டி, களிங்கப்பட்டி மற்றும் மாமரத்துப்பட்டி ஆகிய குக்கிராமங்கள் உள்ளன. இதில் மாமரத்துப்பட்டியில் அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, புதிய கால்நடைக் கிளை நிலையம் ரூ.2 இலட்சத்து 97 ஆயிரம் செலவில் தோற்றுவிக்கப்பட்டு, 26–3–2018 முதல் செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 10–30

கீழ்சக்கரக்கோட்டையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் மாமரத்துப்பட்டி கால்நடைக் கிளை நிலையமும், 3.5 கிலோ மீட்டர் தொலைவில் பி. உடையாம்பட்டி கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. ஆகையால், கீழ்சக்கரக்கோட்டையில் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள

மாமரத்துப்பட்டி கால்நடைக் கிளை நிலையம் அல்லது 3.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பி. உடையாம்பட்டி கால்நடை மருந்தக சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்சக்கரக்கோட்டை, தென்னிலை பஞ்சாயத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வாய்ப்பில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். இருந்தாலும், கடவூர் ஒன்றியத்தில் வரவணை ஊராட்சி, வரவணை பகுதியில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அவற்றைப் பாதுகாப்பதற்கும், அவற்றைச் சார்ந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அப்பகுதியில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடந்த ஆண்டு கிருஷ்ணராயபுரம் தொகுதியிலே, அரசாணை எண் 200, கால்நடை பராமரிப்பு (பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) நாள் 10–10–2018–ன்படி, கோயம்பள்ளி கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 2 அரசாணைகளின்படி மேட்டு திருக்காம்புலியூர், நஞ்சைபுளியம்பட்டி மற்றும் புசியம்பட்டியில் புதியதாக 3 கால்நடைக் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதை முதலிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதிக்கு 3 கால்நடைக் கிளை

நிலையங்களும், 1 மருந்தகமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், இந்த ஆண்டும் ஒரு கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் கேட்டிருக்கிற அந்த இடத்தில் 3,000 அலகுகளுக்குமேல் கால்நடைகள் இருந்தால், அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட வந்தவாசி ஒன்றியம், கீழ்செம்பேடு கிராமத்தைச் சுற்றியுள்ள சுமார் 10 கிராமங்கள், வெளியம்பாக்கம், அமூடூர், மூடூர், பாதுர், காவணியாத்துர், வெண்மந்தை போன்ற பகுதிகளில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகள் அனைத்தும் அங்கிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவிலுள்ள கீழ்கொடுங்காவலூர் கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதில் மிகவும் சிரமம் ஏற்படுவதால், சுற்றியுள்ள கிராமங்களுக்கு மையப் பகுதியாக விளங்கும் கீழ்செம்பேடு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புவதோடு, தெள்ளார் ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் கிராமத்தில், 2006–2011–ல் தலைவர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட கால்நடை மருத்துவமனை, கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படாமல் இருக்கிறது. அதனை ஆய்வுசெய்து, கால்நடைகள் தினசரி சிகிச்சை பெறுவதற்கு ஏற்ப உரிய நடவடிக்கையை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி ஒன்றியம், கீழ்செம்பேடு

கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி 3 ஆயிரம் கால்நடை அலகுகள் இருந்தால், கால்நடைக் கிளை நிலையம் துவக்கப்படும். ஆகவே, மேற்கண்ட கிராமத்திற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் அதிகாரிகளை அனுப்பி வைத்து, ஆய்வு செய்து, தேவைப்படுமாயின், அங்கே கால்நடைக் கிளை நிலையம் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல; நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் கால்நடை மருத்துவமனை இருப்பதாகவும், அது கடந்த 2 ஆண்டுகளாகச் செயல்படாமல் இருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். அங்கிருக்கின்ற இணை இயக்குநர் அவர்களை அனுப்பி வைத்து, அதற்கு என்ன காரணம் என்பதை அறிந்து, உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையம்கோட்டை தொகுதி, மேலப்பாளையம் பகுதியிலே நீண்ட போராட்டத்திற்கு பின்னர் அமைந்திருக்கிற கால்நடைக் கிளை நிலையம் முழுவதுமாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டப்பட்டது. இப்போது அந்தக் கிளை நிலையம் பாதுகாப்பில்லாமல், சுற்றுச் சுவர் இல்லாமல், தளம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், அவை சீர் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில், நபார்டு மூலமாகத்தான் நிதியைப் பெற்று, ஆங்காங்கே கால்நடைக் கிளை நிலையங்களை அமைக்கின்றோம். அதேபோல, சுற்றுச் சுவர் அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

2019 ஜூலை 17]

மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுத்தாலும்கூட, உடனடியாக ஆங்காங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். இருந்தாலும், வருகின்ற காலகட்டங்களில் தமிழகம் முழுவதும் இருக்கின்ற கால்நடைக் கிளை நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் மற்றும் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது என்கின்ற கோரிக்கையை வைத்து, நபார்டு வங்கிமூலம் அதிக அளவு நிதியைக் கோரியிருக்கின்றோம். நபார்டிலிருந்து நிதி பெறப்பட்டவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், உடனடியாக பாளையங்கோட்டை கால்நடைக் கிளை நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டித்தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

அதிநவீன கருவிகள் வழங்குதல்

***9430—திரு. எ. ராமர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், தோகைமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அதிநவீன கருவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், தோகைமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே நவீன கருவிகள், குறிப்பாக, X-ray, ultrasonogram,

pulse oximeter, ECG machine, cell counter, operation theatre போன்ற நவீன கருவிகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, ஒரு நாளைக்கு 250–க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்லும் வகையில், ஒரு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இன்னும் என்ன வசதிகள் செய்து தர வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவற்றையும் இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 2016–ல் கேட்ட கேள்விக்கு இப்போதுதான் பதில் வருகின்றது. எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தோகைமலை ஒன்றியம், தோகைமலை ஊராட்சியில் சுமார் 10,000 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தோகைமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தினந்தோறும் 300 முதல் 400 நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுமார் 10 கர்ப்பிணிப் பெண்கள் பிரசவத்திற்காக தினந்தோறும் வந்து செல்கிறார்கள். ஆனால், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவர்களால் சுகப் பிரசவத்திற்கு மட்டும்தான் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பிரசவ வலி அதிகமாக ஏற்பட்டால், 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள மணப்பாறைக்கும், 50 கிலோ மீட்டர் தூரம் உள்ள திருச்சிக்கும்தான் அனுப்புகிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில்* CEmONC centre *தேவைப்படுகிறது. மேலும், அங்கு கண் அறுவை சிகிச்சை மையமும் தேவைப்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதுமான இட வசதி, கழிப்பிட வசதி, சுற்றுச் சுவர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதோடு, 24 மணி நேரமும் மருத்துவ சிகிச்சைகள் வழங்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜுலை 17]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அனைத்து உபகரணங்களும் அங்கு வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 24 மணி நேரமும் மருத்துவ சிகிச்சையை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். தோகைமலையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்கின்றது. இதனை நானே நன்கறிவேன். அடிக்கடி நான் அந்த வழியில் செல்வதால், அதனை நான் பார்த்திருக்கிறேன். அங்கு 8 மருத்துவர்கள் இருக்கின்றார்கள். ஒரே ஒரு மருத்துவர் பணியிடம் மட்டும்தான் காலியாக உள்ளது. 24x7 இரவு நேரங்களிலும் அங்கே மருத்துவர்கள் தங்கிப் பணிபுரிகின்றார்கள். பிரசவங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரசவத்தின்போது* complications *ஏதாவது இருந்தால் அதனை நாம்* refer *செய்யத்தான் வேண்டும். ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் என்ன அதிகபட்சமான வசதிகள் இருக்க வேண்டுமோ, அத்தனை வசதிகளும் தோகைமலையில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று, கர்ப்பிணிப் பெண்களுக்கான சிகிச்சைகளை மேம்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, குளித்தலை அரசு மருத்துவமனை 103 படுக்கை வசதியிலிருந்து 151 படுக்கை வசதிகள் கொண்டதாக தற்போது தரம் உயர்த்தப்பட்ட அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இந்த அரசு மருத்துவமனையில்* Senior Civil Surgeon 2, CEmONC *மகப்பேறு மருத்துவர்கள் 2,* CEmONC *மயக்க மருத்துவர் 2,* CEmONC *குழந்தை நல மருத்துவர் 1, கண் மருத்துவர் 1, ஆக எட்டு மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், பொது மக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் தளர்வு ஏற்படுகிறது. எனவே, பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு மருத்துவர்*

காலிப் பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும். மேலும், இந்த அரசு மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

அதேபோன்று, தோகைமலை ஒன்றியம், காவல்காரன்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் பணியிடம் 1 மற்றும் செவிலியர் பணியிடம் 1 காலியாக உள்ளது. மேலும், போதுமான இட வசதி தேவைப்படுகின்றது. மேலும், தோகைமலை ஒன்றியம், கூடலூர் ஊராட்சி, கூடலூரில் உள்ள மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட நாள் 2–10–1973; அம்மருத்துவமனை நிரந்தமாக மூடப்பட்ட நாள் 31–12–2011; மருத்துவர் ஓய்வு பெற்ற காரணத்தினால், அம்மருத்துவமனை மூடப்பட்டுள்ளது. சுற்று வட்டாரப் பகுதியில், சுமார் 12,000–க்கும் மேற்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். இந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட போதிய இட வசதியும் உள்ளது. எனவே, கூடலூர் ஒன்றிய மருத்துவமனையை விரைவில் திறக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவர் ஓய்வு பெறுவதால், அந்த மருத்துவமனையை மூடுவது என்பது நிச்சயமாக இல்லை. திட்டவட்டமாக இதனை நான் மறுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கூடலூர் அரசு மருத்துவமனையை ஆய்வு செய்து, இன்று மாலைக்குள் மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவலைத் தெரிவிக்கின்றேன். மருத்துவர் ஓய்வு பெறுவதினால் மருத்துவமனை மூடப்படுவதில்லை. குளித்தலை மருத்துவமனை பற்றி நீங்கள் சொன்ன விவரங்கள் எல்லாம் 15 தினங்களுக்கு முன்னால் உள்ள விவரங்கள் ஆகும். 12 மருத்துவர்களும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவராக join செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், அந்த மருத்துவமனைக்கு அம்மா அவர்களது ஆட்சியில் CT scan, dialysis machine, ventilator, ECG machine கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. இப்போது அரசு அந்த வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. மாண்புமிகு

2019 ஜூலை 17]

உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் அந்த கருத்துரு அரசின் சாதகமான பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முற்பகல் 10–40

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். திருக்கோவிலூர் தொகுதி, திருக்கோவிலூர் ஒன்றியம், அருங்குரிக்கை கிராமத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமம் உளுந்தூர்பேட்டை தொகுதிக்கு அருகிலுள்ள கிராமமாகும். அந்தக் கிராமத்திலே வசிக்கின்ற மக்கள் அனைவரும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அங்கே அமைக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்போது நான் தெரிவித்ததுபோல, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் அரசுக்கு வலுவான கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. 8 கிலோ மீட்டருக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பதை நாம் பூர்த்தி செய்திருக்கிறோம். கடந்த ஆண்டிலிருந்து,* NHM *நிதியில்தான் 60:40 என்ற* ratio–*வில் தொடங்குகிறோம். கடந்த ஆண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. அதனால், இந்த ஆண்டு 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள்*

அமைக்கப்பட வேண்டுமென்று நம்முடைய கோரிக்கை தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான ஆணையைப் பெறுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதிக்குட்பட்ட, செய்யூர் தாலுகா தலைமை மருத்துவமனைக்கும், கடப்பாக்கம் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கூடுதலாக அதி நவீன கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, dialysis சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அந்தப் பகுதிகளில் அதிகமாக இருப்பதால், dialysis கருவிகளைக் கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய முக்கியமான கோரிக்கை ஒன்றை இந்த நேரத்தில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது என்னவென்றால், NHM scheme–ல் 60:40 என்ற ratio–வில், கிட்டத்தட்ட 265 பல் மருத்துவர்கள் outsourcing and contract முறையில் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு regularisation செய்யப்படாமலும், காலமுறை ஊதியம் வழங்கப்படாமலும் இருக்கிறது. தற்போதுகூட, 100 பணியிடங்களை நிரப்புவதற்கு call for செய்யப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு வழங்கப்படுவதுபோல இவர்களுக்கும் 65,000 ரூபாய் ஊதியமாக வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், இவர்களும் professionals-தான், 5 வருடங்கள் படிக்கிறார்கள்; Service registration எதுவும் தற்போது செய்யப்படுவதில்லை. கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் பணிபுரிந்த நிலையில், திருப்பத்தூர் HUD–ல் பணிபுரிந்த டாக்டர் ராஜசேகர் என்பவர் heart attack–ல் இறந்துவிட்டார். Service Register இல்லாத காரணத்தாலும், காலமுறை ஊதியமும் நிர்ணயம் செய்யப்படாத காரணத்தாலும், பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்திற்கு எந்தவிதமான பயன்களும் அரசால் வழங்கப்படவில்லை. ஆகவே, இந்த நேரத்தில் அரசையும்,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், அழுத்தந்திருத்தமாக இந்த அவையின் வாயிலாக நான் வலியுறுத்த விரும்புவது, காலமுறை ஊதியத்தில், regularisation scheme–ல் பல் மருத்துவர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார். ஒன்று, dialysis கருவிகள் கூடுதலாக வழங்க வேண்டுமென்பது. ஏற்கெனவே, 400 கருவிகள் என்ற நிலையை மாற்றி, 600 கருவிகள், 800 கருவிகள் என்ற நிலையில் இருந்ததை, நேற்று நடந்த மக்கள் நல்வாழ்வுத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையின்போது கூடுதலாக 200 கருவிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் 1,000 dialysis கருவிகள் இருக்கின்றன. அனைத்து taluk hospitals and non-taluk hospitals-லும்கூட dialysis சிகிச்சை அளிப்பதற்கு, அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. எந்தவொரு taluk hospital and non-taluk hospital-களாலும் dialysis கருவிகள் வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டாலும், அது உடனடியாக வழங்கப்படும் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பல் மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்புவது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பல் மருத்துவர்கள் ஏற்கெனவே on contract–ல்தான் நியமனம் செய்யப்பட்டார்கள். மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகப் பல் மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. அவ்வாறு நிரப்பப்படும் பல் மருத்துவர்கள் பணியிடங்களுக்காகத் தேர்வு செய்யப்பட்ட பல் மருத்துவர்கள்தான் regularisation செய்யப்படுவார்கள்; ஏனென்றால், அவர்கள்தான் நிரந்தர மருத்துவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பல் மருத்துவர்கள், ஏற்கெனவே daily wages–ல் ஒரு நாளைக்கு

800 ரூபாய் ஊதியமாக வழங்கப்படும் என்ற அடிப்படையில்தான் நியமனம் செய்யப்பட்டவர்கள். அவர்களை நிரந்தரம் செய்வதற்கு அரசால் கருத்துரு தயார் செய்யப்பட்டது. அதில் பல்வேறு சட்ட சிக்கல்கள் இருப்பது தெரிய வந்தது. மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகப் பல் மருத்துவர்களைத் தேர்வு செய்த பிறகு—துறையில் ஏற்கெனவே temporary மருத்துவர்கள் on contract–ல் இருக்கிறார்கள். அவர்களை regularisation செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று கருத்துரு திரும்பி வந்துவிட்டது. அவர்களுக்கு ஊதியத்தை அரசு உயர்த்தி வழங்கியிருக்கிறது. எனவே, அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆத்மாவை வணங்குகிறேன். வடக்கு மண்டலத்தில் பெரும்பான்மையாக வசிக்கும் வன்னியர் சமுதாயத்தினரின் பாதுகாவலராக விளங்கிய மரியாதைக்குரிய ஐயா திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு கடலூரில் நினைவு மண்டபம் அமைப்பதுடன், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் வரும் 19 ஆம் தேதி அவருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கவிருக்கும், கொங்குநாட்டு சிங்கம், சேலத்து செம்மல், இரும்பு மண்ணில் விளைந்த கரும்பு மனிதர், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் தரப்பு மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றவர், அன்பையும் பாராட்டையும் பெற்று வருகின்ற ஆற்றலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது பணிவான நன்றியையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட, வேப்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு அம்மா அவர்களால் வட்டார தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. அந்தப் பகுதியில்

2019 ஜூலை 17]

இருக்கக்கூடிய பல கிராமங்களிலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவம் பெற மூன்று பேருந்துகளில் மாறி மாறி நல்லூர் அல்லது சிறுமங்கலத்திற்குச் சென்று வருகின்றனர். இந்தச் சிரமத்தைப் போக்கும் வகையில், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழக்குறிச்சி கிராமத்தினைச் சுற்றி பல குக்கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள மக்கள் பயன்பெறும் வகையில், கீழக்குறிச்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைப் புதியதாகத் துவங்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழக்குறிச்சியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே என்னிடத்தில் வலியுறுத்தியுள்ளார். அரசு அதைக் கனிவோடு ஆய்வு செய்து பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

உலர்களம்

***27421—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, M. புதுப்பட்டி பேரூராட்சியில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, M. புதுப்பட்டி கிராமத்தில் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்த மனித தெய்வமாய், தமிழகத்தின் காவல் தெய்வமாய், ஏழைகளின் இதய தெய்வமாய் வாழ்ந்து, தமிழக மக்களுக்காக எண்ணற்ற பல நலத் திட்டங்களைத் தீட்டி, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனங்களைவிட்டு மறையாத, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழக மக்களுக்காக நல்ல பல திட்டங்களை விதி 110–ன்கீழ் நாள்தோறும் வாரி வழங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானம் காக்கும் ஆடைகளை நெய்யும் நெசவாளர்களை ஊக்குவிக்கும்விதமாகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்த விலையில்லா வேட்டி சேலை மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடைகளை நெய்யும் கைத்தறி, பெடல்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு அகவிலைப்படி மற்றும் கூலியினை உயர்த்தி வழங்கி நெசவாளர்கள் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிய, நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களுக்கு என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிவாழ் மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, M. புதுப்பட்டி பேரூராட்சியில் உள்ள மக்கள் அதிக அளவு விவசாயம் செய்து வருகிறார்கள். இவர்கள் பயறு வகைகள், எள் மற்றும் தானிய வகைகளை அதிக அளவில் பயிர் செய்து வருகிறார்கள். இவர்கள் விளைய வைக்கும் விவசாயப் பொருட்களை உலர வைப்பதற்கும், அதனைப் பிரித்தெடுப்பதற்கும் உலர்களம் இல்லாததால், தார்ச் சாலையை உலர்களமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே, இப்பகுதியில் போதிய இட வசதி உள்ளதால், M. புதுப்பட்டி மற்றும் இப்பகுதி விவசாய மக்களின் கோரிக்கையினை ஏற்று, M. புதுப்பட்டி பேரூராட்சியில் ஓர் உலர்களம் அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் 22 உலர்களங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. M. புதுப்பட்டியிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள நெடுங்குளம் கிராமத்தில் உள்ள உலர்களத்தினை விவசாயிகள் பயன்படுத்தலாம். மேலும், அவசியத்தின்

அடிப்படையில் M. புதுப்பட்டியில் பேரூராட்சிமூலம் இடம் கிடைக்கும்பட்சத்தில், அதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உலர்களம் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

முற்பகல் 10—50

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்தில் கூடிய விரைவில் ஓர் உலர்களம் அமைத்துத்தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், மகாராஜபுரம் கிராமத்தில் விவசாயப் பொருட்கள் வைப்பதற்கு ஒரு சேமிப்புக் கிடங்கும், அதுமட்டுமல்லாமல், அதே பகுதியில் ஓர் உலர்களமும் அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 11 விற்பனைக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே தேவையான அளவிற்கு உலர்களங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, தேவைப்படுமாயின், அங்கு அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், நெல் விளைச்சல்

அதிகமுள்ள மாவட்டம். இங்கு உலர்களங்கள் அமைப்பதற்கு பல ஊராட்சிகளில் இடமில்லாமல் இருக்கிறது. இப்போது எப்படி அரிசி ஆலைகளிலே அப்படியே உலர வைக்கிறார்களோ, அதேபோன்று நம்முடைய டெல்டா பகுதிகளிலெல்லாம் உலர்களங்கள் அமைக்கப்பட்டால், மழைக் காலங்களில் மழையினால் பாதிக்கப்படாமல் அங்கு நெல்லினைக் காய வைக்கக்கூடிய நிலை ஏற்படும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 31 மாவட்டங்களில் சுமார் 1,827 உலர்களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேவையான இடங்களிலெல்லாம் ஆராய்ந்து, விவசாயிகளுடைய நலனைக் கருதி, அங்கே இருக்கின்ற விவசாய உற்பத்திக்கேற்ப உலர்களங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

சுற்றுலாத் தலம்

***1339—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூடலூர் தொகுதி, பொன்னூரிலுள்ள வாசனை திரவியப் பூங்காவை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கூடலூர் தொகுதி, பொன்னூரிலுள்ள வாசனை திரவியப் பூங்காவை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று பேரவை சட்டமன்ற உறுப்பினர்

திரு. மு. திராவிடமணி அவர்கள் வினவியுள்ளார்கள். கூடலூர் தொகுதி, பொன்னூரிலுள்ள வாசனை திரவியப் பூங்கா, தோட்டக்கலைத் துறையால் 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் வன விலங்குகள் நடமாட்டம் உள்ளதால், சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை. நீலகிரி மாவட்டத்தில், உதகையிலிருந்து 51 கிலோ மீட்டர் தொலைவிலும், கூடலூரிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ள பொன்னூரில் வாசனை திரவியப் பூங்கா அமைந்துள்ளது. இப்பூங்காவில் தற்போது சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் கிராம்பு, பட்டை, ஜாதிக்காய் போன்ற வாசனை திரவியங்கள் பயிரிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. வாசனை திரவியப் பூங்கா அமைக்கப்பட்ட இடத்தில் விலங்குகள் நடமாட்டம் உள்ளதால், இப்பூங்காவிற்கு சுற்றுச் சுவர் எழுப்ப நிதி ஒதுக்கீடு செய்தால், இப்பூங்கா நல்லமுறையில் பராமரிக்கப்படும் என தோட்டக்கலைத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பூங்காவை சுற்றுலாத் தலமாக உருவாக்கும் கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்கு தொல்லை அதிகமாக இருப்பதால், வாசனை திரவியப் பூங்காவிற்குள் சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அதையொட்டியே அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. அந்த அகழிகளைத் தூர்வாரினாலே, யானை போன்ற வன விலங்குகள் உள்ளே வராமல் இருக்கும். ஆகவே, அதை வனத் துறையும், வேளாண்மைத் துறையும், சுற்றுலாத் துறையும் இணைந்து செயல்படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் சட்டப் பேரவைத் தொகுதியிலுள்ள பகுதிகளுக்கு கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள்.

2019 ஜூலை 17]

இந்தப் பகுதி இயற்கையாகவே அதுவும் spontaneous *ஆக சுற்றுலாத் தலமாக இருக்கக்கூடிய பகுதி. இந்தப் பகுதியில் உள்ள பொன்னூரில் கிட்டத்தட்ட 200 ஏக்கரில்* farm *இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் வண்ணத்துப்பூச்சி பூங்கா ஒன்றும் இருக்கிறது. அதனருகில் 2,000 ஏக்கருக்கு அதிகமான இடத்தில் வனத் துறைக்குச் சொந்தமான* Gene Pool *ஒன்றும் இருக்கிறது. இந்த மூன்றையும் இணைத்து சுற்றுலாத் துறையின் மூலமாக மேம்படுத்தினால் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து, அதிகமாக சுற்றுலா வருவாயை ஈட்டுவதற்கு வழிவகை ஏற்படும். அண்டை மாநிலமான கேரளாவில் உள்ள வயநாட்டில் சுற்றுலா* activities *நிறைய செய்கிறார்கள். அதனால், இங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் கேரள மாநிலத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.*

முற்பகல் 10–55

ஆகவே, இந்தப் பகுதியை சுற்றுலாத் துறையின் மூலமாக மேம்படுத்த வேண்டும். அங்கே பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. தேவாலா, தென்னிந்தியாவின் சிரபுஞ்சி என்றழைக்கப்படும் பகுதி. அங்கு வண்ணத்துப்பூச்சி பூங்கா, Gene Pool *ஆகியவை இருக்கின்றன. ஆகவே, இந்த மூன்று இடங்களிலும் அதிகமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து, சுற்றுலாத் துறை மேம்படுத்தினால், சுற்றுலா வளம் பெருகுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதேபோன்று, அந்தப் பூங்காவில் ஒரு* boat house *அமைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. சுற்றுலாத் துறையும், வேளாண்மைத் துறையும் இணைந்து இதையும் ஏற்படுத்தித் தந்தால், அதிகமான நிதி ஒதுக்கீடு செய்தால், சுற்றுலாப் பயணிகள்மூலம் அரசுக்கு அதிகமான வருவாய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், இது இயற்கையாகவே அமையப்பெற்ற சுற்றுலாத் தலம். இதற்கென்று நாம் தனியாக சுற்றுலாத் தலம் அமைக்க வேண்டிய அவசியமே கிடையாது. இயற்கையாகவே அமையப்பெற்ற இந்த சுற்றுலாத் தலத்திற்கு, சுற்றுலாத் துறையின்மூலம் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து மேம்படுத்தினால், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அங்கு, வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்படும் அடிப்படை வசதிகள், அணுகுசாலை வசதிகள் மற்றும் தொடர்புடைய துறைகளின் தடையின்மைச் சான்றுகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன், சுற்றுலாத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி கருத்துரு பெறப்படும்பட்சத்தில், அது பரிசீலிக்கப்பட்டு, சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதியை ஆழப்படுத்தி, படகு சவாரி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், தொடர்புடைய துறையின் தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டு, சுற்றுலாத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் கருத்துருக்கள் பெறப்படும்பட்சத்தில், இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடலூரில் வருடா வருடம் வாசனை திரவிய கண்காட்சி நடைபெறுகிறது. ஆனால், அந்தக் கண்காட்சி இந்த ஆண்டு நடைபெறவில்லை. அது ஏனென்று தெரியவில்லை. அந்த வாசனை திரவியக் கண்காட்சி ஏதோ பெயரவிற்குத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. Ooty–ல் மலர் கண்காட்சி எந்த அளவிற்கு கோடை விழாவில் நடைபெறுகின்றதோ, அதற்கு இணையாக வாசனைத் திரவிய கண்காட்சியும் நடைபெற்றால் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதனால், வருவாயும் பெருகும்.

கூடலூரில் சுற்றுலா தகவல் மையம் ஒன்று இருக்கிறது. அது இயங்கவே இல்லை. அதை இயங்கச் செய்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

2019 ஜூலை 17]

அதைவிட, season time–ல் கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து இந்தப் பகுதிக்கு அதிகமான வாகனங்கள் வருகின்றன. அதற்கேற்ற parking வசதிகள் இந்தப் பகுதியில் இல்லை. இதனால் இட நெருக்கடி அதிகமாக ஏற்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதற்கு அச்சப்படக்கூடிய சூழ்நிலையும் இருக்கின்றது. அதனால், நாம் வருவாயை இழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திற்கு வருவாய் ஈட்டுவதில் இரண்டாவது இடத்தில் சுற்றுலாத் துறை இருக்கிறது. எனவே, அதைப் பெருக்க வேண்டும். ஆகவே, அங்கு வருகின்ற வாகனங்களுக்கு parking வசதியை சுற்றுலாத் துறையின்மூலம் ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைகளின் அரசி என்றழைக்கப்படும் உதகமண்டலத்திற்கு உள்நாடு மற்றும் வெளி நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் ஆண்டுதோறும் அதிக அளவில் வருகை புரிகின்றனர். உதகமண்டலத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளான, தங்கும் விடுதிகள், கட்டடங்கள், சாலைகள் அமைத்தல், மண்டபங்கள், வழிகாட்டிப் பலகைகள், கழிப்பறைகள், ஆற்றல்மிகு விளக்குகள், கட்டமைப்பு வசதிகள், அணுகு சாலைகள் அமைத்தல், சுற்றுலா வரவேற்பு வளாகத்தை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடனும், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடனும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூ.556.45 இலட்சம் நிதி மாநில அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ், 2001 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை, ரூ.163.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் செய்து முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மேலும், இம்மேம்பாட்டுப் பணிகள்மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது.*

[2019 ஜூலை 17

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: 2015 ஆம் ஆண்டில் 29 இலட்சத்து 38 ஆயிரத்து 649 நபர்கள், 2016 ஆம் ஆண்டில் 31 இலட்சத்து 16 ஆயிரத்து 434 நபர்கள், 2017 ஆம் ஆண்டில் 32 இலட்சத்து 69 ஆயிரத்து 326 நபர்கள் சுற்றுலாப் பயணிகளாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகை புரிந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நடத்தப்படும் ஊட்டி படகுக் குழாமில் 133 படகுகள் உள்ளன. அதில் மோட்டார் படகுகளும், 91 துடுப்புப் படகுகளும் உள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களைக் கவரும் வகையில், அவர்கள் உற்சாகத்துடன் படகு சவாரி செய்ய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பைக்காரா படகுக் குழாமில் 18 இயந்திரப் படகுகள், அதிவேகப் படகுகள் என மொத்தம் 22 படகுகள் இயங்கி வருகின்றன. மேலும், சுற்றுலாத் துறை, எந்தவொரு இடத்தையும் முன்வந்து சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை என்கிற நோக்கம் இருப்பினும், ஆண்டுதோறும் சுற்றுலாத் துறையின் சார்பாக நீலகிரியில் விழா நடத்தப்படுகிறது. தேர்தல் காலமாக இருந்ததால், வாசனை திரவியப் பூங்காவில் அந்த விழா நடத்தப்படவில்லை என்கின்ற தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய வினாவிற்கு நான் பதிலளிக்கும்போது, விருதுநகர் மாவட்டத்தில் 7 என்பதற்கு பதிலாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 11 என தவறுதலாகக் குறிப்பிட்டுவிட்டேன். அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள். (குறுக்கீடு) Correct ஆகக் கேளுங்கள்.

2019 ஜூலை 17]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாகும். உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் வருகை தருகின்றார்கள். ஒரு நாள் முழுவதும் அங்கேயே தங்கியிருந்து, சுற்றிப் பார்த்து கண்டுகளிப்பதற்கு எந்த வசதிகளும் இல்லை. குறிப்பாக, தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஐயன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறை மட்டும்தான் அங்கே இருக்கின்றன. திருவள்ளுவர் சிலைக்கு இயக்கப்படுகின்ற படகுப் போக்குவரத்து அடிக்கடி இரத்து செய்யப்பட்டுவிடுகிறது. எனவே, திருவள்ளுவர் சிலையைப் பார்ப்பதற்கு சென்றுவர* Rope car *வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.*

மேலும், சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரி கடற்கரையில் மணற்பரப்பே இல்லை. மெரினா கடற்கரை போன்று, மணலில் உட்கார்ந்து கடலை ரசிக்கக்கூடிய அளவிற்கு மணற்பாங்கான இடமே இல்லை. நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே இதுகுறித்த proposal*–ஐ மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சமர்ப்பித்திருந்தேன். அங்குள்ள* View tower*–க்கும், சிலுவை நகருக்கும் இடையே ½ கி.மீ. தூரம் இருக்கிறது. அங்கே மட்டும்தான் நாம் மணற்பரப்பை உருவாக்க முடியும். அங்கே ஒரு செயற்கையான கடற்கரையை* (Artificial seashore) *உருவாக்கித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். மணவாளக்குறிச்சி அருகேயுள்ள* IREL *மணல் ஆலையில், கனிம வளத்தை எடுத்ததுபோக, மீதியிருக்கக்கூடிய* waste *மணல் மலைபோல் குவிந்திருக்கிறது. அதிலிருந்து 2 ஆயிரம், 3 ஆயிரம்* loads *மணலை எடுத்து செயற்கையான கடற்கரை தளத்தை உருவாக்கினால், உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அங்கே அமர்ந்து கடலை ரசிப்பதற்கும், ஒரு நாள் முழுவதும் கன்னியாகுமரியில் பொழுதைப் போக்குவதற்கும் வசதியாக இருக்கும். எனவே, ஐயன் திருவள்ளுவர் சிலைக்கு* Rope car *வசதி செய்து தருவதற்கும், செயற்கை கடற்கரையை உருவாக்கித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சுற்றுலாத்*

தலங்களில் அடிப்படை வசதிகள் வேண்டுமென்று கோரியுள்ளார். சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அடிப்படையில், தொடர்புடைய துறையின் தடையின்மைச் சான்றிதழ் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள சுற்றுலாத் துறையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக, சுற்றுலாத் துறையின்மூலம் கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலைக்கு Rope car வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின்மூலம் Rope car திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அது பரிசீலனையில் உள்ளது என்கின்ற மேலான தகவலையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

ஆவின் பாலகம்

***34918—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்

2019 ஜூலை 17]

தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் துறையிலிருந்து இடம் ஒதுக்கித் தரும்பட்சத்தில், ஆவின் நிறுவனம் சார்பாக, ஆவின் பால் விற்பனை செய்ய ஆவின் பாலகம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது வேலூரில் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தினால், தேர்தல் முடிந்ததற்குப் பின்பாக ஆவின் பால் விற்பனை செய்ய, பாலகம் அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, அதிகமான கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய தொகுதியாகும். இப்பகுதி மக்கள் திருப்பத்தூர் நகரத்தில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3 ஆயிரம் பேர் உள் நோயாளிகளாகவும், புற நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கு மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் வார்டுகள் செயல்பட்டு வரும் நிலையில், நோயாளிகள், தாய்மார்கள், பொது மக்கள், குழந்தைகளுக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்கள் அங்கு கிடைப்பதில்லை. குறிப்பாக, இரவு நேரங்களில் பால் பொருட்கள் கிடைக்காமல் பெரும் அவதிப்படுகின்றார்கள். ஆகையால், பால் வளத் துறையில் வெண்மைப் புரட்சி செய்ததாக அறிவித்த மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களும், குறிப்பாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அதிக கவனத்தைச் செலுத்தி, இப்பகுதியில் அத்தியாவசிய தேவையாக உள்ள ஆவின் பாலகத்தை மருத்துவமனை வளாகத்தில் அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியைப் பொறுத்தமட்டில், 4 கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கங்கள் இருந்தாலும், சுமார் 2,500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அவர் சொல்வதைப்போல், அந்த அரசு மருத்துவமனைக்கு ஆயிரக்கணக்கான புற நோயாளிகள், உள் நோயாளிகள் வந்து செல்கின்றார்கள். ஆகவே, அங்கு ஓர் ஆவின் பாலகம் அமைத்து, ஆவின் பால் பொருட்கள் வைத்தால், அங்கே வருகின்றவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அதுதான் அரசினுடைய எண்ணமும். ஆனால், மருத்துவத் துறையிலிருந்து சரியாக அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்கின்ற காரணத்தினால், அது கிடைத்தவுடன் நீங்கள் கோருகின்ற அந்த இடத்தில், ஆவின் பாலகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கின்ற காரணத்தினால், தேர்தல் முடிந்த பின்பாக, நீங்கள் தபால் மூலமாக அந்த அனுமதியைப் பெற்று, எங்களிடத்தில் கொடுத்திடும் நேரத்தில், நீங்கள் சொல்கின்ற அந்த இடத்தில் நல்ல அதி நவீன* Aavin Hitech Parlour *அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட, கந்திலி ஒன்றியம், கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அரசு கலைக் கல்லூரி மற்றும் அதற்கு அருகில் துணை மின் நிலையம் உள்ளது. அங்கு கல்லூரி மாணவ, மாணவியர், மின் ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் தேவையினைக் கருத்தில்கொண்டு, கல்லூரிப் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 200 கல்லூரிகளில்*

2019 ஜூலை 17]

நவீன ஆவின் பாலகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. இன்னும் சில கல்லூரிகளில் அமைப்பதற்கு அனுமதி கேட்டிருக்கின்றோம். தாங்கள் கூறுகின்ற அந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைப்பதற்கு அனுமதி பெற்றுத் தரும்பட்சத்தில், உடனடியாக அங்கே நவீன ஆவின் பாலகம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அன்பு வணக்கம். ஆவின் பாலகம் என்பது பல்வேறு இடங்களில் திறக்கப்படுகிறது. எங்களுடைய தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, நகரத்தின் பல்வேறு மூலை, முடுக்குகளில் எல்லாம் கிட்டத்தட்ட 100 பாலகங்களுக்குமேல் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படித் திறக்கப்பட்ட அத்தனை ஆவின் பாலகங்களுக்கும் எப்படி அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையினாலே, நம்முடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குண்டான வழிமுறைகளை, நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்களா? அந்த நிபந்தனைகள் எல்லாம் என்ன என்பதை இந்த அவையில் அவர் விளக்குவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆவின் பாலகம் குறித்துக் கேட்டிருக்கிறார். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை ஆகிய 3 மாவட்டங்களை உள்ளடக்கிய கூட்டுறவு பால் ஒன்றியம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஆகவே, அங்கே எல்லா இடங்களிலும்* Aavin Hitech Parlours *அமைத்திருக்கின்றோம். அரசு*

இடங்களிலே அல்லது மற்ற துறையினுடைய இடங்களிலே அந்தந்த துறையின் அனுமதியைப் பெற்று பால் வளத் துறையின் சார்பாக Aavin Hitech Parlours வைத்திருக்கின்றோம். தனியார்கள் யாராவது ஆவின் பால் விற்பனை செய்ய விரும்பினால், 100 சதுர அடி உள்ள இடத்தை 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் குத்தகைக்கோ அல்லது சொந்தமாகவோ வைத்திருந்து, அதற்குரிய நகல்களை எங்களிடத்தில் தாக்கல் செய்தால், ஆவின் ஒன்றிய மேலாளர் இடத்திலே அனுமதி கேட்டு மனு கொடுத்தால், அதைப் பரிசீலனை செய்து, இடம் சரியாக இருக்கும்பட்சத்தில், அவர் கூறுகின்ற இடம் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் ஒரு வியாபார ஸ்தலமாக இருக்கின்றபட்சத்தில், உரிய முறையில் அங்கே தொடங்கிட அனுமதி அளிக்கப்படுகிறது. ஆகவே, நீங்கள் கேட்டாலும் அனுமதி கொடுப்போம். அனுமதி கேட்கின்றவர்கள் யாராக இருந்தாலும், இன பாகுபாடு பார்க்காமல், ஜாதி பாகுபாடு பார்க்காமல் அனைவருக்கும் அனுமதி கொடுக்கக்கூடிய ஒரே துறை, பால் வளத் துறை. (மேசையைத் தட்டும் ஒலி)

பால் வளத்தைப் பொறுத்தமட்டில், இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய எண்ணம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 20 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல், இன்றைக்கு 33 இலட்சத்திலிருந்து 37 இலட்சம் லிட்டராக உயர்ந்திருக்கிறது. பால் கொள்முதலும் உயர்ந்திருக்கிறது; பால் விற்பனையும் உயர்ந்திருக்கிறது. எங்களுடைய இலட்சியம், மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசினுடைய இலட்சியம் 50 இலட்சம் லிட்டராக அதை உயர்த்த வேண்டுமென்பதுதான். அதற்காக நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பால் விற்பனை நிலையங்களை அதிகமாக 100, 200 கேட்டாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: நீங்கள் கேட்டாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். 234 சட்டமன்ற உறுப்பினர்கள் யார் எந்த இடத்தில் Parlour அமைக்க வேண்டுமென்று அனுமதி கேட்டாலும் அவர்கள் சொல்கின்ற இடத்தில் அமைப்பதற்கு அனுமதி கொடுப்போம். நம்முடைய சகோதரர் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. அன்பழகன்

2019 ஜூலை 17]

அவர்கள் நேற்று பேசுகின்றபோது, கும்பகோணம் சுற்றுலாத் தலமாக உள்ள இடம், மக்கள் வந்து செல்லக்கூடிய இடம், சாமி கும்பிடுவதற்கு இந்துக்கள் வந்து செல்லக்கூடிய ஒரு புனித ஸ்தலம். அங்கே ஒரு Aavin Parlour *வைக்க வேண்டுமென்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்கு கோப்பு அனுப்பப்பட்டு, 500* Aavin Parlours *வைப்பதற்கு அனுமதி அளித்திருக்கின்றார். சென்ற ஆண்டு விதி 110–ன்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. அதனடிப்படையில், 375 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டன. இன்னும் 125 இடங்கள் தேர்வு செய்யப்பட இருக்கின்றன. நீங்கள் மனுக்களைக் கொடுத்தால் அதையும் சேர்த்து, 500 இடங்களிலே 3, 4 மாதங்களுக்குள்* Aavin Parlours *அழகாக வைத்து, ஆவின் பொருட்களும், ஆவின் பாலும் விற்பனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

மகளிர் கலைக் கல்லூரி

***44513—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் நிருவாகத்தின் சார்பாக அழகர்கோயிலில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் பகுதியைச் சுற்றி தற்போது 14 கல்லூரிகள் உள்ளன. மேலும், இந்தத் திருக்கோயிலைச் சுற்றியுள்ள இடத்தில் இடப் பற்றாக்குறை இருப்பதால், இத்திருக்கோயில் நிருவாகத்தின் மூலமாக மகளிர் கலைக் கல்லூரி துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, அழகர்கோயில் நிருவாகத்தின் சார்பாக ஒரு துவக்கப் பள்ளியும், உயர் நிலைப் பள்ளியும் நல்ல கல்வித் தரத்துடன் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிருக்கு பல திட்டங்களைக் கொடுத்து, வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழிவகை செய்துள்ளார்கள். அழகர்கோயில் பகுதியைச் சுற்றியுள்ள மாணவியர் 10 மற்றும் 12-வது வகுப்புடன் படிப்பை முடித்து விடுகின்றனர். அழகர்கோயில் நிருவாகத்தின் சார்பாக மகளிர் கலைக் கல்லூரி அமைத்துக் கொடுத்தால், மேலூர் தொகுதி, மதுரை கிழக்குத் தொகுதி, சோழவந்தான் தொகுதி, நத்தம் தொகுதி ஆகிய பகுதிகளில் உள்ள மாணவிகள் கல்லூரிப் படிப்பை படிப்பதற்கும், வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் ஏதுவாக இருக்கும். அழகர்கோயில் நிருவாகத்திற்குச் சொந்தமான கோட்டைக்கு வெளியே மேற்குப் புறத்தில் போதிய இடவசதியும், வருவாயும் உள்ளது. எனவே, அப்பகுதியிலுள்ள மகளிரின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு, எனது சொந்தக் கிராமம்

2019 ஜூலை 17]

அழகர்கோயிலில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் பகுதியைச் சுற்றி ஏழு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் கூடுதலாக ஏழு கல்லூரிகளும், ஆக மொத்தம் 14 கல்லூரி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இத்திருக்கோயில் வளாகத்தில் பக்தர்கள் வாகனங்கள் நிறுத்தவும், சமையல் செய்து உணவு அருந்தவும், பக்தர்கள் பயன்பாட்டிற்கு மட்டுமே இட வசதி உள்ளது. புதிய கல்லூரிக் கட்டடங்கள், விடுதிகள், விளையாட்டுத் திடல் போன்றவற்றிற்குப் போதுமான இட வசதி இல்லை. இத்திருக்கோயிலால் நடத்தப்படும் துவக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, கருணை இல்லங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கையும் குறைவாக இருக்கிறது. அங்கு கலைக் கல்லூரி அமைக்கும்பட்சத்தில், அழகர்கோயிலுக்கு அருகில் ஓர் அரசு மற்றும் தனியார் கல்லூரி இருப்பதால், போதிய அளவில் மாணவ, மாணவியர் சேர்க்கை இருக்காது. அதோடு, ஆண்டு வருவாயில் திருக்கோயில் நிருவாகச் செலவு, பாதுகாப்பு மற்றும் சுகாதார செலவு, திருவிழா செலவு, மராமத்து செலவு மற்றும் இதர செலவு போக, புதிய முதலீடு 14 சதவிகிதம் மட்டுமே உள்ளது. இதன் வருமானமில்லாத ஏழு உப கோயில்களையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதாலும், கல்லூரி மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர செலவினங்களுக்குப் போதுமான நிதி வசதி இல்லாததாலும், இத்திருக்கோயில்மூலம் மகளிர் கலைக் கல்லூரி துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

[2019 ஜூலை 17

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகர்கோயிலில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பித் தரவும், அழகர்கோயில் நிருவாகத்திற்குக் கட்டுப்பட்ட ஆராவமுது கண்மாயைத் தூர்வாரி தண்ணீர் தேக்க நடவடிக்கை எடுக்கவும், மீன்பாசி ஏலத்தை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும். மேலும், அழகர்கோயிலில் குரங்குகள் அதிகமாக உள்ளன. இந்நிலையில் அங்குள்ள மா மரம் ஏலம் விடப்பட்டு, குரங்குகள் அங்கிருந்து விரட்டப்படுகின்றன. ஆதலால், மா மரத்தின் ஏலத்தை இரத்து செய்யக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அழகர்கோயில் தெற்கு கோட்டை வாசல் முன்பு, அண்ணா சிலை அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பயணியர் நிழற்குடை அமைக்க இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பாக நிருவாக அனுமதி வழங்குமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு திருக்கோயிலும் தனி அலகு என்பதால், அந்தந்தத் திருக்கோயிலின் வருவாய் அடிப்படையிலும், பணியாளர் தேவைக்கேற்பவும் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வுமூலம் நிரப்பப்படுகின்றன. முதுநிலைத் திருக்கோயில்களில் காலிப் பணியிடங்களை நிரப்ப, சென்னை உயர் நீதிமன்றம் ரிட் அப்பீல் எண் 491/2013 வழக்கில் 22–1–2015 அன்று வழங்கியுள்ள உத்தரவின்படி, திருக்கோயில் பணியாளர்களுக்கான புதிய பணி விதிகள் ஏற்படுத்துதல் குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலை காரணமாக, முதுநிலைத் திருக்கோயில்களில் அத்தியாவசியப் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு வருகின்றன. முதுநிலைத் திருக்கோயில்கள் தவிர்த்து, ஏனைய திருக்கோயில்களுக்கு நேரடி நியமனம்மூலம் பணியாளர்களை நியமிக்க, திருக்கோயில் நிருவாகத்திடமிருந்து அறங்காவலர் குழு/தக்கார் ஆகியோர் தீர்மானத்துடன் பெறப்படும் முன்மொழிவுகளைப் பரிசீலித்து, அவ்வப்போது அனுமதி

2019 ஜூலை 17]

வழங்கப்பட்டு, பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கான புதிய பணி விதிகள் ஏற்படுத்தப்பட்டவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மேலும், இங்கே உறுப்பினர் பேசும்போது, கண்மாய் தூர்வாரப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார். ஆராவமுது கண்மாய் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தூர்வாரப்பட்டு, செப்பனிடப்பட்டது. தற்போது, அது நல்ல நிலையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தக் குளத்தை ஆய்வு செய்து, தூர்வார, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஆராவமுது கண்மாயில் மீன்பாசி குத்தகை உரிமம், கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய தண்ணீர் இல்லாததால், ஏலம் போகாமல் உள்ளது. தற்போதும் அதே சூழ்நிலை உள்ளதால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க, மீன்பாசி குத்தகையை இரத்து செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி வணங்கி, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும்,*

எங்கள் கொங்குநாட்டின் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, தங்களையும் வணங்குகிறேன். கோயம்புத்தூரில் மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் அருள்மிகு கோணியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் வெளியூர், உள்ளூர் பக்தர்கள் அதிகமாக சாமி தரிசனம் செய்கிறார்கள். ஆகையால் அந்தக் கோயிலுக்கு தங்க ரதம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மேலும், இக்கோயிலுக்கு நிதியும், தங்கமும் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று திருக்கோயிலின் வருமானம் அடிப்படையில், தேவையிருப்பின் துறைரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அந்தத் திருக்கோயிலுக்கு தங்கத் தேர் செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக்கோரும் இரண்டு மசோதாக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது குறித்து மத்திய அரசின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

2019 ஜூலை 17]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான* NEET *தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரண்டு மசோதாக்களை 22–9–2017 அன்று திருப்பியனுப்பிவிட்டோம் என்று மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் துணைச் செயலாளர் திரு. ராஜேஷ் எஸ். வைத்யா அவர்கள் நேற்றையதினம் உயர் நீதிமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில், இந்த இரு மசோதாக்களையும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நிராகரித்துவிட்டார் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அந்த அறிக்கையிலே உயர் நீதிமன்றத்திற்கும் தெரிவித்திருக்கிறார். ஆக, அரசியல் சட்டம் 201–வது பிரிவின்கீழ் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு மசோதாவை* withheld *செய்திருக்கிறார் என்று சொன்னால், அது நிராகரிப்பதுதான். மசோதாக்களை மக்கள் பிரதிநிதிகள் நிறைந்த சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்புவதால், சட்டமன்றத்தினுடைய இறையாண்மை கருதி, "நிராகரிப்பு" என்ற வார்த்தை இடம்பெறாமல்* "withheld" *என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிக் கூறப்படுவதற்கு இன்னொரு மிக முக்கியக் காரணம் என்னவென்று கேட்டால், அதுமாதிரி குடியரசுத் தலைவர் நிராகரிக்கும் மசோதாக்களை மீண்டும் 6 மாதத்திற்குள் இந்த அவையிலே நிறைவேற்றி, குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெறக்கூடிய வகையில் நாம் அனுப்பிவைத்து, அந்த அதிகாரத்தை அரசியல் சட்டம் பிரிவு 201–ன்கீழ் இந்தப் பேரவைக்கு அளிப்பதுதான் முறை. ஆனால், அந்த அதிகாரத்தை அரசு பயன்படுத்தாமல் இன்றைக்கு மசோதாக்களை திருப்பி அனுப்பி 21 மாதங்களுக்கு மேலாகியிருக்கிறது. நாங்கள் குடியரசுத் தலைவர் அவர்களிடம் காரணம் கேட்டிருக்கிறோம் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இதே அவையில் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் கடிதத்தை இந்த அவையில் இதுவரை அவர் வைக்கவில்லை. "மசோதாக்கள் மத்திய அரசிடமிருந்து திரும்பி வந்த பிறகு கடிதம் எழுதி என்ன பயன்?" என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, காரணம் கேட்டு ஒரு கடிதத்தை எழுதி ஏழரை கோடி மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற சட்டமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை நீங்கள் முறையாகச் செய்யத் தவறிவிட்டீர்கள் என்று நான் பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் இப்போது கேட்க விரும்புவது, புதிதாக இதே அவையில் மீண்டும், இன்னொருமுறை இதுசம்பந்தமான*

2 மசோதாக்களையும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை நான் அரசிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வைப்பற்றி ஏற்கெனவே இந்த அவையில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற வழக்கு சம்பந்தமாக இன்றைக்கு பத்திரிக்கை வாயிலாக வந்திருக்கும் செய்தி மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துகளை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். நான் அன்றைக்கே சொல்லியிருக்கின்றேன்; எந்தத் தகவலையும் இந்த அவைக்கு அரசு மறைக்கவில்லை. வந்த தகவலை தெளிவாக இந்த அவைக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். 22—9—2017 அன்று மத்திய அரசாங்கத்தால் "திருப்பி அனுப்பப்பட்ட", திருப்பி அனுப்பப்பட்ட என்ற வார்த்தை இல்லை; 'withheld' என்று சொல்லி திருப்பி அனுப்பப்பட்ட Bill என்பது—நீங்கள் இப்போது நடைபெறுகின்ற சட்டமன்றத்தில் இந்தக் கேள்வி எழுப்பவில்லை. ஏற்கெனவே இந்தக் கேள்வியை நீங்கள் எழுப்பியபோது, அப்பொழுதே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் உங்களுக்கு இந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அன்று விளக்கம் சொல்லும்போதே நான் அதைச் சொன்னேன். ஏற்கெனவே நாங்கள் இதைச் சொல்லியிருக்கிறோம், மத்திய அரசாங்கம் 'withheld' என்று சொல்லி திருப்பியனுப்பியிருக்கிறது. இதுகுறித்து நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; அந்தக் காரணங்களைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். இன்றுவரை பதில் வரவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறோம். காரண, காரியங்கள் தெரிந்தால்தான் அந்த மசோதாவில் என்ன குறை இருக்கிறது, என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது, உங்களுடைய வார்த்தையை எடுத்துக்கொண்டால், நிராகரிக்கப்பட்டது; இப்பொழுதுதான் அதுவும், அரசாங்கத்திற்கு இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை.

2019 ஜுலை 17] [*திரு. சி.வி. சண்முகம்*]

முற்பகல் 11–25

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய விஷயம் என்னவென்றால், இன்றைய தேதி வரை மத்திய அரசாங்கத்திலிருந்து—உயர் நீதிமன்றத்திலே withheld *என்றால் நிராகரிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் கடந்த வாரம்* e-mail-*ல் வந்த தகவலைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் நேற்று தாக்கல் செய்திருக்கின்ற பிரமாணப் பத்திரத்திலே, அந்த* affidavit–*லே,* "withheld and returned the Bill" *என்றுதான் சொல்லப்பட்டுள்ளது;* 'rejected' *என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. நேற்றுகூட, (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்கள் சொன்ன எதையும் நான் மறுக்கவில்லை. என்ன நடந்தது என்பதைச் சொல்கிறேன். கடந்த வாரம் வழக்கு விசாரணைக்கு வந்தபோது,* withheld *என்றால்,—*e-mail–*ல் வந்ததை நான் படித்தே காண்பிக்கிறேன்.*

"As per our telecom today at 2.10 PM., I am to say that assent to said Bills was withheld by Hon'ble President of India, i.e.The Hon'ble President of India has rejected these Bills i.e. he has not passed the Bills, but rejected them."

இது e-mail-*ல் வந்த தகவல். 22–9–2017 ஆம் தேதிக்குப் பிறகு 2 ஆண்டு காலமாக தமிழக அரசின் சார்பாகப் பல்வேறு கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தக் கடிதங்களுக்கு எந்தவிதமான பதிலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்றைய தேதி வரை வரவில்லை. இந்தத் தகவலைக்கூட, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நேற்று அவர்கள் தாக்கல் செய்த* affidavit–*ல்* 'rejected' *என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை; அவர்கள்* oral *ஆகத்தான் சொன்னார்கள். ஆனால், நேற்று பிரமாணப் பத்திரம்மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவர்கள் சொல்லியிருப்பது என்னவெனில்,*

"The Government of Tamil Nadu were placed for both the Bills, Tamil Nadu Admission to M.B.B.S. and B.D.S. Courses Bill of 2017 and Tamil Nadu Admission to Post Graduate Courses in Medicine and Dentistry Bill of 2017 along with the reports, papers received from various Ministers,

Departments and Government of Tamil Nadu were placed for consideration for the Hon'ble President of India in the form of summary signed by the Union Ministry of Home Affairs on 11-9-2017. The Hon'ble President has withheld his assent for the Tamil Nadu Admission to M.B.B.S. and B.D.S. Courses Bill of 2017 and Tamil Nadu Admission to Post Graduate Courses in Medicine and Dentistry Bill of 2017. Both the Bills were accordingly returned to Government of Tamil Nadu vide this Ministry's Letter."

எங்கேயும், எந்த வார்த்தையும் (குறுக்கீடு) இருங்கள், ஏன் அவசரப்படுகிறீர்கள்? நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள். E-mail-*ல்* "withheld" means "rejected" *என்று சொல்கிறார்கள். ஆனால், பிரமாணப் பத்திரம் மூலமாகத் தாக்கல் செய்யப்பட்ட* affidavit*–ல், எங்கேயும்* withheld*–ஐ* rejected *என்று சொல்லவில்லை;* Returned *என்று சொல்லிவிட்டார்கள். 22–9–2017 அன்று* return *வந்துவிடுகிறது. 22–9–2017 அன்று அவர்கள் அனுப்பிய கடிதத்தில்,* 'withheld and returned the Bill' *என்று வந்ததை நான் அன்றைக்கே சொல்லிவிட்டேன். நீங்கள் கடிதங்கள் எழுதினீர்களா? என்று கேட்டீர்கள். உங்களுக்கு 6 மாத காலம் இருந்தது என்றீர்கள். ஆமாம், 6 மாத காலம் இருக்கிறது; ஒப்புக்கொள்கிறோம். ஜனாதிபதி அவர்களிடமிருந்து* Bill*–ஐ திரும்பப்பெற்றால், சட்டமன்றத்திலே 6 மாத காலத்திற்குள்ளே, ஏதாவது குறைகள் இருந்தால், அதனை நிவர்த்தி செய்து, மீண்டும் மறுபரிசீலனைக்கு நாம் அந்த* Bill*–ஐ அப்படியே அனுப்பலாம்; இல்லையென்றால், அதிலே திருத்தங்கள் செய்து மீண்டும் ஜனாதிபதி அவர்களுடைய ஒப்புதலுக்குத் திருப்பியனுப்பி வைக்கலாம். ஆனால், இதிலே நமக்கு எந்த இடத்திலேயும், நாம் வந்து—22–9–2017 அன்று* withheld *என்று வருகிறது. உடனடியாகத் தமிழக அரசு 25–10–2017 அன்று மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதுகிறது. அதில்,*

"I am directed to invite attention to the reference 3rd cited and to request that the Government of India may be so good as to state the reason for withholding the Hon'ble President's assent for the Tamil Nadu Admission to M.B.B.S. and B.D.S. Courses Bill of 2017 and the Tamil Nadu Admission to Post Graduate Courses in Medicine and Dentistry Bill of 2017, so as to enable this Government to reconsider the matter in the light of those reasons and to decide further course of action to be taken in the matter."

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

முற்பகல் 11–30

காரணங்களை நீங்கள் தெரிவித்தால், அந்தக் காரணங்களை நிவர்த்தி செய்து, அதனை மீண்டும் மறுபரிசீலனை செய்து அனுப்புவதற்கு எங்களுக்கு வசதியாக இருக்கும் என்றும், காரணங்களை நீங்கள் சொல்ல வேண்டும் என்றும் கோரி 25–10–2017 அன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். 12–12–2018–ல் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்குப்பிறகு 31–5–2018, 10–9–2018, 23–10–2018, 20–11–2018, 1–1–2019, 14–3–2019, 14–6–2019 ஆகிய தேதிகளிலும் கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ளன. கடைசியாக இந்தச் சட்டமன்றத்திலே நாம் விவாதம் செய்தது, 8–7–2019 அன்றுதான் NEET பற்றிய விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி, நானும் பதில் சொன்னேன். ஆனால், அதற்கு முன்பு 5–7–2019–ல் மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு எழுதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கேயுமே நாங்கள் மறைக்கவில்லை. நாம் இந்த அவையிலே அதுசம்பந்தமாக இரண்டு மசோதாக்களை நிறைவேற்றி ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது உண்மை. 22–9–2017–ல் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அது நிறுத்தி வைக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டதும் உண்மை. 25–10–2017 அன்று, ஏன், எந்தக் காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டது என்பதற்கான காரணத்தை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி கடிதம் எழுதப்பட்டதும் உண்மை. அதன் தொடர்ச்சியாக, 12 நினைவூட்டுக் கடிதங்களை தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்தவாறே அமைச்சரின் பேச்சினிடையே பேசிக்கொண்டிருந்தனர்.)

கடைசியாக கடந்த 5–7–2019 அன்று கடிதம் எழுதியிருக்கிறோம். இதுதான் உண்மை. நீங்கள் சொன்னீர்களே ஒரு சட்டம். அது உண்மைதான். அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்தச் சட்டம் என்ன சொல்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: நான் எதுவும் தவறாகச் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பி, அதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்கார்ந்தவாறே அதை* comment *செய்துகொண்டிருப்பது முறையா? இதுமாதிரி செய்தால் நான் அதை* serious *ஆக எடுத்துக்கொண்டு, கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 200 மற்றும் 201 பற்றிச் சொல்லியிருக்கிறார். அது உண்மை. அதில் எந்தவித மாற்றுக் கருத்துமே இல்லை. அதில் யாரும் மாற்றுக் கருத்து தெரிவிக்க முடியாது. 6 மாதங்களுக்குள்ளாக திருப்பி அனுப்பப்பட்டால், அதை மீண்டும் நிறைவேற்றி அனுப்புவதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்த மசோதா நமக்கு எப்போது திருப்பி அனுப்பப்பட்டது? திருப்பி அனுப்பப்படும்போது எந்தக் காரணமும் அதற்கு சொல்லப்படவில்லை. இதற்காக, இதில் இந்தக் குறை இருக்கிறது; இதை இந்தக் காரணத்திற்காக நாங்கள் நிராகரித்திருக்கிறோம் என்று சொன்னால்தான், உடனே நாம் அதை நிவர்த்தி செய்து, அதைச் சரிசெய்து* amend *செய்து, நாம் அனுப்ப முடியும். மீண்டும் அதே* Bill*–ஐ திருப்பி அனுப்பினால், அவர்கள் திரும்பவும்* reject*–தான் செய்வார்கள். அதற்காகத்தான் நாம் என்ன காரணம் என்று கேட்கிறோம்.*

Articles 200 and 201 *என்ன சொல்கிறதென்றால்,* Articles 200 and 201 of the Constitution deals with grant of assent to such Bills state that the President could either give assent to the Bill or withhold assent. In the event of the assent being withheld, the Bills would be returned to the State Legislature for reconsideration. *திருப்பி அனுப்புவது என்ன காரணத்திற்காகவென்றால், மீண்டும் அதை* reconsideration *செய்வதற்கு.* Reconsider *செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுவிட்டோம். 'என்ன காரணத்திற்காக நீங்கள் அதைத் திருப்பி அனுப்பினீர்கள்?' என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அதைத்தான் நான் படித்துக் காட்டினேன்.* For reconsideration

என்று Article சொல்கிறது. After being returned, the Legislature could pass the Bills once again with or without any amendment and present them again to the President for his consideration. For consideration என்று சொல்லப்பட்டிருக்கிறது. Reconsideration–க்கு எங்கே காரணம் இருக்கிறது? மத்திய அரசாங்கம் அதைச் சொல்லவில்லை.

இன்னொரு விளக்கமும் சொல்கிறேன். இதுவரையில் எந்த விளக்கமும் அரசாங்கத்திற்கு வரவில்லை. இன்றுவரையில் அரசாங்கத்திற்கு எந்தவிதத் தகவலும் வரவில்லை. 22–9–2017 அன்று வந்த தகவலைத் தவிர, இதுவரை தமிழக அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. நாங்கள் 12 நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிவிட்டோம். எந்த பதிலும் இதுவரை எங்களுக்கு வரவில்லை. பதில் வந்தால், அதற்குக் காரணங்களைச் சொன்னால், அதை நிவர்த்தி செய்து, உடனடியாக இந்த மசோதாவை கண்டிப்பாக இந்த அரசு நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார். இது தமிழ்நாட்டு மாணவர்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை. எங்களுடைய நிலைப்பாடு NEET வேண்டாம் என்பதுதான்; உங்களுடைய நிலைப்பாடு NEET வேண்டாம் என்பதுதான்; NEET வரக் கூடாது என்பதுதான் நம் எல்லோருடைய கருத்தும், நிலைப்பாடும். நாம் ஒரு மசோதா அனுப்பிவிட்டோம். அதைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதற்கு எந்த ஒரு காரணமும் சொல்லவில்லை. நாம் இத்தனை நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும், அவர்களிடமிருந்து எந்தவித காரணமும் வராமல் இருப்பதாலும், நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றுவிட்ட காரணத்தினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, சட்ட வல்லுநர்களிடமும் கலந்து பேசி, ஏன் என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரிவிக்கவில்லை? அந்தக் காரணங்கள் எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். மீண்டும் இந்த மசோதாவை நாங்கள் நிறைவேற்றுவதற்காக, எங்களுக்குக் காரணங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி, கடைசியாக ஒரு நினைவூட்டுக் கடிதத்தை அனுப்புவோம். இல்லையென்றால், வழக்கைத் தொடருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயங்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல விளக்கங்களை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல கடிதங்கள் எழுதியிருக்கிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை. நீங்கள் அதை ஆதாரத்தோடு, தேதிவாரியாகச் சொல்கிறீர்கள். ஆனால், 2 ஆண்டு காலமாக அதற்குத் தர வேண்டிய அழுத்தத்தை ஏன் தரவில்லை? எத்தனையோ முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் சென்றிருக்கிறார்கள். அப்போது ஏன் இதுகுறித்து அழுத்தம் தரவில்லை என்பது ஒரு கேள்வி.*

அடுத்து, நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்றத்திலே மத்திய அரசினுடைய வழக்கறிஞர் தாக்கல் செய்திருக்கக்கூடிய வாசகம்–அவர் reject *செய்யவில்லை; அப்படி ஒரு வார்த்தையே இல்லை என்று சொல்கிறார்–இதில் நான் ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.* 'Both the learned Counsels for the Union of India submit that on that clarification sought for, as to whether the Bills were withheld or rejected, Under Secretary, Ministry of Home Affairs, has stated that the Bills have been rejected' *என்று தெளிவாக இருக்கிறது. அந்த வார்த்தையே இருக்கிறது. ஆனால், இல்லையென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறார்கள்.*

இப்பொழுதுகூட நான் சொல்கிறேன். 201 பிரிவின்படி மீண்டும் நாம் ஏற்கெனவே நிறைவேற்றிய அந்த சட்ட மசோதாவைப் பற்றி வலியுறுத்துவதற்கு 201 பிரிவின்படி வாய்ப்பு இல்லை. ஏனென்றால், 2 வருடங்களாக அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்துவிட்ட காரணத்தினால். ஆனால், இப்பொழுதும் நான் கேட்கிறேன்; நடந்தது நடந்தவைகளாக இருக்கட்டும். இது மாணவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை. இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு இன்னும் 3 நாட்கள்தான் இருக்கின்றன. இந்த NEET *பிரச்சினை தொடர்பாக இப்பொழுது புதிய இரண்டு மசோதாக்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றி, மீண்டும் வலியுறுத்தக்கூடிய*

வகையிலே மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பி வைக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருப்பது நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட affidavit. அவருடைய attestation. இது Raju S. Vaidya, S/o Shri Satish Barkova Vaidya, aged 55 years, working and posted as Deputy Secretary, Ministry of Home Affairs அவர்களுடைய affidavit. எனக்கு கொடுக்கப்பட்டதை நான் சொல்கிறேன். நீங்கள் சொல்வது இருந்தாலும், நான் அதை சரி பார்த்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்று, withheld என்பது Bill return ஆகியிருந்தால் implied ஆக we can take it as rejected. அதாவது, silent ஆக இருந்தது என்றால், we can take it as implied. But, withheld என்ற வார்த்தை போடப்பட்டதால், காரண காரியம் நமக்குச் சொல்லப்படாததால், அந்தக் காரணங்களையும், என்ன காரணத்திற்காக அந்த மசோதா திருப்பி அனுப்பப்பட்டது. அதில் என்ன குறைகள் இருக்கின்றன என்று சொன்னால்தான், நாங்கள் அதை மீண்டும் நிவர்த்தி செய்ய முடியும். நீங்கள் சொன்னதுபோல், நாங்கள் Bill–ஐ pass செய்யலாம். மசோதாவில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், நாம் ஏற்கெனவே அனுப்பிய மசோதாவை அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவில் என்ன குறை என்று தெரியாமல் எப்படி அதை rectify செய்வீர்கள்? திரும்பவும் அந்த Bill–ஐ, as it is நாம் அப்படியே அனுப்பினோம் என்றால், அதேதான் பதில் வரும். எனவே, அதற்கான காரணத்தை அவர்கள் நமக்குச் சொல்லட்டும். இந்தக் காரணத்திற்காக, இந்தக் குறையினால், இந்த மசோதா நிராகரிக்கப்பட்டிருக்கிறது; திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொல்லட்டும். அது அவர்களுடைய கடமை, சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். அவர்கள் சொல்ல வேண்டும், அது அவர்களுடைய கடமை; சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ஆனால், அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இருங்கள், அவசரப்படாதீர்கள். அவர்கள் சொல்லவில்லை. அதைத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். சொல்லவில்லையென்றால், இப்போது நீதிமன்றத்தின் மூலமாக வழக்கைத் தாக்கல் செய்து, இந்த மசோதா ஏன், எதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டது. அந்த மசோதாவில் ஏதாவது குறைகள் இருந்தால், அந்தக் குறைகளை

எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று நாம் நீதிமன்றத்திலே கேட்டு, அந்தக் குறைகளையும் அவர்கள் சொன்னால், அதை நிவர்த்தி செய்து, உடனடியாக மசோதாவை நிறைவேற்றுவதிலே இந்த அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை, எந்த பயமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுடைய நலனுக்காக இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு அரசு எந்த நேரத்திலும், எப்போதும் தயாராக இருக்கிறது.

அவர் இன்னொன்றையும் சொன்னார். மசோதாவை நிறைவேற்றிவிட்டு நீங்கள் இரண்டு ஆண்டு காலம் சும்மா இருந்தீர்கள், எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார். இது ஒன்றும் புதியது இல்லை. இது ஒன்றும் புதியது கிடையாது. இது எல்லா அரசாங்கத்திலும் நடப்பதுதான். என்னவோ எங்களது அரசாங்கத்தில் மட்டும் நடந்துவிட்டதுபோல் பேசுகிறீர்கள். உங்கள் ஆட்சியிலும், 2009 ஆம் ஆண்டு ஒரு சட்டம் போட்டீர்கள். Tamil Nadu Business Facilitation Act என்று ஒரு சட்டத்தைப் போட்டீர்கள். ஒரு சட்டத்தைப் போட்டு, அதோடு மறந்துவிட்டீர்கள். அதோடு மக்களும், உங்களை மறந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களும் மறந்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) 2014 ஆம் ஆண்டு, அந்த Bill–ஐ withheld என்று return செய்கிறார்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு பேசினால் எப்படி?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: நீங்கள் இயற்றிய சட்டம், Tamil Nadu Business Facilitation Act, 2009 (குறுக்கீடு) அதை 2014–ல் withheld என்று சொல்லித் திருப்பி அனுப்புகிறார்கள். இதை எதற்காக நான் சொல்ல வருகிறேன் என்றால், உங்களைக் குறை சொல்வதற்காக இல்லை. (குறுக்கீடு) உங்களைக் குறை சொல்வதற்காக இல்லை. இது சகஜம். இது காலம் காலமாக நடைபெறுகின்ற நிகழ்வுதான் என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொன்னேனே தவிர, உங்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். (குறுக்கீடு) நேரமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) எதிர்க்கட்சி (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிறார்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் குறுக்கே பேசினால் எப்படி? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை; உணர்வுப்பூர்வமான பிரச்சினை. தமிழ்நாட்டில் இருக்கின்ற மாணவர்களுடைய நலன் கருதி எல்லோரும் ஒருமித்த கருத்தோடு NEET தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டும்; தமிழகத்தில் NEET தேர்வு நடைபெறக் கூடாது என்ற அடிப்படையிலேதான் நாம் இவ்வளவு வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அழுத்தம் கொடுக்கவில்லையென்று சொன்னார்; ஒவ்வொரு முறையும் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கின்றபொழுது, இதை வலியுறுத்தி Memorandum கொடுத்திருக்கின்றோம். அவரிடம் நேரடியாகவும் இதை நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்தபிறகு, அவரிடத்திலே நாங்கள் என்ன Memorandum கொடுத்தோமோ, அதை தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் கொடுத்து, இதற்கு நாங்கள் அழுத்தம் கொடுத்திருக்கின்றோம் என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். எப்பொழுதெல்லாம் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுதெல்லாம் NEET தேர்வு தமிழகத்தில் இருக்கக் கூடாது. NEET தேர்வினால் கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜுலை 17*

ஆகவே, தமிழகத்திற்கு NEET தேர்விலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், என்ன காரணம் என்று தெரிந்தால்தான், அதை நிவர்த்தி செய்வதற்கு வழிவகை உண்டு என்று இப்பொழுது சொன்னார். மீண்டும் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்புவோம். என்ன காரணம் என்று தெரியாமல் இதேமாதிரி reject செய்தால் நாம் என்ன செய்ய முடியும்? ஆகவே, காரணம் என்னவென்று அவர்கள் தெரிவித்தால்தான், அந்தக் காரணத்தை அறிந்து நாம் நிவர்த்தி செய்து, அந்த மசோதாவை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப இயலும். அதிலே ஏதாவது குறைபாடுகள் இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டினால், அதற்கேற்றவாறு மீண்டும் திருத்தம் மேற்கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றி அந்த மசோதாவை அனுப்பினால்தான், அதற்கொரு விடிவு காலம் பிறக்கும். அதனடிப்படையிலேதான் அவர் சொல்கிறாரே தவிர, வேறல்ல. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது. இந்த மசோதா என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது என்பதற்கான பதில் இதுவரை வரப்பெறவில்லை. பலமுறை கடிதம் எழுதப்பட்டுவிட்டது. அந்தக் கடிதத்திற்கு இதுவரை மத்திய அரசிடமிருந்து எந்த பதிலும் வரப்பெறவில்லை. நீதிமன்றத்திலே அவர்கள் நேற்றையதினம் தெரிவித்திருக்கின்றார்கள். அதனடிப்படையிலேதான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இப்பொழுது மீண்டும் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு, அதற்கும் பதில் வரவில்லையென்றால், சிறப்புக் கூட்டம் ஒன்றும் கூட்டலாம். தவறு ஒன்றும் கிடையாது. நம்முடைய மாணவர்களுடைய நலனில் உங்களுக்கு எப்படி அக்கறை இருக்கின்றதோ, அதே அக்கறை எங்களுக்கும் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த மாணவர்களுடைய நலன் கருதி எடுக்கின்ற முடிவு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு முடியட்டும். (குறுக்கீடு) நான் இந்தப் பிரச்சினையை மேற்கொண்டு பேச அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்

திரு. ஜெ. அன்பழகன், நேரமில்லை; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பினார். அவர் பேசுவதற்குப் போதிய வாய்ப்பை நான் அளித்துவிட்டேன். ஒவ்வோர் உறுப்பினரும் எழுந்து அதுகுறித்துப் பேச முடியாது. (குறுக்கீடு) நேரமில்லை, திரு. சக்கரபாணி அவர்களே, நேரமில்லை. ஒவ்வோர் உறுப்பினரும் எழுந்து அதற்கு விளக்கம் கேட்க வேண்டும்; நாங்களும் பேச வேண்டுமென்று சொன்னால், அதை நான் அனுமதித்தால் அவையை நடத்த முடியுமா? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். அவருக்கு நான் போதிய வாய்ப்பைக் கொடுத்தேன். அவர் கேள்வி கேட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். இதிலே ஒவ்வோர் உறுப்பினரும் உங்களுடைய கட்சி சார்பாக எழுந்து, நாங்கள் பேச வேண்டுமென்று சொன்னால், என்னால் எப்படி அனுமதிக்க முடியும்? ஆகவே, NEET தேர்வு சம்பந்தமான இந்த விவாதத்தை இதோடு நான் முடித்துக்கொள்கிறேன். நான் அடுத்த subject–க்குப் போகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காரணத்தைக் கேட்டிருக்கிறோம்; அதற்கு என்ன காரணம் என்ற செய்தி வந்ததற்குப் பிறகு முடிவு எடுப்போம் என்று சொல்கிறார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், கடந்த 2 வருடங்களாக நீங்களும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள். நேரடியாகவும் சென்று அழுத்தம் தந்ததாக இங்கே சொல்லியிருக்கிறீர்கள். ஆக, அப்போதே அந்தக் காரணத்தை அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். இதுவரை அதற்கான காரணத்தைச் சொல்லவில்லை. மீண்டும் அதே நிலை நீடித்தால் அடுத்து என்ன நிலை? அதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–45

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நீதிமன்றத்திலே

அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நேற்றையதினம்தான் அது என்னவென்று தெரிவித்திருக்கிறார்கள். திருப்பி அனுப்பப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, என்ன காரணத்திற்காக திருப்பி அனுப்பப்பட்டது என்று சொல்லவில்லை. இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கப்பெறவில்லை. அதற்காகத்தான் நாங்கள் கேட்கின்றோம். ஏனென்றால், நீதிமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு செய்தியைச் சொல்லி, நீதிமன்றத்தின் வாயிலாகப் பத்திரிகையில் எல்லாம் வெளிவந்திருக்கின்றது. ஆகவே, நீதிமன்றத்தில் வந்த செய்தியின் அடிப்படையில், என்ன காரணத்திற்காக இது திருப்பியனுப்பப்பட்டது என்ற விவரத்தைக் கேட்பதற்குத்தான் நான் இந்த விவரத்தைச் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இந்தப் பிரச்சினை இதோடு போதும். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை இதோடு போதும். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நீங்கள் இதையெல்லாம் கேட்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இது சம்பந்தமாகப் பேச வேண்டாம். நீட் சம்பந்தமான இந்தப் பிரச்சினையை சபையில் விவாதிப்பதை இத்துடன் முடித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இது சம்பந்தமாகவா அல்லது வேறு ஏதாவதா? (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய Clarification. மத்திய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கின்றார்கள். தமிழக அரசின் சார்பில் நீதிமன்றத்தில் உங்களுடைய வழக்கறிஞர் ஆஜராகி இருக்கின்றாரா? அப்படி ஆஜராகி இருந்தால் இந்தப் பிரச்சினை உங்களுக்கு முன்பே தெரிந்திருக்கும். ஆகவே, தமிழக அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி இருக்கின்றார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக இந்த வழக்கில் மூத்த வழக்கறிஞர் ஆஜராகி வாதாடிக் கொண்டிருக்கின்றார் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றுகூட Advocate General வந்தார்.

2019 ஜூலை 17] *[திரு. சி.வி. சண்முகம்]*

இதைப்பற்றி நாங்கள் கலந்து பேசினோம். அதைத்தான் நான் கோடிட்டுக் காட்டினேன். அதைத்தான் முழுமையாகச் சொல்ல வேண்டாம் என்பதற்காகக் கோடிட்டுக் காட்டினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, 12 முறை நம்முடைய அரசின் சார்பில் நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகும் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏன், எந்தக் காரணத்திற்காக அது திருப்பியனுப்பப்பட்டது என்று எந்த பதிலும் வரவில்லை. கடைசியாக ஒரு முறை நாம் அவர்களுக்குக் கடிதம் எழுதி கேட்டுவிட்டு, நீதிமன்றத்தின்மூலம் நாம் இதற்கு நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு மேற்கொள்ள இருக்கின்றோம். இந்த வழக்கை முழுமையாக தமிழக அரசு உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறது. அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் அங்கே ஆஜராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தால் செயலாக்க மானியம் வழங்கவில்லை என மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துக்கொள்ளலாம். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வேறு பிரச்சினை பற்றித்தானே பேசப் போகின்றீர்கள்?*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்ளாட்சித் துறையைப் பற்றியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பேசுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பி, அதற்கு மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர், மாண்புமிகு திரு. ராஜேந்திர சிங் தோமர் அவர்கள் அது சம்பந்தமாக ஒரு பதிலைத் தந்திருக்கின்றார்கள். அதாவது, உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தினால் 2016–2017 ஆம் ஆண்டு நிதியாண்டிலிருந்து*

செயலாக்க மானியத்தைத் தமிழக அரசுக்கு வழங்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். இதே உள்ளாட்சி அமைப்பிற்கு தேர்தலை 24–10–2016 அன்று நடத்தி, உள்ளாட்சிப் பிரதிநிதிகளைத் தேர்வு செய்திருக்க வேண்டும். அரசியல் சட்டப் பிரிவு 243(இ)–ல் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம் 5 வருடம் என்றும், அந்தப் பதவிக் காலம் முடிவதற்கு முன்பே உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழ்நாட்டில் 3 வருடங்களுக்கு மேலாகியும், உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தினால், உள்ளாட்சிப் பகுதிகளில் இருக்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைக்கப்பட முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. அதனால்தான் 2016–2017 ஆம் ஆண்டு முதல் செயலாக்க நிதி விடுவிக்கப்படவில்லை என்று மத்தியில் இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றார். ஆகவே, இனியும் தாமதம் செய்யாமல், இந்த உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

முற்பகல் 11–50

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு உள்ளாட்சித் தேர்தலை குறிப்பிட்ட நேரத்தில் நடத்தாததால்,உள்ளாட்சித் துறையினுடைய கட்டமைப்பு இன்றைக்கு செம்மையாக இல்லாமல், பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். மத்திய அமைச்சர் அவர்கள் நேற்று பாராளுமன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். தேர்தலை நடத்தாததால், உள்ளாட்சித் துறைக்கு நாங்கள் நிதி வழங்கப் போவது இல்லை என்றும் சொல்லியிருக்கின்றார்கள். உங்களைக் கேட்டால், ‘அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது’ என்று சொல்கிறீர்கள். மேலும் பல காரணங்களை நீங்கள் தொடர்ந்து சொல்லி வருகிறீர்கள். ஆனால், இந்தத் தேர்தலை 5 ஆண்டுக்கு ஒரு தடவை நடத்த வேண்டும் என்ற விதி இருக்கிறது; சட்டம் இருக்கிறது. ஆனால், ஏதோ ஒரு காரணத்திற்காக நீங்கள் இதைத் தள்ளிக் கொண்டே போகிறீர்கள். அதனால், மத்திய அரசினுடைய

2019 ஜூலை 17] [திரு. கரி . இராமசாமி]

நிதியைப் பெறமுடியாமல், பல ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நமக்கு இழப்பீடு ஏற்பட்டிருக்கிறது. இதற்கும் இந்த அரசு பொறுப்பேற்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, அதோடு முடித்து விடுங்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் 2016–ல் அறிவிக்கப்பட்டது. நீதிமன்றத்திற்குச் சென்றதற்குப் பின்னால், அதைப்பற்றியெல்லாம் நிறைய பேசி விட்டோம். எனவே, அதற்குள் போக விரும்பவில்லை. இந்த வார்டு வரையறை, 22 ஆண்டுகளுக்குப் பிறகு, 1,19,270 வார்டுகள் எல்லை மறுவரையறை பணி இன்றைக்கு முடிக்கப்பட்டிருக்கிறது. அது மிகப் பெரிய பணி. 22 ஆண்டுகளாக அவற்றைச் செய்யவில்லை. தற்போது அந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. உச்ச நீதிமன்றத்திலேகூட இந்த வழக்கு வந்தபோது ஒரு table கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தளவிற்கு கண்டிப்பாக உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது. இன்றைக்கு அந்த ஆணையமே ஒரு table–ஐ submit செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு 14th Finance Commission பற்றி எதிர்க்கட்சித் தலைவரும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள். 14–வது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலே, மத்திய அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2015–2016 முதல் 2019–2020 ஆம் ஆண்டுவரை 5 ஆண்டு காலத்திற்கு அடிப்படை மானியம் இரு தவணைகளாகவும் மற்றும் செயலாக்க மானியம் ஆண்டுதோறும் ஒரு தவணையாகவும் விடுவிக்கும்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 ஜூலை 17

கடந்த 2017–2018 ஆம் ஆண்டு முதல் 2018–2019 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு மத்திய நிதிக் குழு மானியம், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாததாலும், மத்திய அரசு விடுவிக்கவேண்டிய 2017–2018 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் காலதாமதாகியிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் வலியுறுத்தி வருகிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்பேரில் நானும், பல்வேறு நேரங்களில் மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் தோமர் அவர்களைச் சந்தித்து இதை வலியுறுத்தியிருக்கிறேன். 2015–2016 முதல் 2019–2020 வரை உள்ள அந்த ஐந்தாண்டுக் காலத்திற்கு, முழுமையாக, 14th Finance Commission நிதி மட்டும் ரூ.12,312.76 கோடி. அதில் இதுவரையிலும் தமிழகத்திற்கு ரூ.8,531.96 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டு, வாங்கியிருக்கிறோம். இந்த இரண்டு மட்டும்தான் pending இருக்கிறது. சமீபத்தில்கூட 11–6–2019 அன்று மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதேபோல, மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து, வரவேண்டிய நிதியைக் கேட்டிருக்கிறோம். நேற்றைக்கு நாடாளுமன்றத்தில் அதனை வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது கேட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதைக்கூட வலியுறுத்தியிருக்கிறோம். தேர்தல் நடத்தாத இந்தச் சூழ்நிலையிலும் இதுவரையிலும் ரூ.8,531.96 கோடி வாங்கியிருக்கிறோம். அந்தக் கடைசி ஆண்டுக்கு மட்டும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இன்னும் முடியவில்லை. அதனால்தான் காரணம் சொல்லியிருக்கிறோம். அதேநேரத்தில் எப்படி இதற்கு முன்னரும், தேர்தல் நின்ற பிறகும் இந்த நிதியை வாங்கினோமோ, அதேபோல் பெறுவதற்கான முயற்சியை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளிலே எனனென்ன குடிநீர்ப் பணிகள் நடந்திருக்கின்றன என்பதைச் சொல்கிறேன். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு என்னென்ன பணிகள் இருக்கின்றனவோ, அவற்றை Special officer-மூலம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதைப் பொறுத்தளவிற்கு, மாண்புமிகு முதலமைச்சர்

2019 ஜூலை 17] *[திரு. எஸ்.பி. வேலுமணி]*

அவர்கள் தலைமையிலான அம்மாவினுடைய அரசு கண்டிப்பாக நடத்தத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் ஆழியாறு–மணக்கடவு வரை கூடுதல் தடுப்பணைகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

***முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடிந்தவரை முயற்சிப்பதல்ல முயற்சி; எடுத்ததை முடிக்கும் வரை முயற்சிப்பதே முயற்சி'. இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். திட்டமிட்டு உழைக்கும்போது, திசைகள் தோறும் வெற்றி. எட்டாதது உலகில் எதுவும் இல்லை, இதை உணர்த்துவதே முயற்சியின் வெற்றி என்று செயல்பட்டுக் கொண்டிருப்பவர் நம்முடைய துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள். இவர்கள் இரண்டு பேருக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களை உரித்தாக்கிக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–55

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு, வால்பாறை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளும், மழைநீர் பொழியும்போது மேற்கு நோக்கி ஓடுகின்ற தண்ணீர் பாதையைப் பெற்றிருக்கிற பீடபூமி; மேடு பள்ளமான பகுதிகள். இந்தப் பகுதிகளில் வால்பாறை தொகுதியில் வாகரையாறு, உப்பாறு, பொள்ளாச்சியில் கோதையாறு, குள்ளி செட்டிப்பாளையம் ஆறு, செல்லப்பம்பாளையம் ஆறு, கிணத்துக்கடவில் வரட்டாறு, பாலாறு ஆகிய ஆறுகள் ஓடுகின்றன. புலிப்பாறை அணை என்கின்ற ஒரு சிறு திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் தொடங்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆறுகளோடு பாப்பாத்தி பள்ளம், புங்கன்கடவு பள்ளம், பாவரைப் பள்ளம், கொளத்துப் பள்ளம், தூணக்கடவு பள்ளம், வாகரையாறு பள்ளம், மைலம்பாறைப் பள்ளம் போன்ற பள்ளப் பகுதிகளிலும்

தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்டி, பெய்கின்ற மழை நீரில், ஒரு சொட்டு நீர்கூட கேரள மாநிலத்திற்குச் சென்று, அரபிக் கடலில் கலக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற ஆண்டு மட்டும், பரம்பிக்குளம் அணை, சோலையாறு அணை, ஆழியாறு அணைப் பகுதிகளில் பெய்த மழையில் 50 T.M.C. நீர் வீணாகச் சென்று அரபிக் கடலில் கலந்திருக்கிறது. இதனைத் தடுக்கின்ற வகையில், இந்த நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளிலேயும், சிறு சிறு பள்ளங்களிலேயும், எங்கெங்கெல்லாம் தடுப்பணைகள் தேவையோ, அங்கெங்கெல்லாம் தடுப்பணைகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் நிலுவையில் இருக்கிற ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்மட்டக் குழுவை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக, அவர்களுக்கு எங்களுடைய 4 இலட்சம் ஏக்கர் பாசன விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டில், கேரள மாநில அரசாங்கத்தோடு பேசி, ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் அமைவதற்குக் காரணமாக இருந்த திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு நினைவு இல்லம் அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அந்த நினைவு இல்லத்தை வேட்டைக்காரன்புதூர், பரம்பிக்குளம்–ஆழியாறு செயற் பொறியாளர் அலுவலகத்தில் அமைத்துக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மழை நீர் மக்களின் உயிர் நீர். எனவே, அந்த மழை நீர் மேற்கு நோக்கி ஓடி, அரபிக் கடலில் வீணாகக் கலக்காமல், பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதி பாசன விவசாயப் பெருங்குடி மக்கள், வேளாண் பெருங்குடி மக்கள் பயன்பெறத் தக்க வகையில், தேவையான இடங்களில், சிறப்புக் கவனம் செலுத்தி, சிறு சிறு தடுப்பணைகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கேரளாவிற்குச் செல்கிற ஆழியாறிலே, தேவையான இடங்களில் சிறு, சிறு தடுப்பணைகளைக் கட்டினால், 2 T.M.C. அளவிற்குத் தண்ணீரைத் தேக்கி, கேரள மாநிலத்திற்குத் தேவையானபோது, விடுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும்,

நிபுணர்கள் சொல்கிறார்கள். எனவே, ஆழியாறிலும், மணக்கடவிலே தொடங்கி ஆழியாறு அணை வரை—அந்த ஆறு ஒரு perennial river; எப்பொழுதும் வற்றாத ஜீவ நதியாக ஓடிக்கொண்டிருக்கின்ற அந்த ஆற்றின் குறுக்கே, ஆங்காங்கே தடுப்பணை கட்டி மழை நீரைச் சேகரித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலே கொங்கு மண்டல விவசாயிகளுக்கு ஒரு பொற்காலமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றி நீங்கள் வரலாற்றில் இடம்பிடித்தீர்களோ, அதைப்போல, ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தையும் நிறைவேற்றி, ஆழியாறிலே தடுப்பணைகளைக் கட்டி, பொற்கால மன்னராக நீங்கள் விளங்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, வால்பாறை சட்டமன்றத் தொகுதி மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகளில், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், கூடுதலாகப் பெய்யும் மழை நீர், கடலில் கலப்பதைத் தடுக்கும்விதமாக, மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் வகையில், மேலும் கூடுதலாக தடுப்பணைகள் கட்டுதல் குறித்தான கருத்துருவுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. மேலும், ஆழியாறு ஆற்றில் மணக்கடவு வரை மூன்று இடங்களில் தடுப்பணைகளைக் கட்டி,* (மேசையைத் தட்டும் ஒலி) *நீரைத் தேக்குவது தொடர்பான கருத்துருக்கள்* கேரள மாநில அரசோடு பேசி, ஒப்புதல் பெற்றவுடன், மேல் நடவடிக்கைகள் தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) வெள்ளையாறு சீரமைப்பினையொட்டி மன்னார்குடி தொகுதி, ஆயக்குடி கிராமம், அராபத் தெருவிலுள்ளவர்களை மறுகுடியமர்வு செய்தல் மற்றும் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் ஒன்றியம், ஆய்க்குடி ஊராட்சி, அராபத் தெருவில், நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சார்ந்தவர்கள் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக வசித்து வருகிறார்கள். அவர்களை இப்போது காவேரி டெல்டா பகுதிகளில் வெண்ணாறு உப வடி நிலப் பகுதிகளைத் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றும் ஒரு திட்டத்தின்கீழ், ADB-Asian Development Bank திட்டத்தின்கீழ், ஏறத்தாழ 100 மில்லியன் USD செலவில் கொண்டுவரப்படும் அந்தத் திட்டத்தின்கீழ், Climate Adaptation in Vennar Sub-basin in Cauvery Delta Project (CAVSCDP) என்ற திட்டத்தின்கீழ் மறு குடியமர்வு செய்கிறார்கள். அராபத் தெருவிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரம் தள்ளியிருக்கும் திட்டாணிமுட்டம் என்ற வேறு ஒன்றியத்திலிருக்கும் அந்தப் பகுதிக்கு அவர்களை மறு குடியமர்வு செய்கிறோம். அவர்கள் எல்லோருமே டீக்கடைகளிலும், மளிகைக் கடைகளிலும், வீடுகளிலும் வேலைகளைச் செய்யும், மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பை, குறிப்பாக, minority சமூகத்தை, இஸ்லாமிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

நண்பகல் 12–00

ஆனால், அதே திட்டத்தின்கீழ், அந்த ஊராட்சியில் இல்லை, பக்கத்து ஊராட்சியில் 500 மீட்டர் தொலைவிலேயே வீடுகள் கட்டப்படுகின்றன. அவர்களை 500 மீட்டர் தள்ளி குடியமர்வு செய்யாமல், 500 மீட்டருக்குள்ளேயே குடியமர்வு செய்தால், அவர்களது வாழ்வாதாரம் பாதிக்காது, அரசு நிதி உதவிகள் அனைத்தும் அதே ஒன்றியத்தின்கீழ் அவர்களுக்குக் கிடைக்கும். இதே திட்டத்தின்கீழ், அகரபொதக்குடி என்ற பகுதியில் பாழடைந்த ஒரு நடைப்பாலம் உள்ளது. அதை அகற்றி புதிய பாலம் கட்ட வேண்டும். ஆனால், அந்தப் பாலத்தை தற்போதும் இடிக்காமல், dangerous ஆன ஒரு situation–ல் இருக்கிறது. தயவுகூர்ந்து அந்தப் பாலத்தை உடனடியாக இடித்துத் தள்ளி, அங்கு ஒரு புதிய பாலத்தை அரசு கட்டித் தர வேண்டும். இறுதியாக, இதே ஒன்றியத்தில், நீடாமங்கலம் பேரூராட்சி உள்ளது. அங்கே Railway overbridge கட்டப்பட வேண்டும். நீண்ட நெடுங்காலமாக இது வலியுறுத்தப்பட்டுவருகிறது. 2013–2014–ல் clear செய்யப்பட்ட அந்தத் திட்டம்-மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இதே அவையில் விதி 110–ன்கீழ் அதை அறிவித்தார்கள்.

2019 ஜூலை 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா, சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *அதிலும் அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தையும், அவையின் கவனத்தையும் ஈர்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆய்க்குடி கிராமத்தில் நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பில் உள்ள வெள்ளையாற்றின் கரையில் மக்கள் வசித்துவருகின்றனர். இந்த நிலையில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதித் திட்டத்தின்மூலம் வெள்ளையாறு சீரமைக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்த வெள்ளையாற்றின் கரையில் வசிப்பவர்களை மறுகுடியமர்வு செய்யும் நோக்கில், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், திட்டாணிமுட்டம் என்ற கிராமத்தில், அரசு புறம்போக்கு நிலத்தில் பொதுப் பணித் துறையின்மூலம், முதல் பகுதியாக 72 குடியிருப்புகளும், இரண்டாம் பகுதியாக 82 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 6 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இந்த நிலையில் ஆய்க்குடி கிராமம், அராபத் தெருவில் குடியிருப்பவர்களை பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறையின்மூலம், முறையாகக் கணக்கீடு செய்து, அவர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்து, மறுகுடியமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்; அந்தப் பாலம் பழுதடைந்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதையும் அரசு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கும். அதேபோன்று, Railway மேம்பாலத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். அதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அதையும் அரசு ஆய்வு செய்து, பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) காஞ்சிபுரம், புற்றுநோய்க்கான மேன்மைமிகு மையம் ஏற்படுத்துதல், ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்துதல், விபத்துகளில் தலைக்காயம் அடையும் நபர்களைக் காக்க மாவட்டந்தோறும் தீவிர சிகிச்சை மையம் அமைத்தல், சென்னை, கே.கே. நகர் அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் இயன்முறை சிகிச்சை அளிக்க மறுவாழ்வு மையம் அமைத்தல், ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்துதல், அரசு மருத்துவமனைகளை 'எனது மருத்துவமனை; எனது பெருமை' என்ற பெயரில் மேம்படுத்துதல் உள்ளிட்டவை பற்றிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, புதுப்புது சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கிவருகிறது. மக்களுக்கு மேலும் தரமான மருத்துவ சேவைகள் கிடைத்திடும் வகையில், நடப்பாண்டில் பின்வரும் புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:*

1. காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்று நோய்க்கான மேன்மைமிகு மையம் ஒன்று (Centre of Excellence) *120 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

2. நோய்த் தடுப்பு, நோய் குறைத்தல், வலி நிவாரணம், புனர்வாழ்வு, சிகிச்சை தரம் உயர்த்துதல் போன்ற 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்குவதற்காக, மாநிலத்தில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார

2019 ஜூலை 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நிலையங்கள், 105 கோடி ரூபாய் செலவில் நலவாழ்வு மையங்களாக மாற்றி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. "அனைவருக்கும் நலவாழ்வு" திட்டத்தின்கீழ், 296 துணை சுகாதார மையங்களுக்கு 79 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவு, இருதய நோய் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நல அறுவை சிகிச்சைப் பிரிவு, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைப் பிரிவு, தீக்காய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, சீமாங்க் பிரிவு போன்ற உயர் சிறப்பு சிகிச்சை அளிக்க, 67 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் உயர் சிறப்பு மருத்துவமனையாக (Super Speciality Hospital) மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விபத்துகளில் தலைக்காயம் அடையும் நபர்களைக் காக்க, விபத்து நடந்த முதல் ஒரு மணி நேரம் பொன்னான நேரமாகக் கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் உரிய முதலுதவியும், சிகிச்சையும் அளிக்கப்பட்டால், இறப்புகளைத் தவிர்க்கலாம். அந்தவகையில், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின்கீழ், 32 மாவட்டங்களில் தலா ஒரு மருத்துவமனைவீதம், பல்வகைக் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உலகத் தரம் வாய்ந்த ஒரு தீவிர சிகிச்சை மையம் (Multi-Disciplinary Critical Care Unit) 49 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. விபத்திற்குப் பின் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் நாள்பட்ட நோயாளிகளுக்கு இயன்முறை சிகிச்சை அளிப்பதற்காக சென்னை கே.கே. நகர் அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நவீன வசதிகள் மற்றும் நவீன உபகரணங்களுடன் 40 கோடி ரூபாய் செலவில் மறுவாழ்வு மையம் (Rehabilitation Centre) ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

7. புற்றுநோய் சிகிச்சைக்காக சேலம் மாவட்டம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, நடப்பாண்டில் ஒரு லீனியர் ஆக்ஸலரேட்டர் கருவி (Linear

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 17

Accelerator) 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. தற்கொலைகளால் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதற்காக 22 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டணமில்லா '104' தொலைபேசி சேவை வழியாக ஆலோசனை வழங்கும் மையம், 6 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. சேலம் சுகாதார மாவட்டம், மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் பெரிய மாவட்டமாக உள்ளது. எனவே, சேலம் சுகாதார மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. காச நோய், நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள 5 நகர்ப்புற சுகாதார மையங்களில் புதிய முயற்சியாக, 28 வகையான மருந்துகள் வழங்கும் 32 தானியங்கி இயந்திரங்கள் (Automatic Drug Vending Machine) 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

11. அரசு மருத்துவமனைகளின் சேவையை மேலும் மேம்படுத்தும் விதத்தில், ஒரு புதிய முயற்சியாக, ஆர்வமுள்ள தொழில் நிறுவனங்களின் சமூகப் பங்களிப்புடன் 'எனது மருத்துவமனை; எனது பெருமை' (My Hospital, My Pride) என்ற பெயரில் அரசு மருத்துவமனைகள் புதுப் பொலிவுடன் செயல்படும் வகையில் நடவடிக்கை தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) நடப்பாண்டில் 2,000 புதிய பேருந்துகள் அறிமுகம் மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளைத் தரமுயர்த்தி நவீனப்படுத்துதல் தொடர்பான போக்குவரத்துத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து போக்குவரத்துத் துறை.

2019 ஜூலை 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

1. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கடந்த ஆண்டுகளில் பல புதிய பேருந்துகளை பொது மக்களின் சேவைக்கு அறிமுகப்படுத்தியது. இந்த ஆண்டும், புதியதாக 2,000 பேருந்துகள், 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும் என்பதனைப் பெருமகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இந்த நிதியாண்டில், அரசு நிதி நிறுவனங்களின் நிதி ஆதாரம்மூலம் 10 அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தி, நவீனப்படுத்தப்படும் என்பதனை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கரூர், தருமபுரி, தேனி, தூத்துக்குடி மற்றும் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்குதல் தொடர்பான பால் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து பால் வளத் துறை.

தமிழ்நாட்டில் 19 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமும் இயங்கி வருகின்றன. இன்றளவும், சில மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், இரண்டு முதல் நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றன.

பால் உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியங்கள் மூலமாக உரிய நேரத்தில் சேவை வழங்கவும், நுகர்வோர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கு அருகிலேயே, தரமான ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் தங்கு தடையின்றி, உடனுக்குடன் கிடைக்கவும் ஏதுவாக,

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 17

2. தருமபுரி–கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தேனியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விழுப்புரம்–கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றியங்களைப் பிரிப்பதன் விளைவாக, ஆவின் மூலமாக கொள்முதல் செய்யப்படும் பால், நாளொன்றுக்கு 33 இலட்சம் லிட்டரிலிருந்து 35 இலட்சம் லிட்டராகவும், ஆவின் பால் விற்பனை 22.5 இலட்சம் லிட்டரிலிருந்து 25 இலட்சம் லிட்டராகவும் உயரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் பால் வளத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய மகத்தான சேவைக்கு மேலும் மணிமகுடமாக, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு, குறிப்பாக புற்றுநோய் சிகிச்சையிலே வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை, அரசு

2019 ஜூலை 17] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான மேன்மைமிகு மையத்தினை 120 கோடி ரூபாயில் அமைத்திட அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாக, ஈரோடு மாவட்ட மக்களின் வயிற்றில் பால் வார்த்ததைப்போல, 67 கோடி ரூபாய்க்கு ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை Super Speciality Hospital–உயர் சிறப்பு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அறிவித்துள்ளார்கள்.

அதேபோன்று, இன்றைக்கு ஒரு புதிய முயற்சியாக, சென்னை, கே.கே. நகரில் உள்ள அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் Rehabilitation Centre ஒன்று அறிவித்துள்ளார்கள். இதுபோன்ற Rehabilitation Centres வளர்ந்த நாடுகளில்தான் இருக்கும். பல்வேறு வசதிகளுடன்கூடிய மறுவாழ்வு மையம்–Rehabilitation Centre அமைக்கப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள். மேலும், அரசு மருத்துவமனைகளின் சேவையை மேலும் மேம்படுத்த 'My Hospital, My Pride' என்று அறிவித்துள்ளது ஒரு புதிய முயற்சி. இதுபோன்று பல்வேறு முயற்சிகளுக்கு இன்றைக்கு வித்திட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மக்கள் நல்வாழ்வுத் துறையின் நெஞ்சார்ந்த நன்றிகளை அன்போடு காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட முத்தான முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழிவந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கழகத்தின் திலகம், எங்கள் கழகத்தை கலகமின்றி, களங்கமின்றி, கர்வமின்றி, கடினமின்றி காக்கின்ற காவல் தெய்வம் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தையே உள்ளங்கையில் வைத்துள்ள கரும்பு தேசத்தின் இரும்பு மனிதர் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) சிக்கல்கள் பல வந்தாலும் மக்களுக்குத் தொண்டாற்ற தவறாதவர்; அவர்களுக்கு சுமைகளைத் தராதவர்; எளியவர்களுக்கு நன்மை பல செய்பவர் எங்கள் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) எளிமைதான் எங்கள் அண்ணன் எடப்பாடியாரின் வலிமை; அவர் இதயம் வெண்மை; தினம் மக்களுக்குச் செய்கிறார் நன்மை; அதைப் பார்த்து பலருக்கு பொறாமை; (மேசையைத் தட்டும் ஒலி) இதுவே உண்மை. தமிழை அடுக்குமொழியில் பேசி பிழைக்க வந்தவர் அல்ல எங்கள் முதல்வர்; தமிழர்களுக்காக மிடுக்காக உழைக்க வந்தவர் எங்கள் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

காவேரித் தாய் காத்துவந்த கழகத்தை, கண்ணின் மணியாகக் காத்து, களம் பல கண்டு, வெற்றிக்கனி பறிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கு தோளோடு தோள் நின்று, ஒன்றுபட்ட கழகத்தை மீட்டெடுத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ் அவர்களுக்கும், எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விதி 110–ன்கீழ் பால் வளத் துறைக்கு முத்தான அறிவிப்பான 5 புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை அமைப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு பால் வளத் துறையின் சார்பாகவும், எனது சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுக்கு 7 குணங்கள் உண்டு. அவற்றுள் 4, பழகினால் வருபவை; ஏனைய மூன்றும் மரபு வழி குணங்களாகும். அவை நட்பு, ஈகை, கருணை. இந்த மூன்று குணங்களையும் இயற்கையிலேயே ஒருங்கே பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், போக்குவரத்துக் கழகங்கள் புத்துயிர் பெறுகின்ற வகையிலே,

புதிய 2,000 பேருந்துகளை வாங்குவதற்கும் மற்றும் பொது மக்களுக்குப் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்கின்ற வகையிலே, 10 பணிமனைகளைத் தரமுயர்த்தவும், விதி 110–ன்கீழ் அறிவித்தமைக்கு அனைத்துப் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கவன ஈர்ப்பு

மடத்துக்குளம் தொகுதி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. அர. சக்கரபாணி, திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளது” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கொதிகலன் பழுதுபட்டிருந்தது. கொதிகலன் தற்சமயம் சீர்செய்யப்பட்டு, நல்லமுறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள்; என்னை அவை அலுவல்களை நடத்தவிடுங்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30–3–2019 முதல். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்று மட்டும் சொல்லுங்கள். பிறகு அடுத்தது பேசலாம்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதன்மூலம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவர அறிக்கை

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1960 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 800 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன் நிறுவப்பட்டது. தற்போது இந்த ஆலை நாளொன்றுக்கு 1,250 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன் பயன்பாட்டில் உள்ளது. 2016–2017 மற்றும் 2017–2018 ஆகிய அரவைப் பருவங்களில் ஆலைக்குத் தேவையான போதிய கரும்பு இப்பகுதியில் பயிரிடப்படாத காரணத்தினால், கரும்பு அரவை நடைபெறவில்லை. தற்போதைய 2018–2019 ஆம் அரவைப் பருவம் 31–3–2019 அன்று முதல் நடைபெற்று வருகிறது. 30–6–2019 வரை 81,148 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. இந்த அரவைப் பருவத்தில் கொதிகலனில் ஏற்பட்ட நீராவிக் குழாய் பழுதின் காரணமாக, 12.65 சதவிகிதம் அரவை நிறுத்தம் ஏற்பட்டது. எனினும், நீராவிக் குழாய் பழுது சரிசெய்யப்பட்டு, நீர் அழுத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, மீண்டும் கொதிகலன் இயக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. மேலும், இயந்திரப் பழுதுகள் ஏற்படாவண்ணம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நல்ல முறையில் ஆலை இயக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். அதில் உள்ள விவரங்களில் விடுபட்ட சில பிரச்சினைகளை உங்களிடையே தெரிவிக்க விரும்புகின்றேன். மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கடந்த 1959–1960 ஆம் ஆண்டில் அரவையைத் துவங்கி

60 ஆம் ஆண்டிற்குச் சென்றுகொண்டிருக்கிறது. இந்த ஆலை தமிழகத்திலுள்ள ஆலைகளிலெல்லாம் ஒரு சிறப்பு பட்டமாக, ஒரு special season *என்கிற வகையில் இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.*

இந்த ஆலையைப் பொறுத்தவரை, ஆரம்ப காலத்தில் ஒருங்கிணைந்த கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் பாதி பகுதியில் கரும்பு அறுவடை செய்து, அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்து வந்தது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அனைத்து விவசாயிகளும், இந்த அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஒரு பெருமையாகக் கருதுகின்றனர். தற்போது, மடத்துக்குளம், உடுமலை, பல்லடம், சூலூர், பழனி, ஒட்டன்சத்திரம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு உறுதுணையாக விளங்குகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8 ஆண்டுகளாக பருவமழை சரியாகப் பொழியாத காரணத்தினால், கரும்பு பயிரிடும் பகுதி குறைந்த காரணத்தினால், 2016–2017, 2017–2018 பருவத்தில் ஆலையை இயக்க முடியாத நிலை உருவானது. இந்த நிலையில் நடப்பாண்டு 2018–2019 ஆம் ஆண்டு 3,457 ஏக்கர் பதிவு செய்யப்பட்டு, கடந்த 31–3–2019 அன்று முதல் அரவையைத் துவங்கி இன்றுவரை 107 நாட்களில் 92,946 டன்கள் மட்டுமே அறுவடை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள். மற்றொரு கேள்வி இருக்கிறது.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில செய்திகளைச் சொல்லித்தானே ஆக வேண்டும். ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை; செய்திகளை நீங்கள் சொல்லலாம். விவர அறிக்கையில் உள்ளதைப் பற்றி விரிவாகப் பேசுகிறீர்கள். அடுத்து, இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்புத் தருகிறேன்.*

பிற்பகல் 12–15

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *இந்த நிதியாண்டில் மொத்தம் அறுவடை செய்த 107 நாட்களில், 743 மணி நேரம்; அதாவது 31 நாட்கள் ஆலையில் இயந்திரங்கள் பழுதடைந்து*

மற்றும் இதர காரணங்களால் ஆலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. நாளொன்றுக்கு 1,250 டன் வீதம் அரவை செய்ய வேண்டிய நிலையில், தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 867 டன் மட்டுமே அறுவடை செய்து வருகிறது. அதனால் இந்த ஆலையினுடைய recovery, அதாவது 9 முதல் 10 சதவிகிதம் வரை இருக்க வேண்டிய recovery, 8 சதவிகிதத்தைக்கூட தொட முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நிலையில் ஆலையைத் துவங்குவதற்கு முன்னால், ஆலையைப் பழுதுபார்க்கும் பணியைச் சரிவர செய்யாததுதான் முழு முதல் காரணமாகும். மேலும், அதற்குத் தேவையான நிதி ஆதாரத்தை உரிய நேரத்தில் வழங்கவில்லை என்பதோடு, அதற்கு ஆலையின் செயலற்ற நிருவாகம்தான் காரணம் என்று விவசாயிகள் கருதுகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமகிருஷ்ணன், விவர அறிக்கையைப் படித்துவிட்டு ஏதாவது கேள்வி கேட்டால் பரவாயில்லை. ஆனால், நீங்கள் ஏற்கெனவே தயார் செய்த ஓர் உரையைக் கொண்டு வந்து இந்த அவையில் படித்தால் எப்படி? எனக்கு நேரமில்லை. நீங்கள் கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்துக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? கேள்வியைக் கேட்க நான்தான் allow செய்கிறேனே!

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மேலும், கடந்த 29–9–2015 அன்று சட்டப் பேரவையில் விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் செயல்திறனை மேம்படுத்தவும், உற்பத்திச் செலவைக் குறைக்கவும், 25 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அதுவும் கடந்த 30–9–2015 ஆம் தேதி அன்று அரசாணை 237 என வெளியிடப்பட்டு, இதுவரை அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தாத காரணத்தினால், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சரியாகச் செயல்படாத சூழ்நிலையில் இருக்கின்றது. 'இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு அரசு முன்வருமா?' எனக் கேட்டு, அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த 2016–2017 ஆம் ஆண்டு பட்ஜெட் மீதான விவாதத்தின்போதே இந்தப் பிரச்சினை குறித்து நான் வலியுறுத்தியிருக்கின்றேன். அதேபோன்று விவசாயிகள் கரும்பை உரிய நேரத்தில் அறுவடை செய்து, அரைக்காமலும் உள்ளனர். அதேபோன்று, அறுவடை தேதி முடிந்து கரும்புகளை வெட்டாமல்

உள்ள கரும்புகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமாய்க் கேட்டு, இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கொதிகலன் பழுதடைந்திருந்தது. தற்சமயம் அந்தக் கொதிகலன் சீர் செய்யப்பட்டு, நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. 30–3–2019 அன்று ஆலை துவக்கப்பட்டது. நேற்று (16–7–2019) வரை 92,000 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. மீதி 40,000 டன் கரும்பை அரவை செய்ய வேண்டும். ஆகஸ்ட் 20 ஆம் தேதிக்குள் ஒட்டுமொத்த அரவை பருவம் முடிந்து விடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த ஆலைக்குட்பட்ட பகுதியில் 13,500 ஏக்கர் கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது. 3,80,000 டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. தற்போது, மூன்றில் ஒரு பகுதிதான், 3,457 ஏக்கர் பரப்பளவில்தான் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 1 இலட்சத்து 30 ஆயிரம் டன்தான் கரும்பு அரவைக்கு இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

25–9–2015 அன்று விதி 110–ன்கீழ் அறிக்கையில் இந்த ஆலையை modernisation செய்ய வேண்டும் என்று மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் செயல்திறனைக் கூட்ட வேண்டும்; உற்பத்திச் செலவினை மேம்படுத்த வேண்டும்; சர்க்கரை உற்பத்திச் செலவினைக் குறைக்க வேண்டுமென்று அறிவித்தார்கள். அதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் நிதி உதவி கேட்கப்பட்டது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (NCDC) மூலமாக நிதி கேட்கப்பட்டது. அந்த நிதியில் 65 சதவிகிதம்தான் நாங்கள் தருவோம், மீதித் தொகையை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்றையதினம் உத்தரவு போட்டார்கள். அதனடிப்படையில், 12–8–2018 அன்று NCDC மூலமாகத் தகவல் வரப்பெற்றது. 19–2–2016 அன்று ஆலையினுடைய—இரண்டு ஆண்டுகள் அந்த ஆலை மூடப்பட்டது. 2016–2017 மற்றும்

2017–2018 ஆம் ஆண்டுகளில் இரண்டு பருவங்கள் அந்த ஆலையில் அரவை செய்யப்படவில்லை. வறட்சியின் காரணமாக அரவை செய்யப்படவில்லை, கரும்பு பயிரிடப்படவில்லை. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, ஆலையினுடைய நிதிநிலைமையை சரி செய்தபிறகு இந்த ஆலையினை modernisation செய்திட மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு modernisation செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமகிருஷ்ணன், இன்னும் என்ன கேள்வி இருக்கிறது? இன்னும் ஒரு துணைக் கேள்வி மட்டும்தான்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், அந்தப் பருவத்தில் ஆலை இயங்குகின்றது என்று சொன்னால், முறையாக அதனைப் பராமரிக்க வேண்டும். அந்தச் செயலை முழுமையாகச் செய்யவில்லை. ஏற்கெனவே விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட ரூ.25 கோடியே 80 இலட்சம் நிதியைத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12–20

அதேபோல, 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்கள் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு எரிசாராய ஆலை (rectified spirit) வழங்கினார். அதேபோல மேலும், 2006–2011 தி.மு.க. ஆட்சிக் காலங்களின்போது, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், துணை முதலமைச்சராகவும் பொறுப்பு வகித்தபோது, இந்த ஆலைக்கு எத்தனால் ஆலையும் வழங்கி, ஆலையினுடைய முன்னேற்றத்திற்கு மேலும் சிறப்பு சேர்த்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வி கேட்கவில்லை. உரையாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், இதற்கு ஏதாவது பதில் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Distillery unit–ல் எரிசாராயம் உற்பத்தி செய்யப்பட்டு

2019 ஜூலை 17] [திரு. எம்.சி. சம்பத்]

வருகிறது. இந்தப் பருவத்தில் மட்டும் 18 இலட்சம் லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டு பருவங்களுக்கு ஆலை இயங்கவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நடவு செய்த கரும்புகள் அனைத்தும் வறட்சியால் காய்ந்து விட்டன. அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தது. ஆலையின் நிதிநிலைமை குறித்து முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, விதி 110–ன்கீழ், 25 கோடியே 80 இலட்சம் ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. தற்போது அதற்கு மறுமதிப்பீடு (revised estimate) தயார் செய்யப்பட வேண்டும். 2015–ல் மதிப்பீடு செய்யப்பட்ட தொகைதான் அது. இதை மறுமதிப்பீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப, modernisation செய்வதற்குண்டான வழிவகைகளை மீண்டும் இந்த அரசு மேற்கொள்ளும். அதுமட்டுமல்லாமல், 30–3–2019 அன்று ஆலை திறப்பதற்கு முன்பாக complete ஆக service செய்து, check செய்த பிறகுதான் ஆலை துவங்கப்பட்டது. கொதிகலனில் மட்டும் சிறிய அளவில் பழுது ஏற்பட்டது. அதை நிவர்த்தி செய்வதற்கு இரண்டு, மூன்று நாட்கள் மட்டும்தான் ஆனது. தற்போது பழுது நீக்கம் செய்யப்பட்டு, ஆலை நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41– வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
(ஆ) கோரிக்கை எண் 51– இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(அ) கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்

கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 41, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 439, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 559, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1377, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2364, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3829, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4250, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4571, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4616, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5043, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5282, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6135, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6287, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6449, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6532, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6761, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன்.

திரு. ஆ. மகாராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6834, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6890, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7044, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7160, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7489, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7889, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 8270, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 8330, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 8373, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8508, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8592, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 331, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 728, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 782, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4805, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 982, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி தொகுதி, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டங்களில் உள்ள கிராம நிருவாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் காலியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1319, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பூவத்தூர் ஊராட்சியில் பொட்டலங்குடிக்காடு கீழத் தெருவில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1676, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2024, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2440, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2516, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3329, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, திருவையாறு, பூதலூர் மற்றும் தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3617, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலத்திற்கு பட்டா விரைவாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3873, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.*

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநாகேஸ்வரம் பேரூராட்சி, சன்னாபுரம் வட்டத்தில் RS 195/1–ல் உள்ளவர்களுக்கு பத்திரப் பதிவு செய்ய பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4370, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4481, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, கள்ளிமந்தையத்தை தனி வட்டமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5344, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதியில் அனைத்து கிராமங்களிலும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5380, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5411, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5542, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி–வேலூர் தொகுதிக்குட்பட்ட, விண்ணப்பம் செய்துள்ள முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கு உதவித் தொகையை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5617, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து புள்ளம்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5701, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலம் தொகுதியில் 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5778, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, காந்தி நகர், கோடிஅள்ளி ஊராட்சி, டீ கடை, மந்தைமேடு போன்ற பகுதிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5856, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5896, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் வட்டங்களில் தகுதி வாய்ந்த அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5928, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர் ஓய்வூதியத் தொகையை மீண்டும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5982, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலயங்களுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்போருக்கு, குடியிருப்பு இடத்திற்குமட்டிலும் இலவசப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6214, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகுதியுள்ள முதியோருக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6324, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகளில் உள்ள சேவை மையக் கட்டடங்களில் இ-சேவை மையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6349, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, கங்கைகொண்டான் பேரூராட்சி அருகே NLC நிறுவனத்திற்குச் சொந்தமான தாண்டவகுப்பம்,

அண்ணா நிறுத்தம், ஆட்டோ கேட், ஓர்க்ஷாப் கேட், ஓம்சக்தி நகர் ஆகிய பகுதிகளில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்கும் மக்களுக்கு 3 சென்ட் மாற்று இடம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6609, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகக் கட்டுமானப் பணியை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6635, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கூத்தாநல்லூர் வட்டத்தில் உள்ள காவனூர் மற்றும் ஆய்குடி ஊராட்சிகளைத் திருவாரூர் வட்டத்தில் இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6814, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6898, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6974, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், ஆணைமல்லூர் ஊராட்சி, AOC பகுதி மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7186, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7234, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சாவூர் தொகுதி, தஞ்சாவூரில் வலம்புரி மற்றும் ஆவுசாயி தோட்டம் ஆகிய பகுதிகளில் கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7326, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “போளூர் தொகுதி, போளூர் மற்றும் சேத்துப்பட்டு வட்டாட்சியர்மூலம் முதியோர் உதவித் தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7403, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி வட்டம், கூட்டுடன்காடு ஊராட்சி, கீழ் கூட்டுடன்காடு அய்யனார் காலனியில் சுமார் 250 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7454, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தாம்பரம் தொகுதி, கிஷ்கிந்தா சாலையில் உள்ள சமத்துவப் பெரியார் நகர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7525, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரைத் தனி வட்டமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7582, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சி தொகுதியில் 54 ஊராட்சிகள், 5 பேரூராட்சிகளில் நீண்டகாலமாக வசித்து வருபவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா

வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7936, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8163, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8495, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8687, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.835,01,36,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 51, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 440, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 575, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1375, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2206, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2374, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3830, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4253, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4579, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4617, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4737, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5051, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5100, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5283, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5618, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5700, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5781, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6215, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6376, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6450, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6525, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6616, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6770, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன்.*

திரு. ஆ. மகாராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6833, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7159, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7425, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8053, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8271, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8419, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8507, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 729, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 783, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4804, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2060, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2692, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3696, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றங்களின்போது மக்கள் எதிர்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3859, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3975, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மழைக் காலங்களில் ஏற்படும் மண் அரிப்பு, மண்

சரிவு போன்றவற்றைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5040, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், பேராவூரணி, பட்டுக்கோட்டை, மதுக்கூர், ஒரத்தநாடு, திருவோணம் ஒன்றியங்களில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5202, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் புதுக்கோட்டை தொகுதிகளில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு நிவராணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5546, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி–வேலூர் தொகுதியில் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5895, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் பந்தலூர் பகுதிகளில் மழையினால் வீடு இழந்தவர்களுக்கு வழங்கும் இழப்பீட்டுத் தொகை 5 மடங்கு உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5984, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் புயல் பேரிடர் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6092, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் புயல் மற்றும் பேரிடர் காலங்களில் நவீன வசதிகளுடன்கூடிய கருவிகள் பேரிடர் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6289, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வறட்சி, புயல் மற்றும் இதர சீற்றங்களால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6640, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், விடயபுரம் ஊராட்சியில் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட சமுதாய நலக் கூடத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7238, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் தொகுதி, தஞ்சாவூரில் முதியோர் உதவித் தொகைக்கு விண்ணப்பித்துள்ள தகுதியானவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7904, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 8004, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 8348, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8498, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8595, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில், கஜா புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டு, வீடு மற்றும் விளைபொருட்களை இழந்து பாதிப்பிற்குள்ளாகியுள்ளவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.835,01,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைமீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1957–ல் குளித்தலை, 1962–ல் தஞ்சாவூர், 1967–ல் சைதாப்பேட்டை, 1971–ல் சைதாப்பேட்டை, 1977–ல் அண்ணா நகர், 1980–ல் அண்ணா நகர், 1984–ல் சட்டமன்ற மேலவை, 1989–ல் துறைமுகம், 1991–ல் துறைமுகம், 1996–ல் சேப்பாக்கம், 2001–ல் சேப்பாக்கம், 2006–ல் சேப்பாக்கம், 2011–ல் திருவாரூர்

@ 379 முதல் 516 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மற்றும் 2016–ல் திருவாரூர் தொகுதிகள்; 13 முறை தேர்தல்களில் நின்று, நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) கடைசியாக தமிழகத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற வணக்கத்திற்குரிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும், சட்டமன்ற மேலவையின் எதிர்க்கட்சித் தலைவராகவும், அவர் உட்கார்ந்து, தமிழகத்தின் நலன்சார்ந்த விஷயங்களைப் பேசி, தமிழக உரிமைகளுக்காக வாதாடி, ஏன், குறிப்பாகவும், சிறப்பாகவும் இன்றைக்கு 1996 ஜூலைத் திங்கள் 17 ஆம் நாள், இதே நாளில், இதே மன்றத்தில் தென்னிந்தியாவின் வாசல் என்றழைக்கப்பட்ட 'மெட்ராஸ்' என்ற அந்தப் பெயரை 'சென்னை' என்று பெயர் மாற்றம் செய்த இந்த நாளில், (மேசையைத் தட்டும் ஒலி) அவர் எங்கேயெல்லாம் அமர்ந்திருந்தாரோ, அவர் இன்றைக்கும் நம்மோடு இருப்பதாகவே கருதி, இந்த அவையின் காற்றில் கலந்திருப்பதாகவே நினைத்து, அவர் அமர்ந்திருந்த இருக்கைகளை வணங்குகிறேன்.

பிற்பகல் 12–30

இன்றைக்கு தி.மு. கழகத்திற்கு ஒரு மிகப் பெரிய அளவில் வெற்றியைத் தேடித் தந்து, இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய கட்சியாக தி.மு. கழகத்தை தலைநிமிர்த்திய ஒரு மிகப் பெரிய ஆற்றல்மிக்க தலைவர்; வணக்கத்திற்குரிய தி.மு. கழகத்தினுடைய தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இந்திய அரசியல் வரலாற்றில், வேறு எந்த மாநிலத்திலும் எந்தக் கட்சியும் பெற்றிராத வாக்கு வித்தியாசத்தை தமிழகத்தில் தி.மு. கழகம் பெற்றிருக்கிறது. 2 தொகுதிகளில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம்; 4 தொகுதிகளில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம்; 8 தொகுதிகளில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம்; 12 இடங்களில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம்; மற்ற இடங்களில் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம்; 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் என்று 37 இடங்களில் மிகப் பெரிய அளவிலான வெற்றியைப் பெற்று, உழைப்பின் உச்சமாய்த் திகழ்ந்து, இன்றைக்கு தி.மு. கழகத்தை தலைநிமிரச் செய்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்

தலைவர், அண்ணன் தளபதி அவர்களை வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

இன்றைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பேசுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பொதுவாகவே தமிழக அரசில் பல்வேறு துறைகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், வருவாய்த் துறைதான் மிகவும் பழமையான துறை; தொன்மையான துறை. ஏறத்தாழ 223 ஆண்டுகளுக்கு முன்பே, வருவாய் வாரியம் என்கின்ற பெயரில், அன்றைக்கு மன்னர் ஆட்சிக் காலத்திலேயே, நில வருவாயை வசூலிப்பதற்காகத் தொடங்கப்பட்டது இந்தத் துறை, இன்றைக்குப் பல்வேறு வகைகளில் தமிழக மக்களின் உரிமை, நலன், அவர்களின் பாதுகாப்பு என்கின்ற வகையில், இவற்றோடு ஒட்டி உறவாடுகிற துறையாக இந்தத் துறை இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு 32 மாவட்டங்கள், 87 கோட்டங்கள், 305 வருவாய் வட்டங்கள், 1,190 குறுவட்டங்கள், 16,688 கிராமங்கள் என்கின்ற வகையில், பரந்து விரிந்த ஒரு மிகப் பெரிய நிருவாக வசதியுடன்கூடியது இந்த வருவாய்த் துறை. இன்றைக்குத் தமிழக மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள்; அது சாதிச் சான்றிதழாக இருந்தாலும், இருப்பிடச் சான்றிதழாக இருந்தாலும், வாரிசுதாரர் சான்றிதழாக இருந்தாலும், குடும்பத்தின் முதல் தலைமுறை பட்டதாரிக்கான சான்றிதழாக இருந்தாலும், ஆதரவற்ற பெண் என்பதற்கான சான்றிதழாக இருந்தாலும், உரிமங்கள் வழங்கப்படுவதற்கான சான்றிதழாக இருந்தாலும் ஏறத்தாழ 14 வகையான சான்றிதழ்களை மக்களுக்குத் தருகின்ற பணியைச் செய்கின்றது இந்தத் துறை.

அப்படிப்பட்ட இந்தத் துறையின் சார்பில், 2015 ஆம் ஆண்டு, தமிழகத்தில் 900 இடங்களில் இ–சேவை மையங்கள் தொடங்கப்பட்டன. அப்படித் தொடங்கப்பட்ட அந்த இ–சேவை மையங்களில் பணியமர்த்தப்பட்டிருப்பவர்களுக்கு 5,600 ரூபாய் ஊதியமாகத் தரப்படுகிறது,. குறிப்பாக, அந்த இ–சேவை மையங்களில் பணியாற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். அவர்களுக்கு restroom வசதிகூட இல்லாமல், கடினமான சூழலில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை கடந்த மே 31 ஆம் தேதி, அவர்களின் போராட்டங்களின் வாயிலாக இன்றைக்கு உணர்த்தியிருக்கிறார்கள். அந்த ஊழியர்களெல்லாம், “எங்களை நிரந்தரப்படுத்திட வேண்டும்; 5,600 ரூபாய் சம்பளம்

என்பது போதாது" என்கின்ற வகையில் கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

தொடக்க நிலையில் 900 இ–சேவை மையங்கள் தொடங்கப்பட்டன. இந்த இ–சேவை மையங்களின்மூலம்தான் பொது மக்களுக்கு நான் ஏற்கெனவே சொன்ன சான்றிதழ்கள் தரப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், இப்போது இயங்குவதாக அறிவிக்கப்பட்டிருப்பது 587 மையங்கள் மட்டுமே. இந்த 587 மையங்களில் சென்னையைப் பொறுத்தவரை 318 இடங்களில்தான் இ–சேவை மையங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த 318 மையங்களில், 186 இ–சேவை மையங்கள் இன்றைக்கு இயங்காத சூழல் இருந்துகொண்டிருக்கிறது. "அந்த இ–சேவை மையங்களை ஏன் மூடியிருக்கிறீர்கள்?" என்று ஊழியர்களைக் கேட்டால், "எங்களுக்கு சம்பளம் தரவில்லை; எங்களுக்கு paper வாங்குவதற்கு போதுமான பணம் தருவதில்லை; எங்களுக்கு toner வாங்குவதற்கு பணம் இல்லை" என்கிறார்கள். இவற்றையெல்லாம் காரணம் காட்டி, இந்த இ–சேவை மையங்கள் மூடப்பட்டதாக அறிகிறோம். இந்த இ–சேவை மையங்களின்மூலம் மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் வழங்கிவரும் நிலையில், அவை மூடப்பட்டுள்ளதால், குறிப்பாக, பள்ளி, கல்லூரிகளுக்கான அனுமதி நாட்களில் மக்கள் மிகப் பெரிய அளவில் சிரமத்திற்கு ஆளாகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய்த் துறையின் பெருமைகளையும், சிறப்புகளையும் பற்றி இங்கு எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட வருவாய்த் துறையின் பணிகளிலே மிக முக்கியமானது மக்களுக்குத் தேவையான பல்வேறு சான்றிதழ்களை வழங்கும் பணியாகும். அவை இப்போது இ–சேவை மையங்களின் மூலமாக வழங்கப்படுகின்றன. அதில் தற்போது இருக்கக்கூடிய சிரமங்கள், குறைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

பொதுவாக, காலத்திற்கு ஏற்றபடி ஒரு துறையை மேம்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

இங்கு சொன்னபோதுகூட, மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து, மொகலாயர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து, சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே ஒரு துறை இந்த நாட்டில் இருக்கிறது என்று சொன்னால், அது வருவாய்த் துறைதான் என்று சொல்லி, அதன் பெருமையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பழமைவாய்ந்த, சிறப்புவாய்ந்த வருவாய்த் துறையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய்த் துறை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையில், கடந்த காலங்களில் சான்றிதழ்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால், கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது; R.I. அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது; வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. ஏன் இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும்கூட அவர்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் சான்றிதழ்கள் வாங்குவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அது வரலாறாக இருக்கிறது. முதன்முதலாக நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், இந்தச் சான்றிதழ்களை சேவை மையங்கள் மூலமாகக் கணினிப்படுத்தி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதைச் செயல்படுத்திக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில், முதன்முதலாக தகவல் தொழில்நுட்பத் துறையோடு இணைந்து, 5 வகையான சான்றிதழ்கள் இ–சேவை மையங்கள்மூலம் வழங்கப்பட்டன. அதற்குப்பிறகு 15 வகையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, தற்போது 20 வகையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த மையங்களின் எண்ணிக்கை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சில கருத்துகளைச் சொன்னார்கள். அதைப் படிப்படியாகத்தான் விரிவுபடுத்த முடியும். 32 வருவாய் மாவட்டங்களிலும் அது படிப்படியாக விரிவுபடுத்தப்படுகிறது. அந்த வகையில் தற்போது 12,072 பொது சேவை மையங்கள் இருக்கின்றன. அவற்றில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் சிரமங்களை இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். முதன்முதலாக இந்த முயற்சியை எடுத்து, தகவல் தொழில்நுட்பத்

துறையுடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ள இந்த இ–சேவை மையங்களை, தகவல் தொழில்நுட்பத் துறைதான் கண்காணித்து, செயல்படுத்திவருகிறது. அந்தத் துறையின்மூலம் மனுக்களைப் பெற்று, வருவாய்த் துறைக்கு அனுப்பி, வருவாய்த் துறையினர் அதற்கான சான்றிதழ்களை மீண்டும் தகவல் தொழில்நுட்பத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு அனுப்புகிறார்கள்.

பணியாளர்களின் சம்பளப் பற்றாக்குறையைப் பற்றி இங்கு சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அவர்களுடைய ஒவ்வொரு கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்துவருகிறார்கள். அவர்களுக்கு சம்பளம் வழங்கும் பணியை நிருவகிப்பது தகவல் தொழில்நுட்பத் துறைதான். அவர்கள் அதற்கான பணிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு சான்றிதழை, அது சாதிச் சான்றிதழாக இருக்கட்டும்; இருப்பிடச் சான்றிதழாக இருக்கட்டும்; பல்வேறு சான்றிதழ்களாக இருக்கட்டும்; ஒரு சான்றிதழை ஒரு சாமானியன் எளிதில் வாங்க இயலாத நிலை இருந்ததை மாற்றி, தற்போது வீட்டிலிருந்துகொண்டே சான்றிதழைப் பெறலாம் என்ற ஒரு நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பள்ளி மாணவர்கள் சிரமப்படுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சொன்னார்கள். அதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்று சொன்னால், பள்ளி மாணவர்களுக்கு அந்தந்த பள்ளிக்கூடங்களிலேயே சான்றிதழ் வழங்குகின்ற திட்டம், தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், அம்மா அவர்களுடைய ஆட்சியிலும் செயல்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. 6 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு என்று தொடர்ந்து அதைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின்மூலம், இன்றைக்கு online வாயிலாக சான்றிதழ்களைப் பெறுகின்ற காரணத்தினால், அத்தகைய சிரமங்கள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முதன் முதலாக 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த இ–சேவை மையங்களில், முதலில் 14 இ–சேவை மையங்கள் தொடங்கப்பட்டு, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய நடவடிக்கைகளால் 12,649 இ–சேவை மையங்களும், 13,088 Counters–ம் முகவர்களோடு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சென்னையில் இயங்குகின்ற அனைத்து இ–சேவை மையங்களும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில், இரண்டு நாட்களுக்கு முன்னால் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருந்தார்கள். அதற்கான பதிலைக்கூட எங்களுடைய துறையின் வாயிலாக மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கின்றோம். ஒருசில நேரங்களில் சில சிரமங்கள் இருக்கின்றன. தற்போது ஜூன் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை அனைத்துப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் இலட்சக்கணக்கில் ஒரே நேரத்தில் இ–சேவை மையங்களின்மூலம் சான்றிதழ்களைக் கோரும்போது server slow down ஆகத்தான் செய்கிறது. அவற்றை உடனடியாக upload செய்து, சரிசெய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12–40

அடுத்து, சம்பள பாக்கியைப் பற்றிச் சொன்னார்கள். அந்தமாதிரியான எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை. ஒரு சில இடங்களில் உள்ள மையங்களில், வருமானம் இல்லாமல் இருக்கும். எப்படி வருமானமே இல்லாத வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதால், நஷ்டம் ஏற்பட்டு பேருந்துகள் நிறுத்தப்படுகின்றனவோ, அதுபோல், இ–சேவை மையங்களில் பணிபுரிவோருக்கு சம்பளம் கொடுக்கக்கூடிய அளவிற்குக்கூட வருமானமில்லாத நிலை இருந்தால், உடனடியாக அந்த இ–சேவை மையங்களை நாங்களே மூடிவிட்டு, பக்கத்திலுள்ள இ–சேவை மையங்களில் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிடுகிறோம். அதேபோல, தனியார்கள் மையங்களை அமைப்பதற்கு ஏதுவாக, அவர்களுக்கு password கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் வாயிலாக 1,001 மையங்களைக் கொடுத்திருக்கிறோம். இப்படி எங்கள் பணியினைச் சிறப்பாகச்

செய்வதன் காரணமாக, அதை appreciate செய்ததுடன், மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவ மக்களுக்கு கிடைக்கக்கூடிய அனைத்து சேவைகளையும் பெற்றுத் தாருங்கள் என்று மீன் வளத் துறை கேட்டுக் கொண்டதன் விளைவாக, தமிழ்நாடு முழுவதும் மீன் வளத் துறைக்கு 37 இ–சேவை மையங்களை அவர்களுக்காக மட்டுமே உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் சான்றிதழ் வழங்கும் திட்டம் என்பது— தமிழினக் காவலர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயின்றவர்கள் பள்ளியைவிட்டுச் செல்கிறபோது, சாதிச் சான்றிதழாக இருந்தாலும், வருமானச் சான்றிதழாக இருந்தாலும், அதைத் தந்து அனுப்பும் திட்டத்தை முதன்முதலில் தொடங்கி வைத்தார்கள். அதைச் செய்தது தலைவர் கலைஞர் அவர்களின் அரசு என்பதை அனைவருமே நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள், சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று சொல்வதெல்லாம் தவறு; எங்கேயும் இ–சேவை மையங்கள் மூடப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அவருக்கு இரண்டு இடங்களைச் சொல்கிறேன். ஒன்று, சைதாப்பேட்டை, மாந்தோப்பு பள்ளி எதிரில் உள்ள இ–சேவை மையம். மற்றொன்று, அதே சைதாப்பேட்டை, ஜோன்ஸ் சாலையின் கடைசியில், சுடுகாடு அருகில் இயங்கி வந்த இ–சேவை மையம். இந்த 2 இ–சேவை மையங்களும் கடந்த 3 மாத காலமாக, அங்குள்ளவர்களுக்கு சம்பளம் தராததால்தான் மூடப்பட்டுள்ளன. வேண்டுமானால் இன்று மாலையே நேரடியாகச் சென்று, ஆய்வு செய்துகொள்ளுங்கள். இல்லையென்றால், சம்பந்தப்பட்ட வட்டாட்சியரை உடனடியாகத் தொடர்புகொண்டு, நான் பேசி முடித்து, அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றுவதற்கு முன்னரே, அந்த மையங்கள் மூடப்பட்டிருப்பது உண்மையா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பள்ளி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் திட்டம் அவர்களது அரசில்தான் தொடங்கப்பட்டது என்று சொன்னார்கள். அது உண்மைதான். அதைத்தான் பதில் சொல்கிறபோது நானும் சொன்னேன். அவர்களுடைய அரசிலும் கொடுக்கப்பட்டது; எங்களுடைய அரசிலும் கொடுக்கப்படுகிறது என்று சொன்னேன். ஆனால், அவர்கள் அரசில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்காக மட்டுமே திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 6 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று அதைக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், நான் மேலோட்டமாக அவர்கள் அரசிலும் கொடுத்தார்கள்; நாங்களும் கொடுக்கிறோம் என்று சொன்னேன். ஆகவே, இரண்டு அரசுகளுமே மாணவர்களுடைய நலனில் அக்கறையுள்ள அரசுகள்தான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 6ஆம் வகுப்பு படிக்கும்போதே மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இ–சேவை மையங்கள் மூடியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். படிப்படியாக இந்தத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியை, பழைய கால சிறப்பு வாய்ந்த வருவாய்த் துறையோடு இணைத்து, மக்களுக்கு என்னென்ன நன்மைகளையெல்லாம் செய்யலாம் என்று செய்து வருகிறோம். ஒரு காலத்திலே நில வருவாயை வசூலிப்பதற்காக மட்டுமே என இருந்தது இந்த வருவாய்த் துறை. இன்றைக்கு நில வருவாய் என்பதே இல்லாமல், தமிழ்நாடு முழுவதும் கேட்புத் தொகை மொத்தமாக 8 கோடி ரூபாய் அளவில்தான் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு இத்துறை முழுமையான ஒரு சேவைத் துறையாக இருந்து, தகவல் தொழில்நுட்பப் புரட்சியை 100 சதவிகிதம் உள்வாங்கிக் கொண்டு, அவற்றை மக்களுடைய நலனுக்காக வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் வழிவந்தவர். 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் குற்றம் காணுவதைக் காட்டிலும், இந்தச் சேவை மையங்கள் ஆரம்பித்து, இத்தனை மையங்களின் மூலமாக, எத்தனை இலட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் தங்களது வீட்டிற்கு அருகிலேயே சான்றிதழ்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதே ஒரு மிகப் பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தச் சாதனையை மக்களிடத்திலே கொண்டுபோய் சேர்த்து, மக்களிடையே வரவேற்பைப் பெறுவதற்கு நாங்கள் முயற்சி செய்தாலும், அந்த சாதனையைச் சொல்லவிடாமல், மையங்கள் ஆங்காங்கே மூடப்பட்டுள்ளதாக அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு புதிய திட்டம். 300, 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த வருவாய்த் துறையில் இதுவரை இத்திட்டம் இல்லை. இப்போதுதான், தகவல் தொழில்நுட்பத் துறையோடு இணைந்து, ஒரு புதிய நிருவாகப் புரட்சியை, ஒரு நிருவாகச் சீர்திருத்தத்தை, ஒரு புதிய அணுகுமுறையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசிலே வருவாய்த் துறை புகுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை இன்றைக்கு வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கும் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதை நாங்கள் நிச்சயமாகச் சரி செய்வோம். இப்போது ஒவ்வொன்றாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் இன்னொரு மிக முக்கியமான கடமைகளில் ஒன்று, பட்டாக்கள் தருவது; அடுத்து, முதியோர் உதவித் தொகை. முதலில், முதியோர் உதவித் தொகை குறித்து சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1962 ஆம் ஆண்டு முதல் முதியோர் உதவித் தொகை தருகிற திட்டம் தமிழகத்தில் மிகச்

சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 15 ரூபாயில் தொடங்கிய இந்த முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம், இன்றைக்கு ஆயிரம் ரூபாய் வரை வந்திருக்கிறது. முதியோர்களுக்கான உதவித் தொகை, விதவைகளுக்கான உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கான உதவித் தொகை, முதிர் கன்னிகளுக்கான உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை, ஆதரவற்ற விவசாயிகளுக்கான உதவித் தொகை; இப்படிப்பட்ட உதவித் தொகை தருகிற திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தி.மு.கழக ஆட்சியில், அன்றைய வருவாய்த் துறை அமைச்சராக இருந்த, மரியாதைக்குரிய திரு. ஐ. பெரியசாமி அவர்கள், இதே மாமன்றத்தில் 2006 ஆம் ஆண்டு ஒரு விவாதத்தின்போது சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, வருவாய்த் துறையின் சார்பில், 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை, அந்த 4 ஆண்டுகளில் ஆதரவற்ற 7 இலட்சத்து 65 ஆயிரம் பேர்களுக்கு உதவித் தொகை தந்திருக்கிறோம் என்கின்ற ஒரு பெருமை மிகுந்த கணக்கினை இந்த மன்றத்தில் அன்றைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பேருக்கு அந்தத் தொகையை தருகிறோம் என்று 2016–லிருந்து தொடர்ந்து இந்த மன்றத்திலும் சொல்லி வருகிறார்; கொள்கை விளக்கக் குறிப்பிலும் சொல்லப்பட்டிருக்கிறது. 30 இலட்சத்து 74 ஆயிரம் பேர்களுக்கு உதவித் தொகை தந்து கொண்டிருக்கிறோம் என்று 2016–ல் சொல்லப்பட்டிருக்கிறது. 2017–ல் அந்த எண்ணிக்கை ஒன்றிரண்டு இலட்சம் கூடியிருக்க வேண்டும்; மாறாக, மாண்புமிகு அமைச்சர் அவருடைய பதிலில், பயன் பெறுபவர்களுடைய எண்ணிக்கை 29 இலட்சத்து 75 ஆயிரத்து 885 பேர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அடுத்த ஆண்டு, 2018–ல், 29 இலட்சத்து 75 ஆயிரம் என்கின்ற அந்த எண்ணிக்கையிலிருந்து கீழிறங்கி, 29 இலட்சத்து 20 ஆயிரம் பயனாளிகள் இருக்கிறார்கள். இவர்களை 29 இலட்சத்து 80 ஆயிரமாக உயர்த்துவதற்கு இந்த ஆண்டு அரசு முயற்சிக்கும் என்று சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அதே பதிலை, 29 இலட்சத்து 20 ஆயிரத்திலிருந்து, 29 இலட்சத்து 80 ஆயிரமாக உயர்த்தித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

நான் கேட்கிற கேள்வியெல்லாம், அதாவது ஆதரவற்றவர்களுக்குத் தருகிற உதவித் தொகை எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமே தவிர, தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருவது என்பது எப்படிப் பொருத்தமான ஒன்றாக இருக்கும் என்பதுதான்.

இன்னொன்றும்கூட அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. 2015 ஏப்ரல் மாதத்தில், ஏற்கெனவே இருந்த, 1962 ஆம் ஆண்டு அரசாணையிலிருந்து ஒரு திருத்தத்தைச் செய்திருக்கிறோம். அந்தத் திருத்தத்தின்படி, 20 வயதுக்கு மேற்பட்ட மகன், பேரன் இல்லாதபட்சத்தில், அசையா சொத்து மதிப்பு 50 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருந்தால், இதில் பயனாளிகள் என்கின்ற ஒரு கணக்கினை ஒருமுறை சொல்கிறார். இன்னொரு ஆண்டு, அதையே சொல்கிறபோது, வயது வந்த மகன், மகள் இருந்தாலும், அவர்கள் ஒரே குடும்பமாக வசித்துவரும்பட்சத்தில் ஒய்வூதியம் பெறும் வகையில் திருத்திய அரசாணை என்று இந்த அரசாணையைச் சொல்கிறார். அப்போது 2015 ஏப்ரலில் வந்த ஒரே அரசாணையில், மகனோ, பேரனோ இருந்தால், உதவித் தொகை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

இந்த ஆண்டு வந்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில், வயது வந்த மகனோ, மகளோ இருந்தாலும், அவர்கள் ஒரே வீட்டில் வசித்தால், அவர்களுக்குத் தரப்படும் என்று அதே அரசாணையில் சொல்லப்பட்டிருக்கிறது.

எங்கள் கழகத் தலைவர், வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள், தொடர்ந்து எங்களையெல்லாம் ஊராட்சி சபைக் கூட்டங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சி சபைக் கூட்டங்களில் நாங்கள் கலந்துகொண்டிருக்கிறோம். ஆங்காங்கே கிராம மக்கள் பெரிய அளவில் கலந்துகொண்டு, எங்களைப் போன்றவர்களிடத்தில், "முதியோர்களுக்கான உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கான உதவித் தொகை, விதவைகளுக்கான உதவித் தொகை, முதிர் கன்னிகளுக்கான உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை இவையெல்லாம் எங்களுக்கு ஆண் வாரிசு இருந்தால், இல்லை என்று சொல்கிறார்கள். சொந்தமாகக் குடிசை இருந்தால், இல்லை என்று சொல்கிறார்கள். ஆண் வாரிசு இருந்தும், எங்களுக்குப்

பிரயோஜனம் இல்லை; எங்களுக்கு ஆதரவு இல்லை என்கின்ற அந்த நிலை வருகிறபோது, எங்களுக்கு இந்த உதவித் தொகை தந்தே தீர வேண்டும்'' என்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு. கழகத்தினுடைய தலைவர், வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள், தாம் கலந்துகொண்ட ஊராட்சி சபைக் கூட்டத்தில் அறிவித்தார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறபோது, ஆண் வாரிசு இருந்தாலும், ஆதரவற்ற நிலையில் இருந்தால், உங்கள் அத்துணை பேருக்கும் இந்தத் தொகை வழங்கப்படும்'' என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 2006–2011–ல் கிட்டத்தட்ட 7¼ இலட்சம் பேருக்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். 2011 ஆம் ஆண்டு நான் வருவாய்த் துறை அமைச்சராகத்தான் இருந்தேன். அதனால், மூன்றை மட்டும் நான் உதாரணத்திற்காகச் சொல்கின்றேன். 2009–லிருந்து 2011–க்குள் சேலம் தாலுகாவில் மட்டும் 1¼ இலட்சம் பேருக்குக் கொடுத்தீர்கள். அதேபோல, திண்டுக்கல்லில் ஒரு இலட்சம் பேருக்கு, விழுப்புரத்தில் 50,000 பேருக்கு; இப்படித்தான் நீங்கள் 7¼ இலட்சம் பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். ஒரு தாலுகாவில் நீங்கள் 1¼ இலட்சம் பேருக்குக் கொடுத்து, அந்த தாசில்தார் கடைசியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இப்படித்தான் உங்களுடைய ஆட்சியிலே* Old Age Pension *கொடுத்தீர்கள் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *ஆதரவற்றவர்கள், முதியோர்கள் இவர்களெல்லாம் திண்டுக்கல்லிலும், சேலத்திலும் இருக்கக் கூடாது என்கின்ற விதி ஏதுமில்லை.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் மேயர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார். அந்த மாவட்டங்களில் ஆதரவற்றவர்கள், முதியோர்கள் இருக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. கொடுக்கக் கூடாதவர்களுக்கு, தகுதியில்லாதவர்களுக்குக் கொடுத்ததைத்தான் நாங்கள் இங்கே குற்றச்சாட்டாகச் சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியில்லாதவர்கள், வயது குறைந்தவர்கள் போன்றவர்களுக்கு உங்களுடைய ஆட்சியில் அன்றைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்தது குறித்து இந்த அவையில் பேசி, ஏற்கெனவே இங்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அது உண்மையா, இல்லையா என்று கேட்டபோது, "ஆம்; கொடுத்தோம்; விதவைகளுக்கு வயது குறைவாக இருந்ததாலும் கொடுத்தோம்" என்று அவர் பதிலைச் சொல்லும்போது, அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். எனவே, அந்தத் தவறுகள் நீக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் . . . (குறுக்கீடு) இல்லை, இல்லை; இந்தத் தவறுகளுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அதைத்தான் சொன்னோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) அவர் பேசட்டும். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) அவர் நேரம்தான் போகும். பரவாயில்லையா? முன்னாள் மேயர் திரு. மா. சுப்பிரமணியத்தினுடைய நேரத்தில்தான் அவர் பேச வேண்டும். பரவாயில்லையா? (குறுக்கீடு) பிறகு அவர் நேரத்தில்தான் பேச முடியும். (குறுக்கீடு) அவர் நேரத்தில் வேண்டுமானால் பேசலாம். பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இத்தனை பேர் எழுந்திருக்கக் கூடாது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்கார்ந்தால் வாய்ப்பு தருவேன். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். உட்கார்ந்தால் நான் அவருக்கு வாய்ப்பு தருவேன். இல்லையென்றால் நான் தர மாட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், தகுதியில்லாதவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் உதவித் தொகை வழங்கியதாகச் சொல்லியிருக்கிறார்கள். மகன் இருந்தாலும், மகள் இருந்தாலும் தாய், தந்தையருக்கு சாப்பாடு போடுவதில்லை என்று இதே அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் சொன்னபோது, "பெற்ற பிள்ளை சோறு போடவில்லை என்றாலும், நான் உதவித் தொகை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று சொன்னவர் எங்கள் முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், மகன் இருந்தாலும், மகள் இருந்தாலும், 10 பேர் இருந்தாலும், எல்லோருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 12 இலட்சம் பேருக்குக் கொடுத்தோம்; அவர் சொன்னதுமாதிரி 7¼ இலட்சம் பேருக்கு இல்லை. (குறுக்கீடு) நான்காண்டு கணக்கு. தமிழ்நாட்டில் 2006–2011 ஆம் ஆண்டில் 5 ஆண்டுகளுக்குள், கலைஞர் அவர்கள் ஆட்சியில், முதியோர் உதவித் தொகை பெற்றவர்களுடைய எண்ணிக்கை 12 இலட்சம்; தகுதியின் அடிப்படையில் கிட்டத்தட்ட 12 இலட்சம் பேருக்கு உதவித் தொகை வழங்கிய அரசு கலைஞருடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையில் என்று அவர் சொல்கிறார். வயது குறைந்தவர்கள், தகுதியில்லாதவர்களுக்கு எல்லாம் அவர்கள் கொடுத்தார்கள் என்று நான் சொல்கிறேன். நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். அதற்கான ஆதாரங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்களே முடிவு சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அப்படி இல்லை. வாதம் செய்துகொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். போதும். உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு)

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 12—55

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) ஏற்கெனவே இந்த விவாதம்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். நான் 7—வது ஆண்டாக இங்கே இந்த மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்கிறேன். ஒவ்வோராண்டும் மானியக் கோரிக்கையின்போது, இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான கேள்வி வருகிறது. கடந்த ஆண்டு நான் மானியக் கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அனுமதியைப் பெற்று மொத்த தஸ்தாவேஜுகளையும் எடுத்துக் கொண்டுவந்து, இதே அவையில் நாம் விவாதம் செய்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொன்னார்; மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்; நாங்களும் சொன்னோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யார் அதிகமாகக் கொடுத்தார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, நீங்களாக இருந்தாலும் சரி, நாங்களாக இருந்தாலும் சரி, மக்களுக்குச் சேவையை செய்வோம், கடமையைச் செய்வோம். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து கிடையாது. அதில் யார் சிறப்பாகச் செய்தார்கள்? யார் மக்களுடைய உணர்வைத் தெரிந்துகொண்டு, உணர்வைப் புரிந்துகொண்டு செய்தார்கள் என்றால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இப்போது சொன்னதை, கொடுத்ததை, நான் மறுக்கவில்லை.

(குறுக்கீடு) நீங்கள் கொடுத்தீர்கள், இல்லை என்று சொல்லவில்லை. அது நீங்கள் தொடங்கியதில்லை. அவரே அதுகுறித்த வரலாற்றைச் சொன்னார். 20 ரூபாயிலிருந்து ஆரம்பித்து வரிசையாக வந்தது; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், 500 ரூபாய் என்று நீங்கள் கொடுத்ததை 1,000 ரூபாய் தருவேன் என்று சொல்லி, அதை நிறைவேற்றியது மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்று.

மற்றொன்று, நீங்கள் 1,200 கோடி ரூபாய்தான் நிதிநிலை அறிக்கையில் மொத்தம் ஒதுக்கீடு செய்தீர்கள். இதை மறுக்க முடியாது; வரலாறு இங்கே இருக்கிறது. ஆனால், உங்களை ஆட்சியில் இருந்து அகற்றியதற்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, 2011 ஆம் ஆண்டிலே, 4,200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) 3,000 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) இது தொடர் ஒதுக்கீடு. இதுகுறித்த விவாதம் ஏற்கெனவே நாம் இங்கே செய்திருக்கிறோம். பிறகு, எண்ணிக்கை. முதலில், அதனுடைய அளவு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசாமல் இருங்கள். நீங்கள் எல்லோரும் உட்கார்ந்துகொண்டு பேசினால் எப்படி?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: நான் சொல்கிறேன்; 2006–ல் உங்களுடைய தலைவர் கொடுத்தார். ஆனால், உணர்வறிந்து கொடுத்தாரா? ஒரு முதியோருக்கு, ஆதரவற்றோருக்கு, நலிந்தோருக்கு 500 ரூபாய் கொடுத்தால் என்ன செய்ய முடியும்? ஆனால், 2011–ல் 1,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்த தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, விதியைத் தளர்த்துவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: அந்த விதியிலே அவர் வசதிக்காக சிலவற்றை மறைத்துவிட்டு, சிலவற்றை இங்கே சொல்கிறார். 5,000 ரூபாய் சொத்து மதிப்பு இருந்தால், அதற்குமேல் இருந்தால் அவருக்குக் கொடுக்க முடியாது. இது பழைய விதியில்

இருக்கிறது. ஆனால், 5,000 ரூபாய் என்பது சாதாரணமாக இருக்கக்கூடிய நிலையில், இதைத் திருத்தம் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில், விதியைத் தளர்த்தி, சொத்து மதிப்பை 50,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இங்கே சொல்லியிருக்கிறார்கள், ‘பெத்த பிள்ளை சோறு போடவில்லை என்றாலும்’ என்று சொல்லி ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் அரசியல் களத்தில் நன்றாகப் பேசுவீர்கள்; அதில் ஒன்றும் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. மக்களிடம் சிறப்பாகப் பேசுவீர்கள். ‘பெத்த பிள்ளை சோறு போடவில்லை என்றால்’ என்று நீங்கள் ஒன்றைச் சொன்னீர்கள். ஆனால், நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இந்த அன்னைத் தமிழகத்தில் உற்றார், உறவினர், சுற்றத்தார் அத்துணைபேருமே கைவிட்டாலும், பெறாத தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் அத்தனை பேருக்கும் சோறு போட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இப்போது, நாங்கள் மறுக்கவில்லை. 37 இலட்சம் பயனாளிகள் வரைக்கும் வழங்கப்பட்டது; அது இப்போது 30 இலட்சத்தில் இருக்கிறது. அந்த 7 இலட்சம் பேர் யார்? செத்தவர்கள்; வெளிநாட்டிற்குப் போனவர்கள்; கார் வைத்திருப்பவர்கள்; டிராக்டர் வைத்திருப்பவர்கள்; பங்களா வைத்திருப்பவர்கள். இது என்ன அடிப்படை? ஆதரவற்றோர், நலிந்தோர், ஏழைகள் தங்களுடைய வாழ்விலே, சிரமமான சூழ்நிலையிலே இருக்கும்போது, தங்களுக்கு மாத்திரை, மருந்து வாங்கிக்கொள்வதற்கு ஏதுவாக இது வழங்கப்படுகிறது. தாய், தந்தையை, உற்ற மகன் கைவிட்டபோதும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் காப்பாற்றினார்கள்.

அதைப்போல, மாற்றுத் திறனாளிகளுக்கான அங்கக் குறைபாடு 60 சதவிகிதம் என்றிருந்த அளவுகோலை, 40 சதவிகிதமாகக் குறைத்து, அந்த விதியையும் தளர்த்திக் கொடுத்தது (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். ஆக, நீங்களும் செய்தீர்கள்; நாங்களும் செய்தோம். என் தெய்வத் தாய் அம்மா அவர்கள் செய்தார்கள். ஆனால், மக்களின் உணர்வுகளை, எண்ணங்களை, வாட்டங்களைப் புரிந்து செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி

இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை இன்றைக்கு நடைமுறைப்படுத்துபவர் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், உட்காருங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1,000 ரூபாய் கொடுப்பதை இப்போது பெரிது என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. ஆஸ்டின், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1,000 ரூபாய் கொடுப்பதை இப்போது பெரிது என்று சொன்னார்கள். இதை ஆரம்பிக்கின்றபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு 20 ரூபாய் பெரியதாக இருந்தது. அன்றைக்கு இருந்த விலைவாசிக்கு 20 ரூபாய் பெரிது; 20 வருடங்களுக்கு முன்பு 500 ரூபாய் பெரிது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலைவர் தேர்தல் அறிக்கையில், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 1,500 ரூபாய் தருவோம்' என்று சொன்னார். அதனால், இந்தத் தொகையை வைத்து எண்ணிக்கையைக் குறைக்கக் கூடாது. யாராவது இப்போது வாங்க வேண்டுமென்றால், செத்துப்போனால்தான் வாங்க முடியும் என்பது போன்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சட்டத்தைப் போடுவது சரியல்ல; (குறுக்கீடு) இதில் புதிதாக யாராவது வாங்க வேண்டுமென்கின்றபோது, யாராவது ஒருவர் செத்துப் போக வேண்டும் என்பதுபோல இருக்கிறது. அடுத்து, பட்டாக்கள் விவகாரத்திற்கு வருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பட்டாக்கள் குறித்துச் சொல்லிவிடுகிறேன். அடுத்து, நீங்கள் கடைசியாகப் பதில் சொல்லுங்கள். பட்டா குறித்துப் பேசிவிடுகிறேன். கடைசியாக உங்களுக்கு பதிலுரையில் வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆயிரம் ரூபாய் பெரிதா, இரண்டாயிரம் ரூபாய் பெரிதா என்று கேட்கிறீர்கள். நீங்கள் ஆட்சியைவிட்டுப் போகும்போது, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் ஒரே ஆண்டில் எத்தனை இலட்சம் பயனாளிகளுக்குக் கொடுத்தார் தெரியுமா? அந்த புள்ளிவிவரங்கள் என்னிடம் இருக்கின்றன. ஒரே ஆண்டில் மட்டும், அவர் 16 இலட்சத்திலிருந்து 23 இலட்சத்திற்கு* jump *செய்துவிட்டார். ஆத்தூரில் எப்படி ஜெயிக்கிறார்களென்றால், அங்கே போனால் ஆத்தூரில் உள்ளவர்கள் சொல்கிறார்கள்; நான் சொல்லவில்லை. எல்லோரும்* OAP *வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் ஆதாரத்துடன் இங்கே எடுத்து வைத்திருக்கிறேன். இந்த சபையில் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன். எல்லோருக்குமே* OAP. *மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், "வறுமைக் கோட்டுக்குக் கீழேயிருக்கும் அனைவருக்கும் 2,000 ரூபாய் தருவேன்" என்று சொன்னார்கள். பொங்கல் பரிசாக 2 கோடியே 28 இலட்சம் பேருக்கு 1,000 ரூபாய் தருவேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் சொன்னார்கள். இது திட்டம். நீங்கள் திட்டத்தினுடைய விதிமுறைகளை மீறிக் கொடுத்தீர்கள். நாங்கள் சட்டத்திற்குட்பட்டு உண்மையான பயனாளிகள் பயனடைய வேண்டும் என்பதற்காக அதைக் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் கொடுக்கிறோம், அதை நான் மறுக்கவில்லை; இல்லையென்று சொல்லவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதை மூடி மறைக்கவில்லை. ஆனால், தகுதியில்லாதவர்களுக்குக் கொடுத்ததை நீக்கியிருக்கிறோம். இன்னொன்றையும் நான் ஒப்புக்கொள்கின்றேன். தகுதியிருப்பவர்களுக்கு இன்னும் நிலுவையில், பரிசீலனையில் இருக்கிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஊராட்சி வாரியாகச் செல்கின்றபொழுது, இதுபோன்ற நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்; உட்காருங்கள். பிறகு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வருவாய்த் துறையில் மிக முக்கியமான பிரச்சினை பட்டா. (குறுக்கீடு) சென்னை போன்ற இடங்களில் 3 வகையான நிலங்கள் இருக்கின்றன. ஒன்று; ரயத்துவாரி. இன்னொன்று; சர்க்கார் புறம்போக்கு. மற்றொன்று; நத்தம் புறம்போக்கு. சர்க்கார் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு ஆகிய இரண்டு இடங்களுக்குமே பட்டா மட்டும்தான் இல்லையே தவிர, மற்ற பரிவர்த்தனைகள் எல்லாம் நடக்கின்றன. நூறு வருடங்களாக வாங்குகிறார்கள், விற்கிறார்கள் மாநகராட்சி அதற்கான வரைபட அனுமதி எல்லாம் கொடுக்கிறது. எல்லா விவகாரங்களும் நடக்கின்றன. பட்டா மட்டும் இல்லை.

ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் நத்தம் புறம்போக்கு நிலங்களுக்கென்று தனி வட்டாட்சியர் நியமிக்கப்பட்டு, பட்டா கொடுப்பதற்கான நிலைகள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த 7, 8 வருடங்களாக அதைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. சென்னையில் வணக்கத்திற்குரிய கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் துணை முதல்வராக இருந்தபோது, பெரம்பூர் தொகுதியில், பக்தவச்சலம் நகர், இந்திரா காந்தி நகர், சாஸ்திரி நகர் ஆகிய 3 பகுதிகளில், ஏறத்தாழ 2,950 பர்மா தமிழர்களுக்கு பட்டா கொடுத்த நிகழ்வுதான் சென்னையில் 10 வருடங்களில் நடந்த ஒரு மிகப் பெரிய பட்டா கொடுக்கும் நிகழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பின்னால் அ.இ.அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற 8–9 ஆண்டுகளில் இதுவரையும் எங்கேயும் இதுபோன்ற பெரிய அளவிலான பட்டாக்களைத் தந்து, மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய நிகழ்ச்சிகளை நடத்திய வரலாறு என்பது இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே பிறந்தவர்கள் எல்லோருக்கும் ஒருபிடி அளவிலாவது இந்த நாட்டிலே சொந்த மண் இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. உழைத்து அவரவர்

சொந்தமாக வாங்குவதும் உண்டு. அரசே பொறுப்பேற்றுக்கொண்டு அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகிற திட்டம் காலங்காலமாக வருவாய்த் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றபிறகு, 2011 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் ஓர் இலக்கு நிர்ணயிக்கிறார்கள். ஓர் இலட்சம் என்று இலக்கு நிர்ணயிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அனைத்து வகைப்பாடு—பொதுவாக regular scheme என்று சொல்கிற வளமையான திட்டத்தில் பட்டாக்கள் வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதிலே ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களை அரசு தேர்வு செய்து அவர்களுக்குப் பட்டா வழங்கலாம். அதிலே பிரச்சினை இல்லை. Regularisation என்று சொல்லக்கூடியவகையில், வரன்முறைப்படுத்தி பட்டா கொடுக்கக்கூடிய நிகழ்வில்தான் பிரச்சினை வருகிறது. அதை இந்த மாமன்றத்திற்குச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்கள், நீர்நிலைப் புறம்போக்கு, நீர்வழிக் கால்வாய், ஆழமில்லாத ஏரி, ஏரி, ஏரிக்கரை, விட்டேரி, குட்டை, பெரியகுளம், நீர்ப்பிடி, ஓடை, ஊரணி, குளம், பொதுப் பணித் துறை கால்வாய், நீர்த்தேக்கம், அணைக்கட்டு, ஆறு, பெரியகுட்டை, வாய்க்கால், வாரி, நீர்வழித் தடம், கிணறு இதெல்லாம் நீர்நிலைப் புறம்போக்குகள். அதேபோல, ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்கள் என்பது நீர்நிலைப் புறம்போக்கு அல்லாதவை. சுடுகாடு, மயானம், வண்டிப்பாதை, மாநகராட்சி, வனம்–காடு, வனம்–எல்லை, மேய்ச்சல் தரை, நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை ரோடு, களம், கோயில், சந்து, தெரு, மந்தைவெளி, தேசிய நெடுஞ்சாலை, பஞ்சாயத்து சாலை, பாதை, பொதுப் பணித் துறை, வருவாய் தடையாணைக்கு உட்பட்ட நிலங்கள், ஒதுக்கப்பட்ட காடு, சாலை, தோப்பு. அதேபோல, ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்கள், அநாதீனம், தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு, தீர்வை ஏற்பட்ட நஞ்சை தரிசு, கல்லளை புறம்போக்கு, உரக்குழி, குன்றுமலை, களவாய், கல்லாங்குத்து, கரடு, பாறை, மேடு பள்ளம், நந்தவனம், நத்தம், உவர் பூமி, விளையாட்டு மைதானம், குவாரி, தடம், தரிசு, திடல், வெட்டுக்குழி, தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு, மற்றவை ஆகும்.

பிற்பகல் 1–05

பொதுவாக, குடியிருப்புகளுக்காக வீடுகளைக் கட்டுபவர்கள், classification–ஐ எல்லாம் பார்த்து, வகைப்பாடுகளையெல்லாம்

பார்த்து, அரசிடம் அனுமதியையெல்லாம் வாங்கி வீடுகளைக் கட்டுவதில்லை. அவர்கள் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள்; வாழ்வதற்கே அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கிடைத்த இடங்களிலெல்லாம் வீடுகளைக் கட்டி விடுகிறார்கள். அவ்வாறு வீடுகளைக் கட்டியவர்களுக்குக்கூட, அவர்களுக்கு வரன்முறைப்படுத்தி பட்டாக்கள் கொடுக்க வேண்டும் என்பதற்காக one time regularisation scheme–ஐ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வந்தது; நீங்களும் அந்த scheme–ஐக் கொண்டு வந்தீர்கள். அதுபற்றி இங்கே நீண்ட விவாதங்களை நாம் செய்திருக்கிறோம். இதுகுறித்து அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆனால், வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுப்பதிலே, 2011 ஆம் ஆண்டு முதல் இன்றைய தேதி வரை 20 இலட்சம் பேருக்கு பட்டாக்களை வழங்க வேண்டும் என்ற ஓர் இலக்கினை நிர்ணயித்து, 23 இலட்சம் பேர்களுக்கு பட்டாக்களை வழங்கிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்னையைப் பற்றிச் சொன்னார்கள். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் போன்ற பகுதிகளுக்கு தடையாணை இருக்கின்றது. ஏனென்றால், விலை மதிப்புமிக்க அந்த இடங்களை சில ஆக்கிரமிப்பாளர்கள், அதாவது, சமூக நலக் கண்ணோட்டம் இல்லாதவர்கள் ஆக்கிரமிப்பு செய்து, வியாபார நோக்கோடு செயல்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, இதுபோன்ற தடையாணைகள் இருக்கின்றன. அந்தத் தடையாணையையும் நீக்கிகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பட்டாக்களைத் தந்திருக்கிறது. ஆகவே, One time regularisation scheme என்று சொல்லக்கூடிய special scheme மூலம் இதுபோன்ற வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்தி பட்டாக்களைக் கொடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, 2 அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், ஏழையெளியவர்களுக்காக கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நீங்களும் பட்டாக்களைக் கொடுத்தீர்கள்; நாங்களும் பட்டாக்களைக் கொடுத்தோம்; ஆனால், வெற்றிக் கோப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குத்தான். 23 இலட்சம்

பட்டாக்களைக் கொடுத்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மூச்சிரைக்க, மூச்சிரைக்க பல்வேறு செய்திகளைக் கூறி, ஏதோ தாங்கள் சாதனை படைத்துவிட்டதாக இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், சென்னையில் ஒட்டுமொத்தமாக 20 சதவிகிதம் முதல் 30 சதவிகிதம் வரையிலான இடங்கள்தான் அரசு புறம்போக்காகவும், நத்தம் புறம்போக்காகவும் இருக்கின்றன. 8 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கிறீர்கள். இதற்கு முன்னால், அவற்றுக்கெல்லாம் பட்டாக்கள் தருவதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தனி வட்டாட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றன; தற்போது நடைபெறவில்லை. எனவே, இவற்றையெல்லாம் எந்தப் பாகுபாடும் பார்க்காமல், 'house-sites' என்கின்ற வகையில் வீட்டுமனைகளாக பட்டாக்கள் தந்திட வேண்டுமென்கின்ற கோரிக்கையைத்தான் நான் இங்கே வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'மூச்சிரைக்க, மூச்சிரைக்கப் பேசுகிறார்' என்று சொன்னார்கள். அவர் மாரத்தான் ஓட்டம் ஓடக்கூடியவர்; வெளிநாடுகளிலெல்லாம் ஓடியிருக்கிறார். ஆகவே, அவர் மூச்சிரைக்காமல் பேச முடியும். என் உடம்பிற்கு மாரத்தான் ஓட்டம் ஓட முடியாது. (சிரிப்பு) நான் பொதுக் கூட்டங்களில் பேசினாலும், இங்கே பேசினாலும் அப்படித்தான் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மூச்சிரைக்கப் பேசி, இல்லாததைச் சொல்லவில்லை. மூச்சிரைக்கப் பேசினாலும், உண்மையையும், சத்தியத்தையும், நேர்மையையும், நியாயத்தையும்தான் நான் இங்கே சொல்கிறேன் என்பதை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்காக இரண்டு அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப்போல, இம்மாமன்றத்திலேயிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் ஏழை, எளியவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றுவதற்காக கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் அரசாணை எண் 465 வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஊரகப் பகுதி பற்றிக் கேட்கவில்லை.

அதேபோன்று, அரசு புறம்போக்கு நிலங்களிலே நீண்ட காலக் குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக அரசாணை எண் 496 வெளியிடப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலின் காரணமாக, 3 மாத காலமாக இதை நாங்கள் செயல்படுத்தவில்லை. தற்போது கால நீட்டிப்புக்காக உரிய கருத்துரு துறையின் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோருக்குச் சென்றிருக்கிறது. மிக விரைவிலே இதற்கான அரசாணை வெளியிடப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம்தான் கேட்கிறார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இடமும் கொடுத்து, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு வீடே கட்டிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையிலே உள்ள இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை, FMB என்கின்ற ஒரு விஷயம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பிச்சாண்டி, அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. மா. சுப்பிரமணியன்: FMB என்றால் Field Measurement Book. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பிச்சாண்டி, நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடன் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன்: அந்த Field Measurement Book ஒரு ரகசிய ஆவணமாகவே தற்போது வட்டாட்சியர் அலுவலகங்களிலே பாதுகாக்கப்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு. மா. சுப்பிரமணியன்: பொது மக்களுக்குத் தேவையான ஒன்று என்பது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பிச்சாண்டி, அவர் பேசும்போது உங்களுக்கு எப்படி point of order தர முடியும்?

திரு. மா. சுப்பிரமணியன்: Field Measurement Book என்று சொல்லக்கூடிய. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) அவர் அமைதியானவர் என்பது எங்களுக்குத் தெரியாதா?

பிற்பகல் 1–10

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கலைஞர் ஆட்சிக் காலத்திலே நிறைய ஏரிகள், குட்டைகளை எல்லாம் நீங்கள் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டீர்கள் என்று சொன்னார்கள். கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான் ஒவ்வொரு வீட்டிற்கும் பட்டா கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: ஆனால், இப்போது பார்த்தீர்களென்றால், கொள்கை விளக்கக் குறிப்பில், 23 இலட்சம் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் புதிதாகப் பட்டாக்கள் தரவில்லை. ஏற்கெனவே பட்டா வாங்கி, விற்று பெயர் மாற்றினால் நீங்கள் அதையும் இந்த புதிய பட்டா list–ல் சேர்த்துக்கொள்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *எங்கேயுமே பட்டா வழங்குவதில்லை.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஏற்கெனவே வாங்கிய நிலத்தை வேறொருவருக்கு விற்ற நிலங்களுக்குப் பட்டா மாற்றியதைத்தான் 23 இலட்சம் என்று போட்டிருக்கிறீர்களே தவிர, 23 இலட்சம். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைக் கொறடா அவர்கள் நான் சொல்லாததை இங்கே சொன்னதாகச் சொன்னார். நான்* classification*–ஐத்தான் வாசித்தேன். இவ்வளவு* classification *என்றால் ஒரு சாமானியரால் கண்டுபிடித்துப் போய், அவரால் வீடு கட்ட முடியாததைத்தான் நான் சொன்னேன். அதற்குள்ளே நான் போகவில்லை. சொல்லாததைச் சொல்லி நீங்கள் எந்த பதிலும் சொல்ல வேண்டாம். இப்போதும் சொல்கிறேன், எப்போதும் சொல்கிறேன். பட்டா கொடுத்து, ஏழையெளியவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்து, இந்தத் தாய் மண்ணிலே அவர்களுக்குச் சொந்தமாக இடம் கொடுத்த ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதையும்,* (மேசையைத் தட்டும் ஒலி) *அதைச் செயல்படுத்தி வருபவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஏரிகளிலெல்லாம் பட்டா கொடுத்தீர்கள் என்று சொன்னார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, திருவள்ளூர் மாவட்டத்தில், திருநின்றவூரிலே ஏரியில் பட்டா கொடுத்து வீடு கட்டியிருக்கிறார்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *நீங்கள் இல்லையென்று சொல்கிறீர்களே; ஏரிகளிலெல்லாம் பட்டா கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்களே!* (குறுக்கீடுகள்) *ஏரிப் பகுதிகளிலும் பட்டா கொடுத்து, அதுவும் பெரிய பிரச்சினை ஆகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *கடந்த காலங்களில் பார்த்தீர்களென்றால், கன மழை பொழிந்தது. அப்போது அங்கு வெள்ளம் வந்து, அந்த ஏரி முழுவதும் நிரம்பி, அங்கு வீடு கட்டியவர்கள் எல்லோரும் வீட்டுக்குள் போக முடியவில்லை. ஒரு பக்கம் விவசாயிகள் எல்லோரும் தண்ணீர் திறந்து விட வேண்டாம் என்கிறார்கள். மற்றொரு பக்கம் அங்கு குடியிருப்பவர்கள் எல்லோரும், தண்ணீர் குறைந்தால்தான் நாங்கள் வீட்டுக்குள் போக முடியும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை எல்லாம் இருந்தது. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே திருவள்ளூர் மாவட்டத்தில், திருநின்றவூரில் ஏரியிலும் பட்டா கொடுத்திருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. மா. சுப்பிரமணியன், பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அண்ணே, உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. பிச்சாண்டி, உங்களுக்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் பேசுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏரி பட்டா பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால், நான் இப்போது மிக முக்கியமான பிரச்சினையைச் சொல்வதற்காக இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். சோழிங்கநல்லூரில் தாமரைக்கேணி ஏரி என்ற ஒரு ஏரி இருக்கின்றது. அந்த ஏரியும், போரூர் ஏரியும் சென்னைக்கான நீராதாரங்கள். இந்த தாமரைக்கேணி ஏரியைத் தனியார் தொண்டு நிறுவனங்கள்,* N.G.Os. *மிகச் சிறப்பாக பராமரித்துக்கொண்டு வருகிறார்கள். திடீரென்று கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் அந்த ஏரியில் 50 சென்ட் பரப்பளவுள்ள நிலத்தினை வகை மாற்றம் செய்து, காவல் நிலையம் கட்டுவதற்கு இன்றைக்கு அனுமதித்திருக்கிறார்கள். அந்த* N.G.Os. *போட்ட* fencing–*ஐ*

உடைத்து, தண்ணீர் நிற்கிற இடத்தில் மண்ணைக் கொட்டி நிரப்பி, இன்றைக்கு 50 சென்ட் பரப்பளவில் Police Station கட்டுகிறார்கள். அரசே நீர்நிலையை ஆக்கிரமிக்கலாமா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இது ஒன்று, (குறுக்கீடு) இன்னும் ஒன்று. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த காலத்தில் நீர்நிலைகளை தனியார்கள் தங்கள் சுயநலத்திற்காக ஆக்கிரமித்திருந்த நிலையைத் தெரிவித்து, அதன் காரணமாக மக்கள் நலன் எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதைத்தான் சுட்டிக்காட்டினார். (குறுக்கீடு) நேரில் போய் அவர்கள் பார்த்தார்கள். வெள்ளம் வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் அந்தப் பகுதியிலே வெள்ளத் தடுப்புப் பணிக்காகச் சென்றிருந்தார். அப்போது அந்தப் பகுதி மக்களெல்லாம் மாண்புமிகு முதலமைச்சரிடம் இந்தக் குறையைச் சுட்டிக்காட்டினார்கள். நான் அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. One time Special Scheme இருக்கிறதே. அந்த வரலாற்றைத் தொட்டோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; Shock அடிக்கும். 10 வருடங்கள் இருந்தது; 5 வருடங்கள் இருந்தது; 3 வருடங்கள் இருந்தது; இதையெல்லாம் யார் செய்தது? எப்படி செய்தார்கள் என்பது குறித்து இந்த அவையிலே ஏற்கெனவே நீண்ட விவாதம் செய்து, அதற்கான பதிலும் பெறப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து சரியாக 49 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்று போரூர் ஏரி. போரூர் ஏரி சென்னைக்கான குடிநீர் ஆதாரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேச ஆரம்பித்து 49 நிமிடங்கள் ஆகிவிட்டன. இரண்டொரு நிமிடங்களில் உங்கள் உரையை முடியுங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேசவேண்டும்.

திரு. மா. சுப்பிரமணியன்: *நான் 15 நிமிடங்கள்கூட பேசவில்லை.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அப்படியில்லை, நீங்கள் பேச ஆரம்பித்து 49 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. மா. சுப்பிரமணியன்: *போரூர் ஏரி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது என்று ஒரு பெயர்ப் பலகை உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இன்னும் 3 நிமிடங்களில் உங்கள் உரையை முடியுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *இன்னும் நான் பேரிடர் மேலாண்மை குறித்தே பேசவில்லை. அது முக்கியமான துறை.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அது உங்கள் பொறுப்பு. நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *அது உங்களுக்கும், எங்களுக்கும் எல்லோருக்குமானதுதான். அதைப் பேசியே தீர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் பேசியதற்குப் பிறகு இன்னும் 5 உறுப்பினர்கள் பேசி, அமைச்சர் பதிலுரையாற்ற வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் 15 நிமிடங்கள் பேசியிருந்தால்கூட போதும். ஆளுங்கட்சியிலேயே ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்கள், 15 நிமிடங்கள்தான் பேசுகிறார்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *இதையெல்லாம் நீங்கள் அமைச்சருக்கும் சொல்லியிருக்க வேண்டும். அமைச்சருக்கும் சொல்லி, அவருக்கான நேரத்தையும் கணக்கில் கொள்ளவேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் கேட்கிற கேள்விகளுக்குத்தான் அவர்கள் பதில் சொல்கிறார்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *போரூர் ஏரியைப் பொறுத்தவரைக்கும், நீராதாரமாக அதைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். காரணம், பாதி ஏரி எங்களுக்குச் சொந்தம் என்று ஒரு தனியார்* board *வைத்திருந்தார்கள். அது சொந்தமா, இல்லையா என்ற* litigation issue–*க்கு நான் செல்லவில்லை. இப்போது வருவாய்த் துறை*

என்ன செய்ய வேண்டுமென்றால், அந்தத் தனியாரை அழைத்து, அவர்களுக்கு compensation கொடுங்கள்; இல்லையென்றால், மாற்று இடம் கொடுங்கள். அப்படிக் கொடுத்துவிட்டு போரூர் ஏரியை, சென்னைக்கான குடிநீர் ஆதாரமாகவே பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரை advance ஆக முடியுங்கள் என்று சொன்னதால்தான், காலையிலும், மாலையிலும் சேர்த்து வைத்து, 20 ஆம் தேதிக்குள் முடிக்கவுள்ளோம். இப்போது பாருங்கள்; மணி 1–15 ஆகிவிட்டது. 2 மணிக்குள் அவையை முடித்துவிட்டு, மீண்டும் 4–30 மணிக்கு ஆரம்பிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசிய பேச்சுகள் அனைத்தும் 2006–2011–ல் இங்கு பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டு, உரிய பதிலளிக்கப்பட்ட பழைய நிகழ்வுகள். திரும்பத் திரும்ப அவர் அதையே இங்கு பேசிக் கொண்டிருந்தால், திரும்பத் திரும்ப அதே பதில்கள்தான் இங்கு வந்து சேரும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அவரை தயவு செய்து அடுத்த சப்ஜெக்ட்டிற்கு போகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரிடர் மேலாண்மை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தயவு செய்து நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நன்றி சொல்லி உரையை முடிக்கவில்லையென்றால், நான்

அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேசுவதற்கு இன்னும் 3 நிமிடங்கள் கொடுக்கின்றேன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரிடர் மேலாண்மையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மாநில அளவில், மாவட்ட அளவில் என்பது போன்று இருக்கிறது. மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை முனையத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைவராக இருந்து, அந்த ஆணையம் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அந்த பேரிடர் மேலாண்மை செயலாற்றிக் கொண்டிருக்கிறது. எப்பொழுதாவது பேரிடர் வருகின்றபோது மட்டும்தான் அந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதுசம்பந்தமான விழிப்புணர்வாக இருந்தாலும் சரி அல்லது மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற விஷயங்களாக இருந்தாலும் சரி, செயல்திறனாக இருந்தாலும் சரி, அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாங்கள் இங்கு வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால், தொகுதி வாரியாக சட்டமன்ற உறுப்பினர்களின் தலைமையிலேயும் பேரிடர் மேலாண்மை ஆணையம் ஒன்றினை அமைத்திடவேண்டும். அதில் வட்டாட்சியர், மாநகராட்சியின் உதவி ஆணையர் உள்ளிட்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஓர் ஆணையத்தை நிறுவ வேண்டும்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், 2007 ஆம் ஆண்டு தென் கொரியாவில் உள்ள சியோலில் ஒரு மாநாடு நடைபெற்றது. நான் மேயராகப் பொறுப்பேற்றிருந்த அந்த சமயத்தில், இந்தியாவின் பிரதிநிதியாக அந்த மாநாட்டிற்கு கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், அங்கே என்னை அனுப்பிவைத்தார்கள். அந்த மாநாட்டினுடைய நோக்கம் என்னவென்றால், பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் பேரிடர்களிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பது. அந்த மாநாட்டில் பேசப்பட்ட விஷயங்கள் என்னவென்றால், சிறு குழந்தைகளிலிருந்து, பள்ளி மாணவர்களிலிருந்து, தொடக்கக் கல்வி கற்றுக் கொள்பவர்களிலிருந்து பேரிடர் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டுமென்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து அதோடு உரையை முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: *இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பருவநிலை மாற்றங்களினால் தொடர் பேரிடர்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. 2004 ஆம் ஆண்டில் சுனாமி; 2011 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டுக்குள் தானே; 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுக்குள் வர்தா; 2017 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்குள் ஒகி; 2018 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுக்குள் கஜா. இந்த மாதிரி புயல்கள் என்பது பருவ நிலை மாற்றங்களினால். . .* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *சிறிது நேரம் கொடுங்கள். 5 மணித்துளிகள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். சுருக்கமாக பதில் சொல்லுங்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற அந்த அனுபவத்தை இங்கே சொன்னார்கள். பொதுவாக பேரிடர் காலங்களிலே எப்படி அணுக வேண்டுமென்கின்ற ஒரு அணுகுமுறை,* Systematic Approach *என்று சொல்லக்கூடிய அறிவுப்பூர்வமான ஒரு அணுகுமுறை என்பது வருவாய்த் துறையிலே கடந்த காலங்களிலே கிடையாது. ஏனென்றால், அப்பொழுதெல்லாம் எப்பொழுதாவதுதான் வெள்ளம் வரும், எப்பொழுதாவதுதான் வறட்சி வரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைத்தான் நானும் வழிமொழிந்து சொல்கிறேன். ஆனால், பருவநிலை மாற்றத்தின் அடிப்படையில், ஓராண்டு வெள்ளம் வருகிறது; ஓராண்டு வறட்சி ஏற்படுகிறது. ஏனென்றால், பருவநிலை மாற்றம் ஏற்படுவதற்கு வெப்பச் சலனங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நான் அதற்குள் செல்லவில்லை. ஆனால், இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கு, நிலச்சரிவாக இருந்தாலும்; சுனாமியாக இருந்தாலும்; வெள்ளமாக இருந்தாலும்; வறட்சியாக இருந்தாலும்; தீயாக இருந்தாலும்; இயற்கைப் பேரிடர்களை, மனிதர்களால் ஏற்படுகின்ற பேரிடர்களாக இருந்தாலும், அதை எதிர்கொள்வதற்கு*

ஓர் அறிவுப்பூர்வமான அணுகுமுறையை முதன்முதலாக உருவாக்கித் தந்த தலைவி, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லாவற்றையும் தெளிவாகப் படிப்பார். அவர் மாநகராட்சி மேயராக இருந்தவர். புள்ளிவிவரத்தோடு படித்திருக்கிறார். கொள்கை விளக்கக் குறிப்பைத் தெளிவாகப் படித்திருக்கிறார். அவர் கேட்கின்ற கேள்வியிலிருந்தே தெளிவாகப் படித்திருக்கிறார் என்பது தெரிகிறது. ஆனால், என்னவென்றால், சாதகமானவற்றையெல்லாம் அவருக்கு சாதகமாக எடுத்துப் பேசுகிறார். அது மக்களுக்கு சாதகமானது.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் என்று அம்மா அவர்கள் கொடுத்ததைப்போல, பேரிடர் மேலாண்மைக்கு என்றே தொலைநோக்குத் திட்டம் இந்தியாவிலேயே கொடுத்த ஒரே மாநிலம் தமிழ்நாடு; ஒரே முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர் போய், வெளிநாட்டிற்குச் சென்று கற்றுக் கொண்டு வந்ததை இங்கு சொல்கிறார். ஆனால், இங்கே பார்த்ததற்குப் பிறகு, நம்முடைய Dr. சத்தியகோபால், ஐ.ஏ.எஸ். Commissioner of Revenue Administration அவர்களை, "இப்படி ஒரு பேரிடர் மேலாண்மைக்கு, தொலைநோக்குத் திட்டம் தந்திருக்கிறீர்களே, வெளிநாட்டிற்கு வந்து எங்களுக்குப் பாடம் கற்பியுங்கள்" என்று இங்கிருந்து நம்மை அழைக்கின்ற ஒரு நிலையை உருவாக்கிய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில அளவிலே, மாவட்ட அளவிலே யார் தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தாலுகா அளவிலும், வட்டாட்சியர் தலைமையிலும் அது இருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தலைமையிலே தொகுதி வாரியாக ஒரு குழு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியதாக இருக்கும்பட்சத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதுவும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 'மாற்றான் தோட்டத்து

மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆனால், அண்ணா அவர்களின் வழியிலே வந்த நீங்கள், 'உங்கள் மல்லிகைக்கு மட்டுமே மணம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆனால், அண்ணா அவர்களின் வழியில் வந்த நாங்கள், 'எங்கள் மல்லிகைக்கும் மணம் உண்டு; இது மதுரை மல்லிகை, இதற்கும் மணம் இருக்கிறது' (மேசையைத் தட்டும் ஒலி) 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பதை அண்ணா அவர்களின் வழியில் வந்த நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, உங்களை விட்டால் கொடுத்துள்ள வாய்ப்பில் ஒரு நாள் முழுவதும் பேசுவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு மணி நேரமாகப் பேசுகிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர், மணியைப் பாருங்கள். (குறுக்கீடு) இல்லை, நன்றி சொல்வதாக இருந்தால் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள். ஒரு நிமிடம்கூட நீங்கள் வேறு subject–க்குப் போகக் கூடாது.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அவர்கள் பேரிடர் சம்பந்தமான அறிவிப்புகளை இந்த மன்றத்திலே அறிவிக்கிறபோது, கடல் சீற்றம், சுனாமி பேரழிவுகளால் ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தடுக்க கடலோர பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம் என்கிற திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன், இதுதான் நன்றி சொல்வதா?

திரு. மா. சுப்பிரமணியன்: உலக வங்கியின் ஆதரவோடு செயல்படுத்தப்படுமென்று சொன்னார்கள். அந்தத் திட்டம்

இப்போது எந்த நிலையிலே இருக்கிறது? காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநில பேரிடர் மேலாண்மை பயிற்சி நிலையம் ரூ.10 கோடியில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது இப்போது எந்த நிலையிலே இருக்கிறது? அண்ணா பல்கலைக்கழகத்தில் ரூ.20 கோடி கொடுத்து ஆளில்லா வான்வெளி வாகனம் வாங்கப்படுமென்று அறிவித்தார்கள். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு, பின்னர் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மைக் கொடுத்தாகிவிட்டது.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: பேரிடர் மிகவும் முக்கியம். பேரிடர் குறித்து மாணவர்களுக்கெல்லாம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். கொள்கை விளக்கக் குறிப்பை அவரும் முழுமையாகப் படித்திருப்பார்; தெரிந்திருப்பார். ஆனால், அதை மறைத்துவிட்டுச் சொல்கிறார். மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்கும் ஒரு திட்டத்தை கொள்கை விளக்கக் குறிப்பிலே பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலமாக நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலோரப் பேரிடர் குறைப்புத் திட்டம், எந்த நிலையிலே இருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். அது மீன் வளத் துறையினருக்குப் பயிற்சி; பேரிடர் தணிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு என்று 3 வகைகளிலே 3 துறைகளையும் உள்ளடக்கி, உலக வங்கியின் நிதியுதவியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மின்சார வாரியத்திற்குக்கூட,—Asian Development Bank மூலம் நிதி உதவி பெற்று நாகப்பட்டினத்தில் அது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன திட்டங்களை எல்லாம் எங்கள் உயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றுவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் பொதிகை சந்தனமே, தெவிட்டாத தேன் மழையே, அறிவின் ஊற்றே, ஆற்றலின் பிறப்பிடமே, புன்னகையின் பேருருவே, புலவர் பாட்டுக்குப் பொருளாகும் தத்துவமே, புகழின் இமயமே, முதியோரும், இளையோரும் அம்மா என்றே அழைத்திட்ட எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிரிகளை பகைக்காமல், எள்ளி நகைக்காமல், எதிர்ப்புக்கு திகைக்காமல், எதிர்நீச்சல் போடுபவரே; (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியில் திளைக்காமல், வீழ்ச்சியில் திணறாமல், சூழ்ச்சியில் துவளாமல், தொண்டு செய்யும் தூயவரே; நேர்மைக்கு இழுக்கென்றால், நெருப்பைப்போல் கொதிப்பவரே; எதிரி படைகொண்டு வந்தாலும், அப்படையை பக்குவமாய் உடைப்பவரே; தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு ரூபாய் ஆயிரம் அள்ளித் தந்ததினால், தாய்க் குலத்தின் பெருமையைப் பெற்றவரே; (மேசையைத் தட்டும் ஒலி) எவருக்கும் அஞ்சாமல், எவரிடமும் கெஞ்சாமல், இரவு–பகல் துஞ்சாமல், உழைத்துவரும் நல்லவரே; தன்பெருமை முழங்காமல், தன்னிலை இழக்காமல், தமிழ்நாட்டை வாழ்விக்க தத்துவமாய் வந்தவரே; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் அடிச்சுவட்டில் அரசியல் பயின்றவரே; எங்கள் குடும்ப தெய்வமாய் விளங்கும் வெற்றித் திருமகனாம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். அவருக்குத் துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நடுநிலை தவறாமல் சபையை நடத்திவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு தமிழக அரசு கொறடா அவர்களையும் இந்த நேரத்திலே வணங்கி, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த சிதம்பரம்

தொகுதி மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாபாரதக் கதையில் 'வில்லுக்கு விஜயன்' என்று பெயர் பெற்ற அர்ஜுனனை மாவீரனாகப் படிக்கிறோம். காவியத்தில் காட்சிதரும் அர்ஜுனனை நேரில் நாம் பார்த்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் தன் அறிவு சாதுரியத்தால், அரசியல் சாணக்கியத்தால் சகுனிகளின் சதியையும், துரோகிகளின் சூழ்ச்சியையும் மாண்புமிகு அம்மா அவர்களிடம் பாடம் பயின்ற காரணத்தினால், எப்படிப்பட்ட எதிரிகளையும் வீழ்த்தும் வல்லமை படைத்த (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நேரில் பார்க்கின்ற 21 ஆம் நூற்றாண்டின் மாவீரனாக நம்முடைய முதல்வர் அவர்களை நாங்கள் பார்த்து வருகிறோம். முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி மன்னன். (மேசையைத் தட்டும் ஒலி) பாரி மன்னன் செல்கின்றபோது, கொம்பு இல்லாமல் தவித்த முல்லைக் கொடியைப் பார்த்து, முல்லைக் கொடி கொம்பில்லாமல் தவிக்கிறதே என்பதற்காக தனது செங்கோலை ஊன்றி படர்க என்று சொல்லியிருக்கலாம் அல்லது தன்னுடைய போர் வாளை ஊன்றியாவது படர்க என்று சொல்லியிருக்கலாம். அனைத்தையும் விட்டுவிட்டு, கொம்பில்லாமல் தவிக்கின்ற ஒரு முல்லைக் கொடிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய தேரையே கொடுக்கின்றான் என்றால், அப்படி கொடுத்த கொடை வள்ளல் வாழ்ந்த நாடு நம் தமிழ்நாடு என்று இலக்கியங்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட பாரி வள்ளலைபோல், நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் விவசாயிகள், ஏழைகள், தொழிலாளர் தோழர்கள், தமிழகத்தின் தாய்மார்கள், எல்லா வளமும் நலமும் பெற்று தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அன்றாடம் சட்டப் பேரவையில் விதி எண் 110–ன்கீழ் பல்வேறு திட்டங்களை அறிவித்து, இந்த நூற்றாண்டின் ஈடு இணையற்ற கொடை வள்ளலாக விளங்கிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னைத் தமிழகத்தில் ஆண்டிற்கு ஒரு முறை நாம் கொண்டாடி மகிழும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை

முன்னிட்டு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் பொங்கலோ பொங்கல் என்று கொண்டாடி மகிழ, ஆயிரம் ரூபாயை அள்ளிக் கொடுத்த கொடை வள்ளல்தான் நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள், சலவைத் தொழிலாளிகள், சுமை தூக்குவோர், மண்பாண்டம் செய்வோர், ஆதரவற்ற ஏழை, எளியோர்களின் கண்களில் வழிகின்ற கண்ணீரைத் துடைக்கின்ற வகையில், 2,000 ரூபாயை வாரி வழங்கி கொடை வள்ளலாக விளங்குபவர்தான் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயப் பெருங்குடி மக்களின் வேதனையைப் போக்கும் வகையில், குடிமராமத்துத் திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்துகின்ற வகையில், இந்த நிதியாண்டில் ரூ.300 கோடியை, வாரி வழங்கி நீர் நிலைகளையும், ஆறுகளையும், ஏரிகளையும் தூர் வாரி, நீர் மேலாண்மையைப் பாதுகாத்து விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து வருபவர்தான் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள்.

பொதுப் பணித் துறை, பாசனத் துறை, நீர் ஆதாரத் துறை போன்றவற்றை மேம்படுத்துகின்ற வகையில், தமிழகம் முழுவதும் பல்வேறு தடுப்பணைகளைக் கட்டியிருப்பதோடு, புதிதாக நீர் நிலைகளையும், தடுப்பணை, கதவணை போன்றவற்றையும் கட்டுவதற்கான அறிவிப்பினையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15–07–2019 அன்று நடைபெற்ற பொதுப் பணித் துறை, நீர்ப்பாசனத் துறையின் மானியக் கோரிக்கையின்போது வெளியிட்டுள்ளார்கள். எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட குமராட்சி ஒன்றியத்தில், அக்கரை ஜெயங்கொண்டபட்டினம் கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்து, சிதம்பரம் வட்டம், திருக்கழிப்பாலை கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும் பொருட்டு, தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ஆய்வுப் பணிகள் மற்றும் மண் பரிசோதனை போன்ற களப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.1 கோடியை தாயுள்ளத்தோடு அறிவித்த எங்களின் தமிழாய்ந்த தலைமகன், இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர்; பழிவாங்கா பகை, கெடுதல் இழைக்காத கோபம், மதிக்காதவர்களையும் மதிக்கும் குணம், ஏசியவர்களையும் ஏற்கும் குணம்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை என்

தொகுதி மக்களின் சார்பாகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களது சிதம்பரம் தொகுதி மக்களின் 40 ஆண்டுகால கனவுத் திட்டமான திட்டுக்காட்டூர்–பெரம்பாட்டூர் கிராமங்களுக்கிடையே கனிமவள நிதியிலிருந்து உயர்மட்டப் பாலம் அமைத்திட 20 கோடி ரூபாயை வாரி வழங்கிய தமிழகத்தின் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களின் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் மக்கள் தலைவராக வாழ்ந்து மறைந்த சுதந்திரப் போராட்ட வீரரும், முன்னாள் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த பெரியவர் திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் மணிமண்டபம் அமைத்ததற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நாளை மறுநாள் 19–7–2019 அன்று நம்முடைய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப்பேரவை வளாகத்தில் பெரியவர் திரு. எஸ். எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் திறந்து வைப்பதாக அறிவித்ததற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய சிதம்பரம் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக நந்தனார் கல்வி வளர்ச்சிக் கழகத்தைத் தொடங்கி, சமூக மேம்பாட்டிற்காக உழைத்த சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு சிதம்பரத்தில் மணிமண்டபத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரம், உலகப் புகழ்பெற்ற சைவத் திருத்தலமான அருள்மிகு நடராஜர் ஆலயத்தையும், அறிவு மணம் பரப்பும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தையும், அருகே இயற்கை எழில் கொஞ்சும் பிச்சாவரம் சுற்றுலாத் தலத்தையும் கொண்டது. பழம் பெருமைவாய்ந்த சிதம்பரம் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள

பொது மக்களுக்கு அரசின் சேவை மிக விரைவாகக் கிடைத்திட 9 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட கடலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, சிதம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் மாவட்டம் ஒன்றினை அமைத்துத்தர வேண்டுமாய் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் பயின்றவர்: பயிற்சி மருத்துவராகவும் பயிற்சி எடுத்தவர். நான் 1998 ஆம் ஆண்டு கடலூர் மேற்கு மாவட்ட கழகத்தின் பொருளாளராகப் பணியாற்றியபோது, அவர் மாவட்ட மாணவர் அணி செயலாளராக எங்களோடு இணைந்து பணியாற்றியிருக்கிறார். சிதம்பரத்தில் அருளாட்சி செய்துவரும் அருள்மிகு நடராஜர் பெருமானின் திருவருளால், இளம் வயதிலேயே அவர் சட்டமன்ற உறுப்பினர்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் போன்ற பெருமைமிகு பதவிகளை வகித்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் மானியக் கோரிக்கையில் சிறப்புரையாற்றியபோது, எங்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு MRI Scan, C.T. Scan வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். நான் வைத்த கோரிக்கையை மறுநிமிடமே, “மாண்புமிகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின்படி, உங்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்” என்று உறுதியளித்தார்கள். எங்களுடைய அண்ணாமலை பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு MRI Scan, C.T. Scan போன்றவற்றை உடனடியாக வழங்கியதற்காக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள், விபத்தில் பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்படுவோர், உரிய மருத்துவ உபகரணங்கள், போதிய மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலையில், மேல் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கும் மற்றும் சென்னை அரசு பொது மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். ஏழையெளிய மக்களின் நல்வாழ்விலே

அதிக கவனம் செலுத்தும் அம்மாவின் அரசு, சிதம்பரம் பகுதி மக்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புறத்தில் இருந்துவரும் நோயாளிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, இதய நோயாளிகளுக்கு மாரடைப்பு ஏற்படும்போது செய்ய வேண்டிய ஆஞ்சியோகிராம் சிகிச்சை செய்திட Cath lab ஒன்றும், புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு கதிர்வீச்சின்மூலம் சிகிச்சை அளித்திடும் வகையில், கதிர் இயக்க சிகிச்சைப் பிரிவு (Radiotherapy unit) ஒன்றும், மேலும் நரம்பியல் சிகிச்சை மருத்துவர், இதய சிகிச்சை மருத்துவர் மற்றும் சிறுநீரக சிகிச்சை மருத்துவர் போன்ற மருத்துவர்களை வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையானது தமிழக அரசின் உயர் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அண்ணாமலை பல்கலைக்கழகம் கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தேவையான மருத்துவர்களை நியமிப்பதில் தேவையற்ற சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, இம்மருத்துவமனையின் மேம்பாட்டிற்குக் கூடுதல் நிதி வழங்கியோ அல்லது இம்மருத்துவமனையை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் கொண்டுவந்தோ, இப்பகுதி மக்களின் நலனில் அம்மாவின் அரசு அக்கறை காட்ட வேண்டுமாய் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை பெருக்கம், போக்குவரத்து, பல்வகை தொழில்களின் வளர்ச்சி மற்றும் நுகர்வுப்பொருட்களால் ஏற்பட்டுவரும் மாற்றத்தினாலும், சுற்றுச்சூழல் போன்றவற்றால் ஏற்படும் தீ விபத்து, புயல், வெள்ளம், ஆழிப்பேரலை, நிலச் சரிவுகள் முதலிய இயற்கைச் சீற்றங்களாலும், மக்களின் உயிருக்கும் உடமைக்கும் அழிவு ஏற்பட்டு விடுகின்றது. மக்களும், பலவகை உயிரினங்களும் இன்னல்களில் சிக்கித் தவிக்கும் கொடிய நிகழ்வுகளும் ஏற்பட்டுவிடுகின்றன. இத்தகைய தருணங்களில், மக்களையும், அவர்தம் உடைமைகளையும் காப்பதோடு, பிற உயிரினங்களைப் பாதுகாப்பதிலும், இன்னல்களிலிருந்து மீட்டு உதவுவதிலும் தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அளப்பரிய சிறப்பான பணிகளைச் செய்து வருகின்றது.

பிற்பகல் 1–35

முன்பு ஆட்சி செய்த மன்னர்கள், குறிப்பாக, தென்னிந்தியாவை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்

நில வருவாயை வசூல் செய்திட தங்களுக்கென ஒரு சிறப்பு அமைப்பை உருவாக்கி வைத்திருந்தனர். 1786 ஆம் ஆண்டு வங்காளம் மற்றும் மதராஸ் மாகாணத்தில் முதன்முதலாய் வருவாய் வாரியம் அமைக்கப்பட்டது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது, ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் அரசின் முகமையாகச் செயல்படுகின்றது. இத்துறை மக்களின் அன்றாட வாழ்வில் எல்லா நிலைகளிலும் இரண்டறக் கலந்துள்ளது. இத்துறையானது அரசின் உடைமைகளான நிலம், கனிமம், நீர்நிலைகள் ஆகியவற்றின் பாதுகாவலனாகவும் விளங்கி வருகிறது. விவசாயிகள், மாணவர்கள், வேலைவாய்ப்பற்றவர்கள், சமூகத்தில் பின்தங்கியவர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் பயன்பெறும் வகையில் பல்வேறுவிதமான சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

பொது மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கான சாதி, பிறப்பு–இறப்பு, வாரிசு மற்றும் வருமானச் சான்றிதழ்களையும், பட்டா, பட்டா மாறுதல் சேவை போன்றவற்றையும் வழங்கி வருவதோடு, தேசிய மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையங்கள் நடத்தும் தேர்தல்களிலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முக்கியப் பங்காற்றி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் மட்டும் 1.93 இலட்சம் தகுதி உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

அரசின் பல்வேறு சமூக நலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் நம்முடைய வருவாய்த் துறையின்கீழ், மொத்தம் 32 வருவாய் மாவட்டங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலும், 87 வருவாய்க் கோட்டங்கள், சார்-ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் தலைமையிலும், 305 வருவாய் வட்ட நிருவாகம், வட்டாட்சியர்கள் தலைமையிலும், 1,190 குறு வட்ட நிருவாகம் வருவாய் ஆய்வாளர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழகத்தில் 16,688 கிராம நிருவாக அலுவலகங்கள், கிராம நிருவாக அலுவலர்கள் தலைமையிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இத்துறையில் 52,074 பணியாளர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றி வருகின்றார்கள்.

'சிரிக்கும் ஏழை முகம் காணவேண்டும். அவர் சிந்தும் கண்ணீர் நிலை மாற வேண்டும்' என்ற இலட்சிய முழக்கத்தோடு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தேசிய அளவில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், 50 வயதிற்கும் மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் மற்றும் ஆதரவற்ற ஏழைகள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2018–2019 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்காக ரூ.4,029.78 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 29.20 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். ஓய்வூதியதாரர்களுக்கு அரிசி வழங்கும் திட்டம், நலிந்தோர் நிவாரணத் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அறிவுலக மேதை, அரசியல் விடிவெள்ளி, காஞ்சித் தலைவன், பேரறிஞர் அண்ணா அவர்கள் 'மக்களிடம் செல்; மக்களோடு வாழ்; மக்களிடம் கற்றுக்கொள்; மக்களுக்காகத் திட்டமிடு; மக்களிடமிருந்து உன் பணியைத் தொடங்கு' என்று கூறுவார். அதனை மெய்ப்பிக்கும் வகையில், "மக்களை நோக்கி அரசு" என்ற முழக்கத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 24–2–2013 அன்று 'அம்மா திட்டம்' என்ற அருமையான திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும் உன்னதமான திட்டமாக அம்மா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா திட்டம்மூலம் மக்கள் பயன்பெறும் வகையில் கண் பரிசோதனை முகாம், பல் மருத்துவம், கால்நடை மருத்துவ முகாம்கள், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளைச் சேர்த்தல், ஆதார் பதிவுகள் மற்றும் தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அம்மா திட்ட முகாம்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற பாரதியாரின் கவிதை வரிகளுக்கு ஏற்ப, விவசாயிகளின் விடிவெள்ளியாக விளங்கிய

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிமுகப்படுத்திய, செயல்படுத்திய, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம்தான் ‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்’. கருவறை முதல் கல்லறைவரை உழவர் பெருமக்கள் பயன்பெறும் மகத்தான பல்வேறு நலத் திட்டங்கள் இதன்மூலம் செயல்படுத்தப்படுகின்றன. 2017–2018 ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு, விபத்து நிவாரணம் போன்றவற்றிற்காக ரூ.250.87 கோடி நிதி உதவி வழங்கப்பட்டு, சுமார் 3,70,591 பேர் பயனடைந்துள்ளனர்.

மக்களுக்கு அரசின் சேவை உடனடியாகக் கிடைத்திடும் வகையில், 2011 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 85 புதிய வருவாய் வட்டங்களையும், 11 புதிய வருவாய்க் கோட்டங்களையும் உருவாக்கியுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் மட்டும் 14 வருவாய் வட்டங்களை நமது அம்மாவின் அரசு உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு சமீப காலமாக பல்வேறு இயற்கைப் பேரிடர்களைச் சந்தித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு, ஆழிப் பேரலை, 2011 ஆம் ஆண்டில் ‘தானே’ புயல், 2016 ஆம் ஆண்டில் ‘வர்தா’ புயல், 2017 ஆம் ஆண்டில் ‘ஒகி’ புயல் போன்றவற்றால் தமிழகம் பெருமளவு பாதிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் தமிழகம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் நிலவிய கடுமையான வறட்சி மற்றும் 2018 ஆம் ஆண்டு கஜா புயல் போன்ற பேரிடர்களின்போது பேரிடர் மேலாண்மைத் துறை சிறப்பான முறையில் செயல்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மதிப்பிற்குரிய அண்ணன் மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களும் நல்லமுறையில் பணியாற்றினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை; தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 9–1–2014 அன்று உருவாக்கப்பட்டு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கிவருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம்–தேசிய தொலை உணர்வு மையம், மாநில

நீர்வளம், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி, குடிமைப் பொருட்கள் வழங்கல் மற்றும் மின்சார வாரியம் ஆகிய துறைகளிலிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், வறட்சியினை ஏற்படுத்தும் காரணிகளை, அறிவியல்ரீதியாக மதிப்பீடு செய்வதை உறுதி செய்யும்வகையில், மாநில வறட்சிக் கண்காணிப்பு மையம் 18–1–2018 முதல் செயல்பட்டு வருகின்றது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வழங்கும் திட்டங்களுக்காக ரூபாய் 3,958/– கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூ.169.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், இந்த ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு ரூ.6,106.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை பெரிதும் வரவேற்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள கிராமப்புறச் சாலைகள் எல்லாம் தார்ச் சாலைகளாக பொலிவுடன் காணப்படுகின்றன. இதற்குக் காரணம், கேட்காமல் கொடுப்பவரும், கேட்டுக் கொடுப்பவருமான என்னுடைய வணக்கத்திற்குரிய அருமை அண்ணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்தான். அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது சிதம்பரம் தொகுதியில் உள்ள சிதம்பரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, 40 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. இப்பேருந்து நிலையம் மிகவும் பாழடைந்த நிலையில் சிதிலமடைந்துள்ளது. பயணிகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. எனவே, சிதம்பரம் பேருந்து நிலையத்தைப் புதிய பொலிவுடன் அதிநவீன வசதியுடன் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சிதம்பரம் தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, சிதம்பரம் நகரில் மகளிருக்குக்கென்று தனியாக ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள கடற்கரை கிராமமான சாமியார்பேட்டை மீனவ கிராமத்திற்கு மீனவர்களின் நலன் கருதி, மீனவ நண்பனான அம்மாவின் அரசு, தூண்டில் வளைவு ஒன்றினை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்" என்ற பைபிளின் வார்த்தைகளுக்கு ஏற்ப, என்னுடைய தொகுதி மக்களின் நலனுக்காக நான் எடுத்துவைத்த கோரிக்கைளைத் தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து, நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணுக்குத் தெரியாத எதிர்ப்புகளையும், தனது அறிவாயுதத்தால் வீழ்த்தி, ஆட்சிச் சக்கரத்தை சுழற்றிக்கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள். குழந்தைகளுக்குத் தேவையான உணவை தாய் அளிப்பதுபோல், மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பதுபோல், குடும்பத்திற்குத் தேவையானதை குடும்பத் தலைவன் அளிப்பதுபோல், இல்லாதவர்களுக்குத் தேவையானவற்றை அளவறிந்து அளிப்பது, ஆட்சியாளர்களின் கடமை என்ற உணர்வோடு, உன்னதமான திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றிவரும் சாதனைச் செம்மல், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய கரத்தைப் பலப்படுத்துவோம் என்பதனை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக, தாலுகா அலுவலகங்களில் சர்வேயர்கள் குறைவாக இருப்பதால், உடனடியாக சர்வேயர்களை நியமிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் மறைவிற்குப்பிறகு, தத்தளித்த தமிழனத்தை கரை சேர்த்த தோணியாய், (மேசையைத் தட்டும் ஒலி) எளியோரின் வாழ்வில் வசந்தத்தை வீசச் செய்த ஏணியாய், தடைகளைத் தகர்த்தெறிந்து வீரநடை போடும் வெற்றித் திருமகனே! அகிலும்,

தேக்கும், அழியாக் குன்றும், அழகாய் முத்துக் குவியும் கடல்கள், முகிலும், செந்நெல்லும் முழுங்கும் நன்செய் முல்லைக் காடு மணக்கும் செந்தமிழ் நாட்டின் சீரிய முதல்வரே, (மேசையைத் தட்டும் ஒலி) சிங்க நிகர்த் தலைவரே, உங்களை வணங்குகிறேன். இப்படிப்பட்ட சிறப்புமிகு மாமன்றத்தில் பேசுவதற்கு நல்ல வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி; வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. பாண்டியன் அவர்கள், நாங்கள் அனைவரும் சம காலத்தில் பணியாற்றியதை இந்த அவையில் குறிப்பிட்டார். அவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு Cath Lab வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, உடனடியாக இந்த ஆண்டே தரப்படும் என்ற நல்ல செய்தியை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மட்டும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடன் அதுகுறித்து கலந்து பேசிய பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே, நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் மற்றும் துறை சார்ந்த அமைச்சர், அருமை அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், மக்கள் மனங்களை வென்று, மாபெரும் தலைவராக வளர்ந்திருக்கக்கூடிய, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் பாராளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் ஏணி சின்னத்தில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய எங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நவாஸ்கனி அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.*

குறிப்பாக, இந்த மானியக் கோரிக்கையில் பேசக்கூடிய இந்தத் தருணத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பாகவே கருதிக் கொண்டிருக்கிறேன். கடையநல்லூர் தாலுகா அலுவலகத்தை நகர எல்லையிலேயே அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் மூன்று ஆண்டு காலமாக, தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்தமைக்காக மீண்டும் என்னுடைய நன்றியை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பல்வேறு விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றி இங்கே பல அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. தொகுதி மக்களைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையிலே, கிராமங்களுக்குச் செல்லும்போது, வயதானவர்கள், இந்தத் திட்டத்தில் ஓய்வூதியத்தைப் பெற்றுத் தாருங்கள் என்று எங்களிடம்

கோரிக்கை வைக்கின்றார்கள். எனவே, முதியோர்கள் எளிதாகப் பெறக்கூடியவகையில், இந்த அரசு ஓய்வூதியத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாற்றுத் திறனாளிகளின் செயல்பாடுகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று சக்கர மோட்டார் வாகனங்களை வழங்கக்கூடிய நிலையிலே, அங்கே இரண்டு, மூன்று ஆய்வுகளைச் செய்கிறார்கள். 80 சதவிகிதம் ஊனமுற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதிலேயும், மற்ற நடைமுறைகளிலேயும் சில சிரமங்கள் இருப்பதாக அறிகின்றேன். அதையும் நீங்கள் எளிமைப்படுத்த வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே, நீலகிரி மாவட்டம், கூடலூர் ஜென்ம நிலங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டு, ஆக்கிரமிப்புகளை முடிவு செய்வது குறித்துப் பரிசீலிப்பதாகவும், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அடங்கிய குழு அமைக்கப்பட்டு, மறுபடியும் அந்தக் காரியங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனக்கு அந்தப் பகுதிக்கு அடிக்கடி செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது. அங்கே இருக்கக்கூடிய GTMO அனாதை இல்லத்திற்குச் செல்வேன். அந்தப் பகுதியில் உள்ள மக்களெல்லாம் இதற்கு ஒரு நல்ல தீர்வைக் காணச் சொல்வார்கள். எனவே, அந்த பொது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கக்கூடிய வகையில், நீலகிரி மாவட்டம், கூடலூர் ஜென்ம எஸ்டேட் பிரச்சினையை இந்த அரசு சுமுகமான முறையிலே முடிப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுகின்றேன்.

அதேபோல, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை குறித்து ஒருசில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். குற்றாலம் season தாமதமாகிக் கொண்டே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, விரைவாக தென்காசி மாவட்டத்தை அறிவிக்க வேண்டும் என்பதற்காகவே, இந்த தென்காசி மாவட்ட தனி அறிவிப்புக்கு குற்றால season–க்காக காத்திருப்பதைப் போன்ற உணர்வுதான் எங்களுக்கு இருக்கின்றது. எனவே, நாளையோ, நாளை மறுதினமோ, அறிவிக்கக்கூடிய செய்தியும், அங்குமிங்குமாகச்

சொல்லப்படுகின்றது. எனவே, தயவுகூர்ந்து, பெரிய மாவட்டமாக இருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து, தென்காசி தனி மாவட்டத்தை விரைவாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–50

எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட செங்கோட்டை ஒரு பழமையான ஊர். முன்பு கேரளாவுடன் இணைந்த பகுதி. அங்கே இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகம், புதிய பொலிவோடு விளங்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டு, அதற்குண்டான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்குள்ள பழமையான அனைத்துக் கட்டடங்களும், புதுப்பொலிவோடு திகழ்வதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென அன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். கடையநல்லூர் தாலுகா அலுவலகம் அமைந்தபின், ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திற்கும் Treasury, கருவூலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டபோது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம் அமைந்தபின் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதையும் நீங்கள் அமைத்துத் தர வேண்டும். தாலுகா அலுவலகத்திற்குண்டான அடிக்கல் நாட்டுவிழாவையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அறிவிப்புகள் இங்கே செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட மக்களினுடைய தலைவராக விளங்கிய திரு. இராமசாமி படையாட்சியார் அவர்களது நினைவைப் போற்றக்கூடிய வகையிலே, அவரின் சிறப்பைப் போற்றக்கூடிய வகையிலே, இந்த அவையிலே அவருடைய படத்தைத் திறக்கக்கூடிய நிகழ்ச்சி நாளை மறுதினம் நடக்க இருக்கின்றது. அதற்காகவும் இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அறிவிப்பில், எனது தொகுதிக்குட்பட்ட ஊர்மேல்அழகியான் கிராமம், வண்ணான்குளம் வடக்கு கால்வாயிலிருந்து கருங்குளத்திற்கு புதிய கால்வாய் அமைப்பதற்கு பொதுப் பணித் துறையின் சார்பாக ரூ.2 கோடி ரூபாய் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய மனமார்ந்த

நன்றியினை இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சார்ந்த சில முக்கியமான பிரச்சினைகளை உங்களிடத்திலே சொல்வது என்னுடைய கடமையாகும். பொது கட்டட விதி 2019–ல் கூறப்பட்டுள்ளபடி, FSI-2, குறியீடு–2 கடந்த பிப்ரவரி 2019–ல் உயர்த்தப்பட்டது. ஆனால், அதிகாரம், power delegation இன்னும் சரியாகப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. அதாவது FSI-2–க்கு plan CMDA அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறதா? அல்லது சென்னை பெருநகர மாநகராட்சிக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றதா என்பதைத் தெளிவாகக் கூறவில்லை. ஆகையால், plan எங்கே சமர்ப்பிப்பது என்று தெரியாமல் பொது மக்கள், பொறியாளர்கள் சற்று குழம்பியிருக்கின்றார்கள். இதையும் தெளிவுபடுத்த வேண்டுமென்றும் இந்த நல்ல நேரத்திலே இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

Atal-நகராட்சி மற்றும் புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்களைக் கொண்ட அந்த ஊர்களுக்கெல்லாம் தேவையான உட்கட்டமைப்புப் புனரமைப்புகளைச் செய்யவேண்டுமென்று அதிலே கூறப்பட்டிருக்கின்றது. எனவே, கடையநல்லூர் நகராட்சியைப் பொறுத்தவரை, 1 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பகுதி. திருநெல்வேலி மாவட்டத்திலேயே, மாநகராட்சிக்கு அடுத்தபடியாக பெரிய ஊராக இருப்பதால், இந்த Atal-நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான அந்தத் திட்டத்தை கடையநல்லூர் நகராட்சியிலேயே செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, கடையநல்லூரில் பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, ஒன்பது வருடங்கள் ஆகின்றன. இதுவரை அந்தத் திட்டம் அங்கே செயல்படுத்தப்படவில்லை. எனவே, தயவுகூர்ந்து கடையநல்லூர் நகராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்திட வேண்டுகிறேன். அங்கே கழிவு நீர் குடிநீரோடு கலக்கக்கூடிய ஓர் அபாயம் இருக்கின்றது. அதையும் தடுத்திடவேண்டுமென்றும், குளங்கள் எல்லாம் தூர் வாரப்படவேண்டும் என்றும் இந்த மாமன்றத்திலே என்னுடைய கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு வருடத்திற்கு முன்பாக அறிவிக்கப்பட்டும் கடையநல்லூரிலே பல்வேறு குடியிருப்புகளுக்கு குடிநீர்

இணைப்புகள் வழங்கப்படவில்லை. அந்தக் குறைபாட்டைப் போக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, நம்முடைய மாவட்டத்தின் அமைச்சர், மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஆறாயிரம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அந்தப் பணி இன்னும் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை; அதையும் நிறைவாகச் செய்துதரவேண்டும். என்னுடைய தொகுதியிலே புளியரைதான் கேரளாவிற்குச் செல்லக்கூடிய border-லேயே இருக்கின்றது. அங்கே இருக்கக்கூடிய check posts ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக இருப்பதன் காரணமாக பல்வேறு சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே, காவல் துறை, வருவாய்த் துறை, வணிக வரித் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, integrated check post ஒன்றை வைத்தால், பல்வேறு வகைகளிலும் சிறப்பாகக் கண்காணிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால், கேரள மாநிலத்திலிருந்து மனிதக் கழிவுகளையும், மருத்துவக் கழிவுகளையும் அடிக்கடி என்னுடைய தொகுதிக்குள் எடுத்து வருவதன் காரணமாக, சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. மேலும், வைக்கோல் ஏற்றிச் செல்லும் லாரிகள் எல்லாம் அங்கே மறிக்கப்படுகின்றன. அங்கும், இங்குமாக இந்த மூன்று துறைகளும் இருப்பதன் காரணமாக, புளியரையில் integrated check post அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–55

அடுத்து, சுகாதாரத் துறை சம்பந்தமாக பல்வேறு அறிவிப்புகள் நேற்றையதினம் அறிவிக்கப்பட்டன. அதில், எனது கடையநல்லூர் தொகுதியைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. கடையநல்லூர் மருத்துவமனையில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாங்கப்பட்ட இரண்டு dialysis machines இருக்கின்றன. ஆனால், அங்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால், அந்த machines செயல்பாட்டிற்குரியதாக இல்லை. அங்குள்ள நகராட்சி நிருவாகத்திடம் கேட்டால், நாங்கள் தண்ணீரை முழுமையாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். மருத்துவமனையில் கேட்டால் தண்ணீர் வரவில்லை என்கிறார்கள். ஏற்கெனவே இரண்டு kidney dialysis machines கொடுத்திருக்கிறோம். சென்ற வருடமும் இரண்டு machines ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2+2=4. அரசு திட்டத்தில் ஒரு machine கேட்கப்பட்டுள்ளது. மேலும், 5 machines–ஐ வைப்பதற்கு இடம் பற்றாக்குறையாக

உள்ளது. இதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியைக் கொடுத்திருக்கிறேன். ஏற்கெனவே dialysis machines இருப்பதினால், கிராம மக்கள் அந்த வசதிகளைப் பெற்று, மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். தற்போது அந்த machines செயல்பாட்டில் இல்லை; மேலும், இன்னும் இரண்டு machines வரவேண்டியிருக்கிறது. கடையநல்லூரில் 1,20,000 மக்கள் வசித்து வருகிறார்கள். கடையநல்லூரைச் சுற்றி சுமார் 40 கிராமங்கள் உள்ளன. எனவே, மக்கள் பயன்பெறும் வகையில், கடையநல்லூரில் உள்ள மருத்துவமனையில் dialysis machines முழு வீச்சில் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, செங்கோட்டை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு சரியாகச் செயல்படவில்லை. அதிகளவில் accident நடக்கக்கூடிய பகுதியாக அது இருக்கின்றது. எனவே, செங்கோட்டை மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவு முழுமையாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போதை அடிமைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. பாராளுமன்றம் நடந்து கொண்டிருக்கின்றது. அங்கே Central Minister for Social Justice and Empowerment அமைச்சர் திரு. தாவர் சந்த் கெலாட் அவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கின்றார்கள். இந்தியாவில் 16 கோடி பேர் போதைக்கு அடிமையாகி இருக்கின்றார்கள். அதில் மதுவிற்கு அடிமையானவர்கள் 5.7 கோடி பேர்; 72 இலட்சம் பேர்கள் கன்னாபீசு—போதைக்கு அடிமையாகி இருக்கின்றார்கள். கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற நம்முடைய இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், இதுபோன்று போதைக்கு அடிமையாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த அபாயத்திலிருந்து, மாணவர்களை, இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை நம்முடைய அரசிற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், குறுக்கீடுகள் இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டு, அவையை முடிக்க எனக்கு ஒத்துழைப்பைத் தாருங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: அதேபோன்று கடையநல்லூர் நகரத்தில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட உறுப்புக் கல்லூரி, அரசுக் கல்லூரியாகச் செயல்பட விதி 110–ன்கீழ் கடந்த வருடம் அறிவிக்கப்பட்டது. அது முழுமையாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உதவி செய்ய வேண்டும். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய அந்தக் கல்லூரியில் infrastructure facilities இல்லை. ஒதுக்குப்புறத்தில் அந்தக் கல்லூரி இருப்பதனால், சுற்றுச்சுவர் இல்லை; தண்ணீர் இல்லை. பிள்ளைகள் உட்காருவதற்கு table போன்ற வசதிகள் இல்லை. எனவே, paver block கல் போட்டுத் தர வேண்டும் என்று சொல்கிறார்கள். இரண்டு அறைகளைக் கட்டுவதற்கு ஏற்கெனவே என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறேன். மேலும், மற்ற infrastructure வசதிகளை கடையநல்லூர் கல்லூரியில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, திரிகூடபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரிடம் சொல்லியிருந்தேன். அதுகுறித்து மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடையநல்லூர் பகுதியில் இருக்கக்கூடிய திருநெல்வேலி–தென்காசி நெடுஞ்சாலையை மேம்படுத்திடும் பணிக்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டு, நிலங்கள் எடுக்கப்பட்டு, மரங்களை எல்லாம் அப்புறப்படுத்திய பின்புகூட, இன்றுவரை அந்தப் பணியில் தொய்வு நிலை ஏற்பட்டிருக்கிறது. Contract எடுத்தவர் அந்தப் பணியை சரியாகச் செய்யாததால், அந்தப் பணி நின்றிருக்கிறது. அதையும் விரைவாகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுந்தரேசபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலே infrastructure facilities சரியில்லை என்று ஏற்கெனவே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் சொல்லியிருந்தேன். அங்கு மழை பெய்தால், பள்ளிக்குள் மழைநீர் ஒழுகுகின்றது. எனவே, சுந்தரேசபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய சொந்த ஊர் காயல்பட்டினம். Bus route–ல் காயல்பட்டினம் இருக்கிறது. ஆனால், அங்கு பேருந்து நிற்காமல் செல்வதை நிவர்த்தி செய்திட வேண்டுகிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களுடைய உரை நிறைவு பெற்றது. இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேச வேண்டிய மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரையும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் இன்று மாலை தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை 2–00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் பிற்பகல் 4–30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41– வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை } –தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு } –தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து அவர்கள்.

***திரு. கோ. சம்பத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது கன்னிப் பேச்சினைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பகுத்தறிவாளர், தந்தை பெரியார் அவர்கள் மூடநம்பிக்கையில் வீழ்ந்து கிடந்த நம் சமுதாய மக்களை சிந்திக்க வைத்தார்; தமிழ்ச் சமுதாயத்தில் சீர்திருத்தம் பல செய்தார்; தன்னை மகான் என்று நினைத்து காலில் விழுந்த மக்களை, தான் வெறும் மனிதன் என்று

உணர்த்தினார்; தமிழுக்காகப் போராடினார். குலக் கல்வியை எதிர்த்தவர் தந்தை பெரியார். அவரது வழியில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற கோட்பாட்டையும், "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று எண்ணுகின்ற தாரக மந்திரத்தையும், தன் தம்பிகளுக்கும், தமிழக மக்களுக்கும் கற்றுத் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓர் அரசு, மக்கள் அரசாகவும், மக்கள் போற்றும் அரசாகவும் இருக்கவேண்டும் என்று நினைத்து செயல்பட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அரசு பல திட்டங்களைத் தீட்டிட வேண்டும் என்று சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். எஜமான்கள், நாட்டை ஆள்வதைவிட சாமானியர்கள் அரசை ஆள்பவர்களாக இருக்க வேண்டும் என்று நினைத்து செயல்பட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் திராவிடம் தழைக்க வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்; குடும்ப ஆட்சி முறையை எதிர்த்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா ஒரு விரல் காட்டி நின்றார், ஏன்? "மனித இனமே, ஒரு வழியில் செல், பல வழியில் செல்லாதே, பல கட்சிகளுக்கு பதவிக்காக, பணத்துக்காக செல்லாதே" என அறிவு புகட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனது ஆட்சிக் காலத்தில் ஒரு ரூபாய்க்கு, இரண்டு படி அரிசி என்னும் புரட்சிகரமான திட்டத்தை ஏழை மக்களுக்குக் கொண்டு வந்து, தமிழகத்தில் புரட்சி செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் வழியில் வந்தவர் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். கொடுத்து கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர். எட்டாவது வள்ளலாக வாழ்ந்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு தந்து சரித்திர நாயகராக, மனிதநேயராக வாழ்ந்தவர். "நடிகன் நாடாள முடியுமா?" என்று எதிரிகள் கேட்ட கேள்விக்கு, 13 ஆண்டுகள் இந்த நாட்டைச் சிறப்புடன் ஆண்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். அதை தன் ஆட்சிக் காலத்தில் செய்து காட்டியவர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். தமிழகத்தில் குடிசைகளுக்கு ஒரு விளக்குத்

திட்டத்தைக் கொண்டு வந்து ஒளி கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 'மாபெரும் சபையில் நடந்தால் மாலைகள் விழ வேண்டும்; மக்கள் உங்களை வாழ்த்தும்படி நடக்க வேண்டும்' என்றும், 'மக்கள் சேவை செய்ய வேண்டும்' என்றும் சொன்னவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர் சாமானியர்களை சட்டமன்ற உறுப்பினர்களாக்கினார்; அமைச்சர்களாக்கி அழகு பார்த்தார். தமிழகத்தில் எதிர்க்கட்சிகளை கோட்டை பக்கம் வராமல், மக்கள் சக்தியால் சரித்திரம் படைத்தவர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–35

அவர் வழியில், 'அமைதி, வளம், வளர்ச்சி', 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை தன் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக்க அயராது உழைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். "எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும். இங்கு இல்லாமை இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்" என்ற நிலையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்தார்கள். புரட்சித் தலைவரைப்போல், சாமானியர்களை ஆட்சி பீடத்தில் அமர வைத்து அழகு பார்த்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்று எதிர்வரிசையில் இருப்பவர்கள்கூட அம்மாவை வணங்காமல், வாழ்த்தாமல் இருந்ததில்லை; அவர்தான் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றும் வாழும் தெய்வமாக தமிழக மக்கள் அனைவரின் மனதிலும் வாழ்ந்து வருகிறார் அம்மா.

அம்மா கொண்டு வந்த தொலைநோக்குத் திட்டங்கள்; பள்ளி மாணவர்கள், மாணவிகள், தங்கள் வாழ்க்கையில் போற்றும் மடிக்கணினி திட்டம் முதல் அனைத்து உபகரணங்களையும் வழங்கிடும் நலத் திட்டங்களையும் வழங்கியதோடு மட்டுமல்லாமல், பசியோடு வாழும் ஏழைகளுக்கு குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கிய மகத்தான மாதரசி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) 60 வயது முதியவர்; ஆதரவற்ற அனாதைகள்; விதவைகள்; மாற்றுத் திறனாளிகள்; நலிந்த விவசாயிகள் சமுதாயம் மதிக்கும்படி செய்து மாதம் ரூ.1,000– உதவித் தொகை வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கூலித் தொழிலாளர்கள், பள்ளி மாணவர்கள், மாணவிகள் உட்பட அனைத்து மக்களின் பசியைப் போக்கிட அம்மா உணவகம்

வழங்கியவர் எங்கள் அம்மா. திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

காவேரி டெல்டா மக்களுக்கு காவேரி ஆணையை அரசிதழில் பெற்றுத்தந்து, தஞ்சை டெல்டா விவசாயிகளின் குறைதீர்த்து மனம் மகிழ்ந்தவர் எங்கள் அம்மா அவர்கள். அனைத்து கர்ப்பிணிப் பெண்களும் பாராட்டும் வகையில், ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் உதவித் தொகை வழங்கியவர் அம்மா அவர்கள். பெண்கள் கமாண்டோ படையை உருவாக்கியவர் அம்மா அவர்கள். ஆண்களுக்குப் பெண்கள் சமம் என்று பாரதி கண்ட கனவை நினைவாக்க, மகாகவி பாரதி கண்ட புரட்சிப் பெண்ணாகத் திகழ்ந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். "ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று தவறு செய்தவர்களை தண்டித்தவர் அம்மா அவர்கள் நாட்டில் வாழும் வீரப்பன் ஆனாலும் சரி, காட்டில் வாழ்ந்த வீரப்பன் ஆனாலும் சரி, தண்டித்த சாதனை தலைவி புரட்சித் தலைவி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் காலத்தில் அரசியலில் அடங்கி, முடங்கிக் கிடந்தோர் இன்றும் எழவில்லை. எப்பொழுதும் எழப்போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மாவின் 37 ஆண்டு கால அரசியலில் 16 ஆண்டு காலம் தமிழகத்தில் தலைசிறந்த முதல்வராக ஆட்சி செய்து, இந்திய துணைக் கண்டத்தின் வழிகாட்டியாக மாண்புமிகு அம்மா அவர்கள் தியாக தீபமாய்த் திகழ்ந்தார்கள். தான் வாழ்ந்த காலத்தில் தன்னுடன் வாழ்ந்த கொள்ளையர்கள், சதிகாரர்கள் கூடாரத்துக்கு ஒரு பதவிகூட வழங்காமல், இந்த நாட்டையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அரண்போல் காத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னிப் பேச்சு, உட்காருங்கள்.

திரு. கோ. சம்பத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அரசின் சேலத்து மாங்கனியாய், ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் தொண்டனாக, எளிமையின் சிகரமாய், பொறுமையின் இருப்பிடமாக, வல்லமை படைத்த தெளிவுரையாளராக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் அண்ணன்

எடப்பாடியார் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என் வெற்றிக்குக் காரணமான சேலத்து கரும்பு, இனிக்கும் மென்மையான மாமனிதர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் பணிவுடன் வணங்குகிறேன். அம்மாவின் அரசுக்கு உறுதுணையாகவும், கழகத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் அமைதியே உருவமான ஞானியாகவும், எங்களுக்கு நல்ல ஆலோசனை வழங்கி, வழி நடத்தும் மாண்புமிகு துணை முதலமைச்சர், அம்மாவின் செல்லப் பிள்ளை, ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களை நன்றியுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நான் ஒரு சிறு விவசாயி. சோளிங்கர் தொகுதியில் வெங்குப்பட்டு என்னும் கிராமத்தில் பிறந்த என்னை, பதவி, பட்டம், பணம் என பலபேர் தொகுதியில் இருந்தாலும், அவர்களெல்லாம் கண்ணுக்கு அகப்படாமல், 1972 முதல் கழகத்தில் பணியாற்றிய அம்மாவின் உண்மைத் தொண்டனான என்னைக் கண்டெடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், என்னை பரிந்துரை செய்து, என் வெற்றிக்காக அல்லும் பகலும் உழைத்த, தான் தேர்தலில் நின்றதுபோல் உழைத்த, அரும்பாடுபட்ட, வேலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சு. ரவி அவர்கள் வெள்ளி நிலவைப்போல குளிர்ச்சியான குணமுடையவர்; தாய்ப் பாசமுடைய அன்புக்குரிய அண்ணன் அவர்களை நன்றியுடன் வணங்குகிறேன்.

பிற்பகல் 4–40

அதேபோல், பாசத் தாயாக என்மேல் எப்போதும் அன்பு காட்டும் எங்கள் மாவட்ட அமைச்சர், கள்ளமில்லா குழந்தை குணமுடையவர், என் வெற்றிக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி, என்னை எதிர்த்த எதிரிகளையும், துரோகிகளையும், இருவரையும் வீழ்த்த நல்ல ஆலோசனைகளை வழங்கி, என்னை வழிநடத்தி வெற்றிபெறச் செய்த மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.சி. வீரமணி அவர்களையும் நன்றியுடன் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"எப்பொழுதும் சோளிங்கர் தொகுதி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை; இங்கு எதிரிகளுக்கோ, துரோகிகளுக்கோ இடமில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனாக அம்மா நம்மைக் காத்து வெற்றிபெறச் செய்வார்கள்" என்று சூளுரைத்து, என் வெற்றிக்கு உழைத்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. எம்.சி. சம்பத் அவர்களையும் வணங்குகிறேன். அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன். எனது வெற்றிக்காக உழைத்த அனைத்து கூட்டணிக் கட்சியினருக்கும், தலைமைக் கழக நிலைய பொறுப்பாளர்களுக்கும், தொண்டர்களுக்கும் வணக்கத்துடன் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வீசும் சூரைக் காற்று, கொந்தளிக்கும் கடல், கொதிக்கும் எரிமலை இவற்றைவிட வேகமானது, வல்லமை படைத்தது *உண்மைக்கு மாறான அறிவிப்பும், *உண்மைக்கு மாறான நடைமுறைச் சொல்லும். அதன்படி நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்ற இடைத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. தமிழகத்தில், தமிழக மக்கள் தேன் அருந்திய ஈக்கள்போல் மயங்கிவிட்டார்கள். இதை நீங்கள் அறிவீர்கள், ஏன் நாடே அறியும். இந்நிலையில்தான் என் வெற்றிக்கு உழைத்த நமது இயக்கத் தோழர்கள், அனைத்து மாவட்டப் பொறுப்பாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், நகர கழகச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் ஊராட்சிக் கழகச் செயல் வீரர்கள் அனைவரையும், எனது வெற்றிக்கு அல்லும், பகலும் உழைத்த அனைவரையும் நான் பணிவுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது ** என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தினீர்கள் அதற்கு மாறாக, 'உண்மைக்கு மாறான' என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. சம்பத்து: சரி. இந்த எளியோனை, அம்மாவின் உண்மைத் தொண்டனை வெற்றி பெற செய்த என் உயிரினும் மேலான எனது சோளிங்கர் தொகுதி மக்களுக்கும், எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும் கோடானுகோடி நன்றியை வணங்கித் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாபாரதத்தில் எதிர் அணியில் இருந்தவர் கர்ணன். தான் இறக்கும்போது பகவான் கிருஷ்ணனிடம் வேண்டுகின்றான், “இறைவா, நான் உனது விஸ்வரூபத்தைக் காண ஆசைப்படுகிறேன்” என்றார். “எனது கடைசி ஆசை இது, நிறைவேற்றிக் கொடு இறைவா” என்று கெஞ்சினான். பகவான் கிருஷ்ணன், தர்மத்தை நிலைநாட்ட, எதிரியாய் இருந்தாலும், தர்மத்தை மீறியவனாக இருந்தாலும், இறைவன் விஸ்வரூபத்தை கர்ணனுக்கு காட்சியளித்ததாக வரலாறு. ஏன் இதை இந்த அவையில் கூறுகிறேன் என்றால், எல்லோருக்கும் இந்த சபையில் நீதி தவறாது தீர்ப்புகள் வழங்கி, நீதிமன்றமே பாராட்டும் வகையிலும், எதிர்க்கட்சிகளும் பாராட்டும் வகையிலும் ஒரு சிறந்த மாமனிதராக நீங்கள் விளங்குகிறீர்கள் என்பதை நான் இந்த அவையில் அறிந்தேன். அதற்காக உங்களையும் நான் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு, நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில் 9 நவரத்தினங்கள், 9 விண்மீன் நட்சத்திரங்கள், அம்மாவின் ஆன்மாவாக, அம்மாவின் அரசுக்குப் பெருமையும், வலிமையும் சேர்ப்பவர்களாக (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் உண்மைத் தொண்டர்களாக நாங்கள் உறுதுணையாக, வலிமை சேர்ப்பவர்களாக என்றும் இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய உங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் பணிவான வணக்கம். வருவாய்த் துறை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஜீவன்; வாழ்க்கையோடு ஒட்டியுள்ள துறை. ஒரு மனிதனின் பிறப்புக்கும், இறப்புக்கும் வருவாய்த் துறைதான் சம்பந்தப்பட்ட துறையாகும். வருவாய்த் துறையில் அம்மாவின் அரசு பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது. கணினிமயமாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு சிட்டா வழங்குதல், ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல், குடும்ப அட்டை வழங்குதல், வாரிசு சான்று வழங்குதல், பல்வேறு விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்குதல், ஏழைகளுக்கு உதவித் தொகை வழங்குதல் போன்று தமிழகத்தில் எல்லோரும் பாராட்டும் வகையில் இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. கிராமங்களில்

இருக்கும் நிருவாக அலுவலர் பணியிடங்கள் ஒருசில இடங்களில் காலியாக உள்ளன. இதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 4–45

நல்ல பேச்சாற்றல், நல்ல நிருவாகத் திறமையுடைய, அம்மாவின் அடக்கமான அன்புத் தம்பியான மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இத்துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளார்கள். அவரை இந்த நேரத்தில் நான் வாழ்த்துகிறேன். தங்கள் நிலங்களை உட்பிரிவு செய்ய மனு செய்யும் விவசாயிகளுக்கு, குறிப்பிட்ட காலத்திற்குள் உட்பிரிவு செய்து தர வேண்டும். அதேபோல், பட்டா மாற்றம், வாரிசு சான்று உள்ளிட்டவற்றை விரைந்து வழங்கிட வருவாய்த் துறை குறிப்பிட்ட காலக்கெடுவினை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் வைக்கின்றேன். நீண்ட நாட்களாகக் குடியிருக்கும் மக்களுக்கு, அவர்கள் வசிக்கும் இடத்தை அளவீடு (survey) செய்து, நில வகைமாற்றம் செய்து, அரசின் ஆணை பெற்று பட்டா வழங்க வேண்டும் என்ற நிலை உள்ளது. அரசு, இந்த விதிகளில் உரிய திருத்தங்களைச் செய்து, வருவாய்த் துறை ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கி, பட்டாக்களை வகைமாற்றம் செய்து விரைந்து வழங்கிட உத்தரவிட வேண்டுமென்ற பணிவான கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கிறேன்.

எனது சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் நகரில் வீடுகட்டி வாழ்ந்துவரும் 135 நபர்களுக்கு பட்டா வழங்க, நில வகைமாற்றத்திற்கான கோப்பு மாவட்ட ஆட்சியரிடம் உள்ளது. இதுகுறித்து, நான் வருவாய்த் துறை ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் நேரில் பேசினேன். நில வகைமாற்றத்திற்கான கோப்பு நிலுவையில் உள்ளது. ஆகவே, இதற்கு முன்னுரிமை வழங்கி, அந்த 135 ஏழைகளுக்கு பட்டா வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் கோருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி.

எங்கள் சோளிங்கர் நகரில் பிரசித்திபெற்ற யோகலஷ்மி நரசிம்மர் சுவாமி மலைக்கோயில் உள்ளது. 1,305 படிகள் கொண்ட இத்திருக்கோயில், 108 திவ்ய ஸ்தலங்களில் 96–வது திவ்ய ஸ்தலமாக விளங்குகிறது. சோளிங்கர் நகரில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட சிறப்பு வாய்ந்தது இத்திருக்கோயில். மேற்கண்ட பெருமை வாய்ந்த சோளிங்கரை புதிய தாலுகாவாக உருவாக்கித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் வணங்கிக் கோருகிறேன். அதற்கு பாராஞ்சி பிர்கா, சோளிங்கர் பிர்கா, பாணாவரம் பிர்கா, வேலம் பிர்கா, பொன்னை பிர்கா ஆகியவற்றை உள்ளடக்கிய கிராம ஊராட்சிகளைச் சேர்த்து, சோளிங்கரை புதிய தாலுகாவாக உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்புடன் கோருகிறேன்.

சோளிங்கர் தொகுதியில், அரசின் சார்பில் தைவான் நாட்டு காலணி தொழிற்சாலை துவங்க ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் இந்த வாக்குறுதியை வழங்கியிருக்கிறார்கள். மக்கள் இதற்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள். 20,000 நபர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் வாக்குறுதி வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுகூர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பேரூராட்சியில் 60,000 மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் நலன்கருதி, சோளிங்கர் பேரூராட்சியை, நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கோருகின்றேன். திருத்தணி, சோளிங்கர் முதல் அரக்கோணம் வரை செல்லும் சாலை, சித்தூரிலிருந்து சோளிங்கர், திருத்தணி செல்லும் சாலை இவற்றில் செல்லும் அனைத்து வாகனங்களும் நகருக்குள் செல்வதால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு தீர்வுகாண, சோளிங்கரில் நெடுஞ்சாலைத் துறைமூலம் விரைவில் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவுடன் அரசைக் கோருகிறேன்.

நெமிலி, காவேரிப்பாக்கம் மற்றும் சோளிங்கர் ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைப் போக்க, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்தி, கிராம மக்களுக்கு கூட்டுக் குடிநீர் வழங்க ஆவன

செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் பணிவுடன் கோருகிறேன்.

சோளிங்கர் பேருந்து நிலையம், பல நாடுகளிலிருந்து திருக்கோயிலுக்கு வரக்கூடியவர்கள் பயன்படுத்தும் பேருந்து நிலையமாக இருக்கின்றது. இதனைப் பழுதுபார்ப்பதற்கான சிறப்புத் திட்டம் அரசிடம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கிடுமாறு வணக்கத்துடன் கோருகிறேன். சென்னை முதல் சோளிங்கர் வழி பாராஞ்சி, என்னுடைய கிராமமான வெங்குப்பட்டு வழித்தடத்தில் புதிய பேருந்து வசதி செய்து தரக் கோருகிறேன். இதனால், 40 கிராமங்களிலுள்ள விவசாயப் பெருமக்கள், தங்கள் விளைபொருட்களை, சென்னை மற்றும் பிற நகரங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து, தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் ஏழை விவசாயிகளுக்காக இதைச் செய்து தர வேண்டுமென்று வணக்கத்துடன் கோருகிறேன்.

பிற்பகல் 4–50

எனது தொகுதியில் காவேரிப்பாக்கத்தில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையம் சென்னை to பெங்களூரு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. 30 படுக்கைகள் கொண்ட இதனை அரசு மருத்துவமனையாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பகுதியில், தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் நடக்கின்றன. பொது மக்களுக்கு நல்ல சிகிச்சை வழங்க, இதை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட நெமிலி ஒன்றியம், திருமால்பூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 30 ஆயிரம் கிராம மக்கள் உள்ளனர். பொது மக்கள் நலன் கருதி, புதிய ஆரம்ப சுகாதார

நிலையம் திருமால்பூருக்கு வழங்குமாறு வணக்கத்துடன் மாண்புமிகு முதல்வர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருமால்பூரில் உள்ள சரித்திரப் புகழ் வாய்ந்த மணச்சநல்லூர் ஈஸ்வரர் திருக்கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட பழமைவாய்ந்த கோயிலாகும். இக்கோயிலுக்குச் சரித்திரங்கள் பல உண்டு; புகழ்பெற்ற இத்திருக்கோயிலில் அன்னதானம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பணிவோடு கோருகின்றேன்.

எனது தொகுதியில் சோளிங்கர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேலூர் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய மாவட்ட பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகும். அதேபோல் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2,400 பள்ளி மாணவர்களும் பயின்று வருகின்றனர். எனவே, சோளிங்கர் பள்ளி மாணவர்களின் நலன் கருதி, ஓர் அரசு கலைக் கல்லூரியைத் தொடங்கிட மாண்புமிகு அம்மாவின் அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் பணிவுடன் கோருகின்றேன்.

சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பழமைவாய்ந்த அலுவலகம் ஆகும். இதனால் மழைக் காலங்களில் நீர்க் கசிவு ஏற்பட்டு, நிருவாக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, அங்கு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பணிந்து வணங்கி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், சோளிங்கர் அரசு மருத்துவமனையில் தினமும் காலை, மாலை வேளைகளில் 1,600 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையை விரிவாக்கம் செய்திட வேண்டும்; நவீன மகப்பேறு வார்டு ஒன்றை அமைத்துத் தர வேண்டும்; இரத்த வங்கி ஏற்படுத்திட வேண்டும்;

இம்மருத்துவமனையில் பல் மருத்துவர், இதய மருத்துவர் பணியிடங்களில் மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும். இதய பரிசோதனை செய்யக்கூடிய நவீன கருவிகள் வழங்கிட வேண்டும். எங்களது மருத்துவமனைக்குத் தேவையான இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மருத்துவத் துறையில் தலைசிறந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து, உரையை முடியுங்கள்.

திரு. கோ. சம்பத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம், காவேரிப்பாக்கம் மற்றும் நெமிலி வழியாக வேலூர் செல்லும் சாலைக்கு இணைப்புச் சாலையாக நெமிலியில் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். எனது தொகுதியில் புதியதாக நெமிலி தாலுகா உருவாக்கப்பட்டுள்ளது. புதிய குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இரண்டையும் அங்கு உருவாக்கித் தரக் கேட்டுக்கொள்கின்றேன். நெமிலி தாலுகாவில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாணாவரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1,800 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்தப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். நெமிலியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித் தரக் கோருகின்றேன். பணப்பாக்கம் பேரூராட்சியிலிருந்து வெண்பாக்கம், பள்ளூர் நெடுஞ்சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோருகின்றேன். பணப்பாக்கம் பேரூராட்சி மக்களுக்கு பாலாற்றில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கி உதவிடக் கோருகின்றேன்.

காவேரிப்பாக்கம் பேரூராட்சி மக்கள் பயன்பெறும் வகையில், பாலாற்றில் புதிய கிணறு அமைக்க ரூ.60 இலட்சத்திற்கு

திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கும் அனுமதி வழங்கக் கோருகின்றேன். மாவட்டத்தின் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரியில், மூல மதகு பழுதடைந்துள்ளது. இந்த ஏரியின்கீழ் 4,500 ஏக்கர் நிலங்கள் பயனடையக்கூடிய நிலை உள்ளது. இந்த ஏரியின் மதகையும் செப்பனிட்டுத் தருமாறு கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து, மற்ற கோரிக்கைகளையெல்லாம் கொடுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன். உரையை, முடியுங்கள். நீங்கள் பேசி முடித்து, இன்னும் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி, அடுத்த அமைச்சரின் மானியக் கோரிக்கை இருக்கிறது.

திரு. கோ. சம்பத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிடுகிறேன். எனது இதர கோரிக்கைகளை நான் அவையில் படித்ததாக ஏற்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், என் தொகுதிக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேநேரத்தில் எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் என் பணிவான நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். எனது தொகுதி வளர்ச்சிக்காக இம்மாமன்றத்தில் நான் கோரியுள்ள அனைத்துக் கோரிக்கைகளையும் ஓராண்டில் நிறைவேற்றித் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

சோளிங்கர் தொகுதியில் அரக்கோணம் முதல் பாராஞ்சி, வெங்குப்பட்டு வழியாக சோளிங்கர் செல்லும் சாலை நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்டது. இச்சாலையை 7 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அகலப்படுத்த வேண்டும். இதனால், 25 கிராம ஊராட்சி மக்கள் பயன்பெறுவர். எனது தொகுதியில் கொடைக்கல் முதல் ரெண்டாடி, செங்கல் நத்தம் வழியாக லாலாபேட்டை, பொன்னை சந்திப்பு, C.K. ரோடு நெடுஞ்சாலையை 5 மீட்டர் அகலப்படுத்தி சாலையைச் செப்பனிட்டுத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோருகிறேன். அளந்தலை, ஒழுகூர், வாங்கூர் நெடுஞ்சாலை ஒழுகூர்,

தலங்கை நெடுஞ்சாலை மேலும் தலங்கை, தலங்கை இரயில் நிலைய நெடுஞ்சாலையை 5 மீட்டர் அளவுக்கு அகலப்படுத்தித் தருமாறு கோருகிறேன்.

நெமிலி ஒன்றியம், மகேந்திரவாடியில் செயல்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு நெல் கொள்முதல் செய்ய மற்றும் பாதுகாக்க இடம் இல்லை. ஆகவே, அலுவலகம் மற்றும் கிடங்கினைப் புதியதாகக் கட்டித் தருமாறு கோருகிறேன்.

சோளிங்கர் முதல் பாணாவரம், மங்கலம், கோவிந்தச்சேரி, கரடிகுப்பம் வழியாக வாலாஜா வரை புதியதாக நகரப் பேருந்து இயக்கிடக் கோருகிறேன். இதனால், 20 கிராம ஊராட்சியில் பொது மக்கள் 10 ஆயிரம் பேர் பேருந்து வசதி பெறுவார்கள்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பணப்பாக்கம் நெசவாளர் நிறைந்த பேரூராட்சி. இங்கு 6 ஆயிரம் தறிகள் உள்ள நிலையில், நெசவாளர்கள் அதிகம் உள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு பணப்பாக்கம், சோளிங்கர் பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கக் கோருகிறேன்.

ஓச்சேரி சாலை முதல் துறைபெரும்பாக்கம் செல்லும் சாலையில் மேம்பாலம் கட்டக் கோருகிறேன். காவேரிப்பாக்கம் பெரிய ஏரியின் கடைநீர் வழிந்தோடும்போது வெள்ளத்தால் 50 கிராம மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆகவே, மக்களின் நலன் கருதி புதிய மேம்பாலம் கட்ட பணிவுடன் கோருகிறேன். எனது சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட பணப்பாக்கம் முதல் பன்னியூர் சாலை நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்டது. இதில் 1/0–ல் மேம்பாலம் அமைத்துத் தர கோருகிறேன்.

காவேரிப்பாக்கம் ஏரி, வேலூர் மாவட்டத்தில் பெரிய ஏரியாகும். மேற்கண்ட ஏரியினை சுற்றுலாத் தலமாக்க சுற்றுலாத் துறைமூலம் மேம்பாடு செய்ய பொதுப் பணித் துறைமூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றித் தர மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை அன்புடன் கோருகிறேன்.

பிற்பகல் 4–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உமிழ்நீரும் இனிக்கின்ற அமிழ்தாக உலகத்து உயிர்களெல்லாம் உதிர்க்கின்ற அம்மா என்னும் முதல் எழுத்து மொழியாக, 1½ கோடி தொண்டர்களின் உதிரத்தில் கலந்திருக்கும் உயிராக, உலகத்துத் தமிழர் வாழ உழைத்து, உழைத்து, உழைத்தே உருகிய மெழுகாக, "எனக்காக ஏதுமில்லை; எனக்காக ஏதுமில்லை; எல்லாம் என் மக்களுக்காக" என்று தன் ஆயுளையே அர்ப்பணித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி, என் கண்ணீர் கசிந்து பொற்பாதங்கள் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்து தொண்டர்களும், உலகத் தமிழர்களும் உள்ளம் குளிர ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் எளிமைக்கு எளிமையாக, தான் பதவியேற்ற நாள் முதல் ஒவ்வொன்றிலும் சரித்திர சாதனைகளை பார் வியக்கும்வண்ணம் அம்மாவின் அரசாட்சியை எந்நாளும் எடுத்துச் செல்லும் குடிமராமத்து நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா எடப்பாடியார் அவர்களுக்கும், பாசமிகு கனவுகளை நனவாக்க பக்கதுணை நின்று கழக அரசின் வெற்றிக்குக் கரம் கொடுத்து இணைந்த கரங்களால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி சிறக்க துணை நின்று உழைக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அய்யா ஓ.பி.எஸ். அவர்களுக்கும் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் 2019–2020 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் நான்காவது முறையாக உரையாற்ற வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதி, தாளவாடியில் புதிய வட்டத்தை உருவாக்கி, புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்ட 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், பவானிசாகர் அணை முன்புறம் புதிய பாலம் கட்ட ரூ.7 கோடியே 98 இலட்சம் நிதியுதவியும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு கூடுதல் கட்டமைப்பு வசதிகள் செய்ய ரூ.10 கோடி நிதியுதவியும்,

பவானிசாகர் அணைகளின் நீர்த்தேக்கப் பகுதியில் மிதக்கும் சூரிய சக்தி மின்னழுத்தப் பூங்கா மின் திட்டம் நிறுவிடவும், பவானிசாகரில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு சேவை மையமும், தாளவாடி ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.3 கோடி நிதியுதவியும், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் கல்வி ஒலி–ஒளித் தகவல் கருத்து விளக்கக்கூடத்துடன் கலை நயம் மிக்க கூட்ட அரங்கம் அமைக்க ரூ.3 கோடி நிதியுதவியும், பனையம்பள்ளி ஊராட்சி, குமரன் நகரில் ரூ.23 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நிதியுதவியும், ராஜன் நகரில் ரூ.34 கோடியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நிதியுதவியும் மற்றும் சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் பழுதடைந்த சாலைகளைச் சீரமைக்க ரூ.7 கோடி நிதியுதவியும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் அவர்களுக்கும் எனது சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு அரசின் சேவைகளை விரைந்து அளித்திடும்பொருட்டும், பொது மக்கள் எளிதில் தொடர்புகொள்ளும் வகையிலும் அலுவலக சூழலை மேம்படுத்தும்பொருட்டும், மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிருவாக அலுவலர் நிலை வரை அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும்விதமாக அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் ஒரு முக்கிய பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. மேலும், விவசாயிகளால் பருவவாரியாகப் பயிர் செய்யப்படும் பயிர்களின் விவரம், விளைச்சல் நீர் ஆதாரம் போன்ற பல்வேறு புள்ளிவிவரங்கள் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன. இப்புள்ளிவிவரங்கள் ஜி–அறிக்கை தயாரிக்க உதவுகிறது. வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அடங்கல் முக்கிய ஆவணமாக விளங்குகிறது. கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதி பராமரிக்கப்பட்டு வந்த முறையை எளிமைப்படுத்திடவும், சாகுபடி விவரங்களைத் துல்லியமாகப் பெற்றிடவும் அடங்கல்

பதிவேட்டினை மின்னணு பதிவிற்கு மாற்றம் செய்யும் இ–அடங்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம நிருவாக அலுவலர்களால் இதுவரை தயாரிக்கப்பட்டு வந்த அடங்கல் பதிவேட்டில் விவசாயிகள் தங்கள் சாகுபடி விவரங்களைப் பதிவு செய்யும் நடைமுறை இல்லை. எனவே, விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தாங்கள் சாகுபடி விவரத்தினைத் தாங்களே இ–அடங்கலில் பதிவிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கிராம நிருவாக அலுவலர் மற்றும் விவசாயிகளால் செய்யப்படும் சாகுபடி பதிவுகளுக்கிடையே வேறுபாடுகள் இருப்பின், அப்பதிவு தானாகவே அடுத்த உயர்நிலை அலுவலருக்கு குறியீடு செய்யப்பட்டு, அவரது ஆய்வுக்குப்பின் திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு, தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதைக் கடந்த ஆதரவற்ற மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1,000/– வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பான்மையான மக்களுக்கு, குறிப்பாக, முதியோர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் சென்றடைய ஏதுவாக இத்திட்டத்திற்கான விதிமுறைகள் வெகுவாகத் தளர்த்தப்பட்டுள்ளன. ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின்போது சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்பட்டு வருகிறது. வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைக் குடும்பங்களில் உள்ள நபர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.2 இலட்சமும், விபத்தினால் இறந்தால் ரூ.4 இலட்சமும் மற்றும் நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ.1 இலட்சமும் வழங்கும் விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 5–00

தமிழக அரசின் நலத் திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கடைக்கோடி கிராமங்களில் வாழும் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற அரசின் உயரிய குறிக்கோளுக்கிணங்க, மனுநீதி நாள் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆக, அதைச் சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொரு குழுவாகச் சென்று, மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண்பது மட்டுமல்லாமல், இதர சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. வருவாய்த் துறையினை நாடிவரும் பொது மக்களுக்கு விரைவான சேவையினை அளித்திடும் வகையில், தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியோடு அனைத்து மாவட்டங்களிலும் மின் ஆளுமைத் திட்டம் வாயிலாக 15 சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலைக்கேற்ப முறையான அணுகுமுறை, ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் பேரிடர் அபாயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை நிலையம், சென்டாய் கூட்டமைப்புடன் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில மேலாண்மை தொலைநோக்குத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததன்மூலம் மாநிலத்தின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு பாதுகாப்பான, பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையிலான தமிழகத்தை உருவாக்குவது இத்திட்டத்தின் உன்னதமான நோக்கமாகும். வானிலை முன்னறிவிப்பு தொடர்பாக தகவல்களின் அடிப்படையில் பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் தாக்கத்தை அளவிட்டு, அதனடிப்படையில் அவசரகால மீட்பு முன்னேற்பாடுகளை முறைப்படுத்தும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்பின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பாதிப்புக்குள்ளான இடங்களில், இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையின் மழை முன்னறிவிப்பைக் கொண்டும், முந்தைய காலத்தில் பெய்த மழையளவு, நீர்நிலைகளில் உள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கொண்டு சாத்தியமான வெள்ள

அளவைக் கொண்டும், இத்திட்டம் மதிப்பீடு செய்கிறது. மேலும், பேரிடர்களின் ஆபத்துகளைக் கணிக்கவும், அவை செயலிமூலம் களநிலை அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து வெள்ள அபாயத்தைக் குறைக்கவும் இச்செயலி உதவும். இச்செயலி மாறுபட்ட எச்சரிக்கை அமைப்பைக் கொண்டது. இந்த எச்சரிக்கை அறிவிப்பு, ஒலி பயனர் எச்சரிக்கை செய்தியினை காணும்வரை ஒலித்துக் கொண்டிருக்கும்.

தமிழகத்திலுள்ள ஏரிகள், நீர் வழித்தடங்கள், பாசனக் கால்வாய்கள், நீர்நிலைகள் மற்றும் அணைகளில் இருந்து வண்டல் மண்ணை எடுத்து விவசாயிகள் அவர்களின் நிலங்களைப் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது. இப்பணியானது மண் வளத்தைச் செழிக்கச் செய்வதோடு மட்டுமல்லாது, நீர்நிலைகளில் நீர் கொள்ளளவினை உயர்த்துவதற்கும் வழிவகை செய்கின்றது.

நிலச் சீர்திருத்தத் துறையால் விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதிய சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான எஞ்சிய பணிகள் முதலியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பட்டா மாறுதல் சேவை பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கூர்ந்து கண்காணிக்கின்றது. இந்தச் சேவையானது இணையதளம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இணையதள வழியிலான பட்டா மாறுதல் திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பதே அரசின் முக்கிய குறிக்கோளாகும். கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து தகுதிவாய்ந்த வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

பொது மக்களின் நலன் கருதி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று

வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், கழிவுநீர் அகற்றல் திட்டம், திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கு நிலக் கிரையமின்றி, இலவசமாக, சிறப்பு நேர்வாக, நில உரிமை மாற்றம் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுபோன்றே தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்த அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டவும், நிலங்கள் அரசால் இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

கணினி வழியாக நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை தொடர்பான இனங்களில், மாநிலம் முழுவதிலுமிருந்து பெறப்படும் முன்மொழிவுகள் நில நிருவாக ஆணையரகத்தால் கண்காணிக்கப்பட்டு, மாவட்ட அலுவலர்களின் நடவடிக்கையினைத் துரிதப்படுத்தி, நிலம் தொடர்பான முன்மொழிவுகளைத் துரிதமாக முடிவு செய்து, திட்டப் பணிகளுக்கான அரசு நிலங்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிலச் சீர்திருத்தத் துறையால் விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைச் சட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச் சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்புரிவோர்களுக்கும், அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான எஞ்சிய பணிகள் முதலியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் அதனை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும்பொருட்டு, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கிராம வரைபடங்களை கணினிப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணியும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 5–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட குத்தியாலத்தூர் ஊராட்சி, 60 குக்கிராமங்களைக் கொண்ட பெரிய ஊராட்சியாகும். இவ்வூராட்சியை கடம்பூர், இருட்டிபாளையம், அரிகியம், பவளக்குட்டை, கரளையம் என 5 ஊராட்சிகளாகப் பிரித்தும், ஏற்கெனவே இருக்கின்ற குன்றி, கூத்தம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுடன் தாளவாடி ஒன்றியம், திங்களூர் ஊராட்சியை இணைத்தும் கடம்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கடம்பூர் ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பவானிசாகர் தொகுதியில் வெகு தொலைவிலுள்ள தாளவாடி வட்டம், திங்களூர் “A” , “B” கிராமம் ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களையும் பிரித்து, சத்தியமங்கலம் வட்டத்தில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பவானிசாகர் கூலிஸ்லைன் பகுதியில் வீடு கட்டி வாழ்ந்துவரும் ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சத்தியமங்கலம் நகராட்சி, தோப்பூர் காலனியில் வாழ்ந்துவரும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் வட்டம், மலைப்பகுதி, குத்தியாலத்தூர், குன்றி, கூத்தம்பாளையம் ஆகிய வருவாய் கிராமங்களில் தாளவாடி வட்டம், மலைப்பகுதியில் உள்ள வருவாய் கிராமங்களில் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்றும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம், தாளவாடி, நம்பியூர் ஆகிய 3 வட்டங்களையும் ஒருங்கிணைத்து, சத்தியமங்கலத்தில் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பவானிசாகர் அணையின் நீர்த்தேக்கப் பகுதியில் பாண்டியாறு–புன்னம்புலம் நீர்த்தேக்கத்தைச் செயல்படுத்துவதன் மூலமாக ஈரோடு, கரூர், நாமக்கல், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு நீர்வள ஆதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, எங்கள் தொகுதியில் அவினாசி–அத்திக்கடவு திட்டத்தில் விடுபட்டுள்ள பவானிசாகர் ஒன்றியத்திற்குட்பட்ட

பனையம்பள்ளி, பெரியகள்ளிப்பட்டி, மாதம்பாளையம், நொச்சிக்குட்டை, விண்ணப்பள்ளி, தேசிபாளையம், நல்லூர் ஆகிய 7 ஊராட்சிகளை சேர்த்துத் தருமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பவானிசாகர் தொகுதி, பத்ரிபடுகு, குரும்பூர், கோயமூலை ஊராட்சிகளில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, புஞ்சை புளியம்பட்டி நகராட்சி நில அளவை திட்டம் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சத்தியமங்கலம் நகர்ப் பகுதி, கர்நாடக மாநிலம் செல்லும் முக்கியமான நகரமாகும். இப்பகுதியில் கூட்ட நெரிசல் அடிக்கடி ஏற்படுவதால், சத்தியமங்கலத்தில் புறவழிச் சாலையும் மற்றும் சத்தியமங்கலம் நகராட்சி மையப் பகுதியில், பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால், உயர்மட்டப் பாலமும் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, தாளவாடி பகுதியில் மழைக் காலங்களில் மழைநீர் வீணாகச் செல்கிறது. எனவே, தாளவாடி பகுதியில் தடுப்பணைகளைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பவானிசாகர் ஒன்றியம், பனையம்பள்ளி ஊராட்சி, பெரிய கள்ளிப்பட்டி ஊராட்சி, மாதம்பாளையம் ஊராட்சி, தேசிபாளையம் ஊராட்சி ஆகிய 4 ஊராட்சிகளுக்குட்பட்ட 75 ஊராட்சிகளை ஒருங்கிணைத்து பனையம்பள்ளியில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன். சத்தியமங்கலம் ஒன்றியம், மாக்கினாங்கோம்பை ஊராட்சி, இண்டியம்பாளையம், அரசூர் ஊராட்சிகளில் 30–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களை உள்ளடக்கிய அரசூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சத்தியமங்கலம் ஒன்றியம், மல்லியம்மன் துர்கம், மாக்கம்பாளையம், உகினியம் நகலூர் மற்றும் தாளவாடி ஒன்றியம், பெஜலபட்டி, ஆசனூர் ஊராட்சி, புதுக்காடு ஆகிய வனச் சாலைகளை தார்ச் சாலைகளாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சத்தியமங்கலம் ஒன்றியம், மலைப்பகுதியான குத்தியாலத்தூர், குன்றி, கூத்தம்பாளையம், திங்களூர், கேர்மளம் ஆகிய 5 ஊராட்சிகளை உள்ளடக்கி, கடம்பூரில் புதிய மின் நிலையமும், அதேபோல, தலமலையில் புதிய மின் நிலையமும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புஞ்சை புளியம்பட்டி அலுவலகக் கட்டடம் சுமார் 60 ஆண்டுகளுக்கு

முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளதால், இந்த நகராட்சி அலுவலகக் கட்டடத்தைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பழுதடைந்துள்ள புஞ்சை புளியம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய இதர தொகுதிக் கோரிக்கைகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து உரையை நிறைவு செய்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

குன்றி மலைப்பகுதி மற்றும் அரியப்பம்பாளையம் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் அணை நீர்வரத்துக்கான பாண்டியாறு–புன்னம்புலம் திட்டத்தை நிறைவேற்றி, ஈரோடு, கோவை, திருப்பூர், கரூர், நாமக்கல் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாளவாடி வட்டம், ஆசனூர் வருவாய் கிராமம், தலமலை கிராமம், மல்லன்குழி கிராமம், பயனாபுர கிராமம் ஆகியவற்றை அ, ஆ கிராமங்களாகவும், எரகனள்ளியை புதிய நில வருவாய் அலுவலர் உள் வட்டமாகவும் பிரித்துத் தருமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலத்தில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளால் சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளது. எனவே, புதிய தார்ச் சாலைகள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சத்தியமங்கலத்தில் அரசு சார்பில் நீதிமன்றக் கட்டடம் கட்டித் தருமாறும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பு. புளியம்பட்டி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத்தரம் உயர்த்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதி, ஆசனூர் ஊராட்சி, கோட்டாட்டை குத்தியாலத்தூர் ஊராட்சி, கரளையம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ள பனையம்பள்ளி, தொப்பம்பாளையம், இக்கரை தத்தப்பள்ளி, பகுத்தம்பாளையம், பு.புளியம்பட்டி, ஆலத்து கோம்பை, சிக்கரசம்பாளையம், புதுக்களையனூர், பழையகளையனூர், கொமாரபாளையம், இக்கரை நெகமம், சத்தியமங்கலம், மாக்கினாகோம்பை, செண்பகப்புதூர் 'A' கிராமம், உக்கரம் 'A' கிராமம், பவானிசாகர் நகரியம், புங்கம்பள்ளி, சத்தியமங்கலம் குரூப், கோணமூலை போன்ற கிராமங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.மா.சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்திலே செம்மஞ்சேரி காவல் நிலையக் கட்டடம் நீர்நிலைப் புறம்போக்கில் அமைக்கப்பட்டு வருகிறது என்கிற ஒரு தகவலை இங்கே விவாதத்தின்போது வைத்தார்கள். அதற்கு உரிய பதில் சொல்லியிருந்தாலும்கூட, அது நீர்நிலைப் புறம்போக்கு அல்ல. ஏரிக்கு அருகில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது மேய்க்கால் புறம்போக்காக 'அ' பதிவேட்டில் இருக்கிறது. அதற்கான மாற்று நிலமும் கொடுத்துதான் அந்தக் காவல் நிலையம் கட்டப்படுகிறது. உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே மிகக் கவனமாக இருந்து, துறைக்கு உரிய அறிவுரைகளைக் கொடுக்கின்றார்கள். ஆகவே, அரசாக இருந்தாலும், தனி நபர்களாக இருந்தாலும், நீர்நிலை ஆக்கிரமிப்பு என்பது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி முழுமையாக அகற்றப்படுகிறது; எவரும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு அரசு அனுமதிக்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.

***திரு. டி.கே.ஜி. நீலமேகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் மூச்சு உள்ளவரை சமதர்மம் நிலைத்திட போராடிய தந்தை பெரியார் அவர்களையும், திராவிடப் பேரொளி எங்களின் அணையா விளக்கு பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகின்றேன். தமிழ், தமிழன், தமிழ் மண் எனவும், கலை, இலக்கியம், பண்பாடு எனவும், சமூகம், சமத்துவம், சமநீதி எனவும், முப்பொழுதும், ஏன் எப்பொழுதும் தமிழர்களுக்காக வாழ்ந்திட்டு இப்பொழுது வங்கக் கடலோரம் துயில்கொள்ளும் எங்கள் சங்கத் தமிழை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சான்றாண்மைக்கோர் எடுத்துக்காட்டாக! தந்தை பெரியார் எழில் தோன்றும்; ஆன்றோர் போற்றும் அரசியல் மாண்பாக! அண்ணா என்றே தோன்றும். தோன்றின் புகழோடு தோன்றிய தலைவரைச் சொன்னால், கலைஞர் என்றே தோன்றும். இந்த மூன்று தலைவர்களும் ஓர் உருவானால், எங்கள் தலைவர் தளபதியின் முகம்தான் தோன்றும். (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியால் பெருமை பெற்று, தியாகத்தால் உரிமை பெற்று, தொண்டால் பதவி பெற்று, சாதனைகளால் புகழ் பெற்றவர் எங்கள் தலைவர் தளபதியார். (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணித் துணிவது, துணிந்ததை உரைப்பது, உரைத்ததைச் செய்வது, விளைவினை ஏற்பது என்கின்ற பழக்கத்தால், நாளும் பொழுதும் உழைத்து, "உழைப்பு, உழைப்பு" என களைப்பறியாது களமாடும் எங்கள் நம்பிக்கை நட்சத்திரம், எங்கள் அன்புத் தலைவர், ஆருயிர் அண்ணன் தலைவர் தளபதியாரை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–10

நடைபெற்ற தேர்தலில் கழக வெற்றிக்காகப் பெரும் பணியாற்றிய புதிய விடியல் எங்கள் இளைய சூரியன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளர் திருமிகு. உதயநிதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என் அன்புக்குரிய, எங்களது மாவட்டக் கழக செயலாளர், இச்சட்டப் பேரவையின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான திருவையாறு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் உள்ளிட்ட எனது

வெற்றிக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்ற இடைத் தேர்தலில் தஞ்சை தொகுதியில் 35,000–க்கும் மேலான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த தஞ்சை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை தொகுதி என்பது உலகப் பிரசித்திபெற்ற பெருவுடையார் கோயிலையும், வரலாற்றுச் சிறப்புமிக்க சரஸ்வதி மஹால் நூலகத்தையும் கொண்டு, நதிகளின் நகரமாகவும், சொல்லும், நெல்லும் விளைகின்ற களஞ்சியமாகவும், பழமையும், புராதனமும் கொண்டதாகவும் விளங்குகிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த தொகுதி தஞ்சை தொகுதி. அந்த தஞ்சை தொகுதியிலே பணியாற்றுகின்ற வாய்ப்பினை, சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த எனக்கு வழங்கிய மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் கழகத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடன் 1958 ஆம் ஆண்டு, தஞ்சை SMT பஸ் தொழிலாளர்கள் போராட்டத்தில் தொடங்கி, திருச்சி சிறையிலே மிசா கைதியாக ஓராண்டு அடைபட்டு, தன் வாழ்நாளெல்லாம் டாக்டர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்று பணியாற்றிய என்னுடைய தந்தையார் டி.கே. கோவிந்தன் மற்றும் அவருக்கு என்றைக்கும் உறுதுணையாக இருந்த என்னுடைய தாயார் கௌசல்யா ஆகியோரின் நினைவிடங்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய எங்களுடைய கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 'வருவாய்த் துறை என்பது அரசின் மூளை போன்றது' என்று முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் துறைக்குப் பல திட்டங்களையும், வழிமுறைகளையும் வகுத்துத் தந்தார்கள். அந்தத் திட்டங்கள் பெரிதாக்கப்பட்டாலும், பெயர் மாற்றப்பட்டாலும், அதன் மூல விதையாக இருப்பது முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் திராவிட முன்னேற்றக்

கழகத்தின் ஆட்சியும் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலக்கட்டத்தில், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், குத்தகை பாக்கியினால் விவசாயிகள் துன்பப்படுவதை அறிந்து, குடியிருப்பு உடைமைதாரர் சட்டத்தை நிறைவேற்றினார். அதனைப் பாராட்டிய பொதுவுடைமை இயக்கத்தினுடைய தலைவர் மணலி கந்தசாமி அவர்கள், 'பெரும் இரத்தம் சிந்தி சாதிக்க முடியாததை, ஒரு துளி பேனா மையினால் சாதித்துவிட்டீர்கள்' என்று தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இடத்திலே நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், பல பிரிவுகளில் உள்ள புறம்போக்கு நிலங்களுக்கு பல்வேறு காரணங்களினால் பட்டாக்கள் வழங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த இடங்களில் சூழ்நிலைக்கேற்ப மாற்றம் ஏற்பட்டிருப்பின், அந்த இடங்களை வகை மாற்றம் செய்து, ஏழையெளியோர்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு வருவாய்த் துறையின் அடிப்படை பணிகளைக் கொண்டு சேர்க்கின்ற கிராம நிருவாக அலுவலர்கள் அந்தந்த கிராமங்களிலேயே தங்கிப் பணிபுரிவது மிக ஏதுவாக இருக்கும். கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகத்தோடுகூடிய குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கட்டிக் கொடுத்தால்தான், அதன் மூலமாக எந்த நேரத்திலும் பொது மக்கள் அவர்களைச் சந்தித்து பயனடைய முடியும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 5–15

வருவாய்த் துறையினுடைய அத்தனை சான்றிதழ்களும் இணையதளம் மூலமாக வழங்கப்படுகின்றன என்று இன்று காலையிலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவர்களிடத்திலே உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, கிராம நிருவாக அலுவலர்கள் முதல் வட்டாட்சியர் வரையில் இணையதள சேவைகளை சிறப்போடு, துரிதமாக நடத்துவதற்கு, வட்டாட்சியர் வரையில்

இருக்கின்றவர்களுக்கு மடிக்கணினி வழங்கி, பணிகள் விரைந்து நடைபெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில், இரண்டு ஆண்டுகளாக, 2017 ஆம் ஆண்டு முதல் இன்றளவில் பதிவுக் கட்டணங்கள் மிக அதிகமாக உள்ளன. ஏழையெளியவர்களை பாதிக்கின்ற வகையில் இந்தக் கட்டணம் இப்போது உயர்ந்து வருகிறது. ஏற்கெனவே இருந்த பழைய நிலைக்குக் கொண்டு சென்றால், சிறப்பாக இருக்குமென்பதனை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். 2 ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் என்று இருந்த கட்டணம், இன்றைக்கு 100 ரூபாய், 200 ரூபாய், 500 ரூபாய் என்று உயர்ந்திருக்கின்றது. அது சாதாரண ஏழையெளிய மக்களை பெருமளவில் பாதிக்கிறது என்பதனை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அப்போது புறவழிச் சாலைக்காக ஒரு பகுதியில் நில எடுப்பு செய்யப்பட்டு, புறவழிச் சாலை அமைக்கப்பட்டது. அதுமுதல் தற்போதுவரையில் எடுக்கப்பட்ட நிலங்களின் கணக்கு விவரங்கள் கிராமக் கணக்கில் ஏற்றப்படவில்லை என்பதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, மனக்கரம்பை முதல் புளியந்தோப்பு வரையிலே நீளுகின்ற சாலைகளின் நில எடுப்பு விவரங்களை கிராமக் கணக்கிலே ஏற்ற வேண்டுமென்றும், Ward/Block map மற்றும் TSLR–ல் பதிவேற்றம் செய்து நில அளவு செய்து தர வேண்டுமென்றும் கேட்டு, இந்த நேரத்திலே அந்தப் பகுதி மக்களின் இந்த நீண்டநாள் பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

நகர்ப்புறங்களில், மாநகராட்சிப் பகுதிகளில் இப்பொழுது நகர்ப்புற நில வரித் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் மிக தாமதமாக நடைபெறுகின்றன. எனவே, அந்தப் பணிகளைத் துரிதப்படுத்துகின்ற வகையில், வட்டாட்சியர் நிலையில் ஒரு பணியிடத்தையும், துணை வட்டாட்சியர் நிலையில் ஒரு பணியிடத்தையும் மேலும் உருவாக்கி, 10–க்கும் மேற்பட்ட கடைநிலை ஊழியர்களை நியமித்து, அந்தப் பணிகளைச் செவ்வனே விரைந்து செய்வதற்கு நீங்கள் முற்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதுவரையில் தஞ்சாவூரிலே 9 வட்டங்கள்

இருக்கின்றன. அந்த 9 வட்டங்களில் 571 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. 2 வருடங்களாக இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 35 கிராம ஊராட்சிகளில் மட்டும்தான் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. 52 கிராம ஊராட்சிகளுக்கு நோட்டீஸ் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. இது இப்படியே தொடருமேயானால், பல ஆண்டுகள் ஆனாலும், அந்த நில வரித் திட்டத்திற்கான கணக்கெடுப்பினை செய்து முடிக்க முடியாது. அதுமாத்திரமல்ல; அந்தப் பணி முடிவடையவே முடியாது. காரணம், பரிவர்த்தனை நடைபெறுவதால், மற்ற மற்ற நிலைகளில் மாற்றம் ஏற்படுகின்ற நேரத்தில் அதைத் தொடர்ந்து செய்ய முடியாது. எனவே, பணியாளர்களையும் அதிகாரிகளையும் அதிகம் நியமித்து, அதைச் சிறப்போடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர், வல்லம் பேரூராட்சி, திருக்கானூர்பட்டி வருவாய் கிராமத்தில், அய்யனார் கோவில் தெருவில் சுமார் 200 குடும்பங்களுக்கு மேல் உள்ளன. அவற்றில் 100 குடும்பங்களுக்குப் பட்டா ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது. மீதமுள்ள குடும்பங்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று உங்களிடத்திலே இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர், வல்லம் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு முழுவதும் பழுதடைந்துள்ளது. எனவே, ஆய்வாளர் அலுவலகம் பழுதடைந்த நிலையில் கட்டடம் இல்லாத காரணத்தினால், அவர் வி.ஏ.ஓ. அலுவலகத்திலே அமர்ந்து தன்னுடைய பணியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எனவே, கட்டடத்தை துரிதமாகக் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமையானது. அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம். மழைக் காலத்தில் அந்தக் கட்டடத்தில் அமர்ந்து பணியாற்ற முடியவில்லை. எனவே, புதிய நவீன வசதிகளுடன்கூடிய கட்டடத்தைக் கட்டித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

தஞ்சாவூர் தாலுகாவிற்கு உட்பட்ட வருவாய் கிராமங்கள் கோட்டை–பள்ளியக்ரகாரம், ஆவுசாகிப் தோட்டம், வலம்புரி ஆகியவையாகும். இந்த மூன்று வருவாய் கிராமங்களுக்கான கிராம நிருவாக அலுவலர்களுக்காக ஏற்கெனவே இருந்த கட்டடங்கள் இன்றைக்குப் பழுதடைந்துள்ளன. அவற்றைப் பழுது நீக்கி புதிதாக கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–20

தஞ்சாவூர் தாலுகாவிற்கு உட்பட்ட பெரிய வருவாய்க் கிராமமாக இருக்கக்கூடிய நாஞ்சிக்கோட்டை, புதுப்பட்டினம், நீலகிரி தெற்குத் தோட்டம் ஆகிய வருவாய்க் கிராமங்களை, கிராம நிருவாக நலனைக் கருதி இரண்டாகப் பிரித்து, புதிய வருவாய்க் கிராமத்தை ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இ–சேவை மூலமாக வழங்கப்படுகின்ற அனைத்து வருவாய்ச் சான்றுகள் குறித்தும், காலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு விரிவாகச் சொன்னார்கள். 15, 20–க்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அந்தச் சான்றிதழ்களுக்கு வாங்கப்படுகின்ற கட்டணத்தை இரத்து செய்து, ஏழையெளியவர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் இலவசமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, முதியோர்களுக்கும், விதவைகளுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் இன்றைக்கு உதவித் தொகை வழங்குவதில் சற்று காலதாமதமாகிறது. புதிதாக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்படவில்லை. ஏற்கெனவே விண்ணப்பித்திருக்கின்றவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, அவற்றைப் பரிசீலித்து, நிதியொதுக்கி, உடனடியாக உதவித் தொகை கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மழையால், தீ விபத்தால் ஏற்படுகின்ற சேதத்திற்கு அரசின் சார்பில் பகுதி சேதத்திற்கு 4,500 ரூபாயும், முழுச் சேதத்திற்கு 5,000 ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படுகின்றது. இது மிகவும் குறைந்த தொகை. இதையும் கவனத்திலே கொண்டு, அரசு 25,000 ரூபாய் வரை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

தஞ்சாவூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் TSO இல்லாத நிலையில், இன்றைக்கு அது துணை வட்ட வழங்கல் அலுவலர் (ATSO) நிலையில் உள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைதான் வைக்கின்றார். நான்,

குறுக்கிடவே இல்லை. (குறுக்கீடுகள்) நான் அதனால்தான் குறுக்கிடவே இல்லை. நான் ஏதாவது சொன்னால்தான், அவரும் சுவாரஸ்யமாக சொல்வார். அவருடைய பேச்சை நான் கவனிப்பதுபோன்று தெரிய வேண்டுமா, இல்லையா? அவர் எல்லாமே கோரிக்கைதான் வைத்திருக்கின்றார். குற்றச்சாட்டு சொல்லவில்லை. நான் அதற்காகக் குறுக்கிடவும் இல்லை. அவர் அந்தக் கோரிக்கையிலே என்ன சொல்கிறார்? அவர் சொல்கிற தகவல்கள் சரியாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொடுக்கக்கூடிய நிதி என்பது, அதாவது குடிசை வீடுகளில் ஏற்படும் தீ விபத்து போன்றவற்றிற்கு 25,000 ரூபாய் அளவிற்கு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார். அவர் இந்தக் கோரிக்கை வைப்பதற்கு முன்பே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலம் அம்மா அவர்களுடைய அரசு அதை நிறைவேற்றியிருக்கிறது.

ஒரே ஒரு உதாரணம்; கஜா புயலிலே பாதிக்கப்பட்டு, வீடு சேதமடைந்தவர்களுக்கு SDRF–State Disaster Response Fund, அதாவது மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாய்தான் கொடுப்பார்கள். ஆனால், யாருமே கோரிக்கை வைக்காமல், எடுத்தவுடனே அதற்கு 10,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, ஒவ்வொன்றுக்குமே வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு மனித உயிரிழப்பு ஏற்பட்டது என்று சொன்னால், நம்முடைய SDRF–லிருந்து 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அது 10 இலட்சம் ரூபாயாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று ஒவ்வொன்றுக்கும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த விவரத்தைத் தனியாக அனுப்புகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயல் நேரத்தில், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்குவதற்கு இடமில்லாமல் பள்ளிக்கூடங்களிலும், தனி

நபர்களுடைய வீடுகளிலும், 5 பேர் தங்கக்கூடிய இடத்தில் 50 பேர், 100 பேர் என தங்கியிருந்தார்கள். என்னுடைய கீழ்வேளூர் தொகுதி மட்டுமல்ல; திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில், புயல் பாதிக்கக்கூடிய பகுதிகளில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைத்துத் தர வேண்டும் அல்லது சமுதாயக் கூடங்களாவது அமைத்துத் தர வேண்டும். நிச்சயமாக, வரக்கூடிய மழைக் காலங்களில் அங்கு மக்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்று தெரியவில்லை. எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு, சமுதாயக் கூடங்களோ அல்லது புயல் பாதுகாப்பு இல்லங்களோ அமைத்துத் தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கஜா புயல் மீட்புப் பணியின்போது எங்களுடன் இருந்தார்கள். முழுவதுமாக அந்தப் பணிகளிலே ஈடுபட்டார்கள். முன்பெல்லாம் புயல் நேரங்களில், தனி நபர்களுடைய வீடு, அதேபோல சமுதாயக் கூடங்களில் தங்கியிருந்தார்கள். அதற்கு முன்பெல்லாம் புயல் பாதுகாப்பு மையத்திற்கு யாருமே செல்லமாட்டார்கள். அது ஒரு கூம்பு மாதிரி இருக்கும். அதை முதன்முதலாக பல்நோக்கு மையம் என்று அமைத்து, அதைச் சாதாரண காலங்களில் பள்ளிக்கூடங்களாகவும், சமுதாயக் கூடங்களாகவும் பயன்படுத்தலாம் என்று அதற்கேற்ப வடிவமைத்து, ஏறத்தாழ இதுவரை 121 பல்நோக்கு மையங்களை உருவாக்கிக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–25

அதேபோல, இந்த வீடுகளைப் பொறுத்தளவிலே பொதுவாக ஒரு புயலோ, வெள்ளமோ வந்துவிட்டால் அப்போது கொடுக்கக்கூடிய அந்தத் தற்காலிக நிவாரணத்தோடு, அரசு அதிகாரிகள் அடுத்த பணிகளுக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு,

மறுகட்டமைப்பு செய்வதற்காக, முதன்முதலாக இந்த கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில், அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்களுக்கு 2 இலட்சம் வீடுகளைக் கட்டித் தருவதற்காக ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்து, அவரின்கீழ் இரண்டு அலகுகள் இயங்குகின்றன. சென்னையை மையமாக வைத்து ஒரு மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி மற்றும் மாவட்ட அளவில் 2 அதிகாரிகளை நியமனம் செய்து அவர்களின்கீழ் அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஊரகப் பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகளில் எத்தனை வீடுகள் தேவைப்படுகின்றன என்பதற்கான பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கஜா' புயல் நிவாரணம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார். 'கஜா' புயலால் டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, டெல்டா மாவட்டங்களில் இருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்கள் செலுத்த வேண்டிய வரி, வாய்தாக்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை தலைநகரமாகவும், மாநகராட்சியாகவும் இருக்கின்ற காரணத்தினால், ரேஷன் கார்டுகள் அதிகமாக இருக்கின்றன. ஏற்கெனவே அங்கே TSO தலைமையிலே பணிகள் நடைபெற்றன. இப்பொழுது அது மாற்றப்பட்டு, துணை TSO நிலையிலிருப்பவரின் தலைமையில் அந்தப் பணிகள் அங்கே நடைபெறுகின்றன. எனவே, அந்தப் பணிகள் துரிதமாக நடைபெறுவதற்கு, அங்கே ஒரு TSO–ஐ நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தஞ்சை பூக்காரத் தெரு, சாந்தபிள்ளை கேட் அருகில் அமைந்துள்ள 2 டாஸ்மாக் கடைகள் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே பக்தர்களும், பள்ளி மாணவர்களும் செல்கிறார்கள். எனவே, அங்கேயிருக்கின்ற

அந்தக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, பூக்காரத் தெரு, விளார் ரோட்டில் சுப்பிரமணிய சுவாமி கோயில் அருகே பூச்சந்தை இருக்கிறது. அதுவொரு பழமையான, தொன்மையான பூச்சந்தை; 100 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தச் சந்தை நடைபெற்று வருகிறது. அது HR&CE துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடம் மிகவும் பழமையானதாக இருக்கிறது. எனவே, HR&CE துறையின் அனுமதியோடு, புதிய கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

தஞ்சை நகரத்தின் மையப் பகுதியில் செல்கின்ற கல்லணைக் கால்வாய், பூக்காரத் தெரு வழியாகவும், கோரிகுளம் வழியாகவும் செல்கிறது. அங்கேயிருக்கின்ற 20 கண் பாலத்தின் கரைகள் மிகக் குறுகியதாக இருப்பதால், பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் செல்வதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் புதிய பாலம் ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம், உரையை முடியுங்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மிக முக்கியமாக, அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, இன்றைக்கு தஞ்சை மாநகராட்சியில் Smart City அமைக்கும் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பழைய பேருந்து நிலையம், திருவையாறு பேருந்து நிலையம், காமராஜர் மார்க்கெட், கீழவாசல் சரபோஜி மார்க்கெட் போன்ற வர்த்தகப் பகுதிகளில் கட்டடங்கள் இன்றைக்கு இடிக்கப்பட்டு, புதிய கட்டடங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அங்கே இருக்கின்ற வர்த்தகர்கள் அந்தக் கட்டடங்களில் ஆண்டாண்டுக் காலமாக கடைகளை நடத்தி வருகின்றார்கள். எனவே, அந்தக் கட்டடங்களை இடித்துவிட்டு, புதிய கட்டடங்களைக் கட்டியபிறகு, அதே வர்த்தகர்களுக்கு மீண்டும் கடைகளை ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய கட்டடப் பணிகள் முடியும் வரை அவர்களுக்கு நகருக்குள் மாற்று இடங்கள் வழங்கிடவும், புதிய கடைகளைக் கட்டி வழங்கும் கால அவகாசத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தவும், அவர்களுடைய தொழில் பாதிக்காத வகையில் கட்டட அமைப்புகளை ஏற்படுத்தித் தர

வேண்டுமென்றும் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். பழமையும், புராதனச் சிறப்பும் கொண்ட மன்னர்கள் காலத்து கோட்டைச் சுவர்கள், மதிற்சுவர்கள் நிறைந்த பகுதி. அதை இடித்துவிட்டு Smart City திட்டத்தின்கீழ், பூங்கா மற்றும் நடைபாதை அமைத்திட இன்றைக்கு மாநகராட்சி முற்படுகிறது. அங்கே, 5,000–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 3 தலைமுறைகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதிலே வைத்து, மிக ஏழையெளிய குடும்பங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தாமல், அதே இடத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். மாநகராட்சியில் ஐந்து வட்டங்களுக்கு ஓர் இடத்தில் மக்கும் குப்பை, மக்காத குப்பையைப் பிரிக்கும் மையங்கள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பிற்பகல் 5–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: அடுத்து, மக்கள் வாழ்கிற பகுதிகளில் குப்பைகள் பிரிக்கப்படுகின்றன. அதுபோன்ற இடங்களில் குப்பைகளைப் பிரிக்கும் மையம் அமைத்தால் நாளடைவில் அங்கு துர்நாற்றம் வீசி, அந்தப் பகுதியில் குடியிருக்க முடியாத ஒரு நிலை ஏற்படும். அந்த வகையில், தஞ்சை, செக்கடி பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி குப்பைக் கிடங்கில் உள்ள குப்பைகள் அப்புறப்படுத்தப்படாமல், மாதம் ஒருமுறை இரண்டு முறை தீப்பற்றி எரிவதும், துர்நாற்றம் வீசுவதுமாக உள்ளதால், அந்தப் பகுதியில் மக்கள் வாழ முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. எனவே, நகர்ப் பகுதியில் இருக்கிற மக்கும் குப்பை, மக்காத குப்பையைப் பிரிக்கும் மையங்களையும், செக்கடி பகுதியில் இருக்கின்ற அந்தக் குப்பைக் கிடங்கையும், தஞ்சை மாநகராட்சிக்கு வெளியில், மற்றவர்களுக்கு பாதிப்பு இல்லாத இடத்திற்கு மாற்றியமைத்து, சுகாதாரக் கேடு ஏற்படாமல் தடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தத் திட்டத்தில் அகழிகளைத் தூர்வாரி, நீர் நிரப்பி, தஞ்சை மாநகராட்சியின் நிலத்தடி நீரை உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னிடம் மேலும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. தஞ்சையில் இராசா மிராசுதார் மருத்துவமனைக்கு அருகே நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் சாலையைக் கடக்க சிரமப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு சுரங்கப்பாதை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மருத்துவமனை மருத்துவக் கல்லூரியுடன் இணைத்து பல் மருத்துவக் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சையில் புகழ்பெற்ற பெரிய கோயில் எதிரே போக்குவரத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கைகளை தங்களிடத்தில் அளிக்கின்றேன். அதனை நான் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் புதிய கணக்கெடுப்பை நடத்தி, புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய அளவுக்குப் பலன்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கலிலியோ உலகம் உருண்டை என்று சொன்னபோது, உணராதவர்கள் பின்பு உணர்ந்தார்கள். எங்கள் தலைவர், நாளைய முதல்வர். உணராதவர்கள் நாளை உணர்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவமனையிலிருந்து பழைய பேருந்து நிலையத்திற்குச் செல்ல சுரங்கப்பாதை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சர்க்கரை நோயாளிகளுக்காக Podiatry Department ஏற்படுத்திடவும், 24 மணி நேரமும் இயக்கக்கூடிய Radiologist மற்றும் மயக்க மருந்து நிபுணர்களை பணியமர்த்தவும், சர்க்கரை நோயினால், காலில் ஏற்படும் ஊனங்களுக்கு பிரத்யேக சிறப்பு காலணிகளை குறைந்த விலையில் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் பெரிய கோயில் அருகே சாலையைக் கடக்க இயலாததால், அங்கு நடை மேம்பாலம் அல்லது Escalator ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர் தொகுதிக்குட்பட்ட நாஞ்சிக்கோட்டை, நீலகிரி, மாரியம்மன் கோவில், கடகடப்பை, பிள்ளையார்பட்டி, புதுப்பட்டினம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள சாலைகளை சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி மற்றும் கிளை சிறைச்சாலை ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மேற்கு காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும்; வல்லத்தில் பிற்படுத்தப்பட்டோர் விடுதியைக் கட்டவும் (BC Hostel); தஞ்சாவூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்காக புதிய அறைகள் (Chamber) கட்டவும்; வல்லம் பேரூராட்சியில் உள்ள சாலைகளைச் சீரமைத்துத் தரவும்; வடவாறு ஆற்றில் மேலவெளி முதல் கடகடப்பை வரை பக்கவாட்டுச் சுவர்கள் எழுப்பி, வடவாறில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, கரையை பலப்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன். வல்லம் ஏகௌரி அம்மன் கோயிலுக்கு ராஜகோபுரம் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். வல்லத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கவும், தஞ்சாவூரில் உள்ள தீயணைப்புத் துறைக்கு பயிற்சி மையம் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். வல்லம் பேரூராட்சிக்கு வரும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் சுகாதாரமான முறையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சாவூர் வடக்கு வாசல் மற்றும் அண்ணா நகர் 48–வது பகுதி ஆகிய இடங்களில் மகப்பேறு மையம் அமைக்க வேண்டும். தஞ்சாவூரில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு மற்றுமொரு அரசு உயர்நிலைப் பள்ளியை அமைக்க வேண்டும். தஞ்சாவூர் மாநகராட்சியில் உள்ள துப்புரவுப் பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி மற்றும் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் கூடுதல் இடங்களை உருவாக்க வேண்டும்.

புதிய பேருந்து நிலையம் அருகில் 33/11 KV துணை மின் நிலையம் ஒன்றை அமைக்கவும், மன்னர் சரபோஜி கல்லூரி அருகில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர் நகராட்சி, 51–வது வட்டத்திற்கு 32 MVA மின்மாற்றி அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது, எனவே, அங்குள்ள 16 MVA மின்மாற்றியோடு மற்றொரு 16 MVA மின்மாற்றியை அமைத்து, 51–வது வட்டப் பகுதி முழுவதையும் அருளானந்த நகர் பிரிவின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் இயங்கும் குந்தவை நீச்சல் குளத்திற்கு பயிற்றுநர்களை விரைவில் நியமிக்க வேண்டும். கரந்தை வடவாற்றிலிருந்து பிரியும் ஐவேலி வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதனை தூர்வாரி, பக்கவாட்டு சுவர் எழுப்பி, அதனைச் சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். தஞ்சாவூர் தொகுதி, தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 5 வட்டங்களில், மக்கும் குப்பை, மக்காத குப்பையைப் பிரிக்கும் நிலையங்கள் 15–க்கும் மேற்பட்ட இடங்களில் அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன. அந்த இடத்தை மாற்ற வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, குப்பை கொட்டும் இடத்தையும் மாற்ற வேண்டும் என்றும், அந்தக் குப்பையை வேறு எங்கேயாவது வெளியில் கொட்ட வேண்டும் என்றும் கூறினார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் திடக் கழிவுப் பிரச்சினை ஒரு சவாலான பிரச்சினையாக இருக்கின்றது. இதனை எல்லோரும் சேர்ந்துதான் சரி செய்ய முடியும். உறுப்பினர் அவர்கள் இதற்கு ஒரு மாற்று இடம் கண்டறிந்து கொடுத்தால், அதனைச் செய்ய இயலும். இப்போது எங்கே போய் குப்பைத் தொட்டியை வைத்தாலும், “எங்கள் வீட்டின் முன்பு குப்பைத்

தொட்டியை வைக்காதீர்கள்" என்று சொல்கின்றார்கள். அப்படிச் செய்தால் நாம் எங்கே சென்று வைக்க முடியும்? அந்த மாதிரி மாற்றி வைப்பதற்கான சூழ்நிலை அங்கே இல்லை. அந்தக் குப்பைகளைப் பிரித்தால்தான் நாம் அதைச் செய்ய முடியும். அதிலும் பார்த்தீர்களென்றால், தஞ்சாவூரில் 14 இடங்களில் பிரித்தெடுக்கும் குப்பைகளை எடுத்துச் செல்ல, அரியலூர் UltraTech Cement நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி, அவர்களுக்கு அனுப்புகின்றோம். ஏதாவது, ஓரிடத்தில் நீங்கள் வைக்க வேண்டும் என்றால், அங்கே வைத்துக்கொள்ளலாம். பொதுவாக, குப்பையைக் கொட்டக்கூடிய இடத்தை அப்படியே மாற்றுங்கள் என்றால், என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் இதனைச் செய்ய வேண்டும். ஒரு நகராக இருந்தாலும் சரி, ஒரு வீடாக இருந்தாலும் சரி, மொத்தமாகப் பார்த்தோம் என்றால், எல்லோரும் என் வீட்டின் பக்கத்தில் குப்பைத் தொட்டியை வைக்காதீர்கள் என்றால், வேறு எங்கு சென்று வைக்க முடியும்? திடக் கழிவு மேலாண்மை என்று ஒரு மிகப் பெரிய சவாலான பிரச்சினை. எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் இதனைச் செய்ய முடியும். இன்றைக்குத் தமிழகத்தில் தினமும் 19 ஆயிரம் டன் திடக் கழிவு வருகின்றது. ஆகவே, அனைவரும் ஒற்றுமையாக இருந்து இதைச் செய்ய வேண்டும். அந்த இடத்திற்கு மாற்று இடம் சொன்னால், அங்கே மாற்றிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிப்பு ஏற்பட்டபோது, அதிலிருந்து மீண்டு வருவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் காலையில் பேசும்போது, சுனாமிக்குபின் நிலைத்த நீடித்த வாழ்வாதாரத் திட்டம்;—அதாவது FIMSUL என்று சொல்லக்கூடிய உலக வங்கித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டம்;—

அந்த திட்டத்தின்கீழ் நிதி செலவிடப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்கள். அதற்கான பதிலை இங்கே தருகிறேன். மொத்தம் 10 பணிகள்; கிட்டத்தட்ட 201 கோடி ரூபாய் அளவிற்கு எடுத்து நிறைவேற்றப்பட்டுள்ளன. அதற்காக மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை 213 கோடி ரூபாய். இன்னும் 13 கோடி ரூபாய் பல்வேறு வகைகளில் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல் மொழிகளில் இன்று பேச்சு வழக்கில் இருந்து வருகின்ற ஒரே மொழி நம் தமிழ் மொழியாகும். தமிழ் மொழியை, நம் உயிரெனப் பேணிக் காத்து, எதிர்வரும் நூற்றாண்டுகளின் சவால்களை எதிர்கொள்கின்ற ஆற்றலையும், அறிவையும் அளிப்பதே நமது இன்றைய கடமை. இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்குத் தந்துவிட்டு சென்ற இலட்சிய வாக்கு. இலக்கியத்திலே, இதிகாசத்திலே, வரலாற்றிலே, மருத்துவத்திலே, விளையாட்டிலே, அரசியலிலே, பெண்கள் அவரவர் உழைப்பிற்கும், தியாகத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்ப ஆயிரம் ஆயிரம் சாதனைகள் படைத்திருக்கிறார்கள். ஆனால், இவ்வுலகத்தில் ஒட்டுமொத்த சாதனைகளின் வடிவமாக, உருவமாக ஒருவர் இருந்தார் என்றால், அவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி, வீரம், கனிவு, துணிவு, அறிவு, பக்தி, பண்பு, கலை, இசை, தொண்டு, கொடை, ஆளுமைத்திறன், மக்கள் நலன், பேச்சு, எழுத்து, தொலைநோக்குப் பார்வை, மதிநுட்பம், பன்மொழி திறமை என்று ஓராயிரம் திறமைகளை ஒருங்கே பெற்ற, உலக வரைபடத்தில் நாம் காண்கின்ற ஒரே தலைவர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உச்சரிக்கும் போதே உமிழ்நீரும் அமிழ்தாக இனிக்கின்ற மூன்றெழுத்து மந்திரம் அம்மா; உலகத்து தமிழர்களின் உயர்வுக்கே உருகிய மெழுகாக உழைத்திட்ட புகழ் மந்திரம் அம்மா; ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிரில், உணர்வில், உதிரத்தில் ஒன்றாகி கலந்திட்ட உயிர் மந்திரம் அம்மா; “என் மக்கள் யாரிடத்திலும்,

LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS

எதற்காகவும், கையேந்தி நிற்காத காலத்தை உருவாக்குவதே என் இலட்சியம்'' என்று ஒப்பில்லா இலக்கை நிறைவேற்றிட ஓய்வு இல்லாமல் உழைத்திட்ட திருமந்திரம் அம்மா; ''அம்மா என்றால் அன்பு'' என்று காற்றினிலே கலந்த கீதத்தை, காந்தி தேசத்தின் கீதமாக்கிய நம் அன்பு மந்திரம் அம்மா; புத்துலகு படைக்க புறநானூற்றுத் தமிழ் மண்ணுக்கு புலர்காலை விடியலான புரட்சித் தலைவி என்னும் புகழ் மந்திரம் அம்மா. சங்கத் தமிழ் பூமிக்கு சாதனைகள் குவிக்க சத்தியா தாய் வசத்தில் சங்கல்பம் வாங்கி வந்து, இன்று சந்தனப் பேழையில் சாய்ந்துறங்கும் புறநானூற்று தாய் நம் அம்மா. நாங்கள் விழி திறந்து எழும் வேளையிலும், விழி மூடி தூங்கிட விழும் வேளையிலும், எங்கள் கண்களை விட்டு அகலாத காவியமாய் இந்த மண் விட்டு மறையாத ஓவியமாய், நிறையாசனம் இட்டு எங்கள் இல்லத்திலும், இதயத்திலும் நீங்காது நிறைந்திருக்கும் எங்கள் தமிழர் குலச் சாமியே நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

உழைப்பிற்கும், தியாகத்திற்கும், ஆற்றலுக்கும், கருணைக்கும், இலக்கணம் வகுத்து தந்திட்ட தங்கத் தமிழ் மண்ணின் தன்னிகரில்லா அம்மா. தாங்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி என் விழியிலிருந்து, அருவியெனக் கொட்டுகின்ற கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி வணங்குகிறேன், தாயே, அம்மா!

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம் உயிருக்கும் மேலான தமிழை, ''தேன் தமிழே, செந்தமிழே, நற்றமிழே, முத்தமிழே, காப்பியத் தமிழே, பூந்தமிழே, கன்னித் தமிழே'' என்று அழைப்பதைவிட, ''தமிழே, தாய்த் தமிழே'' என்று அழைப்பதிலேதான் உணர்வு இருக்கிறது. அழகு இருக்கிறது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் நமக்கு தந்திட்ட இலட்சிய வாக்கு. அந்த இலட்சிய வாக்கிற்கு இணையாகத்தான், நேற்று இந்த மன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்த பிரச்சினையையொட்டி, ''தபால் துறைக்கான தேர்வினை தமிழிலும் எழுதலாம்'' என்று இன்றைக்கு அண்ணாவின் வழிவந்த பிள்ளைகள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு எடுத்துச்சொல்லிக்கொள்கிறேன்.

நாள், வாரம், மாதம், நேரம் என்று ஆட்சி கவிழ்ப்பிற்கு ஆரூடம் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு புனித ஜார்ஜ் கோட்டையை, கழகத்தினுடைய கோட்டையாக மாற்றிக் காட்டிய ஒரு சாமானிய முதல்வராக இங்கே அமர்ந்திருக்கிறார் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணியது செய்திடல் வேண்டும்; எதிலும் புண்ணியமே செலுத்திட வேண்டும். நினைத்ததெல்லாம் முடிக்க வேண்டும்; நீதிக்கு தலைவணங்கி நடந்திடல் வேண்டும் என்று வாழ்ந்த நம் தெய்வத் தாய் அம்மா அவர்கள் இட்ட கட்டளையை அவரது இதயத்தில் சுமந்து, போர்க்களங்களாக வருவதையெல்லாம் பூக்களங்களாக தன்னுடைய புன்னகையாலே மாற்றிக் காட்டுகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏரோட்டும் விவசாயிகளின் பிரதிநிதியாக இன்றைக்குத் தமிழ் மண்ணினுடைய தேரோட்ட வந்திருக்கிறார் மாண்புமிகு எடப்பாடியார். மண் தந்திட்ட பாசமிகு அண்ணனே! தீராநதி தமிழ் மண்ணுக்கு தீர்வுகள் படைக்கவே, கோட்டைக்கு வருகின்ற கோப்புகளுக்கெல்லாம் உடனடியாக உயிர் தந்து, தமிழ் தேசத்திற்கு நல்வழிகாட்டி வருகின்ற திராவிடத்தின் திசைகாட்டியே! (மேசையைத் தட்டும் ஒலி) திட்டமிட்டு எதிரிகளால் தங்கள்மீது ஏவப்படுகின்ற எண்ணில்லா ஏவுகணைகள்; ஒன்றா, இரண்டா, எத்தனை எத்தனை ஏவுகணைகள். என்ன நடக்குமோ என்று நாடே அச்சப்பட்டிருக்கிறபோது, அந்த ஏவுகணைகளையெல்லாம் கையிலே பிடித்து, காதுகளைக் குடைகின்ற குச்சியாக்கிக் காட்டுகின்ற சாமானிய முதல்வரே, சாதுர்ய முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி) கன்னித் தமிழ் பூமிக்கு காலம் தந்திட்ட களப் போராளியே, தமிழ் தேசத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற நாள் முதலாய், ஊண் உறக்கம் இல்லாமல், ஊர் ஊராகச் சென்று, அந்த ஊர் மக்களைச் சந்தித்து, நலம் விசாரித்ததோடு மட்டுமல்லாமல், 'என்ன குறை? ஏது குறை?' என்று கேட்டறிந்து, அந்தக் குறைகளையும் தீர்த்து வைத்து, இன்றைக்கு மக்களுடைய இதயத்திலே நீக்கமற இடம் பிடித்திருக்கிற சரித்திர முதல்வர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–40

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'இதுவரையிலே இவரால் முடியுமா?', 'இல்லையப்பா, இவரால் முடியாது?', 'இல்லை, இல்லை'. 'இவரால் முடியும்' என்று நாடெங்கும் பட்டிமன்றம் நடத்தி, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார்

அவர்களுடைய குணம் என்ன? அவருடைய மனம் என்ன? அவருடைய கருணையை, அவருடைய ஆற்றலை, திறமையை, பொறுமையை, சகிப்புத் தன்மையை, விடா முயற்சியை, உழைப்பை, எளிமையை, உண்மையை, அவருடைய இனிமையை, பண்பை, பாசத்தை, நேசத்தை, தலைமையை, மதிநுட்பத்தை, தொலைநோக்குப் பார்வையை நாடெங்கும் பட்டியலிட்டுப் பார்த்தவர்களெல்லாம், இப்போது நாடெங்கும் சொல்கின்ற ஒரே வார்த்தை, ஆம், "இனி இவரால்தான் முடியும்". (மேசையைத் தட்டும் ஒலி) பாசமிகு அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களே, தாய்த் தமிழ்நாட்டை தலைமை தாங்கி வழிநடத்திட "தங்களால்தான் முடியும்" என்று நாடெங்கும் உச்சரிக்கின்ற அந்த தெய்வச் சொல்லை, இந்த மாமன்றத்திலே நானும் எடுத்து வைத்து மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வெற்றிச் சரித்திரம், இந்த மண்ணிலே எந்நாளும் தொடர வேண்டும் என்பதற்கு ஆயிரம், ஆயிரம் அருள் ஆசிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுத்தான், இந்திய தேசத்தின் வலிமையுள்ள பாரதப் பிரதமரை, இரும்பு தேசத்தின் கரும்பு மனிதராக வழிமொழிந்து, தமிழ் தேசத்தின் பெருமையை அகில உலகிற்கு எடுத்துச் சென்றிட்ட (மேசையைத் தட்டும் ஒலி) நம் திராவிட இயக்க வரலாற்றின் முதல் அடையாளம், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் ஆசியும், ஆண்டவனின் ஆசியும் நம் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு இருப்பதால், அடுத்து வருவதும் "நம் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அம்மாவின் ஆட்சிதான்" என்பதற்கு தமிழ்நாட்டு மக்களே சாட்சி என்று கூறி, தங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் தந்த செங்கோலின் புனிதம் குன்றாது, தத்துவத்தைச் சுமக்கின்ற மகிமை குறையாது, இரு இலை கொண்ட இயக்கத்தை அதன் ஆட்சியை, இரு தலைமைகள் கூடி இமயத்தின் மிடுக்கோடு நடத்தி, சூழ்ச்சிகள் சூழாது, தற்காத்து நிற்கின்ற எங்கள் பாண்டிய நாடு தந்த எதற்கும் பதறாத பண்பாளர், மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களே!

(மேசையைத் தட்டும் ஒலி) கழகத் தேருக்கு கடையாணியாய், கருணைத் தாயிடம் கற்றறிந்த, கைதேர்ந்த அரசியலின் கனிவுமிகு ஞானியாய், ஒன்றரை கோடி தொண்டர்களைத் தன் உயிரிலே சுமந்து, கரை சேர்க்கும் தோணியாய், தெய்வத் திருமகனாரின் வழித் தோன்றலாய், தென் பாண்டி மண்டலம் பெற்றெடுத்த திருமகனே! தேனி தந்த தேனீயாய் உழைத்து உயர்ந்த ஒப்பில்லா பெருமகனே! சிப்பாய்ப் படை இயக்கத்திற்கு நம் அம்மா ஒப்படைத்துபோன பாசமகனே! (மேசையைத் தட்டும் ஒலி) ‘வாடி வாசல் திறக்காமல், வீடு வாசல் போக மாட்டேன்’ என்று ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டெடுத்து, தமிழரின் வீரத்தை, பாரம்பரியத்தைக் காத்திட்ட வீரமகனே! சுற்றிச் சுழன்று அடித்த அரசியல் சூறாவளியின் தாக்கத்தைத் தகர்த்து, தேனி நாடாளுமன்றத் தொகுதியை வென்று காட்டிய வெற்றி திருமகனே! மாண்புமிகு துணை முதலமைச்சர் அன்பான அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சி ஜனநாயகத்தின் மாண்புக்கு இலக்கணமாய், இப்பேரவையைக் கண்ணியம் குன்றாது நடத்தி திக்கெட்டும் புகழ்பரப்பும் இப்பேரவையின் சபாநாயகர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாய் இந்த அவையை வழி நடத்துகின்ற துணை சபாநாயகர் அவர்களுக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைத்துச் சேர்த்ததை, ஊருக்கே உயில் எழுதித் தந்த கலியுக வள்ளல், நம் பாரத ரத்னா, புரட்சித் தலைவர் அவர்கள். அவர் தந்த இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்; ஈகைத் திருமகள் நம் புரட்சித் தலைவி அம்மா, வாகையாய் வளர்த்து எடுத்த இயக்கம். மாண்புமிகு அம்மா அரசையும், காலத்தின் கொடையாக நமக்குக் கிடைத்த பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களோடும், அன்பு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களோடும், இந்த இயக்கத்தையும், நம் அம்மா அவர்களுடைய அரசையும், இன்றைக்கு மக்களோடு சேர்த்து பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற, இந்த அவையிலே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேர்களையும் இந்த நேரத்திலே நான் வணங்கி, சட்டமன்ற உறுப்பினர்களையும் பணிவோடு வணங்கி, என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 5–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும். இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்கு தந்திட்ட இலட்சிய வாக்கு. அந்த வழியில்தான் இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிநடத்துகிறார்கள். அதில் வருவாய்த் துறைக்கு அவர் கொடுக்கின்ற அந்த அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் எடுத்துத்தான் இன்றைக்குப் பல்வேறு துறைகளில் வருவாய்த் துறை முத்திரை பதித்துக்கொண்டிருக்கிறது.

முன்னுரையாக மாண்புமிகு உறுப்பினர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இந்த வருவாய்த் துறையின் பெருமையை அழகாக இங்கே சுட்டிக்காட்டினார். இது எவ்வளவு தொன்மையானது, எவ்வளவு பழமையானது, எவ்வளவு சிறப்பானது என்பதையெல்லாம் இங்கே எடுத்துச்சொன்னார்கள். நானும் என்னுடைய பதிலில் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட பழமைவாய்ந்த இந்த வருவாய்த் துறையை நவீன காலத்திற்கு ஏற்ற வகையில், அம்மா அரசால் உருவாக்க முடியுமா என்று ஒரு கேள்வி எழுகிறபோது, அதை உருவாக்க முடியும் என்று சாதித்துக் காட்டியிருக்கிற அரசுதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், இந்த வருவாய்த் துறையில், வருவாய் நிருவாகம், நில நிருவாகம், நிலச் சீர்திருத்தம், நகர்ப்புற நில உச்சவரம்பு, நில அளவை போன்ற பல்வேறு துறைகள் உள்ளடங்கியிருக்கின்றன. மாவட்ட நிலை முதல் கிராம நிலை வரை களப் பணியாளர்களைக் கொண்டு இந்தத் துறை செயலாற்றி வருகிறது. இந்தத் துறையின் பணிகளில் பொது வருவாய் நிர்வாகம், நில வருவாய் வசூல், சமூகப் பாதுகாப்பு, மாமன்றத்தில் பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஓய்வூதியத் திட்டங்கள், துயர் துடைப்புத் திட்டங்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு போன்ற பணிகளும் அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய் நிருவாகத்தில் 32 மாவட்டங்கள்; அதைத் தொடர்ந்து

87 கோட்டங்கள்; 305 வட்டங்கள்; 1190 குறு வட்டங்கள்; 16,688 வருவாய் கிராமங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த 305 வட்டங்கள் எப்படி வந்தன? இந்த 87 கோட்டங்கள் எப்படி வந்தன என்று நாம் வருவாய்த் துறையின் வரலாற்றினை ஆய்வுசெய்து, புரட்டிப் புரட்டி எடுத்துப் படித்துப் பார்த்தோமானால், தெளிவாகப் புரியும். ஒவ்வொரு அரசும் வருகிறபோது, இந்த வருவாய்த் துறையின் சேவைகளை மக்கள் எளிதில் பெற வேண்டும் என்பதற்காக வட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; கோட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; மாவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், வட்டங்களையும், கோட்டங்களையும், மாவட்டங்களையும் உருவாக்குவதில் ஒரு சரித்திர சாதனை படைத்த அரசு, இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், இன்றைக்கு 85 புதிய வட்டங்களையும், 11 கோட்டங்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மக்களின் நலனுக்காகத் தந்திருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்தத் துறையிலே இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் பணி நியமனம், துறையில் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் பதவி உயர்வு அளித்தல் போன்ற பல்வேறு நிலைகளில் காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு வருகின்றன என்பதை இங்கு நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குப் பிறகு, வருவாய்த் துறையில் கட்டடங்கள்: இங்குகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சில் பல இடங்களில் கட்டடங்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். பொதுவாக, பொது மக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையிலும், அலுவலகச் சூழலை மேம்படுத்தும் பொருட்டும், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களிலிருந்து, கிராம நிருவாக அலுவலர் கட்டடங்கள் வரை, வருவாய்த் துறையின்மூலம்தான் உருவாக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆச்சரியமாகக்கூட இருக்கும்; அந்த வகையில் மட்டும், 2011 ஆம்

ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் 493 கட்டடங்களை 612.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தந்திருக்கிற அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் பல்வேறு விவாதங்களை எடுத்துவைத்திருக்கிறோம். அதில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல், வெற்றிக் கோப்பை என்றைக்குமே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த வகையில்தான் இந்த ஆண்டு, ரூ.4,060.54 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு தந்திருக்கின்றார்கள்.

பொங்கல் பண்டிகைக்காக விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம். அது ஏழை மக்களுக்கான திட்டம் மட்டுமல்ல; நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற அடிப்படையில்தான் முதன்முதலாக பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடங்கி, அதைச் செம்மைப்படுத்தி, பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் அதைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் அதிலே தனிக் கவனம் செலுத்தி அந்தத் திட்டத்தை மக்களுக்காக செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–50

அதேபோன்று, அம்மா திட்டத்தைப் பற்றி பல்வேறு விவாதங்கள் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. நான் பல்வேறு முறை இந்த அவையில் அதுகுறித்து பதில் அளித்திருந்தாலும், 'திருப்புகழைப் பாட பாட வாய் மணக்கும்' என்பதைப்போல, அம்மா திட்டத்தை எத்தனை தடவை சொன்னாலும் அது சிறப்பாகவும், பெருமையாகவும் இருக்கும் என்பதன் அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள் பல இருக்கின்றன. மனு நீதி நாள் என்கிற குறை தீர்க்கும் முகாம் நாள் திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும், கோட்டாட்சியர் அவர்களின் தலைமை

அலுவலகத்திலும் நடத்தப்பட்டு, பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெறுகிறார்கள்; அதற்குத் தீர்வு காண்கிறார்கள். அவ்வாறு பெறுகின்ற மனுக்களையெல்லாம் உடனடியாக துறையின் அதிகாரிகள் ஆவணப்படுத்த வேண்டும் என்றும், அதிலும் கணினியில் அவற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்று இந்தத் தாய் நாட்டிற்கு மட்டுமல்ல; இந்திய தேசத்திற்கே முதன்முதலாக வழிகாட்டிய தலைவி புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, அம்மா திட்டத்திலே இதுவரை நாம் பெற்றிருக்கின்ற 63,49,123 மனுக்களிலே, 63,44,837 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, ஒரு சரித்திர சாதனை படைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு மக்கள் குறை தீர்க்கும் முகாமிலே, 63 இலட்சம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிற ஒரே திட்டம் புரட்சித் தலைவி அவர்களின் அம்மா திட்டம் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பற்றி இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இந்தியாவிலே மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872–ல் துவக்கப்பட்டு, 1881 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 15–வது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011–ல் நடைபெற்றது. இப்போது, 2021–ல் நடைபெறவிருப்பது இந்தியாவின் 16–வது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு; சுதந்திர இந்தியாவின் 8–வது மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் ஆகும். தமிழ்நாட்டில் இக்கணக்கெடுப்புப் பணி தொடர்பாக, தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கு நம்முடைய கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரை Technical Advisory Committee உறுப்பினராகச் சேர்த்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இ-அடங்கல் திட்டம்; நம்முடைய சோளிங்கர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், ஈரோடு மாவட்டத்தின் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் இதுகுறித்துப் பேசினார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் ஒரு முக்கிய பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. ஏனென்றால், இங்கே இருக்கின்ற பெரும்பாலான உறுப்பினர்கள் விவசாயத்தைச் சார்ந்திருப்பவர்கள். ஆகவே, விவசாயத்தினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் நன்றாக அறிவார்கள். விவசாயம் பருவ வாரியாக பயிர் செய்யப்படும் பயிர்களின் விவரம், விளைச்சல்,

நீராதாரம் போன்ற பல்வேறு புள்ளிவிவரங்கள் இப்பதிவேட்டிலே பதிவு செய்யப்படும். இது எல்லோருக்கும் தெரியும். விவசாயிகளும் இங்கே இருக்கிறார்கள். இந்தப் பதிவுகள் எல்லாம் காலம் காலமாக இந்தத் துறை தொடங்கியதிலிருந்து அதிகாரிகள்தான் அந்தக் குறிப்பேட்டிலே எழுதுவார்கள். அவர் என்ன எழுதுகிறாரோ, அதை அப்படியே ஏற்றுக்கொள்வோம். அதற்கு மாற்று இருந்தால், நாம் அதற்குப்பிறகு கருத்து தெரிவிக்கலாம்.

முதன்முதலாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர் என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில், என்னுடைய அடங்கலிலே நான் பயிர் செய்கின்ற அந்த விவரங்களைப் பதிவு செய்யமுடியும் என்ற நிருவாகப் புரட்சியைச் செய்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் விவசாயிகளிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அவர்களே அவர்களின் நிலத்தின் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்; பார்த்துக்கொள்ளலாம். அதிலே வேறுபாடு இருந்தால், என்ன செய்வது என்று உறுப்பினர்களுக்கு ஒரு ஐயம்கூட எழலாம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களே, அதிகாரி எழுதுவதிலும், விவசாயிகள் எழுதுவதிலும் வேறுபட்டால் என்ன செய்வது என்று? அதற்கும் ஒரு வழிமுறை வைத்துள்ளோம். அதற்கு மேல்முறையீடு செய்யும் அதிகாரிகளிடத்தில் சென்று, அதற்குத் தீர்வு காணமுடியும் என்கிற வழிமுறைகளையெல்லாம் மிக ஆக்கப்பூர்வமாக, அறிவுபூர்வமாக தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து பேரிடர் மேலாண்மை. வருவாய்த் துறை இயற்கை இடர்பாடுகளின்போதும், மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின்போதும், பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைத்து எல்லோருடைய எதிர்பார்ப்பிற்கேற்ப முன்னின்று செயல்பட்டு வருகிறது. பேரிடர் காலங்களில் எளிதில் சென்றடைய முடியாத, நெருங்க முடியாத இடங்களில்,— நெருப்பு வந்து விட்டால் அந்த நெருப்பைப் பார்த்து எல்லோரும் பயந்து ஓடுவார்கள். அப்படி எல்லோரும் அஞ்சி ஓடுகிறபோது, பேரிடர் மீட்புப் படை, வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறைகளைச் சார்ந்தவர்கள் அந்தத் தீயிலே குதித்து,

வெள்ளத்திலே குதித்து, மனித உயிர்களைக் காப்பாற்றுவதை தங்களது கொள்கையாக, இலட்சியமாக வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கொள்கையும், இலட்சியமும் எல்லா அரசும் ஆட்சியில் இருக்கிறபோது இருக்கிறது. அதிலே மாறுபாடு இல்லை. ஆனால், அவர்கள்மூலம் அதைச் சரியாகச் செயல்படுத்திக் காட்டுகிற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–55

அடுத்து, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018–2030 குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் கேட்டார்கள். தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டத்தில் 14 இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை எட்டுவதற்காக கால அவகாசம் இருக்கிறது.

அடுத்து, கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டம்; இத்திட்டம் குறித்து ஏற்கெனவே விவாதித்திருக்கிறோம். இத்திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கஜா புயல் நிவாரண நடவடிக்கைகள் குறித்து நாம் ஏற்கெனவே பல விவாதங்களைச் செய்திருக்கிறோம். கஜா புயலின்போது, முதன்முதலாக ஒரு மனிதநேயமிக்க அணுகுமுறை இருந்தது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே இருக்கக்கூடிய மூத்த அமைச்சர்களான மாண்புமிகு அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு அண்ணன் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை போன்றவர்கள் மக்களோடு மக்களாக இருந்தார்கள். மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், இரவு 2–00 மணிக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக என்னோடு இருந்து, நாகப்பட்டினத்திலிருந்த, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களுக்கும், திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. ஆர். காமராஜ் அவர்களுக்கும்

தகவல் சொல்லிக்கொண்டிருந்தார். புதுக்கோட்டைக்கு புயல் வருமென்று அவர் நினைக்கவேயில்லை. புதுக்கோட்டைக்கு புயல் வந்துவிட்டது என்று சொன்னவுடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள், புயல் அங்கே வருவதற்குள், புயல்போல் அந்த இடத்திலிருந்து மறைந்து, அங்கே களத்திற்குச் சென்று பணியாற்றினார். “ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரவும், பகலும், விழித்திருந்து அறிவுரை கொடுத்ததன் காரணமாகத்தான் இந்திய அரசியல் வரலாற்றிலே ஒரு பேரிடரின்போது மனித உயிரிழப்புகளைக் குறைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக மீனவர்கள்; லேசாக மழை பெய்தால் 2 மீனவர்கள் இறந்துபோய்விடுவார்கள். கொஞ்சம் வேகமாக அலை அடித்ததென்றால், 10 மீனவர்கள் இறந்துபோய்விடுவார்கள். 12 மாவட்டங்களிலே சூறாவளியாக வீசிய அந்த கஜா புயலின்போது, ஒரு மீனவர்கூட இறக்கவில்லை என்று சொன்னால், எங்கள் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இரவு, பகலாக அதைக் கண்காணித்து, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தார்கள். அந்த வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு செயல்பட்டிருக்கிறது; நிவாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்ல; மறு கட்டமைப்பு மற்றும் சீரமைப்பு தொலைநோக்குப் பார்வை. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் அதைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். 2 இலட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். அதேபோல, பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரணங்கள் கொடுத்ததோடு மட்டுமல்ல; திரும்ப அந்த தென்னை மரங்களை நட்டு, அவர்கள் பிள்ளைபோல் பாதுகாத்து வந்த அந்த தென்னை மரத்தை மீண்டும் அவர்கள் கண்களிலே பார்க்கிறவரை இந்த அரசு உழைத்துக்கொண்டேயிருக்கும்; அவர்களுக்கு உதவி செய்துகொண்டேயிருக்கும் என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தொலைநோக்குத் திட்டத்தை அமைத்துக்கொடுத்திருக்கிறார்கள். அதற்கு Dr. ஜெகன்நாதன் என்கிற I.A.S. அதிகாரியை நியமித்து, அவர் சூறாவளியாக சுழன்று பணியாற்றி, அவருக்கு கீழே பல்வேறு அலுவலர்களை வைத்து, அதைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில நிருவாகம்; “ஜனநாயக நாட்டிலே, நம்முடைய அடிப்படை உரிமைகளைப்

பெறுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதன் அடிப்படையில் மக்கள் வைக்கின்ற கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கவனமாக பரிசீலித்து, அதை நிறைவேற்றித் தருவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்''—இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் நமக்குத் தந்திட்ட இலட்சிய வாக்கு.

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும், விவசாய நிலங்களையும் மற்றும் அனைத்து நிலங்களையும் பாதுகாப்பது நம்முடைய வருவாய்த் துறை. அரசினுடைய நிலங்கள் மட்டுமல்ல; எல்லா நிலங்களுடைய பாதுகாவலனாக நம்முடைய வருவாய்த் துறை இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள்கூட ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் பல மாநிலங்களிலே யாருடைய நிலம் யாருடையது என்று சொல்லமுடியாமல் அரசு தத்தளித்துக் கொண்டிருப்பதால் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்தியாவிலேயே, உங்கள் நிலம் எங்கிருக்கிறது என்று நீங்கள் இப்போது கேட்டால், இந்த இடத்திலிருந்தே பட்டனைத் தட்டி, ஐயா மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது இடம் இந்த இடத்திலே, அவிநாசியிலே இங்கு இருக்கிறது என்று சொல்கிற ஒரு நவீன புரட்சியை, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசிலே மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள்தான் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது சரி. ஆனால், எனக்கு அவினாசியில் இடம் ஒன்றும் இல்லை. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணைய வழி பட்டா மாறுதல் திட்டம். 1–4–2018 முதல் 31–3–2019 வரையில் இத்திட்டத்தின்கீழ் 11.95 இலட்சம் பட்டா மாறுதல் ஆணைகள் இணைய வழியிலே நாம் செய்திருக்கிறோம். இதற்கு முன்பு பட்டா மாற்ற வேண்டுமென்றால், சாதாரண காரியமல்ல. பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து பட்டா மாற்றவே முடியாது. ஆனால், இப்போது பட்டனைத் தட்டியவுடன் பட்டா மாற்றுகிற திட்டத்தைக் கொண்டுவந்து நிருவாகப் புரட்சி செய்திருப்பவர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். அதேபோல, பத்திரப் பதிவுத் துறை. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் இதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இதுவரை 4, 5 ஆய்வுக் கூட்டங்களை நடத்தியிருக்கிறார். எப்போது என்னைச் சந்தித்தாலும், "வருவாய்த் துறை அமைச்சர் உதயகுமார் அவர்களே, பத்திரம் அங்கு பதிந்தவுடன் உங்களுடைய வருவாய்த் துறையினுடைய ஆவணங்களிலே அதுகுறித்த பதிவுகள் செய்யப்பட வேண்டும்" என்று அறிவுறுத்தியிருக்கிறார். பொதுவாகப் பார்த்தால், ஒரு நிலத்திற்கு இரண்டு வகையான ஆவணங்கள் உண்டு. ஒன்று, நாம் பத்திரத் துறையிலே போய் பதிந்தவுடன், அதில் என்ன பார்ப்பார்கள் என்றால் guideline value பார்ப்பார்கள். Guideline value சரியாக இருந்தால் உடனே அதனைப் பதிந்த பிறகு பத்திரத்தை கொடுத்து விடுவார்கள். அதன் பிறகு parent document–ஐ எடுத்துப் பார்த்தால், பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து அந்த பட்டா பெயர் மாற்றம் செய்யாமல் அப்படியே இருப்பது தெரியவரும். பின்னர் அந்தப் பட்டாவை பெயர் மாற்றம் செய்வதற்குள், அந்த நபருக்கு வயதாகிவிடும்.

பிற்பகல் 6–00

ஆனால், அம்மா வழியில் ஆட்சி செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், எங்கள் துறை அலுவலர்களை அழைத்து, பத்திரப் பதிவுத் துறையில் ஒருவர் ஒரு ஆவணத்தைப் பதிகிறார் என்று சொன்னால், உடனடியாக வருவாய்த் துறையினுடைய ஆவணங்களில் உள்ள சிட்டா, அடங்கல், பட்டா அனைத்திலேயும் அந்த பெயர் மாற்றம் வர வேண்டுமென்கிற ஒரு புரட்சியை, நிருவாகத்தில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பத்திரப் பதிவில் உள்ள STAR என்கிற மென்பொருளோடு ஒருங்கிணைக்கப்பட்டு, கணினிப்படுத்தப்பட்ட 'தமிழ்நிலம்' எனும் இரண்டு மென்பொருள்களும் இணைக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "எங்கிருந்தாலும், எந்த நேரத்திலும் இணைய வழி சேவைகள்" (Anytime, anywhere) கீழ், நாம் எங்கிருந்தாலும் பார்த்துக்கொள்ளலாம். பட்டா, புலப்படச் சுவடி மற்றும் TSLR பட்டா, அ-பதிவேடு, புல எண்களின் தனிநபர் உடமை, அரசு நிலம் குறித்த விவரம், இணையவழி பட்டா மாறுதல் விண்ணப்பங்களின் நிலை அறிதல் ஆகியவற்றை நாம் தெரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, தொன்மையான நில ஆவணங்களைக் கணினிமயமாக்குதல்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், இன்று காலையில் பேசுகிறபோது மிக அழகாகச் சொன்னார்கள். நீங்கள் சான்றிதழ்களை எல்லாம் கொடுத்து வருகிறீர்கள். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், அங்கொன்றும், இங்கொன்றுமாக சில இடங்களில் இ–சேவை மையங்கள் மூடப்படுகிறது என்று சொன்னார்கள். எடுத்தவுடனேயே நாம் இ–சேவை மையத்தில் கொடுத்துவிட முடியாது. இந்த நிலைக்கு நாம் வருவதற்கு, அம்மாவின் அரசு என்னென்ன வகையில், என்னென்ன முயற்சிகளை, நடவடிக்கைகளை எடுத்து, அதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த தொன்மையான நில ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட வேண்டும். அந்த வகையில், தொன்மையான நில ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்ட அலுவலகங்களில் உள்ள தொன்மை வாய்ந்த மதிப்புமிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவற்றை எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பாதுகாக்கும் பொருட்டு, முதன்முதலாக கணினிமயமாக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இத்திட்டமானது ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பாதுகாக்கப்பட்டு வரும் அசல் நிலவரித் திட்டப் பதிவேடுகள் (Original Settlement Register) திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தொன்மை வாய்ந்த மதிப்புமிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவை கணினிமயமாக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தில் 3,56,244 பக்கங்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4,62,445 பக்கங்களும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3,69,777 பக்கங்களும் கொண்ட பழைய கோப்புகள், ஆவணங்கள் முதலியவை கணினிமயமாக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த, 1,03,361 பக்கங்கள் கொண்ட மறுநில அளவைப் பதிவேடுகள் (Re-Settlement Registers) இத்திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புள்ளிவிவரங்களை எதற்காக நான் சொல்கிறேன் என்றால்— கடந்த காலங்களில் நாம் விவசாய நிலம் வாங்கினாலும் சரி, வீடு கட்டுவதற்காக நிலம் வாங்கினாலும் சரி, தொழிற்சாலை அமைக்க நிலம் வாங்கினாலும் சரி, பள்ளிக்கூடம் கட்ட நிலம் வாங்கினாலும் சரி, மருத்துவமனை கட்ட நிலம் வாங்கினாலும் சரி, அந்த நில

ஆவணங்களைப் பார்ப்பதற்காக தாசில்தார் அலுவலகத்திற்கோ, கிராம நிருவாக அலுவலகத்திற்கோ சென்றால், அவர் ஆவணத்தை எடுத்து வந்து நம் முன் போடுவார். அந்த ஆவணம் கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் அல்லது 100 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணமாக இருக்கும். அதை மாற்றவும் முடியாது. மேலும் அதனைப் பார்த்தால், டார், டாராகக் கிழிந்து, கிழிந்து போன பக்கங்களில் cellotape போட்டு ஒட்டி வைத்திருப்பார்கள். Cellotape போட்டு ஒட்டி இருக்கும் பக்கத்தில் ஒரு mark நமக்கு தெரியவில்லை என்றால், அதன் பிறகு நாம் Supreme Court–க்கு appeal வரை போனாலும், கிராம நிருவாக அலுவலர் அந்தக் குறிப்பினை எடுத்துக்கொண்டு போய் காண்பிக்கும் நிலை இருந்தது. ஆனால், முதன்முதலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், இந்தத் தொன்மையான நில ஆவணங்கள் எல்லாம் கணினிப்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார். அதனடிப்படையில், இத்தனை இலட்சம் பக்கங்களைக் கணினிமயமாக்கிக் காட்டிய அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அந்த ஆவணங்களை எல்லாம் கணினிமயமாக்கி இருக்கின்ற காரணத்தினால்தான், இ–சேவை மையங்களில் நாம் easy ஆக சான்றிதழ்களை எளிமையாக, உடனடியாகப் பெற முடிகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு மனை ஒப்படை பற்றிய பல்வேறு விவாதங்கள் இங்கே நடைபெற்றன. இருந்தபோதிலும், 23 இலட்சம் எண்ணிக்கை அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுத்திருப்பது என்பது ஒரு வரலாற்று சாதனை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அடுத்து, நிலமாற்றம்; நில உரிமை மாற்றம். சுகாதாரம், கல்வி, காவல் போன்ற சில மாநில அரசுத் துறைகளைப் பொறுத்தமட்டில், அத்துறைகளின் அத்தியாவசியத் தேவைக்கேற்ப, ஆட்சேபணையற்ற அரசு நிலங்களை, நிலமாற்றம் செய்து வழங்கிட மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 543 இனங்களில் 4,396 ஏக்கர் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன.

அதேபோல, நில உரிமை மாற்றம் என்பது,மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள், மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளுக்கு நாம் நில உரிமை மாற்றம் செய்கிறோம். அந்த வகையில், 441

இனங்களில் 5,052 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள் பொது நோக்கங்களுக்காக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

பிற்பகல் 6–05

அடுத்து, குத்தகை. குத்தகை என்று பார்த்தோம் என்றால், lease rent–ஐ யாரும் தரமாட்டார்கள். யார் போய்க் கேட்டாலும் தர மாட்டார்கள். காவல் துறையை வைத்து கேட்டாலும், அவர்களிடமிருந்து அந்த lease rent–ஐ வாங்க முடியாது. ஏனென்றால், நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும். அதனால் வாங்க முடியாது. இதை சாதுர்யமாக கையாள வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். அப்போது, இன்றைக்குத் தலைமைச் செயலாளராகப் பணியாற்றி வருபவர், முன்பு நிதித் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளராக இருந்தபோது, 'நம்முடைய வருவாய்த் துறையிலே ஒரு காலத்தில் நீங்கள்தான் வருவாயைக் கொடுத்தீர்கள்; நில வருவாய் இருந்தது. இன்றைக்கு வருவாய்த் துறையிலே எந்த வருவாயும் இல்லையே! சேவைத் துறைக்காக எத்தனை திட்டங்கள்; OAP–க்கு நிதி கோருகிறீர்கள்; புதிய வட்டம் மற்றும் புதிய மாவட்டம் உருவாக்குவதற்காக நிதி கோருகிறீர்கள். ஆகவே, அந்த வகையில் உங்களுடைய பங்களிப்பு ஏதாவது இருக்க வேண்டும்' என்று அவர் உணர்த்தினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அறிவுறுத்தியதன் காரணமாக, ஒரு வரலாற்றுச் சாதனையாக, இதுவரை குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகைத் தொகையாக ரூ.73,90,43,439/- அளவிற்கு வசூல் செய்த ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, ஆக்கிரமணங்களை அகற்றுதல் சட்டம். நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆக்கிரமணங்கள் செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தொடக்க நிலையிலேயே அந்த ஆக்கிரமணங்களைத் தடுக்க வேண்டும். வீடு கட்டியபிறகு, அதற்குப்பிறகு சென்று Notice கொடுப்பது, நீதிமன்றம் செல்வது போன்றவை இருக்கக் கூடாது" என்று அறிவுரைகள் வழங்கியிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொடக்க நிலையிலே ஆக்கிரமணங்களைத்

தடுக்க வேண்டுமென்றும், எந்தவிதமான ஆக்கிரமணங்களும் இருக்கக் கூடாது என்றும் வருவாய்த் துறைக்கு அறிவுரைகளை வழங்கியிருக்கிறார். அதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில அளவை மற்றும் நில வரித் திட்டம். 160 ஆண்டுகள் பழமைவாய்ந்த திட்டம் இது. நிலம் என்பது மனித இனத்திற்கு பெருமதிப்புள்ள ஆதாரமாகும். மனிதர்கள் எப்பொழுதும் தன் வசமிருந்த நிலத்தின் எல்லையை நிர்ணயம் செய்திட தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வந்துள்ளனர். அந்த வகையில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வந்த நில அளவை முறைகளுக்குப் பதிலாக, தற்போது டிஜிட்டல் முறை நவீன கருவிகள் கையாளப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர், நிலத்தை அளக்க வேண்டுமென்று சொன்னீர்கள் என்றால், செயின், குத்தூசி இதெல்லாம் எடுத்துவந்து அளப்பதற்காக மலைக்குச் சென்று, அதில் பாதி பேர்கள் கீழே விழுந்து விடுவார்கள். அதிகளவில் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. நிலத்தை அளக்கவே முடியாது. தற்போது அவ்வாறு இல்லை. மலையில் அளக்க வேண்டுமா? நவீனக் கருவிகள் கொண்டு உடனடியாக அளக்கிறார்கள். தரைப் பகுதியில் அளக்க வேண்டுமா? அதையும் அளக்கிறார்கள். நிலச் சரிவு பகுதிகளிலும், மனிதர்கள் செல்ல முடியாத பகுதிகளிலெல்லாம்கூட அளக்கிறார்கள். இவ்வாறு நில அளவையில் இன்றைக்குச் சரித்திர சாதனை படைத்து, இவருடைய நிலம் இவரதுதான் என்பதை அத்தாட்சியோடு தருகிற, 160 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட நில அளவை அலுவலகத்திற்கு தனிக் கட்டடம் ஒன்றை சென்னை மாநகரில் உருவாக்கித் தந்தவர் நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் வழியிலே இன்றைக்கு நில ஆவணங்களை கணினிமயமாக்கும் பணி, நில அளவைக்கு நவீன கருவிகள் வாங்கித் தருவது போன்றவற்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியை அள்ளி, அள்ளித் தருகின்றார்கள். மக்கள் நலன்களைக் காப்பாற்றுகிறவகையில் நில அளவைக்குக் கருவிகள் வேண்டுமென்றால், அதற்காகவும் அவர் உடனடியாக நிதியை வழங்கி, எங்களை ஊக்கப்படுத்துவதால், இன்றைக்கு நில அளவைத் துறை அதிகாரிகள் உற்சாகமாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். Estate ஒழிப்புச் சட்டங்கள் குறித்தெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அங்கேயெல்லாம்

இன்னும் நிலம் அளக்கப்படவில்லை. நில வரி சம்பந்தமான பணிகள் இன்னும் முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நத்தம் நில ஆவணங்கள், நகர நில ஆவணங்கள், புலப்படங்கள் போன்றவை கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. வெறும் ஆவணங்கள் மட்டுமல்ல; புலப்படங்களைகூட கொலாப்லேண்ட் மென்பொருள்மூலம் 55.25 இலட்சம் புலப்படங்களை இதுவரை கணினிமயமாக்கியிருக்கிற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நில வரித் திட்டம், நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை நில வரியாக வருவாய்த் துறை வசூலித்து வருகிறது. நில வரி நிர்ணயிப்பதற்காக கடைபிடிக்கப்படும் முறை நில வருவாய் நில வரித் திட்டம் எனப்படுகிறது. இங்கே கன்னிப் பேச்சில் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட, கஜா புயலால் பாதிப்பு ஏற்பட்டபோது, இவ்வளவு நிவாரணம் வழங்கியுள்ளீர்கள். அதெல்லாம் சரிதான். மேலும், நில வரியை நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்களும், நான் எங்கேயாவது சென்றால்கூட, two-wheeler–ஐ நிறுத்தி, “விவசாயிகளுக்கான நில வரியைத் தள்ளுபடி செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லுங்கள்” என்று என்னிடம் அடிக்கடி தெரிவித்திருந்தார். ஏற்கெனவே நில வரி குறைந்து போய்விட்டது. 8 கோடி ரூபாய்தான் வசூல் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த கேட்புத் தொகையே 8 கோடி ரூபாய்தான் நில வரி என்ற வகையில் வருவாய்த் துறைக்கு இருக்கிறது. அதிலும் வறட்சி ஏற்பட்டாலும், அதை தள்ளுபடி செய்து விடுகிறோம். புயல்கள் தாக்கும்போதும் தள்ளுபடி செய்கிறோம். எனவே, நில வரியைத் தள்ளுபடி செய்வது குறித்த விதிமுறைகளை வரையறை செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு மூத்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நில வரித் திட்டம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நிலச் சீர்திருத்தம். நிலச் சீர்திருத்தம் என்பது விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்பு சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச் சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும், அவர்களது குடும்ப நபர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பூமிதான் சட்டமும் இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 6–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி என்பது அனைத்து நகர்ப்புற நிலங்களையும், வரி விதிப்புக்குட்படுத்துதல்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவது. நகர்ப்புற நிலங்கள் மிகச் சில நபர்கள் கைவசம் மட்டுமே குவிந்துக் கிடப்பதையும், அந்த நபர்கள் இலாபம் ஈட்டும் நோக்குடன் செயல்படுவதையும் தடுத்து, அனைவருக்கும் சமமான முறையில் நிலப் பங்கீடு செய்து கொடுக்க, பிப்ரவரி 2017 முதல் 2019 வரை தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் ரூ.20 கோடி நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்குப் பல்வேறு கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் நாம் கவனத்தோடு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றோம். சுருக்கமாக நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால், நாம் இங்கு எத்தனையோ துறைகளைப் பார்க்கிறோம். தற்போது பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள்; கூட்டுறவுத் துறையில் படைக்கிறார்கள்; உள்ளாட்சித் துறையில், மீன் வளத் துறையில், உலகம் வியக்கின்ற வகையில் உயர் கல்வித் துறையில், சட்டத் துறையிலே எல்லாம் சாதனைகளைச் செய்கின்றார்கள். அதேபோன்று, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, விவசாயத் துறை, செய்தித் துறையைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், பல்வேறு சாதனைகள்; இதுவரையில் இத்தனை மணிமண்டபங்கள் கட்டியதே இல்லை. பக்கத்திலேயே இருந்து, எங்களது செய்தித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், "தியாகிகளைப்

போற்றுவோம்; தியாகத்தைப் போற்றுவோம்; தமிழ் வணக்கம் செலுத்துவோம்" என்று சொல்லி, அத்தனை மணிமண்டபங்களை அமைத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் அந்தத் துறைகளின் சிறப்பு.

ஆனால், எங்களது வருவாய்த் துறையைப் பொறுத்தவரை, சிறப்பு என்னவென்று சொன்னால், ரொம்ப, ரொம்ப பழசு. அப்படிப் பழமைவாய்ந்த இந்தத் துறையிலே புதுமைகளைப் புகுத்த வேண்டும் என்று சொன்னால், ரொம்ப கவனமாக புகுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால், அதை Accommodate செய்யாது; Accept செய்யாது; ஏற்றுக்கொள்ளாது; அது இடம் கொடுக்காது. அப்படிப்பட்ட பழமையான, பாரம்பரியம் வாய்ந்த, சிறப்புவாய்ந்த இந்தத் தாய்த் துறையான வருவாய்த் துறையில், இன்றைக்கு மகுடத்தைச் சூட்டுகின்றவகையில், ஒரு நவீன விஞ்ஞானியாக இருந்து, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்த வருவாய்த் துறையைச் சீரமைத்து, இன்றைக்கு வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது வழியிலே, எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வழிநடத்துகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, வருவாய்த் துறையிலே கேட்டதெல்லாம் கிடைக்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவுரைக்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி, மக்களுடைய ஆட்சி; மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆட்சி; ஏழை எளிய ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதாரம் மேம்பாடடைய வேண்டும், உயர வேண்டும் என்பதற்காக இரவு, பகல் பாராமல் உழைக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி மக்கள் ஆட்சி; மக்களுடைய ஆட்சியை யாராலும் அசைக்க முடியாத ஆட்சி. இதனை யார் சொன்னது? சாமானிய முதல்வர், ஒரு விவசாய முதல்வர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அவரது இந்தக் கருத்தை நம்முடைய வருவாய்த் துறை இலட்சிய வாக்காக எடுத்துச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றது.

பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில், அம்மா அரசு இடர்பாடின்றி 2021–லும் தொடர வேண்டும் என்கிற முன்னோட்டத் தீர்ப்பை நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தல்மூலம் வழங்கிய தமிழ் மக்களுக்கு, இப்பேரவை வாயிலாக என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "இந்த நிலம் ஆளும் கோட்டையானது,

அண்ணன் எடப்பாடியாருடைய நீதி குன்றா செங்கோலிடம்தான் இளைப்பாறுதல் வேண்டும்” என்கிற தீர்ப்பை நிலக்கோட்டை முன்மொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) அதனை விளாத்திகுளம் வழிமொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) சாத்தூரும், பரமக்குடியும், மானாமதுரையும் ஆமோதிக்க, (மேசையைத் தட்டும் ஒலி) சூலூரும், சோளிங்கரும், பாப்பிரெட்டிபட்டியும், அரூரும் இதனைத் தலைவணங்கி இலை வணக்கம் செய்திருக்கிறது என்பதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாக்களித்த வாக்காளர்களுக்கு, நாவால் நன்றி சொல்வது அம்மாவின் பிள்ளைகள் அல்ல; தான் தலைமைதாங்கி வழிநடத்தும் அம்மா அரசின் திறத்தால் நன்றி உரைப்பேன் என்று அயராது உழைத்து வருகின்ற பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உழைப்பிற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தியாகத்திற்கும், அவருக்கு எந்நேரமும் உறுதுணையாக இருந்து, அதைச் செயல்படுத்துவதிலே இன்றைக்கு சாதனை படைத்து வருகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவருடைய உழைப்பிற்கும், தியாகத்திற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி உரிமையை மீட்டெடுத்த கைராசிக்கார முதல்வர் அண்ணன் எடப்பாடியாரின் தலைமையிலான அம்மா அரசில், பைந்தமிழ் பூமிக்கு, பத்தாயிரம் தடுப்பணைகள் எழ இருக்கின்றன. அப்படி எழும் அணைகளை நீர்கொண்டு நிரப்பிட, வடக்கிலிருந்து கோதாவரி தண்ணீர், வளர்தமிழ் பூமிக்கு ஓடிவர, ரூ.64 ஆயிரம் கோடியில் அகிலம் வியக்கும் அற்புதத் திட்டத்தை அம்மா அவர்களின் அரசு அரங்கேற்றம் செய்யவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இக்காருள்ள காலம் வரை, இந்த பாருள்ள காலம் வரை, தமிழர் குலச்சாமி நம் அம்மா அவர்களின் அழியாப் புகழ் என்றும் நிலைத்திருக்க, மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் நல்ல அரசே தொடரட்டும் என தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்கள் தந்திட்ட நல்வாக்கிற்கு இந்த நேரத்திலே நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். மின்வெட்டும் இல்லை, மீத்தேனும் இல்லை, பள்ளியில் பந்தியிட்டு, ஆலயத்திலும் அன்னமிட்டு, இல்லங்கள்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி தந்து, கழக அரசு அன்னமிட்டு மகிழ்வதாலே, இந்தத் தாய்

மண்ணில் கன்னமிட்டு வாழ்கிற சூத்திரதாரிகளுக்கு இனி இங்கு இடம் இல்லை என்கிற நிகரில்லா பொற்காலத்தை, இந்தத் தமிழ் மண்ணுக்கு சாத்தியமாக்கி கொண்டிருக்கிறது நம் சாதனைத் தாய் வழி அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா முழுவதும் ஒரே பேச்சு. அத்திவரதரை தரிசிக்க வேண்டும். மாண்புமிகு நம்முடைய இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய சிறப்பான ஏற்பாட்டினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலின்படி செய்ததோடு மட்டுமல்லாமல், அழைப்பும் விடுத்திருக்கிறார். இதில் என்னவொரு சிறப்பு என்று கேட்டீர்களென்றால், 40 ஆண்டுகளுக்கு முன்பாக, கடந்த முறை அத்திவரதர், நீர் விட்டு எழுந்து நிலம் நோக்கி வருகையில், இந்தத் தாய் நாட்டிலே பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களின் புனித அரசுதான் நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முறை, 40 ஆண்டுகள் கழித்து, அத்திவரதர், நீர் விட்டு எழுந்து நிலம் நோக்கி வருகையில், கொங்குநாடு தந்த கொடை, மாண்புமிகு எடப்பாடியார் தலைமையிலான அம்மாவின் அரசு, நாடு போற்றும் நல்லாட்சியை நடத்தி வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இனி, அடுத்த முறை அத்திவரதர், நீர் விட்டு எழுந்து நிலம் நோக்கி வருகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் குடிமராமத்து திட்டம் தந்திட்ட, பசுமை புரட்சியாளர் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் தலைமையில்தான் இருக்க வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வ வாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தலைவர்கள் காட்டிய வழியில் தொண்டர்களால் நடத்தப்படும் ஆட்சி. ஆண்டவன் காட்டிய வழியில் அம்மாவின் பிள்ளைகள் நடத்துகின்ற அப்பழுக்கில்லா அரசாட்சி. இதனை எத்தனை அரசியல் அச்சுறுத்தல்களாலும் அசைத்துப் பார்க்க முடியாது. பாசமிகு அண்ணன் மாண்புமிகு எடப்பாடியாரின் தலைமையிலான அம்மாவின் புனித அரசு தொடரட்டும்!

நாடெங்கும் மக்கள் நலம் பெருகட்டும்! அம்மாவின் பிள்ளைகள் நடத்துகின்ற இலட்சியப் பயணம் வெல்லட்டும்! வெற்றி சரித்திரம் படைக்கட்டும்! "எங்கள் சொல்வாக்கு சுத்தமாக இருக்கிறது. அதனால் எங்களுக்கு செல்வாக்கு பெருகி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் மக்கள் தங்கள் நல்வாக்குகளை எங்களுக்கு அளிக்கிறார்கள்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த அவையிலே கதை சொல்வது ஒரு மரபாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தவளை கதை சொல்லி அத்தனை பேரையும் அசத்தினார் எங்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், ஒரேயொரு வரிதான்;

"ஏகநாதர்" என்ற ரிஷி ஒருவர் இருந்தார். எப்போதுமே அவர் கங்கையில் நீராடுவார். ஒருநாள் அவர் கங்கையிலே நீராடி, கரைக்கு வருகிறபோது, வெள்ளாடை அணிந்து வருகிறார். அவரைப் பார்த்தவுடனே வம்பிழுக்கக்கூடிய ஒரு வம்புக்காரர், வெற்றிலை போட்டுக்கொண்டிருக்கிற அந்த வெற்றிலை எச்சிலை அந்த வெள்ளாடையில் துப்பிவிடுகிறான். உடனே, அந்த வம்புக்காரர் நினைக்கிறார். இந்த ஏகநாதர் நம்மீது கோபப்படுவார்; நம்மை திட்டுவார் அல்லது அவருடைய கவனம் திசை திரும்பும் என்று எதிர்பார்க்கின்றார். ஆனால், ஏகநாதர் என்ன செய்தார்? திரும்பவும் கங்கைக்குள்ளே போனார், குளித்தார். மறுபடியும் வெளியே வந்தார்.

மறுபடியும் அந்த வம்புக்காரர் வெற்றிலை எச்சிலை அவர்மீது துப்புகிறார். மறுபடியும் ஏகநாதர் கோபப்படுவார், ஆத்திரப்படுவார், நம்மை திட்டுவார், நம்மை வம்பிழுப்பார். அதைவைத்து நாம் கவனத்தை திசை திருப்பலாம் என்று நினைத்தார். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. மறுபடியும் கங்கைக்குள்ளே போனார், குளித்தார். மறுபடியும் வெளியே வந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னால் நம்பமாட்டீர்கள். 100 தடவை இந்த வம்புக்காரர் இதேபோல அவர்மீது எச்சிலைத் துப்பினார். நானாக இருந்தால்கூட கோபப்பட்டிருப்பேன். யாராக இருந்தாலும், மனிதர்களுடைய இயல்பு அதுதானே, புரட்சித் தலைவரே 3 தடவைதான் choice கொடுக்கிறார். 1, 2, 3. 3–வது தடவைக்குமேல் அவருடைய ஆட்டத்தை அவர் ஆரம்பித்துவிடுவார்.

ஆனால், இந்த ஏகநாதர் 100 தடவை பொறுத்துக்கொண்டு, பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபடியும் கங்கையில் போய் குளித்துவிட்டு அந்த வம்புக்காரரைப் பார்த்து சிரிக்கிறார். அவன் கேட்கிறான், 'நீ மனிதனா? இத்தனை தடவை உன்னைத் துப்புகிறேனே, என்மீது நீ கோபப்பட வேண்டாமா?' என்று கேட்கிறபோது. 'நன்றி வம்புக்காரரே' என்று அவர் சொல்கிறார். 'நீ மனிதனே கிடையாது. நன்றி எதற்காகச் சொல்கிறாய்?' என்று அந்த வம்புக்காரன் ஏகநாதரைக் கேட்கிறான். 'வம்புக்காரரே, வம்புக்காரரே, நீ எச்சிலை, வெற்றிலை எச்சிலை என்மீது துப்பவில்லையென்று சொன்னால், ஒரு முறை கங்கையில் குளித்துவிட்டு நான் போயிருப்பேன். புண்ணியம் ஒரு முறைதான் கிடைத்திருக்கும். நீ 100 முறை எச்சிலைத் துப்பியதால், இன்றைக்கு நான் 100 தடவை கங்கையிலே குளித்து புண்ணியத்தை அடைந்தேன்'' என்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, மூன்று முறையல்ல, 32,000 தடைகளை ஏற்படுத்தியபோதும், அதை ஏகநாதராக இருந்து பொறுத்து, சகித்து, அதை மதிநுட்பத்தோடு, அம்மாவின் ஆன்மாவின் ஆசியோடு, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் ஆன்மாவின் ஆசியோடு வென்று காட்டி, இவரால் முடியுமென்று சாதித்துக் காட்டிய சாமானியர் மாண்புமிகு முதலமைச்சர், அவருக்குத் துணை நிற்கிற அமைதியின் உருவம், மனித நேய பண்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, ஒரு ஏகநாதர் இருந்தாலே இவ்வளவு பொறுமை, இவ்வளவு சகிப்புத் தன்மை; எங்களுக்கு இரண்டு ஏகநாதர்களை, இரு பெரும் தலைவர்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, இரண்டு ஏகநாதர்களை வைத்து இரட்டை இலை வெல்லும், சரித்திரம் படைக்கும் என்று சொல்லி, வணங்கி நன்றி கூறி, இப்போது புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைப்பினை வாசிக்கின்றேன். மற்றவற்றை பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களின் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு பற்றிய இணையதளம் உருவாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள பெரிய மற்றும் சிறிய ஏரிகள் மற்றும் அணைகளின் நீர் இருப்பு, நீர் வரத்து, வெளியேற்றம் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும், நிகழ்நேர கள தரவுகளை தடையில்லாமல் பெறுவதற்கும், செயற்கைக்கோள் குறிப்புகள் மற்றும் சரிபார்க்கப்பட்ட மாதிரிகள், தண்ணீர் கணக்காய்வு ஆகியவற்றின்மூலம் நீர்வள ஆதாரங்களின் நீர் இருப்பை கண்டறியவும், தினந்தோறும் உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் விநியோகத்தின் நிலவரம் குறித்த தரவுகளைப் பெறுவதற்கும், நிகழ்நேர மழையளவு, செயற்கைக்கோள் தகவல்கள் அடிப்படையில் வெள்ள பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறியவும், அவ்வாறு முன்கூட்டியே கண்டறியப்பட்ட அபாயத்தை களப் பணியாளர் மற்றும் மக்களுக்கு உடனடியாகத் தெரிவித்து, புயல் மற்றும் வெள்ள அபாயத்தின்போது தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றி நிவாரண முகாம்களில் தங்க வைப்பதற்கும் ஏதுவாக, தமிழ்நாடு நீர் ஆதாரங்களின் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு பற்றிய இணையதளம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

2. வறட்சி மேலாண்மை குறித்து விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல்

தமிழ்நாடு தீவிர வறட்சியால் தொடர்ந்து பாதிப்பிற்குள்ளாகிறது. பருவநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படும் குறைவான மழைபொழிவால் இந்நிலை மேலும் தீவிரமடைகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த சிக்கலான, நிச்சயமற்ற சூழ்நிலைகளில், விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களுக்கு எதிர்வரும் அபாயத்தை எடுத்துரைப்பதோடு, மாற்றுத் திட்டங்களைத் தெரிவிப்பதும் மிக அவசியமானதாகும் என்பதனைக் கருத்தில்கொண்டு, வேளாண், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்புத் துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ‘கிரிஷி விக்யான் கேந்திரா’ மற்றும் கால்நடை பல்கலைக்கழகத்தின்

பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களின் உதவியுடன் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள்மூலம், விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களுக்கு ரூ.32.00 இலட்சம் செலவில் திறன் மேம்பாடு பயிற்சிகள் வழங்கப்படும்.

3. இடி, மின்னல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட குறும்படங்கள் தயாரித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இடி, மின்னல் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் கடந்த சில வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்த காரணத்தால், 2017 ஆம் ஆண்டு இடி, மின்னலை ஒரு பேரிடராக அரசு அறிவித்தது.

இடி, மின்னல் ஏற்படும்போது அடிப்படையில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை (Do's & Don'ts) குறித்த விழிப்புணர்வு கற்றறிந்த பொது மக்களிடம்கூட இல்லாத நிலை உள்ளது. எனவே, இடி, மின்னல் ஏற்படும்போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை (Do's & Don'ts) குறித்த விழிப்புணர்வை பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில், ரூ.10 இலட்சம் செலவில் குறும்படங்கள் தயாரிக்கப்படும். பெருவாரியான மக்களுக்கு சென்றடையும் வகையில் இந்தக் குறும்படங்கள் திரையரங்குகள், பொது இடங்கள் மற்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில் செருகளத்தூர் கிராமத்தில் மரப் பூங்கா அமைத்தல்

டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்டத்தில் 2 சதவிகிதம் மட்டுமே வனப் பகுதி உள்ளது. டெல்டா மாவட்டங்களில் அடிக்கடி ஏற்படும் இயற்கைச் சீற்றங்களால் பசுமைப் பரப்பு குறைந்து வருகின்றது. ஆதலால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், செருகளத்தூர் கிராமத்தில் மரப் பூங்கா சுமார் 40,000 பூர்வீக வன இனங்கள் மூலிகைச் செடிகள் உட்பட, ரூ.5 கோடி செலவில் வனத் துறையின்மூலம் கஜா புயல் மறுகட்டமைப்பு, மறு வாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டத்தின்கீழ் அமைக்கப்படும். இந்த மரப் பூங்கா பூர்வீக இனங்களின் வனப்

பரப்பினை அதிகப்படுத்தவும் ஆராய்ச்சி, பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாவினை ஊக்குவிக்கவும் பயன்படும்.

5. மறு நில அளவைப் பணியாளர்களுக்கு நலத் திட்டங்கள்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடர்ச்சியான இயக்கக் குறிப்பு நிலையங்கள் (Continuously Operating Reference Station) வழியாக வகையீட்டு பூகோள நிலைக் கலன் கருவி (Differential Global Positioning) மற்றும் மின்னணு நிலைக் கலன் கருவி (Electronic Total Station), ஆகியவற்றைப் பயன்படுத்தி கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மறு நில அளவைப் பணிகளும், 7 நகராட்சிகளில் நகர நில அளவைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் கடுமையான வாழ்வியல் நெருக்கடிகளை எதிர்கொள்வதால், அவர்களுக்கு ஆயுள் காப்பீடு, ஊக்கத்தொகை, காலணிகள், உபகரணங்கள் எடுத்துச் செல்லும் பை, அளவை நாடா, தொப்பி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

6. சிட்டாக்களை மேம்படுத்த சிறப்புத் திட்டம்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது இணையவழித் தரவுதளத்தில் 100 விழுக்காடு நில உரிமை கொண்டு வரப்படாத நிலை உள்ளதால், நில உரிமை குறித்த தரவுகளை மேம்படுத்துவதற்காக ரூ.100 இலட்சம் செலவில் ஒரு மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம், நில உரிமையாளர்களிடமிருந்து இணையவழியில் விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்குப் பின்னர், நில அளவைத் தரவுதளம் மேம்படுத்தப்படுவதுடன், இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள நில உரிமையாளர்களுக்கு செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் இதர ஊடகங்கள்மூலம் தெரிவிக்கப்படும்.

7. பழமையான புலப்படப் புத்தகங்களை ஸ்கேன் செய்தல் மற்றும் பாதுகாத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பின்குறிப்புப் பதிவுகளாகப் பயன்படுத்தப்பட்டுவரும் கையால் வரையப்பட்ட புலப்படச் சுவடிகளை ஸ்கேன் செய்யவும், பாதுகாக்கவும் தேவையான ஸ்கேனர்கள், தலைமைக் கணினிகள் மற்றும் இதர வன்பொருள்களை ரூ.25.00 இலட்சம் DILRMP தலைப்பின்கீழ் உள்ள தொகையைப் பயன்படுத்தி கொள்முதல் செய்து, சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் நிறுவப்படுவதுடன் இப்பணி, சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.

8. நகர நில வரித் திட்ட அலுவலகங்களுக்கு கணினி மற்றும் துணைக் கருவிகள் வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நில வரித் திட்டப்பணி 50 நகரங்களில் தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. இணையவழியில் நகர நில அளவை ஆவணங்களை மேம்படுத்திட செயல்திட்டம் உருவாக்கப்பட்டு, ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 50 நகர நில வரித் திட்ட வட்டாட்சியர்களுக்கு கணினி மற்றும் துணைக் கருவிகள் வழங்கப்படும்.

9. இணையவழி நில ஆவணங்களைப் பாதுகாக்க பேரிடர் மீட்பு வசதி

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வலைதள மென்பொருளைப் பயன்படுத்தி இணையவழி பட்டா மாறுதல் செய்யும் முறைக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் கணினிமயமாக்கப்பட்ட நில ஆவணங்கள், சென்னை பெருங்குடியிலுள்ள மாநில தரவு மையத்திலிருந்து இணையவழியில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

இத்தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திடும் வகையில் திருச்சியிலுள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத்தில், ரூ.52.37

இலட்சம் செலவில் "பேரிடர் மீட்பு அமைப்பினை" நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

10. இணையவழி புவிசார் தகவல் மற்றும் பல்வகைப் பேரிடர்களின் அதீத தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் திட்டத்துடன் (TNSMART) ஒருங்கிணைக்கப்பட்ட வறட்சி மேலாண்மைக்கான முடிவு ஆதார அமைப்பினை (Decision Support System) உருவாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு பேரிடர் அபாய மேலாண்மையினை திறம்பட மேற்கொள்ள, மூன்றடுக்கு இணையவழி புவிசார் தகவல்கள் அடிப்படையில் செயல்படும் 'TNSMART' எனும் முடிவு ஆதார அமைப்பினைச் செயல்படுத்தியது.

வறட்சி தொடர்பான அளவீடுகளை பன்முகப் பார்வையில் கண்காணிக்க, மழையளவு, சம்பா மற்றும் குறுவை பருவ காலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பல்வேறு பயிர்கள், அணைகளின் நீர் இருப்பு, நிலத்தடி நீர்மட்டம் போன்ற தரவுகள் இத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்திட மாவட்ட, வட்டாரவாரியான தரவுகளைப் பெறுவதற்கு இணையவழி மற்றும் அலைபேசி செயலிகள் உருவாக்கப்படும். வறட்சியினை மேலாண்மை செய்யும் இந்த சிறந்த முயற்சி, வறட்சி தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் வருநிகழ்வு பயிர் திட்டங்கள் ஆகியவற்றை ஒரே சமயத்தில் மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்.

பிற்பகல் 6–20

11. மரம் நடுதல் மற்றும் பலத்த காற்றினால் விழும் மரங்களை வெட்டி அகற்றிட முதல் நிலை மீட்பாளர்களாக மாணவர் சிறப்புப் படையினை உருவாக்குதல்

புயல் காலங்களில் பலத்த காற்றின் காரணமாக அதிக எண்ணிக்கையிலான மரங்கள் வேரோடு சாய்ந்து மற்றும் முறிந்து விழுவதினால், மின் உட்கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாவதோடு மட்டுமல்லாமல், பெருமளவில் பொருட்சேதங்கள் ஏற்படுவதோடு, சாலைப் போக்குவரத்தும் முற்றிலுமாக தடைபடுகிறது. மேலும்,

அதிக எண்ணிக்கையிலான நன்கு வளர்ந்த மரங்கள் விழுவதன் காரணமாக காற்றில் கார்பன்–டை–ஆக்ஸைடின் அளவு அதிகரிப்பதோடு, சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. மக்களின் உயிர்நாடியாக விளங்கும் சாலைகள் தடைபடுவதால், மீட்புக் குழுக்கள், நிவாரணப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொண்டு செல்வதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் விழுந்த மரங்களை புயலுக்குப்பின் போர்க்கால அடிப்படையில் அப்புறப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

இதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பேரிடர்களின்போது கீழே விழும் மரங்களை வெட்டி அகற்றிட மாநிலத்தில் உள்ள மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். மேலும், பேரிடர் அல்லாத காலங்களில் மாணவர்களை மரம் நடும் பணிகளில் ஈடுபடுத்துவதன்மூலம் மரம் வளர்ப்பினை அதிகப்படுத்தி காற்றில் உள்ள கார்பன் அளவினைக் கட்டுக்குள் கொண்டுவர இயலும்.

12. வறட்சியால் பாதிப்புக்குள்ளாகும் வட்டாரங்களில் ICAR-CRIDA மற்றும் ICAR-IWMI நிறுவனங்களுடன் இணைந்து நுண்நிலை ஆய்வு மேற்கொள்ளுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ICAR-IWMI திட்டமானது பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகளை தமிழக அரசுக்கு வாரந்தோறும் வழங்கும். சம்பா மற்றும் குறுவை பருவ காலங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் வட்டார வாரியான பயிர்களின் நிலைமை, வேளாண், தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளால் வாரந்தோறும் CRIDA-விற்கு வழங்கப்பட்டு, பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். வேளாண்மை மற்றும் தொடர்புடைய துறைகள், ICAR-CRIDA மற்றும் IWMI ஆகிய நிறுவனங்களின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன், நிகழ்நேர அடிப்படையிலான வருநிகழ்வு திட்டத்தினை உருவாக்கிட இத்தரவுகள் உதவிபுரியும்.

வறட்சியால் பாதிப்பிற்குள்ளாகும் தன்மை, சாகுபடி பரப்பு மற்றும் சாகுபடி செய்யப்பட்ட பல்வேறுவிதமான பயிர்களின் நிலை ஆகிய காரணிகளின் அடிப்படையில் மாவட்டங்கள் தேர்வு

செய்யப்படும். சோதனை அடிப்படையில் கிருஷ்ணகிரி, சேலம், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் வாரந்தோறும் கண்காணிக்கப்படும்.

13. வலைதளம் வாயிலாக நிலமாற்றம், நில உரிமை மாற்றம், குத்தகை மற்றும் நில எடுப்பு உள்ளிட்ட அனைத்து நிலங்கள் தொடர்பான நடைமுறைகளை கணினிமயமாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நில நிருவாகத் துறையில், நில எடுப்பு, நிலமாற்றம், நில உரிமை மாற்றம், நிலக் குத்தகை ஆகிய இனங்கள் குறித்த நடைமுறைகளை கணினிமயமாக்கி மேம்படுத்தும் திட்டப் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டு, இத்திட்டத்தினைத் தயார்செய்து, செயல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக வலைதளத்தில் நிலமாற்றம் தொடர்பான சிப்பம் (Land Transfer Module) உருவாக்கப்பட்டு மாதிரி சோதனை (Test Pilot) செயல்படுத்த தயார் நிலையில் உள்ளது. அதே நேரத்தில் நிலங்கள் தொடர்பான பிற சிப்பங்களும் (Modules) குறித்த காலத்திற்குள் உருவாக்கப்படவுள்ளன. இந்த இணையதளத்தில் மாநிலத்தின் நிலங்கள் தொடர்பான நடைமுறைகள் உருவாக்கப்படவுள்ளன. இந்தத் திட்டம், நிலங்கள் தொடர்பான செயல்முறைகளுக்கு துரித மற்றும் பயனளிக்கின்ற நடைமுறையாக இருக்கும்.

14. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம், 1905–க்கு திருத்தச் சட்டம் வெளியிடுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம், 1905–ல் அரசாங்க நிலங்களைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகள் கண்டறியப்படின், அவற்றை அகற்றவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு நிலங்களில் தற்போது ஏற்படும் ஆக்கிரமிப்பால் உண்டாகும் பிரச்சினைகளை மனதில்கொண்டு

114 வயதுடைய சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர அரசு முடிவு செய்து, பொருத்தமான திருத்தங்களைப் பரிந்துரைக்க ஒரு செயலர் நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்திற்கான திருத்தங்கள் நடப்பு ஆண்டிலேயே இயற்றப்படவுள்ளது.

மேலும், இந்த திருத்தச் சட்டத்தில் அரசு நிலங்களில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிகள் கொண்டுவரப்படவுள்ளன. மேலும், இந்த திருத்தச் சட்டத்தில் தற்போதுள்ள மேல்முறையீடு/சீராய்வு முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு, எளிய மற்றும் விரைந்து தீர்வு காணும் முறையில் வழிவகை செய்யப்படும்.

15. எங்கிருந்தும் இணையவழி பட்டா பெற விண்ணப்பிக்கும் வசதியை உருவாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2014 ஆம் ஆண்டு முதல் வலைதள மென்பொருளை (தமிழ்நிலம்) பயன்படுத்தி, இணையவழி பட்டா மாறுதல் சேவை இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பொது சேவை மையங்கள் வாயிலாக நில உரிமையாளர்களிடமிருந்து பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தற்பொழுது, எங்கிருந்தும் இணையம் வழியாக பொது மக்கள் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

16. நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறைக்கு வலைதளம் அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் மற்றும் பல திட்டங்கள் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நில ஆவணங்கள் தொடர்பான இ–சேவை பயன்பாட்டினை பொது மக்களுக்கு விரிவுபடுத்தும்பொருட்டு, நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறைக்கென தனியாக இணையதள வசதியை உருவாக்கி, இத்துறைசார்ந்த பல்வேறு திட்டங்கள், சுற்றறிக்கைகள்

மற்றும் அரசாணைகள் போன்ற விவரங்கள் பெற வழிவகை செய்யப்படும்.

17. கிராம வரைபடங்கள் பதிவிறக்கம் செய்ய மின் சேவை

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து கிராம வரைபடங்களும் (16,721 எண்ணிக்கை) ஸ்கேன் செய்யப்பட்டுள்ளன. எனவே, (A1 தாள் ஒன்றுக்கு) ரூ.200/– என்ற குறைந்த கட்டணத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட கிராம வரைபடங்களை பொது மக்கள் இ–சேவைமூலம் பெற்றுக்கொள்ளலாம்.

18. பத்திரப் பதிவிற்கு முன்னர் உட்பிரிவுகளை அங்கீகரித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நிலம் தொடர்பான சொத்துக்கள் பத்திரப் பதிவு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, பத்திரப் பதிவிற்கு முன்னரே உட்பிரிவுகள் பரிசீலனை மற்றும் அங்கீகாரம் செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். இந்நடைமுறையின்கீழ், தத்தமது நிலங்களை/சொத்துக்களை விற்பனை செய்ய விரும்பும் நில உரிமையாளர்கள் வட்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பித்து, தாம் விற்பனை செய்ய விரும்பும் நிலங்கள்/சொத்துக்கள் குறித்த புலப் படங்களின் சான்றளிக்கப்பட்ட நகலைப் பெற வேண்டும்.

அவ்விண்ணப்பங்கள் பெறப்பட்டதும், வட்ட அலுவலகங்களிலுள்ள நில அளவைப் பணியாளர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு, தொடர்புடைய நிலப் பரிவர்த்தனைக்காக தற்காலிக உட்பிரிவு ஆவணங்களைத் தயார் செய்பவர் பட்டா மாறுதல் செய்யத்தக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட உட்பிரிவு ஆவணங்கள் இணைய வழியில் தொடர்புடைய சார்–பதிவகம் மற்றும் நில உரிமையாளர் (விண்ணப்பதாரர்) ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும். இதன் பின்னர், நில உரிமையாளர் தனது நிலப் பரிவர்த்தனையை சார்–பதிவகத்தின்மூலம் மேற்கொள்ள முடியும். இதன் பின்னர், இணைய வழியிலான பட்டா மாறுதல் விவரங்கள் மீண்டும் புலத் தணிக்கை ஏதுமின்றி தொடர்புடைய ஆவணங்களில் பதிவு செய்யப்படும்.

19. சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான இணையவழி ஒரு பக்கம் விண்ணப்பம் செயல்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. நாளது தேதியில் 29.50 இலட்சம் பயனாளிகள் மாதந்தோறும் ரூ.1,000/– ஓய்வூதியமாகப் பெற்று வருகின்றனர். 2019–2020 ஆம் நிதியாண்டில் ரூ.4,060/– கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போதுள்ள நடைமுறையில் ஓய்வூதியம் கோரி மனுக்களைச் சமர்ப்பிக்க மனுதாரர்கள் வட்டாட்சியர் அலுவலகம், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், அவர்கள் தங்களது மனுக்களின் நிலையை அறிந்துகொள்ள இயலாத நிலை உள்ளது.

வயதானோர்/மாற்றுத் திறனாளிகளின் சிரமத்தினைப் போக்கும்வண்ணம், "இணையவழி ஒரு பக்கம் விண்ணப்பம்" செயல்படுத்தப்பட உள்ளது. இம்முறையில், மனுதாரர்கள் தங்களது மனுக்களை அருகில் உள்ள இ–சேவை அல்லது பொது சேவை மையத்தில் பதிவு செய்யலாம். மேலும், தங்களது மனுக்களின் நிலையினை எவ்விடத்திலும், எந்நேரத்திலும் இணைய வழிமூலம் அறிந்துகொள்ளலாம். மனுதாரர்களின் மனு ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம் உடன் குறுஞ்செய்திமூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இம்முறை பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் 100 சதவிகிதம் கணக்கில் கொள்ளப்பட்டது என்பதை உறுதி செய்யும். மேலும், இம்முறையில் உயர் அலுவலர்கள் செம்மையாக ஆய்வு செய்ய இயலும் என்பதால் வெளிப்படையான ஆளுமை உறுதி செய்யப்படும்.

20. வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான தனி இணைய வழி மனு பரிசீலனை முகப்பு செயல்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு, வெளிநாடு வாழ்

இந்தியர்களுக்கான மனு பரிசீலனை முகப்பு என்ற இணையவழித் திட்டத்தை ஏற்கெனவே செயல்படுத்தியுள்ளது. இம்முறையில், பொது மக்கள் தங்களது மனுக்களை/குறைகளை இந்தியாவில் எவ்விடத்திலிருந்தும் இணைய வழிமூலம் பதிவு செய்யலாம். மேலும், தங்களது மனுக்களின் நிலையினை இணைய வழிமூலம் அறிய இயலும். இம்முறையில், பொது மக்கள் தங்களது கோரிக்கையினை பதிவு செய்வதற்கு அவர்களது கைப்பேசி எண்ணிற்குக் கடவு எண் அனுப்பப்படும். எனினும், வெளிநாடு வாழ் இந்தியர்கள் இம்முறையைப் பயன்படுத்திட இயலாத நிலை இருந்தது.

இந்த வசதியினை வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு நீட்டிக்கும் பொருட்டு, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கென தனி இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இம்முறையில், வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களது மனுக்களை/குறைகளை சேவைக் கட்டணமின்றி பதிவு செய்ய ஏதுவாக, அவர்களது மின்னஞ்சல் முகவரிக்கு கடவு எண் அனுப்பப்படும். வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களது கோரிக்கை குறித்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்புவதோடு, அதன் நிலையையும் தெரிந்துகொள்ள இயலும்.

21. 9,633 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளைத் திறம்பட செயல்படுத்துவதற்கு கிராம நிருவாகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதால், தமிழக அரசு கிராம நிருவாகத்தினை நவீனப்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு இணையத்தின் வாயிலாக பல்வேறு சான்றிதழ்களை மக்களுக்கு வழங்கி வருகின்றது. இதனை செம்மைப்படுத்தும் நோக்கில், கிராம நிருவாக அலுவலர்களுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு கட்டங்களாக 9,614 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள், 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 7,787 மடிக்கணினிகள் தற்பொழுது வழக்கற்ற நிலையில் உள்ளதாலும், 1,846 புதிதாக பணியில் சேர்ந்துள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு

மடிக்கணினிகள் வழங்க வேண்டியுள்ளதாலும், ரூ.23.97 கோடி செலவில் 9,633 கிராம நிருவாக அலுவலர்களுக்கு புதிதாக மடிக்கணினிகள் வழங்கப்படும்.

22. இந்திய அரசிற்கும், பிரிட்டிஷ் ஹைகமிஷனுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒத்துழைப்பின்கீழ், பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்த ஆய்வு

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்திய அரசிற்கும், பிரிட்டிஷ் ஹைகமிஷனுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒத்துழைப்பின்கீழ் வேகமாகக் குறைந்துவரும் இயற்கை வாழ்விடங்களைக் கொண்ட பெரிய கடலோர மற்றும் நகர்ப்புற மக்களைக் கொண்ட நகரங்களான சென்னை, கடலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகியவற்றில் பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்த பிரிட்டிஷ் ஹைகமிஷனுடன் இணைந்து அவர்களது தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த ஆய்வின் பரிந்துரைகள் இதர கடலோர நகரங்களுக்கும் பொருந்தும்.

எளிதில் பாதிக்கப்படக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்புகளின் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு, உப்பு நீர் ஊடுருவல் தடுப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் நீடித்த நிலையான நகரங்களுக்கான பொது பேரிடர் அபாயக் குறைப்பிற்கான நடைமுறைகளைக் கையாளுதல் தொடர்பாக தொழில்நுட்ப உதவி வழங்கி அதன்மூலம் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருந்த கேள்விகளுக்கும், அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களுக்கும் என்னுடைய பதிலுரை திருப்தியாக இருக்கும் என்று கருதுகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்

பெற்றுக்கொண்டு, என்னுடைய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ் இயங்கும் 5 ஆணையரகங்களில் பணியாளர்களின்* total complement strength *61,437. அதில், ஏறத்தாழ 20 சதவீதம் காலிப் பணியிடங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஏவுகணைகளால் காதுகளைக் குடையும் வல்லமை பொருந்திய நீங்கள், உடனடியாக அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவீர்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.*

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் மாநகராட்சியின் சார்பில் நடைபெறுகின்ற* Smart City *பணிகள் பற்றியும், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை எவ்வாறு முறைப்படுத்த வேண்டும் என்பது பற்றியும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். மக்கும் குப்பை, மக்காத குப்பையைப் பொறுத்தவரையில், 5 வட்டங்களுக்குப் பொதுவாக ஓர் இடத்தில், பொது மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதியில், பொது இடத்தில் அந்த மையத்தை ஏற்படுத்துகின்றார்கள். அந்த மையம் அந்த இடத்தில் அமைக்கப்படுவது தொடருமானால், அங்கு சுகாதார சீர்கேடு ஏற்படும். தஞ்சாவூர் நகரப் பகுதியைப் பொறுத்தவரையில், மற்ற பகுதிகளைப்போல் விரிவாக்கப் பகுதிகள் அதிகமாக உள்ள பகுதி அல்ல. அது பழமையான ஒரு நகரம். அது மிகக் குறுகிய சந்துகளையும், குறுகிய தெருக்களையும், மிக நெருக்கடியான வீடுகளையும் கொண்ட பகுதி. அந்தப் பகுதியில், 5 வட்டங்களுக்கு ஒரு பொதுவான இடத்தில் மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்தெடுக்கும் மையத்தை அமைத்தால், அது மிகப் பெரிய சீர்கேட்டையும், சுகாதாரக் கேட்டையும் உருவாக்கும். திராவிட*

முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் எங்கள் தலைவர் தளபதியார் அவர்களால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப்பின் நீண்ட விளக்கத்தை நீங்கள் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) நேரம் இப்பொழுது 6–27 ஆகிறது. இன்னொரு மானியக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். நீங்கள் ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, பேசி முடியுங்கள். புதிய உறுப்பினர் என்பதால்தான் உங்களை நான் பேச அனுமதித்தேன்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. தஞ்சாவூரில் அனைத்து இணைப்புகளும் இணைக்கப்பட்டு, தஞ்சாவூருக்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு கொண்டுசென்று சுத்திகரிக்கப்பட்டது. அப்போது துணை முதலமைச்சராக இருந்த தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் அதனைத் தொடங்கிவைத்தார்கள். இப்பொழுது நாங்கள் தெரிவிப்பது என்னவென்றால், தஞ்சாவூரில் அன்றாடம் வரக்கூடிய குப்பைகளை ஒன்று சேர்த்து, தஞ்சாவூரின் புறநகர்ப் பகுதிக்குக் கொண்டுவந்து, மக்கும் குப்பை, மக்காத குப்பைகளைப் பிரித்தெடுக்கலாம். நகரத்திற்குள்ளேயே வைத்து செய்திட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை வழங்குவதிலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவித்தேன். அது எளிமைப்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். இராஜா: 'ஹலோ'. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரை 'ஹலோ' என்றெல்லாம் அழைக்கக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, உட்காருங்கள். உட்காருங்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,106,94,21,000/–, மூலதனக் கணக்கில் ரூ.75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.835,01,36,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 4– ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4– ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உருவில் பிறந்த தெய்வம், ஏழைகளின் இதய தெய்வம், கன்னித்தமிழ் பூமியின் காவல் தெய்வம், தொண்டர்களின் இஷ்ட தெய்வம், எங்களின் குல தெய்வம் அம்மா என்னும் அன்பு தெய்வத்தின் திருவடி பணிந்து வணங்குகிறேன்.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.7,11,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 260, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 449, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 509, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார்.

திரு. க.சு. சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1270, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2327, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3840, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4137, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4540, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4544, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4627, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4681, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5318, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6107, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6186, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6460, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6592, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6733, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன்.

திரு. ஆ. மகாராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6843, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6892, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7149, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7443, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8245, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8420, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8736, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 342, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 739, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 793, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4794, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1013, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1687, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், பெரும்பாண்டி ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் நல விடுதி கட்டடத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1940, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் குடியிருப்பு பகுதிக்கும், விவசாய நிலத்திற்கும் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2453, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3082, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டக் கல்லூரிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவைச் சேர்ந்தவர்களை பேராசிரியர்கள் மற்றும் துறைத் தலைவர்களாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3634, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளித்தலை தொகுதி, குளித்தலை அரசு ஆதி திராவிடர் மாணவியர் விடுதியில் மாணவிகள் சேர்க்கையின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3712, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபு ஜெகஜீவன்ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தின் பயன் அனைத்து மாணவர்களுக்கும் சென்றடைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3758, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, வடுகக்குடி ஆதி திராவிட நல ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3862, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3914, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடியின காணி மக்கள் வசிக்கும் கோதையார், மோதிரமலை, ஆறுகாணி, பத்துகாணி, முக்கறக்க பகுதிகளில் மின்சார வசதிகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4442, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதி, விட்லாபுரம் ஊராட்சியில் வசிக்கும் இருளர் இன மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5060, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆம்பலாபட்டு வடக்கு ஊராட்சி, கண்டியூர் தெரு, ரெட்டை குளம் காலனி, கேனி பாலம் மற்றும் தோப்புக் கொள்ளை ஆதி திராவிடர் தெரு சாலைகளை தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5365, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதியில் உள்ள அனைத்து ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5567, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5590, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு அரசுமூலம் ஆதி திராவிடர்களுக்கு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மாற்றாக புதிய வீடுகள் கட்டவும், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் சமுதாயக் கூடம் கட்டவும் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக

உள்ள பள்ளிகளை ஆய்வு செய்து எண்ணிக்கையை உயர்த்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5733, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதியில் அனைத்து ஆதி திராவிடர் கிராமங்களுக்கும் சமுதாயக் கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5885, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் உள்ள நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கர் காலனி, அண்ணாநகர் காலனி, இன்கோ காலனி, பொன்னூர் காலனி, தேவாலா திருவள்ளுவர் நகர், நடுவட்டம் இந்திரா நகர், கூடலூர் கே.கே. நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பணியாளர்களுக்கு தாட்கோமூலம் நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6008, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆதி திராவிடர் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் விடுதிகளுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6301, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மடத்துக்குளம் தொகுதியில் உள்ள வீடில்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6325, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆலங்குடி தொகுதி, வெண்ணவால்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு

விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6599, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6692, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் தொகுதி, ஊர்குடி ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6906, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6995, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஆற்காடு தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் பகுதியில் சாலை, கால்வாய், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7006, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூரில் ஆதி திராவிடர் நல மகளிர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “செஞ்சி தொகுதி, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா, வீடு போன்றவை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7409, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட கே. கைலாசபுரம் கிராமத்தில் உள்ள அரசு மாணவ, மாணவியர் விடுதிக்கு குடிநீர் வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7642, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8202, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8296, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதியில் பட்டியல் இன மக்கள் வாழும் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8343, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதி, ஆதி திராவிடர் நல விடுதிகளில் குடிநீர் வசதி செய்து, கழிப்பறைகளை பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8475, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8491, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8601, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூந்தமல்லி தொகுதியில் ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 6–30

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மின்னஞ்சலிலும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய மேலான கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைமீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

***திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய காவேரி டெல்டா பகுதியில் விரல் விட்டு எண்ணுகிற அளவிற்கு முதலாளிகள் இருந்த நேரத்தில், அந்த நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, அங்கு இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களையெல்லாம் விவசாயிகளாக்கிய பெருமைக்குரிய தலைவர், எங்களுடைய கழகத் தலைவர், மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், எங்களுடைய ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கெல்லாம் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தையும், சமத்துவபுரத்தையும் தந்த எங்களுடைய கழகத்தினுடைய தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், கழகத்தினுடைய இளைஞரணி செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கிற செயலாளர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த

@ 517 முதல் 567 வரையிலான பக்கங்களில் இணைப்பு–II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், எங்களுடைய கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன். புதிய கல்விக் கொள்கை, NEET தேர்வு முறையை அமல்படுத்துவதால், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த, குறிப்பாக வளர்ச்சியடையாத மற்றும் விழிப்புணர்வு இல்லாத கிராமப்புற மாணவர்கள் போட்டித் தேர்வில் வெற்றிபெற்றாலும், மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சிப் படிப்புகளில் இடம் பிடிப்பது என்பது இயலாததாகிவிட்டது. மேலும், புதிய கல்விப் பிரிவுகளுக்கு, இளங்கலையிலேயே பொதுத் தேர்வு முறையை அமல்படுத்தினால், பெருவாரியான பட்டியலின மாணவர்கள் உயர் படிப்பு செல்லும் வாய்ப்பினை இழக்க நேரிடுகிறது. உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை தாமதமாகக் கிடைப்பதால், மைய அரசினை உடனடியாக வலியுறுத்தி அந்த நிதியினைப் பெற்றுத் தர ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளில் தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு பெறும் மாணவர்களுக்கு தற்சமயம் tuition fees மட்டும் செலுத்த வேண்டுமெனத் தெரிவித்தாலும், உயர் கல்வி காலத்தில் உரிய செலவினம் என்பது பல இலட்சம் ரூபாய் ஆகிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு திட்டங்களைப் பெற கிராம நிருவாக அலுவலகத்தை கீழ்நிலை மக்கள் பயன்படுத்துகிறார்கள். அதேபோல, நீதி மறுக்கப்படுபவர்களுக்கு உதவியாக இருப்பது உயர் நீதிமன்றம். இந்த இரண்டு பணி அமைப்புகளுக்கும், அதாவது, கிராம நிருவாக அலுவலகத்தில் பணிபுரியும் கிராம நிருவாக உதவியாளர்கள் பணி நியமனத்தில் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றுவதில்லை. அதேபோல, உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் நியமனத்திலும் இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பணிபுரிந்தபோது, 18 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைப் பயன்படுத்தி, பட்டியலினத்தவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில், கிராம நிருவாக அலுவலகத்தில் ஏற்படும் காலியிடங்களில் பட்டியலின

பழங்குடியினத்தவருக்கே நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில், கிராம கர்ணம், முன்சீப் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு, பின்னர், கிராம நிருவாக அலுவலர் பணியிடம் ஏற்படுத்தப்பட்ட நிலையில், கிராம நிருவாக உதவியாளர் பணியிடத்தில் இட ஒதுக்கீடு முறை கடைபிடிக்கப்படவில்லை. அடிப்படை மக்களுக்கு உதவிடும் வகையில் பட்டியலினத்தவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டியது அவசியமானதாகும். ஆனாலும், இதில் முறையற்ற நியமனங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நடைமுறையை விரைவுபடுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல் அரசு நிருவாகத்தின் உரிய அமைப்பான உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திலும் இட ஒதுக்கீடு முறை மறுக்கப்படுகிறது. இதற்கு சமூக நீதிக் காவலர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிராம உதவியாளர் பணியிட நியமனத்தில் இட ஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படுவதில்லை என்கிற குற்றச்சாட்டை இங்கே தெரிவித்தார். அது முற்றிலும் தவறானது. இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலேதான் கிராம உதவியாளர்கள் பணி நியமனம் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 6–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 18 சதவிகிதத்தை உண்மையாகத் தருகிறார்களா என்பதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதேபோல, சமூக நீதி வலியுறுத்தி ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. முற்பட்ட*

வகுப்பினர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க சட்டத் திருத்தம் கொண்டுவரும் நிலையில், ஆலய அர்ச்சகர்கள் பணியிடங்களில் தகுதியான பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கலாமே! அரசுப் பணிகளில் பல்வேறு துறைகளிலும் பல்லாயிரக்கணக்கான பணியிடங்கள் காலியாக அறிவிக்கப்பட்டு backlog vacancies ஆக நிரப்பப்படாமல் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நடப்புக் காலியிடங்களை நிரப்புவதற்கு மட்டுமே TNPSC தேர்வு நடைபெறுகிறது. ஆனால், பின்னடைவுப் பணியிடங்களைக் கண்டுகொள்வதில்லை. இனிவருங்காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பணி நியமன அறிவிப்பின்போது, பின்னடைவு காலிப் பணியிடங்களை முழுமையாக நிரப்ப இயலாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட சதவிகித எண்ணிக்கையிலாவது பட்டியலிட்டு அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறைவுப் பணியிடங்களின் விவரம் அறிய அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழுவினால் துறைவாரியாக ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையில், ஆதி திராவிடர் இனங்களில் 1,234 பணியிடங்களும், பழங்குடியினர் இனங்களில் 614 இடங்களும் பின்னடைவுப் பணியிடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. இப்பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களும் மிக விரைவில் இப்பொருள் தொடர்பாக சிறந்த முறையில் நடவடிக்கை மேற்கொள்வார் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நான் இதைக் கேட்டபோதும் இதே பதிலைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலும் எந்த backlog vacancies–ம் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர

விரும்புகிறேன். அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் சொந்தமாக வீட்டுமனை இல்லாத பட்டியலின, பழங்குடியின மக்கள், . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, காலிப் பணியிடங்கள் ஏற்படும்போது, Tamil Nadu Public Service Commission மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. 1930 ஆம் ஆண்டு TNPSC ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டுவரும் நிலையில், 90 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மட்டும் 17 ஆயிரம் காலிப் பணியிடங்களை நிரப்பிய ஒரே அரசு, நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், 3 இலட்சம் காலிப் பணியிடங்களை நாம் fill up செய்திருக்கிறோம். அதாவது Communal rotation–ன்படி, முழுமையான அளவுக்கு, எல்லா காலிப் பணியிடங்களையும் நிரப்புகிறோம். அதனால், Communal rotation–ல் எந்தவிதமான புகாரும் ஏற்படாத வகையிலே, அந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பினார்கள். 'ஏவுகணைகளால் காதுகளைக் குடையும் வல்லமை பொருந்தியவர்கள் நீங்கள்' என்று சொன்னார். எங்களை வல்லமை பொருந்தியவர்கள் என்று அவரே ஒத்துக் கொண்டார். எங்களைப் பொறுத்தவரையிலும், பாகுபலி மாதிரி, ஏவுகணையைத் தூக்குகிற அளவுக்கு பலம் வாய்ந்தவர்கள் நாங்கள். ஆனால், உங்களைப்போல நமத்துப்போன பட்டாசு அல்ல நாங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள், பேசுங்கள்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நாங்கள் சொல்லவில்லை. உயர் நீதிமன்றமே அதற்கு ஒரு judgement கொடுத்திருக்கிறார்கள்.

அதாவது, நெடுஞ்சாலைத் துறையில் பதவி உயர்வுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றமும் அதற்கு நிறைய விளக்கங்களைக் கேட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் சொந்த வீடுகள், சொந்தமாக வீட்டுமனைகள் இல்லாத பட்டியலின, பழங்குடியின மக்கள் இலட்சக்கணக்கானோர் உள்ளனர். நான் சார்ந்திருக்கக்கூடிய டெல்டா மாவட்டத்தில் "கஜா" புயலால் குடிசை வீடுகள் இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான பட்டியலின, பழங்குடியின மக்கள் சொந்தமாக வீட்டுமனை இல்லாமல் உள்ளனர். கோயில் நிலங்களிலும், புறம்போக்கு இடங்களிலும், தனியார் நிலங்களிலும் குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு அந்த இடங்களைச் சொந்தமாக்கி, பட்டா வழங்கி, அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய தலைவர் அவர்கள் பொறுப்பிலிருந்தபோது, எங்கெங்கெல்லாம் அவர்கள் குடியிருந்தார்களோ, அந்த இடங்களிலே அவர்களுக்குப் பட்டா வழங்கியதுபோல, குடியிருப்பு மனைச் சட்டத்தின்கீழ் நீங்களும் பட்டாவை உடனடியாக வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 6–40

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், "கஜா" புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலெல்லாம் உள்ள பட்டியலினத்தவர்களுக்கு, மற்றவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்தார்கள். குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு இலட்சத்து 22 ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டு, அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யார் யாருக்கெல்லாம் பட்டா இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் அந்தப் பட்டா நிலங்களையும், பட்டா இல்லாதவர்களுக்கு பட்டாக்களையும்

வழங்கி, வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில், இதுவரை திருவாரூர் மாவட்டத்தில் மட்டும், 'கஜா' புயலுக்குப் பிறகு, 8,300 பேருக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2011–2012 முதல் 2018–2019 வரை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் விவரத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 2011–2012 முதல் 2015–2016 வரையில் ரூ.2,925.43 கோடி மதிப்பீட்டில் 2 இலட்சத்து 64 ஆயிரத்து 952 வீடுகளும், 'தானே' புயல் பாதித்த வீடுகளைப் பொறுத்தவரையில், 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், ரூ.270 கோடி மதிப்பீட்டில் 27 ஆயிரம் வீடுகளும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 2016–2017 முதல் 2018–2019 வரை ரூ.3,808.07 கோடி மதிப்பீட்டில் 2 இலட்சத்து 24 ஆயிரத்து 4 வீடுகளும், பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 2011–2012 முதல் 2018–2019 வரை ரூ.2,160 கோடி மதிப்பீட்டில் 1 இலட்சத்து 8 ஆயிரம் வீடுகளும், ஆக மொத்தம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 6 இலட்சத்து 23 ஆயிரத்து 956 வீடுகள் கட்டும் பணி ரூ.9,163.50 கோடி மதிப்பீட்டில் கடந்த 8 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு, கட்டப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கஜா' புயலினால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களுக்கு முழுமையாக, உறுதியான கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படுகின்ற நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் அவரவர்களுக்குச் சொந்தமான இடங்கள் இருந்தால், தாமாகவே வீடுகள் கட்டிக்கொள்ளும் திட்டத்தின்கீழ், 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணமாகவே அவர்களுக்குத் தந்து, அதில் அவர்களே வீடு கட்டிக்கொள்ளும் திட்டம் ஒன்று; இன்னொன்று இடமில்லாதவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் என இரண்டு வகைகளில் திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனி வீடுகளாக 1,217 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 2,177 வீடுகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் தனி வீடுகளாக 2,518 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 3,942 வீடுகளும், திருவாரூர் மாவட்டத்தில் தனி வீடுகளாக 5,502 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 9,786 வீடுகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் தனி வீடுகளாக 7,458 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 12,766 வீடுகளுமாக 'கஜா' புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக, இந்த நான்கு டெல்டா மாவட்டங்களில் தனி வீடுகளாக 16,695 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 28,671 வீடுகளும் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கஜா' புயலினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட தொகுதி என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியாகும். அங்கே குடிசை வீடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான்— நான் முன்னரே சொன்னதைப்போல—எங்களுடைய தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது

கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அனைத்து குடிசை வீடுகளுக்கும் உத்தரவாத சான்றிதழ்கள் எல்லாம் அன்றைக்கு வழங்கப்பட்டன. எந்த நிபந்தனையும் இல்லாமல், அந்த இடம் எந்த தன்மையாக இருந்தாலும், அவர்களுக்கு உத்தரவாத சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, கலைஞர் வீடு வழங்கும் திட்டம் அன்றைக்கு அமல்படுத்தப்பட்டது. ஆனால், இன்றைக்கு நீங்கள் வீடு வழங்குகிறீர்கள் என்று சொன்னாலும்கூட, அந்த உத்தரவாதம், Administrative Sanction, கொடுத்தாலும்கூட, அந்த இடங்கள் கோயில் இடமாக இருப்பதாலும், மடத்து இடமாக இருப்பதாலும் வீடுகளைக் கட்ட இயலவில்லை. எங்கள் ஊரைப் பொறுத்தளவில், கிராமம் கிராமமாகக் கோயில்களுக்கும், மடங்களுக்கும் நிலங்கள் சொந்தமாக இருக்கிற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், அங்கே வீடுகள் கட்ட முடியாமல் இருக்கின்றன. Sanatorium, பூமிதான் இயக்கத்தில் இருக்கக்கூடிய நிலங்களெல்லாம் அங்கே இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து, அதை வகைமாற்றம் செய்து, நீங்கள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–45

அதேபோல, கிராமப்புறங்களைக் காட்டிலும், திருத்துறைப்பூண்டி நகர் பகுதியைச் சுற்றி நிறைய ஆதி திராவிட மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் குடிசை வீடுகளில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் அங்கு வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்குக் கான்கிரீட் வீடுதாரர்கள் கட்டித் தர வேண்டும். ஏனென்றால், பக்கத்தில் பெரியநாயகபுரம் என்ற கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு, வரிசையாக 40–50 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. இவ்வாறு வரிசையாக தீ விபத்துகளிலும், இயற்கைப் பேரிடர்களிலும் இந்தக் குடிசைவீடுதாரர்கள் தவிக்கும் நிலை மாறவேண்டுமானால், நீங்கள் அனைத்து வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், குடியிருப்பு மனைச் சட்டத்தை தலைவர் அவர்கள் அமல்படுத்தியதுபோல, நீங்களும் அங்கே குடியிருப்பவர்களுக்கு எந்த நிபந்தனையும் இல்லாமல் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் 'கஜா' புயலால் பாதிக்கப்பட்டபொழுது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் நேரடியாக வந்து பார்வையிட்டு, அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான உதவிகளையெல்லாம் செய்து, பல்வேறு வசதி வாய்ப்புகளை இந்த மாவட்டங்களுக்கு நாங்கள் செய்து தருவோம் என்ற உறுதிப்பாட்டைத் தந்தார்கள். திருவாரூரைப் பொறுத்தவரையில், திருவாரூரில் 48 கிலோ மீட்டர் தூரம் சாலையில் பயணம் செய்து வந்தார்கள். 8 கிலோ மீட்டர் தூரம் மக்களோடு மக்களாக நடந்தே வந்தார்கள். அதன்பின்னர், திருவாரூரில் மல்லிகை மகாலில் நடைபெற்ற மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற, நலத் திட்டங்களைக் கொடுக்கிற நிகழ்ச்சி முடிந்த பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிக்கையாளர்களுக்குப் பேட்டி தந்தார்கள். அப்பொழுது "ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்; கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்" என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிக்கையாளர்களிடத்தில் தெரிவித்தார்கள். மறுநாள் பத்திரிக்கையாளர்கள் கேட்டபொழுது, 'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்' என நான் பத்திரிக்கையாளர்களிடத்தில் சொன்னேன். அந்தப் பத்திரிக்கை பேட்டியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு, உடனே என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "உங்கள் மாவட்டத்திற்கு மட்டும் தேவை என்று சொன்னால், திருவாரூர் மாவட்டத்திற்கு மட்டும் ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்கு பார்த்தாலும் நீர்வழிப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு இதுபோன்ற புறம்போக்கு

நிலங்களை வகைப்படுத்த முடியாமல், பயன்படுத்த முடியாத புறம்போக்கு நிலங்களாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், கோயில் நிலங்கள் நிறைய இருக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்கிட்டு, 5 ஆண்டுகளுக்குமேல் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தனி வீடுகளாகவும், மாடி வீடுகளாகவும் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன புள்ளிவிவரங்கள் அனைத்தும் நகரப் பகுதிகளுக்கானது. மாநகரப் பகுதியாகவோ, நகராட்சிப் பகுதியாகவோ அல்லது பேரூராட்சிப் பகுதியாகவோ இருக்கின்ற பகுதிகளுக்குத்தான் தனி வீடுகளாக 16,695 வீடுகளும், (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசக் கூடாது; அமைதியாக உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) ஐயா, நான் கூறும் விளக்கத்தை முழுமையாகக் கேட்ட பிறகு நீங்கள் பேசுங்கள். உரையினிடையே ஏன் அடிக்கடி எழுந்திருக்கிறீர்கள்? அடுக்குமாடி வீடுகளாக 28,670 வீடுகள்; அதாவது அவர்களுக்கு இடம் இருந்ததென்றால், பணத்தைக் கொடுத்து கட்டிக்கொள்ளச் சொல்கிறோம். மற்றபடி நகரப் பகுதிகளில் இடமில்லாதவர்களுக்கு அரசே இடங்களைத் தேர்வு செய்து—நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில், அரசே இடங்களைத் தேர்வு செய்து,—தேவைப்படின் வகை மாற்றம் செய்து, அடுக்குமாடிக் குடியிருப்புகளாகக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் பசுமை வீடுகள் வழங்கும்*

திட்டத்தின் மூலமாக, இப்பொழுது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்கள் சொன்னதுபோல, நிறைய வீடுகள் கட்ட அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். ஆனால், பணிகள் எல்லாமே முடிவுபெறாமல் இருக்கின்றன. காரணம், அங்கு மணல் கிடைக்கவில்லை. அங்கு வீடுகளைக் கட்டுவதற்கு சிமென்ட், கம்பி போன்றவற்றையெல்லாம் தருவதுபோல, நீங்களே மணலையும் அவர்களுக்குக் கொடுத்தீர்களென்றால், இன்னும் வசதியாக இருக்கும். ஏனெனில் இப்பொழுது மணல் கிடைக்காத சூழ்நிலையில், ஏழைகள் பணம் முதலீடு செய்து, வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. அதனால் நீங்கள் மணல், இடுபொருள், கல், சிமென்ட் எல்லாவற்றையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை இரண்டு நிமிடங்களில் முடித்துவிடலாம்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக்காகச் செயல்படும் நிறுவனம் தாட்கோ. தாட்கோ நிறுவனம்மூலம் நிறைய மானியங்கள் எல்லாம் கொடுக்கிறீர்கள். அவற்றை வங்கிகளின்மூலம் கொடுப்பதால், அவர்கள் முறையாகக் கடன்களைக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அதனால் அந்தப் பணம் திரும்பவும் துறைக்கே வரக்கூடிய நிலை இருக்கிறது. சரியாகச் செலவு செய்ய முடியாத நிலையில் இருப்பதால், தாட்கோ மூலமாகவே அவர்களுக்கு முழுமையாக அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு, அந்தக் கடனை திரும்ப வசூலிக்கும் முறையை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 6–50

உள்ளாட்சி நிருவாகம் கடந்த 3 ஆண்டுகளாகச் செயல்படாத நிலையில், மாவட்ட அளவில் பட்டியல் இனத்தவர்களுக்கென்று, பழங்குடியினர்களுக்கென்று ஒதுக்கப்படும் நிதியினைப் பகிர்ந்தளிப்பதில் மாவட்ட நிருவாகத்தின் செயல்பாடு வெளிப்படையாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. நடப்பாண்டில் தேவையின் அடிப்படையில் நிதியைப் பயன்படுத்த ஏதுவாக, நிதிப் பகிர்ந்தளிப்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, அதனடிப்படையில் திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டும் என்று

நிருவாகத்தினருக்கு அறிவுறுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கஜா புயலால் பாதிப்புக்குள்ளான தென்னை மரங்களுக்கு இழப்பீடு வழங்கும்போது, 'குறைந்தபட்சம் 20 தென்னை மரங்கள்' என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், ஏழை விவசாயிகள், பழங்குடியினர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோரெல்லாம், தங்களது வீட்டு ஓரங்களில் 5 மரங்களை, 10 மரங்களை நட்டு வைத்துக் கொண்டு தங்களது வாழ்வாதாரத்தைப் போக்கிக் கொண்டிருந்த நிலையில், தற்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த இழப்பீடு கிடைக்காமல் இருக்கின்றன. உடனடியாக அதை மறு ஆய்வு செய்து அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, ஆதி திராவிடர் நலத் துறையிலிருந்து தனியாகப் பழங்குடியினர்களுக்கென ஒரு துறை 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், இதுவரை நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர்களுக்கென்று மாவட்ட அலுவலகம் திறக்கப்படவில்லை. கூடலூரில் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது; ஆனால், அலுவலர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆசிரியர்களுக்கு பணியிட மாறுதலுக்கான கவுன்சிலிங் 2 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை; அவர்களுக்கான பதவி உயர்வும் வழங்கப்படவில்லை. கூடலூரில் பழங்குடியினர்களுக்கு பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டும், இதுவரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை.

அதேபோன்று, உயர்நிலைப் பள்ளிகளாக இருந்து மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்ட பள்ளிகள் மொத்தம் 8 உள்ளன. அங்கு இதுநாள் வரையிலும் இளநிலை உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், இரவு நேரக் காவலர்கள் பணியிடங்களில் பணியாளர்கள் அமர்த்தப்படவில்லை. ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக ஒரு பள்ளியை உருவாக்கும்போது, 5 ஆசிரியர்களைத்தான் நியமிக்கிறீர்கள். ஆனால், அரசுப் பள்ளியை உருவாக்கும்போது, 9 ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். எனவே, ஆதி திராவிட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துகிற வகையில், அரசுப் பள்ளியில் இருப்பதைப்போன்று, ஆசிரியர் பணியிடங்களை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வக உதவியாளர்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை. எனவே, உடனடியாக

ஆய்வக உதவியாளர்களையும் நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

P.G. மாணவ, மாணவிகளுக்கு இன்னும் கணினி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. அவர்களையும் உடனடியாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தரமுயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் பள்ளிகளில் புதியதாக 5 ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 87 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் உள்ளன. அவற்றில், 40 பள்ளிகளில் மட்டும்தான் தலைமையாசிரியர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். மீதமுள்ள பள்ளிகளில் உடனடியாக தலைமையாசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஆதி திராவிடர், பழங்குடியின மாணவர் விடுதிகளில் சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், காப்பாளர்கள் ஆகியோரெல்லாம் தற்காலிகமாகப் பணிபுரிகிறார்கள். அவர்களுடைய பணியினையும் உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும் என்றுகேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ப. ஆடலரசன்: அடுத்து, State level SC/ST Commission ஒன்றை அமைக்க வேண்டும்; மற்ற மாநிலங்களில் அந்த Commission–ஐ அமைத்திருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற ஆதி திராவிட நலத் துறையின் நிறைய scheme–களின் செயல்பாடுகளை அது கண்காணிக்கிறது. தற்போது இங்கு Special Component Plan–ல் இருக்கக்கூடிய 20 சதவிகித நிதி மற்ற எல்லாத் துறைகளுக்கும் போய்க் கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிப்பதற்காக அந்த Commission–ஐ உடனடியாக அமைக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ST மாணவர்களுக்கு மட்டும்தான் உண்டி, உறைவிடப் பள்ளிகள்; Residential Schools இருக்கின்றன. அதேபோன்று, SC மாணவர்களுக்கும் Residential School அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து ஒரு நிமிடத்தில் பேசி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 6–55

திரு. ப. ஆடலரசன்: *ஏனென்றால், அங்கே ஒருங்கிணைந்த கட்டடத்தில் அனைத்து வசதிகளும் இருக்கிற காரணத்தால், அந்த* residential school–*ஐ உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்போது எங்கு போய்ப் பார்த்தாலும் ஆதி திராவிட நல விடுதிகள் இடிந்து மிகவும் மோசமாக இருக்கின்றன. அதுவும் கஜா புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள அந்த விடுதிகளின் சுவர்கள், காம்பவுண்ட் சுவர்கள் எல்லாம் உடைந்து, பழுதடைந்துள்ள நிலையில் உள்ளன. அதேபோல்,* flooring–*ஐயும் பார்த்தீர்களென்றால் பள்ளமாக இருக்கிறது. சரியான தூர்வை மண் போட்டு கட்டாத காரணத்தினால், பள்ளமாகி தரைகளில் படுக்க முடியாத சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. அதேபோல், பெண்கள் விடுதிகளில்* inverter *வசதி இல்லை. மின்வெட்டு ஏற்படும்போது மாணவ, மாணவிகள் எல்லாம் அங்கே அச்சத்திற்கு உள்ளாகிறார்கள். அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, இல்லை.* (குறுக்கீடுகள்) *இத்தனை முறை நான் சொல்வதைப் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *அதேமாதிரி ஈமக் கிரியை செய்வதற்கான நிவாரணம்; உள்ளாட்சி அமைப்புகள் இல்லாததால். இறந்தவர்கள் குடும்பத்திற்கு உடனே ஈமக் கிரியை செய்வதற்கான உதவித் தொகை போய் சேருவதில்லை. இறக்கும்போது* application *கொடுத்தால், கருமாதிக்குக்கூட அந்தப் பணம் சரியான முறையில், போதுமான அளவில் போய்ச் சேருவதில்லை. எனவே, அந்தப் பணத்தை அவர்கள் ஈமக் கிரியை செய்வதற்கு ஏதுவாக உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.* (குறுக்கீடு) *நான் இவ்வளவு நேரம் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன்.*

திரு. ப. ஆடலரசன்: அதேபோல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு மின் இணைப்பை தட்கல் முறையில் நீங்கள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். எத்தனை பேருக்கு அந்தமாதிரி மின் இணைப்பைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடிக்கிறீர்களா; நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா?

திரு. ப. ஆடலரசன்: அப்படிக் கொடுப்பதாக இருந்தால், அந்தத் தொகையான ரூ.75,000/–ஐ முழு மானியத்தோடு நீங்கள் வழங்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர், நன்றிக்கு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. ப. ஆடலரசன்: ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நீங்கள் இனிமேல் ஒன்றும் பேச வேண்டாம். (குறுக்கீடு) அப்படியென்றால் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இத்தனைபேர் சேர்ந்து அவரை வற்புறுத்தாதீர்கள். அவரை விடுங்கள். அவரே உரையை முடிக்கிறார். திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். இங்கு வந்து நீங்கள் நாட்டாமை செய்ய வேண்டாம். உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள்.

திரு. ப. ஆடலரசன்: கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் மாவட்ட ஆட்சியர்களுடைய விருப்ப நிதியிலிருந்தும், தாட்கோ மேலாளர்களுடைய விருப்ப நிதியிலிருந்தும் சில திட்டங்களுக்கு நிதி வழங்கலாம் என்று இருக்கிறது. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று கேட்டபோது, அந்தமாதிரி ஒரு விருப்ப நிதியே இன்னும் வரவில்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் குறுக்கீடே இல்லாமல் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றிக்கு வாருங்கள்.

திரு. ப. ஆடலரசன்: உடனடியாக அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஈமச் சடங்குக்குக் கொடுக்கக்கூடிய நிதியை உடனடியாகத் தருவதில்லை என்று சொன்னார். அது தவறான தகவல். உடனடியாக அந்தத் தொகை வழங்கப்படுகிறது. பேரூராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும், அந்த உதவித் தொகை உடனே வழங்கப்படுகிறது.

அதேபோல, மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதி எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அது குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, அனுபவம் வாய்ந்த அலுவலர்களைக் கொண்டு, சமூகப் பொறுப்புணர்வோடு, இவ்வின மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு மிகுந்த நேர்த்தியோடு செயல்படுவதால், தனியாக ஆணையம் ஒன்றை உருவாக்க வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்படவில்லை என்பதை மிகவும் பணிவுடன் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல், ஈமச் சடங்குக்கு நிதியுதவி வழங்குவது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், அது சரியாக

வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். இப்போது வழங்கப்பட்டு வரும் தொகையான ரூ.2,500/–ஐ ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திராவிட அரசின் உயிர் சக்தியாக விளங்கி, . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிகளிலே ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றும், சில பள்ளிகளில்தான் தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றும், சில இடங்களிலே ஆதி திராவிடர் நலப் பள்ளிகளிலே 5 ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள் என்றும், அரசுப் பள்ளிகளில் 9 ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இரு துறைகளும் கலந்துபேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன முடிவை மேற்கொள்கிறாரோ, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு, சிறப்பான முறையிலே ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிகள் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன், பேசுங்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட அரசியலின் உயிர் சக்தியாக விளங்கிய, மன்னாதி மன்னன் நம் அன்புத் தலைவர், மக்கள் திலகம்,*

பொன்மனச் செம்மல், கழகத்தின் நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பூமித்தாய் நமக்கு அளித்த பொன்மகள், வாராது வந்த மாமணியாய் தமிழ் மண்ணில் வந்துதித்த எங்கள் தெய்வ மகள், இந்த மண்ணும் மக்களுமே உயிர்மூச்சு என வாழ்ந்த ஒப்பில்லாத மனித தெய்வம், அன்பின் இருப்பிடமாய், ஆற்றலின் உறைவிடமாய், பண்பின் புகலிடமாய்த் திகழ்ந்து பார் போற்றும் தலைவியாக உயர்ந்து நின்ற எங்கள் இதய தெய்வம்; சூழ்ச்சி வலை அறுத்து, சுற்றி வந்த பகை வென்று, வெற்றித் தேர் ஏறி, வீர உலா வந்த எங்களின் வேதா நிலையத்து வீரத்தாய்; மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்ற இலட்சிய வாழ்வு வாழ்ந்த (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் போற்றும் மாதரசி, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்த வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு, இலட்சிய சிந்தனையோடு, தன் உடல் நலிவையும் பொருட்படுத்தாமல், கண்துஞ்சாமல், பசி நோக்காமல், நாளும் பொழுதும் பாடுபட்ட அன்புத் தாய்; நாங்கள் நித்தம் நித்தம் வணங்கும் எங்கள் குடும்ப தெய்வம், குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் துயில்கொள்ளும் வங்கக் கடற்கரையோரத்தில் என் கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7–00

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

கொடி பிடிக்கும் தொண்டன்தான் முடிவெடுக்கும் அதிகாரம் மிக்கவன் என்ற கழகத்தின் தார்மீக நெறிப்படி, இன்றைக்கு முடிவெடுக்கும் உயர் அதிகாரமிக்க ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள, மிகச் சாதாரண, சாமானியத் தொண்டனாக அரசியல் வாழ்வைத் தொடங்கிய விவசாயப் பெருங்குடிமகன், ஏழையெளிய தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவே நாளொரு பொழுதும் எண்ணி, எண்ணி செயல்பட்டுவரும் மக்களின் முதல்வர், குடிமராமத்து மன்னன், இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில், விதி 110–ன்கீழ் மக்களின் தலைவிதியையே மாற்றவல்ல நல்ல பல அறிவிப்புகளை நாளும் வெளியிட்டுவரும் எங்களின் நம்பிக்கை நாயகன், மாண்புமிகு முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத்

தட்டும் ஒலி) தென்பாண்டி நாட்டின் திராவிடச் செம்மல், ஜல்லிக்கட்டு நாயகர், பொறுமையின் சிகரம், இதய தெய்வம் அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் நாளும் நடைபோடும் இந்த நல்லரசுக்கு என்றும் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதல்வர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாசறையில் பயிற்சி பெற்று, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பட்டறையில் பட்டை தீட்டப்பட்டு, அரசியல் வானில் உயர்ந்து வந்து, இதய தெய்வம் அம்மா அவர்களின் முழு நம்பிக்கையைப் பெற்று, அவரின் ஆசியோடு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் மாண்புக்குரிய சிம்மாசனத்தில் அமர்ந்து, மரபும், மாண்பும் கெடாமல் இந்தப் பேரவையை நடத்திச் செல்லும் எங்களின் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய அருமை அண்ணன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு உற்ற துணையாக இருந்து, இந்த அவையை நேர்வழியில் நடத்திச் செல்லும் புரட்சித் தலைவரின் மன்றத்து மறவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அருமை அண்ணன் பொள்ளாச்சியார் அவர்களையும் வணங்கி, அன்பு சகோதரர் அரசு தலைமைக் கொறடா அண்ணன் ராஜேந்திரன் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெற்ற தாயினும் சாலப் பரிந்து, முகம் தந்து, முகவரி தந்து, எளியவன் என்னை கழகத்தில் பணியாற்றிட பல்வேறு பதவிகள் தந்து, மாவட்டக் கழகச் செயலாளராக்கி, இரண்டாவது முறையாக என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்னடிகளையும், என்னை வெற்றி பெற வைத்த பொன்னேரி தொகுதிவாழ் பெருமக்களையும் நன்றியோடு வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன். என் உரையைத் தொடங்குவதற்கு முன்பாக, என் தொகுதியினுடைய ஒரு சில கோரிக்கைகளை முன்வைத்து, மீதியுள்ளவற்றை நான் படித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முதலாவதாக, காட்டுப்பள்ளி, எண்ணூர் காமராஜர் துறைமுகத்திலிருந்து மீஞ்சூர் பொன்னேரி வழியாக தச்சூர் கூட்டுச் சாலையை இணைக்கும் புறவழிச் சாலையை அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரி தன்னாட்சி அந்தஸ்து பெற்ற கல்லூரியாக இருப்பதால், 5,500 இருபால் மாணவர்கள் பயில்கிறார்கள். இதில் சிரமம் இருக்கின்ற காரணத்தை அறிந்து, அதை இரண்டாகப் பிரித்து, அரசு மகளிர் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி ஒன்றினை மேற்படி கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள 30 ஏக்கர் நிலத்தில் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை அரசு மருத்துவக் கல்லூரி துவங்கப்படாததால், GNT *தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள புதுவயல் கூட்டுச் சாலையில் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான 75 ஏக்கர் நிலத்தில், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அரசின் நோக்கத்தின் அடிப்படையில், திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கிட, திருவள்ளூர் மாவட்ட 10 சட்டமன்றத் தொகுதிகளின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரியில் அமைந்துள்ள 5 நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதால், பொன்னேரி பஞ்செட்டியில் அரசுமூலம் 6 ஏக்கர் நிலம் ஒதுக்கி, அந்த இடத்தில் ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

இரவு 7–05

பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னக்காவனம் என்ற கிராமத்தில் பிறந்து, தமிழ் இனம், மொழி காக்க, தன்னலமற்ற வாழ்க்கை வாழ்ந்த ஆதி திராவிட இன மக்களின் உரிமைக்காகப் போராடிய டாக்டர் சி. நடேசனார், நீதிக் கட்சியின் தந்தையாவார். அவருக்கு சென்னையில் மணிமண்டபம் கட்டிடவும், அவரது திருவுருவச் சிலையை அமைத்திடவும், அவரது

பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடிடவும் பொன்னேரி தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் சோலார் ஒன்றியம், பண்டிகாவனூர் கிராமத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், இடையன்சாவடி அருகே ஒரு தடுப்பணையும், ஆரணி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், ஏலியம்பேடு, பிரளையம்பாக்கம், வஞ்சிவாக்கம், கள்ளூர், காட்டூரான் கால்வாய் ஆகிய பகுதிகளில் தடுப்பணைகளும் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு வெளிவந்த 'மதுரை வீரன்' என்ற திரைப்படத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த குடும்பத்தில் வளரும் வீரன் என்ற கதாபாத்திரத்தில் மக்கள் திலகம் பொன்மனச் செம்மல் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்திருப்பார். அந்தப் படம் வெளிவந்த காலம் முதல் இன்று வரை ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நம்பிக்கை நாயகனாக, அவர்கள் வழிபடும் தெய்வங்களில் ஒருவராக விளங்கி வருகிறார் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "சாதி என்பது மனிதன் வகுத்த அநீதி. அதை மாற்றிக்கொள்வதுதான் நீதி. காலம் மாறி வருகிறது. எல்லோரும் ஓர் குலம் என்பதை அறிவுலகம் இன்று ஏற்றுக்கொண்டுதான் வருகிறது" என்ற வசனத்தை 'மதுரை வீரன்' திரைப்படத்தில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் திலகம் ஆவேசமாகப் பேசுவார். இது திரைப்படத்தில் வந்த காட்சியாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பலருக்கு கட்சியிலும், ஆட்சியிலும் உயர் பதவிகளை அளித்து அழகு பார்த்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர் வழியில் இதய தெய்வம் அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலராக இருந்து நல்ல பல திட்டங்களைத் தந்தார் என்பதை இன்றையதினம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தின்போது இப்பேரவையில் பதிய வைப்பதில் பெருமையடைகின்றேன். இதற்குக் காட்சியாகவும், சாட்சியாகவும் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள் இருக்கிறீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்கள் அமைத்துத் தந்த ராஜபாட்டையில் நடைபோடும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் அம்மா அவர்களின் அரசு பல்வேறு விருதுகளையும், அங்கீகாரங்களையும் பெற்றுள்ளது. ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக India Today பத்திரிகையின் 4 விருதுகளையும், உணவு தானிய உற்பத்தியின் உயர்விற்காக நான்கு முறை இந்திய அரசின் கிருஷி கர்மான் விருதினையும், பொது விநியோகத் திட்டத்தை முழுமையாக கணினிமயமாக்கியதற்கு சிறப்பு விருதுகளையும், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக தொடர்ந்து நான்கு முறை மத்திய அரசின் விருதுகளையும், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாகச் செயல்பட்டதற்காக மத்திய அரசிடமிருந்து 11 விருதுகளையும், திடக்கழிவு மேலாண்மைக்காக ஸ்காச் ப்ளாட்டினம் விருதினையும், குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மைக்காக மத்திய அரசின் விருதினையும், மின்சாரத் துறையில் சிறப்பு விருதினையும் பெற்று, மின்சாரம், கல்வி மற்றும் தொழில் துறைகளில் முதலிடம் வகிக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் தமிழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" என்ற திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்தியதற்காக இந்தியாவின் முதன்மை மாநில விருது; இப்படி அனைத்துத் துறைகளிலும் விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றுக் குவித்ததுதான் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகப் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியின சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், பொருளாதாரத்தில் தன்னிறைவைப் பெருக்குவதற்காகவும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், பொன்மனத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியதை மக்கள் அறிவார்கள். அவர்கள் காலம் தொட்டு இன்றுவரையிலும் கழக ஆட்சி நடைபெறும்

காலங்கள்தான் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கான பொற்காலம் என்பதை இந்தப் பேரவையில் ஆணித்தரமாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு சலுகைகளையும், உதவிகளையும் இந்தச் சமுதாய மக்களுக்காக வழங்கியிருக்கிறார். தாட்கோமூலம் சுய தொழில் தொடங்குவதற்கு சுமார் 438 கோடி ரூபாய் மானியத்துடன், சுமார் 1,217 கோடி ரூபாய் வரை அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மகளிரை நில உரிமைதாரர்களாக ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தில், அதற்கான புதிய திட்டத்தைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். 777 ஆதி திராவிட நலப் பள்ளிகளில் 39 கோடி ரூபாய் சிறப்பு மானியத்தில் கழிப்பறை வசதிகளை உருவாக்கிக் கொடுத்தது அம்மா அவர்களின் அரசு. பழங்குடியினர் மேம்பாட்டிற்காக சிறப்பு நிதியுதவியாக சுமார் 105 கோடி ரூபாயை ஒதுக்கியவர் நம் அம்மா அவர்கள்.

இரவு 7–10

அதேபோன்று, பெண் கல்வியின் ஊக்குவிப்புத் திட்டத்திற்காக சுமார் 129 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தின்கீழ் 16 இலட்சத்து 32 ஆயிரத்து 174 பெண்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் புதியதாக 54 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் தொடங்கப்பட்டன. தாட்கோமூலம் 6,553 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள சுமார் 80 ஆயிரம் உறுப்பினர்களுக்கு 265 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கியவர் நம் அம்மா அவர்கள். இதில் சுமார் 180 கோடி ரூபாய் அரசு மானியமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளை மேம்படுத்தியது, புதிய விடுதிகள் தொடங்கியது, விடுதியில் தங்கியுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு உணவுத் தொகையை உயர்த்தி வழங்கியது உள்ளிட்ட பல்வேறு பணிகளை நிறைவேற்றி, என்றும், எப்போதும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பாதுகாப்பு அரணாக இருப்பது அ.தி.மு.க. அரசுதான் என்பதைத் தொடர்ந்து இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு உறுதிப்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு, ஆதி திராவிடர் குடியிருப்புகளில்

சாலை, குடிநீர், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பது வரவேற்கத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதியாண்டில் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாயாகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கு 900 ரூபாயாகவும் உணவுக் கட்டணத்தை உயர்த்தி இருப்பது அந்த மாணவர்கள்மீது மாண்புமிகு அம்மா அரசுக்கு உள்ள அக்கறையைக் காட்டுகிறது. நடப்பு நிதியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக மட்டுமே பட்ஜெட்டில், திட்ட மதிப்பீடுகளில் சுமார் 481 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதும், ஆதி திராவிடர்களுக்கான, பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவியின்கீழ் 135 கோடி ரூபாய் உட்பட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 3,810 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது. மேலும் 20 விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு 40 கோடி ரூபாயும், கல்லூரி மற்றும் பள்ளி விடுதி மாணவ மாணவியருக்கு மாதாந்திர உணவுக் கட்டணம் வழங்குவதற்கு சுமார் 104 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, “என் சமூகம் உறங்கிக்கொண்டிருக்கிறது, நான் விழித்துக்கொண்டிருக்கின்றேன்” என்றார் அறிவுலக மாமேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவராக, ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காக விளங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு தனியார் கல்லூரிகளில் பயில்வதற்கு கல்விக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்தி, ஏழை எளிய மாணவ மாணவியர்களுக்கு தாயாக, வாழும் அம்பேத்கராக தன் வாழ்நாளில் விளங்கியவர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தனியார் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கும் கல்விக் கட்டணம் முழுவதையும் தொடர்ந்து செலுத்தி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டுமென்று மிகுந்த அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பொன்மனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு, இன்றுவரை பெரும்பாலான இடங்களில் அளந்து கல் போட இயலாமலும், கிராமக் கணக்கில் ஏற்றாமலும் உள்ளன. இதன் காரணமாக அங்குள்ள மக்களால் வீடு கட்ட இயலாத நிலை உள்ளது. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதி திராவிடர் நலத் துறையால் வழங்கப்பட்டதால், வருவாய்த் துறை கிராமக் கணக்கில் ஏற்றப்படாமல் இருந்து வருகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் பேரன்பினைப் பெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், கருணை உள்ளத்தோடு இந்த இலவச வீட்டுமனைகளை அளந்து, கல்போட்டு, கிராமக் கணக்கில் சேர்ப்பதற்கு ஒரு சிறப்புத் திட்டம் கொண்டு வந்து, கால அவகாசம் வழங்கி, ஆதி திராவிட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மிகுந்த அன்புடன் வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாட்கோ கடன்களுக்கு மானியம் அரசு வழங்கினாலும், அதனை வங்கிகள் வழங்குவதற்கு மறுத்து வருகின்றன. இதனை அரசே வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்களின் பாதுகாவலனாக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களைக் கருணை கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் உயர் பதவியில் உள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு இட ஒதுக்கீட்டின்படி, பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–15

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட மக்கள் NSFDC (National Scheduled Caste Finance and Development Corporation) மூலம் கடன் பெற்று தொழில் தொடங்கி நடத்தியதில், நட்டம் ஏற்பட்டு, மிகுந்த சிரமங்களோடு உள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களின் கடன் சுமையைக் குறைத்து, வாட்டத்தைப் போக்கி,

அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் இக்கடன் தொகையினை தள்ளுபடி செய்வதற்கு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், அமைதியான பேச்சு, நன்றாக உள்ளது. முடிவுரைக்கு வாருங்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் ஆதி திராவிட பகுதி மக்களின் தலைவிதியை மாற்றி, ஆதி திராவிட மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் தலா ரூ.1 இலட்சம் வீதம், 1,000 திருக்கோயில்களைப் புனரமைத்து விளக்கேற்றிட ரூபாய் 10 கோடியினை வாரி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலிலே பெற்ற மகத்தான வெற்றிக்குப்பிறகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அதில் "என் மீது தளராத நம்பிக்கை வைத்துள்ள தமிழக மக்களுக்கு, மீண்டும் ஆட்சிப் பொறுப்பை வழங்கியதற்காக எனது நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, தமிழக மக்களின் மீது எனக்குள்ள நன்றி உணர்வை வெளிப்படுத்த அகராதியில் போதிய வார்த்தைகளே இல்லை. தமிழக மக்கள் நலனுக்காக நான் புதிய உத்வேகத்துடன் செயல்பட்டு, எனது நன்றியினை செயலில் காண்பிப்பேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று மக்கள் போற்றும் மாதரசி நம் குலதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதிபடத் தெரிவித்தார்கள். ஆனால் விதியின் சதி, காலத்தின் கோலம், இதய தெய்வம் அம்மா அவர்களை காலதேவன் நம்மிடமிருந்து பிரித்துவிட்டான். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் எண்ணங்களை, அவரது இலட்சியங்களை, அம்மா அவர்கள் அளித்த உறுதியினைச் செயல்படுத்திட, கழக இரட்டையர்களாம் மாண்புமிகு முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அன்பு

அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களோடு பட்டாளத்து படை வரிசை வீரர்களாக நாங்கள் அனைவருமே அணி வகுத்து நிற்கின்றோம். இந்த ஆட்சிக்கும், இந்தக் கட்சிக்கும் ஒரு சிறிய துன்பம் ஏற்படாமல் நாங்கள் எல்லோரும் உறுதியுடன் துணை நிற்போம். (மேசையைத் தட்டும் ஒலி) இது சிங்கத்தின் கோட்டை. இதை சிறு நரிகள் ஒருபோதும் சிதறடிக்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, இதுவரையிலும் எனக்குப் பேச நல்வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு மாற்றுத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தற்போது எனது தொகுதி சார்ந்த ஒருசில கோரிக்கைகளை மட்டும் தெரிவித்திருக்கிறேன். மீதியுள்ள கோரிக்கைகளை நான் இம்மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, பதிவேட்டில் பதிய வேண்டும் என்று மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பொன்னேரி தொகுதி–மீஞ்சூரிலிருந்து தச்சூர் கூட்டுச் சாலை வரை ஒரு புறவழிச்சாலையினை G.N.T. தேசிய நெடுஞ் சாலையுடன் இணைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரி தொகுதி, பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசினர் (தன்னாட்சி) கல்லூரியைப் பிரித்து மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரி தொகுதி, பஞ்செட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்ட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரி தொகுதியில் அரசூர் கிராமத்தில் 110 KV துணை மின் நிலையம் அமைக்க நிர்வாக அனுமதியும், நாலூர் கிராமத்தில் 110 KV துணை மின் நிலையம் அமைக்கும் பணி நிலுவையில் உள்ளதை விரைவுப்படுத்த கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரி தொகுதி, அத்திப்பட்டு கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது E.S.I மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரி பணிமனையை மாநகரப் போக்குரத்துக் கழகத்தில் இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரி

தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சியில் அமைந்துள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை–திருப்பதி நெடுஞ்சாலை NH 205 இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்கப்படாமல் உள்ளது. எனவே, சாலையை உடனே அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். திருவள்ளூர் நகரத்தில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் நகரத்தில் அமைந்துள்ள பேருந்து நிலையம் சிறியதாக உள்ளதால், அனைத்து வசதிகளுடன்கூடிய மாவட்ட பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். திருவள்ளூர் நகராட்சி, சார்–பதிவாளர் அலுவலகத்தை மாவட்டப் பதிவாளர் அலுவலகமாக மாற்றக் கேட்டுக்கொள்கிறேன். திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சியில் அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக மானியம் வழங்கப்படுவதைக் குறிப்பிட்டு, Bank மூலமாக loan வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது என்று இரண்டு உறுப்பினர்களும் சொன்னார்கள். அதேபோன்று, அவர்கள் நஷ்டத்தில் இருப்பதால், தாட்கோமூலம் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், இரண்டு கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த இரண்டு கோரிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என் தாய் காளியம்மனை வணங்கி, வள்ளலார் அவர்களை வணங்கி இம்மாமன்றத்தில் ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த சோனியா காந்தி அவர்களுக்கும், ராகுல் காந்தி அவர்களுக்கும், CLP Leader அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, முதலில் எனது தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட தாராபுரத்தில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதற்குண்டான பொது மக்களின் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டு இருக்கின்றது. திருப்பூர் மாவட்டத்தில், எங்கள் தொகுதியிலேயே பெண்கள் மேல்நிலைப் பள்ளி அது ஒன்றுதான் இருக்கிறது. எனவே, வரும் ஆண்டிலேயே அதனை தரமுயர்த்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் தொகுதி, கொளத்துப்பாளையத்தில் உள்ள ராமபட்டி கிராமத்தில் 25 குழந்தைகள் படிக்கிறார்கள். இங்கு இயங்கிவந்த பள்ளிக் கட்டடங்கள் இரண்டும் பழுதடைந்து உள்ளதால், இடிக்கப்பட்டுவிட்டன. இடித்து ஓராண்டு காலமாகியும், இன்னும் கட்டடங்கள் கட்டித்தரப்படவில்லை. அந்தக் குழந்தைகள் மரத்தடியிலும், சத்துணவு மையங்களிலும் அமர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நடப்பாண்டில் இந்தக் கட்டடத்தைக் கட்டித் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நடப்பாண்டில் +2 முடித்துவிட்டு, கல்லூரிகளுக்குச் சென்றுள்ள குழந்தைகளுக்கும் laptop வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தாராபுரம், வடதரை, காமராஜர்புரம், 1–வது வார்டு, 2–வது வார்டுகளில் வசிக்கும் மக்கள் மூன்று தலைமுறைகளாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களில் பாதி பேருக்கு மட்டும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதியுள்ள குடும்பங்களுக்கும் இந்த ஆண்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–20

தாராபுரம், வடதரையிலிருந்து ஆற்றுக்குச் செல்லும் பாதை ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அங்கு மிகவும்

பிரசித்திபெற்ற தில்லாபுரி அம்மன் கோயில் இருக்கிறது. விவசாயிகள் பயன்படுத்தும் தடம் இது. மயானக் காரியங்களுக்கு ஆற்றுக்குச் செல்லும் பாதையான இந்தப் பாதையில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டு அடுக்கு மெட்டல் ரோடு அமைக்கப்பட்டு, அந்தப் பணி பாதியிலேயே நிற்கிறது. இந்தச் சாலை, நஞ்சியம்பாளையம் பஞ்சாயத்துக்குட்பட்டது ஆகும். இந்தச் சாலை P.W.D. பொறுப்பில் உள்ளது. நடப்பாண்டில் இந்தச் சாலையை சீர்செய்து, B.T. சாலையாக அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதி, தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைந்த பகுதியாகும். இங்குள்ள மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும். இதனால் நிறைய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கு ஒரே வீட்டில் 3 அல்லது 4 குடும்பத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். ஆதி திராவிட நலத் துறை அதிகாரிகளிடம் இதுகுறித்து பலமுறை கேட்டிருக்கிறோம். ஆனால், நிலம் வாங்குவதற்குப் பணம் இல்லை என்று சொல்கின்றார்கள். ஆகவே, அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, இந்த ஆண்டே பட்டா வழங்குவதற்கும், நிலங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி அணையிலிருந்து மழைக் காலங்களில் வீணாகக் கடலுக்குச் செல்லும் உபரி நீரை, உப்பாறு அணைக்கு நீர் வழிப் பாதை அமைத்து, ஏற்கெனவே உள்ள புது வாய்க்கால் வழியாகத் தண்ணீரைக் கொண்டுவந்து உப்பாறு அணையை நிரப்பிக் கொடுத்தால், 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு நான்கு ஆண்டுகளுக்கு அப்பகுதியில் குடிதண்ணீர் பஞ்சமே வராது. ஆகவே, நடப்பாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, இதனைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மூன்று ஆண்டுகளாக இந்த அணைக்கு நீர் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு வருகிறேன். அதற்கு எங்களுடைய தலைவர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். உப்பாறு அணைக்குத் தண்ணீர் வர வேண்டும். இதேபோன்று வட்டமலைக் கரைக்கும் அமராவதி ஆற்றுத் தண்ணீரை நிரப்பிக் கொடுக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்டத்தில் 60–க்கும் மேற்பட்ட விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றில் தாராபுரத்தில்

மட்டும் 50 உள்ளன. விதைச் சான்று அலுவலகம் திருப்பூரில் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தை பல்லடத்திற்கு மாற்றிக் கொடுத்தால், அனைவரின் போக்குவரத்துக்கும் சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள கொளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை செயலிழந்து 20 ஆண்டுகளாக கிடப்பில் இருக்கிறது. அங்கு 60 ஏக்கருக்கும் மேல் இடம் இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தந்தால், அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். நிறைய தொழில் துவங்குவதற்கும் முன்வருவார்கள். ஆகவே, இதனை அரசு பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதியில் ஒரு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தரவேண்டும். நான் இந்த அவையில் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைத்துக் கொண்டேயிருக்கின்றேன். இந்த ஆண்டு அதனை பரிசீலனை செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனை மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அங்குள்ள மருத்துவர் சிவபாலன், இந்த ஆண்டு சிறந்த மருத்துவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே, அந்த மருத்துவமனையைச் சிறப்பு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மூன்று ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் மனமிறங்கவேயில்லை. நான் எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கழிவு நீர் கால்வாய் அமைத்துக் கொடுத்துள்ளேன். இந்த ஆண்டும் ஏதாவது ஒரு பணியை அங்கு செய்ய வேண்டும் என்றும் இருக்கின்றேன். ஆகவே, தாராபுரம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அந்த மருத்துவமனை பழைய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதனை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த மருத்துவமனைக்கு scan centre அமைத்துத் தரவேண்டுமாயும், 2 dialysis machines வழங்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதி, கவுண்டர்புதூர் பஞ்சாயத்தில் 1,200 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளன. வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அந்த ரேஷன் கடைக்கு இந்த நிதியாண்டில் புதிய சொந்தக் கட்டடம் அமைத்துத் தர அரசு முன்வர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டத்தில் உள்ள வர்தமான் நதி அணையிலிருந்து வெளியேறும் வெள்ள நீரை கருங்குளத்திற்குக் கொண்டு சேர்ப்பதற்கு ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இதே அணையிலிருந்து நீர் பிரிந்து, பாப்பன் வாய்க்கால்மூலம் பாப்பன்குளம், பட்டிகுளம், கரிசல்குளம், செங்குளம் ஆகிய நான்கு குளங்களுக்கு சென்று, பின்பு அங்கிருந்து வெளியேறும் உபரி நீரானது நல்லதங்காள் ஆற்று வழியாக பொன்னிவாடியில் அமைந்துள்ள நல்லதங்காள் dam–க்கு வந்து சேருகிறது. இந்தத் தண்ணீர் வரும் நீர்ப் பாதையை சரிசெய்து அமைத்துத் தரவேண்டுமாயும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். குடிமராமத்து முறையில் அந்த நீர் வழிப் பாதையைச் சுத்தம் செய்து தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். நான் மூன்று ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கேட்டு வருகிறேன். அங்குள்ள C.E., அவர்களிடம் இதற்கான மதிப்பீட்டையும் வாங்கிக் கொடுத்துள்ளேன். ஆகவே, இந்த நிதியாண்டிலேயே பேரவை விதி 110–ன்கீழ் இந்த dam–க்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமாயும், அதற்கு எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–25

தாராபுரம் அமராவதி ஆற்றில் தடுப்பணைகள் கட்டித் தரவேண்டுமாய்க் கோரிக்கை வைத்தேன். ஆனால், கடந்த ஆண்டுகூட இந்தத் தடுப்பணைகளைக் கட்டுவதற்கு இடத்தை அளந்தார்கள். அதற்கான estimate தயார் செய்தார்கள். ஆனால் இதுவரை எந்தவிதமான வேலையும் துவங்கப்பட்டு, நடைபெறவில்லை. ஆத்துக்கால்புதூர், சங்கராம்பாளையம், பெரமியம், அக்கரைப்பாளையம், புதுப்பை ஆகிய இடங்களுக்கு தடுப்பணைகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இந்தத் துறையிலிருந்து என் தொகுதிக்கு ஒரு வேலையும் கொடுப்பதில்லை. எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள், கால்நடை பராமரிப்புத்

துறை சார்ந்த பணிகளை அடிக்கடி மக்களுக்காகச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தாராபுரம் தொகுதியில் விளையும் கண் வலிக் காய் விதை மிகவும் மருத்துவ குணங்கள் கொண்ட விதையாகும். இந்த விதையை அரசே கொள்முதல் செய்யவேண்டுமென்றும், இல்லையென்றால் மார்க்கெட்டில் உரிய விலையை நிர்ணயம் செய்து, விற்பனைக் கூடங்கள்மூலமாக விற்பனை செய்து தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிலோவிற்கு ரூபாய் 500 முதல் 1,000 வரை இடைத்தரகர்கள் ஏமாற்றுகிறார்கள். ஆகவே, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அரவே முன்வந்து, இந்த ஆண்டே இதை எடுத்துச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தளவாய்ப் பட்டினத்தில் 60 குடும்பத்திற்கும்மேல் தேவேந்திர குல வேளாளர்கள் வசித்துவருகிறார்கள். அதேபோல் என் சொந்த ஊரான வீராச்சிமங்கலத்தில் 700 குடும்பத்தினருக்கும் மேற்பட்டவர்கள் வசித்துவருகிறார்கள். இந்த இரண்டு ஊர்களிலும் மயானப் பாதை மிகவும் அழிந்த நிலையில் உள்ளன. தளவாய்ப்பட்டினத்தில் மண் பாதைதான் உள்ளது. ஆற்றங்கரையில் மயானத்திற்கு செல்லும் பாதை இருபுறமும் வயல்கள் நிறைந்த பகுதியாக உள்ளது. இங்கு மண் பாதை மிகவும் சேதமடைந்துள்ளது. இந்நிலையில் நான் இந்தப் பாதையை சரிசெய்து, BT road அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 3 வருடங்களாகக் கோரிக்கை வைத்துள்ளேன். ஆனால் இதுவரையிலும் செவி சாய்க்காமல் இருக்கிறார்கள். நடப்பாண்டில் இந்த சாலையைச் சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பொது நிதியிலிருந்தாவது இந்தச் சாலையைச் சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதி தாராபுரத்திற்கு சமுதாயக் கூடங்கள் கட்டித் தர வேண்டுமென்று 3 வருடங்களாக கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். தாராபுரம் கொளத்துப்பாளையம், எம்.ஜி.ஆர். நகர் காலனி ஒன்றிலும், வீராச்சிமங்கலம், ஆத்துக்கால்புதூர் காலனி ஒன்றிலும், நஞ்சியம்பாளையம் காலனி ஒன்றிலும், நாரணாபுரம், சத்திரம் காலனி, ராம் நகர் காலனி மற்றும் குண்டரிபுரம் சூரியநல்லூர் காலனி,

கோபணகுண்டயம்பாளையத்திலுள்ள காலனி, பள்ளப்பட்டி காலனி, நந்தவனப்பாளையம் காலனியிலும், மோகூர் செம்மனகுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் ஏற்கெனவே ஆய்வு செய்து அளந்து அப்படியே இருக்கின்றன. அவ்விடங்களில் பணிகள் இன்னும் துவக்கப்படாமல் இருக்கின்றன. நடப்பாண்டில் 2 சமுதாயக் கூடங்களையாவது வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதியில் உள்ள காலனிகளுக்கு சிமெண்ட் சாலைகள் அமைத்துத் தர வேண்டும். ஆதி திராவிட மயானத்திற்கு வழிப்பாதைகள் அமைத்துத் தர வேண்டும். மயான சுற்றுச்சுவர்கள், மதில்கள், மண்டபங்கள் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமாறும் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டுமாறும் கேட்டுக்கொள்கிறேன். சாம்ராஜ் நகரம்–பழனி இரயில் பாதை திட்டம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, செயல்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். இரயில் வந்தால் தொழில் வரும்; தொழில் வந்தால் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று நினைத்து, இளைஞர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தாண்டிலேயே இத்திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளில், 44 தனித் தொகுதிகள் இருக்கின்றன. இந்தத் தனித் தொகுதி ஒவ்வொன்றிலும், ஆதி திராவிட மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அடிப்படை வசதிகள் செய்வதற்குக் குறைந்தது தொகுதிக்கு ஆண்டுக்கு 1 கோடி ரூபாயாவது சிறப்பு நிதியாக ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆதி திராவிடர் குடியிருப்புகள் மற்றும் மயானம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மற்ற கோரிக்கைகள் அனைத்தையும் பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிடுங்கள். மற்றவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 3 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, 10 நிமிடங்கள் பேசியாயிற்று.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *எங்கே பேசினேன்? 7–25 மணிக்குத்தான் பேச ஆரம்பித்தேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் 7–18 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 7–25 மணிக்குத்தான் பேச ஆரம்பித்தேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வாக்குவாதத்திற்கே இடம் இல்லை. நீங்கள் 7–18 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது 7–28 மணி ஆகிவிட்டது, மணியைப் பாருங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர், மீதியை பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இன்னும் ஆதி திராவிடர் நலத் துறை பற்றிப் பேசவேயில்லை. (குறுக்கீடு) மேலும், ஆதி திராவிடர் குடியிருப்புகள் மற்றும் மயானச் சாலைகள் மிகவும் சிதிலமடைந்துள்ளதால், அவற்றைச் சீரமைக்க குறைந்தது தொகுதிக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஊரக வளர்ச்சித் துறையினரால் ஆதி திராவிடர்கள் மயானங்கள் செப்பனிடப்படுவதில்லை. தொகுப்பு வீடுகள் கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், அந்த வீடுகள் இடிந்து பழுதடைந்துள்ளன. அவற்றையும் சரிசெய்யும்விதத்தில் புதிய வீடுகள் அல்லது பழுதடைந்த வீடுகளைப் பழுதுபார்க்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்திடவும், வீடு ஒன்றிற்குக் குறைந்தது ரூ.50,000/– கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

தற்போதுள்ள காலக்கட்டத்தில், ஆதி திராவிடர்களுக்கென்று தனிப் பள்ளிகள் உள்ளன என்பது மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது. அனைத்துப் பள்ளிகளும் ஒன்றிணைக்கப்பட்டு, அனைத்து மாணவர்களும் ஒன்று சேர்ந்து படிக்கும் அளவில் நடவடிக்கை மேற்கொண்டு, சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: இந்தக் குழந்தைகள் படிப்பதற்கு வசதியாக L.K.G., மற்றும் U.K.G. வகுப்புகளைத் தொடங்கி, ஆங்கிலக் கல்வியைக் கற்க ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

நல்லாறு–பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பேசி இந்த ஆண்டு நிறைவேற்றித் தருமாறு நீரா பான நாயகனான (சிரிப்பு) தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் ஈமச் சடங்கு . . .

இரவு 7–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நல்லாறு, பரம்பிக்குளம், ஆழியாறு எல்லாம் ஆனைமலை ஆறு–நல்லாறு திட்டத்தில் வருகிறது.

திரு. வி.எஸ். காளிமுத்து: அது பரம்பிக்குளத்தில் போய்ச் சேருகிறது இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பரம்பிக்குளத்தின் ஒரு தொகுப்பு அது.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு ஈமச் சடங்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. அது ரூ.2,500/– மட்டும் வழங்கப்படுகிறது. தற்போதைய சூழலில், அதற்குச் செலவுகள் அதிகமாக ஏற்படுவதால், ஆதி திராவிடர்களின் ஈமச் சடங்கிற்கான நிதியுதவியை 10,000/- ரூபாயாக உயர்த்திக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டியல் இனத்தவர்களின் வரிசையில் 78 சாதிகளும், பட்டியல் பழங்குடியினர் வரிசையில் 20–க்கும் மேற்பட்ட சாதிகளும் இருப்பதை அரசு அறியும். இருப்பினும், ஒரு குறிப்பிட்ட சாதியின் பெயரால், ஆதி திராவிடர் நலத் துறை என்று இந்தத் துறை அழைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 13 நிமிடங்கள் ஆகின்றன, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இல்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன்.

திரு. வி.எஸ். காளிமுத்து: இதை மட்டும் பேசி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, உரையை முடியுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: எனவே, சரியான பொருளைக் கொடுக்கும்வகையிலே, பாரபட்சமற்ற முறையில் இத்துறையில் பெயர் மாற்றம் வேண்டும் என்று பட்டியல் வகுப்பினர் பெரும்பாலானோர் கருதுகிறார்கள். எனவே, இந்தத் துறையின் பெயரை, 'பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை' என்று மாற்றியமைக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதுவே அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் சரியான பெயராக இருக்க முடியும். இல்லையென்றால், மத்திய அரசில் இருப்பதைப்போல, சமூக நீதி மற்றும் அதிகாரம் அளிக்கும் துறை என்றும் மாற்றி அமைக்கலாம். இதுகுறித்து அரசு தீவிரமாக பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) பின்னர் நான் மணியடித்து வேறோர் உறுப்பினரைப் பேச அழைத்தால் நன்றாக இருக்காது. நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: இன்னும் ஒரு கோரிக்கை குறித்து மட்டும் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு கோரிக்கை குறித்து மட்டும் பேசுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் மற்றொரு நீண்டநாள் கோரிக்கை என்னவென்றால், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளில் தலையிட்டு, அவர்களுக்கு உரிய

நீதி வழங்குவதற்கு, மாநில அளவிலான தாழ்த்தப்பட்டோர் நல ஆணையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். இந்த 21 ஆம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான பாரபட்சங்கள், ஒடுக்குமுறைகள், தீண்டாமைக் கொடுமைகள் இன்னமும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார் போன்ற மகத்தான தலைவர்களால் பண்படுத்தப்பட்ட மாநிலம்தான் தமிழ்நாடு என்று சொன்னாலும்கூட, இன்னும் தாழ்த்தப்பட்ட மக்களில் பல பேருக்கு சமூக நீதி மறுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அரசியல் சட்டத்தின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறிக்கொண்டாலும், பள்ளிப் பாடப் புத்தகத்தில் பெரும்பாலும் அச்சிடப்பட்டிருந்தாலும், சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. எனவே, சாதி அடிப்படையில் அநீதி இழைக்கப்படும் ஒருவர் இதுகுறித்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நன்றி சொல்கிறீர்களா, அல்லது நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா? (குறுக்கீடுகள்) நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் நன்றி சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. ஆர்.எம். சின்னதம்பி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிரிலே கலந்து, ஏழரைக் கோடி தமிழர்களின் உள்ளத்தில் நிறைந்த எங்களின் சாதனைத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கு நிறைவான வாழ்வையும், விரைவாகத் தந்த மக்கள் மகராசி தெய்வம் இதய தெய்வம் அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மழைநீர் சேகரிப்பால் பூமிக்கு ஆதாரம்; வெயில் சேகரிப்பால் சூரியஒளி மின்சாரம்; காடுகள் சேகரிப்பால் உயிர்களுக்கு வாழ்வாதாரம்; இதய தெய்வம் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில்தான் உயர்ந்துள்ளது ஆதி திராவிட மக்களின் பொருளாதாரம். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சிக்கும், மலர்ச்சிக்கும், புன்னகைக்கும், புதுமைக்கும் எங்கள் புகழ்பெற்ற அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களும், தேனியார் அவர்களும், (மேசையைத் தட்டும்

ஒலி) நாடு போற்றும் நல்லாட்சி நடத்தும் இரும்பு மண்ணின் கரும்பு மனிதர், தமிழக மக்களின் நெஞ்சம் நிறைந்த சிதைக்காத மாங்கனியாகத் திகழும் எங்களின் மாங்கனி மாவட்டத்தின் மண்ணின் மைந்தர். உள்ளத்தில் நிறுத்தியவண்ணம், ஒன்றரைக் கோடி தொண்டர்களின் இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் அட்சி நடத்துபவர்கள் மாண்புமிகு எடப்பாடியாரும், மாண்புமிகு தேனியாரும்; இவர்கள் இணை கரத்து சீடர்கள். ஆண்ட அரசே ஆளட்டும் என்று, அடுத்தொரு கட்சியே ஆள வேண்டாம் என்று ஆட்காட்டி விரலால் மக்கள் அடையாளம் காட்டியது தேர்தல் ஜனநாயகம். அந்த அடிப்படையில் மக்கள் தேர்ந்தெடுத்த தாய்வழி அரசை வீழ்த்துவோம் எனக் கொக்கரித்து, பகல் கனவு கண்ட எதிரிகளுக்கும், துரோகிகளுக்கும் தமிழக மக்களோ, "செயின்ட் ஜார்ஜ் கோட்டையை இடரின்றி ஆளட்டும் எங்கள் எடப்பாடியார் அண்ணன் அவர்கள்" என்று தெளிவோடு தீர்ப்பளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இடைக்கால தீர்ப்பு அல்ல; வருகின்ற 2021–லும் எதிரொலிக்கக் காத்திருக்கும் இரட்டை இலைக்கான தீர்ப்பு என சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தரணி போற்றும் விவசாயியின் மகன், ஏழைகளின் விடிவெள்ளி, எங்களின் தங்கம், என் அண்ணன் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களின் நல்லாசியுடன் ஆதி திராவிடர் நலத் துறை மீதான மானியக் கோரிக்கையில் எனது உரையைத் தொடங்குகிறேன். இந்த மாமன்றத்தில் 3–வது முறையாகப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், ஆத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழகத் தொண்டர்களுக்கும் முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இரவு 7–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, ஆத்தூர் தொகுதியில் உள்ள ஆத்தூர் மருத்துவமனையை மாவட்ட சுகாதார மருத்துவமனையாகத் தரமுயர்த்தி இன்று அறிவித்துள்ள மாண்புமிகு குடிமராமத்து மன்னன், எங்களது நாடோடி மன்னன் தொடர்ந்து ஆட்சியில் இருக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஆத்தூர் தொகுதி மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 270 கோடி ரூபாயில் அமல்படுத்தியதால், குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இல்லாமல், அனைத்து கிராமங்களிலும் உள்ள மக்கள் சிறப்பாகப் பயன்பெற்று வருகிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயம் செய்திட மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இத்திட்டம் மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதுபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் குடிமராமத்து திட்டத்தைக் கொண்டுவந்து, குளம், குட்டை, ஏரி, அணை, வாய்க்கால் ஆகியவற்றைத் தூர்வாரிவருகிறார்கள். மழைநீர் பூமிக்குள் நேரடியாகச் செல்லவும் மற்றும் அணை, ஏரி, குளங்களில் சேமித்து வைத்தால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என்பதைக் கருத்தில்கொண்டு, எவரும் செய்யாத சாதனையை தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் செய்துள்ளார்கள். மழைநீர் வீணாக கடலில் கலப்பதைத் தடுக்க ஆறு மற்றும் ஓடைகளில் பல தடுப்பணைகள் கட்ட ஆணையிட்டுள்ளார்கள். அதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆத்தூர் தொகுதியில் பெத்தநாயக்கன்பாளையம் வருவாய் வட்டத்தை உருவாக்கி அதற்கு புதிய கட்டடத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு, என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், ஆத்தூர் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது அதற்கும் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அண்ணன் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்காகவும் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், தெற்கு நாடு கிராமம், கைகாண்வளவு ஆற்காட்டிலிருந்து உபரி நீரை சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம் கரியகோயில் நீர்த்தேக்கத்திற்கு திருப்பும் பணிக்கு நேற்று ரூ.7.30 கோடி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாட்டில் இருக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் 20 கிலோ அரிசியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தார்கள். இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் சிறப்பாக ஆட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், குறு, சிறு தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு ரூ.2,000/– வழங்கி, அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்க ஆணையிட்டார்கள். அதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு குறு, சிறு தொழிலாளர்கள் சார்பாகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மைக் கால கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 7.21 கோடியாகும். அதில் SC வகுப்பினர் 1.44 கோடியும், ST வகுப்பினர் 7.95 இலட்சம் உள்ளார்கள். இந்த மக்கள், சமூகம், கல்வி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பின்தங்கியவர்களாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி கருதப்படுகிறார்கள். எல்லா வகையிலும், இந்த மக்களை மேம்படுத்துவதே இத்துறையின் நோக்கம் ஆகும். தமிழ்நாடு அரசின் முற்போக்கான கொள்கைகளாகிய சமுதாய முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, கல்வி அறிவை உயர்த்துதல் மற்றும் மனித வளத்தை மேம்படுத்துதல் போன்றவற்றைச் செயல்படுத்தி, அவற்றை அடையும் வகையில் கொள்கைகளை வகுத்தல், திட்டங்களைத் தீட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்து செம்மையாகச் செயல்படுத்துதல் போன்றவை இத்துறையின் பொறுப்பாகும். இந்த மக்களை சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும், அவர்களுக்கு நிரந்தர மேம்பாட்டை உறுதி செய்கின்ற வகையிலும் இத்துறையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிடர் நில எடுப்புச் சட்டத்தின்கீழ், வீடற்ற இச்சமுதாயத்தைச் சார்ந்த தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுத்துவருவதுடன், நிலம் வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும், அரசு நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை

வசதிகளை செய்து தருவதுடன், குடிநீர்ப் பணிகளுக்காக 15 சதவீதம் மற்றும் சாலை வசதிகளுக்காக 10 சதவீதம் அளவிற்கு செலவினத்தை இத்துறை ஏற்கிறது. இச்சமுதாயத்தைச் சார்ந்த குடும்பத்தில் இறப்பு ஏதேனும் ஏற்பட்டால், ஈமச்சடங்கு உதவித் தொகை இவ்வரசால் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது.

இரவு 7–40

எனது தொகுதி மக்களின் ஒருசில கோரிக்கைகளை நான் தெரிவித்திருக்கிறேன். மீதமுள்ளவற்றை இந்த மாமன்றத்தில் நான் படித்ததாகக் கருதி, பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இராமநாயக்கன்பாளையம் கல்லாறு நீர்த்தேக்கத் திட்டம் தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாகும். இத்திட்டத்தை நிறைவேற்றினால், சுமார் 20 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். ஆத்தூர், தலைவாசல் மற்றும் கெங்கவள்ளி பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நிரந்தரமாக நீங்கும். இராமநாயக்கன்பாளையம், கல்லாறு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றினால் தொகுதி மக்கள் என்றென்றும் தங்களுக்கும், நம் அரசிற்கும் ஆதரவாகவும், விசுவாசமாகவும் இருப்பார்கள்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பெரிய நகரமாகும். ஆத்தூர் தொகுதியில் 40–க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளும், 20–க்கும் மேற்பட்ட அரசு மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன. ஆண்டுக்கு சுமார் 30,000 மாணவ, மாணவிகள் மேல்நிலைப் படிப்பை முடித்துவிட்டு, மேற்படிப்புக்குச் செல்கிறார்கள். வெளியூர் சென்று மேற்படிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளதால், ஏழை மாணவ, மாணவிகளின் படிப்பில் தடை ஏற்படுகிறது. ஏழை மாணவிகள் மேற்படிப்பை இடைவிடாமல் தொடர, ஆத்தூரில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க தொகுதி மக்களின் சார்பாகவும், மாணவ, மாணவிகளின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்கள் அதிகமாக உள்ள ஊராட்சிகளில் குறிப்பிட்ட இடங்களில் சமுதாயக் கூடங்களை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி, உங்கள் உரையை முடியுங்கள். மற்றவற்றைப் பதிவு செய்து கொள்ளலாம்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: இதோ ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்துவிடுகிறேன். அத்திக்கடவு–அவினாசி திட்டம் தந்த எங்கள் அண்ணனே! குடிமராமத்து நாயகரே! பொங்கல் பரிசுடன் ஆயிரம் ரூபாய் தந்த கொங்கு மன்னனே! கொள்கை ஒன்றே என்ற குறிக்கோளுடன் வாழும் எங்கள் கொள்கை தங்கமே! கொங்கு மண் தந்த எங்கள் குலவிளக்கே! அம்மா வழியில் கட்சியையும், ஆட்சியையும் வழி நடத்தும் எங்கள் அரசியல் ஆசானே! (மேசையைத் தட்டும் ஒலி) 'தொண்டனுக்கும் உண்டு வாழ்வு' என செய்திட்ட சேலத்து மாங்கனியே! நீங்கள் கடந்து வந்த பாதை பூஞ்சோலை அல்ல; முட்புதர்கள். முட்புதர்களைப் பூஞ்சோலையாக மாற்றிய எங்கள் சாணக்கியரே! ஆலமரம் சரிந்தால், விழுதுகள் மரத்தைத் தாங்கும். அந்த விழுதுகளாய் கழகத்தைக் காப்பவரே! எங்கள் மண்ணின் மைந்தரே! இவ்வளவு நேரம் இம்மாமன்றத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆத்தூர் நகரில் உள்ள காவல் நிலையம், ஆத்தூர் ஒன்றிய அலுவலகம், நரசிங்கபுரத்தில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம் ஆகியவற்றிற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரில் உள்ள ஆதி திராவிடர் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டி, இப்பள்ளியினை மேம்படுத்தித் தர வேண்டும். மேலும் இப்பள்ளிக்கு ஆய்வகம், சத்துணவுக் கூடம், கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சி, 4–வது வார்டு பகுதியில் உள்ள அருந்ததியர் இன மக்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டித் தர போதுமான நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி ஆகிய மூன்று வட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் நலத் துறை தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடமும் மற்றும் அடிப்படை வசதிகளும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளின் மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகள் தைத்துக் கொடுக்க, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் இன மகளிரை ஒருங்கிணைத்து, ஒரு புதிய கூட்டுறவு தையல் சங்கத்தை உருவாக்கி, அதன்மூலம் சீருடைகள் தைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் ஒன்றியம், இராமநாயக்கன்பாளையத்திற்குப் புதியதாக தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்றை அமைத்திடவும், துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்திடவும், கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் பேருந்து நிலையத்தின் போக்குவரத்து நெரிசலைச் சரிசெய்ய ராசிபுரம் பிரிவு ரோடு முதல் உழவர் சந்தை வரை சாலையை அகலப்படுத்தி, நடுவே தடுப்புச் சுவர் அமைத்திட வேண்டுகிறேன்.

கல்லாநத்தம் ஊராட்சி, முட்டல் ஏரியைத் தூர்வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முட்டல் ஏரியிலிருந்து கல்லாநத்தம், அம்மம்பாளையம், துலுக்கனூர் ஊராட்சிகளுக்குக் குடிநீர் கொண்டு வர கான்கிரீட் கால்வாய் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து கோட்டைக்குப் போகும் வழியில் தரைப் பாலம் அமைத்திடவும், ஆத்தூர் பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர், அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கிவரும் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்புமிக்க இம்மான்றத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சொல்லை நடைமுறைப்படுத்தி நடத்திக் காட்டிய பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். ஏழையாகப் பிறந்து, ஏழ்மையின் காரணமாக வரும் துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து, அந்த வறுமையின் கொடுமையை தன் நாட்டு மக்கள் அனுபவிக்கக்கூடாது என்று ஏழைகளுக்காக, உழைத்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முகம் அறியாத, முகவரி அற்ற, கோடிக்கணக்கான ஏழை மக்களையும், எளிய தொண்டனையும் தன் பிள்ளையாக எண்ணி, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று அடித்தட்டு மக்களின் வாழ்வை (மேசையைத் தட்டும் ஒலி) வளமாக்க அதற்காக தன் இன்னுயிரையே உரமாக்கிய மாண்புமிகு அம்மா, வரம் தரவே தவ வாழ்க்கை வாழ்ந்த தியாக தீபம், புரட்சித் தலைவி, தங்கத் தாரகை, மறைந்த முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழுக்கு இலக்கணம் தொல்காப்பியம்போல், பெண்மைக்கு இலக்கணமாக நம் முன்னால் வாழ்ந்தவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பேருந்தில் இடம் பிடிக்கவே துண்டை வீசும் காலத்தில், எளிய கடைக்கோடி கழகத் தொண்டனின் வசதி, வாய்ப்பு, பணபலம், வாரிசு, சாதி–மத இன பேதங்களைக் கடந்து, தொண்டனின் வியர்வைத் துளியை மட்டுமே மதித்து பதவி கொடுத்து அழகு பார்த்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலங்காலமாக கழகத் தேர் இழுத்தவர்களை தேரில் ஏற்றி ஊர்வலம் நடத்தியவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்தில் வெற்றிடம் என்று கூப்பாடு போடுகிறார்கள். வெற்றிடம் ஏற்பட்டது உண்மைதான். அது அம்மாவின் உடல் மறைந்தபோது, கழகத் தொண்டனும், தமிழக மக்களும் கண்ணீரைக்

கொட்டித் தீர்த்ததால், கண்ணீருக்கு மட்டுமே வெற்றிடம்; மற்றபடி வேறு வெற்றிடங்கள் இல்லை. வெற்றி பெற்ற இடம்தான் உண்டு. அது என்றுமே மாண்புமிகு அம்மாவைச் சுற்றியே இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் எத்தனையோ அறிஞர்கள், புலவர்கள், தலைவர்களின் உடல் மறைந்தாலும் அவர்களின் இலட்சியம், ஆசை, கனவு என்றும் மறையாது.

இரவு 7–45

அந்த வகையில் மாண்புமிகு தங்கத் தாரகை அம்மா அவர்கள், "நூறு ஆண்டுகள் ஆனாலும், கழக ஆட்சிதான் தொடரும்" என்று கூறினார்கள். அந்த இலட்சிய பயணத்தை முன்னெடுத்து, நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஐயா அவர்களும் ஆட்சியை வழிநடத்தி வருகிறார்கள். அதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஐயா அவர்களையும் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், எங்கள் மாவட்ட கழகத்தினுடைய செயலாளர், எங்கள் தொகுதியினுடைய ஒன்றியக் கழகச் செயலாளர், ஊராட்சிக் கழகத்தினுடைய செயலாளர், கிளைக் கழகச் செயலாளர் மற்றும் தொகுதி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவுகள் தமிழகத்தில் செயல்படுத்திவரும் ஒவ்வொரு வளர்ச்சி நலத் திட்டங்களிலும் வாழ்ந்து, வாழ்த்திக் கொண்டிருக்கின்றன. "அதோ! அந்த ஏழை மகளின் தாலிக்குத் தங்கமாக, இதோ! கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையாக, தொட்டில் குழந்தைத் திட்டமாக, (மேசையைத் தட்டும் ஒலி) பரிசுப் பெட்டகமாக, விலையில்லாப் பாடப் புத்தகங்களாக, கல்வி உபகரணங்களாக, மிதியடிகளாக, மிதிவண்டிகளாக, மடிக்கணினிகளாக, விலையில்லா ஆடு, மாடுகள், மிக்சி, கிரைண்டர், எண்ணற்ற ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவித் தொகை வளர்ச்சி நலத் திட்டங்கள்" என ஒவ்வொரு நலப் பணியிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்து, வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நலப் பணியிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடம் என்றும் தமிழக மக்கள் நெஞ்சமே அவர்கள் வாழ்விடம்.

அரசியல் சதுரங்க களத்தில் சூழ்ச்சி, துரோகம், வஞ்சகத்துக்கு எதிராக சத்தியத்தை மட்டுமே துணை கொண்டு, துரோகத்தை

தன் மதிநுட்பத்தால் வென்று, கவிழ்ப்பு, கலைப்பு என்ற எதிரிகள், துரோகிகளின் பகல் கனவைக் கலைத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் மக்கள் நலனே என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தை மனதில்கொண்டு, அயராது உழைத்து, சிறப்பான ஆட்சியை வழிநடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

பொதுவாக வேர்கள் வெளியில் தெரியாது. மண்ணுக்குள் மறைந்திருக்கும். ஆனால், வேர்கள் உருமாறி விழுதாக ஆலமரத்தில் வாழும். அப்படி ஆலம் விழுதுகளாக கோடிக்கணக்கான தொண்டர்களைக் கட்டிக் காத்து, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியப் பாதையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் வழிநடத்துகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

துரோகிகளை காலம் அடையாளம் காட்டிவிட்டது. அப்படி காலம் அடையாளம் காட்டிய துரோகிகளை மக்கள் மன்றம், இடம் தெரியாமல் செய்துவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்த திண்டுக்கல் வெற்றிப் பயணத்தை எந்த தடைக்கற்களாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. புரட்சித் தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஒப்பற்ற எஃகு வார்ப்பாக, கழகத்திற்கு தங்களையே அர்ப்பணித்து, கட்சியை வழிநடத்தும் ஒருங்கிணைப்பாளராக, வடக்கில் ஓர் இமயம் என்றால், தெற்கே ஓர் இமயம் என இரண்டு இமயங்களாக அமைந்து, கண்களை இமைகள் காப்பதுபோல் கழகத்தைக் காத்து நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக நம் மாநிலம் திகழ்வது பாராட்டுக்குரியது. இந்தச் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆதி திராவிடர் துணைத் திட்டம்மூலம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அடிப்படை வசதிகள் மற்றும் குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்கள் உதவியுடன் அனைத்துப் பலன்களையும்,

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குச் சென்றடைவதில் முன்னோடியாகத் திகழ்வது வரவேற்புக்குரியதாகும் என இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். மேலும், ஆதி திராவிடர் மக்கள் தன்னிறைவு அடைய, பல திட்டங்கள், பல முயற்சிகள் மேற்கொள்வது எல்லோரையும் வியப்படையச் செய்து வருகிறது நம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு. கல்வி, பொருளாதாரம், சமூக முன்னேற்றம் போன்றவற்றில் நமக்குநிகர் நாம்தான் என்று இந்த அரசு செயல்படுகிறது.

கடந்த காலத்தில் திருச்சி நாடாளுமன்ற பொதுத் தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த திரு. தலித் எழில்மலை என்ற ஒருவரை வேட்பாளராக நிறுத்தி, வெற்றிபெற செய்ய வைத்தவர் சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையுடன் நான் இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

இரவு 7–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு தற்போது வழங்கும் உதவித் தொகையைவிட கூடுதலாக உதவித் தொகையை உயர்த்தித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. தலித் எழில்மலை என்றுதான் கூறினார். உங்கள் காதுகளுக்குத் தவறாக விழுந்துள்ளது.

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோமூலம் துரித மின் இணைப்புத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த, விரைவுபடுத்த வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு மானியத்துடன்கூடிய கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன். கிராமப்புறங்களிலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள்மூலம், மானியத்துடன்கூடிய கடன் பெற்று, கால்நடைகளாகிய ஆடுகள், மாடுகள் வாங்க இந்த அரசு உதவிட வேண்டுகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மராமத்துப் பணிகள் செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதிகமான குடியிருப்புகள் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை அம்மாவின் அரசு கட்டித்தருமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு நம் அம்மாவின் அரசு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2019–2020 ஆம் ஆண்டில் ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்மூலம், நிலமேம்பாடு செய்தல், கூரை வீடுகளை மேம்பாடு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல், குடிநீர்ப் பணிகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நமது அம்மாவின் அரசு சீரோடும், சிறப்பாகவும் செயல்படுத்துகிறது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். இத்திட்டத்தினை எனது கந்தர்வகோட்டை தொகுதிக்குக் கூடுதலாகச் செயல்படுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நம் அம்மாவின் அரசில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதோடு, இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் தொழிற்பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இத்திட்டத்தில், எனது கந்தர்வகோட்டை தொகுதி மக்கள் பயன்பெறும்வகையில், கந்தர்வகோட்டையில் தொழிற்பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்ற வகையில், நமது தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அரசு நாள்தோறும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது நவீன உலகில் செல்போன்மூலம்

அனைத்தும் நொடிப் பொழுதில் சென்றுவிடுகிறது. ஆகவே, "Amma App." எனும் புதிய செயலியை தமிழக அரசு உருவாக்கி, இதில் தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளை வெளியிட்டால், தமிழக மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கந்தர்வகோட்டை தாலுகா, கறம்பக்குடி தாலுகா ஆகிய இரண்டையும் இணைத்து, கந்தர்வகோட்டையைத் தலைமையிடமாகக்கொண்டு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தை உருவாக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கந்தர்வகோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கறம்பக்குடி, ரெகுநாதபுரம், மழையூர், ஆதனக்கோட்டை ஆகிய காவல் நிலையங்களை இணைத்து, கந்தர்வகோட்டையில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கந்தர்வகோட்டை ஒன்றியம், கோமாபுரத்தில் அரசு வேளாண்மை விற்பனைக் கிடங்கு (இடுபொருள் உரங்கள்) அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கந்தர்வகோட்டை கிராம ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கந்தர்வகோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த வேளாளம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலமாக 50 மாணவர்கள் தங்கிப் படிக்க விடுதி வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பேருந்து வசதி மிகவும் முக்கியமாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மற்றவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம். அவருக்கு அருகில் இருப்பவர்கள், தயவுசெய்து சிபாரிசு செய்யாதீர்கள். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். மற்றவை அனைத்தும் பதிவு செய்யப்படும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பக்கம்; கடைசி பக்கத்தை மட்டும் படித்துவிடுகிறேன்.

அம்மா ஆட்சி என்றாலே, அமைதிப் பூங்காதான். அப்படி அமைதி பூங்காவாகத் திகழும் தமிழகத்தில் இயற்கையாக, இயல்பாக நல்லாட்சி நடைபெறுகின்றது. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் இயற்கைக்கு மாறாக, கிளியைப் பாட வைக்கவும், குயிலைப் பேச வைக்கவும், மயிலை நடக்க வைக்கவும், அன்னத்தை ஆட வைக்கவும் நினைக்கிறார்கள். யானை தூண்டிலுக்குச் சிக்காது; மீன் மகுடிக்குப் படியாது, மயங்காது என்று சொல்லிக்கொள்கிறேன். தமிழகத்தில் புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அவர்களின் இரட்டை இலை, நல்லாட்சி இயற்கையானது; இயல்பானது; என்றும் அம்மாவின் ஆட்சி; இதற்கு தமிழக மக்களே சாட்சி; (மேசையைத் தட்டும் ஒலி) 2021–லும் அம்மாவின் ஆட்சி தொடரும் என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

கந்தர்வகோட்டையிலிருந்து செங்கிப்பட்டி வழியாக சென்னைக்கு பேருந்தினை இயக்கவேண்டும். திருச்சியிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு, கல்லூரி மாணவ, மாணவிகளின் நலன் கருதி, நான்கு கல்லூரிகளை இணைக்கும் வகையில், செங்கிப்பட்டி, அரசு பொறியியல் கல்லூரி, கந்தர்வகோட்டையில் உள்ள புதுப்பட்டி அரசு தொழில்நுட்பக் கல்லூரி, மோகனூர், பெரியகோட்டை பகுட்டுவான்பட்டி, நடுப்பட்டி விளக்குரோடு வழியாக ரெகுநாதபுரம், மருதன்கோன்விடுதி, நாலுரோடு அரசு கலைக் கல்லூரி, திருவோணம் மூவர்ரோடு வழியாக சின்னகோன்விடுதி, மணமடை, வெட்டிக்காடு வழியாக ஒரத்தநாடு மகளிர் கலைக் கல்லூரி, அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி பட்டுக்கோட்டை வரை வழித்தடத்தில் ஒரு நாளைக்கு நான்கு முறை பேருந்துகள் இயக்கவேண்டும்.

புதுக்கோட்டை கல்லூரி மாணவ, மாணவிகளின் நலன் கருதி, புதுக்கோட்டையிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு

ஆதனக்கோட்டை, சொக்கநாதப்பட்டி, வளவம்பட்டி வழியாக கந்தர்வகோட்டை வழியாக புதுப்பட்டி அரசு தொழில்நுட்ப கல்லூரி, மோகனூர் பெரியகோட்டை, பகுட்டுவான்பட்டி, நடுப்பட்டி விளக்குரோடு வழியாக ரெகுநாதபுரம், மருதகோன்விடுதி, நால்ரோடு அரசு கலைக் கல்லூரி, திருவோணம் மூவர் ரோடு வழியாக சின்னகோன்விடுதி, மணமேடை, வெட்டிக்காடு வழியாக ஒரத்தநாடு மகளிர் கலைக் கல்லூரி, அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி பட்டுக்கோட்டை வரை வழித்தடத்தில் ஒரு நாளைக்கு நான்கு முறை பேருந்துகள் இயக்க வேண்டுகிறேன். திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து ஏர்போர்ட், துப்பாக்கி தொழிற்சாலை, HAPP காந்தலூர் வழியாக கண்ணங்குடி வரை பேருந்து வசதி செய்தல் வேண்டும்.

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் வெள்ளாளவிடுதி ஆத்தங்கரையை இணைக்கும் பாலத்தினைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பொது மக்கள் நலன் கருதி அதனை விரைந்து கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கல்லாக்கோட்டை ஊராட்சியில் உள்ள கல்லாக்கோட்டை பஞ்சாயத்தில் முத்தப்பள்ளம் கிராமத்தில் சாலை வசதி வேண்டும். குன்றாண்டார்கோவில் ஒன்றியத்தில் கிள்ளனூர் ஊராட்சியில் கங்கம்பட்டி வழியாக கீரனூர் சாலை திருப்பூர் வரை தார்ச் சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதை சீர் செய்ய வேண்டும். வீரக்குடி ஊராட்சி, திருப்பூர் முதல் பெரண்டையாபட்டி சாலையில் வெள்ளாறு தரைப் பாலம் உள்ளது. மழைக் காலங்களில் இது மூழ்கிவிடுவதால், அங்கு பாலம் அமைக்க வேண்டுகிறேன்.

குன்றாண்டார்கோவில் ஒன்றியம், செட்டிப்பட்டி ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க வேண்டுகிறேன்.

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வெள்ளனூர் ஊராட்சிக்குப் புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டித் தர வேண்டும். இதற்கான இடம் புதுக்கோட்டை, திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அன்னவாசல் ஒன்றியம், நார்த்தா மலை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்துதர வேண்டும். கந்தர்வகோட்டை ஒன்றியம், கல்லாக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி, சத்தியமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டும்.

கீரனூர் பேரூராட்சியில் அரசுப் போக்குவரத்து பணிமனைக் கட்டடம் அமைக்க வேண்டும். கீரனூர் பகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும். கீரனூர் நடுவே பெரியகுளத்தினுடைய வாரி மிக மோசமாக உள்ளது. அதனை சீர் செய்து தர வேண்டும்.

திருச்சி முதல் புதுக்கோட்டை சாலையில் கீரனூர் தியேட்டர் அருகில் உள்ள நெடுஞ்சாலை பாலத்தினைப் புதிதாக அமைக்க வேண்டும். கீரனூரில் உள்ள 15 வார்டுகளிலும் சாலைகள் மிக மோசமாக உள்ளதால், இங்கு புதியதாக சாலை அமைக்க வேண்டும்.

அன்னவாசல் ஒன்றியம், நார்த்தாமலை காட்டில் மான் போன்ற விலங்குகளும், மயிலும் ஏராளமாக உள்ளன. நார்த்தாமலை காடு வளர்ப்பு காடாக உள்ளது. வரலாறு காணாத வறட்சி காரணமாக விலங்குகள், மயில்கள், நீரைத்தேடி ஊருக்குள்ளும், சாலைகளைக் கடந்தும் செல்கின்றன. எனவே, இப்பகுதியில் மூன்று செயற்கைக் குளங்களை அமைக்க வேண்டுகிறேன்.

நார்த்தாமலை விஜயாலாய சோளிஸ்வரர் கோயில் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கலைநயமிக்க கோயில். இதுகுறித்து Google Website–ல் பார்த்தால் தமிழ்நாட்டில் அழகுமிக்க முதல் 10 இடங்களில் முதலிடத்தில் உள்ளது. எனவே, இங்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். மலைப்பட்டி பெருமாள் கோவில், குன்றாண்டார்கோவில் சிவன் கோயில் ஆகிய கோயில்களை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுகிறேன்.

அன்னவாசல் ஒன்றியம், முத்துக்காடு ஊராட்சியில் காவேரி நகரில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் 60 ஆண்டுகளுக்கு முன்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவற்றிற்குப் பட்டா வழங்க வேண்டும்.

திருச்சி–புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் கீரனூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். கீரனூர் பேரூராட்சிக்கு நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். கந்தர்வகோட்டையில் அம்மா மலிவு விலை உணவகத்தை அமைத்துத் தர வேண்டும்.

குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் தெம்மாவூர் ஊராட்சியில் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் இந்து சமய அறநிலையங்கள் துறை மூலமாக திருமண மண்டபம் கட்ட வேண்டும்.

கல்லாக்கோட்டை ஊராட்சியில் உள்ள முத்தப்பள்ளம் கிராம சாலையினைச் சீரமைத்துத் தர வேண்டுகிறேன். கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளாளவிடுதி ஆத்தங்கரை இணைப்புப் பாலப் பணியைத் தொடங்க வேண்டுகிறேன். குன்றாண்டார்கோவில் ஒன்றியம், மின்னாத்தூர் முதல் தெம்மாவூர் சாலை வரை 4 கி.மீ. தூரம் பழுதடைந்துள்ளதை சீர் செய்ய வேண்டும். குன்றாண்டார்கோவில் ஒன்றியம், மின்னாத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

கந்தர்வகோட்டை ஒன்றியம், நொடியூர் ஊராட்சி, எம். சோழகம்பட்டியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். கந்தர்வகோட்டை ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, வேலாடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

தஞ்சாவூர் மாநகரிலிருந்து கந்தர்வகோட்டை வரை செல்லும் 60A என்ற பேருந்தை கந்தர்வகோட்டையிலிருந்து அரவம்பட்டி வரை பள்ளி மாணவர்கள், பணியாளர்கள் நலன் கருதி காலையும், மாலையும் இருமுறை இயக்க வேண்டுகிறேன்.

இரவு 7–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தந்தை பெரியாரின் சீடர், பேரறிஞர் அண்ணாவின் தம்பி, தென்னாட்டு அம்பேத்கர், அண்ணன் தலைவர் கலைஞரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வந்த இந்த மாமன்றத்தில், நானும் பணியாற்ற, "உழைப்பு, உழைப்பு, உழைப்பு" என ஒட்டுமொத்த தமிழகத்தையும், வலம் வந்து, தமிழக மக்களின் இதயத் துடிப்பாக விளங்கும் தளபதி அவர்களின் தொண்டனாகிய

(மேசையைத் தட்டும் ஒலி) என்னை குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினராக்கிய கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், மண்ணின் மைந்தர், கழகப் பொருளாளர், சட்டமன்ற எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் அவர்களுக்கும், எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட இளைஞரணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட வேலூர் (கிழக்கு) மாவட்டச் செயலாளர் திரு. ஆர். காந்தி அவர்களுக்கும், வேலூர் (மத்திய) மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்களுக்கும், அவைத் தலைவர், மாவட்ட ஒன்றிய, நகர கழகச் செயலாளர்கள், நிருவாகிகள் மற்றும் ஊராட்சிக் கழகச் செயலாளர்கள், வார்டு கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளுடைய அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், தோழமைக் கட்சியைச் சேர்ந்த அனைத்து நிருவாகிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் மற்றும் 27,841 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை மாபெரும் வெற்றிப் பெறச் செய்த குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையில் உரை நிகழ்த்த வாய்ப்பளித்த தங்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான ஒட்டுமொத்த கொள்கைகளை உருவாக்குதல், நலத் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவையே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் முதன்மையான பணியாகும். மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குச் செல்வதற்குமுன் கழக அரசின் சாதனைகளை சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1967–ல் தீண்டாமையை அகற்றிட, 'கலப்புத் திருமண உதவித் திட்டம்', 1969–ல் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்குத் 'தனி இயக்குநர் அலுவலகம்' கண்டவர் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். 1971 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் இருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டிலிருந்து 18 விழுக்காடாக உயர்த்தித் தந்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்

ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) பழங்குடியினருக்குத் தனியாக 1 சதவிகிதம் தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) 1974 ஆம் ஆண்டு, ஆதி திராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடு இந்தியாவிலேயே முதன்முதலில் கட்டித் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) 1989–ல், ஆதி திராவிடர்களில் தொழில்முனைவோரை உருவாக்கும் சிறப்புத் திட்டம் தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) 1990–ல் பழங்குடியினருக்கு 1 சதவிகிதம் இட ஒதுக்கீடு தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) 1997 ஆம் ஆண்டில் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் தொடங்கப்பட்டு, இந்தியாவிலேயே 240 சமத்துவபுரங்களை உருவாக்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) 20–9–1997 அன்று டாக்டர் அம்பேத்கர் பெயரில் சென்னையில் இந்தியாவிலேயே முதன்முதலாக சட்டப் பல்கலைக்கழகம் அமைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் அவர்களின் பெயரைச் சூட்டி, 1990–ல் அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரை வைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அட்டவணையில் கல்வி என்ற தலைப்பில் பள்ளி மாணவர்களின் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2010–2011–ல் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,073. அதில் மாணவர்களின் எண்ணிக்கை 2,10,384, அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள் 296; மாணவர்களின் எண்ணிக்கை 40,608. 2011–2012–ல் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,081. அதில் மாணவர்களின் எண்ணிக்கை 1,75,456, அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள் 296, மாணவர்களின் எண்ணிக்கை 37,640. இப்படி படிப்படியாகப் பார்க்கின்றபொழுது, 2018–2019–ல் 1,134 பள்ளிக்கூடங்கள், மாணவர்களின் எண்ணிக்கை 90,248; அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள் 315. ஆனால், மொத்த மாணவர்களின் எண்ணிக்கை வெறும் 27,941. 2019–2020–ல் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடு) *இல்லை; நான் சொல்லிவிடுகிறேன்.* (குறுக்கீடு) *இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிந்ததைத்தான் சொல்கிறேன்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மற்ற உறுப்பினர்கள் யாரும் இடையில் பேசக்கூடாது.*

இரவு 8–00

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில்* (குறுக்கீடு) *இருங்கள். நான் சொல்ல வருவதைக் கேட்க வேண்டும். நீங்கள்* M.P. *ஆக இருந்திருக்கிறீர்கள்.* Parliament-ல் Member *ஆக இருந்திருக்கிறீர்கள்.* (குறுக்கீடு) *உங்களைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி, அவர்களைச் சொன்னேன். தவறாகப் பேசிவிடக் கூடாது. தயவு செய்து அமைதியாக இருங்கள். சொல்ல வருவதைக் கேளுங்கள். ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக பள்ளிகள் ஆரம்பித்ததும், விடுதிகள் ஆரம்பித்ததும் ஒரு காலம். ஆனால், இன்றைக்கு ஆதி திராவிட மாணவர்களே அரசுப் பள்ளிகளில் கணிசமான அளவில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், அரசுப் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவர்கள் கூடுதலாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *காத்தவராயன் அவர்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக இத்துறையின்கீழ் 1,450 பள்ளிகள் செயல்படுகின்றன. ஆதி திராவிடர்களுக்கென 1,135 பள்ளிகள்; பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் 315.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது. ஆதி திராவிடர் பள்ளிகளில் வழங்கக்கூடிய எல்லா சலுகைகளும், குறிப்பாக, நோட்டுப்

புத்தகங்கள், பை, மிதிவண்டி, சீருடைகள், மடிக்கணினி போன்றவை அனைத்து அரசுப் பள்ளிகளிலும் வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைய சூழ்நிலையில், பெரும்பாலும் தங்கள் இல்லத்திற்கு அருகில் உள்ள அரசுப் பள்ளிகளில் சேருவதற்கான சூழல் பெருகியுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் தரமும், கற்பிக்கும் முறையும், மாணவர்களுக்குத் தேவையான வசதிகளும் ஒருபோதும் குறையவில்லை. மேலும், இத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வி பயில்வோர் இன்று ஆராய்ச்சிப் பட்டங்கள் பெறுகின்ற வகையில் பள்ளிகளின் செயல்பாடுகள் அமைந்துள்ளன என்பதைப் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களின் பொருளாதார வளர்ச்சியினால் தனியார் பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பும் உருவாகியுள்ளது. இருப்பினும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, மாண்புமிகு அம்மாவின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியாரின் அரசு, கல்வியைப் பொறுத்தவரையில், கண்ணை இமை காப்பதுபோல காத்து, கல்வியை வளர்க்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள்.

திரு. S. காத்தவராயன்: ஆனால், 2019–2020 ஆம் ஆண்டில் பள்ளிகளின் எண்ணிக்கை 1,335 என கூடுதலாக இருந்தும், மாணவர்களின் எண்ணிக்கை 92,756 மட்டுமே. இந்த எண்ணிக்கை பாதிக்குமேல் குறைந்துவிட்டதைப் பார்க்கும்போது, ஆதி திராவிடர்கள் நலனில் இந்த அரசு போதுமான ** என்பதையே காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தெளிவாக நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) இருங்கள். உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும், இங்கு இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சில் தவறாகப் பேசக்கூடாது. ஆதி திராவிட மாணவர்கள்மீது இந்த அரசுக்கு ** என்று சொன்னதால்தான், நான் சொல்ல வேண்டியிருக்கிறது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். (குறுக்கீடு) அந்த மாதிரியெல்லாம் அவைக் குறிப்பில் வேண்டாம். (குறுக்கீடு) தயவுசெய்து ** என்பதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்வது என்னவென்றால், (குறுக்கீடு) இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்பெல்லாம் அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்தது. ஆதி திராவிடர்களுக்காகப் பள்ளிகள் அமைத்தது, விடுதிகள் அமைத்தது, அதிலே மாணவர்கள் சேர்ந்து படித்த நிகழ்வுகள் இருந்தன. ஆனால், இன்றைக்குப் பொதுவாகவே அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையில், அவர்கள்தான் கூடுதலாக இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மூலமாகத்தான் இன்றைக்குப் பல்வேறு பள்ளிகளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எண்ணிக்கை அடிப்படையில் அதிக அளவில், அரசுப் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவர்கள் வந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறிவோம். ஆகவே, ஆதி திராவிட நலப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது என்று அர்த்தமல்ல. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவீத ஆதி திராவிட மாணவர்கள், இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள் ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்கள்மீது ** என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களின் அரசு ஆதி திராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் விடுதிக் கட்டணத்துடன், உணவுக் கட்டணத்தையும் 4 முறை உயர்த்தியுள்ளது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்லாமல், உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு scholarship, post-matric scholarship மத்திய அரசிடமிருந்து பெறப்படுவதற்கு முன்னரே, மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மாநில அரசே முழு நிதியையும் வழங்கியுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரவிச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. உதயசூரியன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. கன்னிப் பேச்சாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கீடு செய்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்களுக்கு அனுமதி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் கிடையாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

இரவு 8–05

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் ஆதி திராவிட மக்களுக்கு 18 சதவிகிதத்தைக் கொண்டு வந்தவர் எங்களுடைய தலைவர் என்று சொன்னார்கள். அது உண்மைதான். அதில் ஒன்றும் தவறில்லை. அதை நான் மறுக்கப் போவதில்லை. நீங்களும் அச்சப்படத் தேவையில்லை. ஆனால், மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்படுகிற பழங்குடியின மக்களுக்கென்று தனியாக 1 சதவிகித இட ஒதுக்கீட்டை உருவாக்கிக் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது வழியில்,

69 சதவிகித இட ஒதுக்கீட்டிலேயும், அந்த 1 சதவிகித இட ஒதுக்கீட்டைச் சட்டமாக்கிக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, அவர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். பிறகு நீங்கள் வேறு ஏன் தனியாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கை, பக்கம் 39–ல், “வங்கிகளில் கல்விக் கடன் பெற்று படித்து, வேலையில்லாதவர்களின் வங்கிக் கடனை அரசே திரும்பச் செலுத்தும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த இந்த திட்டத்தின்படி, 3 ஆண்டுகள் கடந்தும், எந்தவொரு மாணவரின் வங்கிக் கடனையும் நீங்கள் செலுத்தவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் மேற்படிப்பினைத் தொடர்வதையும், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் சமநிலையைப் பெறுவதையும் இந்த அரசு விரும்பவில்லையா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 9–ல் கல்வி உதவித் தொகை திட்டங்கள்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் சுய நிதிக் கல்லூரிகளில் நிருவாக ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ரூபாய் 1,727.95 கோடி ஆதி திராவிட மாணவர்களுக்கும், ரூபாய் 46.44 கோடி பழங்குடியின மாணவர்களுக்கும் கொடுப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுய நிதிக் கல்லூரிகளின் நிருவாகத்திடம் நான் நேரில் கேட்டறிந்த வகையில், இந்தத் தொகை முழுமையாக வழங்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. இதன் காரணமாக, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களை சுய நிதிக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கே அச்சப்படுகிறார்கள். ஒருசில சுய நிதிக் கல்லூரிகள் கல்வி உதவித் தொகையைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதால். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடுகள்) *தேர்தல் அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டதற்கு பதில் சொல்கிறேன்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 2016 தேர்தல் அறிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களின் தலைவர் தேர்தல் அறிக்கையில் எல்லோருக்கும் 2 ஏக்கர் நிலம் தருவதாகச் சொன்னார். அதைக் கொடுத்தாரா?* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதுகூட, அவர்களுடைய கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அரசுத் துறைகளால் செய்ய முடியாத திட்டங்களையெல்லாம் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். (குறுக்கீடுகள்) *உதாரணத்திற்கு, கூட்டுறவு வங்கிகளில் மட்டுமல்லாது, அனைத்து வங்கிகளிலும் 5 பவுனுக்கும் குறைவாகப் பெற்ற அனைத்து நகைக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள்.* (குறுக்கீடுகள்) *இருங்கள். அவர் சொன்னதற்குத்தான் பதில் சொல்கிறேன்.*

அதேபோல், மத்திய அரசு உரத்திற்கு மானியம் வழங்கிக் கொண்டிருந்தது. 2010–ல் தி.மு.க.–வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஒருவர், விவசாயிகளுக்கு வழங்கி வந்த உர மானியத்தை இரத்து செய்தார். மானியத்தை இரத்து செய்தவர்கள் அவர்கள்தான். அதனால், 4,000/– ரூபாய்க்கு விற்ற DAP *உரம், தற்போது ஒரு மெட்ரிக் டன் 24,000/– ரூபாயாக உயர்ந்துள்ளது. அதற்குக் காரணம் அவர்கள்தான்.* (குறுக்கீடுகள்) *ஆனால், இப்போது தேர்தல் அறிக்கையில், மானிய விலையில் உரம் கொடுப்போம், விதை கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். எதைக் கொடுத்தீர்கள்? அதைத்தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரே நன்றாகப் பேசுகிறார். (குறுக்கீடுகள்) அவரே நன்றாகத்தான் பேசுகிறார். பிறகு நீங்கள் என்ன விளக்கம் சொல்ல வேண்டும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது பற்றி இங்கே குறிப்பிட்டார். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றிப் பேசியபோது, இருந்த நிலத்தின் அளவிற்கேற்ப நாங்கள் கொடுத்தோம் என்று நான் அன்றைக்கே சொன்னேன். (குறுக்கீடுகள்) ஆனால், 2011–ல் உங்களுடைய தேர்தல் அறிக்கையில், 58 வயதான முதியோர்கள் அனைவருக்கும் இலவச bus pass வழங்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். இப்போது, சென்னை மாநகரத்தில் சில பேர்களுக்கு மட்டுமே அந்த bus pass கொடுக்கப்பட்டுள்ளது. கிராமத்திலுள்ள அனைத்து முதியோர்களுக்கும் இலவச bus pass வழங்கி விட்டார்களா? 2016–ல் வெளியிடப்பட்ட உங்களுடைய தேர்தல் அறிக்கையில், கல்விக் கடன் பெற்று படித்து, வேலைவாய்ப்பு கிடைக்காத அனைத்து மாணவர்களின் கல்விக் கடன்களையும், உங்களுடைய அரசு பொறுப்பேற்றபின், அரசே செலுத்தும் என்று தெரிவித்திருந்தீர்கள்; யாருடைய கடன்களையாவது நீங்கள் திருப்பிச் செலுத்தியிருக்கிறீர்களா? மாணவர்கள் வாங்கிய கடன்களை நீங்கள் செலுத்தியிருக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் செய்தீர்களா என்பதை முதலில் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

இரவு 8–10

நாங்கள் சொன்னோம், ஆட்சிக்கு வரவில்லை. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் சொன்னோம்; "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதையெல்லாம் செய்வோம்" என்று சொன்னோம். இப்போதும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால்,

நீங்கள்தான் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறீர்கள். எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகின்ற நேரத்தில், சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றுவோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் அழகாகத்தான் பேசுகிறார். சொன்னதெல்லாம் செய்தோம் என்று. சொன்னவற்றையெல்லாம் செய்திருந்தால் நீங்கள் இங்கே இருந்திருப்பீர்கள்; நாங்கள் அங்கே இருந்திருப்போம். நீங்கள் சொன்னதையெல்லாம் செய்யாததனால்தான், அங்கேயே நிரந்தரமாக இருக்கிறீர்கள். 32 ஆண்டுகளுக்குப் பிறகு, திரும்பவும் ஆண்ட கட்சியே ஆள்கிறது. அதுவும் ஓர் இயக்கம்; தனித்து நின்று 234 தொகுதிகளிலும் போட்டியிட்டு, வெற்றி பெற்ற ஒரே கட்சி அண்ணா தி.மு.க. (குறுக்கீடுகள்) அதைப் புரிந்துகொள்ளுங்கள். அதுமட்டுமல்ல; நீங்கள் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள், "இதைச் செய்தோம், அதைச் செய்தோம்" என்று மிகவும் அழகாகச் சொன்னார். நாங்களும், எங்கள் அம்மா அவர்கள் சொன்னதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். ஏன் செய்யவில்லை? இன்றைக்கு முதியோர்களுக்கு, மூத்த குடிமக்களுக்கு இலவச Bus pass வழங்கும் திட்டத்தை சென்னையிலே தொடங்கியிருக்கிறோம். நாங்கள் சொன்னோம், செய்வோம். நீங்கள் ஏன் அதைப்பற்றி கவலைப்படுகிறீர்கள்? படிப்படியாகச் செய்யப்படும். அதுமட்டுமல்ல; நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். எந்தவொரு கட்சியும் ஆட்சிக்கு வந்தாலும் சரி, ஒரு மாநில அரசினுடைய நிதி ஆளுமை; ஓர் ஆண்டினுடைய வரி வருவாய் எவ்வளவு? எவ்வளவு தொகைக்கு நீங்கள் திட்டம் போடுவீர்கள்? 1½ இலட்சம் கோடி ரூபாய்; (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் பேசாமல் இருந்தேன். 5

பவுனுக்குக் கீழே நகைக் கடன் வாங்கியிருக்கிறவர்கள்; கூட்டுறவு வங்கிகளிலும், பொதுத் துறை வங்கிகளிலும் வாங்கியிருக்கிறார்கள், அதையெல்லாம் தள்ளுபடி செய்ய முடியுமா? இது மட்டும் 1½ இலட்சம் கோடி ரூபாய்; 2 இலட்சம் கோடி ரூபாய் வரும். செய்ய முடியமா? (குறுக்கீடு) எப்படி செய்ய முடியாததை நீங்கள் சொல்வீர்கள்? எப்படி உங்களுடைய தலைவர் சொன்னார்? ஆக, தவறான தகவலைச் சொல்லி, உண்மைக்குப் புறம்பாக வாக்குறுதிகளைச் சொல்லி, நாடாளுமன்றத் தேர்தலில் எல்லாக் கட்சிகளோடும் கூட்டணி வைத்து "நாங்கள் ஜெயிச்சிட்டோம்" என்று சொல்கிறீர்கள்; என்ன ஜெயித்தீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, இந்த விவாதம் போதும். (குறுக்கீடு) இல்லை, மாறி மாறி நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை; வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரவிச்சந்திரனும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களும் சபையை நடத்துங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் உட்காருங்கள். இந்த விவாதம் போதுமானது. மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, தேர்தல் சம்பந்தமாகப் பேசியதால், ஆளுங்கட்சி வரிசையில் இருந்து அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பிறகு அதிலே விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டு, நீங்கள் விளக்கம் சொன்னீர்கள். திரும்பவும் மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருக்கிறார். இந்த விவாதமே போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன், மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில், இது ஆதி திராவிடர்களுடைய மானியம். இடையிடையே குறுக்கிட்டால், ஆதி திராவிடர் மக்களையே ** அர்த்தம். ஓர் உண்மையைப் பேசுவதற்கு, அதற்குக்கூட உரிமை தரவில்லையென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். உங்களுடைய பக்கத்திலிருந்து நீங்கள் பேசுவதற்கு, உங்களுக்கு ஆதரவாக கன்னிப் பேச்சைப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசுகிறார், குறுக்கிட வேண்டாம் என்று சொல்கிறீர்கள். ஆனால், நீங்கள் கன்னிப் பேச்சைப் பேசுகிறவர், தொகுதிக் கோரிக்கை, மற்றவற்றைப் பேசுவதுதான் முறையாக இருக்கும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசுகிறபோது, அரசாங்கத்தினுடைய சார்பாக அமைச்சர்கள் விளக்கத்தைச் சொல்வார்கள். ஆகவே, உங்களுடைய நேரம் குறையும். நீங்கள் நேரடியாக கன்னிப் பேச்சை, கன்னிப் பேச்சாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, அதுதான், கன்னிப் பேச்சை, கன்னிப் பேச்சாகப் பேச வேண்டும். கண்ணியமாகப் பேச வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் நேரடியாக அரசாங்கத்தைப்பற்றிப் பேசினால், அரசாங்கத்தின் சார்பாகப் பதில் வரும். அந்த பதிலை, விளக்கத்தை கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, அதற்கு நீங்கள் எதிர்ப்பு தெரிவிப்பது முறையல்ல. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதி திராவிடர் மக்களை ** இருக்கிறது என்று சொன்னார். நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆதி திராவிடர் நலத் துறையில் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் pre-matric scholarship–ஐப் பொறுத்தவரை, எந்தவித சிக்கலுமின்றி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. Post-matric scholarship–ஐப் பொறுத்தவரை, சில விவரங்களை விளக்கமாக நான் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இரவு 8–15

Post-matric scholarship அரசு உதவிபெறும் சுய நிதி கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை 2011–2012 ஆம் கல்வியாண்டில் விரிவுபடுத்தப்பட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரை, இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. போதுமான நிதியை மைய அரசு விடுவிக்க காலம் எடுத்தாலும், மாநில அரசு தனது நிதியிலிருந்து இந்த உதவித் தொகையை வழங்குகிறது. இந்நிலையில் post-matric கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழான மொத்தத் தேவை வருடத்திற்கு வருடம் குறைந்தளவு உயர்ந்து வருகிறது. இதன்பொருட்டு, முந்தைய ஆண்டுகளுக்கான நிதியை அடுத்தடுத்த ஆண்டுகளில் நிறைவு செய்ய வேண்டிய சூழல் கடந்த சில ஆண்டுகளாக நிலவி வருகிறது.

2018–2019 ஆம் ஆண்டு மாணவர்கள் சார்பாகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, 1, 2, 3, 4 மற்றும் 5 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டுவிட்டது. 25–6–2019 ஆம் தேதி வரை சுமார் ரூபாய் 133.40 கோடி அளவிற்கு கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாணவர்களின் சேமிப்புக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கான கால விரயத்தைத் தவிர்க்கும்பொருட்டு பிரத்யேக வலைதளம் தொடங்கப்பட்டு, கேட்பும், புதுப்பித்தலும் நடைபெற்று வருகிறது. அரசாணை 52–ஐப் பொறுத்தமட்டில், 11–8–2017–க்குமுன் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு அரசாணை 6–ன்படியும். இத்தேதிக்குப் பின்னர் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு அரசாணை எண் 52–ன்படியும் கல்வி உதவித் தொகை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை ஆகஸ்டு 30–க்குள் நிறைவு செய்ய வேண்டுமென்று வரையறை நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பொருள் தொடர்பாக, இடையிடையே பல்வேறு நீதிமன்ற வழக்குகள் வந்தபோதும், அவற்றை முடித்து, மாணவர்களின் உதவித் தொகைகளை தங்குதடையின்றி வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களின் வழிகாட்டுதலின்படி பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குச் சிறப்பு சேர்க்கும்வகையில், இந்தப் புகழ்வாய்ந்த பேரவைக்குத் தலைவராக தங்களை நியமனம் செய்து, பெருமை சேர்த்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் பெருமையோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இன்னும் 2, 3 நிமிடங்களில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் 7–54 மணிக்குப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் அந்தமாதிரி பேசுகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்து விளக்கம் வருகிறது. இன்னும் 2, 3 நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 75–ல், தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவர் கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் பிற சமூகத்தினரோடு பொருளாதார நிலையில் சமநிலையை அடைவதற்காகவும், சுய தொழில் செய்து தன் பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்வதற்காகவும் தொடங்கப்பட்டதுதான் இந்தத் தாட்கோ நிறுவனம். இப்போதைய நிலை என்னவென்றால், கடன் கேட்டுச் சென்றால், தாட்கோவிலிருந்து வரும் மனுக்களை வங்கியில் கிடப்பில் போட்டு விடுகிறார்கள்.

உதாரணத்திற்கு, வேலூர் மாவட்டம் எனது சொந்த மாவட்டம். 2017–2018 ஆம் ஆண்டில் 269 மனுக்கள் நிலுவையிலும், 2018–2019 ஆம் ஆண்டில் 266 மனுக்கள் நிலுவையிலும், ஆக மொத்தம் 535 மனுக்கள் வங்கியில் நிலுவையில் உள்ளன. இந்த ஆண்டு 982 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. எனது வேலூர் மாவட்டத்தில் மட்டுமே இவ்வளவு மனுக்கள் நிலுவையில் இருந்தால், தமிழகம் முழுவதும் எவ்வளவு மனுக்கள் வங்கியில் நிலுவையில் இருக்கும்? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் தயவுசெய்து அக்கறை எடுத்து செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துறை சார்ந்த . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோமூலம் ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பல்வேறு வகையான திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலும் தனி நபர் அதிகபட்ச மானியம் ரூ.25,000/- ஆக இருந்தது. இதை ரூ.2.25 இலட்சமாக உயர்த்தியதால், எண்ணிக்கை குறைவே தவிர, பயன் அதிகம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாட்கோ மூலமாக மானியம் வழங்கியும், வங்கி மூலமாகக் கடன் கொடுப்பதில் சில பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து ஏற்கெனவே 2 சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களிடம் இதை எடுத்துக் கூறி, மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்ற ராஜ்ய சபா உறுப்பினர் தேர்தலில், (மேசையைத் தட்டும் ஒலி) அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த அண்ணன் திரு. சந்திரசேகரன் அவர்களை வேட்பாளராக அறிவித்து, அவரை M.P. ஆக ஆக்கியது அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மின் இணைப்புக்கான கட்டணம் ரூ.75,000/- என்ற விகிதத்தில் 1,000 ஆதி திராவிட விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆண்டிற்கான புதிய அறிவிப்பில் 100 விவசாயிகளுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்கப்படும் என முரண்பாடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 251, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 9–1–2017ல் 100 விவசாயிகளுக்கு மட்டுமே, ரூ.75,000/– வீதம் வழங்க ரூ.75 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. 2017–2018 கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 20–ல் குறிப்பிடப்பட்டதற்கும், அரசாணை எண் 251, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 9–1–2017–க்கும். . .

இரவு 8–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன், உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உரையை முடியுங்கள். மணி என்னவென்று பாருங்கள். (குறுக்கீடு) இரவு 8–20 மணி ஆகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அழகாகத்தான் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறுகின்றபோது, ஆதி திராவிடர் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை என்றார்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் ஆதி திராவிடர் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதியை, செம்மொழி மாநாட்டிற்கே ஒதுக்கி, சாதனை படைத்தவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. காத்தவராயன், உரையை முடியுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, ராஜாகுப்பம் ஊராட்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிட பெருமக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கும் S.C. சாதிச் சான்றிதழ் தாய், தந்தையருக்கு இருந்தும், அவர்களின் பிள்ளைகளுக்கு B.C. ஆதி திராவிடர் கிருஸ்துவர் என்று சான்றுகள் வழங்கப்படுகின்றன. காரணம் கேட்டால், அவர்கள் தேவாலயத்திற்கு வழிபடச் செல்கின்றனர் எனக் கூறுகிறார்கள். அவர்கள் மதம் மாறவும் இல்லை. அதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஆனால், இப்படித் தட்டிக்கழிக்கிறார்கள் என்பதை நான் பதிவு செய்கிறேன். எனவே, அவர்களுக்கு முறையாகப் பரிசீலித்து, முறையாக மதம் மாறாதவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காத்தவராயன் அவர்கள் ஆரம்பத்திலிருந்து மிகவும் கோபமாகப் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) அப்படித்தானா? (குறுக்கீடு) ஆதி திராவிட பெருமக்களுக்கு, அவர்களுக்குரிய சாதிச் சான்றிதழ்களை விதிமுறைக்குப் புறம்பாக யாரும் கொடுக்க மறுத்தால், அந்த விவரத்தை நீங்கள் தந்தால், உறுதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆதி திராவிடர் சான்றிதழ் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, எங்கள் பேரணாம்பட்டு நகரத்தில் இயங்கிவரும் பேரணாம்பட்டு பேருந்து நிலையம், இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே பேரணாம்பட்டு நகரத்திலேயே, காவல் துறைக்குச் சொந்தமான இடத்தில் தொடர்ந்து இருக்கிறது. ஆனால், எங்கள் ஊர் மக்கள் என்னிடத்தில், "சட்டமன்றத்தில் பேசுங்கள்; பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும்" என்று கேட்கிறார்கள். எனவே, காவல் நிலையத்திற்குச் சொந்தமான இடத்தில் இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொடர்புடைய கோப்புகளை மாற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில், உள்ளாட்சித் துறைக்குக் கொடுத்து இரு மாண்புமிகு அமைச்சர்களும் சேர்ந்து பேசி, பேரணாம்பட்டு நகரப் பேருந்து நிலையத்தை, நவீன பேருந்து நிலையமாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காத்தவராயன், மற்ற கோரிக்கைகள் இருந்தால் கொடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) நேரமில்லை. மணி இரவு 8–23 ஆகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, சொல்வதைக் கேளுங்கள். அவருக்கு 26 நிமிடங்கள் நேரம் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு)

26 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. நீங்கள் மேற்கொண்டும் வற்புறுத்துவது நியாயமில்லை. (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் ஒவ்வொரு முறையும் உங்களுடைய உறுப்பினர்கள் பேசுகின்றபோதும், இப்படித்தான் நேரத்தை இழுத்து, அவையினுடைய நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. முறையாக எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்தால், அவையை நான் குறித்த நேரத்தில் முடிக்க முடியும். ஆகவே, இதற்குமேலும் அனுமதிக்க முடியாது. ஒரே வார்த்தையைச் சொல்லி, நன்றி சொல்லி உங்களுடைய உரையை முடியுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் எங்கள் பேரணாம்பட்டு நகரத்தில் தண்ணீர் விநியோகம் செய்கிறார்கள். அங்கே 20 இலட்சம் லிட்டர் தண்ணீர் பம்ப் செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால், நகராட்சி ஆணையரிடம் கேட்டால் 15 இலட்சம் லிட்டர்தான் வருகிறது என்று சொல்கிறார்கள். நான் Water Board S.E.–யைத் தொடர்புகொண்டு கேட்டேன்; அப்போது நான், நகராட்சிக்கென்று ஒரு meter வையுங்கள் என்று சொன்னேன்; அப்போதுதான் எவ்வளவு தண்ணீர் வருமென்று தெரியும் என்று நான் சொல்லியிருக்கிறேன். எனவே, அந்த தண்ணீருடைய அளவை அதிகரித்து, பேரணாம்பட்டு நகர மக்களுக்கு 50 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 50 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்க ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். 55 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுத்தால், அனைத்துப் பகுதிகளுக்கும், சிரமம் இல்லாமல் இருக்கும். இன்றைக்கு 20 நாள், 25 நாள் இடைவெளி விட்டுத்தான் தண்ணீர் வழங்குகிறார்கள். ஒரு மாதத்திற்கு ஒரு நாள், இரண்டு நாட்கள்தான் தண்ணீர் கொடுக்கிறார்கள். ஆகையால், தினசரி தண்ணீர் கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 8–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காத்தவராயன், அமருங்கள். (குறுக்கீடு) அமருங்கள், அமருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) நேரமில்லை, நீங்கள் நன்றி சொல்லி முடித்தால் நன்றாக இருக்கும். சொல்லி முடியுங்கள்.

திரு. S. காத்தவராயன்: அதேபோன்று, என்னுடைய தொகுதியான குடியாத்தம் தலைநகரம் நேதாஜி சிலை அருகில் traffic அதிகமாக இருக்கிறது. 108 வந்தால்கூட hospital போவதற்குள்

body செத்துப்போய்விடுகிறது. வேலூர் அல்லது சென்னைக்கு தான் போக வேண்டும். அதனால் இருவழிச் சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அரசு மூலமாக பருத்தி நெசவுப் பூங்கா ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனை தயவு செய்து பதிவு செய்துகொள்ளுங்கள். பேரணாம்பட்டில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காத்தவராயன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார். பொதுவாகவே, ஒருவர் இறந்த பின்புதான் அவரது உடலை body என்று சொல்வோம். "Body செத்துப்போய்விடுகிறது" என்று சொல்கிறார். (சிரிப்பு) என்ன அர்த்தத்தில் அவர் சொல்கிறார் என்று புரியவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதற்றமின்றி பேசினால் வார்த்தை correct ஆக வரும். பதற்றத்தோடு பேசினால் வார்த்தை தவறாக வருகிறது. தடுமாற்றத்தோடு தவறாகப் போகின்றது அல்லவா?

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தலபள்ளி அணைக்கட்டுத் திட்டம் துவங்கப்பட்டு இடையில் அந்தப் பணிகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அணைக்கட்டுப் பணிகளை நிறைவேற்றினால், பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காத்தவராயன், போதும் உட்காருங்கள். இன்னொரு வாய்ப்பில் பேசுங்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள்; பதிவு செய்துகொள்கிறேன். உரையை முடியுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அந்தப் பத்தலபள்ளி அணைக்கட்டுத் திட்டத்தைத் தயவு செய்து நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எல்லோரையும் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தால், கோரிக்கை அவர்களிடமிருந்து வந்துகொண்டிருக்கும். நீங்கள் உரையை முடிக்க முடியாது. உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. S. காத்தவராயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஒன்றியத்தில் அரவட்லா என்று ஒரு ஊராட்சி இருக்கிறது. அது மலைக் கிராமம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் தொகுதிக் கோரிக்கைகளை கொடுங்கள்; பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. காத்தவராயன் உரை நிறைவுபெற்றது.*

திரு. S. காத்தவராயன்: *தொகுதி கோரிக்கைகள்.*

பேரணாம்பட்டு நகராட்சிக்கு தினமும் 55 இலட்சம் லிட்டர் காவேரி குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் தொகுதியில் விடுபட்ட 36 ஊராட்சிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர் விநியோகம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டில் அரசுக் கல்லூரி ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டு அரசு பொது மருத்துவமனையை 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு, கோஷா அரசு மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் அமைத்து டயாலிசிஸ் இயந்திரங்கள் பொருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு அரசு மருத்துவமனைக்கு உடனடியாக போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் மற்றும் பேரணாம்பட்டு தொகுதிகளில் வீட்டு வரி உயர்வை மறுசீராய்வு செய்து, குறைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். குண்டலபல்லி காட்டாறு பகுதியிலிருந்து பேரணாம்பட்டு நகருக்கு வரும் கால்வாய்களை தூரெடுத்து இருபுறமும் தடுப்புச் சுவர் அமைத்துத் தரும்படியும், பேரணாம்பட்டு நகரத்திலுள்ள ஏரிக்குச் செல்லும் கால்வாயைத் தூர்வாரி, ஏரியை ஆழப்படுத்த

வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு நகரில் விளையாட்டுத் திடல் அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் பகுதியில் சுற்றுவட்ட புறவழிச் சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் கவுண்டன்ய மகாநதியின் குறுக்கே கெங்கையம்மன் திருக்கோவில் அருகில் ஒரு உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகரில் நெசவுத் தொழில் பூங்கா ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் கங்காதர சுவாமி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும், வார்டுக்கு தலா இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, சின்டெக்ஸ் டேங்க் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சி, மேல்ஆலத்தூர் சுடுகாட்டில் மின் தகன மேடை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் பகுதியில் உயர் கோபுர மின் விளக்குகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும், பழுதடைந்த சாலைகளை சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைகளாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் அடுத்த கூடநகரம் இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்பட வேண்டிய பணிகள் நிலுவையிலுள்ளன. அப்பணிகளை உடனடியாக முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சியில் புதிய மார்க்கெட் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் முதல் பேரணாம்பட்டு வரையில் தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் அரசு பொது மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்டித் தருமாறும், போதுமான அளவு உயிர் காக்கும் மருந்துகளை வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் ஒன்றியம், சீவூர் ஊராட்சி, கல்லூர் கிராமத்திலுள்ள, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவுள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு

தாலுகாவில் கருவூலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு தாலுகாவில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதி, குடும்ப அட்டைதாரர்களுக்கு உளுத்தம் பருப்பு மற்றும் கோதுமை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா ஊராட்சியில் சுற்றுலாத்தலம் அமைத்து ஏரியில் படகு சவாரி குளம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டிலிருந்து, ஆந்திரா மாநிலம் நெல்லூர்பேட்லா ஊராட்சியிலுள்ள விருப்பாச்சிபுரம் பகுதிக்குப் பேருந்து போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அபாயகரமான மலைப்பகுதியான பேரணாம்பட்டு– அரவட்லா சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றி, பணிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோர்தானா அணை அருகில் பூங்கா அமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சைனகுண்டா முதல் மோர்தானா வரையுள்ள சாலையைப் புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குண்டலபல்லி ஊராட்சி, ரங்கம்பேட்டையிலிருந்து மோர்தானா செல்வதற்கு வனத் துறை அனுமதி பெற்று சுமார் 3 கிலோ மீட்டர் சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், எருக்கம்பட்டு, பொகளூர் ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு ஒன்றியம், எருக்கம்பட்டு ஊராட்சியில் சமுதாயக் கூடம் மற்றும் நவீனக் கழிப்பிடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட ஏரிகுத்தி, மேல்ஆலங்குப்பம், கீழ்ஆலங்குப்பம், பொகளூர், செம்பேடு வழியாக குடியாத்தம் மற்றும் மேல்பட்டி செல்ல மலைப்பாதையில் முறையான சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எருக்கம்பட்டு ஊராட்சி, கோட்டையூர் முதல் கடப்பாநத்தம் வரை வனத் துறை அனுமதி பெற்று சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 20 ஆண்டு காலமாக பணிபுரியும் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் தொகுதி, விவசாய நிலங்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதி, அரவட்லா வீரப்பநாயக்கன் ஏரி, அரவட்லா கடையல நாயக்கன் ஏரி, அரவட்லா ரங்கப்ப நாயக்கன் ஏரி, செண்டத்தூர் பொன்னியம்மன் ஏரி, ஏரிகுத்தி ஏரி, மொரசப்பல்லி ஏரி, ராஜக்கல் ஏரி, காரப்பட்டு ஏரி, கைலாசகிரி பீர்ஷாஷிப் ஏரி, பேரணாம்பட்டு ஏரி, அக்ராவரம் ஏரி, பெரும்பாடி ஏரி, ஏர்த்தாங்கல் ஏரி, வளத்தூர் ஏரி, குடியாத்தம் நெல்லூர்பேட்டை ஏரி ஆகியவற்றையும், அங்குள்ள அனைத்துக் கால்வாய்களையும் தூர் வாரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், பல்லகுப்பம் ஊராட்சியில் துலகன்குட்டை மலைப்பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓங்குப்பம் சாலையிலுள்ள அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு ஒன்றியம், பாலூர் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடிக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பங்களாமேடு முதல் குண்டபல்லிக்கு பொதுர்கொள்ளி வழியாகச் செல்ல சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம்–பரவக்கல்லுக்கு செட்டிகுப்பம், மேல்செட்டிகுப்பம், மேலஇராஜகுப்பம், கீழ்இராஜகுப்பம், சின்னபரவக்கல், பெரியபரவக்கல், தொன்னபறை மற்றும் மேல்ஆலங்குப்பம் வழியாக போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் முதல் கீழ்ஆலங்குப்பத்திற்கு செம்பேடு, மன்மார்பட்டி, போஜனாபுரம், பங்கரிஷிகுப்பம், எம்.ஜி.ஆர். நகர், சின்னராஜபாளையம், பொகளூர், கிடங்குராமபுரம், துரிஞ்சிதழைபட்டி, கீழ்ஆலங்குப்பம் வழியாக போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம், கருவூலம் மற்றும் கிளைச் சிறைச் சாலை அமைத்துத்

தரக் கோருகிறேன். பேரணாம்பட்டு நகர எல்லை வரை இருவழிச் சாலை அமைத்து, அச்சாலையின் நடுவில் தடுப்புச் சுவர் அமைத்திடக் கோருகிறேன். பேரணாம்பட்டில் உள்ள 21 வார்டுகளில் உள்ள சாலைகளைச் சீரமைக்கவும், புதிய கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் குடிநீர் வசதி குறித்துச் சொன்னார்கள். முதலில் 25 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வருகிறது என்றும், பின்னர் ஒரு மாதத்திற்கு ஒருமுறை வருகிறது என்றும் இரண்டுவிதமாக கருத்து சொன்னார். மழை பெய்யாத காரணத்தால் குடிநீர்ப் பற்றாக்குறை பல இடங்களில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களது தொகுதி குறித்த முழு புள்ளிவிவரமும் என்னிடம் இருக்கிறது. இருந்தாலும் நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகச் சொல்கிறேன்.

காவேரி நீரை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 120 எம்.எல்.டி. அளவிற்கு குடிநீர் வழங்கத் திட்டம் வடிவமைக்கப்பட்டு, 61.77 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குடியாத்தம் நகராட்சியில் வசிக்கும் 1,20,700 மக்களுக்கு 7.06 மில்லியன் லிட்டர் அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பேரணாம்பட்டு நகராட்சியில் தற்போதைய 59,200 மக்களுக்கு 2.55 மில்லியன் லிட்டர் அளவும், அதேபோன்று, பேரணாம்பட்டு ஊராட்சியிலுள்ள 59 குடியிருப்புகளுக்கு தற்போதைய மக்கள்தொகையான 47,520 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1.52 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் கடைக்கோடி கிராமங்களுக்கும் சீராகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, ஏதாவது குறைகள் இருக்கும்பட்சத்தில் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி; நானே சொல்லிவிட்டேன். பதிலுரை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எனக்கு முகம் தந்தது பெற்ற தாய்! எனக்கு முகவரி தந்தது புரட்சித் தலைவி அம்மா என்னும், தெய்வத் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணைப் பொன்னாக்கும், மாயத்தைக் கற்ற தாயே! விண் அளவு புகழ் வந்த போதும், விண்ணை நோக்கி நடக்காமல் மண்ணை நோக்கி நடந்த மகத்தான தாயே! பாமரனுக்கும் பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியத்தைத் தந்த தாயே! உழைக்கின்ற பெண்களுக்கு, நீங்கள் தந்த சீதனம்; இதுவரை சமூகத்தில் யாரும் செய்யாத நூதனம்! திரையரங்கம் தொடங்கி, திருவரங்கம் வரை வெற்றி கண்ட தாயே! என் உயிரில், உதிரத்தில், உணர்வில், கலந்த தாயே! கலங்கிய கண்களோடு, தாங்கள் இருக்கும் விண்ணை நோக்கி, நானும், என் குடும்பமும், கைகூப்பி வணங்குகிறோம்.

இரவு 8–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தமிழகத்தை ‘Everest’ ஆக மாற்ற Never–Rest ஆக உழைக்கும் முதல்வர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டர்கள் பார்ப்பதற்கு, நாள் குறிக்காமல், நேரம் குறிக்காமல் நினைத்த நேரத்தில் எவரும் எளிதாய் பார்க்கக்கூடிய இந்தியாவின் ஒரே முதல்வர் எங்கள் அண்ணன் EPS அவர்கள்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வீடு வாழ, நாடு வாழ, முதல்வர் அண்ணன் அவர்களே, நீங்கள் நீடு வாழ! நீங்கள் நீடு வாழ! சங்கரன்கோயில் அருள்மிகு கோமதி அம்மனை வேண்டுகிறேன். தமிழ்நாட்டில் EPS ஆட்சி நடப்பதால், எந்த வீட்டிலும் UPS-க்கு வேலை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளைப் பற்றிப் பேசும் முதல்வர் உண்டு; ஆனால், ஏழைகளோடு பேசும் முதல்வர் அவர்தான் எங்கள் அண்ணன் EPS. அம்மாவை இழந்து, அ.தி.மு.க. நின்றபோது, ஏப்ரல் 18–ல் திக்..திக்.. தேர்தல்; மே 23–ல் பலபேர் நமக்கு countdown சொன்னார்கள். ஆனால், காரியத்தில் கண்ணாக இருந்த திருமிகு. கருப்ப கவுண்டர், திருமதி தவசி அம்மாள் பெற்ற பிள்ளை, துன்பங்கள், துயரங்கள், துரோகங்கள்

எல்லாவற்றையும் சவாலாக ஏற்றுக்கொண்டு, 28 நாட்கள் சூறாவளி சுற்றுப்பயணம், 11,000 ஆயிரம் கிலோ மீட்டர் தொடர் பயணம் செய்ததன் விளைவு, அம்மாவின் ஆட்சி நிலைத்தது, இன்று மட்டுமல்ல; 2021–லும் அம்மாவின் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதும் எங்கள் முதல்வர் அண்ணன் EPS-தான்; இந்தப் பேரவையின் தலைவர் நீங்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலில் அமைதிக்கான நோபல் பரிசு ஒருவருக்கு உண்டு என்றால், nomination இல்லாமலே நம் அண்ணன் OPS-க்குத்தான் வெற்றி. அரசியலில் அதிகம் பேசுபவர் உண்டு. ஆனால், அமைதியாய், பொறுமையாய், குறைவாய், நிதானமாய், சிரிப்பாய், சிந்திப்பாய், தெளிவாய், தைரியமாய் பேசும் எங்களின் அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கத்தின் பலம் கர்ஜனையில்; புலியின் பலம் பாய்வதில்; காளையின் பலம் கொம்பில்; உடும்பின் பலம் பிடியில்; பருந்தின் பலம் பார்வையில்; யானையின் பலம் தும்பிக்கையில்; மனிதனின் பலம் நம்பிக்கையில். ஆனால், இந்தப் பேரவையின் மொத்த பலம் அவினாசி தந்த அற்புதமே, எங்கள் பேரவைத் தலைவரே தங்கள் கையில்தான். தங்களையும் பணிந்து வணங்கி, பதிலுரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்ந்த இலக்கோடு, இலட்சியப் பிடிப்போடு, சிறகை விரித்து, சிகரம் தொடுவதற்கு, ஆதி திராவிடர் இன மக்களின் பொருளாதார வளர்ச்சி, கல்வி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றைச் சிறக்கச் செய்வதே இத்துறையின் முதன்மை நோக்கமாகும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்றார் வள்ளுவர். "ஒருவருடைய உடல், மனம், ஆன்மா மூன்றையும் சிறக்கச் செய்வது கல்வியின் நோக்கம்" என்றார் அண்ணல் காந்தி அடிகள். "ஒரு மனிதனின் உள்ளத்தை ஒளிரச் செய்வது கல்வி" என்றார் சுவாமி விவேகானந்தர். "ஒரு மனிதனை, புது மனிதாக மாற்றிக் காட்டுவது கல்வி" என்றார் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். "ஒரு சமூக வளர்ச்சியின் அடையாளம்

கல்விதான்'' என்பது ஒட்டுமொத்த அறிஞர்களின் கருத்து. அறிவு, அற்றம் காக்கும் கருவி என்கிற இலக்கோடு இத்துறையின் மூலமாக, 1,043 தொடக்கப் பள்ளிகள், 150 நடுநிலைப் பள்ளிகள், 145 உயர்நிலைப் பள்ளிகள், 112 மேல்நிலைப் பள்ளிகள் என்று மொத்தமாக 1,450 பள்ளிகள் இத்துறையால் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன.

இரவு 8–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைய சமுதாயம் ஏற்றமும், மாற்றமும் பெறுவதற்கு, தங்களைத் தாங்களே செதுக்கிக் கொண்டு, தலைமைப் பண்பை வளர்த்துக்கொள்வதற்கு தடைக் கற்களை படிக் கற்களாக மாற்றுவதற்கு, நதிபோல அவர்கள் வாழ்வு தங்கு தடையின்றி ஓடுவதற்கு பல்வேறுவகையான உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. Post-Matric Scholarship, Pre-Matric Scholarship, மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை, முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான உதவித் தொகை, முழுநேர ஆராய்ச்சி படிப்பிற்கான உதவித் தொகை, பராமரிப்புப் படிகள், கற்பிப்புக் கட்டணச் சலுகை, பெண் கல்வி ஊக்கத்தொகை, சிறப்புப் பரிசுத் திட்டம், என்று அறவழி நின்று, அற்புத திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. கல்வியே இம்மக்களின் ஆயுதம், கேடயம், சமூகப் பாதுகாப்பு என்பதை உணர்ந்து, அவர்களுக்கு வாழ்வில் வெளிச்சத்தைக் காட்டுகிறோம் என்பதைவிட, அவர்கள் கையில் கல்வி என்கின்ற விளக்கையே கொடுத்திருக்கிறோம் என்பதே நிதர்சனமான உண்மை. 2019–2020 ஆம் நிதியாண்டில், இத்துறைக்கென ரூ.3,810.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக, ரூ.3,343.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊசியின் காதில் நூல் போனால் சட்டையின் கிழிசல்கள் சரிசெய்யப்படும். அதுபோல, இறைவன் நமக்குத் தந்த காதில் நல்ல அறநூல்கள் போனால், நம் மன கிழிசல்கள் சரிசெய்யப்படும் என்ற சொல்லுக்கிணங்க, இத்துறையால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளில் பிள்ளைகளின் அறிவுத் திறனை மேம்படுத்த, பல்வேறுவகையான புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கென, இந்த நிதியாண்டில், ரூ.11.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைக்கு தேர் தந்த பாரியும், மயிலுக்குப் போர்வை தந்த பேகனும், சிறப்புப் பெற்றது மன்னர்கள் என்பதால் அல்ல; நல்ல மனம் படைத்த மனிதர்கள் என்பதால். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம், என் மனம் வாடுதே' என்றார் வள்ளலார் பெருமான். 'தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை என்றால் ஜகத்தினை அழிப்போம்' என்றார் பாரதி. ஏழைகளுக்கு ஆண்டவன் ரொட்டித் துண்டு வடிவிலேயே தெரிகிறான் என்பதே பைபிள் கருத்து. கேட்கின்ற கரங்களுக்கு மட்டுமா உதவி செய்வது? மனித குலத்தில் தேவைப்படும் ஒவ்வொரு கரங்களுக்கும் நாமாக தேடிப் போய் அவர்களை நாடிச் சென்று உதவி செய்வதே உண்மையான தொண்டு.

ஒருமுறை, கொல்கத்தா மாநகரில், பெரிய மனிதரிடம் அன்னை தெரசா தனது ஆசிரமத்திற்கு நிதி கேட்டு, வலது கையை நீட்டினார். அந்த மனிதர் எச்சிலைக் காரி உமிழ்ந்தார். அதை வலது கையில் பெற்ற அன்னை தெரசா, இது எனக்குத் தந்த பரிசு, என் ஆசிரமத்திற்கு என்ன தரப்போகிறீர்கள் என்று தனது இடதுகையை நீட்டினார். பெரியவரோ, வெட்கத்தால் தலை குனிந்தார். இந்தச் செயலை, கவிஞர் ஒருவர் பதிவு செய்தார். அன்னையே! அன்னையே! நீங்கள், கருவுற்றிருந்தால், ஒருவருக்குத்தான் அன்னை. ஆனால், கருணையுற்றதனால், இந்த உலகிற்கே அன்னை என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அன்னை தெரசா பாராட்டிய தொண்டின் சிகரம், நம் அம்மா அவர்களின் வழிநடக்கும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு, சமூக நீதியோடு சீர்மிகு விடுதிகளை சிறப்போடு நடத்தி வருகிறது.

1,324 ஆதி திராவிடர் நல விடுதிகள், 43 பழங்குடியினர் நல விடுதிகள், 315 உண்டி உறைவிடப் பள்ளிகள் என்று மொத்தம் 1,682 விடுதிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு சுண்டலும், சுக்கு மல்லி காப்பியும், கூட்டும், பொரியலும், சாம்பாரும், மோர் குழம்பும், முட்டையும், இறைச்சியும், சத்தான குருமாவும் சந்தோஷமாக வழங்கப்படுகிறது என்பதை மகிழ்வோடு பதிவு செய்கிறேன். மேலும், விடுதியில் உள்ள மாணவர்களுக்கு சோப்பும், சீப்பும், தட்டும், டம்ளரும், பாயும், போர்வையும், சலவை இயந்திரமும், நீராவி கொதிகலனும், நூலக வசதியும் செய்து, தனியார் விடுதிகளுக்கு இணையான தரத்தோடு இவ்விடுதிகள் செயல்படுகின்றன.

அதிலும் குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதியில், அறிவு ஜீவி, அப்துல் கலாமும், தொண்டின் சிகரம் அன்னை தெரசாவும், கிரிக்கெட் புயல் தெண்டுல்கரும், இசைஞானி இளையராஜாவும், தங்க மங்கை பி.டி. உஷாக்களும் நாளும் உருவாக்கப்படுகிறார்கள். இதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் பழங்குடியினர் நல மாணவர்களுக்காக நடத்தப்படும் SFRD தொண்டு நிறுவனப் பள்ளி இத்துறையின் மணிமகுடத்தில், மரகதக் கல்லாக மிளிர்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க இலக்கியம், சமய இலக்கியம், இக்கால இலக்கியம், நவீன இலக்கியம், வள்ளுவன், கம்பன், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டையார், கண்ணதாசன், புதுமைப்பித்தன், கீ. இராஜநாராயணன், ஜெயகாந்தன், தற்போது சாகித்திய அகாடமி விருதுபெற்ற எஸ். இராமகிருஷ்ணன் போன்ற எழுத்தாளர்கள் கதை மூலமாக, கட்டுரை மூலமாக, கவிதைகள் மூலமாக நமக்குச் சொல்லும் செய்தி என்ன? யோசித்துப் பார்த்தால், நம் சிந்தனைக்கு வருவது, ஒடுக்கப்பட்டோரின் விடுதலை, நசுக்கப்பட்டோரின் நலன், அடித்தட்டு மக்களின் வாழ்வியல் மாற்றம். அந்த வகையில், இம்மக்களின் கண்ணீரைத் துடைத்து, கவலைகளைப் போக்கி, சங்கடத்தைத் துடைத்து, வாழ்வில் சந்தோஷத்தைப் பெருக்க வழிசெய்யும் வகையில், பல்வேறு பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு, மக்களின் மனங்களில் நாள்தோறும் மகிழ்ச்சி மத்தாப்புக்களை மலரச்செய்கிறது. இவ்வாண்டு, ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட உள்ளது. ரூ.76.84 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதிகள் அமைக்கப்பட உள்ளன. ஈமச்சடங்குகள் உதவிக்காக ரூ.4.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இரவு 8–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை என்பது மனித மனங்களை அரிக்கும் கரையான்; தீண்டாமை என்பது சமுதாயத்தில் படர்ந்துள்ள புற்றுநோய்; தீண்டாமை என்பது பலரை அழிக்கும் நெருப்பு. இவற்றை நன்கு உணர்ந்த சட்ட மாமேதை அம்பேத்கர், தேசத் தந்தை அண்ணல் காந்தி, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், தியாகச் சுடர்

ரெட்டைமலை சீனிவாசன் போன்றவர்கள் கண்ட கனவை நினைவாக்கிட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநின்று, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு, அரணாக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தீண்டாமை ஒழிப்பிற்காக, கூடுதல் காவல் துறைத் தலைவரின்கீழ் தனிப் பிரிவு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும், சிறப்பு தனியுறு நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. இவைதவிர, தீண்டாமை ஒழிப்பிற்காக, கலை நிகழ்வுகள், நாடகங்கள், வில்லுப்பாட்டு ஆகியவற்றின் வாயிலாக மக்களுக்கு சமத்துவக் கருத்துகள் பரப்பப்பட்டு வருகிறது. சமூக நல்லிணக்கத்தோடு செயல்படும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் வளர்ச்சிக்காக ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது. இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்கு என ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவைதவிர, 11 சிறப்பு எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.40,000/– வழங்கப்படுகிறது. ஒட்டுமொத்தத்தில், ஆதி திராவிடர் மக்கள் உழைப்பால் உயர்வையும்; நம்பிக்கையால் செம்மையும்; கல்வியால் எளிமையையும்; கலை, இலக்கியத்தால் ஞானத்தையும் பெற்று; இவர்களின் வாழ்க்கைச் சக்கரம் சுழல்வதற்கு இத்துறை அச்சாணியாகத் திகழ்கிறது என்பதே உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதருக்குள் மனிதநேயம் இருக்கும். ஆனால், மனிதநேயமே ஒரு மனிதராக இருக்க முடியும் என்றால் அவற்றின் வடிவம்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1963 ஆம் ஆண்டு, ஒரு மாலை நேரத்தில், அகில இந்திய வானொலியில், இந்தியாவின் பாரதப் பிரதமர் நேரு அவர்கள் உரையாற்றினார்கள். அந்த உரையின் நோக்கம், இந்திய–சீன யுத்தத்திற்கு நிவாரண நிதி கேட்டு, வானொலியில் உரை முடிந்தது. இரவு 8.00 மணி. புரட்சித் தலைவரின் கார், திருமலைபிள்ளை சாலையில் உள்ள முதல்வர் காமராசரின் வீட்டிற்குச் சென்றது. வாசலில் உள்ள காவலாளி, முதல்வர் மதுரைக்குச் செல்ல எழும்பூர் இரயிலடி சென்றுவிட்டார் என்றார். M.G.R.–ன் கார் எழும்பூர் இரயிலடி வந்தது. மக்கள் கூட்டம் வெள்ளமென திரண்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், காமராசர் இருக்கும் இரயில்

பெட்டி நோக்கி புறப்பட்டார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், காமராசரும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., காமராசரைப் பார்த்து, "நேருவின் உரை கேட்டேன். யுத்த நிவாரணத்திற்கு நிதியாக என் பங்கு ரூ.75 ஆயிரம் தர முடிவு செய்தேன். இதோ முதல் தவணையாக ரூ.25 ஆயிரம்" என்று காசோலையை நீட்டினார். இன்றையநிலையில் அது பல கோடி ரூபாய்க்கு இணையாக உள்ளது. இரயில் புறப்பட்டது, காலையில் மதுரையில் காமராசர் இறங்கினார். அவரைப் பார்த்து பலரும், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்–யிடம் நீங்கள் கைநீட்டி காசோலை வாங்கலாமா" என்று கேட்டார்கள். அவர் சொன்ன ஒற்றை வார்த்தை, "நேருவின் உரையை பல இலட்சம் பேர் கேட்டார்கள்; ஆனால், கொடுக்க வேண்டும் என்ற மனம் ஒருவருக்குத்தான் இருந்தது. அதனால்தான் கைநீட்டி வாங்கினேன்" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிகழ்வு நமக்கு நினைவூட்டுவது, உதவி என்பது பணத்தைப் பொறுத்து அல்ல; மனதைப் பொறுத்தது என்பது தெளிவாகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நினைத்துப் பார்க்கிறேன். அரசியலில் பல தலைவர்கள் மக்களுக்கு உதவும் மன்னனாக இருக்கலாம். ஆனால், ஒருவர்தான் மன்னாதி மன்னன், அவர்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பழங்குடியின மக்களைப் பற்றிப் பேசிய தலைவர்கள் உண்டு. ஆனால், அவர்கள் வாழ்க்கையை மாற்றிய தலைவர் உண்டு என்றால், அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் மட்டும்தான். பழங்குடியினர் நல மக்களின் வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்திட தனி இயக்குநரகம் சென்னையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. பழங்குடியினர் நலனுக்காக, இவ்வாண்டு ரூ.482.80 கோடி நிதி ஒதுக்கீடு என்பதை இங்கு பதிவு செய்கிறேன். 315 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் 26,484 மாணவ/மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். அதேபோல, 43 விடுதிகளில், 2,261 மாணவ/மாணவிகள் எல்லாவித வசதிகளையும் பெற்று, தங்கள் அறிவை மேம்படுத்துகிறார்கள். மைய அரசும் இம்மக்களின் முன்னேற்றத்திற்கு, நேசத்தோடு, பாசக்கரம் நீட்டுவது குறிப்பிடத்தக்கது. பழங்குடியினர் நல துணைத் திட்டத்தின்மூலம் வீடு கட்டித் தருதல், தேனீ வளர்ப்பு, வன உரிமைச் சட்டம் செயல்படுத்துதல், பள்ளிக் கட்டடங்கள் சரிபார்த்தல், ஆழ்துளைக் கிணறு சரிபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டம், உதகையில் ஆராய்ச்சி மையமும், தொழில்நெறி வழிகாட்டு மையமும் மிக நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. இம்மக்களின் மண்சார்ந்த மரபுகள் காக்கப்படுவதோடு, பல்வேறு நலத் திட்டங்களையும் இவ்வரசு செய்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்தி, மலைவாழ் மக்களின் நிலையை மாற்றி, இவர்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் என்பதை இந்த மண்ணில் நிரூபிப்பதே, இத்துறையின் நோக்கமாகும்.

இரவு 8–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சியும், பயிற்சியும் தொடர்ச்சியாக இருந்தால், வெற்றி நிச்சயம். சந்தனம் இழைக்க, இழைக்கத்தான் வாசனை தரும். மனிதன் உழைக்க, உழைக்கத்தான் வாழ்க்கை பிரகாசிக்கும். அவ்வகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வில் நம்பிக்கை மின்னல்களைக் கொண்டு, புதிய விடியலுக்கு வழிவகை செய்வதுதான் தாட்கோவின் நோக்கம். ‘ஆயுதங்கள் செய்யாததை, அறிவு செய்யும்’. இம்மக்களின் ஒவ்வொரு வியர்வைத் துளியும் இந்த மண்ணில் வேர் வைக்கும் என்பதை உணர்ந்து, தாட்கோ மூலமாக மானியத்துடன்கூடிய கடன் திட்டங்கள், பயிற்சி, திறன்மேம்பாடு, கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு, குடிமைப் பணி எழுதுவோருக்கு நிதியுதவி என்று பல்வேறு செயல்பாடுகளை தாட்கோ செய்து வருகிறது. ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால், தாட்கோ இவ்வின மக்களின் அட்சயப் பாத்திரம்; அமுதசுரபி; காமதேனு; கற்பக விருட்சம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மக்களின் வாழ்வில் வசந்தங்களை ஏற்படுத்த அம்மா அவர்களின் அரசு பிள்ளைகளுக்காக கல்வி, விடுதி, உதவித் தொகைகள், வேலைவாய்ப்பு, கலை இலக்கிய மேம்பாடு, திறன் பயிற்சிகள், நிதியுதவி என்று திட்டங்களைத் தீட்டி, சட்டங்களை வகுத்து, சாதனைகள் புரிந்து, சரித்திரம் படைக்க வழிவகை செய்கிறது என்பதே உண்மையிலும் உண்மை என்பதை நிறைவாகப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு செய்தியை இங்கே காலத்தின் கட்டாயம் கருதி பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த மே 23 ஆம் நாளன்று நானும், என் எதிர் வீட்டு பெண்ணும் ஒரே நேரத்தில் செல்போன் வாங்கினோம். அவள், என் போனில் பதிவு செய்யும் எண்களின்

எண்ணிக்கை அதிகம்; திட்டங்கள் அதிகம் என்று சொன்னாள். கவர்ச்சியான போன் என்று அடுக்கடுக்காய் பெருமை பேசினார். நான் சொன்னேன், என் செல்போன் எங்கள் முதல்வரை போன்றது. உன் செல்போனில் எல்லாம் இருக்கும். ஆனால், சிம் கார்டு இல்லை. என் போன், எங்கள் முதல்வர் போல சிம் கார்டு உள்ள செல்போன் என்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழின் உச்சத்தை மிச்சமில்லாமல் தொட்ட, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், பிளாஸ்டிக் என்கிற அரக்கனை ஒழித்து, "மண்ணில் மரம் வளர்ப்போம்; வாருங்கள்" என்று வாஞ்சையோடு அழைக்கின்ற முதல்வர் அண்ணன் அவர்களே, மண்ணில் மரம் வளர்ப்போம். ஏனென்றால், மண்ணிற்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது. மரம் வளர்த்து, மண்வளம் காத்து, மத நல்லிணக்கம் பேணும் அண்ணன், மகத்தான முதல்வர் E.P.S. அவர்களின் நல்லாசியோடு இத்துறைக்கான புதிய அறிவிப்புகளை பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தினுடைய அருமை கருதி, அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் வாசிக்கிறேன். உள்ளடக்கத்தை நான் வாசித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிந்து வேண்டுகிறேன்.

அறிவிப்புகள்

1. ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறை (Smart Class Room) ஏற்படுத்துதல்

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் 116 உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையிலும், அவர்கள் மருத்துவம் பொறியியல் போன்ற மேற்படிப்புகளை பயில ஏதுவாக 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பாடங்களை மாணாக்கர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், கணினி வாயிலாக கற்பித்தல் முறையினை செயல்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக 20 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத்திறன்

வகுப்பறைகள் (Smart Class Room) ரூ.1.12 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1.12 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

2. ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது இயங்கி வரும் அறிவுத் திறன் வகுப்பறைகளை (Smart Class Rooms) மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறைகளாக (Virtual Interactive Class rooms) மாற்றி மெய்நிகர் கலந்தாய்வு கற்பித்தல் முறையினை (Virtual Interactive Teaching) ஏற்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு ஆதி திராவிட நல மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 83 பள்ளிகளில் ஏற்கெனவே இருக்கின்ற அறிவுத் திறன் வகுப்பறைகளை மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறைகளாகத் தரம் உயர்த்தி, மெய்நிகர் கலந்தாய்வு கற்பித்தல் முறையில் வகுப்புகள் நடத்துவதற்கான காணொலி மையம் ரூ.68.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.68.15 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

3. ஆதி திராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு ஆளுமைத் திறன், மொழி மற்றும் தகவல் தொடர்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்

ஆதி திராவிட மக்கள் பெரும்பாலானோர் சமூகப் பொருளாதார, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இவர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இவ்வரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள வேலைவாய்ப்புப் போட்டிகளை எதிர்கொள்ளும் திறன் உள்ளவர்களாக ஆதி திராவிடர் கல்லூரி மாணாக்கர்களை மாற்றிடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 158 ஆதி திராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு வாரந்தோறும் ஆளுமைத் திறன், மொழி மற்றும் தகவல் தொடர்புத்

திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1.41 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

4. 100 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் (Water Filters) அமைத்தல்

ஆதி திராவிடர் நலத் துறை விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் உடல் நலனைப் பேணிக் காத்திடவும், அவர்களை சுகாதாரமற்ற குடிநீர் பருகுவதால் உண்டாகும் தொற்றுநோய் ஆபத்திலிருந்து காத்திடவும் அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 100 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும், 13 மாவட்டங்களில் உள்ள 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும், தலா ரூ.70 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.1.05 கோடி செலவில் குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் (Water Filters) அமைக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.70 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்தும் மற்றும் ரூ.35 இலட்சம் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்தும் ஒதுக்கப்படும்.

5. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோமூலம் செயல்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிய ஏதுவாக சுய உதவிக் குழு, பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், தொழில்முனைவோர் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு பொருளாதார

மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி மானியத்தில் 2019–2020 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். மேற்படி திட்டங்களைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.

6. பழங்குடியின மாணவ / மாணவியரை 2 ஆண்டுகள் கல்வியியல் பட்டயப் படிப்பு (D.T.Ed.) பயில வைத்து பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராகப் பணி வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் 100 பழங்குடியின மாணவ / மாணவியரை பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி பெற்றவுடன், அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் கல்வியியல் பட்டயப் படிப்பில் (D.T.Ed) சேர்த்து, அவர்கள் அப்பட்டயப் படிப்பை முடித்தபின் தமிழ்நாடு அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் (Tamil Nadu Teachers Eligibility Test) வெற்றி பெற தனியார் பயிற்சி நிலையங்களில் சேர்த்து, அத்தகுதித் தேர்வில் வெற்றிபெறும் பழங்குடியின இடைநிலை ஆசிரியர்கள் தர வரிசை அடிப்படையில் இத்துறையின்கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராகப் பணி நியமனம் செய்யப்படுவர். இத்திட்டத்தின்கீழ் 100 மாணாக்கர் கல்வியியல் பட்டயப் படிப்பு பயில்வதற்கு ஆகும் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், விடுதிக் கட்டணம், சீருடைக் கட்டணம், இதர செலவினங்கள் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற தனியார் பயிற்சி நிலையங்களில் ஏற்படும் செலவினங்கள் முழுவதையும் அரசே ஏற்கும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.35 இலட்சம் ஒதுக்கப்படும்.

7. பத்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்குப் புதிய வகுப்பறைகள் கட்டுதல்

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 308 பள்ளிகளில் 24,931 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடும்,

பழங்குடியின மாணாக்கர்கள் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டும், மாணவ / மாணவியர் பள்ளிக்கு வெகுதூரம் செல்வதை தவிர்க்கும் பொருட்டும், அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020 ஆம் நிதியாண்டில் 10 பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.2.00 கோடி ஒதுக்கப்படும்.

8. ஐந்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் இருக்கை வசதிகளுடன்கூடிய நூலகங்கள் அமைத்துத் தருதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் பொது அறிவினை வளர்த்திடும் வண்ணம், அவர்களின் புத்தகம் படிக்கும் ஆர்வத்தினைத் தூண்டும் வகையில், முதற்கட்டமாக 4 மாவட்டங்களில் உள்ள 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் இருக்கை வசதிகளுடன்கூடிய நூலகங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.75 இலட்சம் ஒதுக்கப்படும்.

9. பத்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

பழங்குடியினர் நலத் துறையின்கீழ், 17 மாவட்டங்களில் இயங்கி வரும் 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 24,931 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020 ஆம் நிதியாண்டில் 5 மாவட்டங்களில் உள்ள 10

பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்கு ரூ.8.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.85 இலட்சம் ஒதுக்கப்படும்.

10. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் சுகாதாரத்தினைக் கருத்தில்கொண்டு, 20 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு புதிய கழிவறைக் கூடங்கள் கட்டுதல்

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் சுத்தமான மற்றும் சுகாதாரமான சூழலில் கல்வி பயில்வதை உறுதி செய்யும் பொருட்டு, பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020 ஆம் நிதியாண்டில் 6 மாவட்டங்களில் உள்ள 20 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய கழிவறைக் கூடங்கள் கட்டப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.2.00 கோடி ஒதுக்கப்படும்.

11. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீள் இருக்கை, சாய்வு மேசை, கட்டில், கரும்பலகை, எழுதுகோலுடன்கூடிய வெண்பலகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் உட்கட்டமைப்பினை உயர்த்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீள் இருக்கை, சாய்வு மேசை, கட்டில், கரும்பலகை, எழுதுகோலுடன்கூடிய வெண்பலகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ரூ.1 கோடி செலவில் வழங்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.1.00 கோடி ஒதுக்கப்படும்.

இரவு 8–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளோடும், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களின் வழிகாட்டுதலோடும் நான் இந்த மாமன்றத்தில் வைத்த கருத்துகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன நெகிழ்வையும், நிறைவையும் அளித்திருக்கும் என நினைக்கின்றேன். துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு உறுப்பினர்கள் தந்த ஆரோக்கியமான கருத்துகளை, வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடைமுறைப்படுத்துவதற்கு உண்டான தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உறுதியை வழங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் வழங்கிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, எனது உரையை நன்றியோடு முடிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்தபோது, நம்முடைய நடேசனார் மற்றும் தியாகராயர் போன்றவர்கள் எல்லாம், அவர்கள் தங்கிப் படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்களை நினைவுகூர்ந்து, அவர்களைக் கௌரவப்படுத்துகின்ற வகையில், நம்முடைய ஆதி திராவிடர் விடுதிகளுக்கு அவர்களுடைய பெயர்களைச் சூட்ட வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதனைத் தொடர்ந்து தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய தேவேந்திர குல வேளாளர் சமூகத்தவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான தேவேந்திர குல வேளாளர் என்ற சாதிச் சான்றிதழ் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இமானுவேல் சேகரன் அவர்களுக்கு அரசு விழா எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கச்சனம் பகுதியில் ஆதியன் என்கிற ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு பக்கத்து மாவட்டமாக இருக்கக்கூடிய நாகப்பட்டினம், கடலூர் பகுதிகளில் எல்லாம் ST Certificate வழங்கப்படுகிறது. அவர்களுடைய உறவுகள் எல்லாம் அங்கே இருந்தாலும்கூட இவர்களுக்கு மட்டும் MBC Certificate வழங்கப்படுகிறது. இவர்களுடைய உறவினர்களெல்லாம் ST Certificate வாங்கும்போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆடலரசன், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. ஆடலரசன்: அவர்களுக்கும் உடனடியாக ST Certificate வழங்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு)

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வணக்கம் சொல்லி நேரத்தை வீணாக்காதீர்கள். ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் ஒன்றியத்தில் பிளாந்திப்பட்டு என்கின்ற ஓர் ஊராட்சி இருக்கின்றது. அங்கே ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி துவக்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகின்றன. இப்போது அந்தப் பள்ளிக்கூடமே இடிந்து பாழாகி மரத்தடியில் பாடம் நடத்துகிறார்கள். எனவே, தயவு செய்து இந்த அரசு ஒரு பள்ளிக்கூடத்தையும், தடுப்புச் சுவரையும் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குச்சனூர் ஊராட்சியில் சுதந்திர நகர் பகுதியில்

5000–க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காளிமுத்து, நீங்கள் திரும்பவும் உரையாற்றக் கூடாது. இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதில் ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தால் மட்டும் கேட்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக்கூடம் இடிந்த நிலையில் இருப்பதாகச் சொன்னார்கள். 30 வருடங்களுக்கு மேலாகின்ற அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய தற்போதைய நிலையை ஆராய்ந்து, அதனைப் புதுக் கட்டடமாக உருவாக்குவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் அவர் சொல்கின்ற அந்தப் பள்ளிக்கூடத்திற்கு புதிய building வரும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ரூ.3,668,18,24,000/–, மூலதனக் கணக்கில் ரூ.128,02,50,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.7,11,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–7–2019), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

43. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

44. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2019 ஜூலை 17]

45. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

46. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

47. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

48. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தணிக்கை அறிக்கை. [*1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *30/1983*) *80(9)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

49. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [*1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *30/1983*) *80(9)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

181. மானியக் கோரிக்கை எண் *41*–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் *51*–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2019–2020*. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

182. மானியக் கோரிக்கை எண் *4*–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2019–2020*. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

183. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய வரவு செலவு செயலாக்கத் திட்டம், *2019–2020.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

184. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய மக்கள் சாசனம், *2019–2020.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

185. "மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் சாதனைகள்" பற்றிய சிறுநூல்கள். (தமிழ்)

186. "போக்குவரத்துத் துறையின் செயல்திறன், *2019*" என்கிற சிறுநூல். (தமிழ்)

187. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2019–2020.* (தமிழ்)

188. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2019–2020.* (தமிழ்)

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-I

(126 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020

1. முன்னுரை

மன்னராட்சி காலங்களில் இருந்து ஆட்சியாளர்களின் பிரதான நிதி ஆதாரமாக நில வருவாய் இருந்த காலந்தொட்டே, நில வருவாயை வசூல் செய்யும் துறையாக வருவாய்த் துறை செயல்பட்டு வந்தது. காலப்போக்கில், வருவாய்த் துறை அரசாங்கத்தின் முக்கிய நிருவாகத்துறையாக உருவெடுத்தது. 1786-ல் வருவாய் வாரியம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, அனைத்து மாகாணம் மற்றும் மாவட்டங்களில், பொது நிருவாகத்திற்கான மையத் துறையாக வருவாய்த் துறை விளங்கியது. இந்நிலையில், 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் கலைக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் புதிதாக உருவாக்கப்பட்ட 3 ஆணையரகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. பின்னர், தேவையின் அடிப்படையில் தற்போது 5 ஆணையரகங்கள் செயல்பட்டு வருகின்றன. காலப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சிக்கேற்ப, இத்துறை பன்முகத்தன்மை கொண்ட துறையாக தற்போது சிறப்பாக உருப்பெற்று, பேரிடர் காலங்களில் மக்களைப் பாதுகாக்கும் முக்கிய பணியினை மேற்கொள்கின்ற துறையாக வளர்ச்சியடைந்துள்ளது.

வருவாய்த் துறையானது தனது பன்முகத் தன்மையினால், விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கும் அரசின் முகமாகச் செயல்பட்டு வருகிறது. இத்துறை மக்களின் அன்றாட வாழ்வில் எல்லா நிலைகளிலும் இரண்டறக் கலந்துள்ளது. இன்றளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற பெரும்பான்மையான துறைகள் வருவாய்த் துறையிலிருந்தே உருவாக்கப்பட்டதால் அத்துறைகள் யாவும் வருவாய்த் துறையின் சேவைகளை சார்ந்தே உள்ளன.

[2019 ஜூலை 17

இத்துறை அரசின் உடமைகளான நிலம், நீர்நிலை, கனிமம் மற்றும் புதையல் ஆகியவற்றிற்கு பாதுகாவலாக இருந்து வருகிறது. விவசாயிகள் விவசாய கடன் பெறவும், மாணவர்கள் கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி கற்பதில் சலுகைகள் பெறவும், வேலைவாய்ப்பற்றவர்கள், சமூகத்தில் பின்தங்கியவர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சாலைகள் பயன்பெறும் வகையில் பல்வேறு விதமான சான்றிதழ்களை, குறிப்பாக சாதி, பிறப்பு, இறப்பு, வாரிசு, வருமானம், பட்டா மாறுதல் சான்றிதழ் மற்றும் பல்வேறு உரிமங்கள் ஆகியவற்றை வழங்கி வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்களிலும் வருவாய்த் துறை மிக முக்கிய பங்காற்றுகிறது.

மேலும், வருவாய்த் துறை இயற்கை இடர்ப்பாடுகளின் போதும், மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின் போதும் அனைவரின் எதிர்பார்ப்பிற்கேற்ப முன்னின்று செயல்பட்டு வருகிறது. பேரிடர் காலங்களில் எளிதில் சென்றடைய மற்றும் நெருங்க முடியாத இடங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மற்றும் உரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் முதன்மையான துறையாக செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், நில நிருவாக ஆணையரகம், நிலச் சீர்திருத்த ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம் ஆகிய ஐந்து ஆணையரகங்கள்/ இயக்குநரகம் செயல்பட்டு வருகிறது.

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், வருவாய் நிருவாக ஆணையர் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவ்வாணையரகம், பொது நிருவாகம், பேரிடர் மேலாண்மை, மக்கள் குறை தீர்த்தல், சமூகப் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துதல், நலிந்தோர் உதவி, சான்றுகள் வழங்குதல், தேசிய மக்கள் தொகை பதிவேடு தயாரித்தல், வெடிபொருள் உரிமம், துப்பாக்கி உரிமம், பொது கட்டடங்கள் உரிமம் உள்ளிட்ட பிற உரிமங்கள் வழங்குதல் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை விநியோகித்தல் ஆகிய பணிகளை கவனித்து வருகிறது. வருவாய் நிருவாக ஆணையர் மாநில நிவாரண ஆணையராகவும் செயல்படுகிறார். இவ்வாணையரகம்,

2019 ஜூலை 17]

பேரிடர் காலங்களில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை பாதுகாத்தல், மீட்பு மற்றும் நிவாரணம் வழங்கல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. மேலும், அனைத்து, மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைக் குழுக்களின் பணிகளையும் கண்காணிக்கிறது. இதோடு மட்டுமின்றி, 2017 ஆம் ஆண்டு முதல் நீர்நிலைகளைத் தூர்வாருதல் மற்றும் வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி கண்காணித்தல், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகளையும் மேற்கொள்கிறது.

நில நிருவாக ஆணையரகம், நில நிருவாக ஆணையர் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவ்வாணையரகத்தால், நில எடுப்பு, நில உரிமை மாற்றம், பிற துறைகளுக்கு நில மாற்றம் செய்தல், நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை மற்றும் நிலப் பட்டாக்கள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இவ்வாணையரகம் நில ஆக்கிரமணங்களை அகற்றுவதன்மூலம், அரசு நிலங்களின் பாதுகாவலனாக செயல்படுகிறது.

நிலச் சீர்திருத்த ஆணையரகம், நிலச்சீர்திருத்த ஆணையர் தலைமையின்கீழ் செயல்படுகிறது. இவ்வாணையரகத்தின்மூலம் தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோக) விதிகள், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரிநிலங்களுக்கு தொகை வழங்குதல்) விதிகள், குத்தகைச் சட்டங்கள், குறைந்தபட்ச ஊதியச் சட்டம் மற்றும் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்கும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்டம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (நீக்கறவுச் சட்டம்) சம்பந்தமான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம் தற்போது நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/ நீக்கறவுச் சட்டம், 1999 தொடர்பான பணிகள் 'அறியாக்கிரயம்

[2019 ஜூலை 17

பெற்றோர்' திட்டத்தின்கீழ் கிரயங்களை வரன்முறைப்படுத்துதல் ஆகியவை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி முதன்மைச் சட்டம், 1966/ திருத்தச் சட்டம், 1991 சட்டக் கூறுகளின்கீழ் மாநிலத்தில் 24 மாவட்டங்களில் நகர்ப்புறங்களாக அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் வரிவிதிப்பு செய்யும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் இயக்குநரகம், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் இயக்குநர் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவ்வியக்குநரகம் பல்வேறு வகையான நிலஅளவைப் பணிகளை மேற்கொள்ளுதல், நில ஆவணங்களை பராமரித்தல், நில உரிமைக்கேற்ப புலங்களில் உட்பிரிவுகளை மேற்கொள்ளுதல், நில ஆவணங்களைக் கணினிப்படுத்தி இணையவழியில் பராமரித்தல் மற்றும் இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினைச் செயல்படுத்துதல் போன்ற நிலம் தொடர்பான பலதரப்பட்ட பணிகளையும் நிலவரித்திட்ட பணிகளையும் செயல்படுத்தி மேற்பார்வை செய்கிறது.

மேற்காணும் ஆணையரகங்களின் ஒட்டுமொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 61,437 ஆகும்.

அட்டவணை -1.1

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின்கீழ் இயங்கும் ஐந்து ஆணையரகங்களின் பணியாளர் விவரம்

ஆணையரகம்/ இயக்குநரகத்தின் பெயர்	முதலாம் நிலை அலுவலர்	இரண்டாம் நிலை அலுவலர்	மூன்றாம் நிலை அலுவலர்	நான்காம் நிலை அலுவலர்	மொத்தம்
வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை	5	3,959	24,680	23,435	52,079
நில நிர்வாகம்	6	25	98	22	151
நில சீர்திருத்தம்	2	38	123	51	214
நில அளவை மற்றும் நிலவரி திட்டம்	13	314	6,943	1,513	8,783
நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி	1	37	104	68	210
மொத்தம்	27	4,373	31,948	25,089	61,437

2019 ஜூலை 17]

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய மாவட்ட வருவாய் அலுவலர்கள், சார் ஆட்சியர்கள்/வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், நில அளவை/ உதவி இயக்குநர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள், நில அளவை ஆய்வாளர்கள்/ துணை ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

2 வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை

வருவாய் நிருவாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையரின் தலைமையில் சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர், பேரிடர் மேலாண்மை இயக்குநர், இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) மற்றும் இதர அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாணையரகத்தின் பணிகளில் அடங்குபவை

1. பொது வருவாய் நிருவாகம்
2. நில வருவாய் வசூல்
3. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களை செயல்படுத்துதல்
4. துயர் துடைப்புத் திட்டங்கள்
5. பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள்
6. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு
7. கீழ்க்கண்ட சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் செயலாக்கம் செய்தல்

அ) வருவாய் வசூல் சட்டம் 1864

ஆ) புதைப்பொருள் சட்டம் 1878

இ) தமிழ்நாடு வெடிபொருள் சட்டம் 1884

ஈ) தமிழ்நாடு அடகு பிடிப்போர் சட்டம் 1943

உ) பொதுக் கட்டிட உரிமம் சட்டம் 1965

ஊ) தமிழ்நாடு பிறப்பு /இறப்பு பதிவுச்சட்டம் 1969

எ) தமிழ்நாடு அதிக வட்டிக்கு கடன் கொடுப்பதை தடுத்தல் சட்டம் 2003 மற்றும்

[2019 ஜூலை 17

இத்துறை மாவட்ட நிலை முதல் கிராம நிலை வரை களப்பணியாளர்களைக் கொண்டுள்ளது.

2.1 மாவட்ட நிருவாகம்

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்கள் (புதிதாக உருவாக்கப்படவுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம் நீங்கலாக) மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின்கீழ் இயங்குகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட நடுவரின் மேற்பார்வையின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட அளவிலான பல துறைகளைச் சார்ந்த மாவட்ட நிலை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

2.2 வருவாய் கோட்ட நிருவாகம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் நிருவாகம் செம்மையாகச் செயல்பட கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, சார் ஆட்சியர்/ கோட்டாட்சியர் தலைமையில் இயங்கி வருகின்றன. வருவாய் நிருவாகம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, நில நிருவாக மேற்பார்வை, கிராம நிருவாகம் போன்ற பொறுப்புகளை வருவாய்க் கோட்டாட்சியர்கள் நிர்வகித்து கண்காணித்து வருகின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 87 கோட்டங்கள் உள்ளன.

2.3 வருவாய் வட்ட நிருவாகம்

வட்ட நிருவாகம், வட்டாட்சியரின் தலைமையில் இயங்கி வருகிறது. பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மாணவ/ மாணவியர்களுக்குத் தேவையான பட்டா, சிட்டா, அடங்கல், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்ற பல்வேறு சான்றிதழ்கள் வழங்குவதற்கு துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உதவி புரிகின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 305 வருவாய் வட்டங்கள் உள்ளன.

2.4 குறுவட்ட நிருவாகம்

ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள சில வருவாய் கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பிர்க்கா என்று அழைக்கப்படும் குறுவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளர் குறுவட்டத்திற்கு

தலைவர் ஆவார். இவர் நிலவரி வசூல் பணியிலும், கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை மேற்பார்வையிடுவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறார். தற்போது மாநிலத்தில் மொத்தம் 1190 குறுவட்டங்கள் உள்ளன.

2.5 கிராம நிருவாகம்

வருவாய் நிருவாகத்தின் அடித்தளமாக கிராம நிருவாகம் இயங்கி வருகிறது. கிராம நிருவாகம், கிராம நிருவாக அலுவலர் தலைமையில் இயங்கி வருகிறது. கிராம நிருவாக அலுவலர்கள், கிராம கணக்குகளைப் பராமரித்தல், நிலவரி வசூல் செய்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பு ஆவார்கள். பொதுமக்களுக்கு பேரிடர் காலங்களில் தகவல் அளித்தல் மற்றும் உயர் அலுவலர்களுக்கு அசம்பாவித நிகழ்வுகள் /சட்டம் ஒழுங்கு குறித்த இனங்கள் தொடர்பான தகவல் அளித்தல் ஆகிய பணிகளில் கிராம நிருவாக அலுவலர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். தமிழ்நாட்டில் மொத்தம் 16,688 வருவாய் கிராமங்கள் உள்ளன.

2.6 வருவாய் நிருவாக பணியாளரமைப்பு

வருவாய் நிருவாகத் துறை துணை ஆட்சியர் பணிநிலை முதல் கிராம உதவியாளர் நிலைவரை தற்போது 52,074 பணியாளர்களைக் கொண்டுள்ளது. பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை-2.1

வருவாய் நிருவாகத்தில் உள்ள பணியாளர்கள் விவரம்

வ. எண்	பணியிடத்தின் பெயர்	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	துணை ஆட்சியர்	452
2.	வட்டாட்சியர்	1,870
3.	துணை வட்டாட்சியர், கண்காணிப்பாளர் /சுத்த நகல் கண்காணிப்பாளர்கள்	2,037
4.	முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள்	7,286
5.	இளநிலை வருவாய் ஆய்வாளர்கள்	3,127
6.	தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர்	1,565

வ. எண்	பணியிடத்தின் பெயர்	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை
7.	ஓட்டுநர்/ பதிவுரு உதவியாளர் / பதிவுரு எழுத்தர் /நகல் எடுப்பவர், / காவலர்/ மசால்சி/ தோட்டக்காரர்/ துப்புரவு பணியாளர்கள்	2,752
8.	அலுவலக உதவியாளர்	3,780
9.	கிராம நிருவாக அலுவலர்	12,702
10.	கிராம உதவியாளர்	16,503
	மொத்தம்	52,074

2.7 ஆட்சி எல்லைகளை மறுசீரமைத்தல் மற்றும் புதிய நிருவாக அலகுகள் உருவாக்குதல்

பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை விரைந்து அளிக்கும் பொருட்டு, புதிய வருவாய் வட்டங்கள் மற்றும் வருவாய் கோட்டங்கள் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி உருவாக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், 2011-2012 ஆம் ஆண்டில் 1 வருவாய் கோட்டமும், 2012-2013 ஆம் ஆண்டில் 9 வருவாய் வட்டங்களும், 2013-2014 ஆம் ஆண்டில் 2 வருவாய் கோட்டங்களும், 25 வருவாய் வட்டங்களும், 2014-2015 ஆம் ஆண்டில் 1 வருவாய் கோட்டமும், 8 வருவாய் வட்டங்களும், 2015-2016 ஆம் ஆண்டில் 5 வருவாய் கோட்டங்களும், 23 வருவாய் வட்டங்களும், 2017-2018 ஆம் ஆண்டில் 6 வருவாய் வட்டங்களும், 2018-2019 ஆம் ஆண்டில் 2 வருவாய் கோட்டங்கள், 14 வருவாய் வட்டங்கள், 1 குறுவட்டம் மற்றும் 6 வருவாய் கிராமங்களும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. 2011-ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் 11 வருவாய் கோட்டங்களும், 85 வருவாய் வட்டங்களும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. ஜனவரி 8, 2019 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

2019 ஜூலை 17]

அட்டவணை-2.2

மாவட்ட வாரியாக உள்ள வருவாய் கோட்டங்கள், வருவாய் வட்டங்கள், குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை விவரங்கள்

வ. எண்	மாவட்டம்	வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை	குறுவட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை
1.	அரியலூர்	2	4	15	175
2.	சென்னை	3	16	40	122
3.	கோயம்புத்தூர்	3	11	38	295
4.	கடலூர்	3	10	32	883
5.	தருமபுரி	2	7	23	470
6.	திண்டுக்கல்	3	10	40	359
7.	ஈரோடு	2	10	34	375
8.	காஞ்சிபுரம்	4	11	68	1,112
9.	கன்னியாகுமரி	2	6	18	188
10.	கரூர்	2	7	20	174
11.	கிருஷ்ணகிரி	2	8	30	642
12.	மதுரை	4	11	51	604
13.	நாகப்பட்டினம்	2	8	31	523
14.	நாமக்கல்	2	8	32	391
15.	பெரம்பலூர்	1	4	11	152
16.	புதுக்கோட்டை	3	12	45	757
17.	இராமநாதபுரம்	2	9	38	400
18.	சேலம்	4	13	44	631
19.	சிவகங்கை	2	9	39	521
20.	தஞ்சாவூர்	3	9	50	754
21.	நீலகிரி	3	6	15	54
22.	தேனி	2	5	17	99

வ. எண்	மாவட்டம்	வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை	குறுவட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை
23.	தூத்துக்குடி	3	10	41	468
24.	திருச்சிராப்பள்ளி	4	11	43	502
25.	திருநெல்வேலி	3	16	60	559
26.	திருப்பூர்	3	9	33	350
27.	திருவள்ளூர்	3	9	54	664
28.	திருவண்ணாமலை	3	12	52	1,064
29.	திருவாரூர்	2	8	28	500
30.	வேலூர்	3	13	53	841
31.	விழுப்புரம்	4	13	56	1,459
32.	விருதுநகர்	3	10	39	600
	மொத்தம்	87	305	1,190	16,688

2.8 வருவாய் கட்டடங்கள்

பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையிலும், அலுவலகச் சூழலை மேம்படுத்தும் பொருட்டும், மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிருவாக அலுவலர் நிலை வரை அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விதமாக அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

2018-2019 ஆம் ஆண்டில் 12 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.13.75 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், 2018-2019 ஆம் ஆண்டில் 22 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.43.45 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் தலைவாசல் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும்

2019 ஜூலை 17]

குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு 2018-2019-ம் ஆண்டில் ரூ.13.25 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடத்திற்கான சுற்றுச்சுவர் மற்றும் அணுகுசாலை அமைப்பதற்கு ரூ.25.45 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

2.9 நிலவருவாய்

அரசாணை (நிலை) எண்.544, வருவாய்த் துறை (வ.நி.1(1)), நாள் 20.10.2010-ன்படி தமிழ்நாட்டில் உள்ள நிலங்களுக்கு அவற்றின் வகைபாட்டிற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு நிலவரி தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

அட்டவணை 2.3

வ. எண்.	விவரம்	தொகை / ஏக்கர்
1.	புஞ்சை நிலத்திற்குத் தீர்வை	ரூ.2/-
2.	நஞ்சை நிலத்திற்குத் தீர்வை	ரூ.5/-
3.	ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து, அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை	ரூ.5/-
4.	பட்டா ஒன்றுக்கு குறைபட்ச கேட்புத் தொகை	ரூ.1/-

வருவாய்த் தீர்வாய நிகழ்வின்போது ஒவ்வொரு கிராமத்தின் ஆண்டு வருவாய் கணக்குகள் இறுதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஜூலை 1 ஆம் தேதி முதல் ஜூன் 30 ஆம் தேதி வரை நிலவரி வசூலிக்கப்படுகிறது.

2.10 இ-அடங்கல்

ஒவ்வொரு கிராமத்திலும், கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் ஒரு முக்கிய பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. மேலும், விவசாயிகளால் பருவ வாரியாக பயிர் செய்யப்படும் பயிர்களின் விவரம், விளைச்சல், நீர் ஆதாரம் போன்ற பல்வேறு

[2019 ஜூலை 17

புள்ளி விவரங்கள் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன. இப்புள்ளி விவரங்கள் ஜி-அறிக்கை தயாரிக்க உதவுகிறது. வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அடங்கல் முக்கிய ஆவணமாக விளங்குகிறது. 1428 ஆம் பசலி ஆண்டு வரை அடங்கல் பதிவேடானது கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதப்பட்டு வந்தது. இது பணிச்சுமை மிக்கதாகவும், காலம் பிடிக்கக்கூடிய பணியாகவும் இருந்தது.

கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதி பராமரிக்கப்பட்டு வந்த முறையை எளிமைப்படுத்திடவும், சாகுபடி விவரங்களை துல்லியமாக பெற்றிடவும், அடங்கல் பதிவேட்டினை மின்னனு பதிவிற்கு மாற்றம் செய்யும் இ-அடங்கல் திட்டத்தினைச் செயல்முறைபடுத்த அரசாணை (நிலை) எண்.258, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17.08.2017-ன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இணையதள இ-அடங்கல் செயலி 26.10.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் இ-அடங்கல் கைப்பேசி செயலி 05.03.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

கிராம நிருவாக அலுவலர்களால் இதுவரை தயாரிக்கப்பட்டு வந்த அடங்கல் பதிவேட்டில் விவசாயிகள் தங்கள் சாகுபடி விவரங்களை பதிவு செய்யும் நடைமுறை இல்லை. எனவே, விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தங்கள் சாகுபடி விவரத்தினை தாங்களே இ-அடங்கலில் பதிவிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கிராம நிருவாக அலுவலர் மற்றும் விவசாயிகளால் செய்யப்படும் சாகுபடி பதிவுகளுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பின், அப்பதிவு தானாகவே அடுத்த உயர்நிலை அலுவலருக்கு குறியீடு செய்யப்பட்டு, அவரது ஆய்வுக்குபின் திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் புள்ளியியல் துறையைச் சேர்ந்த அலுவலர்களும் தங்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பயிர்சாகுபடி விவரங்களை இச்செயலியில் பதிவு செய்ய தனி சாளர வசதியும்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இ-அடங்கல் முறையில் தானாகவே சாகுபடி பயிர்பரப்பு ஒத்திசைவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதால், பதிவேடு முறை குறைகள்/ வேறுபாடுகள் களையப்படுகிறது.

இ-அடங்கல் முறையில் விவசாயிகள் எவ்வித கட்டணமுமின்றி பதிவுகளைப் பார்வையிடவும், ரூ.100- கட்டணம் செலுத்தி வீட்டிலோ (அல்லது) இ-சேவை மையத்திலோ மின்னனு அடங்கல் பதிவுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் இயலும்.

இ-அடங்கல் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம்

- துறை அலுவலர்களின் பொறுப்பு மற்றும் திறனை மேம்படுத்துவதோடு உயர் அலுவலர்கள் எளிதில் கண்காணிக்கவும் வழி வகுக்கும்.
- துல்லியமான புள்ளி விவரங்கள்மூலம் நம்பகத்தன்மையை அதிகரிக்கவும், பயிர் பதிவு வேறுபாட்டினை வருவாய் ஆய்வாளர்கள்/ துணை வட்டாட்சியர்கள் களையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- இந்த துல்லியமான புள்ளிவிவரங்கள் மாநில/ தேசிய அளவில் தரமான கொள்கை முடிவுகளை எடுக்க உதவியாக இருக்கும்.
- விவசாயிகளுக்கு அதிகாரமளித்து தங்களின் பயிர் விவரங்களைப் பதிவு செய்ய வாய்ப்பளித்துள்ளதன் மூலம் வெளிப்படைத் தன்மையினை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- மின்னனு அடங்கலில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம், வருவாய்த் தீர்வாயத்தின்போது கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்படும் பல்வேறு கணக்குகளையும் பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

2.11 வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தில் தகவல் மேலாண்மை அமைப்பு (MIS)

வருவாய் நிருவாகத்தின் பல்வேறு செயல்பாடுகளை திறம்பட கண்காணிப்பதற்கும், நிருவகிப்பதற்கும், பல்வேறு அமைப்பு முறைகளிலிருந்து தகவல்களை சேகரிக்கவும், தகவல்களைப் பகுப்பாய்வு செய்யவும், நிருவாகம் சார்ந்த முடிவெடுக்கும்

[2019 ஜூலை 17

முயற்சிகளுக்கு உதவும் அறிக்கையை உருவாக்கவும், தகவல் மேலாண்மை அமைப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். முறையான கண்காணிப்பு, மறு ஆய்வு மற்றும் முடிவெடுக்கும் செயல்பாடுகளுக்கு கிராம அளவில் இருந்து மாவட்ட அளவு வரை வருவாய் நிருவாகத்தில் உள்ள முக்கிய பொருண்மைகள் தொடர்பாக பதிவு செய்யப்படும் தகவல்களை அவ்வப்போதே இத்தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தகவல் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்பட்டவுடன், தகவல்களை துவக்க நிலையில் மட்டும் உள்ளீடு செய்யப்படுவதால் ஒரு தகவல் ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் உயர்மட்டங்களில் உள்ளீடு செய்யப்படுவது தவிர்க்கப்படும். தகவல் மேலாண்மை அமைப்பின்மூலம் உருவாக்கப்படும் தேவையான அறிக்கைகள் ஒவ்வொரு மட்டத்திலும் உறுதிப்படுத்தப் படுவதால் உயர் மட்டத்தில் உள்ள அலுவலர்கள் அதனை கண்காணித்து பகுப்பாய்வு செய்ய உதவுகிறது. இந்த முறையில் தகவல் உள்ளீடு ஒரு முறை மட்டும் செய்யப்படுவதால் ஒவ்வொரு நிலையிலும் நேரம் சேமிக்கப்படுகிறது. தகவல் மேலாண்மை அமைப்புமூலம் பெறப்படும் அறிக்கைகள் எந்த நேரத்திலும் ஆய்வுக் கூட்டங்களின்போது பயன்படுத்தவும், முடிவெடுக்கும் முடிவுகளை மேம்படுத்தவும் இது உதவுகிறது. இதன் மூலம் நிர்வாகத்தின் செயல்பாடுகள் மேலும் மேம்படுத்தப்படுகிறது.


2.12 சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதைக் கடந்த ஆதரவற்ற மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது, அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், பெரும்பான்மையான

2019 ஜூலை 17]

மக்களுக்கு குறிப்பாக முதியோர்களுக்கும், மாற்றுத் திறனுடையவர்களுக்கும் சென்றடைய ஏதுவாக இத்திட்டத்திற்கான விதிமுறைகள் வெகுவாக தளர்த்தப்பட்டுள்ளது. *2019-2020*-ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.*4,060.54* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *31.03.2019* அன்று உள்ள பதிவுகளின்படி *29.50* இலட்சம் பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

31.03.2019- ஆம் நாளின்படி சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் திட்டவாரியாக பயனாளிகளின் எண்ணிக்கை



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2019 ஜூலை 17

அட்டவணை 2.4

மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு

வ. எண்.	திட்டத்தின் பெயர்	வயது	மத்திய அரசின் பங்கீடு	மாநில அரசின் பங்கீடு
			ரூபாயில்	
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	60 வயது முதல் 79 வயது வரை	200	800
		80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	500	500
2.	இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	18 வயது முதல் 79 வயது வரை	300	700
3.	இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	40 வயது முதல் 79 வயது வரை	300	700
4.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	-	1,000
5.	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	-	1,000
6.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	-	1,000
7.	ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்	30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	-	1,000
8.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	-	1,000
9.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதிய திட்டம்	60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	-	1,000

2.13 நிதிநிலை

நிலுவையிலுள்ள உதவித் தொகை பெறத் தகுதியுடைய நபர்கள் பயன்பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் தமிழக அரசு பயனாளிகளுக்கான உச்சவரம்பு எண்ணிக்கையை ரூ.29.20 இலட்சத்திலிருந்து ரூ. 29.80 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளது. மேலும், 2019-2020 நிதியாண்டிற்கு ரூ.4060.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019 ஜூலை 17]

2.14 தகுதி வரம்பு

பயனாளிகளின் நலனை கருத்திற் கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளை தளர்த்தி, வயது வந்த மகன்/ மகள் இருந்தாலும், அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருந்தால் ஒய்வூதியம் பெறும் வகையில் திருத்திய அரசாணை ஏப்ரல் 2015-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் வருமான உச்சவரம்பு ரூ.5,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு தற்பொழுது ரூ.50,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.27, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22.02.2016-ன்படி மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும் ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைத்தும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28.05.2018 வாயிலாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் பெற மாற்றுத் திறனாளிகளுக்கான ஆண்டு வருமானம் ரூபாய் 3 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஒய்வூதியத் திட்டங்களின்கீழ் ஒய்வூதியம் பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அட்டவணை 2.5

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிபந்தனைகள்	
1.	இந்திராகாந்தி முதியோர் ஒய்வூதிய தேசியத் திட்டம்	தகுதி	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.
		வருமானம்	வறுமைக் கோட்டிற்குக் கீழ்
		வயது	60 மற்றும் அதற்கு மேல்
2.	இந்திராகாந்தி விதவையர் ஒய்வூதிய தேசியத் திட்டம்	தகுதி	ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்
		வருமானம்	வறுமைக் கோட்டிற்குக் கீழ்
		வயது	40 மற்றும் அதற்கு மேல்

[2019 ஜூலை 17

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிபந்தனைகள்	
3.	இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	ஊனம் நிலை	80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்
		வருமானம்	வறுமைக் கோட்டிற்கு கீழ்
		வயது	18 வயது மற்றும் அதற்கு மேல்

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அட்டவணை 2.6

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள்	
1	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	தகுதி	வேலையற்றவராக இருத்தல் வேண்டும்.
		வருமானம்	தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
		வயது	18 மற்றும் அதற்கு மேல்
		ஊனம் நிலை	40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்.
2	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	தகுதி	ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.
		வயது	18 மற்றும் அதற்கு மேல்
		அசையா சொத்து	ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
3	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	தகுதி	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.
		வயது	60 மற்றும் அதற்கு மேல் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.
		அசையா சொத்து	ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள்	
4	ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்	தகுதி	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.
		வயது	30 மற்றும் அதற்கு மேல் சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும். அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
		அசையா சொத்து	ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
5	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	தகுதி	ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.
		வயது	50 மற்றும் அதற்கு மேல்
		அசையா சொத்து	ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

80 வயதைக் கடந்து ஓய்வூதியம் பெற்று வரும் 1.94 இலட்சம் பயனாளிகளின் சிரமத்தினை போக்கும் வகையில், அப்பயனாளிகளின் வீட்டிற்கே சென்று இந்திய அஞ்சல் துறையின் மின் பண அஞ்சல் (eMO) மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென, ஆண்டுக்கு ரூ.4.40 கோடி கூடுதலாக செலவிடப்படுகிறது.

2.15 ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் இதர பயன்கள்

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின்போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறும் 29.50 இலட்சம் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

2.16 ஓய்வூதியதாரர்களுக்கு அரிசி வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்கண்டவாறு விலையில்லா சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

[2019 ஜூலை 17

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

2.17 நிவாரணத் திட்டங்கள்

2.17.1 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் வருவாய் ஈட்டும் பிரதான நபர் இயற்கை மரணம் அடைந்து விட்டால், அக்குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், இறந்த நபரின் குடும்பத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த தொகையை ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/-ஆக உயர்த்தி 30.12.2015 முதல் வழங்கப்பட்டுவருகிறது.

2.17.2 விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தில் உள்ள நபர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.2 இலட்சமும், விபத்தினால் இறந்தால் ரூ.4 இலட்சமும் மற்றும் விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்படுமாயின் ரூ.1 இலட்சமும் வழங்கும் விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2019-2020 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2.18 பொங்கல் பண்டிகைக்காக வழங்கப்படும் விலையில்லா வேட்டி / சேலை வழங்கும் திட்டம்

தமிழக அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்காக விலையில்லா வேட்டி/ சேலை வழங்குதல் ஆகிய இரு நோக்கங்களுக்காக 1983 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களால் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2004 ஆம் ஆண்டு முதல் அரிசி அட்டை பெற்றுள்ள அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கடந்த 2012 ஆம்

2019 ஜூலை 17]

ஆண்டு முதல், இத்திட்டத்தின் பெயரான இலவச வேட்டி / சேலை வழங்கும் திட்டம் என்பதை மாற்றி, "விலையில்லா வேட்டி/ சேலை வழங்கும் திட்டம்" என பெயரிடப்பட்டு தொடர்ந்து இத்திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா வேட்டிகளும், சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.484.25 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1.56 கோடி விலையில்லா வேட்டிகளும், 1.56 கோடி விலையில்லா சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.18.1 தகுதி

விலையில்லா வேட்டி/ சேலை, அரிசி அட்டைதாரர்கள், கிராம கைவினைஞர்கள், மீனவர்கள், நிலமற்ற ஏழை விவசாயிகள், விவசாயம் சார்ந்த கூலி வேலை செய்பவர்கள், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குகீழ் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் இச்சேவை தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2.19 குறைதீர்வு முறைகள்

தமிழ்நாடு அரசு, பல்வேறு நலத் திட்டங்களை உயரிய நோக்கத்தில் நடைமுறைப்படுத்தி வந்தாலும், இத்திட்டங்களை மேலும் சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வாய்ப்புள்ளது.. பொதுமக்களின் குறைதீர்வு நடைமுறையை செம்மைப்படுத்த ஏதுவாக பல்வேறு கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையிலும் தமிழ்நாடு அரசு குறைதீர்வு நடைமுறைகளை முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகின்றது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்துத் துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து, குறைதீர்க்கும் முகாம் நடத்தி மனுக்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால், அரசின் சேவைகள் மிக எளிதாகவும், விரைவாகவும் மக்களைச் சென்றடைய வழிவகை செய்யப்படுகிறது.

2.19.1 மக்கள் குறைதீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமையும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும்

வட்டாட்சியர்கள், தங்களின் தலைமை இடங்களில் இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று, அவர்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ், மனுக்கள் பெறப்பட்ட நாள், தீர்வு செய்யப்பட்ட விவரம் மற்றும் நிலுவையில் உள்ள மனுக்கள் ஆகிய விவரங்கள் இதற்கென உருவாக்கப்பட்ட ஒரு மென்பொருள்மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலம், மனுக்களின் தற்போதைய நிலைமையை இணையதளம் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம்.

2.19.2 மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள்

அரசாணை (நிலை) எண்.300, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 21.08.2018-ன்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம், ஒவ்வொரு மாதமும் வருவாய்க் கோட்ட நிலை அலுவலர்களாலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வருவாய் நிருவாக ஆணையராலும் நடத்தப்பட்டு வருகிறது.

2.19.3 வட்ட அலுவலகங்களில் ஆன்லைன் மனு கண்காணிப்பு அமைப்பு (Taluk Online Petition Monitoring System)

அரசாணை (நிலை) எண்.29, வருவாய்த் [வநி.3(2)] துறை, நாள். 13.01.2016-ன்படி அனைத்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் பெறப்படும் பொதுமக்களின் குறைதீர்வு மனுக்களின் நிலையினை அறியவும், அம்மனுக்களுக்கு தீர்வு காணவும், மாநில அளவில் வலைத்தளம் அடிப்படையிலான பயன்பாட்டு மென்பொருள் (TOPMS) அனைத்து வட்டங்களிலும் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை, இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி மூலம் வட்ட அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மனுதாரர்கள் அறிய வழிவகை செய்கிறது. 01.04.2018 முதல் 31.03.2019 வரையில் 7,34,060 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 6,28,511 மனுக்கள்மீது தீர்வு காணப்பட்டுள்ளது.

2.20 மக்கள் தொடர்பு முகாம் திட்டம்

அரசின் நலத் திட்டங்கள் அனைத்தும் மாவட்டத்தில் உள்ள கடைக்கோடி கிராமங்களில் வாழும் அனைத்து மக்களையும்

2019 ஜூலை 17]

சென்றடைய வேண்டும் என்ற அரசின் உயரிய குறிக்கோளுக்கிணங்க, மனுநீதிநாள் முகாம் திட்டமானது தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது புதன் கிழமைகளில் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், சுகாதாரத் துறை, வேளாண் துறை, தோட்டக்கலை துறை, கால்நடைத் துறை, சமுகநலத் துறை மற்றும் பிற துறைகளில் மாவட்ட நிலை அலுவலர்கள் ஒரு குழுவாக சென்று மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல் இதர அரசு சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முகாம்களை மேலும் பயனுள்ளதாக செயல்படுத்த, அரசாணை (நிலை) எண் 244, வருவாய் [வநி.3(2)] துறை, நாள். 08.08.2011-ன்படி, 1) தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), 2) வருவாய் கோட்ட அலுவலர், 3) மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு மனுக்களைப் பெறுவதற்காக, மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று அனுப்பி வைக்கப்படுகிறது. பெறப்பட்ட மனுக்கள், தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான இறுதி ஆணைகள் மக்கள் தொடர்பு முகாம் நாளன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்முகாம்களிலேயே முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள் மற்றும் இதர அரசு நலத் திட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முகாம் நாளன்று அரசுத் துறை அலுவலர்களால் தங்கள் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எளிதில் அறிந்து கொண்டு மக்கள் பயன் அடையும் வகையில் கண்காட்சி, விளக்கப்படங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்படுகின்றது.

2.21 அம்மா திட்டம்

அம்மா திட்டம் அனைத்து கிராமங்களிலும், அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் உன்னதமான திட்டமாக அரசாணை (நிலை) எண்.70, வருவாய்த் [வநி.3(2)] துறை, நாள் 04.03.2013-ன்படி, முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், கடந்த 24.02.2013 முதல், வருவாய்த் துறையினரால்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் மிகச்சிறந்த ஆளுமைக்கான விருது (Best Practices Award for improvement of Quality Delivery System Ensuring Good Governance) அம்மா திட்டத்திற்கு, முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால், அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு மக்களின் குறைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.

மேலும், செப்டம்பர் 2016 முதல், இம்முகாம்களில் மக்கள் கூடுதலாக பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம்கள், கால்நடை மருத்துவ முகாம்கள், பிரதம மந்திரியின் பசல்பீமா யோஜனா (பயிர் காப்பீடு) திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் சேர்த்தல், ஆதார் பதிவுகள் மற்றும் தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தும் அம்மா திட்ட முகாம்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அம்மா திட்ட முகாம்களில் பெறப்பட்ட மனுக்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

அட்டவணை 2.7

சாதனைகள்

வருடம்	முகாம் நடத்தப்பட்டது	பெறப்பட்ட மனுக்கள்	தீர்வு காணப்பட்ட மனுக்கள்	நடவடிக்கையில் உள்ளவை
2012-2013	2,620	1,50,112	1,50,112	0
2013-2014	14,989	40,91,672	40,91,672	0
2014-2015	7,455	4,15,699	4,15,699	0
2015-2016	8,274	5,30,458	5,30,458	0
2016-2017	11,022	6,63,793	6,63,793	0
2017-2018	9,824	3,08,244	3,08,244	0
2018-2019	6,185	1,81,206	1,77,816	3,390
மொத்தம்	60,369	63,41,184	63,37,794	3,390

2.22 நிதி

அம்மா திட்ட முகாம்கள் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து இதுவரையில் முகாம்கள் நடத்துவதற்கென 14.63 கோடி ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

2019 ஜூலை 17]

2.23 தகவல் தொழில் நுட்பம்மூலம் மேம்படுத்தப்பட்ட சேவைகள்

வருவாய்த் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில், சான்றிதழ்கள் வழங்கும் பணி மிகவும் முக்கியமான பணியாகும். சான்றிதழ்கள் வழங்கும் பணியை துரிதப்படுத்தவும், எளிமையான முறைகளைக் கொண்டு மக்கள் விரைவாக சான்றிதழ்கள் பெறவும், தமிழ்நாடு அரசு தகவல் தொழில்நுட்ப சேவைகளை வருவாய்த் துறையோடு ஒருங்கிணைந்து மின்னணு சான்றிதழ்கள் வழங்கி வருகிறது. மேற்படி, தகவல் தொழில்நுட்ப சேவைகள், உயிர் புள்ளியியல் பதிவு செய்தல் (பயோமெட்ரிக்) குறியீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.24 பள்ளிகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் மூலம் மாணவர்களுக்கு பள்ளி சேர்க்கை மற்றும் உதவித்தொகை பெறுவதற்கு தேவைப்படும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது. மூவகைச் சான்றிதழ் அதாவது வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை பள்ளிகள் மூலமாகவே இணையவழியில் மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் சான்றிதழ்கள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 2018-2019 ஆம் கல்வி ஆண்டில், 6-ஆம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு இணையதளம் வாயிலாக அந்தந்த பள்ளிகள் மூலம் 36,470 சான்றிதழ்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.8

வ. எண்	ஆண்டு	சான்றிதழ்	பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள்
01	1.4.2018 முதல் 31.03.2019 வரை	வருமானம்	10,227
02		பிறப்பிடம்	9,427
03		சாதி	16,816
		மொத்தம்	36,470

[2019 ஜூலை 17

2.25 மின்னணு சான்றிதழ்கள்

வருவாய்த் துறையினை நாடி வரும் பொதுமக்களுக்கு விரைவான சேவையினை அளித்திடும் வகையில், தகவல் தொழில் நுட்பத் துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியோடு அனைத்து மாவட்டங்களிலும் மின் ஆளுமைத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநிலமெங்கும் உள்ள 12,072 பொது சேவை மையங்களில் (Common Service Centres) சாதி, வருமானம், இருப்பிடம், முதல் தலைமுறை பட்டதாரி மற்றும் ஆதரவற்ற பெண்கள் போன்ற ஐந்து வகையான சான்றிதழ்களை மின்னணு முறையில் பெறுவதற்கான விண்ணப்பங்களை அளிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை (நிலை) எண். 260, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி 3(2)] துறை, நாள் 17.08.2017-இன்படி, கூடுதலாக கீழ்கண்ட 15 சேவைகள் மின்னாளுமை திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

1) விவசாய வருமான சான்றிதழ்
2) சிறு/ குறு விவசாயி சான்றிதழ்
3) கலப்புத் திருமணச் சான்றிதழ்
4) விதவைச் சான்றிதழ்
5) வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்
6) குடிபெயர்வு சான்றிதழ்
7) இயற்கை இடர்பாடுகளினால் மாணவர்கள் பள்ளி (ம) கல்லூரி சான்றிதழ்களை இழந்தமையை உறுதி செய்யும் சான்றிதழ்
8) ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்
9) திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்
10) வாரிசு சான்றிதழ்
11) வசிப்பிடச் சான்றிதழ்
12) சொத்து மதிப்பு சான்றிதழ்
13) அடகு வணிகர் உரிமம் சான்றிதழ்
14) கடன் கொடுப்போர் உரிமம் மற்றும்
15) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ்

2019 ஜூலை 17]

மேற்கண்ட சேவைகளை இ-சேவை மையம் வழியாக இணையதளம் மூலம் பெறும் திட்டம் 01.03.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது. 01.04.2018 முதல் 31.03.2019 வரை 73,44,112 சான்றிதழ்கள் மின்னாளுமைத் திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டுள்ளன.

2.26 தேசிய மக்கள் தொகை பதிவேடு - உயிர் புள்ளியியல் பதிவு செய்தல்

இந்திய நாட்டில் வசிப்பவர்களுக்கு எங்கும், எப்பொழுதும் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவ அடையாள அட்டை அளிக்கும் வகையில் தேசிய மக்கள் தொகை பதிவேடு - உயிர்ப்புள்ளியியல் பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதில், புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரைப் படல அமைப்பு (உயிர்ப்புள்ளியியல்) ஆகியவை (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு) பல்வேறு கட்டங்களாகப் பதிவு செய்யப்பட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இப்பணி, 30.09.2016 வரை பாரத மின்னணுக் கழகம் (பெங்களூரு) நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. தற்போது 01.10.2016 முதல் அரசாணை (நிலை) எண்.10, தகவல் தொலை தொடர்பு துறை, நாள் 1.10.2016-ன்படி தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் இப்பணி முன்னேற்றமானது மாநிலம் முழுவதும் கண்காணிக்கப்படுகிறது.

தமிழகத்தில் இதுவரை 7,92,54,381 நபர்களுக்கு உயிர்ப் புள்ளியியல் கணக்கெடுப்பு பதிவு பணி முடிக்கப்பட்டு, அவர்களில் 7,68,68,475 நபர்களுக்கு தனித்துவ அடையாள எண் (ஆதார் எண்) வழங்கப்பட்டுள்ளது. அதாவது, 96.99 சதவிகித நபர்களுக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 0-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உயிர்ப்புள்ளியியல் கணக்கெடுப்புப் பணி 10.03.2017 முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.27 மக்கள் தொகை கணக்கெடுப்பு

இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872-ல் தொடங்கப்பட்டு, 1881 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுக்கு ஒருமுறை

தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 15-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-இல் நடைபெற்றது. 2021-ல் நடைபெற இருப்பது இந்தியாவின் 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பும் சுதந்திர இந்தியாவின் 8-வது மக்கள் தொகை கணக்கெடுப்புமாகும். 2021-ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகள் மத்திய அரசு பல்வேறு அமைச்சகங்களுடன் கலந்தாலோசித்து இப்பணி துவங்குவதற்கான ஆயத்த பணிகளை முடித்துள்ளது. தமிழ்நாட்டில் இக்கணக்கெடுப்புப் பணி தொடர்பாக தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரை தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரை வழங்கும் குழுவில் (Technical Advisory Committee) உறுப்பினராக சேர்த்து அரசாணை எண் 62, பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 18.1.2019-ல் ஆணை வெளியிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை மாதிரி கணக்கெடுப்பு நடத்துவதற்காக சிவகங்கை மாவட்டத்திலுள்ள இளையாங்குடி கிராமத்தில் 90 கணக்கெடுப்பு வட்டாரங்களும், நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூர் கிராமத்தில் 64 கணக்கெடுப்பு வட்டாரங்களும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகர் நகராட்சியில் 139 கணக்கெடுப்பு வட்டாரங்களும் தேர்தெடுக்கப்பட்டுள்ளன.

2.3 பேரிடர் மேலாண்மை

தமிழ்நாடு, கடந்த காலங்களில், குறிப்பாக 2004 ஆம் ஆண்டில் ஆழிப் பேரலை, 2011-ல் தானே புயல், 2016 இல் வார்தா புயல், 2017 இல் ஒகி புயல், 2018-இல் கஜா புயல், 2015 இல் முன்னெப்பொழுதும் கண்டிராத பெரு வெள்ளம், 2017 இல் இடைவிடாத மழை மற்றும் 2016 பருவ காலத்தில் மழை பொய்த்ததால், 2017-இல் நிலவிய கடுமையான வறட்சி, 2018 வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால், 2019-இல் நீரியல் வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களை எதிர்கொண்டது. மேலும், தமிழகத்தின் புவியியல் அமைப்பானது மின்னல், காட்டுத்தீ, கடல் அரிப்பு போன்ற பேரிடர்களும் தமிழகத்தில் இயல்பாகவே ஏற்பட வழிவகுக்கிறது. இப்பேரிடர் மேலாண்மையானது, மிகவும் சிக்கலானதாகவும், ஆயத்த நிலை, மீட்பு, சீரமைப்பு மற்றும் அபாய தணிப்பு ஆகிய அனைத்து நிலைகளிலும் கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது.

2019 ஜூலை 17]

பேரிடர் குறித்தான முன்னெச்சரிக்கை, மீட்பு, நிவாரணம், மறுவாழ்வு மற்றும் அபாய தணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்வதில் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் மிக முக்கிய பங்காற்றி வருகிறது. மேலும், பேரிடர் அபாய குறைப்பு கொள்கைகளை வகுப்பதும் செயல்படுத்துவதும் இதன் பொறுப்பாகும். பேரிடர் தணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற துறைகளுக்கு வழி காட்டுதல், பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் அபாயங்களை குறைத்திட, பேரிடர் அபாய குறைப்பு பிரச்சினைகளை வளர்ச்சி பணிகளாக பிரதானப்படுத்துதல் போன்ற பணிகளை இவ்வாணையரகம் மேற்கொள்கிறது.

2.3.1 பேரிடர் குறைப்பு ஆளுமை

தேசிய, மாநில, மாவட்ட மற்றும் ஊரக அளவில் பேரிடர் மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள வரையறுக்கப்பட்ட அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகள் குறித்து பேரிடர் மேலாண்மை சட்டம், 2005 வழங்குகிறது. இந்த சட்டத்தின்படி தேசிய அளவில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அளவில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (TNSDMA) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் (DDMAs) அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளை மையமாகக் கொண்டு செயல்படும் அணுகுமுறையிலிருந்து, பேரிடர் அபாயம் குறித்த மதிப்பீடு, அபாய தகவல் தொடர்பு, பேரிடர் முன்னெச்சரிக்கை, தணிப்பு மற்றும் திறன்மிகு உடனடி அவசரகால மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதும் சென்டாய் கூட்டமைப்பில் உள்ளடக்கிய இலக்குகளை அடைவதற்கு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு மாற்றிட இவ்வமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2.3.2 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

மாநில அளவில் பேரிடர் மேலாண்மை சார்ந்த பணிகளை மேற்கொள்வது மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பொறுப்பாகும். இவ்வாணையத்தின் செயல்பாடுகளை மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு அபாய குறைப்பு முகமை, மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் பிற துறைகள் உறுதுணையாக உள்ளன.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
- அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி உறுப்பினர்
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர்
- நிதித் துறை செயலாளர்
- உள் துறை செயலாளர்
- உயர் கல்வித் துறை செயலாளர்
- பள்ளிக் கல்வித் துறை செயலாளர்
- மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்
- அண்ணா பல்கலைக்கழக பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையத்தின் இயக்குநர், சென்னை
- இந்திய தொழில்நுட்ப கழகத்தின் கட்டட பொறியியல் துறையின் தலைவர், மெட்ராஸ்.

இவ்வாணையமானது, கொள்கை உருவாக்கத்திற்கான வழிகாட்டுதல், மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து முக்கிய செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

2.3.3 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018 - 2030

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், சென்டாய் கூட்டமைப்பின் காலத்துடன் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலைக்கேற்ப முறையான அணுகுமுறை, ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் பேரிடர் அபாயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன்மூலம் மாநிலத்தின் வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டு பாதுகாப்பான, பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையிலான தமிழகத்தை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2019 ஜூலை 17]

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018-2030 ஆனது சென்டாய் கூட்டமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பேரிடர் அபாய குறைப்பு, நீடித்த நிலையான குறிக்கோள், பருவ மாற்ற ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை மற்றும் பிரதமரின் 10 அம்ச நிகழ்ச்சி நிரலினை முதன்மையாக கொண்டுள்ளது. இத்திட்டமானது, பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 (பிரிவு 23, உட்பிரிவு 4) மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டமானது, மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள், அரசு துறைகள், சிவில் சமூகங்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களிடம் பெறப்பட்ட விரிவான அறிக்கையின்படி உருவாக்கப்பட்டுள்ளது.

இயற்கை மற்றும் நீர் வளங்களை உள்ளடக்கிய நீர் பிடிப்பு பகுதிகளை கருத்தில் கொள்வது, ஆற்றுப்படுகைகளின் விரிவான மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ள இடங்களையும், விவசாய வளங்களையும் நிலையான மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பாதுகாப்பது, பேரிடர் குறைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதன்மூலம் வளர்ச்சியை மேம்படுத்துவது, பேரிடர்களால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவை இத்திட்டத்தின் முக்கியத்துவங்களாகும்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டத்தில் பின்வரும் 14 இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன:

1. *வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் பொது மக்கள் பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையில் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத விரிவானதொரு வெள்ளத் தடுப்பு திட்டத்தினை குறிப்பாக திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உருவாக்குதல்.*
2. *சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சிறப்பு கவனம் செலுத்துவதன்மூலம் நகர்ப்புற வெள்ள அபாயத்தை குறைத்தல்.*
3. *பருவநிலை மாற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ள டெல்டா பாசன விவசாயிகளின் திறனை மேம்படுத்துதல்.*

[2019 ஜூலை 17

4. நிலத்தடி நீரினை மிக அதிகமாக / அதிகமாக பயன்படுத்தும் வட்டாரங்களில் உள்ள நீர்த்தேக்கங்களை மீள நிரப்பி பாதுகாப்பான இனத்திற்கு கொண்டு செல்லுதல்.

5. சுற்றுச்சூழல் ரீதியாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய குறிப்பாக பள்ளிக்கரணை, எண்ணூர் மற்றும் மன்னார் வளைகுடா போன்ற பகுதிகளிலுள்ள ஈரமான மற்றும் சதுப்பு நிலங்களை மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல்.

6. கடல் நீர் ஊடுருவல்மூலம் பாதிக்கப்படும் இடங்களை மீட்டெடுத்தல் மற்றும் கடல் நீர் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் குறிப்பாக சென்னை, திருவள்ளூர் மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

7. கடலோர மாவட்டங்களில், வெள்ளம் மற்றும் புயல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள உயிரி கேடயங்களை மேம்படுத்துதல்.

8. நீர் நிலைகளை மீட்டெடுத்தல் மற்றும் வலுப்படுத்துதல், வெள்ளம் மற்றும் வறட்சியை சமாளிப்பதற்கு நீர் நிலைகளைத் தூர்வாரி நீர் நிலைகளின் கொள்ளளவை மேம்படுத்துதல்.

9. மழை குறைவாக பெறும் மாவட்டங்களான இராமநாதபுரம், திண்டுக்கல், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தருமபுரி, நாமக்கல் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் நிலையான விவசாய முறைகளை மேம்படுத்துதல்.

10. பொதுவாக ஏற்படக்கூடிய நிலச்சரிவுகள், காட்டு தீ போன்ற பேரிடர்களால் நீலகிரி, கோயம்பத்தூர், ஈரோடு, தேனி, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், திண்டுக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்படும் அபாயங்களை குறைக்க தனி கவனம் செலுத்துதல்.

11. பலதரப்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கு பெறுவதை அதிகரித்தல், குறிப்பாக சமூக பங்கேற்பினை மேம்படுத்துதல்.

12. கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளை வலுப்படுத்தி மனிதனால் ஏற்படும் பேரிடர் மற்றும் இயற்கை பேரழிவுகளின் ஆபத்துக்களை குறைத்தல்.

2019 ஜூலை 17]

13. *குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் வெள்ள அபாயம் மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் இழப்புகளையும் கடல் ஊடுருவலையும் குறைக்க நீர் பாசன மற்றும் வடிகால்களுக்கு ஏற்ப நீரியல் உட்கட்டமைப்பை உருவாக்குதல்.*

14. *இரசாயனம், உயிரியியல், கதிரியக்கம், அணுசக்தி (CBRN) ஆகியவற்றாலும் மனிதர்களாலும் ஏற்படும் பேரிடர்களை நிர்வகிப்பதற்கான திறனை உருவாக்குதல்.*

மேற்படி இலக்குகளை எட்டுவதற்காக கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நீண்ட கால தணிப்பு நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

2.3.4 மாநில செயலாக்கக் குழு

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவும் வகையில் தலைமைச் செயலாளரை தலைவராகவும், நிதித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் துறை ஆகியவற்றின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில செயலாக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, குழுவின் கூட்டத்தில் மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வார். மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களைச் செயல்படுத்துவதும், பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியை கையாள்வது குறித்து மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதும், மாநில செயலாக்கக் குழுவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இக்குழு, பேரிடர் காலங்களில் உடனடியாக நிவாரண பணிகள் மேற்கொள்வதற்கும், உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் மீட்பு பணிகளுக்குத் தேவையான தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கும் நிதி வழங்கிட அதிகாரம் பெற்றுள்ளது.

2.3.5 மாநில ஆலோசனைக் குழு

மாநில ஆலோசனைக் குழு, கூடுதல் தலைமை செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரை தலைவராகக் கொண்டும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூடுதல் தலைமைச் செயலாளரை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான குழு பல்வேறு துறை

சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கியதாகும். இக்குழு, பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

2.3.6 பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு (IRS)

பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பானது பேரிடர் காலங்களில், அரசு, தனியார் துறை மற்றும் அரசு சாரா அமைப்புகள் என அனைத்து நிலைகளிலும் உள்ள அமைப்புகளை ஒருங்கிணைத்து வழிநடத்துகிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு (IRS) ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின்மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு குறித்து பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இவ்வமைப்பின் தலைமை பொறுப்பாளராக மாநில தலைமைச் செயலாளரும், இன்சிடன்ட் கமாண்டராக வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையரும் செயல்படுவார்கள். மாநில அளவில் இன்சிடன்ட் கமாண்டருக்கு உதவி புரிய துணை இன்சிடன்ட் கமாண்டராக, இயக்குநர், பேரிடர் மேலாண்மை செயல்படுவார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் இன்சிடன்ட் கமாண்டராக செயல்படுவார்.

2.3.7 தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை (முன்னர் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் 09.01.2014 அன்று உருவாக்கப்பட்டது. இம்முகமையின் ஆட்சிக் குழு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைத் தலைமையாகக் கொண்டு நடத்தப்படுகின்றது. இம்முகமையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் செயலாக்க குழுவின் தலைவராகவும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்பட்டு வருகின்றனர். கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையரின் முழுக் கண்காணிப்பில் இயங்கும் இம்முகமையானது தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க அமைப்பாக செயல்படுகிறது.

2019 ஜூலை 17]

2.3.8 மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமானது, மத்திய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2.3.9 பேரிடர் அபாய மதிப்பீடு

தமிழ்நாடு எதிர்கொள்ளும் பேரிடர்கள் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் பொது மக்கள்மீது அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய, அரசு கீழ்கண்ட அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

2.3.9.1 மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம் (SDMC)

இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் முன்கணிப்பு மையம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை வளர்ப்பு, ஊரக வளர்ச்சி, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் மின்சாரத் துறை ஆகியவற்றின் உள்ளீடுகளை பெற்று வறட்சி ஏற்படுத்தும் காரணிகளை அறிவியல் ரீதியாக அறிந்துகொள்ள வறட்சி கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டது.

2.3.9.2 மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம் (DDMC)

மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒரு அங்கமாக செயல்படும் வகையில் மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் மாவட்ட வறட்சி கண்காணிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையமானது, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலும், அவரது கட்டுப்பாட்டின் கீழும் செயல்படும்.

2.3.10 புவிசார் தகவல் மையம்

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமையில் புவிசார் தகவல் மையம் (GIS) அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. புவிசார் தகவல் மையமானது, தேசிய அவசர மேலாண்மை தரவுகள் (NDEM) வழியில் மாநில அவசர மேலாண்மை தரவுகளை (SDEM) உருவாக்கிட வழிவகுக்கும். பேரிடர் மேலாண்மையில், முடிவு ஆதார அமைப்பினை (Decision Support Systems) ஏற்படுத்தவும், மாநில அவசர மேலாண்மை தரவுகளில் பேரிடர் தொடர்பான

குறிப்பிட்ட தகவல்களை பதிவேற்றம் செய்யவும், புயல் சீற்ற மாதிரியினை ஒருங்கிணைக்கவும், பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையம், தொலை உணர்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை ஆகிய நிறுவனங்களுடன் தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை கூட்டு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஐந்து வருட காலத்திற்கான இந்த கூட்டு ஒப்பந்தம் ரூ.350.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை உள்ளடக்கியதாகும்.

2.3.11 ஆளில்லா வானூர்தி மூலம் வான்வழி புகைப்படவியல் ஆய்வு (UAV)

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 10.07.2017 அன்று சட்டப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசு, ரூ.694.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழகத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான வான்வழி புகைப்படவியல் ஆளில்லா வானூர்திமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம், மாநிலத்தில் 5,650 சதுர கி.மீ. பரப்பளவிலான நீர் வழித்தடங்களில் புகைப்படங்கள் எடுக்க வான்வெளி ஆய்வு மையம், சென்னை தொழில்நுட்ப நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகம்மூலம் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். கடலூர் மாவட்டத்தில் உள்ள கெடிலம், வெள்ளாறு, பெண்ணையாறு மற்றும் பரவனாறு ஆகிய 4 ஆற்றுப்படுகைகளில் 697 சதுர கி.மீ. பரப்பிலும், மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள குண்டாறு ஆற்றுப்படுகையில் முறையே 221 சதுர கி.மீ., 134 சதுர கி.மீ., 99 சதுர கி.மீ., மற்றும் 50 சதுர கி.மீ., பரப்பிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கொரம்பள்ளம் மற்றும் தாமிரபரணி ஆற்றுப்படுகைகளில் 363 சதுர கி.மீ. பரப்பிலும், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள காவேரி, வெண்ணாறு மற்றும் அதன் 16 கிளையாறுகளில் 918 சதுர கி.மீ., பரப்பிலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வெண்ணாறு மற்றும் அதன் 6 கிளையாறுகளில் 441 சதுர கி.மீ. பரப்பிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அக்னியாறு, மகாராஜா சமுத்திரம், காட்டாறு ஆற்றுப்படுகைகளில் 283 சதுர கி.மீ. பரப்பிலும் என இதுவரை 3,207.9 சதுர கி.மீ. பரப்பளவில் வான்வெளி அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

2019 ஜூலை 17]

2.3.12 பல்வகை பேரிடர்களின் அதீத தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் திட்டம் (TNSMART)

வானிலை முன்னறிவிப்பு தொடர்பான தகவல்களின் அடிப்படையில், பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் தாக்கத்தை அளவிட்டு அதனடிப்படையில் அவசரகால மீட்பு முன்னேற்பாடுகளை முறைப்படுத்தும் திட்டம் (TN-SMART) ஒன்றினை செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஆப்பிரிக்க மற்றும் ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்பின் (RIMES) மூலம் செயல்படுத்தப்படும்.

TN-SMART செயலியானது (Mobile App) மூன்றடுக்கு முடிவு ஆதார அமைப்பினை கொண்டதாகும். இது, பேரிடர் மேலாண்மையின் அங்கங்களான முன்னேற்பாடு, மீட்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய 11 தொகுதிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பேரிடரின் தாக்கம், பேரிடர் தொடர்பான ஆபத்துகளை செயலிமூலம் தெரிவித்தல், அபாய அழைப்புகளைப் பதிவு செய்து அதனை கண்காணித்தல், பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பாதிப்புக்குள்ளாகும் இடங்களில், இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையின் மழை முன்னறிவிப்பை கொண்டும், முந்தைய காலத்தில் பெய்த மழையளவு, நீர் நிலைகளில் உள்ள நீரின் அளவு ஆகியவற்றை கொண்டும் சாத்தியமான வெள்ள அபாயத்தினை இத்திட்டம் மதிப்பீடு செய்கிறது. மேலும், பேரிடர்களின் ஆபத்துகளை கணிக்கவும், அவை செயலி மூலம், களநிலை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து வெள்ள அபாயத்தினைக் குறைக்கவும் இச்செயலி உதவும்.

இந்தச் செயலி மாறுப்பட்ட எச்சரிக்கை அமைப்பை கொண்டது. கைபேசி அமைதியான நிலையில் இருந்தாலும் எச்சரிக்கை அறிவிப்பு ஒலி எழுப்பக்கூடிய வகையில் இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த எச்சரிக்கை அறிவிப்பு ஒலி பயனர் எச்சரிக்கை செய்தியினைக் காணும் வரை ஒலித்துக்கொண்டிருக்கும். உரிய

நேரத்தில் அளிக்கப்படும் முன்னெச்சரிக்கையால், சுனாமி, புயல் மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர்களால் ஏற்படும் உயிரிழப்புகள் தவிர்க்கப்படுவதை இந்தச் செயலி உறுதி செய்கிறது. இந்தச் செயலி மூலம் பொதுமக்கள் பேரிடர் தொடர்பான புகார்களைப் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள், தொடர்புடைய அலுவலர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுவதையும், அனுப்பப்பட்ட புகார் மீதான நடவடிக்கை விவரத்தையும் கண்காணிக்கலாம். பேரிடர் அபாய குறைப்பினை உறுதி செய்திட, சென்டாய் (Sendai Frame Work) கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018-2030 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய முன்னுரிமை இனங்களை பின்பற்றி இத்திட்டத்தின் தொகுதிகள் (Modules), மாநிலத்தின் நீண்ட கால இலக்குகளை அடைவதைக் கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.3.13 சென்னை வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு (C-FLOWS)

கடலோர வெள்ள முன்னெச்சரிக்கை தொடர்புடைய பகுதிகளுக்கு நீரியக்க விசை சார்ந்த மாதிரியின் அடிப்படையில் தொழில் நுட்ப உதவி வழங்கவும், பல்வேறு பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு முன்னெச்சரிக்கை வழங்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கடல் அலை உயரம், மாநகராட்சிக்கு நீர்வழங்கும் நீர்நிலைகள் மற்றும் மாநகராட்சியின் வழியாக செல்லும் அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் ஆகியவற்றின் நீரின் அளவு போன்ற உள்ளீடுகளைக் கருத்தில் கொண்டு அதிகப்படியான மழையளவினை கண்காணித்து இவ்வமைப்பு முன்னெச்சரிக்கை வழங்கும். இவ்வமைப்பானது TN-SMART அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படும்.

2.3.14 பேரிடர் அபாய தகவல் தொடர்பு

இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம் போன்ற அமைப்புகளிடமிருந்து பெறப்படும் கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான எச்சரிக்கை தகவல்கள் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றின் மூலம் பொதுமக்கள், மீட்பு மற்றும் நிவாரணம் வழங்குதல்

2019 ஜூலை 17]

போன்ற செயல்களில் ஈடுபடும் முகமைகள் மற்றும் பிற பேரிடர் மேலாண்மை சார்ந்த பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கப்படும். இருப்பினும், இன்சிடன்ட் கமாண்டர் அனைத்து விதமான தகவல் தொடர்பு முறைகளையும் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்கு தகவல்கள் சென்றடைய வழிவகை செய்வார்.

2.3.15 மாநில அவசர கட்டுப்பாட்டு மையம்

சென்னையில் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம், தகவல் தொடர்பு மையமாக வருவாய் நிருவாக ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றது. இந்திய வானிலை ஆய்வு மையம், மத்திய நீர் வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம் ஆகிய அமைப்புகளிலிருந்து வரும் முன்னறிவிப்புகள்/ எச்சரிக்கைகளை உயர் அதிகாரிகளின் மேற்பார்வையில் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள் மூலம் மாவட்ட நிருவாகங்களுக்கும் மற்றும் ஊடகங்கள்மூலம் பொது மக்களுக்கும் கொண்டு சேர்க்கின்றது. பேரிடர் காலங்களில், தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் மூத்த அதிகாரிகளின் துணையோடு 24 மணி நேரமும் செயல்பட்டு, முன்னெச்சரிக்கை தகவல்களை மிகத்துரிதமாக அனுப்புகின்றது. பொதுமக்கள் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசிமூலம் இம்மையங்களைத் தொடர்பு கொள்ள முடியும். மேலும், இம்மையம் மழைப்பொழிவு, புயல், வெள்ளம், வறட்சி மற்றும் நிலநடுக்கம் குறித்த முன்னறிவிப்பு தகவல்களை தொடர்புடைய அமைப்புகளிடமிருந்து பெற்று மாவட்ட நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகளுக்கு உடனுக்குடன் அனுப்புகின்றது.

பெரும் பேரிடர் காலங்களில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆகியோருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், மக்களின் பாதுகாப்பு, மீட்பு, நிவாரணம், மறுசீரமைப்பு பற்றிய விழிப்புணர்வு குறித்தும் ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரிவிப்பார்கள். கஜா புயலின் போது மாநில அவசர கட்டுபாட்டு மையத்தின் மூலமாக பேரிடர் தொடர்பான எச்சரிக்கைகள் உரிய நேரத்தில்

கொடுக்கப்பட்டு தாழ்வான பகுதிகளில் வசித்த 81,948 மக்களை பாதுகாப்பாக வெளியேற்றி நிவாரண முகாம்களில் தங்க வைத்ததன் மூலமாக பெருமளவிலான உயிர்ச்சேதம் குறைக்கப்பட்டது.

2.3.16 மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம்

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின்கீழ் செயல்படுகின்றன. இம்மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், அம்மாவட்டத்திலுள்ள வட்டார மற்றும் கிராம அளவிலான பேரிடர் தொடர்பாக தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் மறு சீரமைப்புப் பணிகளை செயல்படுத்திட, மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் அவசர காலச் செய்திகள், எச்சரிக்கைகளை உடனுக்குடன் மக்களுக்கு தெரிவிக்கின்றன.

இம்மையம், பேரிடர் காலங்களில், அனைத்து துறை அலுவலர்களை பணியில் அமர்த்தி வட்ட அளவிலான பேரிடர் செயல்பாடுகளான தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை கண்காணித்து, வரப்பெற்ற அறிக்கைகளை தொகுத்து வருவாய் நிருவாக ஆணையர்/மாநில நிவாரண ஆணையருக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது. 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் பொதுமக்கள் இம்மையங்களை தொடர்பு கொள்ள முடியும்.

2.3.17 தேடுதல் மற்றும் மீட்பு சாதனங்கள்

2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.69.12 கோடி மதிப்பீட்டில், உயரமான ஏணிகள், வாட்டர் பவுசர், நீர் இறைப்பான்கள், மரம் அறுப்பான்கள், ஜெனரேட்டர்கள், மீட்பு படகுகள், தீயணைப்பு மற்றும் மீட்பு ஊர்திகள் மற்றும் இதர தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவை கொள்முதல் செய்திட தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் இதர துறைகளுக்கு நிதி வழங்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

2.3.18 தகவல் தொடர்பு சாதனங்கள்

கடலோர மாவட்ட நிருவாகங்கள் மற்றும் ஆழ்கடலில் குழுக்களாக மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு பேரிடர்கள் குறித்து எச்சரிக்கை தகவல்களைத் தெரிவிக்கும் பொருட்டு ரூ.3.10 கோடி செலவில் Satellite Phone, NavIC and NAVTEX என்ற மூன்று

2019 ஜூலை 17]

விதமான தொலைத்தொடர்பு சாதனங்கள் மீனவளத்துறைமூலம் வழங்கப்பட்டுள்ளன. ஒரு குழுவிற்கு 10 முதல் 15 வரையிலான படகுகள் வீதம் 80 குழுக்களாக மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்க செல்கின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் 2 Satellite Phone-*கள்,* 3 NavIC *கருவிகள்,* 2 NAVTEX *கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

2.3.19 மின்னல் மற்றும் இடி முன்னெச்சரிக்கை

புனேவில் உள்ள இந்திய வானிலை மையம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் ரூ.80 இலட்சம் செலவில் மின்னல் மற்றும் இடி குறித்த முன்னெச்சரிக்கை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் 1,190 குறுவட்டங்களில் (Firka) *தொலைத்தொடர்பு முறையில்* (Telemetric) *இயங்கிடும் மழைமானிகள் பலகட்டங்களில் நிறுவப்பட உள்ளன.*

2.4 பேரிடர் ஆயத்தநிலை

பேரிடர் மேலாண்மையில், ஆயத்தப் பணிகளை மேற்கொள்வது என்பது ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. வடகிழக்குப் பருவமழை காலத்தில் ஒரு புறம் கடும் புயல் மற்றும் கனமழை காரணமாக ஏற்படக்கூடிய வெள்ளப் பெருக்கு, மறுபுறம் பருவ மழை பொய்த்ததால் ஏற்படக்கூடிய வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்ள முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் முக்கிய நடவடிக்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

2.4.1 ஆயத்த கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள்

அ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் வடகிழக்குப் பருவமழை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்துவார்கள். பின்னர் தொடர் ஆய்வுக் கூட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் ஆயத்த பணிகளை உன்னிப்பாக கண்காணிப்பார்கள்.

ஆ) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையர் ஆகியோருடன் இணைந்து பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்களை

பார்வையிட்டு, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை மற்றும் ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்வார்கள்.

இ) தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்துத் துறைகள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களை அழைத்து ஆயத்த நிலை குறித்து ஆய்வு மேற்கொள்வார். குறுகிய கால இடைவெளியில் வழங்கப்படும் அறிவிப்புக்கேற்ப மத்திய படைகளை, தேடுதல், மீட்பு மற்றும் வெளியேற்றப் பணிகளில் ஈடுபடுத்திடும் வகையில் தயார் நிலையில் இருக்கும்படி அறிவுறுத்துவார்கள்.

ஈ) கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள பிற துறை அலுவலர்களுக்கு, வடகிழக்குப் பருவமழையினை எதிர்கொள்ள, மேற்கொள்ள வேண்டிய ஆயத்தப் பணிகள் குறித்து விரிவான அறிவுரைகள் அடங்கிய சுற்றறிக்கைகளை வெளியிடுவார். மேலும், இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர் ஆய்வு/அறிவுரைக் கூட்டங்கள் நடத்தப்படும். பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் குறித்த காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்டார்களா என்பதை உறுதி செய்யும் விதத்தில் "சரிபார்க்கும் பட்டியல் (Check list)" மாவட்ட நிர்வாகங்களுக்கு வழங்கப்படும்.

2.4.2 கண்காணிப்பு முறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட அளவில் ஆயத்தப் பணிகளை கண்காணித்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மண்டல அளவில் ஆயத்தப் பணிகளை கண்காணித்திடவும். பல்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுதலை நெறிப்படுத்திடவும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

2.4.3 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல் மற்றும் வரைபடங்கள் உருவாக்குதல்

கடந்த கால பேரிடர் நிகழ்வுகளின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் 4,399 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு, அவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:-

2019 ஜூலை 17]

அட்டவணை 2.9

வ. எண்.	பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் வகைபாடு	பகுதிகளின் எண்ணிக்கை
1	மிக அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள்	*578*
2	அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள்	*892*
3	மிதமான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள்	*1,206*
4	குறைவான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள்	*1,723*
	மொத்தம்	*4,399*

ஒரு வரைபடத்திற்கு மூன்று ஊரக அல்லது நகர்புற பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் என்ற விகிதத்தில் முறையே குறுவட்ட அல்லது வார்டு அளவில், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் பாதிப்பின் தன்மை குறித்த ஆய்வு, மாற்று வழி, நிவாரண மையங்கள் மற்றும் மாற்று சமுதாய முதல் நிலை மீட்பாளர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

2.4.4 பல்துறை மண்டலக் குழுக்கள்

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையை தலைமையாகக் கொண்டு, காவல், தீயணைப்பு, ஊரக வளர்ச்சி, வேளாண்மை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் அடங்கிய 662 மண்டல குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவும் 5-7 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை தீவிரமாக கண்காணிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2.4.5 மீட்புக் குழுவினரை ஆயத்த நிலையில் வைத்திருத்தல்

பேரிடர்களால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு மீட்பு குழுக்கள் மற்றும் நிவாரணப் பொருட்களை ஆயத்த நிலையில் வைக்கும் வகையிலான திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பேரிடர் ஏற்படுவதற்கு முன்பு பேரிடரால் பாதிப்புகுள்ளாகும் பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புக் குழு மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை ஆகியவற்றை ஆயத்த நிலையில் இருக்கும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அறிவுறுத்துவார்கள்.

2.4.6 தனியார் அமைப்புகளுடனான கூட்டாண்மை

தனியார் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், எண்ணெய் நிறுவனங்கள் ஆகியவற்றின் தொடர் சேவையினை உறுதிப்படுத்திடவும், அவசர காலங்களில் தொடர்ந்து செயல்பட நிறுவன வாரியான உத்திகள் மற்றும் செயல் திட்டங்களை மேம்படுத்திடவும், மேற்கண்ட அமைப்புகளுடன் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கூட்டங்கள் நடத்தப்பட்டு, அவசரகால பணி 24 மணி நேரமும் நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2.4.7 பல்வேறு வகையிலான தகவல் தொடர்புகள்

பத்திரிகைகள், மின்னணு செய்தி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்புகள் போன்ற பல்வேறு வகையிலான தகவல் தொடர்புகள் மூலமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரால் பேரிடர் காலங்களில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை (Do's and Don'ts) தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

2.4.8 சமுதாய பங்களிப்பு

2.4.8.1 முதல் நிலை மீட்பாளர்கள்

அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பு அவசியம் என்பதை உணர்ந்த அரசு, சமுதாய பங்களிப்பினை மேம்படுத்திட, நல்ல உடல் திறன் கொண்ட நீச்சல் மற்றும் மரம் ஏறத் தெரிந்த 30,759 (9,162 பெண் உறுப்பினர்கள் உட்பட) தன்னார்வலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, 4,399 முதல் நிலை மீட்புக் குழுக்கள், மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் (ஒரு பகுதிக்கு 5 முதல் 10 நபர்கள் வீதம்) ஏற்படுத்தி, அடிமட்ட அளவிலான சமுதாய பங்களிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. இக்குழு உறுப்பினர்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும்

2019 ஜூலை 17]

செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. முதல் நிலை மீட்பு பணியாளர்கள் மற்றும் பாம்பு பிடிப்பவர்கள் அடங்கிய ஒரு நடமாடும் குழு வட்டாரம்/வட்டம்/கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் தேவையின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

2.4.8.2 முதல் நிலை கால்நடை மீட்பாளர்கள்

பேரிடர்களின்போது கால்நடைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாவதன் காரணமாக பெருமளவில் கால்நடை இழப்புகள் நிகழ்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்படும் கால்நடைகளை மீட்டு, நிவாரண முகாம்களுக்கு கொண்டு செல்வதற்காக 8,624 முதல்நிலை கால்நடை மீட்பாளர்கள் மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளனர்.

2.4.9 பேரிடர் மீட்பு

முன்னறிவிப்பு அடிப்படையில், பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளிலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், பேரிடர் தாக்கும் பொழுது, தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும் வகையிலும் தமிழக அரசு கடந்த காலங்களிலிருந்தே மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி வருகின்றது. மேலும், மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில், பிரத்யேக தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக ரோபோடிக் எக்ஸவேட்டர், நவீன களை எடுப்பான்கள், அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்திடவும் தமிழக அரசு முடிவு செய்தது.

2.4.9.1 தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை

கடந்த காலங்களில் தமிழகம் எதிர்கொண்ட எதிர்பாராத இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளினால் ஏற்பட்ட பேரிடர்களைக் கருத்தில் கொண்டு, இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளினால் ஏற்படும் பேரிடர்களின்போது தேடல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அளவிலான ஒரு பிரத்யேக பேரிடர் மீட்புப்படையினை உருவாக்கிட வேண்டும் என தமிழக அரசு கருதியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2017 அன்று சட்டசபையில் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்துவதற்காகவும், மர அறுப்பான்கள், துளையிடும் கருவிகள், சிலிண்டர்களுடன்கூடிய சுவாசக் கருவிகள், உயிர் காப்பு மிதவை கருவிகள், படகுகள், ஆக்ஸிஜன் மற்றும் அசிட்டிலின் ஆகிய வாயுக்கள் அடங்கிய சிலிண்டர்களுடன்கூடிய கட்டர், ஜெனரேட்டர்களுடன்கூடிய உயர் கோபுர விளக்குகள் என 138 வகையான உலகத்தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கிடவும், திறன் வளர்ப்பிற்காகவும் தமிழக அரசு ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்படையானது, உள்ளூர் பூகோள விபரங்களை நன்கு அறிந்திருக்கும் நிலையில், தேடல், மீட்பு, அகற்றுதல் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை கால தாமதமின்றி சிறப்பாகச் செயல்படுத்திட முடியும். தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, ஒரு பிரத்யேக தனிச்சிறப்பு வாய்ந்த அலகாக உருவாகிடும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

2.4.9.2 பேரிடர் உதவிப்படை

பேரிடர் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்திட கடலோர மற்றும் மலைப்பகுதிகள் அடங்கிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் பயிற்சி பெற்ற தன்னார்வலர்களை கொண்டு பேரிடர் உதவிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. இப்படை பல்துறை மண்டலக் குழுக்களுக்கு உதவி புரியும்.

2.4.9.3 பேரிடர் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

பாதுகாப்பாக வெளியேற்றப்பட்ட/மீட்கப்பட்ட மக்களின் நம்பிக்கையினை அதிகரிக்கும் விதமாக, தமிழக அரசானது நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளில் முன்னுரிமை வழங்கி முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளில் ஈடுபடும் படையினரின் திறன்களை மேம்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களை நிறுவியுள்ளது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்காக தமிழக அரசு, வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

2019 ஜூலை 17]

அரசு நிறுவியுள்ள இந்நிவாரண மையங்களில் பேரிடர்களின்போது பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்படுவார்கள். இம்மையங்களில் உணவு, தண்ணீர், மருத்துவ உதவிகள் மற்றும் அத்தியாவசிய நிவாரண உதவிகள் வழங்கப்படும். வயது முதிர்ந்தோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் என பாதிப்பிற்குள்ளாகும் பிரிவினற்கு உதவிடவும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட மனநலம் தொடர்பான ஆலோசனை மற்றும் மருத்துவ உதவிகள் நிபுணர்கள்மூலம் வழங்கப்படும்.

2.4.9.4 திறன் மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.356, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [பே.மே.-3(2)] துறை, நாள் 16.11.2017-ன்படி, பேரிடர்களின் போது பேரிடர் மீட்பு, நிவாரண மற்றும் மறுவாழ்வு ஆகிய செயல்களில் ஈடுபடும் பல்வேறு துறை அலுவலர்களுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் திறன் மேம்பாடு பயிற்சி அளித்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து, 2018 ஆம் ஆண்டு மாதிரி ஒத்திகைகள், கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.71.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

2.4.9.5 வருடாந்திர பேரிடர் தொடர்பான மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சி (HADR) 2019

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் வருடாந்திர பேரிடர் தொடர்பான மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சியை நடத்த முப்படைகளுக்கு உத்திரவிட்டதைத் தொடர்ந்து, இந்திய கடற்படை, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தோடு இணைந்து சென்னையில் சூறாவளி மற்றும் நகர்புற வெள்ளம் தொடர்பான பயிற்சியினை நடத்த உத்தேசித்துள்ளது.

மாநில மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மாநில மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களைச் செயல்படுத்தி மற்ற மாநில ஆதாரங்களை ஒன்று திரட்டி, இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ளும். அதே போல தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் இதர தேசிய ஆதாரங்களை திரட்டி, ஒருங்கிணைத்து இந்த பயிற்சியை நடத்த உதவி புரியும்.

[*2019 ஜூலை 17*

மூன்று நாட்கள் நடைபெறும், இந்த பயிற்சியில் வெளிநாட்டினர் பார்வையாளர்களாகப் பங்கேற்க உள்ளனர். மேலும், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், இராணுவம், கடற்படை, விமானப் படை, கடலோர காவல் படை, தீயணைப்பு மற்றும் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்பு படை, காவல் துறை, மீன்வளத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ளும்.

2.4.9.6 ஆப்த மித்ரா-சமூக ஆர்வலர்களுக்கான பயிற்சி திட்டம்

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தேசிய அளவில் வெள்ளத்தினால் மிகக் கடுமையாக பாதிப்பிற்குள்ளாகும் 30 மாவட்டங்களில் தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி வழங்க மத்திய நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட ஆப்த மித்ரா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் கண்டறியப்பட்டது. இத்திட்டத்தின்படி, 200 தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2.4.9.7 ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் மற்றும் தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஆசிய பேரிடர் ஆயத்த மையம் ஒரு சர்வதேச அரசாங்க அமைப்பாகும் (2005-ல் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது). இந்திய உள்துறை அமைச்சகம் உறுப்பினராக இடம்பெற்றுள்ள இம்மையத்தின் பிராந்திய ஆலோசனைக் குழுவில் 26 நாடுகள் இடம் பெற்றுள்ளன. இம்மையம், பல அரசுகள், ஐ.நா.வின் முகமைகள், கல்வி மையங்கள், தனியார் துறைகள் ஆகியவற்றுடன் இணைந்து ஆசிய-பசிபிக் பகுதியிலுள்ள நாடுகளுக்கு பேரிடர் தொடர்பாக உதவுவதுடன், நிலையான வளர்ச்சி இலக்கை அடைய, பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல், பேரிடர் குறைப்பு, பருவ மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிதல், குறைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுகின்றது.

திறன் மேம்பாடு மற்றும் நீண்ட கால அளவில் தொழில்நுட்ப உதவிபெறும் பொருட்டு தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையத்துடன் இணைந்து, சென்னை

2019 ஜூலை 17]

அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் பிற துறைகளின் மூத்த அலுவலர்களுக்கு "வெள்ள அபாய முன்னேற்பாடு" தொடர்பான மூன்று நாள் பயிற்சி 25.09.2018 முதல் 27.09.2018 வரையும், "வடகிழக்குப் பருவ மழை 2018 முன்னேற்பாடு" தொடர்பான மூன்று நாள் பயிற்சி 25.10.2018 முதல் 27.10.2018 வரையும் நடத்தப்பட்டது.

2.4.9.8 பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு

பேரிடர்களால், குறிப்பாக வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் ஏற்படும் எதிரிடையான தாக்கங்களைக் குறைக்கும் வகையில், அரசு, தடுப்பு மற்றும் தணிப்பு உத்தியின் ஒரு பகுதியாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டும், அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்தும் வருகின்றது. நீண்ட கால பயனை கருத்தில் கொண்டு, 'சிறப்பான மறுசீரமைப்பு' என்ற கொள்கையின் அடிப்படையில், தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர் வடிநில மற்றும் நீர்போக்கு அணுகுமுறையின் அடிப்படையில், குறிப்பிடப்பட்ட அமைவிடங்களுக்கு ஏற்ப முழுமையான திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

2.4.9.9 கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டம்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 15.05.2013 அன்று சட்டமன்ற பேரவையில் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் (Coastal Disaster Risk Reduction Project) என்ற சிறப்புத் திட்டமானது, உலக வங்கியின் உதவியுடன் ரூ.1481.80 கோடி செலவில் 13 கடலோர மாவட்டங்களிலும் அமல்படுத்தப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, 2014 ஆம் ஆண்டு மேற்படி திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் கூறுகளான பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள், நீடித்த மீன்வளத் துறை பணிகள், பேரிடர் அபாய குறைப்பிற்கான திறன் வளர்ப்புப் பணிகள் மற்றும் திட்ட செயல்பாடு ஆகியவற்றின் மறு ஒதுக்கீட்டுத் தொகை ரூ.1,544.66 கோடி ஆகும்.

மேற்படி கூறுகளில் ஒன்றான பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளின்கீழ் ரூ.310 கோடி செலவில் 488 கடலோர கிராமங்களில் பேரிடரைத் தாங்கக்கூடிய 14,347 வீடுகள் கட்டப்பட்டுள்ளதோடு 143 இடங்களில் அறிவிப்பு பலகைகளுடன் கூடிய முறையான இணைப்பு வழித்தடங்கள் அமைக்கப்பட்டு

மக்களின் பயன்பாட்டிற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளன. ரூ.331.03 கோடி செலவில் கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. நீடித்த மீன்வளத் திட்டத்தின்கீழ் ரூ.210.30 கோடி செலவில் உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு மீன்பிடி துறைமுகங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் நவீனப்படுத்துதல், புதிய மீன் இறங்குதளம் அமைத்தல், குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் கட்டுதல் மற்றும் ஆற்று முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.107.50 கோடி செலவில், கடலுக்குள் செல்லும் மீனவர்களது பாதுகாப்பு மற்றும் உத்தரவாதத்தினை உறுதிபடுத்தும் வகையில், கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்த GPS ரிசீவர்கள் பொருத்தப்பட்ட 17,539 எண்ணிக்கையிலான VHF கடல்சார் கையடக்க வானொலிகள் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டு, நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், நிலைத்த வாழ்வாதாரத்திற்கான பல்வேறு மீன்வள மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 5,892 குழுக்கள் அடங்கிய 3,34,457 நபர்களுக்கு சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மைப் பயிற்சிகள் ரூ.15.00 கோடி செலவில் அளிக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, ரூ.2.50 கோடி செலவில், பள்ளி மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 7 முதல் 12 ஆம் வகுப்பு பாடத்திட்டங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பாடத்திட்டங்களிலும் பேரிடர் மேலாண்மை குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ரூ.7.50 கோடி செலவில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மைத் திட்டம் (ICZMP), பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சி திட்டம் ஆகியவற்றை தயாரிக்கும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் மின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் விதமாக வேளாங்கண்ணி மற்றும் கடலூர் நகராட்சிகளில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புக்களை பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்றும் பணி ரூ.406.83 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

2019 ஜூலை 17]

பேரிடர்கள் வருவதை முன்கூட்டியே அறிந்து, கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு பேரிடர் குறித்த தகவல்களை விரைவாக வழங்கும் பொருட்டு ரூ.50.00 கோடி செலவில் 450 இடங்களில் முன்னெச்சரிக்கை கருவி (EWS) *அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2.4.9.10 நீண்டகால பேரிடர் தணிப்பு நடவடிக்கைகள்

பேரிடர் அபாய குறைப்பு கொள்கையின் அடிப்படையில் நிலையான நீடித்த துயர் தணிக்கும் நடவடிக்கைகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசின் நீண்ட கால நடவடிக்கைகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

2.4.9.10.1 ஏரிகள், நீர் வழித்தடங்கள் மற்றும் பாசன கால்வாய்களைத் தூர்வாருதல்

தமிழ்நாட்டில் வெள்ள தணிப்பு நடவடிக்கையான 25,855 ஏரிகள், 12,070 கி.மீ. வரையிலான நீர் வழித்தடங்கள் மற்றும் கால்வாய்களைத் தூர்வாரும் பணியில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 25,246 ஆக்கிரமிப்புகள் நீர் நிலைகளிலிருந்து அகற்றப்பட்டன. 11,635 நிலத்தடி நீர் செரிவு கிணறுகள் உருவாக்கப்பட்டு, 10,684 செயல்பாடற்ற குழாய் கிணறுகள் நிலத்தடி நீர் செரிவு கிணறுகளாக மாற்றப்பட்டன. பாலங்கள் மற்றும் சிறு பாலங்களின் இருபுறமும் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்வதற்காக சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதின் விளைவாக, 10,500 பாலங்கள் மற்றும் 1,62,524 சிறு பாலங்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டன. 2,807 குழாய் வடிவிலான துவாரங்கள் கொண்ட சிறுபாலங்கள், பெட்டக வடிவிலான துவாரங்கள் கொண்ட சிறுபாலங்களாக மாற்றப்பட்டது. 248 பாலங்களில் கூடுதல் துவாரங்கள் அமைக்கப்பட்டன. 5,764 நீர் ஊற்று கிணறுகள் உருவாக்கப்பட்டன. 10,773 தடுப்பணைகள் உருவாக்கப்பட்டன. 6,500 நீர் ஊடுறுவும் குளங்கள் உருவாக்கப்பட்டன.

2.4.9.10.2 வண்டல் மண் தூர்வாருதல்

- *நீண்டகால வறட்சி தணிப்பு நடவடிக்கையாக, அரசாணை (நிலை) எண்.50, தொழில் துறை, நாள் 24.04.2017-ன்படி தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959-ல் திருத்தம் செய்யப்பட்டு, நீர்நிலைகள்/அணைகளிலிருந்து வண்டல்*

[2019 ஜூலை 17

மண்ணை எடுத்து விவசாயிகள் அவர்களது நிலங்களில் பயன்படுத்த அரசு அனுமதியளித்து ஆணையிட்டுள்ளது. இப்பணியானது மண் வளத்தை செழிக்கச்செய்வதோடு மட்டுமல்லாமல், நீர்நிலைகளில் நீர் கொள்ளளவினை உயர்த்துவதற்கும் வழிவகை செய்கிறது.

- இது வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையரகத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர் முயற்சியின் காரணமாக, 31.05.2019 அன்றைய நிலவரப்படி நீர்தேக்கங்கள்/ ஏரிகளிலிருந்து 7.28 கோடி கன அடி அளவில் வண்டல் மண் எடுக்கப்பட்டு 6,49,059 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2.4.9.10.3 வெள்ளத்தால் மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

கடந்த இருபது ஆண்டுகளில், 2005, 2008, 2015 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்புற பகுதிகள் பெரும் பாதிப்புகளை சந்தித்தன. அடையாறு, கொசஸ்தலையாறு, கூவம் மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த நகர்புற பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், பொது கட்டமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஆகியவை தொடர் வெள்ளத்தால் நீரில் மூழ்குகின்றன.

சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிகழும் தொடர் வெள்ளத்தின் காரணமாக பொதுமக்கள், தொழில் நிறுவனங்கள், போக்குவரத்து கட்டமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தணிக்கும் வகையில், நீண்ட கால நோக்கில் தீர்வு காணும் அவசியத்தை அரசு உணர்ந்து, விரிவான ஆய்வின் அடிப்படையில் மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கண்டறியப்பட்டு, அதனை செயல்படுத்திட மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

மேலும், கூவம், கொசஸ்தலையாறு, அடையாறு மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர்

ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளுக்கு உடனடியான தீர்வு காணும் வகையில் வெள்ள தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2019 வடகிழக்குப் பருவமழையின் பாதிப்புகளைத் தணிக்கும் வகையில் மேற்கண்ட ஆற்றுப்படுகைகளில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை ஜூலை 2019 மாத இறுதிக்குள்ளாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- ➢ மழைநீர் தங்கு தடையின்றி வெளியேற உதவிடும் வகையில் தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்பு கால்வாய்கள் அமைத்தல்.
- ➢ மூடிய கால்வாய்களை அமைத்தல்.
- ➢ பாசனமில்லாத ஏரிகளை, ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல்.
- ➢ வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர் கால்வாய்கள் மற்றும் சாலையோர கால்வாய்களை அகலப்படுத்துதல்.

இப்பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நகர்ப்புறங்களில் உள்ள மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் வெள்ள பாதிப்பினை வெகுவாக தணிக்கும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளப் பாதிப்புகளைத் தணிக்கும் பொருட்டு ரூ.290.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

08.02.2019 அன்று சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட 2019-2020 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.284.70 கோடி நிதி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எனவே, அடையாறு ஆற்றுப்படுகை, பரவனாறு ஆற்றுப்படுகை, கொள்ளிடம் உப ஆற்றுப்படுகை, ஆரணியாறு ஆற்றுப்படுகை, கோவளம் உப

ஆற்றுப்படுகை மற்றும் நம்பியாறு ஆற்றுப்படுகை ஆகியவற்றில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி முன்மொழிவில் கீழ்கண்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது:

1. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த நகர்புற குடியிருப்புகளின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும், வெள்ளத் தணிப்பு மற்றும் வறட்சி தணிப்பு நடவடிக்கைகளுக்காகவும் அதிகப்படியான நீர் வரத்தினை தேக்கி வைக்க ஏதுவாக புதிய நீர் தேக்கங்கள் மற்றும் ஆற்றுப்படுகை நீர் தேக்கங்கள் உருவாக்குதல்.
2. பெரிய நீர் வழித் தடங்களின் கட்டமைப்புகளை சீரமைத்து மேம்படுத்துதல்.
3. பெரிய நீர் வழித் தடங்களில் தடைப்பட்ட இணைப்புகளை சீரமைக்கும் பொருட்டு, பெரிய நீர் வழித் தடங்களை நிலத்திற்கு அடியில் அமைத்தல்.
4. உபரி நீரை பிற உபவடி நிலங்களுக்கு கொண்டு செல்ல இணைப்பு வாய்க்கால்களை ஏற்படுத்துதல்.
5. அதிகப்படியான வெள்ள நீரினை விரைவாக கடலில் சேர்க்கும் பொருட்டு மாற்று கால்வாய்கள் ஏற்படுத்துதல்.

2.4.10 2018 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில், பருவமழை குறைவினால் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

- 2018 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் 17 மாவட்டங்களில் 59% முதல் 19% வரை மழைப்பொழிவானது குறைந்து பதிவாகியுள்ளது. மேலும், 7 மாவட்டங்களில் 2018 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது இயல்பான மழைப்பொழிவு காணப்பட்டாலும், ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவுடன் ஒப்பிடுகையில் மழைப்பொழிவு குறைந்து காணப்பட்டது. மீதமுள்ள மாவட்டங்களை பொறுத்த வரையில் மாவட்ட அளவில் மழைப்பொழிவு இயல்பாக இருந்தாலும் (19% குறைவாக), மாவட்டம் முழுமையும் சீரான மழைப்பொழிவு இல்லை. 7 மாவட்டங்களில் உள்ள 38 வட்டாரங்களில் பெறப்பட்ட

2019 ஜூலை 17]

மழையளவு, இயல்பான பருவமழை அளவுடன் ஒப்பிடுகையில் குறைவான/மிகவும் குறைவானதாக உள்ளது. எனவே, அரசாணை (நிலை) எண்.91, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 07.08.2019 இன்படி தமிழகத்தின் 24 மாவட்டங்கள் மற்றும் 38 வட்டாரங்களை உள்ளடக்கிய 7 மாவட்டங்கள், நீரியல் வறட்சி பாதித்த மாவட்டங்கள்/வட்டாரங்களாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- *குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.116.18 கோடி மற்றும் ரூ. 37.50 கோடி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு அரசாணை (நிலை) எண். 121, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.28.05.2019 மற்றும் அரசாணை (நிலை) எண். 125, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 28.05.2019 இன்படி வழங்கப்பட்டுள்ளது.*
- *குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.20.00 கோடி மற்றும் ரூ.16.00 கோடி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அரசாணை (நிலை) எண்.30, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 05.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண். 122, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 28.05.2019 இன்படி வழங்கப்பட்டுள்ளது.*
- *குடிநீர் வழங்கல் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்ள மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.56.05 கோடி மற்றும் ரூ.16.32 கோடி, நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகள் நிருவாகம் ஆகிய துறைகளுக்கு அரசாணை (நிலை) எண். 125, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 28.05.2019-ன் படி வழங்கப்பட்டுள்ளது.*

2.4.11 வெப்ப அலை:

- *பருவ நிலை மற்றும் புவியியல் சார்ந்த பேரிடர்களான புயல், வெள்ளம், நிலநடுக்கம், சுனாமி மற்றும் வறட்சி போன்றவற்றினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய இந்திய துணைக் கண்டத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளது. சில ஆண்டுகளாக கோடைக் காலம் மற்றும் பருவ*

மழை துவங்கும் முன்னர் வெப்பநிலை உயர்வதால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகள் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

- வளிமண்டல வெப்பநிலை காரணமாக மனிதர்களுக்கு ஏற்படும் உடலியல் ரீதியான அழுத்தத்தின் விளைவாக சில நேரங்களில் உயிரிழப்புகள் நிகழ்கின்றன.
- வெப்ப அலைகளினால் ஏற்படும் தாக்கத்தினைக் குறைக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பிற துறைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வெப்ப அலை செயல் திட்டம் 2019, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தால் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் TNSDMA இணையதள முகவரியில் (http:// tnsdma.in.gov.in/app/webroot/img/document/heat Wave Action 2019. pdf) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

2.4.12 பருவகால மாற்றங்களை எதிர்கொள்ளும் திட்டம்

ஆசிய மேம்பாட்டு வங்கி மூலம் ரூ.960 கோடி நிதி பெறப்பட்டு பருவ கால மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில், தொழில் நுட்ப உதவியுடன் டெல்டா மாவட்டங்களில் ஆற்று பாசனத்தை மேம்படுத்த தமிழக அரசால் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடல் நீர் உட்புகுவதை தடுப்பதற்காக டெல்டா மாவட்டங்களில் கடைமடை பகுதிகளில் நீர் தேக்கங்கள் அமைக்கப்படும்.

2.4.13 மானாவாரி பண்ணை முறை

நீடித்த மானாவாரி பண்ணை விவசாயத்தை மேம்படுத்த ரூ.802.90 கோடி விவசாய துறையின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு பெருங்குழுவிற்கு 1000 ஹெக்டேர் வீதம், 1000 பெருங்குழுக்கள் அமைக்கப்பட்டு, நீடித்த மானாவாரி பண்ணை முறைகள் செயல்படுத்தப்படுகின்றன.

2.4.14 சிறப்பான மறுசீரமைப்பு

சிறப்பான மறுசீரமைப்பு என்பது பேரிடர் மறுவாழ்வு பணிகளுக்கு மட்டும் அல்லாது நீண்ட கால துயர் தணிக்கும்

2019 ஜூலை 17]

முயற்சிகளுக்கும் அரசின் மிக முக்கிய கொள்கையாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பேரிடர்களை எதிர்கொள்ளும் சமுதாயத்தின் மீள்திறனை மேம்படுத்தும் வகையிலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பேரிடர் அபாயத்தினை குறைத்து மனித உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட சிறப்பான மறுசீரமைப்பு கொள்கை அடங்கிய பேரிடர் நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 2.10

வ. எண்.	திட்டங்கள்	தொகை (ரூ-கோடியில்)
1	உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால மறுவாழ்வுத் திட்டம் (ETRP)	1,852
2	ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால உதவி திட்டம் (TEAP)	629
3	சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதி உதவியுடன் சுனாமி பிந்தைய நிலையான வாழ்வாதார திட்டம் (PTSLP)	129
4	உலக வங்கி நிதி உதவியுடன் கடலோர சமூக ஆபத்து குறைப்பு திட்டம் (VRCC)	1,959

2.4.15 மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF)

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டங்களுக்கு 14-வது நிதிக்குழுவால் மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.11

ஆண்டு	ஒதுக்கீடு (ரூ-கோடியில்)
2015-2016	679.00
2016-2017	713.00
2017-2018	748.00
2018-2019	786.00
2019-2020	825.00
மொத்தம்	3,751.00

2.5 கஜா புயல் நவம்பர் 2018

கஜா புயல் 16.11.2018 அன்று சுமார் 130-145 கி.மீ. வேகத்தில், நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் இடையே கரையை கடந்தது. புயல் கரையை கடந்த போது குடிசைகள், ஓட்டுவீடுகள், கான்கிரீட் வீடுகள், விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்கள், கால்நடைகள், கோழி பண்ணைகள் மற்றும் மின்கட்டமைப்புகள் பெரும் சேதமடைந்தன. நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் அனைத்துப் பகுதிகளும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, கடலூர், கரூர், மதுரை, தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு சில பகுதிகள் பாதிக்கப்பட்டன.

2.5.1 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- *கஜா புயல் 15.11.2018 அன்று மாலை/இரவு நாகப்பட்டினம் அருகில் கரையைக் கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தினால் முன்னறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.11.2018 அன்று கஜா புயல் தொடர்பாக கூட்டம் நடத்தப்பட்டு, பாதிப்பிற்குள்ளாக கூடிய மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் படி மாண்புமிகு மூத்த அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.*
- *கஜா புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் நிலை குறித்து பேரிடர் தணிப்பு தொடர்புடைய, பல்வேறு துறைகளின் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள், கடலோர பாதுகாப்புப்படை, கடற்படை மற்றும் விமானப்படையைச் சார்ந்த உயர் அதிகாரிகளுடன், தலைமைச் செயலாளர் அவர்களால் 12.11.2018 அன்று சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டு, பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.*
- *1) வடகிழக்குப் பருவ மழை 2) புயல் தொடர்பான ஆயத்த நடவடிக்கைகள் மற்றும் 3) சரிபார்ப்பு பட்டியல் தொடர்பான சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்பேரில் மேற்கொள்ளப்பட்ட கஜா புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் நிலை*

2019 ஜூலை 17]

குறித்து, அனைத்து கடலோர மாவட்ட ஆட்சியர்களுடன் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களால் 12.11.2018 அன்று சிறப்பு காணொலி காட்சிக் கூட்டம் நடத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

- *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆகியோர் 13.11.2018 அன்று முதல் மாநில அவசரக் கட்டுப்பாட்டு அறையில் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டனர்.*
- *கஜா புயல் நாகப்பட்டினம் அருகில் 15.11.2018 அன்று இரவு கரையைக் கடக்கும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் முன்னறிவிப்பின் பேரில் தமிழக அரசால் வழங்கப்பட்ட அறிவுரையின்படி இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர். நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் புயலால் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளிலிருந்து சுமார் 82,000 நபர்கள் வெளியேற்றப்பட்டு அரசு கட்டடங்கள் மற்றும் பல்நோக்கு பாதுகாப்பு கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.*
- *கடலோர மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விடுமுறை அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து அறிவுரை/எச்சரிக்கை வழங்கப்பட்டதால் மீனவர்களுக்கு எந்தவிதமான உயிரிழப்பும் இல்லாமல் பாதுகாப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடலோர மாவட்டங்களில் 15.11.2018 அன்று மாலை 6.00 மணி முதல் 16.11.2018 அன்று காலை 6.00 மணிவரை சாலை போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டது. இரயில் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டது. மேலும், உயிரிழப்பினைத் தவிர்ப்பதற்காக மின்விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டது.*
- *இத்தகைய பல்வேறு ஆயத்த மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் பெருமளவு உயிர்சேதம் குறைக்கப்பட்டது. மேற்கண்ட, அரசின் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மக்கள் வெகுவாக பாராட்டினர்.*

2.5.2 உடனடி நடவடிக்கை

- *தமிழக அரசு, வீடுகளை இழந்த 1,22,754 குடும்பங்களை 828 தற்காலிக மீட்பு மையங்களில் தங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான உணவு, பால் மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்கியது.*
- *நிவாரண முகாம்களில் நிலையான மற்றும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு சுத்தம் மற்றும் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டு, தொற்றுநோய் பரவாமல் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.*
- *முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தயார் நிலையிலிருந்த பேரிடர் தணிப்பு தொடர்பான பலதுறைகளை சார்ந்த பணியாளர்கள் உடனடியாக செயல்பட்டு இணைப்புச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் போன்றவைகள் சரிசெய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழக மற்றும் பிற மாநில மின்வாரியப் பணியாளர்களை ஈடுபடுத்தி பாதிப்படைந்த மின்னமைப்புகள் சரிசெய்யப்பட்டது.*

2.5.3 மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட நிவாரண உதவிகள்

தமிழக அரசால் 19.11.2018 அன்று அறிவிக்கப்பட்ட நிவாரணங்கள் பின்வருமாறு:

- *புயலினால் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தலா ரூ.10 இலட்சம்.*
- *கொடுங்காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம்.*
- *காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.25,000.*
- *இறந்துபோன பசு/எருமை ஒன்றுக்கு ரூ.30,000.*
- *இறந்துபோன காளை ஒன்றுக்கு ரூ.25,000.*
- *இறந்துபோன ஆடு ஒன்றுக்கு ரூ.3,000.*
- *முழுமையான சேதமடைந்த குடிசைக்கு ரூ.10,000.*
- *பகுதி சேதமடைந்த குடிசைக்கு ரூ.4,100.*
- *மேலும், பாதிப்படைந்தவர்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, 1 லிட்டர் மண்ணெண்ணெய் (மாநில பேரிடர் நிவாரண நிதி விதிகளுக்குட்பட்டு) வழங்கப்பட்டது. கூடுதலாக, முகாம்களில் தங்கியிருந்தவர்களுக்கு ஒரு*

2019 ஜூலை 17]

வேட்டி, ஒரு சேலை, 4 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

- பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் உடனடி நிதியுதவியாக ரூ.5,000 வழங்கப்பட்டது. முழுமையாக/பகுதியாக குடிசை வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் கட்டுமரம்/வல்லம் சேதமடைந்த மீனவர்களுக்கும் ரூ.3,800 மதிப்புள்ள 27 விதமான நிவாரணப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு (Relief Kits) (10 கிலோ அரிசி, 2 கிலோ துவரம்பருப்பு, கால் கிலோ புளி, ஒரு கிலோ பால் பவுடர், 2 கிலோ சர்க்கரை, ஒரு கிலோ உப்பு, 200 கிராம் டீத்தூள், 100 கிராம் சாம்பார் பொடி, 2 கிலோ ரவை, 4 பிஸ்கெட் பாக்கெட்டுகள், ஒரு பாய் அல்லது ஜமுக்காளம், 2 லிட்டர் சமையல் எண்ணெய், 2 வேட்டிகள், 2 சேலைகள், 2 துண்டுகள், ஒரு நைட்டி, ஒரு கைலி, ஒரு போர்வை, 50 கிராம் தேங்காய் எண்ணெய், 2 குளியல் சோப்பு, 2 துணி துவைக்கும் சோப்பு, ஒரு பாக்கெட்டு கொசுவர்த்தி சுருள், 2 பாக்கெட்டு சானிட்டரி நாப்கின்கள், பிளாஸ்டிக் வாளி, பிளாஸ்டிக் கோப்பை, ஒரு குடை மற்றும் 2 தீப்பெட்டிகள்) முதன்முறையாக வழங்கப்பட்டது.
- முகாம்களிலிருந்த பெரியவர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர்களுக்கு ஆவின் பால் வழங்கப்பட்டது.
- பாதிக்கப்பட்ட பகுதிவாழ் குடும்பங்களுக்கு டிசம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய் ஒதுக்கீடு முன்னதாக நவம்பர் மாதத்திலேயே வழங்கப்பட்டது.
- பாதிக்கப்பட்ட வேளாண்மை/தோட்டக்கலை பயிர் விவசாயிகளுக்கு தமிழக அரசால் சிறப்பு நிவாரணம் அறிவிக்கப்பட்டது. கஜா புயலினால் தென்னை மரங்கள் பெருத்த சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.1100/- (சேதமடைந்த மரத்தினை வெட்டுவதற்கு ரூ.500-ம், அகற்றுவதற்கு ரூ.600-ம்) வழங்கப்பட்டது. மேலும், தேசிய பேரிடர் நிவாரண நிதி (NDRF) விதிமுறையின்கீழ் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அதிகபட்ச அளவீடான 2 ஹெக்டேர் என்ற விதியை தளர்த்தி ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் ரூ.7.75 இலட்சம் (அதிகபட்சமாக பாதிப்புக்குள்ளாகிய 700 தென்னை மரங்கள் வரை) நிர்ணயம் செய்து நிதியுதவி வழங்கப்பட்டது. அதேபோன்று சேதமடைந்த முந்திரி

மரத்தினை வெட்டவும், அகற்றிடவும் மரம் ஒன்றுக்கு ரூ.500 வீதம், உச்சவரம்பாக ரூ.4 இலட்சம் (அதிகபட்சமாக பாதிப்புக்குள்ளாகிய 800 முந்திரி மரங்கள் வரை) மாநில பேரிடர் நிவாரண நிதி விதிகளுக்குட்பட்டு நிவாரணம், இடுபொருள் மானியத்துடன் கூடுதலாக வழங்கப்பட்டது.

- சொட்டுநீர் பாசனத் திட்டத்தின்கீழ் சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு 100% மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையும், மற்ற விவசாயிகளுக்கு 75% மானியத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.75,000 தென்னை மர வளர்ப்புக்காக வழங்கப்பட்டது.

- பாதிப்படைந்த நெற்பயிரிட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 வழங்கப்பட்டது.

- பாதிப்படைந்த கரும்பு/வாழை/காய்கறிகள்/பூக்கள் பயிரிட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 வழங்கப்பட்டது.

- கஜா புயலினால் முழுமையாக சேதமடைந்த கட்டுமரம்/மீன்பிடி வலை மீனவர்களுக்கு தலா ரூ.42,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த கட்டுமரம்/மீன்பிடி வலை மீனவர்களுக்கு தலா ரூ.20,000 வழங்கப்பட்டது.

- கஜா புயலினால் முழுமையாக சேதமடைந்த மீன்பிடி வலையுடன்கூடிய F.R.P. படகு ஒன்றுக்கு ரூ.85,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த F.R.P. படகு ஒன்றுக்கு ரூ.30,000 இழப்பீடாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

- கஜா புயலினால் முழுவதும் சேதமடைந்த விசைப்படகு ஒன்றுக்கு ரூ.5,00,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த விசைப்படகு ஒன்றுக்கு ரூ.3,00,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.

- மீன்பிடி வலை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.10,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.

- விசைப்படகு இயந்திரம் (என்ஜின்) சேதமடைந்த மீனவர்களுக்கு அதனை சரிசெய்ய ரூ.5,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.01.2019 அன்று, கஜா புயலினால் முழுவதும் சேதமடைந்த மீன்பிடி வலையுடன்கூடிய

2019 ஜூலை 17]

F.R.P. படகு ஒன்றுக்கு ஏற்கனவே அறிவித்த நிவாரணமான 85,000 ரூபாயை, 1,50,000 ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள்.

2.5.4 பாதிக்கப்பட்ட கட்டமைப்புகளை தற்காலிகமாக சீரமைத்தல்

- மூத்த அமைச்சர்கள் குழு மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முகாமிட்டு மீட்பு, நிவாரணப்பொருட்கள் வழங்குதல் மற்றும் புனரமைப்பு தொடர்பான பணிகளை கண்காணித்தனர்.
- கடும் சூறைக்காற்றினால் பாதிக்கப்பட்டு வேருடன் சாய்ந்த மரங்களை அகற்ற ஏற்கனவே தயார் நிலையில் இருந்த 1,650 மின்மர அறுவை இயந்திரம் மற்றும் 1,151 JCB இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டது.
- வேரோடு சாய்ந்த 14,69,625 மரங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.
- மின்கட்டமைப்பை சீர்செய்ய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் மற்றும் முதன்மை மேலாண்மை இயக்குநர், மின்பகிர்மானம் மற்றும் மின்விநியோக கழகம் அவர்களின் கண்காணிப்பில் 28,644 பணியாளர்களை ஈடுபடுத்தி, அபாயங்களை பொருட்படுத்தாமல் முழுவீச்சாக செயல்பட்டு மின்விநியோகம் சீரமைக்கப்பட்டது. மேலும், ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆகிய மின்பகிர்மான அமைப்புகளிலிருந்து பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு 6,28,025 மின் இணைப்புகள் சீரமைக்கப்பட்டது.
- கஜா புயலின்போது மின்விநியோகம் பாதிக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்க இயலாத 184 நகராட்சி குடியிருப்பு பகுதிகள், 270 பேரூராட்சி வார்டுகள் மற்றும் 9048 ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்க 1,334 ஜெனரேட்டர்கள் மற்றும் 325 டேங்கர் லாரிகள் பயன்படுத்தப்பட்டது.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சிகள் துறை, நகராட்சி நிர்வாகத் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களின் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினரின் மேற்பார்வையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.
- பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பகுதிகளைச் சுத்தம் செய்ய 3000 சுகாதார பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது.

[2019 ஜுலை 17

மேலும், 1647 மருத்துவ குழுக்கள், 22047 நடமாடும் மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் 11,66,000 நபர்கள் பயனடைந்தனர். தமிழக அரசின் இப்பெரும் முயற்சியினால் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கப்பட்டது.

- கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிவாழ் மக்களுக்கு ரூ.12.85 கோடி மதிப்புள்ள 11,35,814 எண்ணிக்கையிலான ஆடை நீக்கிய பால் பவுடர் பாக்கெட் வழங்கப்பட்டது.

2.5.5 அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்கள்

அரசால் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறித்த விவரம் பின்வருமாறு-

அட்டவணை 2.12

வ. எண்	விவரம்	அரசாணை எண் மற்றும் தேதி	ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
1	இழப்பிற்கான நிவாரணம் (மனித உயிரிழப்பு, கால்நடை இழப்பு, வாழ்வாதார இழப்பு, துணிகள் மற்றும் பாத்திரங்கள்)	அரசாணை (நிலை) எண் 458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018 அரசாணை (1டி) எண் 662, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 22.11.2018 அரசாணை (நிலை) எண் 472, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 30.11.2018 அரசாணை (நிலை) எண் 476, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 04.12.2018 அரசாணை (1டி) எண் 681, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 05.12.2018 அரசாணை (நிலை) எண் 487, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 14.12.2018 அரசாணை (நிலை) எண் 494, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.12.2018 அரசாணை (நிலை) எண் 15, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 08.01.2019	591.66

2019 ஜூலை 17]

வ. எண்	விவரம்	அரசாணை எண் மற்றும் தேதி	ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
2	வீடு சேதம்	அரசாணை (நிலை) எண் 458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	401.49
		அரசாணை (நிலை) எண் 464, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 27.11.2018	
		அரசாணை (நிலை) எண் 15, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 08.01.2019	
3	பயிர்சேதம்		
	வேளாண்மை	அரசாணை (நிலை) எண் 458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	709.51
		அரசாணை (நிலை) எண் 09, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 04.01.2019	
		அரசாணை (நிலை) எண் 19, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 10.01.2019	
		அரசாணை (நிலை) எண் 113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 28.05.2019	
	தோட்டக்கலை	அரசாணை (நிலை) எண் 09, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 04.01.2019	65.80
		அரசாணை (நிலை) எண் 10, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 04.01.2019	
		அரசாணை (நிலை) எண் 113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 28.05.2019	
	வேளாண்மை பொறியியல் துறை	அரசாணை (நிலை) எண் 113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 28.05.2019	0.11
4	கட்டமைப்பு		
	நெடுஞ்சாலைத் துறை	அரசாணை (நிலை) எண் 458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	25.00

வ. எண்	விவரம்	அரசாணை எண் மற்றும் தேதி	ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
	பேரூராட்சிகளின் இயக்ககம்	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	5.00
	ஊரக வளர்ச்சித் துறை இயக்ககம்	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	25.00
	பொதுப்பணித்துறை	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	10.00
	குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	19.26
		அரசாணை (நிலை) எண் 113, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 28.05.2019	
	நகராட்சி நிர்வாக ஆணையரகம்	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	5.00
5	மீன்வளத்துறை	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	46.88
		அரசாணை (நிலை) எண் 113, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 28.05.2019	
6	மின்பகிர்மான மற்றும் மின்விநியோகக் கழகம் (TANGEDCO)	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018	200.00
		அரசாணை (நிலை) எண்.493, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.12.2018	250.00
7	பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்	அரசாணை (நிலை) எண் 458, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 20.11.2018	27.50
8	பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்ககம்	அரசாணை (நிலை) எண் 116, வ..(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள் 28.05.2019	13.08
		மொத்தம்	2395.29

2019 ஜூலை 17]

2.5.6 கஜா புயல் மறு கட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டம் (GRRRP)

கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைக்கவும் பாதிக்கப்பட்ட விவசாயம், தோட்டக்கலை, மீன்வளம் போன்ற தொழில்களை புனரமைக்கவும் இதன்மூலம் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கஜா புயல் மறுகட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் மாநில திட்ட அலகு, மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நிலையில், திட்ட இயக்குநர் தலைமையின் கீழும், நாகப்பட்டினம் (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்) மற்றும் தஞ்சாவூரை (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) தலைமையிடமாகக் கொண்டு இரு களஅலகுகள் (Field Units) *இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நிலையில், கூடுதல் திட்ட இயக்குநர்கள் கீழும், உருவாக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.*

3. நில நிருவாகம்

நில நிருவாகமானது, வருவாய் நிருவாகத்தின் முக்கியமான அங்கங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. நில நிருவாக ஆணையரகம், முன்னாள் வருவாய் வாரியத்தால் கவனிக்கப்பட்டு வந்த, நிலம் தொடர்பான பல்வேறு பணிகளைக் கவனிப்பதற்காக, 1980 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த ஆணையரகம், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும் நிர்வகிப்பதுடன், கீழ்க்காணும் பொருண்மைகளையும் கையாள்கிறது:

- *விவசாய நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை,*
- *ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நில மாற்றம்,*
- *மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு நில மாற்றம்,*
- *மத்திய/ மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள்/ வாரியங்களுக்கு நில உரிமை மாற்றம்,*
- *அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்,*
- *ஆக்கிரமணங்களை அகற்றுதல்,*
- *எஸ்டேட் ஒழிப்புச் சட்டம்,*
- *பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் நில எடுப்பு,*

[2019 ஜூலை 17

- ஆயக்கட்டுகளை மேம்படுத்துதல், தண்ணீர் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் நிர்ணயம்,
- விட்டோடிகள் சொத்துச் சட்டம் , 1950,
- தமிழ்நாடு திரையரங்கு ஒழுங்கு முறைச் சட்டம், 1955-ன் கீழ் மேல்முறையீடு,
- பத்திரப்பதிவு மாற்ற நிகழ்வுகள் (பட்டா மாற்றம்)
- நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான முறையீடு மற்றும்
- தொழில் நோக்கங்களுக்காக, பாசன நீரைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணியுடன், சிறு பாசனக் கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பு ஆணையரகமாகவும் செயல்பட்டு வருகிறது.

மூன்று இணை ஆணையர்கள், ஆறு உதவி ஆணையர்கள் மற்றும் ஒரு தலைமைக் கணக்கு அலுவலர் ஆகியோர் மேற்காணும் பணிகளை நிறைவேற்ற கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிருவாக ஆணையருக்குத் துணை புரிகின்றனர்.

3.1 பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவை, பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கூர்ந்து கண்காணிக்கின்றது. இந்தச் சேவையானது இணையதளம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இணையதள வழியிலான பட்டா மாறுதல் திட்டம் சீரிய முறையில் செயல்படுகிறதா என்பதை உறுதி செய்யும் வகையில் காலவாரியாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.1.1. இணையதள வழியிலான பட்டா மாறுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் 10.6.2011 நாளைய சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, கிராம நிருவாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்களைப் பெறுவதற்கு ஏதுவாக, வருவாய் நிலை ஆணை எண் 31(8)-ல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 209, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011-ல் வெளியிடப்பட்டது. பட்டா மாறுதல்


குறித்த விண்ணப்பங்களைக் குறித்த காலத்தில், முறையாகப் பரிசீலனை செய்து விரைவாக முடிவு செய்ய, அரசாணை (நிலை) எண் 210, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011-ல் விரைவுப் பட்டா மாறுதல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வந்தது.

மேலும், பட்டா மாறுதல் குறித்த சேவைகள் பொது மக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக அரசாணை (நிலை) எண் 209, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011 மற்றும் அரசாணை (நிலை) எண் 210, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011-ல் கண்டுள்ள முறைகளை மேலும் மேம்படுத்தி, இணையதள வழியிலான பட்டா மாறுதல் முறையைச் செயல்படுத்தும் வகையில், அரசாணை (நிலை) எண் 303, வருவாய்த் [நி.அ.II (2)] துறை, நாள் 27.12.2016 வெளியிடப்பட்டது. இந்த முறையின்கீழ், மனுதாரர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில், இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக விண்ணப்பித்துக் கொள்ளலாம், அவர்களுக்கு உடனடியாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக, இந்தப் பட்டா மாறுதல் கோரும் மனு மீது work flow based system-ன்கீழ் இணையதள வழியாகத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (SMS) மூலமாக மனுதாரருக்கு அனுப்பப்படுகின்றது. இந்தக் கூடுதல் தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி, மனுதாரர் சிட்டா நகலையும், “அ” பதிவேடு நகலையும் இணையதளம் வழியாக “எந்த நேரத்திலும் எங்கிருந்து வேண்டுமாயினும்” (anytime anywhere) என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்புக் குறியீடு (Quick Response - QR code) இணைக்கப்பட்டு இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது, மாநிலத்தில் 303 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு வட்டங்களில் (கொல்லிமலை வட்டம் - நாமக்கல் மாவட்டம்/ வால்பாறை வட்டம் - கோயம்புத்தூர் மாவட்டம்) இத்திட்டத்தினை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, பொது மக்களுக்கு பட்டா மாறுதல் வழங்கும் சேவையில் மிகுந்த வெளிப்படைத் தன்மையையும், நம்பகத்

தன்மையையும் உறுதி செய்வதுடன், உடனுக்குடன் பட்டா வழங்கிடவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1.4.2018 முதல் 31.3.2019 வரையிலான காலத்தில், இந்த திட்டத்தின்கீழ், 32 மாவட்டங்களிலும், மொத்தம் 27,26,630 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 11,95,353 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இணையவழி பட்டா மாற்றம்

1.4.2018 முதல் 31.3.2019 வரை



3.1.2 பத்திரப் பதிவுத் துறையுடன் பட்டா மாற்றம் குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

பத்திரப் பதிவுத் துறையில் மேற்கொள்ளப்படும், சொத்துப் பரிமாற்றங்கள் குறித்தான பதிவுகள்அனைத்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆவணங்களில் பிரதிபலித்தால் மட்டுமே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பதிவுகள் நாளது தேதி வரையிலான விவரங்களைக் கொண்டனவாக அமையும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் விதமாக, சார்-பதிவாளர் அலுவலகங்கள் மூலமாகவும் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. நிலம் தொடர்பான அனைத்துப் பதிவுகளும், ஒவ்வொரு வாரமும், வட்டாட்சியர்

2019 ஜூலை 17]

அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, இணையதள வழியாக வருவாய்ப் பதிவுகளில் (இணையதள Tamilnilam land records database) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம், நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி மீண்டும் மனு செய்வது தவிர்க்கப்படுகின்றது. மேலும், இணையவழி பட்டா மாறுதல் தொடர்பாக சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குமான ஒருங்கிணைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

3.2 அரசு நில விவர வங்கி

நில மாற்றம், நிலக் குத்தகை மற்றும் நில ஒப்படை ஆகியவற்றை சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்கள் குறித்த ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பு, சென்னையிலுள்ள மாநிலத் தகவல் தொகுப்பு மையத்தில் உருவாக்கப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்குத் தேவையான விவரங்கள், மேற்படி தகவல் தொகுப்பிலுள்ள விவரங்களைச் சரிபார்த்து, அரசுத் துறைகளுக்கான நில மாற்றம் மற்றும் அரசு நிறுவனங்களுக்கான நில உரிமை மாற்றம் மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. தேசியத் தகவல் மையம் இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவியினை வழங்கி வருகின்றது. இத்தகவல் தொகுப்பின் அடிப்படையில், அரசு நில விவரப் பதிவேடு அச்சிடப்பட்டு, சீரிய முறையில் அரசு நிலங்களைப் பார்வையிடவும், பாதுகாக்கவும் அனைத்து கிராம நிருவாக அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களின் நிலை குறித்து, கிராம நிருவாக அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பதிவேட்டில் தற்போதைய நிலை குறித்து பதியப்படும் விவரங்கள், மத்திய தகவல் தொகுப்பில் உள்ள அரசு நிலங்கள் குறித்த தற்போதைய தகவல்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமையும்.

3.3 தொன்மையான நில ஆவணங்களைக் கணினி மயமாக்குதல்

தொன்மையான நில ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்ட அலுவலகங்களில் உள்ள தொன்மைவாய்ந்த மதிப்புமிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவற்றை எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பாதுகாக்கும்

பொருட்டு, முதன் முதலாக கணினிமயமாக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, இத்திட்டமானது ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பாதுகாக்கப்பட்டுவரும், அசல் நிலவரித் திட்டப் பதிவேடுகள் (Original Settlement Registers), திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தொன்மைவாய்ந்த மதிப்பு மிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவை கணினிமயமாக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தில் 3,56,244 பக்கங்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4,62,445 பக்கங்களும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3,69,777 பக்கங்களும் கொண்ட பழைய கோப்புகள் மற்றும் ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த, 1,01,361 பக்கங்கள் கொண்ட மறு நில அளவைப் பதிவேடுகள் (Re-Settlement Register (RSR) இத்திட்டத்தின்கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆவணங்களை நடப்பு ஆண்டில் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.4 வீட்டுமனை ஒப்படை

தமிழகத்தில் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கப்படுகிறது. வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும். கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதிவாய்ந்த, வீடற்ற ஏழை மக்களுக்கு வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு கிராம நத்தம் நிலங்கள் போதுமானதாக இல்லாத நேர்வுகளில் வருவாய் நிலை ஆணை எண் 21(6)-ன்கீழ் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி ஆட்சேபகரமற்ற பிற அரசு புறம்போக்கு நிலங்களை நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து, தகுதியுள்ள வீடில்லா ஏழைகளுக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

வீட்டுமனை ஒப்படையைப் பொறுத்தவரையில், கிராமப் புறங்களில், ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம்

2019 ஜூலை 17]

ரூ.50,000/-க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா ஏழைக் குடும்பத்தினர் இலவசமாக வீட்டுமனை பெறத் தகுதியுடையவராவர். வீட்டுமனைகள், குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே ஒப்படை செய்யப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கிராமபுறங்களில் மூன்று சென்ட் நிலம், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் நிலம், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் நிலம் என்ற அளவில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

2018-2019 ஆம் ஆண்டில், 3,00,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இலக்கையும் விஞ்சி, 3,00,146 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 248, வருவாய்த் துறை, நாள் 28.7.2009-ன்கீழ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கு, வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு, வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பு (ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு) கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.1

வீட்டுமனை ஒப்படைக்கான நிதி அதிகார உச்சவரம்பு

வ. எண்	அலுவலர்கள்	நிதி அதிகார உச்ச வரம்பு (நில மதிப்பு-ரூபாயில்)
1	வட்டாட்சியர்	30,000/-
2	கோட்டாட்சியர்	50,000/-
3	மாவட்ட வருவாய் அலுவலர்	1,00,000/-
4	மாவட்ட ஆட்சித் தலைவர்	4,00,000/-
5	நில நிருவாக ஆணையர்	5,00,000/-
6	அரசு	5,00,000/-க்கு மேல்

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு, தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் 2018-2019 ஆம் நிதியாண்டு வரையில், 20,50,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி மொத்தம் 23,00,922 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் கீழ்கண்டுள்ள விவரப்படி இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன

அட்டவணை 3.2

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரம்

ஆண்டு	இலக்கு	வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்
2011-2012	1,00,000	1,21,804
2012-2013	1,00,000	1,31,299
2013-2014	2,00,000	2,17,723
2014-2015	3,00,000	3,81,708
2015-2016	3,50,000	4,05,111
2016-2017	3,50,000	3,54,745
2017-2018	3,50,000	3,88,386
2018-2019	3,00,000	3,00,146
மொத்தம்	20,50,000	23,00,922

ஊரகப் பகுதிகளிலுள்ள நீர்நிலை போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள நீண்டகால குடியிருப்பு ஆக்கிரமணங்களை அகற்றி, அதனை உரிய செயல்பாட்டிற்கு உட்படுத்தும் வகையிலும், ஏழைக் குடும்பங்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஒரு சிறப்பு வரன்முறை திட்டம் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 465, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 27.11.2018-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு மூலம் ஆக்கிரமணம் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்தி மாற்று இடம் தேர்வு செய்து, அவர்களின் தகுதியின் அடிப்படையில் உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நீர் நிலைகளைத் தவிர்த்து, ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலங்களில் குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமணங்களைக் கணக்கிடப்பட்டதன் அடிப்படையில், அதே கிராமத்தில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் மாற்று இடம் தேர்வு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்கள் இல்லாத நிலையில், தனியார் பட்டா நிலங்களை கையகப்படுத்தி/ நேரடி பேச்சு வார்த்தைமூலம் விலைக்குப் பெற்று ஆக்கிரமணதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் நபர்களுக்கு ஊரக வளர்ச்சித்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் வீடுகட்ட வசதி செய்திடப்படும். மாற்றுப் புலத்தில் 3 சென்ட்

2019 ஜூலை 17]

அளவிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு, பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமான வரம்பாக ரூபாய் ஒரு இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு அதிகமாக உள்ள பயனாளிகளுக்கு நிலக்கிரையம் வசூல் செய்து கொண்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும். இச்சிறப்பு வரன்முறைத் திட்டம் 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். இத்திட்டமானது மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள நீண்ட காலக் குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 496, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24.12.2018-ல் சிறப்பு வரன்முறைத் திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நேர்வில், சுமார் 1,26,066 குடியிருப்பு ஆக்கிரமணங்கள் கண்டறியப்பட்டு, சிறப்பு வரன்முறைத் திட்டத்தின்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.5 நில மாற்றம்

வருவாய் நிலை ஆணை எண் 23-ன்கீழ், மத்திய அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையத்தை வசூலித்துக்கொண்டும், வருவாய் நிலை ஆணை எண். 23ஏ-ன்கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையமின்றியும் அரசு நிலங்கள் நில மாற்றம் செய்யப்படுகின்றன.

மத்திய/மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்பட்டால், கேட்புத் துறையானது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், கேட்புத் துறையின் தேவை மற்றும் இருப்பிலுள்ள தகுதியுடைய அரசு நிலங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், உத்தேச நில மதிப்பினை நிர்ணயம் செய்தும், உரிய முன்மொழிவினை, நில நிருவாக ஆணையரின் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பப்பட்டு, கேட்புத்துறைக்கு நில மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டு வருகிறது.

சுகாதாரம், கல்வி, காவல் போன்ற சில மாநில அரசுத் துறைகளைப் பொறுத்தமட்டில், அத்துறைகளின் அத்தியாவசியத் தேவைக்கேற்ப, ஆட்சேபணையற்ற அரசு நிலங்கள் நில மதிப்பு வரம்பின்றி, குறைந்தபட்ச நிலப்பரப்பினை அரசாணை (நிலை)

எண் 503, வருவாய்த் துறை, நாள் 21.9.1999-ன்படி நிலமாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நில மாற்றம் செய்யும்பொழுது, ஆட்சேபனையுள்ள நிலங்களான - நீர்நிலை, மயானம், பாதை போன்றவை தவிர்க்கப்படுகின்றன.

நிலமாற்ற நேர்வுகளுக்கு, மந்தைவெளி மற்றும் மேய்க்கால் வகைபாடுடைய அரசு புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நிலமாற்ற புலத்திற்குச் சமமான அளவுள்ள மாற்றுப்புலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களின் கூட்டுப்புலத்தணிக்கையில் கண்டறியப்பட வேண்டும். மேலும், கேட்புத்துறையான மாற்று நிலத்தின் மேம்பாட்டுப் பணிக்கான தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/- என்ற வீதத்தில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் செலுத்தப்பட வேண்டும். மாற்று நிலம் உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்புவிக்கப்பட்டு, அதன் உரிமை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையிடம் இருக்கும்.


நில மாற்றம் பெற்ற அரசுத் துறை, அவ்வாறு நில மாற்றம் பெற்ற நிலங்களை முறையாக அவை எந்த நோக்கங்களுக்காக நிலமாற்றம் செய்யப்பட்டதோ, அந்தப் பயன்பாட்டில் பரிபாலனம் செய்யப்படுவதை உறுதி செய்யப்படல் வேண்டும். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அனைத்து அரசு நிலங்களுக்கும் பாதுகாவலராக உள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, அரசுத் துறைகள், தாங்கள் நிலமாற்றம்மூலம் பெற்ற நிலங்களை சரிவர பயன்படுத்தாதபட்சத்தில், அத்துறையிடமிருந்து மேற்படி நிலங்களை மீளப்பெற்று, தகுதி மற்றும் தேவையுள்ள பிறிதொரு துறைக்கு நிலமாற்றம் செய்யும் உரிமையைத் தக்க வைத்துள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரையில், 4,396 ஏக்கர் அரசு நிலங்கள், கல்வி, நீதி, போக்குவரத்து, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப்பணி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மீன்வளம், அணுசக்தி, எல்லைப் பாதுகாப்புப்படை மற்றும் இராணுவம் போன்ற பல்வேறு மாநில/ மைய அரசுத்துறைகளுக்கு 543 இனங்களில் நில மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1.4.2018 முதல் 31.3.2019 வரையில் 186 ஏக்கர் அரசு நிலங்கள் 46 இனங்களில் நில மாற்றம் செய்து அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

2019 ஜூலை 17]

நிலமாற்றம் - ஏக்கரில்

01.04.2018 முதல் 31.03.2019 வரை



வெளியிடப்பட்ட அரசாணைகளின் எண்ணிக்கை	*46*
பிரேரணைகளின் மொத்த எண்ணிக்கை	*46*
நில மாற்றம் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம்	*186 ஏக்கர்*

3.6 நில உரிமை மாற்றம்

மாநில அரசு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், அதாவது சிட்கோ, சிப்காட், டான்ஜெட்கோ, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியன மற்றும் மத்திய அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் முறையே இரயில்வே, விமான நிலைய விரிவாக்கம், நெய்வேலி லிக்னைட் கழகம் ஆகியவை அரசு புறம்போக்கு நிலங்களை வழங்கக்கோரி அளிக்கும் கேட்புப் படிவத்தின்படி, வருவாய் நிலை ஆணை எண் 24-ன்கீழ், மேற்படி நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கும், பொதுப் பயன்பாட்டிற்கும் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றைப்போல், இந்த வருவாய் நிலையாணைப்படி அரசு நிலங்கள் தனியார் நிறுவனங்களுக்கும், அவர்தம் கோரிக்கைகள் உண்மையாகவும், அரசு நிலங்களின் தேவைக்கேற்றாற்போல் குறிப்பிட்ட அளவிற்குட்பட்டு வழங்கப்படும். நில உரிமை மாற்றம்

[2019 ஜூலை 17

செய்யப்படும் இனங்களில், வணிக நோக்கமில்லா இனங்களுக்கு, நிலத்திற்கான தொகையாக ஒரு மடங்கு சந்தை மதிப்பும் வணிக நோக்கமுடைய இனங்களுக்கு, நிலத்திற்கான தொகையாக, இரு மடங்கு சந்தை மதிப்பும் வசூலிக்கப்படும். நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட இனங்களில், நிலங்கள் எந்த நோக்கத்திற்கு உரிமை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதோ, அந்த நோக்கத்திற்கல்லாமல், வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டால், அரசால் நில உரிமை மாற்றம் மேற்கொள்ளப்பட்ட நிலம் எவ்வித ஈட்டுத்தொகையும் வழங்காமல் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொது மக்களின் நலன்கருதி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, குடிநீர் வழங்கும் திட்டம், கழிவுநீர் அகற்றல் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவைகளின் செயல்பாடுகளுக்கு, நிலக்கிரையமின்றி, இலவசமாகவே, சிறப்பு நேர்வாக, நில உரிமை மாற்றம் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்றே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்த அடுக்குமாடி குடியிருப்பு கட்டவும், நிலங்கள் அரசால் இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

அரசாணை (நிலை) எண் 426, வருவாய்த் (நி.மு. 4) துறை, நாள் 29.9.2014-ன் வாயிலாக நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் குறித்த முன்மொழிவுகளின் ஆய்வு மேற்கொள்ளுதலின் தரம் தொடர்பாக எவ்வித சமாதானமுமின்றி உரிய நடவடிக்கையினைத் துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக, தலைமைச் செயலக அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் தலைவராகவும், நில நிருவாக ஆணையர் கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்துபவராகவும்/ உறுப்பினர் செயலராகவும் மற்றும் அதிக அளவில் நிலமாற்றம்/ நில உரிமை மாற்ற முன்மொழிவுகளுக்கு அரசின் இசைவு/ ஒப்புதல் பெறப்பட வேண்டிய துறைகளான பொதுப்பணி, கால்நடைப் பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய துறைத் தலைவர்கள் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றார்கள்.

அரசாணை (நிலை) எண். 632, வருவாய்த் [நி.மு.5(1)] துறை, நாள் 7.11.2008-ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, டான்ஜெட்கோ (TANGEDCO)-விற்கு எவ்வித நிதி வரம்புமின்றி, ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில்


2019 ஜூலை 17]

முன்நுழைவு அனுமதியினை வழங்குவதற்கு ஏதுவாக, அரசாணை (நிலை) எண் 344, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.மு.5(1)] துறை, நாள் 19.9.2018 பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆட்சேபகரமான புறம்போக்கு நேர்வுகளில், சம்பந்தப்பட்ட துறைகளின் ஆட்சேபனையின்மைச் சான்று பெறப்பட்டவுடன், அரசின் ஒத்திசைவிற்காகக் காத்திராமல் அவற்றை உரிய மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பி, முன்நுழைவு அனுமதியினை அரசாணை (நிலை) எண் 632, வருவாய்த் துறை, நாள் 7.11.2008-ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரையில், மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவைகளிடமிருந்து பெறப்பட்ட 441 இனங்களில் 5,052 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள், பொது நோக்கங்களுக்காக நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 01.04.2018 முதல் 31.03.2019 வரையில், 1,564 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள் 82 இனங்களில், நில உரிமை மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளன.

நில உரிமை மாற்றம் - ஏக்கரில்

01.04.2018 முதல் 31.03.2019 வரை



வெளியிடப்பட்ட அரசாணைகளின் எண்ணிக்கை	:	*82*
பிரேரணைகளின் மொத்த எண்ணிக்கை	:	*82*
நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம்	:	*1,564 ஏக்கர்*

[2019 ஜூலை 17

3.7 நிலக் குத்தகை

வருவாய் நிலை ஆணை எண்.24ஏ-ன்கீழ் உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக அரசு புறம்போக்கு நிலங்கள்/ கட்டடங்கள்/ நிலத்துடன் கூடிய கட்டடங்கள் தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகின்றன. பொது நலன் மற்றும் சமூக மேம்பாட்டு அடிப்படையில் செயல்படும் அமைப்புகளுக்கு அவசியம் என கருதும்பட்சத்தில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகைக்கு வழங்கப்படுகிறது.

(அ) குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை வேறு நபருக்கு உள் குத்தகைக்கோ/ வாடகைக்கோ /குத்தகை உரிமையை கிரையம் செய்யவோ அனுமதி கிடையாது.

(ஆ) குத்தகை நிபந்தனை மீறப்படின், நடைமுறையிலுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி நிலக்குத்தகை இரத்து செய்யப்பட்டு, எவ்வித இழப்பீடுமின்றி, குத்தகை நிலம் அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

(இ) குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம் எந்தப் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

(ஈ) குத்தகையைப் புதுப்பித்தல் மற்றும் குத்தகைத் தொகை மறு நிர்ணயம் செய்தல் தொடர்பான முன்மொழிவுகள் இறுதி ஆணையினை எதிர்நோக்கி, பரிசீலனையில் உள்ள நேர்வுகளில், குத்தகைத் தொகை அதிகமாவதை தவிர்க்கும் பொருட்டு, ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குத்தகைத் தொகையில் ஆண்டிற்கு 12% கருத்தியலான (Notional) உயர்வு அளித்து உத்தேச குத்தகைத் தொகை வசூல் செய்யப்பட வேண்டும்.

குத்தகைக்கு வழங்கப்படும் அரசு நிலங்களுக்கு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்ய, மாதிரி நிலம் தேர்வு செய்யப்பட்டு அதன் விற்பனை மதிப்பு மற்றும் வழிகாட்டி மதிப்பீட்டின் மதிப்பு இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் சந்தை நில மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி, வணிகமற்ற நோக்கங்களுக்கு, நில மதிப்பில் 7

விழுக்காடும், (தலவரி, தலமேல்வரி உட்பட) வணிக நோக்கங்களுக்கு நில மதிப்பில் 14 விழுக்காடும் (தலவரி, தலமேல்வரி உட்பட) ஆண்டுக் குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்டகாலக் குத்தகை இனங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அப்போது நிலவும் சந்தை மதிப்பின் அடிப்படையில், மாவட்ட நிருவாகத்தால், குத்தகைத் தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. பொது நலன், சமூக மேம்பாடு மற்றும் வணிக நோக்கமற்ற அமைப்புகளுக்கு குத்தகை அனுமதிக்கப்பட்ட இனங்களில், சிறப்பு நேர்வுகளில் குறைந்தபட்ச குத்தகைத் தொகை அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் இனங்களில் நில மதிப்பின்படி, வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு, அரசாணை (நிலை) எண் 527, வருவாய்த் (நி.மு.2(1)) துறை, நாள். 28.11.2014-ன்படியும், மற்றும் அரசாணை (நிலை) எண் 55, வருவாய்த் (நி.மு.2(1)) துறை நாள் 24.2.2017 இன்படியும் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3

அலுவலர்கள்	நிதி அதிகார வரம்பு (நில மதிப்பில்)	
	நிலக் குத்தகை புதிய இனங்களுக்கு) (ரூபாய்)	குத்தகையைப் புதுப்பித்தல் (ரூபாய்)
வட்டாட்சியர்	ஏதுமில்லை	ஏதுமில்லை
வருவாய் கோட்டாட்சியர்	50,000/- வரை	ஏதுமில்லை
மாவட்ட வருவாய் அலுவலர்	1,00,000/- வரை	ஏதுமில்லை
மாவட்ட ஆட்சித் தலைவர்	4,00,000/-வரை	10,00,000/-வரை
நில நிருவாக ஆணையர்	5,00,000/- வரை	25,00,000/-வரை
அரசு	5,00,000/-க்கு மேல்	25,00,000/-க்கு மேல்

2018-2019 ஆம் நிதியாண்டில் குத்தகைத் தொகையாக ரூ.73,90,43,439/- வசூல் செய்யப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

3.8 உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

தமிழகக் கடற்கரைப் பகுதியில் உள்ள அரசு நிலங்களில் உப்பு மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு வருவாய் நிலை ஆணை எண்.24A-ன்கீழ் உப்பளக் குத்தகை அடிப்படையில் தற்காலிகமாக குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படுகின்றன.

உப்பளக் குத்தகை வழங்கப்படும் நிலங்களுக்குக் குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது:-

அட்டவணை 3.4

1.	குத்தகைத் தொகை	ரூ.5/-வீதம் ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு
2.	உரிமத் தொகை	உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/- வீதம் குறைந்த பட்சமாக ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு ரூ.100/-
3.	தலவரி 100%	ரூ.5/- ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு
4.	தலமேல்வரி 500%	ரூ.25/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு
	மொத்தம்	ரூ.135/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு

உப்பு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, உப்பளக் குத்தகைத் தொகை மற்றும் உரிமத்தொகை தமிழகத்தில் குறைவானதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

3.9 அரசு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதிப்பதற்கு அனுமதி

வருவாய் நிலை ஆணை எண் 24A-ன்கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதித்து, வணிகம் மற்றும் வணிகமற்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு, தனி நபர், தனியார் அமைப்பு, நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, தட வாடகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், விவசாயப் பயன்பாட்டிற்காக அரசு நிலங்களில் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லப்படும் இனங்களில் தடவாடகை அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளது.

3.10 நில மாற்றம்/ நில உரிமை மாற்றம்/ குத்தகை- கண்காணிக்கும் முறை

கணினி வழியாக, நிலமாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை தொடர்பான இனங்களில், மாநிலம் முழுவதிலுமிருந்து பெறப்படும் முன்மொழிவுகள் நில நிருவாக ஆணையரகத்தால்

2019 ஜூலை 17]

கண்காணிக்கப்பட்டு, மாவட்ட அலுவலர்களின் நடவடிக்கையினைத் துரிதப்படுத்தி, நிலம் தொடர்பான முன்மொழிவுகளைத் துரிதமாக முடிவு செய்து, திட்டப் பணிகளுக்கான அரசு நிலங்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.11 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களை பாதுகாப்பதும், ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் கண்காணிப்பதும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் முதன்மையான பணியாகும்.

அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகள் கண்டறியப்படின், அவற்றை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன:-

1. *தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905,*
2. *தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920,*
3. *தமிழ்நாடு பொது வளாகங்கள் (ஆக்கிரமிப்பாளர்களை) வெளியேற்றுதல் சட்டம், 1975,*
4. *தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1994,*
5. *தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 மற்றும்*
6. *தமிழ்நாடு நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007.*

அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20-1-1987-ல், நீர்நிலை ஆதாரங்களான, குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில், மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைப் பொதுப் பயன்பாட்டிற்கோ, வீட்டுமனை வழங்குவதற்கோ தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20-01-1987-ஐ வலியுறுத்தியும், அதனைத் தவறாது கடைப்பிடிக்குமாறும், அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29-4-2003-ல் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேராணை எண் 20186/2000-ல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், நீர்நிலைகளைப்

பாதுகாத்து, அவற்றை, அவற்றின் பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதராங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறை/ நீர்வள ஆதாரத் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு உச்ச நீதிமன்ற சிறப்பு விடுப்பு மனு எண் 3109/2011 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண் 1132/2011 ஆகியவற்றின்மீது வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு, அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்து, அதன்படி ஆக்கிரமணங்களை அகற்றி, அந்நிலங்களைச் சமுதாய பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண் 26722/2013 மற்றும் பல்வகை மனு எண் 1/2013-ன்மீது, 11-8-2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் “பாதிக்கப்பட்ட நபர்கள் புகார் அளிக்கவும் மற்றும் தீர்வு நடவடிக்கைகளைத் தவறாது மேற்கொள்ளவும் மாநில அரசு வழிவகை செய்ய வேண்டும்” என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண் 26722/2013-ன்மீது 8-10-2014 அன்று வழங்கப்பட்ட உத்தரவின்படி, அரசாணை (நிலை) எண் 540, வருவாய்த் (நி.மு6(2)) துறை, நாள் 4-12-2014 பிறப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில், பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களில் தெரிவிக்கப்படும் குறைகளை தீர்வு காண வட்ட, கோட்ட மற்றும் மாவட்ட நிலைகளில் மூன்று வெவ்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும் மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட வருவாய் நிருவாகக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் கண்காணிக்கப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண் 4614/2015-ன்மீது 31-3-2015 அன்று வழங்கிய தீர்ப்புரையில், அரசின் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை, தமிழ்நாடு நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

2019 ஜூலை 17]

சட்டம், 2007-ன்கீழ் அரசின் இதர புறம்போக்குகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக நடைமுறையில் இருப்பதுபோல, நீர்நிலைப் புறம்போக்குகளைக் கையாள்வதிலும் செயல்திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் பணித் துறை/ நீர்வள ஆதாரத் துறை அலுவலர்களையும் மேற்படி குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அரசாணை (நிலை) எண் 148, வருவாய்த் (நி.மு.6(2))துறை, நாள் 24-03-2016 வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண் 12821/2015 நாள் 19-6-2015-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 மிகவும் பழமையானது என்றும், 110 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது என்றும், தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்தில் கொண்டும், மீள ஆய்வு செய்ய வேண்டுமென்றும், விதிகள் பலப்படுத்தப்பட வேண்டுமென்றும், அதன்படி தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்திற்கான பொருத்தமான வரைவுத் திருத்தங்கள் கொண்டுவரப் பரிசீலனை செய்யத் தெரிவித்துள்ளது. அதன்படி, அரசாணை (நிலை) எண் 269, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 23-8-2017-ல், அரசு செயலாளர்கள் நிலையிலான குழு ஒன்று அமைக்க உத்தரவிடப்பட்டு, வருவாய்த் துறை செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சட்டத் துறை செயலர்கள் உறுப்பினர்களாகவும், நில நிருவாக ஆணையர் அவர்கள் ஒருங்கிணைப்பாளர்/ உறுப்பினர்-செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்திற்கான வரைவுத் திருத்தங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

3.12 நில எடுப்பு

பொது நோக்கத்திற்காக, மத்திய, மாநில அரசுகளின் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு, வேண்டுகோளின்பேரில், தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. 31-12-2013 வரை, மத்திய நில எடுப்புச் சட்டம், 1894 (மத்தியச் சட்டம் 1/ 1894)-ன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு, சமூகத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும்

பிற தேவைகளுக்கு நிலம் வழங்கவும், மேலும் தொழிற்சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை உட்கட்டமைப்பிற்காகவும், பின்வரும் மூன்று நில எடுப்புச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளது :-

1. *1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1978),*
2. *1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1999) மற்றும்*
3. *2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2002)*

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த, மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-ஐ இரத்து செய்து, புதிய நில எடுப்புச் சட்டமான "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், 2013 (மத்திய சட்டம் 30/ 2013" (The Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)-*ஐ மத்திய அரசு இயற்றி உள்ளது. இச்சட்டம் 1-1-2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தப் புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில்* (Process) *ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது.*

மேற்கண்ட மாநில அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்கீழ், நில எடுப்பு நடவடிக்கையைத் தொடர்ந்திடும் வகையில், மாநில அரசு, புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம், 1/2015-ஐ நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின்கீழ், புதிய நில எடுப்புச் சட்டத்தில், 4 ஆம் அட்டவணையில் உள்ள 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு பயன்கள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மேற்கண்ட மாநில அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையில், பிரிவு 105-ஏ சேர்க்கப்பட்டு, அதன்கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 5 ஆம் அட்டவணையில் இம்மாநிலச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இத்திருத்த மசோதாவுக்கு, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

2019 ஜூலை 17]

நிலம் கையகப்படுத்துதல் நடைமுறைகளில் தற்போது உள்ள கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அரசாணை எண் 23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 1 19-3-2018-ல், கீழ்க்கண்டவற்றை அரசு சிறப்பு முயற்சியாக அறிவித்துள்ளது.

“பெரிய அளவிலான திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நிலப் பராதீனம் நடைமுறைகளை நெறிப்படுத்துதல் (நடைமுறையில் உள்ள சட்டரீதியான தேவைகளை உள்ளடக்கி, தற்போது உள்ள கால அளவை குறைக்கும் பொருட்டு)”.

இது தொடர்பாக, பல்வேறு மையப்பொருள் தொடர்பான பரிந்துரைகளை வழங்க பணிக்குழு அமைக்கப்பட்டு, அப்பணிக் குழுவினால், அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-ன்கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில், மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-ன்கீழ் இடைக்கால சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கிடவும், புதிய மத்திய நில எடுப்புச் சட்டத்தின்கீழ், கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கிட உரிய வழிமுறைகள், அரசாணை (நிலை) எண் 88, வருவாய்த் துறை, நாள் 21-2-2014-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மாநில அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்கீழ் நில எடுப்பு தொடரப்பட்ட இனங்களிலும், இதேபோல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்ய, சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டு, மாநில அரசு விதிகள் முடிவு செய்யும் வரை இடைக்கால சரியீடு வழங்கப்பட்டு வந்தது.

நிலம் கையகப்படுத்துவதில், நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டத்தினை (RFCTLARR Act, 2013) *அமல்படுத்துவதற்கு ஏதுவாக, இச்சட்டத்திற்கான மாநில அரசின் விதிகள் இயற்றப்பட்டு, தமிழக அரசின் அரசாணை (நிலை) எண் 298, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20-9-2017-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய நில எடுப்புச் சட்டம், 2013, அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ளபடி, நில மதிப்பிற்கான பெருக்கல் காரணி* (Multiplier Factor) *நிர்ணயம் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 300, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20-9-2017-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தமிழ்நாடு மாநில விதிகள், 2017 மற்றும் பெருக்கல் காரணிகள்*

TRUTH ALONE TRIUMPHS

(Multiplier Factor) குறித்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழ் எண் 300, நாள் 21-9-2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்நாடு அரசு விதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பெருக்கல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு அரசால், அரசாணை (நிலை) எண் 13, தொழில் (சிப்காட்-நி.எ.) துறை, நாள் 21-2-2018 மற்றும் அரசாணை (நிலை) எண் 27, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 5-3-2018-ல் பிறப்பிக்கப்பட்டு, இடைக்கால சரியீடு வழங்கப்பட்ட இனங்களுக்கு, தற்பொழுது முழுமையான சரியீடு கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுக் காரியங்களுக்காக, தனியார் நிலங்களை நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் அரசு விரைவாகக் கையகம் செய்வதற்கு, ஏற்கனவே இருந்த அரசாணை (நிலை) எண் 103, வருவாய்த் (நி.எ.1 (1)) துறை, நாள் 28-2-2011-ல் நிர்ணயிக்கப்பட்ட நிதி வரம்பினை, புதிய நில எடுப்புச் சட்டத்தின்படியான சரியீட்டிற்கு ஈடாகப் பெறும் வகையில் உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நி.எ.1 (1)) துறை, நாள் 7-9-2017-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளன. உயர்த்தி வழங்கப்பட்டுள்ள நிதி வரம்பின் விவரம் கீழ்க்கண்டவாறு:

அரசாணை (நிலை) எண் 103, வருவாய்த் [நி.எ.1(1)] துறை, நாள் 28-2-2011			அரசாணை (நிலை) எண் 281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 7-9-2017			
மாவட்ட அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு	மாநில அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு	அரசு	நகர்ப்புறம்	மாவட்ட அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு	மாநில அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு	அரசு
ச.ம. / வ.ம. எது குறைவோ அதன் 150% நில மதிப்பு ரூ.1.00 கோடிக்கு மிகாமல்	ச.ம. / வ.ம. எது குறைவோ அதன் 150% நில மதிப்பு ரூ.1.00 கோடிக்கு மிகாமல்	ச.ம. / வ.ம. எது குறைவோ அதன் 150% மேல்		ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 225% நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மிகாமல்	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 225% நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மேல்	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 225% க்கு மேல்

2019 ஜூலை 17]

அரசாணை (நிலை) எண் 103, வருவாய்த் [நி.எ.1(1)] துறை, நாள் 28-2-2011			அரசாணை (நிலை) எண் 281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 7-9-2017			
			கிராமப்புறம் நகர்ப்புற எல்லையில் இருந்து 30 கி.மீ. வரை	நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மிகாமல் ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 275%	நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மேல் ச.ம/ வ. ம. எது அதிகமோ அதன் 275%	ச.ம / வ. ம.எது அதிகமோ அதன் 275% மேல்
			நகர்ப்புற எல்லையில் இருந்து 30 கி.மீ. முதல் 50 கி.மீ. வரை	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 325%	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 325%	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 325% மேல்
			நகர்ப்புற எல்லையில் இருந்து 50 கி.மீ. மேல்	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 425%	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 425%	ச.ம / வ. ம. எது அதிகமோ அதன் 425% மேல்

ச.ம. - சந்தை மதிப்பு / வ.ம. - வழிகாட்டி மதிப்பு

இதன்படி, நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நில எடுப்பு செய்யப்படும் நேர்வுகளில் சரியீடு வழங்கப்பட்டு வருகிறது.

3.13 சிறுபாசனப் புள்ளி விவரப் பகுத்தாய்வு (RMIS)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசின் நிதியுதவியுடன், சிறுபாசனப் பிரிவின் விரிவான தகவல்களை ஒருங்கிணைக்க, சிறுபாசனப் புள்ளி விவரப் பகுத்தாய்வுத் திட்டம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டத்தினை நடத்துவதற்கு, நில நிருவாக ஆணையர் மாநில சிறுபாசனக் கணக்கெடுப்பு ஆணையராகச் செயல்படுகிறார்.

[2019 ஜூலை 17

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது:-

1. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி, அதன்மூலம் தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களையும் கணக்கெடுத்தல்.
2. சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினைப் பகுத்தாய்வு செய்து, காலாண்டு மற்றும் ஆண்டறிக்கைகள் தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்புதல்.

3.13.1 ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு

5-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு, 2013-14 ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு கணக்கெடுக்கப்பட்டு முடிவடைந்துள்ளது.

அட்டவணை 3.6

5-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு முடிவுகள் பின்வருமாறு:-

(மேற்கோள் ஆண்டு 2013-14)

வ. எண்	திட்டத்தின் வகை		திட்டங்களின் எண்ணிக்கை	விழுக்காடு
1	நிலத்தடி நீர்த்திட்டம்	தோண்டப்பட்ட கிணறு	15,82,718	76.37
		ஆழம் குறைவான கிணறு	1,45,248	7.01
		நடுத்தர குழாய் கிணறு	73,622	3.55
		ஆழ்துளைக் குழாய் கிணறு	2,23,978	10.81
2	மேற்பரப்பு நீர்ப்பாசனத் திட்டம்	மேற்பரப்பு நீர்ப்பாசனத் திட்டம்	44,772	2.16
		நீரேற்று பாசனத் திட்டம்	2,179	0.10
மொத்தம்			20,72,517	100.00

2019 ஜூலை 17]

6-வது சிறுபாசன கணக்கெடுப்பு மற்றும் நீர்நிலைகள் கணக்கெடுப்பு (மேற்கோள் ஆண்டு 2017-2018)

தற்பொழுது, 6-வது சிறுபாசனக் கணக்கெடுப்புப் பணியானது, 2017-2018 ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு நடத்தப்படுகிறது. அதனுடன் முதன் முதலாக நீர் நிலைகளின் கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்பில், கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள அனைத்து நீர்நிலைகளும், அவை எவ்வித உபயோகமாக இருந்தாலும் கணக்கெடுக்கப்படுகின்றன. இக்கணக்கெடுப்பின் மூலமாக, நீர்நிலைகள் குறித்த விரிவான தரவுகள் கைப்பேசிச் செயலிமூலம் சேகரிக்கப்பட்டு, அவை வலுவான திட்டமிடலுக்கும், கொள்கைகளை வரையறை செய்வதற்கும் உதவியாக அமையும். மாநிலம் முழுவதும் அனைத்து மேற்பார்வையாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, தற்போது களப்பணி மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.

4. நிலச்சீர்திருத்தம்

நிலச்சீர்திருத்தத் துறையால் விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச்சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான எஞ்சிய பணிகள் முதலியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பூமிதான சட்டமும் 2006 முதல் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.1 நிருவாகக் கட்டமைப்பு

நிலச் சீர்திருத்த ஆணையர், ஆணையரகத்தின் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச் சீர்திருத்த இயக்குநர், இணை இயக்குநர், உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர்/ முதன்மைக் கணக்கு அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை எளிதில் அணுகி பயன்பெறும் வகையில், 2015 ஆம் ஆண்டில், நிலச் சீர்திருத்தத் துறை அரசால் மறுசீரமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்மூலம் மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் செயல்பட்டு வந்த 6 நிலச் சீர்திருத்த உதவி ஆணையர்கள் அலுவலகங்களுக்குப் பதிலாக, சென்னை நீங்கலாக 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் ஒரு நிலச்சீர்திருத்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறை மறுசீரமைக்கப்பட்டதின்படி, நிலச் சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள அதிகாரங்களின் அடிப்படையில் “அதிகாரம் பெற்ற அலுவலர்” மற்றும் “ஒப்படை வழங்கும் அலுவலர்” அதிகாரங்கள் சார் ஆட்சியர்/ வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட அளவில், பணி முன்னேற்றம், நிருவாக ரீதியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் நிலச் சீர்திருத்தப் பிரிவு பணியாளர்களின் உதவியோடு மாவட்ட ஆட்சியரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாவட்டங்களில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி சம்பந்தமான பணிகள் மற்றும் பூமிதான சட்டம் ஆகியவை மாவட்ட நிருவாகம்மூலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் தனித்துணை ஆட்சியர்கள் (துணை ஆட்சியர்) தலைமையில் 10 வருவாய் நீதிமன்றங்கள் பல்வேறு குத்தகைச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

நிலச் சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு:

அட்டவணை- 4.1

நிலச் சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்

வ. எண்	பணியிடங்கள் வகை	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையர்	1
2.	நிலச் சீர்திருத்த இயக்குநர்	1
3.	இணை இயக்குநர்	1
4.	நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்	1
5.	உதவி ஆணையர்கள் / துணை ஆட்சியர்கள்/ தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட	13
6.	கண்காணிப்பாளர்கள் / துணை வட்டாட்சியர்கள்	21
7.	நிரலர் (Programmer)	1

2019 ஜூலை 17]

வ. எண்	பணியிடங்கள் வகை	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
8.	உதவி நிரலர் (Assistant Programmer)	1
9.	உதவியாளர், உதவியாளர் நிலை தனி வருவாய் ஆய்வாளர்கள்	43
10.	சுருக்கெழுத்து தட்டச்சர் / தட்டச்சர்	35
11.	இளநிலை உதவியாளர்	21
12.	இதர பணியாளர்கள்	75
	மொத்தம்	214

4.2 நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நிலங்கள் ஒரு முக்கிய ஆதாரமாகும். தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 58/1961) மற்றும் திருத்தச் சட்டங்கள், விவசாய நிலங்கள் சிலரது வசம் மட்டுமே இருப்பதன்மூலம், விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை கையகப்படுத்தி, அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்கும் பொருட்டு இயற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.2.1 நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 மற்றும் திருத்தச் சட்டத்தின்படி 15.2.1970 முதல் நில உச்சவரம்பு கீழ்க்கண்டவாறு நடைமுறையில் உள்ளது:-

அட்டவணை - 4.2

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு

வ. எண்	வகைபாடு	அனுமதிக்கப்பட்ட பரப்பு
(i)	தனிநபர், நிறுவனம், சங்கம், தனியார் அறக்கட்டளை, கம்பெனி	15 தர ஏக்கர்
(ii)	5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் (ஐந்து நபருக்கு மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது) ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு	15 தர ஏக்கர் 30 தர ஏக்கர்

வ. எண்	வகைபாடு	அனுமதிக்கப்பட்ட பரப்பு
(iii)	ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் 15.2.1970 அன்று நிலங்கள் அவரது பெயரில் இருந்தால் சீதனமாக அனுமதிக்கப்படும் பரப்பு	10 தர ஏக்கர்
(iv)	1.3.1972 தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious nature)	சட்டத்திற்குள் வராது
(v)	1.3.1972 தேதியில் இருந்த தர்ம ஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature)	5 தர ஏக்கர்
(vi)	1.3.1972 தேதிக்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகளுக்கான உச்சவரம்பு (ஆனால் திருத்தப்பட்ட 29/87 சட்டத்தின்படி ஒரு பொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவமனைப் பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக் கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது)	இல்லை

இதுவரையில், 2,08,657 ஏக்கர் நிலங்கள் உபரியாக அறிவிக்கப்பட்டு, 1,90,722 ஏக்கர் நிலங்கள் 1,51,044 பயனாளிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

4.2.2 தர ஏக்கர்

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 3 (40)-ன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட புன்செய்/ நன்செய் நிலத்தீர்வையினை (Assessment) அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது:-

அட்டவணை 4.3

சாதாரண ஏக்கரிலிருந்து தர ஏக்கராக கணக்கீடு செய்தல்

புன்செய் நிலத்திற்கு

தீர்வை (Assessment) ஏக்கருக்கு	சாதாரண ஏக்கர்	தர ஏக்கர்
ரூ.1.25க்குக்கீழ்	4.00	1
ரூ.1.25 - 2.00	3.00	1
ரூ.2.00-க்குமேல்	2.50	1

2019 ஜூலை 17]

நன்செய் நிலத்திற்கு

தீர்வை (Assessment) ஏக்கருக்கு	சாதாரண ஏக்கர்	தர ஏக்கர்
ரூ.4.00-க்குக்கீழ்	2.00	1
ரூ.4.00 - 6.00	1.75	1
ரூ.6.00 - 8.00	1.60	1
ரூ.8.00 - 10.00	1.20	1
ரூ.10.00 - 15.00	1.00	1
ரூ.15.00-க்குமேல்	0.80	1

4.2.3 தொழில்/வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-A மற்றும் விதிகளின்படி, அரசு தொழில் அல்லது வணிக நிறுவனங்கள், 15.000 தர ஏக்கர் உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள நிலங்களை, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. திருத்திய சட்டம் 2018-ன்படி, ரூபாய் 20 கோடிக்குமேல் முதலீடு செய்யும் புஞ்சை நிலம் மட்டும் வைத்திருக்கும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 30.000 தர ஏக்கராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2011 ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரை தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வேளாண் சார்ந்த தொழில், ஆட்டோமொபைல், சூரிய மின் சக்தி, காற்றாலை மற்றும் பலவற்றுக்காக தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-A-ன்கீழ் 6388 ஏக்கர் நிலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.4 பொது அறக்கட்டளைக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-B மற்றும் விதிகளின்படி, பொது அறக்கட்டளைகள், கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

இதற்கு, பொது அறக்கட்டளைகள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2011 ஆம் ஆண்டு முதல் 31-3-2019 வரை மொத்தம் 39 பொது அறக்கட்டளைகளுக்கு 760.38 ஏக்கர் நிலங்கள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.3 வருவாய் நீதிமன்றங்கள்

நில உடைமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை, குத்தகைச் சட்டங்களின்கீழ் முடிவு செய்வதற்காக, மாநிலத்தில் முன்பு 6 வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2012-2013 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 4 கூடுதல் வருவாய் நீதிமன்றங்கள் தோற்றுவிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, புதிதாக 4 வருவாய் நீதிமன்றங்கள் திருநெல்வேலி, நாகப்பட்டினம், லால்குடி, மன்னார்குடி ஆகிய இடங்களில் 2013 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டன.

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், தற்போது மாநிலத்தில் கீழ்க்கண்ட பத்து வருவாய் நீதிமன்றங்கள் நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித்துணை ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன:-

1. கடலூர்	6. திருச்சிராப்பள்ளி
2. மயிலாடுதுறை	7. லால்குடி
3. திருவாரூர்	8. நாகப்பட்டினம்
4. தஞ்சாவூர்	9. மதுரை
5. மன்னார்குடி	10. திருநெல்வேலி

4.3.1 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

1-6-2011 முதல் 31-3-2019 வரை

1.	31-5-2011 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள்	9,806

2019 ஜூலை 17]

2.	*1-6-2011 முதல் 31-3-2019 வரை வரப்பெற்ற வழக்குகள்*	*43,520*
3.	*முடிவு செய்யப்பட்டவை*	*51,338*
4.	*31-3-2019 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள்*	*1,988*

1-4-2018 முதல் 31-3-2019 வரை

1.	*31.3.2018 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள்*	*2,915*
2.	*1.4.2018 முதல் 31.3.2019 வரை வரப்பெற்ற வழக்குகள்*	*3,988*
3.	*முடிவு செய்யப்பட்டவை*	*4,915*
4.	*31.3.2019 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள்*	*1,988*

வருவாய் நீதிமன்றப் பணிகள், கணினிமயமாக்கப்பட்டு முன்னேற்ற அறிக்கைகள் இணைய தளம்மூலம் பெறப்பட்டு தலைமையகத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

4.3.2 குத்தகைச் சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

(i) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)

நில உடமையாளருக்கு குத்தகைத் தொகைக் கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

(ii) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால்

செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள்.

(iii) *தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)*

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி, பொது அறக்கட்டளைகளின் நிருவாகத்தினை வரைமுறைப்படுத்தி வேளாண் நிலங்களை சொந்த சாகுபடி செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு, அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும். இச்சட்டம் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள்மூலம் தீர்வு செய்யவும் வழிவகை செய்கிறது.

(iv) *தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969*

(தமிழ்நாடு சட்டம் 10/69) இச்சட்டத்தில், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன்மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ், வட்டாட்சியர், குத்தகை உரிமையினைப் பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார்.

(v) *தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 திருத்தியவாறு*

இச்சட்டத்தில், குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, 1.4.1990 தேதியில்

2019 ஜூலை 17]

அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.3.3 விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்

மாநிலம் முழுவதும் (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் தவிர) விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச்சட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ் குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.4 பூமிதான வாரியம்

ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்ட பூமிதான இயக்கத்திற்கு நிலங்கள் தானமாகப் பெறப்பட்டன. அவ்வாறு தானமாகப் பெறப்பட்ட நிலங்கள் "தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம், 1958" (Tamil Nadu Bhoodan Yagna Act, 1958) *மற்றும் "தமிழ்நாடு பூமிதான யக்ஞ விதிகள், 1959"* (Tamil Nadu Bhoodan Yagna Rules, 1959)-*ன்படி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தின்மூலம் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.*

இவ்வாறு, 28,050 ஏக்கர் நிலங்கள் பூமிதான வாரியத்திற்கு தானமாக பெறப்பட்டுள்ளன.

நிலச்சீர்திருத்தத் துறை மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகு, இதுவரை பட்டா மாற்றம் செய்யப்படாமல் இருந்த 1439.84 ஏக்கர் நிலங்கள் பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா

மாற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 88.59 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

மாவட்டங்களிலிருந்து பூமிதான பணிகளின் முன்னேற்ற அறிக்கை இணையதளம்மூலம் பெறப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனையை தடுத்து பூமிதான நிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, பதிவுத் துறை புள்ளி விவரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, பூமிதான நிலங்களின் வழிகாட்டி மதிப்பு '0' (பூஜ்யம்) ஆக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனை நூறு சதவீதம் தடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதல்முறையாக இத்தகைய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011

- விவசாயிகள் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 10.9.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தின்கீழ் கிராம அளவில் உறுப்பினர்களைக் கணக்கெடுக்கும் பணி கிராம நிருவாக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு, கணக்கெடுப்புப் பதிவேடுகள் கிராம நிருவாக அலுவலர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

4.5.1 தகுதிகள்

18 வயது முதல் 65 வயது வரையுள்ள விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள், 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் குறு/ சிறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் மூல உறுப்பினர்களாகவும், அவர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் பதிவு செய்யப்படுவார்கள்.

2019 ஜூலை 17]

இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:-

அட்டவணை-4.4

மூலஉறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் விவரம்

1.	மூல உறுப்பினர்கள்	1,47,11,782
2.	சார்ந்து வாழும் உறுப்பினர்கள்	1,35,66,785
	மொத்தம்	2,82,78,567

- *இத்திட்டத்தின்கீழ் தகுதியின் அடிப்படையில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும், இறப்பு போன்ற காரணங்களுக்காக நீக்குதலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

- *இரட்டைப் பதிவினைத் தவிர்க்கும் பொருட்டு, உறுப்பினர்களின் விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டு, ஆதார் எண்களுடன் இணைக்கும் பணி தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் நடைபெற்று வருகிறது. மேலும், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் நிதியுதவி வழங்குதல் ஆகிய சேவைகளை, பொது சேவை மையத்தின்மூலம் வழங்குவதற்கான பணிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் தேசிய தகவல் மையம்மூலம் நடைபெற்று வருகிறது.*

- *இத்திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிப்பட்டு வருகிறது.*

4.5.2 நிதி உதவி

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:-

அட்டவணை - 4.5

மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளின் விவரம்

மூல உறுப்பினர்களுக்காக	சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக
1. திருமண உதவித்தொகை 2. முதியோர் ஓய்வூதியம் 3. உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி i. காசநோய் ii. புற்றுநோய் iii. எச்.ஐ.வி / எய்ட்ஸ் iv. இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis) v. கை, கால் முறிவு மற்றும் நிலைகுலைவு vi. நரம்பு சம்பந்தமான நோய் vii. முதுகு தண்டுவடம் பாதிப்பு viii. இதய நோய் ix. பார்வை இழத்தல் x. கல்லீரல் நோய் xi. சிறுநீரக நோய் xii. மனநிலைபாதிப்பு xiii. அரிவாள் செல் ரத்த சோகை xiv. ரத்த அழிவு சோகை xv. ரத்த உறையா நோய் 4. விபத்து நிவாரணம் 5. இயற்கை மரண உதவித்தொகை 6. ஈமச் சடங்கு செலவு	1. கல்வி உதவித்தொகை 2. திருமண உதவித்தொகை 3. எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை. 4. ஈமச்சடங்கு செலவு

4.5.3 இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- அரசின் வேறு எந்த திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை பெற்றிருந்தாலும், கல்விக்கான உதவித் தொகை இத்திட்டத்தின் கீழும் பெறலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2019 ஜூலை 17]

- *காசநோய், புற்றுநோய் முதலிய கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களுக்கு தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.*
- *எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியடையும் வரை மாத உதவித் தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.*
- *மூல உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவரைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான கல்வி மற்றும் திருமண உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.*
- *24.4.2017 முதல் இயற்கை மரணத்திற்கான நிவாரணத் தொகை ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.*
- *உறுப்பினர் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர் இறப்பின், ஈமச் சடங்குக்கான உதவித் தொகை ரூ.2,500/- இறப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க வலியுறுத்தாமலேயே வழங்கப்படுகிறது.*

4.5.4 உதவித் தொகை மற்றும் செலவு விவரம்

அ) மூல உறுப்பினர்களுக்காக

(1) திருமண உதவி

மூல உறுப்பினரின் திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/-மும் பெண்களுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 10.9.2011 முதல் 31.3.2019 வரை 45,561 பயனாளிகளுக்கு ரூ.38.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 6,961 பயனாளிகளுக்கு ரூ.5.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(2) முதியோர் ஓய்வூதியம்

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக மாதம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

(3) தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை

காசநோய், புற்றுநோய் போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

2012-13 முதல் 31.3.2019 வரை 1,98,285 பயனாளிகளுக்கு ரூ.149.72 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-19 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 39,886 பயனாளிகளுக்கு ரூ.41.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(4) விபத்து நிவாரணம்

விபத்தினால் உயிரிழந்த மூல உறுப்பினர்களின் குடும்பத்திற்கு நிதி உதவிமூலம் துயர்துடைக்கும் வகையில் விபத்து நிவாரணமாக ரூ.1,00,000/-மும், ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/-ம் வழங்கப்படுகிறது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு விபத்து நிவாரணம் வழங்கப்படுகிறது:-

அட்டவணை- 4.6

விபத்து காயங்களுக்கான உதவி

வ. எண்	காயங்களின் விவரம்	தொகை (ரூபாயில்)
(i)	இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் இழத்தல்	1,00,000
(ii)	ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல்	
(iii)	இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல்	
(iv)	ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல்	50,000
(v)	பக்கவாதம்	50,000
(vi)	மேலே குறிப்பிட்ட உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல்	20,000

10.9.2011 முதல் 31.3.2019 வரை 25,825 பயனாளிகளுக்கு ரூ.254.55 கோடி விபத்து நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2019 ஜூலை 17]

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை, 2,883 பயனாளிகளுக்கு ரூ.28.82 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(5) இயற்கை மரணத்திற்கான உதவி

மூல உறுப்பினர் இயற்கையாக மரணமடைந்தால், அவரது குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.20,000/- மற்றும் ஈமச் சடங்கு செலவுக்காக ரூ.2,500/- வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை 24.4.2017 முதல் ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

10.9.2011 முதல் 31.3.2019 வரை 3,92,811 பயனாளிகளுக்கு ரூ.542.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 54,736 பயனாளிகளுக்கு ரூ.114.47 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக

(1) கல்வி உதவி

இத்திட்டத்தின்கீழ், மூல உறுப்பிரைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு கீழ்க்கண்டவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது:-

அட்டவணை- 4.7

கல்வி உதவித் தொகை

வ. எண்.	கல்வி விவரம்	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்குவோர்	
		ஆண் (ரூ)	பெண் (ரூ)	ஆண் (ரூ)	பெண் (ரூ)
1.	தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic)	1250	1750	1450	1950
2.	கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1250	1750	1450	1950

3.	இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1750	2250	2000	2500
4.	முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு, (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	3250	3750
5.	சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	4250	4750
6.	முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டான்றுக்கு)	4250	4750	6250	6750

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகை நிறுத்தப்படும்.

10.9.2011 முதல் 31.3.2019 வரை 17,29,460 மாணவ, மாணவிகளுக்கு ரூ.417.51 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 1,97,510 மாணவ, மாணவிகளுக்கு ரூ.49.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(2) திருமண உதவி

இத்திட்டத்தின்கீழ், மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.8000/-மும் பெண்களுக்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

10.09.2011 முதல் 31.3.2019 வரை 3,44,035 பயனாளிகளுக்கு ரூ.299.47 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2019 ஜூலை 17]

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 32,109 பயனாளிகளுக்கு ரூ.27.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(3) எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை

மூல உறுப்பினர் எச்.ஐ.வி/ எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு, பெற்றோரை (ஒருவர்/ இருவரையும்) இழந்த 0-18 வயது வரை உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

2013-2014 முதல் 31.3.2019 வரை 5,105 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.4.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 727 பயனாளிகளுக்கு ரூ.0.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

4.5.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதியுதவி

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு மூல உறுப்பினருக்கு திருமணம், தற்காலிக உடல் திறனற்ற காலம், முதியோர் ஓய்வூதியம், விபத்து அல்லது இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவு ஆகியவற்றுக்காக அவரது குடும்பத்திற்கு மொத்தம் ரூ.32,500 முதல் ரூ.1,14,500 வரை நிதியுதவி கிடைக்க வழிவகை உள்ளது.

மேலும், மூல உறுப்பினரைச் சார்ந்து வாழும் உறுப்பினருக்கு கல்வி, திருமணம், ஈமச்சடங்கு செலவு ஆகியவற்றுக்காக அவரது குடும்பத்திற்கு மொத்தம் ரூ.11,750 முதல் ரூ.19,250 வரை நிதியுதவி கிடைக்க வழிவகை உள்ளது.

4.5.6 செயலாக்கம் (Performance)

1. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 10.9.2011 முதல் 31.3.2019 வரை 27,41,082 பயனாளிகளுக்கு ரூ.1706.05 கோடி வழங்கப்பட்டுள்ளது .

2. 2018-2019 ஆம் ஆண்டில் (31.3.2019 வரை) 3,34,812 பயனாளிகளுக்கு ரூ.268.65 கோடி கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:-

[2019 ஜூலை 17

அட்டவணை - 4.8

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2018-2019-ம் ஆண்டில் (31.3.2019 வரை) வழங்கப்பட்ட உதவி விவரம்

வ. எண்	உதவி விவரம்	தொகை (கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	கல்வி	49.17	1,97,510
2.	உறுப்பினர்களின் திருமணம்	5.88	6,961
3.	உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம்	27.46	32,109
4.	இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு	114.47	54,736
5.	விபத்து நிவாரணம்	28.82	2,883
6.	தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை	41.99	39,886
7.	எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை	0.86	727
	மொத்தம்	268.65	3,34,812


வரைபடம் 4.1

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011-ன்கீழ் 2011-12 முதல் 2018-19 (31.3.2019 வரை) பயனாளிகளின் வகைப்பாட்டினை காட்டும் விளக்கப்படம்



2019 ஜூலை 17]

வரைபடம் 4.2
முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011-ன் கீழ் 2011-2012 முதல் 2018-2019 (31.3.2019 வரை) பயனாளிகளின் வகைப்பாட்டினை காட்டும் விளக்கப்படம்



5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி துறையின் நோக்கங்கள்

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையானது (i) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 / நீக்கறவுச் சட்டம், 1999 மற்றும் (ii) தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966/ திருத்தச் சட்டம், 1991 ஆகிய இரு சட்டக்கூறுகளின் அடிப்படையில் இயங்கி வருகிறது. இவ்விரு சட்டங்களுள் முதலாவதாக கூறப்பட்டுள்ள முதன்மைச் சட்டம், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999-ன்படி 16.06.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது; இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள சட்டம் இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகிறது.

மேற்கூறப்பட்டுள்ள இரு சட்டங்களின் முக்கிய நோக்கங்களாவன:-

(i) *அனைத்து நகர்ப்புற நிலங்களையும் வரிவிதிப்புக் குட்படுத்துதல்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவது மற்றும்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2019 ஜூலை 17

(ii) *நகர்ப்புற நிலங்கள் மிகச் சில நபர்கள் கைவசம் மட்டுமே குவிந்துக் கிடப்பதையும், அந்நபர்கள் இலாபம் ஈட்டும் நோக்குடன் செயல்படுவதையும் தடுத்து, அனைவருக்கும் சமமான முறையில் நிலப் பங்கீடு செய்து கொடுப்பது.*

5.1 நிருவாக அமைப்பு

1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் கலைக்கப்பட்டது முதல் மாநிலத்தின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கி வரும் 5 துறைத் தலைமை அலுவலகங்களுள் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகமும் ஒன்றாகும்.

இவ்வாணையரகம் தற்போது முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவ்வாணையரகத்தில் தலைமையிடத்து உதவி ஆணையர் உட்பட 8 உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகின்றனர். தலைமையிடத்து உதவி ஆணையர் ஆணையரகத்தில் துறைத் தலைவரின்கீழ் இரண்டாம் நிலை அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். மீதமுள்ள 7 உதவி ஆணையர்களும் 'தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999 தொடர்பான பணிகள் அனைத்தையும் தங்கள் நகரக் கூட்டுப்பகுதியிலும், 'தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966/ திருத்தச் சட்டம் 1991'-ன்கீழ் வரிவிதிப்புப் பணிகளை சென்னை பெருநகரம், சென்னை புறநகர்ப் பகுதிகள் மற்றும் மாநிலத்தின் ஏனைய 21 மாவட்டங்களில் இச்சட்டப்பிரிவு நீட்டிக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் மேற்கொண்டு செயலாற்றி வருகின்றனர்.

5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999

முதன்மைச்சட்டம் இயற்றம்/ நடைமுறைப்படுத்துதல்

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறுகள் 39(பி) மற்றும் (சி)-ல் குறிப்பிட்டுள்ள

2019 ஜூலை 17]

கோட்பாடுகளை பாதுகாக்கும் பொருட்டு, மாநில அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்தவே, இச்சட்டம் 03.08.1976 முதல் இயற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இம்மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

முதன்மைச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட நாளான 03.08.1976 முதல் எந்தவொரு நகரக்கூட்டுப்பகுதியிலும் அமைந்துள்ள (வேளாண் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாத) நிலங்கள் 'நகர்ப்புற நிலங்களாக' வரையறுக்கப்பட்டன. ஒவ்வொரு நகரக் கூட்டுப்பகுதியிலும் தனிப்பட்ட நபர்/ஒரு குடும்பம்/தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான/அனுமதிக்கப்பட்ட மிகை வெற்று நிலங்கள் உச்சவரம்பு குறித்த விவரம் பின்வருமாறு:-

அட்டவணை-5.1

பிரிவு (5)-ன்கீழ் மிகை வெற்று நிலத்தின் உச்சவரம்பு

வ. எண்	நகரக் கூட்டுப்பகுதியின் பெயர்	வகைப்பாடு	தனிநபர் (ச.மீ)	குடும்பம் (4 நபர்கள் கொண்டது) (ச.மீ)	தொழில் நிறுவனம் (ச.மீ)
1.	சென்னை	I	*500*	*2000*	*2000*
2.	மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம்	II	*1500*	*3000*	*3000*
3.	திருநெல்வேலி	III	*2000*	*4000*	*4000*

5.3 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999, 16.06.1999 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. நீக்கறவுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்னரே முதன்மைச் சட்டப் பிரிவுகளின்கீழ் உடைமை எடுக்கப்பட்டு அரசு வசம் உள்ள மிகை வெற்று நிலங்களுக்கு நீக்கறவுச் சட்டப் பிரிவு 3(1)(எ)-இன்கீழ் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

[2019 ஜூலை 17

அட்டவணை 5.2
கையகப்படுத்திய நிலங்களின் நிலை

வ. எண்	விவரம்	பரப்பளவு சதுர மீட்டரில்
1.	சட்டத்தின்கீழ் கையகப்படுத்திய பரப்பு	1,89,79,446
2.	அரசுத் துறை/ அரசுத் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பரப்பளவு	44,21,058
3.	நில உடைமைதாரர்கள்/ அறியாமல் கிரயம் பெற்றவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்களின்கீழ் கவரப்படும் பரப்பளவு	33,07,489
4.	அறியாமல் கிரயம் பெற்றோர் திட்டத்தின்கீழ் வரன்முறை செய்யப்பட்ட பரப்பளவு	7,85,778
5.	நில உடைமைதாரர்கள்/ மற்றவர்களால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ள பரப்பளவு	93,93,706
6.	ஆக்கிரமணமில்லா நிலங்களின் பரப்பளவு	10,71,415


5.4 அறியாமல் பெற்ற கிரயத்தை வரன்முறை செய்யும் திட்டம்

முதன்மைச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 03.08.1976 முதல் இச்சட்டப் பிரிவுகளின்கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்கள் வீட்டு மனைப் பிரிவுகளாக மாற்றப்பட்டு பல்வேறு தனி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டன. ஒன்றுமறியாத பொதுமக்களில் பெரும்பாலானோர் சட்டப் பிரிவு 6-க்கு முரணாக கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களின் ஒரு பகுதி மனை/மனைகளை விலைக்கு வாங்கியுள்ளனர். எனவே, 03.08.1976 முதல் 31.12.1994 வரை நடைபெற்ற இத்தகைய அறியாக் கிரயங்களை ஒழுங்குபடுத்தும் பொருட்டு 1998 ஆம் ஆண்டு தமிழக அரசு "அறியாமல் கிரயம் பெற்ற நபர்களின் கிரயத்தை வரன்முறைப்படுத்துதல்" திட்டத்தை அறிமுகப்படுத்தியது. முன்னதாகப் பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 649, வருவாய்த் துறை, நாள் 29.07.1998-ல் வழங்கப்பட்ட நெறிமுறைகளின்படி குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் கிரயம் செய்யப்பட்ட 1½ கிரவுண்டுகளுக்கு மிகாத நிலங்களை மட்டும் உரிய நிலமதிப்புத் தொகையை வசூலிப்பதின் பேரில் வரன்முறை

2019 ஜூலை 17]

செய்ய ஆணையிடப்பட்டது. ஒவ்வொரு நகரக் கூட்டுப்பகுதியின் மண்டல மதிப்பின் அடிப்படையில் நிலமதிப்புத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. எனினும், இவ்வரசாணை அறியாமல் கிரயம் பெற்ற பலதரப்பட்ட நபர்களுக்கும் பொருந்தாத காரணத்தினால் இவ்வரசாணைக்குப் பதிலாக மற்றுமொரு அரசாணை (நிலை) எண் 565, வருவாய்த் துறை, நாள் 26.09.2008 பிறப்பிக்கப்பட்டது. இவ்வரசாணையில் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட நெறிமுறைகளின்படி 03.08.1976 முதல் 26.09.2008 வரை பதிவு செய்து கிரயம் பெறப்பட்ட குடியிருப்பு நோக்கம் மட்டுமல்லாது பிற நோக்கங்களுக்காகவும் கிரயம் செய்யப்பட்ட நிலங்கள் அனைத்தும் வரன்முறை செய்யப்படும். அரசிடமிருந்து வரன்முறை செய்ய இசைவு பெறப்பட்டதும், கிரயதாரர்கள் தாங்கள் அறியாமல் கிரயம் பெற்றுள்ள மொத்த பரப்பளவிற்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் ஒருமடங்கு/ இருமடங்கு/ மும்மடங்கு நிலமதிப்புத் தொகையை அரசுக் கணக்கில் செலுத்துவதின் பேரில் வரன்முறை செய்யப்படும். இத்திட்டத்தை மேலும் செம்மையாக நடைமுறைப்படுத்தும் வகையில் அரசாணை (நிலை) எண் 34, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நநிஉI(2)]துறை, நாள் 04.02.2019-இன்படி சில தெளிவுரைகள் வழங்கப்பட்டன. 01.04.2018 முதல் 31.03.2019 வரை 253 இனங்களில் கவரப்படும் மொத்தம் 58,287 சதுர மீட்டர் நிலங்கள் வரன்முறை செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்காலக்கட்டத்தில் அரசுக் கணக்கில் ரூ.3.66 கோடி நிலமதிப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.





5.5 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966/திருத்தச் சட்டம், 1991

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 இயற்றப்பட்டதன் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966 (i) *அனைத்து நகர்ப்புற நிலங்களையும் வரிவிதிப்புக்குட்படுத்துதல்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவது,* (ii) *நகர்ப்புற நிலங்கள் மிகச் சில நபர்கள் கைவசம் மட்டுமே குவிந்து கிடப்பதையும், அந்நபர்கள் இலாபம் ஈட்டும் நோக்குடன் செயல்படுவதையும் தடுத்து, அனைவருக்கும் சமமான முறையில் நிலப்பங்கீடு செய்து கொடுப்பது ஆகிய இரு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் (பிரிவு 19, 47 மற்றும் 48 தவிர) சென்னை நகரத்தில் 01.07.1963 அன்று முதல் முன்மேவு பலன் அளிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது.*

திருத்தச் சட்டங்கள்: இச்சட்டம் அவ்வப்போது பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது

திருத்தச் சட்டம் 1971	*01.07.1971 முதல் சேலம், கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நகராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டது.*
திருத்தச் சட்டம் 1975	*01.07.1975 முதல் முதன்மைச் சட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்த பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு, மேலும் சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.*

2019 ஜூலை 17]

திருத்தச் சட்டம் 1986	வருவாய் வாரியம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு பிரிவுகளின்கீழ் இயங்கி வந்த அலுவலர்களின் பதவிப் பெயர்கள் திருத்தம் செய்யப்பட்டன.
திருத்தச் சட்டம் 1991	01.07.1991 முதல் ஏற்கெனவே சட்டம் நடைமுறையில் இருந்து வந்த பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு, மேலும் 21 சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் 2 நகரியங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

இதற்கிடையில் நகர்ப்புற நிலவரிச் சட்டம், நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்துடன் சம எல்லையுடையதாக ஆக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966-இன் சட்டக்கூறுகள் திருநெல்வேலி நகரக் கூட்டுப்பகுதி மற்றும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுப்பகுதிகளின் புற எல்லைப் பகுதிகளுக்கு பசலி 1391 முதல் நீட்டிக்கப்பட்டன.

சந்தை மதிப்பு நிர்ணயம்

முதன்மைச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்களின்படி சந்தை மதிப்பு நிர்ணயம் பின்வருமாறு:-

சட்டத்தின் பெயர்	சந்தை மதிப்பு பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை நாள்
தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி முதன்மைச் சட்டம் 1966	01.07.1963
தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1975	01.07.1971
தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1991	01.07.1981

5.6 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரித் திருத்தச் சட்டம், 1991-ன் அறிமுகம்

இத்திருத்தச் சட்டத்தின் சட்டக் கூறுகள் மாநிலத்தின், ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில், கும்பகோணம், கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம் மற்றும் நாமக்கல் ஆகிய 21 சிறப்பு நிலை / தேர்வு நிலை நகராட்சிகளுக்கும் கொடைக்கானல் மற்றும் மேட்டூர் ஆகிய 2 நகரியங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

[2019 ஜூலை 17

வரி விகிதம்

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் முதல் வரி வீதமும் அவ்வப்போது சில திருத்தங்களுக்கு உட்பட்டு வந்தது. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1975-ன்கீழ் கடைசியாக பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது.

அட்டவணை 5.3

வரி விகிதம் அரசாணை (நிலை) எண் 2625

வருவாய்த் துறை, நாள் 27.12.1976-ன்படி

சென்னை புறநகர்ப்பகுதி தவிர ஏனைய நகர்ப்புற நிலங்கள்		சென்னை புறநகர்ப்பகுதி நகர்ப்புற நிலங்கள் மட்டும்	
நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு	வரி விகிதம்	நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு	வரி விகிதம்
முதல் 2 கிரவுண்டுகள் வரை	வரி இல்லை	முதல் 3 கிரவுண்டுகள் வரை	வரி இல்லை
மொத்தப் பரப்பளவு 2 கிரவுண்டுகளுக்கு மேல் 5 கிரவுண்டுகளுக்கு மிகாமல்	0.7%	மொத்தப் பரப்பளவு 3 கிரவுண்டுகளுக்கு மேல் 7 கிரவுண்டுகளுக்கு மிகாமல்	0.7%
மொத்தப் பரப்பளவு 5 கிரவுண்டுகளுக்கு மேல் 10 கிரவுண்டுகளுக்கு மிகாமல்	1%	மொத்தப் பரப்பளவு 7 கிரவுண்டுகளுக்கு மேல் 10 கிரவுண்டுகளுக்கு மிகாமல்	1%
மொத்தப் பரப்பளவு 10 கிரவுண்டுகளுக்கு மேல் 20 கிரவுண்டுகளுக்கு மிகாமல்	1.5%	மொத்தப் பரப்பளவு 10 கிரவுண்டுகளுக்கு மேல் 20 கிரவுண்டுகளுக்கு மிகாமல்	1.5%
மொத்தப் பரப்பளவு 20 கிரவுண்டுகளுக்கு மேல்	2%	மொத்தப் பரப்பளவு 20 கிரவுண்டுகளுக்கு மேல்	2%

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச் சட்டம் 1991-ன்கீழ் மாநிலத்தில் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலங்களாக அறிவிக்கை செய்யப்பட்டப் பகுதிகளில் இதுவரை 1.5 இலட்சம் வரிவிதிப்புதாரர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. நடப்புப் பசலி ஆண்டான 1428-ல் நகர்ப்புற நிலவரி கேட்புத் தொகையாக ரூ.19.17 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது.

2019 ஜூலை 17]

5.7 1991-ன் திருத்தச் சட்டப்பிரிவு 29-ன்கீழ் பின்வரும் இனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து சட்டபடியான விலக்களிக்கப்பட்டுள்ளது.

1. மாநில/ மத்திய அரசுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள்.
2. சென்னை மாநகராட்சி/நகராட்சி அவை/நகரியக் குழு/ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய அவை ஆகியவற்றிற்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள்.
3. மதச்சார்பு அமைப்புகளுக்குச் சொந்தமான, பொதுமக்கள் வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட நகர்ப்புற நிலம்.
4. அரசு மருத்துவமனை/அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அமைப்பின்கீழ் இயங்கி வரும் மருத்துவமனை/மாநில அல்லது மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று தனியார் அமைப்பின்கீழ் இயங்கி வரும் மருத்துவமனை அமைந்துள்ள நகர்ப்புற நிலங்கள்.
5. இடுகாடு/சுடுகாடு பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.
6. பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சாலைகள் அமைந்துள்ள நகர்ப்புற நிலங்கள்.
7. வாடகை/கட்டணம்மூலம் வருவாய் ஈட்டாத பொது நோக்கத்திற்காகப் பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.
8. மாநில அரசு/ பல்கலைக்கழகம்/ மத்திய கல்வி இடைநிலைக் கல்வி வாரியம், புது தில்லி/ இந்திய இடைநிலைக் கல்விக் குழுமம், புதுதில்லி இவற்றால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பள்ளிகள்/ கல்லூரிகள்/ கல்வி நோக்கத்துடன் நேரடியாகத் தொடர்பு உள்ள கல்வி நிறுவனங்கள் இயங்கி வரும் நகர்ப்புற நிலங்கள்.
9. பொதுப் பூங்காக்கள், பொது நூலகங்கள் மற்றும் அரசு அருங்காட்சியகங்கள் பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.
10. ஆதரவற்ற நபர்கள்/விலங்குகள்/அனாதைகள்/காது கேட்காத மற்றும் வாய் பேச இயலாதவர்களுக்கான இல்லங்கள் மற்றும் நலிந்தவர்கள்/ நோயாளிகள்/ முதியோர்/ பெண்கள் ஆகியோருக்கு அடைக்கலம் அளிக்கும் தொண்டு அமைப்புகளின் பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.

[2019 ஜூலை 17

5.8 அரசால் பின்வரும் இனங்களுக்கு நகர்ப்புற நிலவரி விதிப்பில் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(1) நில உரிமையாளர் குடியிருந்து வரும் கட்டடம் அமைந்துள்ள நகர்ப்புற நிலத்திற்கு 50% வரிச் சலுகை

(2) அனைத்து இசை மற்றும் நாடக மன்றங்களுக்கு 50% வரிச் சலுகை

(3) சிறிய திரையரங்குகளுக்கு 10% வரிச் சலுகை

(4) நில உரிமையாளர் குடியிருந்து வரும் நகர்ப்புற நிலத்தில் உரிமையாளருக்குச் சொந்தமான தொழில் நிறுவனம் இயங்கி வந்தால், சிறு-தொழில் நிறுவனத்திற்கான உரியச் சான்று பெறப்பட்டிருப்பின் 25% வரிச் சலுகை மற்றத் தொழில் நிறுவனங்களுக்கு 10% வரிச் சலுகை,

(5) சென்னை நகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சட்டப்பிரிவு 3(b)-ன்கீழ் குடிசைப்பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களுக்கு முழு வரிவிலக்கு

5.9 பிரிவு 27(1)-ன்கீழ் வரி விலக்களிக்க அரசு மற்றும் நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம்

அறக்கட்டளையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட குழுமங்கள்/ மதச்சார்பு அமைப்புகள்/மனித நேயத்துடன் தொண்டு புரியும் அமைப்புகள் வருமான வரித் துறை பிரிவு 12-ன்கீழ் விலக்கு பெற்றிருப்பின், நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் இடர்ப்பாடு ஏதும் நேரிடின் பிரிவு 27(1)-ன்கீழ் விலக்களிப்பு கோரி விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பங்கள் அரசால் அமைக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவால் உரிய சட்டவிதிகளின்படியும், நெறிமுறைகளின் படியும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, அரசின் பரிசீலனைக்கு பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. இந்த முன்மொழிவுகள் அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, பிரிவு 27(1)-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இறுதியாக அரசாணை பிறப்பிக்கப்படுகிறது.

நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு பின்வரும் இனங்களுக்கு வரிவிலக்களிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை/ ஆர்ச்டயோசிஸ்/ தென்னிந்திய திருச்சபை மற்றும் வக்ஃபு வாரியம் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்கள்

2019 ஜூலை 17]

ஆ) மாநில அரசு/இந்திய பல்கலைக்கழகம்/மத்திய அரசு அல்லது மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், புதுடெல்லி ஆகியவற்றால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொந்தமான நிலங்கள்

5.10பிரிவு 20-ன்கீழ் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் மேல்முறையீடு:

உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி) அவர்களால் விதிக்கப்படும் வரிவிதிப்பு குறித்து ஆட்சேபணை ஏதுமிருப்பின் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் யாதொரு வரி செலுத்துவோரும் மேல்முறையீடு செய்யலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்ட வருவாய் அலுவலரே தீர்ப்பாயத்தின் தலைவர் ஆவார்.

5.11 பிரிவு 30-ன்கீழ் நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ள சீராய்வு அதிகாரம்

கூடுதல் தலைமைச் செயலர்/ நிலச்சீர்த்திருத்த ஆணையரே தற்போதைய சீராய்வு ஆணை பிறப்பிக்கும் அதிகாரி ஆவார். 2019-2020 ஆம் ஆண்டில் 25 சீராய்வு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

6. நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

6.1. நில அளவை வரலாறு

நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் 1858 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 160 ஆண்டுகளை கடந்து பொதுசேவையில் தமிழக அரசின் மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாக இருக்கிறது.

இவ்வியக்குநரகம் முன்னாட்களில் மேற்கொள்ளப்பட்ட நிலஅளவை முறைகளுக்குப் பதிலாக தற்போது டிஜிட்டல் முறை நில அளவை நவீன கருவிகளான மின்னணு நிலஅளவைக்கருவி, பூகோள நிலைக்கலன் கருவி, வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் தொடர்ச்சியான இயக்கக் குறிப்பு நிலையங்கள் உள்ளிட்ட கருவிகளுடன் நில அளவைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நிலம் என்பது மனித இனத்திற்கு பெருமதிப்புள்ள ஆதாரமாகும். மனிதர்கள் எப்பொழுதும் தன் வசமிருந்த நிலத்தின் எல்லையை நிர்ணயம் செய்திட தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வந்துள்ளனர்.

[2019 ஜூலை 17

துவக்கத்தில், பெருமுக்கோண நில அளவைமுறை (Great Trigonometrical Survey) ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் துவக்கப்பட்டது. கர்னல் வில்லியம் லேம்ப்டன் என்பவர் தற்போதைய சென்னையின் புனித தாமஸ் மலை என்னும் பரங்கி மலையிலிருந்து சோழிங்கநல்லூர் வட்டத்தின் பெரும்பாக்கம் வரையிலான 12 கி.மீ. தூரத்தை அடிக்கோடாகக் கொண்டு, இப்பணியை மேற்கொண்டார். கி.பி. 1802 ஆம் ஆண்டில் இப்பணிக்காக இவர் கோணமானியைப் பயன்படுத்தினார்.

இவ்வியக்குநரகம், கீழ்க்கண்டுள்ள பல்வேறு வகையான நில அளவைப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்துள்ளது என்பதுடன், நவீன கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகளை மேற்கொண்டும் வருகிறது.

அட்டவணை 6.1

பல்வேறு வகையான நில அளவைப் பணிகள்

வ. எண்	நில அளவை வகை	ஆண்டு
1.	துவக்க நிலஅளவை	1826
2.	ரயத்துவாரி முதல் நிலஅளவை	1858
3.	மலைக்கிராம நிலஅளவை	1883
4.	நகர நில அளவையில் பிளாக் வரைபடங்கள்	1891-1894
5.	மறு நில அளவை	1905-1926
6.	நில உடைமை மேம்பாட்டுத் திட்டம்	1979-1987
7.	நத்தம் நில அளவை	1989-1992
8.	துணை நகர நில அளவை	1989-1997
9.	நவீன நகர நிலஅளவை	2002 முதல் நாளது வரை
10.	நவீன மறு நில அளவை	2016 முதல் நாளதுவரை

6.2 துறையின் அமைப்பு நிலை


நில அளவை இல்லத்தில் இயங்கிவரும் இவ்வியக்ககம், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வியக்ககத்தின்மூலம், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் சார்ந்த அனைத்துத் திட்டங்கள் மற்றும் அவை தொடர்பான இதரப் பணிகள், வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தி மற்றும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய நில அளவை அலுவலகம் இவ்வியக்ககத்தின் தொழில்நுட்பப்

2019 ஜூலை 17]

பிரிவாக விளங்குவதுடன், இது வரைபடங்களை தயாரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் செய்கிறது. மாவட்ட அளவிலான நில அளவை நடவடிக்கைகள் உதவி இயக்குநர்களின் தலைமையில் அமையப்பெற்ற மாவட்ட அலுவலகங்கள்மூலம் நில அளவர்கள், வரைவாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், வட்டாட்சியர் அலுவலகங்களில் நில அளவை துணை ஆய்வாளர்கள் தலைமையில் நில அளவைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிலப்பரிவர்த்தனையின்போது ஏற்படும் நிலஉரிமை குறித்த தேவையான மாற்றங்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் உள்ளிட்டவை நில அளவை துணை ஆய்வாளர்களின் முக்கிய கடமைகளில் சிலவாகும்.

இயக்ககத்தின் அமைப்பு விளக்கப்படம்



அட்டவணை 6.2.1

நில அளவைப் பிரிவிற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை

வ. எண்	பிரிவு	பணியிடங்களின் எண்ணிக்கை
1.	புலப் பிரிவு	5,548
2.	தொழில்நுட்பப்பிரிவு	2,094
3.	அமைச்சுப்பிரிவு	1,079
4.	இதர வகை	19
	மொத்தம்	8,740

6.2.2 வட்ட அலுவலகத்தில் நில அளவைப் பராமரிப்புப் பணி

பட்டா மாறுதல்கள் கோரி, பொது மக்களிடமிருந்து 'இ'சேவை மையங்கள் மூலமாகவும், பத்திரப் பதிவுத் துறையின் மூலமாகவும் பெறப்படும் விண்ணப்பங்கள் வட்ட அலுவலக நில அளவைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு தொடர்புடைய குறுவட்ட அளவர்களுக்கு இணையம் வழியாக (Firka Surveyor Dashboard) அனுப்பப்படுகின்றன. தொடர்ந்து, அவ்விண்ணப்பங்களின் மீதான புலத்தணிக்கைகளை முடித்து, குறுவட்ட அளவர்களால் உட்பிரிவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. பின்னர், அவற்றை வட்ட அலுவலக நில அளவை அலுவலர்கள் கூராய்வு செய்து அவ்வறிக்கையை வட்டாட்சியர்களின் ஆணைகளுக்காக முன்வைக்கின்றனர். அவற்றின்மீது வட்டாட்சியரால் தக்கவாறு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

6.3. நில அளவை திட்டங்கள்

6.3.1. நில உடமை மேலாண்மை திட்டம், நத்தம் நில அளவை மலைக்கிராமங்கள் அளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள்

1979 ஆம் ஆண்டில், நில உடமை பதிவு மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டு, விவசாயம் சார்ந்த அனைத்து பகுதிகளிலும் ஏற்பட்டிருந்த நிலப்பரிவர்த்தனைகள் புலத்தணிக்கை செய்யப்பட்டு, வருவாய் ஆவணங்களில் மேம்படுத்தப்பட்டன. பொதுமக்கள் தமது வாழ்விடங்களாகப் பயன்படுத்தி வரும் அரசுக்கு சொந்தமான 'நத்தம்' என்னும் நிலவகைப்பாட்டின் கீழான நிலங்களில் நில அளவை செய்து பட்டா வழங்கப்படுகின்றன. இதற்காக, நத்தம்

2019 ஜூலை 17]

நிலஅளவைத் திட்டப்பணி 1989-ல் தொடங்கி நடைபெற்றுள்ளன. தமிழகத்தில் 6 மாவட்டங்களைச்சார்ந்த 67 மலைக்கிராமங்களில் நிலஅளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நத்தம் அளவைப்பணி முடிந்து, அதனடிப்படையில் நிலவரித் திட்டப் பணிகள் நடைபெற்று பொதுமக்களுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

6.3.2 நகர அளவை

கடாஸ்ட்ரல் நிலஅளவை முறை கிராமப்புறங்களிலும் நகர நிலஅளவை முறை நகரப்பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகர நில அளவை முறையில் தெருக்களுடன், பிளாக் வாரியாக நிலஅளவை செய்யப்படுவதுடன், அவை குறித்த விவரங்கள் வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகர நில அளவைப் பதிவேடு மற்றும் சிட்டா எனப் பராமரிக்கப்படுகிறது. மேலும், புதிய பகுதிகள் நகராட்சிகளாகவும், மாநகராட்சிகளாகவும் அறிவிக்கப்படும் போது நகர அளவை முறைகளைக் கொண்டு, அப்பகுதிகள் புதிதாக அளவை செய்யப்படுகின்றன. தற்போது, தமிழ்நாட்டில், புதிதாக அறிவிக்கப்பட்ட ஆவடி மாநகராட்சி நீங்கலாக இதர 12 மாநகராட்சிகளில் பழைய எல்லைகளின்படி மரபு சார்ந்த முறைமூலம் நகர நில அளவைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 3 மாநகராட்சிகள் மற்றும் அவற்றின் விரிவாக்கப் பகுதிகளில் நவீன நில அளவைக் கருவிகளைக்கொண்டு நகர நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 9 மாநகராட்சிகளில் நவீன நில அளவை கருவிகள்மூலம் நகரளவைப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள 124 நகராட்சிகளில், 93 நகராட்சிகளில் மரபு சார்ந்த முறைகளின்படி நகர நிலஅளவைப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 31 நகராட்சிகளில் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட்டுள்ள 3 நகரங்களில் நில அளவைப் பணி நடைபெற்று வருகிறது. அவை தவிர 2 நகரங்களில் நீதிமன்ற வழக்குகள் காரணமாக நகரளவைப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. எஞ்சிய 26 நகரங்களில் நகரளவைப் பணியை துவக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.3.3 நவீன கருவிகளைக் கொண்டு நகர நில அளவைப் பணிகள்

நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு நகர நில அளவை செய்வது மில்லி மீட்டர் (மி.மீ) நிலையிலான துல்லியத் தன்மையை தருகிறது. இங்கு பிளாக் வாரியாக நிலங்கள் பகுக்கப்பட்டு, தெருக்களுடன்கூடிய கிராம எல்லைகள்மீது ட்ராவர்ஸ் அளக்கப்படுகிறது. இதனடிப்படையில் வார்டு வரைபடங்கள், பிளாக் வரைபடங்கள், நகர நிலப்பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

கணினிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் (வரை படங்கள்) பூகோள தகவல் அமைப்பு வெளியில் பதிவிடப்படுகின்றன. இலக்க முறைப்படுத்தப்பட்ட வரைபடங்களின்மீது செயற்கைகோள் வரைபடங்களை மேலடுக்குவதால் அரசு மற்றும் பொதுத் துறை நிலங்கள் ஆட்சேபணைக்குரிய வகையில் பயன்படுத்தப்படுவது எளிதாக கண்டறியப்படும் என்பதுடன் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இயலும்.

6.3.4 மறுநில அளவை

தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டம்—ஓசூர் வட்டம், நீலகிரி மாவட்டம்—கோத்தகிரி வட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் மறுநில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவிகள்-ஆர்.டி.கே (Differential Global Positioning System- Real Time Kinematic) முறை பயன்படுத்தப்படுகிறது.

மாநிலம் முழுவதிலுமுள்ள நிலப்பகுதிகளை 74 முக்கோணங்களாகப் பிரித்து அவற்றில் 70 இடங்களில் தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்கள் (Continuously Operating Reference Stations) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 4 இடங்களில் இம்மையங்களை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்விடங்களில், வட்ட அலுவலக/மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களின் உச்சியில், 6 முதல் 8 அடிகள் உயரத்தில், வட்ட வடிவ தூண்கள் பொதுப் பணித் துறையினரால் கட்டிமுடிக்கப்பட்டு அவற்றில் தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவற்றிற்குத் தேவையான தடையற்ற மின்சாரம் வழங்கும் கருவிகள்/மின்தாங்கிகள் உள்ளிட்ட கருவிகள் வழங்குதல் மற்றும் வலையமைப்பு ஆகியவை

2019 ஜூலை 17]

ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக இவ்வியக்ககத்தில் தேவையான வலையமைப்புடன் கட்டுப்பாட்டு மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு, நிறுவப்பட்டுள்ள தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையத்துடன் வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி- RTK *முறையில் மேற்கொள்ளப்படும் நிலஅளவைப்பணி மிக விரைவானதாகவும், மில்லி மீட்டர் (மி.மீ) அளவிலான துல்லியத்தன்மை கொண்டதாகவும் இருக்கும்.*

6.3.5 டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (Digital India Land Records Modernization Programme)

ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்த இரண்டு மத்திய அரசு திட்டங்களான நில ஆவணங்களை கணினிப்படுத்துதல் மற்றும் வருவாய் நிருவாகத்தை வலிமைப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் (CLR, SRA and ULR *திட்டங்கள்) ஆகியவற்றை ஒருங்கிணைத்து மத்திய அரசு, தேசிய நில ஆவணங்கள் நவீனமயமாக்கும் திட்டத்தினை* (NLRMP) *துவக்கியது. தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் 01.04.2016 முதல் "டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்"* (DILRMP) *என மறு உருவாக்கம் செய்யப்பட்டு அதற்கான 100 விழுக்காடு நிதி மத்திய அரசால் வழங்கப்படும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.*

இத்திட்டம் நில ஆவணங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்கு கூடுதல் சேவைகளை வழங்குவது, நிலம் சார்ந்த சொத்துக்களில் ஏற்படும் தகராறுகளைக் குறைப்பது, நில ஆவணங்களைப் பராமரிப்பதில் வெளிப்படைத் தன்மைகளை கூடுதலாக்குவது, போன்றவற்றிற்கும் இலக்கமுறை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நில உரிமையின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதற்கும் சிறப்பான கண்காணிப்பை மேற்கொள்வதற்கும் பயன்படுகிறது.

6.4 மாநிலத்தில் தற்போது உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நில ஆவணங்களின் வகைப்பாடுகள் கீழ்க்கண்டவாறு :-

6.4.1 ஊரகப் பகுதிகள்

- *'அ' பதிவேடு*
- *சிட்டா*

- *புலப்பட புத்தகம்* (FMB)
- *அடங்கல்*
- *கிராம வரைபடங்கள்*

6.4.2 நகரப் பகுதிகள்

- *நகர நில அளவைப் பதிவேடு* (TSLR)
- *பிளாக் வரைபடம்*

6.5 நில ஆவணங்களை கணினிமயமாக்கல்

நில ஆவணங்களை, கணினிப்படுத்துவதற்கும் அவற்றினை இணையம் மூலமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கவும், தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன், கீழ்க்கண்ட தேவையான மென்பொருள் செயலிகள் மற்றும் தரவு தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:-

- *தமிழ்நிலம் (ஊரகம்)*
- *கொலாப்லேண்ட்*
- *இணையவழி தமிழ்நிலம் (நகர்ப்புறம்)*

மாநிலத்திலுள்ள 305 வட்டங்களில் இதுவரையில் 289 ஊரக வட்டங்கள் மற்றும் 14 நகர்ப்புற வட்டங்கள் சார்ந்த நில ஆவணங்கள் தமிழ்நிலம் மென்பொருள்மூலம் இணையவழிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 ஊரக வட்டங்கள் இணையவழிக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.5.1 நத்தம் நில ஆவணங்கள்

மொத்தமுள்ள 1.42 கோடி நத்தம் நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினை இணைய வழியில் வெளியிடுவதற்காக கணினிப்படுத்தப்பட்ட நத்தம் ஆவணங்களை ஒப்பிட்டுச் சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக பெரம்பலூர் வட்டம் முன்மாதிரி வட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

6.5.2 நகர நில ஆவணங்கள்

மொத்தமுள்ள 37.87 இலட்சம் நகர நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. புதிதாக அறிவிக்கப்பட்ட ஆவடி

TRUTH ALONE TRIUMPHS

2019 ஜூலை 17]

மாநகராட்சியைத் தவிர இதர 12 மாநகராட்சிகள் மற்றும் மொத்தமுள்ள 124 நகராட்சிகளில் 92 நகராட்சிகளின் ஆவணங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நகர நில ஆவணங்களை இணையவழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது வரையில், 36 நகரங்கள் 3 மாநகராட்சிகள் மற்றும் சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 10 வட்டங்களின் நகர நில ஆவணங்களும் இணையவழிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இதர நகர்ப்புற வட்டங்களும், மாநிலத்திலுள்ள இதர நகர்ப்புற பகுதிகளான மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் சார்ந்த பகுதிகளும் விரைவில் இணையவழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.5.3 புலப்படங்களை கணினிப்படுத்துதல்

மொத்தமுள்ள 55.25 இலட்சம் புலப்படங்களில் இதுவரையில் 54.67 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 97% புலப்படங்கள் (mosaiced) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 3% புலப்படங்களை ஒருங்கிணைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு நில ஆவணங்களை கணினிமயமாக்கி அவற்றை இணையவழியில் வெளியிடுவதால், அவை பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைவதோடு நில அளவையில் இது ஒரு மைல் கல்லாகவும், அரசின் மிகப்பெரிய சாதனையாகவும் திகழ்கிறது.

6.5.4 நில ஆவண மேலாண்மை மையங்கள்

தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கையினால் வரைந்து தயாரிக்கப்பட்ட நில ஆவணங்களை பாதுகாப்பதற்கும், அவற்றை கணினிப்படுத்தி மின்நகலாக்கி (Digital) பாதுகாத்து பராமரிப்பதற்கும், அவற்றின் நகல்களை பொதுமக்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப வழங்குவதற்கும் ஏதுவாக அனைத்து வட்டங்களிலும் நில ஆவண மேலாண்மை மையங்கள்/ நவீன பதிவறைகள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நடைமுறைப்படுத்திவரும் அனைத்துச் சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கிட இம்மையங்கள் பயன்படுத்தப்படும். தற்போது, மாநிலத்திலுள்ள

[2019 ஜூலை 17

305 வட்டங்களில் இதுவரையில் 89 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து விடப்பட்டுள்ளன என்பதுடன் 203 வட்டங்களில் இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

6.6 தமிழில் வரைபடங்கள் தயாரித்தல் / கிராமம்-வட்டம்-மாவட்டம்

அனைத்து மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. கிராம வரைபடங்களை கணினிப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணி சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்ற பின்னர், கணினிமயமாக்கப்பட்ட மாவட்ட, வட்ட மற்றும் கிராம வரைபடங்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கிடைக்க வசதிகள் செய்யப்படும். தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் இந்த வரைபடங்கள் கிராம மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும். அரசின் அனைத்துத் துறைகளும் இணையம் மூலமாக வரைபடங்களைப் பதிவிறக்கம் செய்து அவர்களுடைய தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

6.6.1 துறையின் உள்கட்டுமான வளர்ச்சி

இத்துறை நவீனப்படுத்தப்பட்ட பொழுது, 1601 அலுவலர்களுக்கு இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினைச் செயல்படுத்த ஏதுவாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

314 உயர் அலுவலர்களுக்கும், குறுவட்ட அளவர்களுக்கும் 3ஜி தரவு அட்டைகள் இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினைக் கண்காணிக்கவும், செயல்படுத்தவும் வழங்கப்பட்டது.

உதவி இயக்குநர், மண்டல துணை இயக்குநர், மத்திய நிலஅளவை அலுவலகம் மற்றும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலுவலகங்களை வலுப்படுத்துவதற்காக கணினிகள், யு.பி.எஸ். பிளாட்டர்ஸ், ஸ்கேனர் மற்றும் தேவையான பாகங்கள் 2018-19-ம் நிதியாண்டில் ரூ.2.31 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

6.7 நில ஆவணங்களின் இணையவழி அமைப்பும் அதன் பயன்களும்

நில ஆவணங்கள் இணையவழியில் பராமரிக்கப்பட்டு வருவது பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களின் விவரங்களை அறிந்துகொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

2019 ஜூலை 17]

(அ) பொதுமக்களுக்கான பயன்கள்

- வட்ட அலுவலகங்களுக்கு செல்வதற்கு பதிலாக பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகில் அமைந்துள்ள பொதுச்சேவை மையத்தின் (Common Service Centre) மூலம் இணையவழியில் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- கணினிமூலம் அச்சிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக வழங்கப்படுவதுடன் அவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- பெறப்படும் விண்ணப்பங்கள் தக்க நடவடிக்கைக்காக உடனுக்குடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாற்றப்படுவதுடன் பொதுமக்கள் அவை குறித்த தற்போதைய நிலையினை http://eservices.tn.gov.in என்ற இணையதளம்மூலம் அறிந்துகொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கையின் விவரங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்திகளாக அனுப்பப்பட்டு வருகின்றன.
- டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட பட்டாவை வட்ட அலுவலகங்களுக்கு செல்லாமலேயே இணையம் வழியாக பதிவிறக்கம் செய்துகொள்ள இயலும்.

(ஆ) துறைக்கான பயன்கள்

- நிலஆவணங்களின் இணையவழி மேலாண்மை அறிமுகப்படுத்தப்பட்டதால் அலுவலர்களின் பணிப்பளு வெகுவாக குறைந்துள்ளது.
- அலுவலர்களின் வேறுபட்ட நிலையிலான பணித்திறன் உயர் அலுவலர்களால் இலகுவாக கண்காணிக்கப்படுவதால் புலத்தில் அவர்களுடைய பணியின் திறன் சிறப்பானதாக உள்ளது.
- இணையவழியில் விண்ணப்பங்கள் பெறப்படுவதால் ஆவணங்கள் எவ்வித விடுதலுமின்றி சிறந்த முறையில் நிருவகிக்கப்படுகிறது.

6.7.1 தமிழ்நிலம் மற்றும் பதிவுத் துறை தரவு தளத்தை இணைத்தல்

நில ஆவணங்கள் கணினிமயப்படுத்தப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. பதிவுத் துறை

அலுவலகங்களில் நடைபெறும் நிலப் பரிவர்த்தனைகளின்போது வலைத் தளத்தில் கிடைக்கப்பெறுகிற நில உரிமை குறித்த தகவல்களை நில ஆவணங்களுடன் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே, நிலப் பரிவர்த்தனைகளை பத்திர பதிவுத் துறை அலுவலர்கள் அனுமதிக்கின்றனர். இது தவறான நிலப்பரிவர்த்தனைகள் நடைபெறுவதைத் தவிர்க்க உதவுகிறது.

சார்பதிவகங்களில் பத்திரப்பதிவு நடவடிக்கைகள் முடிவுற்றதும் உடனடியாக பட்டா மாறுதல் ஆணைகளை வெளியிட ஏதுவாக தமிழ்நிலம் தரவுதளத்துடன் பத்திரப்பதிவு தரவுதளம் இணைக்கப்பட்டுள்ளது. 12.02.2018 அன்று ஏற்படுத்தப்பட்ட, இவ்வசதியின்மூலம் புதிய விண்ணப்பங்கள் ஏதும் கோரப்படாமல் உடனடியாக பட்டா மாறுதல் ஆணைகளை வழங்கிட இயலும்.

6.8 இயக்ககத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

6.8.1 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்

பொதுமக்களுக்கு எளிதாக சேவை புரியும் வண்ணம் 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.7.68 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து 60 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ. 9.30 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. அவற்றில் கட்டி முடிக்கப்பட்டிருந்த 11 குடியிருப்புகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் 2018-2019 ஆம் நிதி ஆண்டில் ரூ.17.26 கோடி மதிப்பீட்டில் மேலும், 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட அரசாணை (நிலை) எண் 358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 26.09.2018-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, பொதுப் பணித் துறையின்மூலம் துவக்க கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2019 ஜூலை 17]

6.8.2 காலிப்பணியிடங்கள் நிரப்புதல்

இத்துறையில் காலியாக உள்ள நிலஅளவர், வரைவாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படை நியமனம் மூலமாக நிரப்பப்படுகின்றன. அதனடிப்படையில் பின்வருமாறு பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன:-

வ. எண்	பதவியின் பெயர்	நிரப்பப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	தேர்வுமுறை	
			தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்	கருணை அடிப்படை நியமனம்
1.	நிலஅளவர்	107	101	6
2.	வரைவாளர்	159	157	2
3.	இளநிலை உதவியாளர்	43	41	2
4.	தட்டச்சர்	23	23	--

6.8.3 போட்டோ சின்கோ அச்சகத்தை நவீனப்படுத்துதல்

சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள மிகப்பழமையான போட்டோ சின்கோ அச்சகம், ஒரு கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.60.94 இலட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், ரூ.12.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமான மற்றும் சிறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். புனரமைக்கப்பட்ட அச்சகம் தனது அச்சுப் பணிகளைத் தொடங்கியுள்ளது. நவீனமயமாக்கப்பட்ட போட்டோ சின்கோ அச்சகத்தில் மாவட்ட, வட்ட, கிராம வரைபடங்கள் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்டப் படிவங்கள் அச்சடிக்கப்பட்டு அனைத்து நிலவரித்திட்ட பிரிவுகளுக்கும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

6.8.4 AMMA கைப்பேசி செயலி

பொதுமக்கள் நில ஆவணங்கள் தொடர்பான சேவைகளை எளிதில் கையாளும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 01.03.2018 அன்று ‘AMMA கைப்பேசி செயலி’ ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்த சேவையின் வாயிலாக

பொதுமக்கள் தங்களது கைப்பேசி திரையினை மென்மையாகத் தொடுவதின்மூலம் தேவையான விவரங்களை காண இயலும்.

நிலவரித்திட்டம்

நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை, நில வரியாக வருவாய்த் துறை வசூலித்து வருகிறது. நிலவரி நிர்ணயிப்பதற்காக கடைப்பிடிக்கப்படும் முறை நில வருவாய் நிலவரித் திட்டம் எனப்படுகிறது. பாசன ஆதாரம், மண்ணின் தன்மை மற்றும் அதன் விளைச்சல் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் மண் வகைபாடு செய்து, தரம் பிரிக்கப்பட்டு, அதனடிப்படையில் நிலவரி நிர்ணயிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில், மண் வகைப்பாடு செய்யப்படாமல் நிலவரி வசூலிக்கப்பட்டு வந்த முறையான, நிலையான நிலவரித்திட்ட முறையை ரத்து செய்து, பாய்ச்சல் ஆதாரம் மற்றும் மண் வகைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் நிலவரி நிர்ணயம் செய்யும் முறையான 'இரயத்துவாரி நிலவரித் திட்டம்' 1879-1880 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், ஜமீன்தார்கள்/ இனாம்தாரர்கள் ஆகியோரிடமிருந்து நில உடமைகளில் இரயத்துவாரி நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல் அவ்வுடமைகளில் நிலையான நிலவரித்திட்ட முறையிலேயே நிலவரி வசூலிக்கப்படுவது தொடரப்பட்டது. சுதந்திரத்தின்போது ஜமீன்தார்கள் இனாம்தாரர்கள் தொடர்ந்து, இரயத்துகளிடமிருந்து வரிவசூல் செய்து, அரசுக்கு செலுத்தி வந்த ஜமீன் எஸ்டேட் மற்றும் இனாம் பகுதிகளைத் தவிர தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ரயத்துவாரி நிலவரித்திட்ட முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, சுதந்திரம் பெற்ற பின்பு, இரயத்துகளுக்கிருந்த சுமையைக் குறைப்பதற்காகவும், நில உடமையாளர்கள் என்ற பிரிவினரை மொத்தமாக நீக்குவதற்காகவும், பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றில், பெரும்பாலான சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பின்வரும் சட்டங்களின்கீழ் நிலவரித்திட்டப் பணிகள்/ மேல்முறையீடுகள் நிலுவையிலுள்ளன:-

2019 ஜூலை 17]

I. தமிழ்நாடு எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/ 1948)

II. தமிழ்நாடு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

III. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

IV. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

எஸ்டேட்ஸ் இனாம் மற்றும் மைனர் இனாம் ஒழிப்புச் சட்டங்களின்கீழ் நில உடமையாளர்கள் நீக்கப்பட்டு, நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றைய நிலையில், சில கிராமங்களைத் தவிர இதர பகுதிகளில் நிலவரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(அ) தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த கிராமங்களில், நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட பின்வரும் கிராமங்களைத் தவிர, இதர அனைத்து கிராமங்களிலும் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டன.

வ. எண்	கிராமத்தின் பெயர்	வட்டம் மற்றும் மாவட்டம்
1	அரையபுரம் தட்டிமால் படுகை	பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
2	இராமச்சந்திரன் கோயில்பத்து	தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்
3	கழனிவாய்ப்பட்டி	பொன்னமராவதி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்

[2019 ஜூலை 17

4	சென்னசந்திரம்	ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்
5	திம்மசந்திரம்	
6	உளியாளம்	

(ஆ)தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றவும் அவற்றில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில், நீதிமன்ற வழக்குக்கு உட்பட்ட பின்வரும் கிராமங்களைத் தவிர இதர அனைத்து கிராமங்களிலும்/நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	கிராமத்தின் பெயர்	வட்டம் மற்றும் மாவட்டம்
1.	காரணப்பட்டி	பொன்னமராவதி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்
2.	கோதண்டராமபுரம்	இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்
3.	நிலையப்பட்டி	இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்
4.	அகஸ்தியம்பள்ளி	வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்
5.	தாரிக்கொம்பன்	இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்
6.	பைரசந்திரம்	ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்
7.	இளையசந்திரம்	
8.	மாரசந்திரம்	
9.	சூரியநாராயணபுரம்	பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

இக்கிராமங்களை பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட நில உடமையாளர்களால் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குகள் காரணமாக நிலவரித்திட்டப் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. இன்றைய நிலையில், இராமச்சந்திரன் கோயில்

2019 ஜூலை 17]

பத்து கிராமத்தை தவிர இதர அனைத்து நீதிமன்ற வழக்குகளும் முடிக்கப்பட்டு, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

(இ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/69)

நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில், ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை எடுத்துக்கொள்ளவும், இரயத்துவாரி நிலவரித்திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் தொடரப்பட்டன. உயர்நீதிமன்றத்திலும் அதன் பின் உச்சநீதிமன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிக்களால் இச்சட்டத்தை முழுமையாக அரசியலமைப்பு சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து பல வழக்குகள் தொடரப்பட்டிருந்ததால், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க இயலவில்லை. தமிழ்நாடு சட்டம் 24/69-ஐ அரசியலமைப்பு சட்டத்தின் 9 ஆம் அட்டவணையில் முழுமையாக சேர்க்கப்பட்டதை, இறுதியாக உச்சநீதிமன்றம் ஏற்று தீர்ப்பளித்துள்ளதால், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 80,087.74 ஏக்கர் ஜென்மம் நிலங்களில் 45,101.46 ஏக்கர் பரப்பில் இதுவரை நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, 34,986.28 ஏக்கர் பரப்பு நிலவரித்திட்டப் பணிக்காக மீதமுள்ளது.

இதுவரையில் பணி முடிக்கப்பட்ட பரப்பின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	விவரங்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)
1.	மொத்த ஜென்மம் நிலங்கள்	80,087.74
2.	நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு	45,101.46
3.	நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது	17,014.43
4.	நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)-(2)]	34,986.28

[2019 ஜூலை 17

நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக மீதமுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பை பொறுத்தவரையில், மேற்படி சட்டப் பிரிவு 8,9,10-களின்கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நிலவரித்திட்ட அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இன்றைய நிலையில் மனுக்களின் நிலை பின்வருமாறு:-

பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	566
முடிக்கப்பட்ட மனுக்கள்	562
நிலவரித்திட்ட அலுவலரிடம் நிலுவையிலுள்ளவை	4

கூடலூர் ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையிலுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களை திரும்ப எடுத்தல் மற்றும் அப்புலங்களில் நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்துதல் தொடர்பாக நில நிருவாக ஆணையர் அளவில் குழு ஒன்றினை அமைத்து குத்தகை காலம் முடிவுற்ற குத்தகைகளையும், ஆக்கிரமிப்பு இனங்களையும் முடிவு செய்வது தொடர்பாக கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:-

I. மாவட்ட அளவில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது:-

(அ) உதவி இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, நீலகிரி.

(ஆ) நிலவரித்திட்ட அலுவலர்கள் - I & II (ஜென்மம் நிலங்கள்)

(இ) வருவாய் கோட்டாட்சியர், கூடலூர்.

(ஈ) மாவட்ட வன அலுவலர், கூடலூர்.

(உ) வன நிலவரித்திட்ட அலுவலர், நீலகிரி.

(ஊ) வட்டாட்சியர் - கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்கள்.

II. மாவட்ட அளவிலான இக்குழு மாதம் ஒருமுறை, கூடி நிலவரித்திட்ட அலுவலர்கள் I & II மேற்கொள்ளவேண்டிய பணிகள், குத்தகை காலம் முடிவுற்ற இனங்களை பரிசீலிக்க மாதாந்திர குறியீடு நிர்ணயம் செய்தல் மற்றும் நீதிமன்ற வழக்குகள்

தொடர்பாக பரிசீலித்து அதன் விவரங்களை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிருவாக ஆணையருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

III. மாநில அளவிலான ஒரு குழு, கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிருவாக ஆணையர் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது:-

(அ) அரசு சிறப்புச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.

(ஆ) நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், சென்னை.

(இ) இணை ஆணையர் (சினிமா & பாசனம்), நில நிருவாக ஆணையர் அலுவலகம், சென்னை.

மாநில அளவிலான இக்குழுவால் மாவட்ட குழுவின் பரிந்துரைகளை பரிசீலனை செய்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

IV. இதைத் தவிர ஜென்மம் நிலங்களில் நிலுவையிலுள்ள நிலவரித்திட்டப் பணிகளை விரைந்து முடிக்கவும், இதிலுள்ள ஆக்கிரமிப்புகளை முடிவு செய்வது குறித்த பரிசீலனைக்காகவும் அரசாணை எண் 73, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (FR-14), நாள் 19-3-2018-ல் மூன்று நபர்கள் அடங்கிய குழு ஒன்றினையும் அரசு நியமித்துள்ளது.

இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து அரசால் தக்க முடிவெடுக்கப்படும்.

திட்டங்கள்

(அ) நத்தம் நிலவரித்திட்டம்

அரசாணை (பல்வகை) எண் 1971, வருவாய்த் துறை, நாள் 14-10-1988-ல் சென்னை பழைய நகரம் நீங்கலாக, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களின் நத்தம் வீட்டு மனைகளிலும், விவசாயமில்லாத பிற பயன்பாட்டிலுள்ள விவசாய நிலங்களிலும் நிலவரித்திட்ட பணி மேற்கொள்ள அறிவிக்கை வெளியிட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2019 ஜூலை 17

(ஆ) மலைக் கிராமங்களில் நிலவரித்திட்டப் பணி

மலைக் கிராம நிலஅளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலத்திலுள்ள 67 மலைக் கிராமங்களில், நிலவரித்திட்டப் பணி தொடங்க உத்தரவிடப்பட்டது. இப்பணி 61 மலைக் கிராமங்களில் முடிக்கப்பட்டு 6 கிராமங்களில் முன்னேற்றத்திலுள்ளது.

(இ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நிலவரித்திட்டப் பணி

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உடைமைதாரர்களுக்கு பட்டா வழங்கவும் வருவாய் நிருவாக பணிகளுக்காக நில ஆவணங்களை தயாரித்து அளிக்கவும் நிலவரித்திட்டப் பணி தொடங்க அரசால் உத்தரவிடப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள 12 மாநகராட்சிகள் மற்றும் 150 நகராட்சிகளில் இப்பணி 24 நகராட்சிகளில் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளன. இப்பணி 6 மாநகராட்சிகளிலும் 63 நகராட்சிகளிலும், 78 தனி வட்டாட்சியர் அலகுகளின் மூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/ மாநகராட்சிகளை பொறுத்தவரையில், தற்போது பணி நடைபெற்று வரும் அலகுகளின் பணி முடிக்கப்பட்டவுடன், அவ்வலகு, பணி தொடங்கவேண்டிய புதிய நகரத்தில் மறு அமர்வு செய்யப்பட்டு பலகட்டங்களாக பணி தொடங்கப்படும்.

நகர நிலவரித்திட்டத்தின்மூலம் 2011 முதல் பிப்ரவரி 2019 வரை 14,21,174 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வக்ஃபு சொத்து கணக்கெடுப்புப் பணி

வக்ஃபு சொத்து கணக்கெடுப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் வக்ஃபு கூடுதல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களால் அவர்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வக்ஃபு சொத்து கணக்கெடுப்பு பணி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இப்பணி இதுவரை 25 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு மீதமுள்ள இதர மாவட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

இணைப்பு-II

(280 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020

முன்னுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை சமுதாயத்தில் உள்ள இதர பிரிவினருக்கு இணையாக சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வி நிலையில் முன்னேற்றும் பொருட்டு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில், ஆதி திராவிடர் இன மக்கள் 1.44 கோடியும் (20.01%), பழங்குடியின மக்கள் 7.95 இலட்சமும் (1.10%) இருக்கின்றனர். சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கு தேவையான சமூக கட்டமைப்பினை ஏற்படுத்தி, சமூக நீதியினை நிலைநாட்டி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் இவ்வரசு முனைப்புடன் உள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திட, 2019-2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3810.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு தரமான கல்வி வழங்கி அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வடைய இவ்வரசு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. 2019-2020 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.3810.28 கோடி நிதியில், கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.3343.80 கோடி (87.76 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2019 ஜூலை 17

I. ஆதி திராவிடர் நலன்

பிற மாநிலங்களில் பட்டியல் இனத்தவர் எனவும், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் எனவும் குறிப்பிடப்படும் இம்மக்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், அனைத்து வகையான விலக்கல், ஒதுக்குதல், தீண்டாமை மற்றும் பாகுபாடு போன்றவற்றை களையவும், சமூக சமத்துவத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தவும், அரசு பல கொள்கைகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி வருகிறது.

மேலும், நவீன தமிழகத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் பெருகிவரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் மானியத்துடன்கூடிய வேறுபட்ட அளவிலான கடன்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலம் வாங்குவதற்காகவும் வழங்கப்படுவதுடன், வீடு கட்டும் நோக்கத்திற்காக இலவச வீட்டு மனைகளும் வழங்கப்படுகின்றன.

1. கல்வி

இவ்வரசு, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை திறம்பட இயங்கச் செய்து, பெரும்பான்மையான ஆதி திராவிடர் மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகையினை வழங்கி, விடுதி வசதிகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருவதன்மூலம் ஆதி திராவிடர் மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி வீதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தி வருகிறது.

கல்வியில் நிலையான முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு, ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1135 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

பள்ளிகளின் விவரம்

விவரம்	பள்ளிகள் எண்ணிக்கை	மாணாக்கர் எண்ணிக்கை
தொடக்கப் பள்ளி	836	35,338
நடுநிலைப் பள்ளி	96	9,063
உயர்நிலைப் பள்ளி	116	14,046
மேல்நிலைப் பள்ளி	87	34,309
மொத்தம்	1,135	92,756

2019 ஜூலை 17]

1.1. கல்வி உதவித்தொகைகள்

பெரும்பாலும் விவசாயத்தைச் சார்ந்த வேலைகளில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர் மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், கல்வி நிறுவனங்களால் விதிக்கப்படும் கட்டணங்களை இவர்களால் செலுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, இவ்வின மக்களையும் கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வரசு, கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித்தொகைகளுடன் கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

(அ) மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன.

பராமரிப்புப் படிகள்

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதி மாணாக்கர்	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	(i) மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், வரைகலை (Planning) கட்டடக்கலை, வடிவமைப்பு, நவீன ஆடை தொழிற்நுட்பம் (Fashion Technology) வேளாண்மை, கால்நடை மற்றும் அதைச்சார்ந்த அறிவியல் படிப்புகளில் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு	1200	550

[2019 ஜூலை 17

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதி மாணாக்கர்	வெளி மாணாக்கர் (Day Scholar)
	(ii) மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் (iii) CA/CWA/CS/ICFA etc., (iv) M.Phil, Ph.D., & Post Doctoral programmes	1200 ---- 1200	550 550 550
II	12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட தொழில் கல்வியில் பட்டப்படிப்பு, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பில் மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற படிப்புகள் மற்றும் தொகுதி I-ல் சாராத முதுநிலைப் பட்டப் படிப்புகள் (எ.கா. M.A.,/M.Sc.,/M.Com.,/M.Ed.,/ M.Pharm., etc.,	820	530
III	தொகுதி I மற்றும் II-ல் இடம் பெறாத இதர பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள்	570	300
IV	10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட பட்டப்படிப்பு அல்லாத படிப்புகள் (எ.கா. XI, XII, ITI, தொழில் பயிற்சிக் கல்வி etc.,	380	230

மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதி தொழிற்படிப்புக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்காக, அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன.

2019 ஜூலை 17]

சுயநிதி தொழிற்படிப்புக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய, அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்கு ரூ.1727.95 கோடியும், பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.46.44 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற இயலாத ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

பராமரிப்புப் படிகள்

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	பொறியியல், மருத்துவம்	350	175
II	கலை, அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு	225	140
III	கலை, அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பு	175	100
IV	ஐ.டி.ஐ. / +1, +2	175	100

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்புப் படியுடன், கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள், உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து கல்வி பயிலும் மாணாக்கருக்காக, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் வரவு வைக்கப்படுகின்றன. மேலும், பராமரிப்புப் படி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.82.74 கோடியும், பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.1 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மைய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்கள்

(i) தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் துப்புரவு பணியாளர், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவு பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரிப்பவர் ஆகியோரின் குழந்தைகளுக்கு இக்கல்வி உதவித்தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.:-

	வெளி மாணாக்கர் (Day Scholar)	விடுதியில் தங்கி படிக்கும் மாணாக்கர்
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.225/-	ரூ.700/-
தனி மானியம் (ஒரு வருடத்திற்கு)	ரூ.750/-	ரூ.1000/-

2019 ஜூலை 17]

பராமரிப்புப் படியும் தனிமானியமும் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

இந்த திட்டத்திற்கு 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.12.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர்/ பழங்குடியின மாணாக்கருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் முழு நேர கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் முறையே ரூ.2.50 இலட்சம் / ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:

	வெளி மாணாக்கர் (Day Scholar)	விடுதி மாணாக்கர்
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)		
ஆதி திராவிடர்	ரூ.225/—	ரூ.525/—
பழங்குடியினர்	ரூ.150/—	ரூ.350/—
தனி மானியம் (ஓர் ஆண்டுக்கு)		
ஆதிதிராவிடர் / பழங்குடியினர்	ரூ.750/—	ரூ.1000/—

மேற்கண்ட திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.102.63 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.4.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு படிப்புதவித்தொகை

இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கட்டண விடுதிகளில் தங்கி அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் இளநிலை பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்ப

பட்டயப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் ஆண்டு ஒன்றுக்கு ரூ.7500/-ம் முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்படிப்பு பயில்வோருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.8000/-மும் சிறப்பு உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.26.19 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.26.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) வெளிநாட்டில் முதுகலைப்பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

வெளிநாடுகளில் பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், அறிவியல் பாடப்பிரிவுகளில் முதுகலைப்பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சி படிப்பை படிக்க விரும்பும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கு நிதியுதவி

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் (Political Science) போன்ற படிப்புகளில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் 1200 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், ஆண்டு தோறும் ரூ.50,000/- வீதம் அதிகபட்சமாக

ஐந்து ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.2 கல்வி கட்டணச் சலுகைகள்

(அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர்/ பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், கல்வி நிலையங்களுக்கு கற்பிப்புப் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். இதனால் கல்வி நிலையங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கற்பிப்புக் கட்டணம் அரசால் ஈடுகட்டப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.7.72 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.8.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இளங்கலை மாணாக்கருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர்/ பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.4 இலட்சம் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) முதுகலை மாணவியருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய

ஆதி திராவிடர் இன மாணவியர் வருமான உச்சவரம்பின்றி, சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.2.50 இலட்சம் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) ஆங்கிலவழி பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்புக் கட்டணச் சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு இந்த கட்டணம் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.1.71 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.3.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இதர கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணம் அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு நேரடியாக இத்துறையால் ஈடு செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.2.90 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019 ஜூலை 17]

1.3. பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடைநிற்றலை (Drop out) குறைப்பதற்காகவும், பெண் கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படுகிறது. அரசால் வழங்கப்படும் ஊக்கத் தொகை விவரம் பின்வருமாறு :

வகுப்பு	தொகை (ஆண்டொன்றுக்கு)	2019-20 நிதி ஒதுக்கீடு
3 முதல் 5 வரை	ரூ.500/-	ஆதி திராவிடர் ரூ.11.47 கோடி பழங்குடியினர் ரூ.75 இலட்சம்
6 ஆம் வகுப்பு	ரூ.1000/-	ஆதி திராவிடர் ரூ.34.37 கோடி பழங்குடியினர் ரூ.1.50 கோடி
7 மற்றும் 8	ரூ.1500/-	

1.4. பரிசுத் தொகைத் திட்டம்

இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்குமேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:

படிப்பு	தொகை (ஒருவருக்கு)	2019-20 நிதி ஒதுக்கீடு
இளங்கலை	ரூ.3000/-	ரூ.42 இலட்சம்
முதுகலை	ரூ.5000/-	
தொழில்நுட்பப் படிப்பு	ரூ.6000/-	

1.5. பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையைச் சார்ந்த பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.6. சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:

வ. எண்	வகுப்பு	வழங்கும் துறை
1.	1 முதல் 8 வரை	சமூக நலத் துறை
2.	9 முதல் 12 வரை	தொழிற்கூட்டுறவு சங்கங்கள்
3.	விடுதி மாணாக்கர்	தொழிற்கூட்டுறவு சங்கங்கள்

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.7. பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப் பணி தேர்வுகள் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்கு தயாராகவும் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:

வ. எண்	பள்ளிகள் / விடுதிகள்	நூலக புத்தகங்கள்	பருவ இதழ்கள்
		(ஆண்டு ஒன்றுக்கு)	
1.	உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்	ரூ.1000/-	ரூ.450/-
2.	பள்ளி விடுதிகள்	--	ரூ.450/-
3.	கல்லூரி விடுதிகள்	--	ரூ.3100/-

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.18.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019 ஜூலை 17]

1.8. மிதிவண்டிகள் வழங்குதல்

அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கும், 11 ஆம் வகுப்பில் மிதிவண்டிகள் வழங்காமல் விடுபட்டு, 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.9. நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

*ஆதி திராவிடர் நல, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின் உதவியுடன் தனித்தேர்வு ஒன்றினை நடத்தி, அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (*Block*) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினம் முழுவதும் அரசால் ஏற்கப்படுகிறது.*

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.10. நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயின்று 10 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியின மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு

மிகாமல் இருப்பின், இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டுதோறும் ஒரு மாணாக்கருக்கு ரூ.28000/- வீதம் செலவிடுகிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும், தமிழ்நாடு முழுவதும் 320 மாணாக்கர் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.11. விடுதிகள்

கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் கல்வித் திறனை ஊக்குவித்து முன்னேற்றவும், இடைநிற்றலை தவிர்க்கவும், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகாமையில் தங்கி, சிறப்புடன் கல்வி பெற இத்துறையால் 1324 விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:

ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம்

வ. எண்	விடுதிகளின் விவரம்	மொத்த விடுதிகள்	மாணாக்கர் எண்ணிக்கை
1	பள்ளி விடுதிகள்	1143	82766
2	கல்லூரி விடுதிகள்	143	13050
3	ஐ.டி.ஐ. விடுதிகள்	17	1372

2019 ஜூலை 17]

வ. எண்	விடுதிகளின் விவரம்	மொத்த விடுதிகள்	மாணாக்கர் எண்ணிக்கை
4	பாலிடெக்னிக் விடுதிகள்	5	288
5	முதுகலை பட்டதாரி கல்லூரி விடுதிகள்	15	1008
6	சட்டக்கல்லூரி விடுதி	1	55
	மொத்தம்	1324	98539

➢ தமிழக-கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

➢ ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:

i. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. 582 மாணவியர் விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டை தகளிகள் (Napkin burners) வழங்கப்பட்டுள்ளன.

iii. அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மின்னணு எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

iv. 76 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

v. சுகாதார முறையில் உணவு சமைத்திட 380 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 160 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீராவி கொதிகலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

vi. அனைத்து விடுதிகளுக்கும் மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2019 ஜூலை 17

vii. அனைத்து விடுதிகளிலும் நூலக வசதி செய்து தரப்பட்டுள்ளது.

viii. சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ix. அனைத்து விடுதிகளுக்கும் செய்தித்தாள்கள் வழங்கப் படுகின்றன.

x. மாணாக்கருக்கு பாய், போர்வை மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள் வழங்கப்படுகின்றன.

xi மாணாக்கர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கப்பட்டுள்ளன.

xii. கல்லூரி விடுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில் "இந்தியா ஆண்டுப் புத்தக"மும், "திட்டம்" மாத இதழும் வழங்கப்படுகின்றன.

ஆ. உணவுக் கட்டணம்

ஆதி திராவிடர் நல விடுதிகள், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணமும், சில்லறைச் செலவினமும் கீழ்க்கண்ட வீதத்தில் வழங்கப்பட்டு வருகின்றன:-

கட்டணங்கள்	பள்ளி மாணாக்கர்	கல்லூரி மாணாக்கர்
உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு)	ரூ.900/-	ரூ.1000/-
சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு)	ரூ.50/-	ரூ.75/-
சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்)	ரூ.20/-	ரூ.40/-

பள்ளி விடுதி - வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, இஞ்சி ரசம், பொரியல், முட்டை(1)
செவ்வாய்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1)

2019 ஜூலை 17]

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
புதன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், மட்டன் (80 கிராம்)/சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, ரசம்
வியாழன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1)
வெள்ளி	பொங்கல், சட்னி	சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1)
சனி	இட்லி, சட்னி	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை (1)
ஞாயிறு	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம்

கல்லூரி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை(1)
செவ்வாய்	இட்லி, சாம்பார்	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், முட்டை(1), பொரியல், ரசம்
புதன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், மட்டன் (80 கிராம்) /சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
வியாழன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், குழம்பு, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம் முட்டை(1)
வெள்ளி	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், ரசம், பொரியல், மோர், முட்டை (1)
சனி	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், ரசம், மோர், முட்டை (1)
ஞாயிறு	பொங்கல், சட்னி	சாதம், காய்கறி, குருமா, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	இட்லி, சாம்பார்.

இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்:

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, 29 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப் பயிலும் 4943 ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறைமூலம் வழங்கப்படுகிறது.

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளியில், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மொத்தம் 4132 மாணாக்கர் கடந்த 2018-2019 ஆம் ஆண்டு கல்வி பயின்றனர். இந்த அறக்கட்டளைக்கு 2006 ஆம் ஆண்டு முதல் சம்பளம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 127 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணிபுரிவோருக்கு ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.9.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளை நடத்தும் இரு விடுதிகளில் (மாணவர்-1, மாணவியர்-1) 3500 மாணாக்கர் தங்கி உள்ளனர்.

2019 ஜூலை 17]

2014-2015 ஆம் ஆண்டு முதல் காப்பாளர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவாளர் என 32 பணியாளர்களுக்கு ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ் வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தைமூலம் வாங்கப்பட்டு அல்லது நில எடுப்பு சட்டத்தின்படி கையகப்படுத்தப்பட்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

	வழங்கப்படும் அளவு	பயனாளியின் வருட வருமான வரம்பு
கிராமப்புறங்களில்	3 சென்ட் இடம்	ரூ.72,000/-
நகராட்சியில்	1 1/2 சென்ட் இடம்	
மாநகராட்சியில்	1 சென்ட் இடம்	

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருவதுடன், நிலத்தை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளும் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து ஆதி திராவிடர் மயானங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. இந்நோக்கில் குடிநீர் வசதிக்கான செலவினத்தில் 15 விழுக்காடும், இணைப்புச்சாலை வசதிக்கான செலவினத்தில் 10 விழுக்காடும் இத்துறையால் ஏற்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பத்தில் ஏதேனும் இறப்பு ஏற்பட்டால் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.2,500/-வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.4.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

ஆதி திராவிடர் மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும் பொருட்டு ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகைக்கு (20.01%) இணையாக நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களை தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல இயக்குநர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 45 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டு மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத் திட்ட செலவினம்-Welfare Expenditure of State) ரூ.56,849.96 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதி திராவிடர் நலத் திட்ட செலவினம் - Expenditure on Scheduled castes welfare) கீழ் ரூ.12,103.72 கோடி (21.29 விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை (20.01%) விட அதிகமானதாகும்.

2019 ஜூலை 17]

6. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உதவுவதற்காகவும், பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்யவும், உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலும், மாநில அரசின் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் மைய அரசு கூடுதலாக நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியில் 80 விழுக்காடு, ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோமூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு நிதி, ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்குமேல் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கிடும்பொருட்டு ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென, 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.135 கோடி நிதி மைய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. சாதிச்சான்றிதழ்கள்

(i) சாதிச் சான்று வழங்குதல்

ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் ஆதி திராவிடர்களுக்கு சாதிச் சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சியரை அணுகலாம்.

(ii) சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:

[2019 ஜூலை 17

மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

1	மாவட்ட ஆட்சியர்	தலைவர்	ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226-ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136-ன்படி உச்சநீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.
2	மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்	உறுப்பினர் செயலர்	
3	மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்	

8. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015

(அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 போன்றவை மைய அரசால் இயற்றப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம், 2015 மற்றும் திருத்த விதிகள், 2016 ஆகியவை முறையே 01.01.2016 மற்றும் 14.04.2016 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துவதற்கென கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைமையின்கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

2019 ஜூலை 17]

இந்த இரு சட்டங்களின்கீழ் (i) வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதும், (ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

(ஆ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 6 தனியுறு சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 334, உள் (நீதிமன்றங்கள்-II) துறை, நாள் 06-04-2017-ல் 16 தனியுறு சிறப்பு நீதிமன்றங்களை திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், பெரம்பலூர், தேனி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய 16 மாவட்டங்களில் 2016-2017 முதல் 2019-2020 வரையில் 4 கட்டங்களில் உருவாக்குவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. முதற்கட்டமாக திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களில் 4 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க ரூ.3.22 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 1704, உள் (நீதிமன்றங்கள் II) துறை, நாள். 03-10-2018-ல் கடலூர், நாமக்கல், தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களில் தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அமல்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல்

துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

1995 ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு விதிகளில் விதி எண் 17(1)-ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை அறிந்த மற்றும் நல்ல நோக்கம் கொண்டவர்களை உறுப்பினராக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும். மேலும், இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.11.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மனிதநேய வார விழா அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை நடத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

2019 ஜூலை 17]

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டங்களில் உள்ள விதிகளைப் பற்றி தெளிவுபடுத்துவதற்காக வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் வழியாக சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்தம் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்து அறியச் செய்வதற்காக வன்கொடுமை தடுப்புச் சட்டம் விதி 10-ன்படி தனி அலுவலர்களாகிய மாவட்ட ஆட்சியர்கள் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு மையங்களை நடத்துகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.82.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

இத்திட்டத்தின்கீழ், சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை வழங்கிட ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில், ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் இன கலைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், அரசு நிதியுதவி வழங்குகிறது. இதற்காக ரூ.50 இலட்சம்

மூலதன நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அத்தொகைக்காகப் பெறப்படும் வட்டித்தொகை தெரிவு செய்யப்படும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட 10 ஆதி திராவிடர் எழுத்தாளர்கள் மற்றும் இதர இனங்களைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.40,000/- பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

II. பழங்குடியினர் நலன்

முன்னுரை

பெரும்பான்மையான பழங்குடியினர் வனப்பகுதிகளிலும் பிற தனிமைப்படுத்தப்பட்ட இடங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கல்வி அளவுறுகள் மாநில சராசரியை விட குறைவாக உள்ளன. பழங்குடியினருக்கும் சமூகத்தின் இதர பிரிவினருக்கும் இடையே உள்ள சமூக, பொருளாதார இடைவெளியினைக் குறைத்து அவர்களையும் சமூக நீரோட்டத்தில் இணையச் செய்வது இவ்வரசின் கடமையாகும். எனவே, பழங்குடியினர் நலனுக்கென தனியாக ஓர் இயக்குநரகம் 2000 ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண் 56, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-1)துறை, நாள் 28.08.2017-ல் ஆணையிடப்பட்டவாறு, பழங்குடியினர் நல இயக்குநரகம் பழங்குடியினர் நலப் பொருண்மைகள் குறித்த நிருவாக மற்றும் நிதி அதிகாரங்களுடன் முழு அதிகாரத்தோடு கூடிய தனி பொறுப்புடன் 01.04.2018 முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையானது பல புதுமையான திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்தி வருகிறது. தமிழகத்தில் பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தருமபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய 18 மாவட்டங்களில் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக அரசு மிகுந்த முனைப்புடன் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

குறைந்த கல்வி அறிவு, ஊட்டச்சத்து குறைபாடுகள், குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழும் நிலை, வன வளங்கள்

2019 ஜூலை 17]

அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல், பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை போன்ற பழங்குடியின மக்கள் சந்தித்து வரும் இன்னல்களை களைவதே அரசின் பணியாகும்.

பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் முழுமையான மேம்பாடு அடையச் செய்வதும், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, இணைப்புச்சாலைகள் மற்றும் வீடுகள் கட்டித் தருதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அனைத்திலும் வளர்ச்சி அடையச் செய்வதும் அரசின் முதன்மையான குறிக்கோளாகும். பழங்குடியினரின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்துவதன்மூலம் பழங்குடியின மக்களுக்கும் பொது மக்களுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

1. கல்வி

(அ) பள்ளிகள்

பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை தரமான கல்வியால் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகள் அரசால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்

விவரம்	பள்ளிகள் எண்ணிக்கை	மாணாக்கர் எண்ணிக்கை
தொடக்கப் பள்ளி	207	9,065
நடுநிலைப் பள்ளி	54	5,103
உயர்நிலைப் பள்ளி	29	3,795
மேல்நிலைப் பள்ளி	25*	8,521*
மொத்தம்	315	26,484

(*1,553 மாணாக்கர் பயிலும் 7 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளை உள்ளடக்கியது)

[2019 ஜுலை 17

(ஆ) விடுதிகள்

பழங்குடியின மாணாக்கர், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக இத்துறையால் விடுதிகள் கட்டப்பட்டு நிருவகிக்கப்படுகின்றன.

ஆதி திராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடன் கூடுதலாக மலைப் பகுதியில் உள்ள இவ்விடுதி பழங்குடியின மாணாக்கருக்கு குளிர் மற்றும் மழையிலிருந்து பாதுகாக்க ஸ்வெட்டர் மற்றும் ரெயின்கோட் வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்

வ. எண்	விடுதிகளின் வகைப்பாடு	விடுதிகளின் எண்ணிக்கை	மாணாக்கர் எண்ணிக்கை
1	பள்ளி விடுதிகள்	40	1899
2	தொழிற்பயிற்சி நிலைய விடுதி	1	131
3	கல்லூரி விடுதிகள்	2	102
	மொத்தம்	43	2132

(இ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி :

(i) விடுதிகள்:

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 5 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 337 பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் உணவுக் கட்டணம் இத்துறையால் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படுவது போல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கருக்கும் பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

(ii) விடுதிகள் இணைந்த பள்ளி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் கிராம வளர்ச்சி நிறுவனம் (Society for Rural Development) எனும் தொண்டு

2019 ஜூலை 17]

நிறுவனம் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 2560 பழங்குடியின மாணாக்கருக்காக பள்ளி மற்றும் விடுதிகளை நிறுவி நடத்தி வருகிறது. 2005 ஆம் ஆண்டு முதல் இப்பள்ளிக்கு சம்பள மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு ஊதியம் வழங்கிட ஏதுவாக ரூ.3.78 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவன விடுதியில் தங்கி பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இவ்வரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

2. மைய அரசின் திட்டங்கள்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் மைய அரசின் நிதி உதவியுடன் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி (SCA to TSP)

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியுதவியினை மைய அரசு ஒவ்வோர் ஆண்டும் விடுவித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதியில் 60 விழுக்காடு பழங்குடியினருக்கு இயந்திர கலப்பைகள் வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குதல், பெட்டிக் கடைகள் வைத்தல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களை மேற்கொள்வதற்காகவும், 30 விழுக்காடு நிதி பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு, கழிவறைக் கூடங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்வதற்காகவும் செலவிடப்படுகிறது. எஞ்சிய 10 விழுக்காடு நிதி பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.6.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)

இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)-ன்கீழ், மைய அரசால் வழங்கப்படும் நிதியுதவியிலிருந்து பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நடை மேம்பாலம் கட்டுதல், இணைப்புச் சாலைகள்

அமைத்தல், மின் இணைப்பு வழங்குதல், தடுப்பணைகள் கட்டுதல், சிக்கில் செல் அனீமியா என்ற நோயை கண்டறிதல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-ஐ செயல்படுத்துவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே இயங்கிவரும் (1) விழுப்புரம் மாவட்டம்-வெள்ளிமலை, (2) சேலம் மாவட்டம்-அபிநவம், (3) திருவண்ணாமலை மாவட்டம் - அத்திப்பட்டு, (4) நீலகிரி மாவட்டம் - கோடப்பமந்து, (5) வேலூர் மாவட்டம் - அத்தனாவூர் (6) நாமக்கல் மாவட்டம் - செங்கரை மற்றும் (7) காஞ்சிபுரம் மாவட்டம் - பட்டிப்புலம் ஆகிய 7 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும் பள்ளிகளைப் பராமரிப்பதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

தமிழ்நாட்டில் உள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கென பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், பாசன தடுப்பணை மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், ஆரம்ப சுகாதார மையம், சாலை வசதி மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தேனீ வளர்ப்பு, மீன்பிடி வலை வழங்குதல், இருசக்கர வாகனம் வழங்குதல், செங்கல் சூளை அமைத்தல் போன்ற பொருளாதார மேம்பாட்டுப் பணிகளும், அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பும் (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம்,

2019 ஜூலை 17]

ஏற்காட்டில் புதிதாக ஓர் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி துவங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் மற்றும் மாணாக்கர் மலை உச்சியிலிருந்து மலை அடிவாரத்திற்கு சென்றுவர இரண்டு சிற்றுந்துகள் (Pick up vehicles) வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006, இந்திய அரசால் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 13.12.2005 ஆம் நாளுக்கு முன்பே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும், 13.12.2005 ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும் இச்சட்டத்தின்கீழ் வன உரிமைகள் பெறுவதற்கு தகுதி உடையவர்களாகிறார்கள்.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் பின்வரும் குழுக்களால் கண்காணிக்கப்படுகிறது:

i) *அரசு தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு*

ii) *மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு*

iii) *வருவாய் கோட்ட அலுவலரை தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு*

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போருக்கான வன உரிமைகளை பாதுகாக்கவும், அங்கீகரிக்கவும் 17 மாவட்டங்களில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வன உரிமைகள் சட்டம் 2006-ன்படி தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவற்றை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால்

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 7146 தனி நபர் உரிமைகளும் 417 சமூக உரிமைகளும் இச்சட்டத்தின்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

3. மாநிலத் திட்டங்கள்

(அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (CTDP)

விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கென ரூ.50 கோடி நிதியினை 2012-2013 ஆம் ஆண்டு முதல் அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. அதைப் போலவே இத்திட்டத்திற்காக 2019-2020 ஆம் ஆண்டிற்கும் ரூ.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் நில மேம்பாட்டுத் திட்டம், கூரை வீடுகளைச் சீரமைப்பு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பழங்குடியினர் மேம்பாட்டிற்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் ஆகிய பணிகள் தாட்கோமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2018-19 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன:

- நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் பழங்குடியினரான தோடா,கோத்தா,இருளர்,காட்டுநாயகன்,குரும்பாஸ்மற்றும் பணியன் இனப் பழங்குடியினரின் 500 குடியிருப்புகளை ரூ.5 கோடி செலவில் பழுதுபார்த்தல்.

- திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், தருமபுரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்காக (ஒரு மாவட்டத்திற்கு 50 வீடுகள் வீதம்) மொத்தம் 250 வீடுகள் ரூ.7.50 கோடி மதிப்பில் கட்டுதல், இம்மாவட்டங்களில் 25 சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி அவர்கள் பயிற்சி பெற்ற தொழில்களை துவங்க ரூ.2.50 கோடி நிதியுதவி வழங்குதல்.

- பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி செலவில் தாட்கோமூலம் செயல்படுத்துதல்.

2019 ஜூலை 17]

- ➢ *இரண்டு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.3.79 கோடி செலவில் நிலை உயர்த்துதல்.*
- ➢ *ஏற்கெனவே 57 பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டு இருந்த மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறைகளை மேம்படுத்தி சென்னை மாவட்டம், நந்தனம் அரசு பழங்குடியினர் தொடக்கப் பள்ளியில் ஒரு முதன்மை / தலைமை மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறை மையத்தினை ரூ.1 கோடி செலவில் ஏற்படுத்துதல்.*
- ➢ *வேலைவாய்ப்பற்ற பழங்குடியின மக்கள் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலையில் சேர நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திட ஏதுவாக 10 மாவட்டங்களில் ரூ.35 இலட்சம் செலவில் 10 இலவச பயிற்சி மையங்கள் துவங்குதல்.*
- ➢ *அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி மற்றும் விளையாட்டில் முன்னேற்றம் அடைவதற்கென திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும் (*Centre of Excellence in Sports) *மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அறிவுத்திறன் வளர்ச்சி சிறப்பு மையமும் (*Centre of Excellance in Academic) *ஏற்படுத்தி அம்மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தலா ரூ.25 இலட்சம் செலவில் ஏற்படுத்தி தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- ➢ *அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் ரூ.43.20 இலட்சம் செலவில் நடத்துதல்.*
- ➢ *அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரிடையே பள்ளி/ மாவட்ட/ மாநில அளவில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா மற்றும் பகுப்பாய்வுத்திறன் (*Analytical) *போன்ற போட்டிகளை ரூ.22.10 இலட்சம் செலவில் நடத்துதல்.*

[2019 ஜூலை 17

- அனைத்து பழங்குடியினர் நலத் திட்டங்களையும் பழங்குடியின மக்கள் பெற Online மூலம் விண்ணப்பிக்க இணையதள வசதியை ரூ.8.50 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.

- வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை, அத்தனாவூரில் 80 பழங்குடியின பள்ளி மாணவியர் பயன்பெறும் வகையில் புதிய பழங்குடியினர் நல விடுதியினை ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (ITDP)

பழங்குடியின மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதை மேம்படுத்தும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 மாவட்டங்களில், அப்பகுதியின் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 பகுதிகளில், இவ்வரசால் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

1. சேலம்	- ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை
2. நாமக்கல்	- கொல்லிமலை
3. விழுப்புரம்	- கல்ராயன்மலை
4. திருவண்ணாமலை	- ஜவ்வாதுமலை
5. திருச்சிராப்பள்ளி	- பச்சமலை
6. தர்மபுரி	- சித்தேரி மலை
7. வேலூர்	- ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலை

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப்பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் 7 திட்ட அலுவலகங்கள் அரசாணை (நிலை) எண் 34 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந1) துறை, நாள் 25.04.2017-ன்படி தோற்றுவிக்கப்பட்டு திட்ட அலுவலர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

2019 ஜூலை 17]

இ) தொழில் நெறி வழிகாட்டும் மையம் (Vacational Guidance Centre)

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலை மற்றும் தொழிலினை தேர்ந்தெடுத்திட அவர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு ஒரு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டுக்காக ரூ.75.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

பழங்குடியினருக்கென பிரத்யேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துறை, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

2019-2020 ஆம் நிதியாண்டில் இந்த 6 தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென ரூ.9.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மையினை சரிபார்த்து வழங்குவது இத்துறையின் ஒரு முக்கிய பணியாகும்.

i. பழங்குடியினர்களுக்கான சாதி சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ii. அவர்கள் சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதன் மூலமும், அதன் பின்னரும் குறைகள் ஏதுமிருப்பின் மாநில கூர்ந்தாய்வு குழுவினையும் (SLSC) அணுகலாம்.

iii. பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாநில அளவில் கூர்நோக்குக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் விவரம் பின்வருமாறு:

மாநில அளவிலான கூர்நோக்கு குழு

1	அரசு செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	தலைவர்	பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக்கூறு 226-ன்படி உயர் நீதிமன்றத்திலும், கூறு 136-ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.
2	இயக்குநர், பழங்குடியினர் நலம்	உறுப்பினர் செயலர்	
3	மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்	

கண்காணிப்புப் பிரிவுகள்

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிந்திட, கள ஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கண்காணிப்புப் பிரிவும் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது :

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1.	முதுநிலை காவல் துணை கண்காணிப்பாளர்	1
2.	காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர்	1
3.	தலைமைக் காவலர்	1

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மை அறியும் பொருட்டு பல கோப்புகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண் 50, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 28.07.2017-ன்படி நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வரும் 38

2019 ஜூலை 17]

சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளும் (மாவட்டங்களில் 31 பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், கண்காணிப்புப் பணியாளர்களுக்கு உதவிபுரியும் வகையில் அரசாணை (ப) எண் 263, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 26.10.2017-ன்படி 10 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிய மத்திய / மாநில அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களால் மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அனுப்பப்படும் கோரிக்கைகளை பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக உரிய காவல் துணை கண்காணிப்பாளருக்கு சாதி நிலை குறித்து கள ஆய்வு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு மாநில கூர்நோக்குக் குழு பரிந்துரை செய்யும்.

மாநில கூர்நோக்குக் குழுவில் ஆயிரக்கணக்கில் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண் 40, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 13.07.2018-ன்படி அரசு கூடுதல் செயலாளர்கள் தலைமையில் கூடுதலாக 2 மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்களை அமைத்து செயல்பட்டு வருகிறது.

5. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகவும், மைய அரசின் நிதியுதவியுடன் 1983 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்தில் “பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்” அமைக்கப்பட்டது. இம்மையம், மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் நிர்வாகச் செலவினங்கள் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படும் வேளையில் இம்மையத்தின் நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் மைய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் குறித்த நூல்களை பதிப்பித்தல், நாட்டுபுறப்பாடல்கள்,

கதைகள் சேகரித்தல் மற்றும் அழிந்து வரும் நிலையில் உள்ள பண்டைய பழங்குடியினரின் மொழிகளையும், கலாச்சாரத்தையும் பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளை பழங்குடியினர் ஆய்வு மையம் மேற்கொண்டு வருகிறது.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் வளர்ச்சி திட்டங்களை மதிப்பீடு செய்தல், பழங்குடியினரின் வளர்ச்சிக்கான பிரச்சினைகள் குறித்த கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல், பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்கான நோக்கு நிலை பயிற்சி வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் பழங்குடியினர் ஆய்வு மையத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

1996 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் அருங்காட்சியகம் பழங்குடியினர் ஆய்வு மையத்தின் வளாகத்தில் அமைந்துள்ளது. இம்மையத்தில் பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு சூரிய மின்சார வசதியுடன் கூடிய ஒரு திறந்த வெளி அருங்காட்சியகத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

2018-2019 ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பழங்குடியினர் ஆய்வு மையத்திற்கு மைய அரசின் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகத்தால் ரூ.1.77 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.1.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.3.80 கோடி மதிப்பிலான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி விடுவிப்புக்காக மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

6. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினரின், சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்ய வழி வகுக்கும் பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் 2019-2020-ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான

2019 ஜூலை 17]

ரூ.56,849.96 கோடியில், ரூ.1,277.84 கோடி (2.25 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

மாநில அளவில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இத்துணைத் திட்டத்தை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருங்கிணைப்பு அலுவலர் துறைத் தலைமை அலுவலர்களுடன் இணைந்து ஒதுக்கீட்டின் மீதான செலவினப் போக்கினை கண்காணித்து வருகிறார்.

43 துறைகளை உள்ளடக்கிய 17 செயலாக்கத் துறைகள் வாயிலாகப் பழங்குடியினர் துணைத் திட்டம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

முன்னுரை

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 1974 ஆம் ஆண்டு ஒரு கட்டுமான நிறுவனமாக இந்திய நிறுவனச் சட்டம், 1956-ன்கீழ் ரூ.1 கோடி பங்கு மூலதனத்துடன் துவங்கப்பட்டது. பின்னர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை சமூகத்தின் இதர பிரிவினருக்கு சமமாக முன்னேற்றும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் விரிவடைந்துள்ளன.

1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.150 கோடி மற்றும் ரூ.141.53 கோடி ஆகும். 1980 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், மத்திய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு.
3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2.1 பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

இக்கழகத்தின் மேம்பாட்டுப் பிரிவு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் வரை ஆண்டு வருமானம் பெறும் சமூகத்தின் வறிய நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக தேவையின் அடிப்படையிலான பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மூலதனச் சொத்துக்களை உருவாக்க வங்கிகளிடம் நிதி உதவி பெற்றிட இவ்வரசு திட்டச் செலவினத்தில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்குகிறது. இது அவர்களின் சமூக பொருளாதார நிலையில் நல்ல மாற்றத்தினை உருவாக்கியுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 7915 நபர்களுக்கு கடனாக ரூ.71.05 கோடி வழங்கப்பட்டது. மேலும் ரூ.44.80 கோடி மானியத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

அ. மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள்

(i) நிலம் வாங்கும் திட்டம்

நில உடைமை சமூக நிலை உயர்வினை காட்டும் அளவு கோல் என்பதால், ஆதி திராவிடர் மகளிரின் நில உடைமையினை

அதிகரிக்கவும், அவர்களின் பெயரிலேயே நிலம் வாங்கிட வழிவகுக்கும் சிறப்புத் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆதி திராவிடர் இனத்தை சேர்ந்த ஆண் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- நிலம் ஆதி திராவிடர் பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின்கீழ் ரூ.1 இலட்சம் மதிப்புக்குட்பட்ட நிலத்திற்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படுகிறது.
- ஆதி திராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

(ii) **நில மேம்பாட்டுத் திட்டம்**

நிலப் பயன்பாட்டை அதிகரிப்பதோடு, ஆழ்துளைக் கிணறு அமைத்தல் / திறந்தவெளிக் கிணறுகள், விசைக்கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சுழற்சி முறை பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளுக்காக வங்கிமூலம் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்குவதன் அடிப்படையில் வருமானம் ஈட்ட வழி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2019-2020 ஆம் நிதியாண்டில் 200 பயனாளிகளுக்கு மானியம் வழங்க ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) **தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

ஆதி திராவிட மக்களின் வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிடர் பயன்பெறும் வகையில் அவர்களது கல்வித்தகுதியை கருத்தில் கொள்ளாமல் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறுகின்றனர்.

2019-2020 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 5050 பயனாளிகளுக்கு, மானியம் வழங்கிட ரூ.67.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் - பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதி திராவிட மக்கள், எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக நியமனம் செய்ய விண்ணப்பிக்கும் பொழுதே 'அ' மற்றும் 'ஆ' வகைப்பாட்டில் (A&B Category) பெட்ரோல்/ டீசல் / எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைக்க உதவும் வகையில், தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத்தொகைக்காகவும் நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் நடப்பு மூலதனத்திற்காக (Working capital) நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும்பொழுதும் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் 10 நபர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.22.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதி திராவிடர் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான தொழில் செய்ய நிதி உதவி, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில் 3253 நபர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.37.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மருத்துவம் (MBBS) பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம் / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013-14 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மருத்துவம்சார் தொழிற்கல்வி பயின்ற முட நீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சொந்தமாக

2019 ஜூலை 17]

மருத்துவ மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் சம்பந்தப்பட்ட மன்றத்தில் (concerned council) பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் நிதியாண்டில் 50 பேருக்கு மானியம் வழங்க ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vii) சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுகையை மேம்படுத்திடும் பொருட்டு அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன் தேவையான நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இருமுறை தரநிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக போதுமான மற்றும் சரியான நேரத்தில், நியாயமான வட்டிக்கு கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத்தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் நிதியாண்டில் 5750 பயனாளிகள்/ உறுப்பினர்களைக் கொண்ட 350 சுய உதவிக் குழுக்களுக்கு திட்ட தொடக்க மானியமாக வழங்கிட ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ. முழு மானிய உதவித் திட்டங்கள்

வருமானம் ஈட்டும் தொழில்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதோடு மட்டுமல்லாமல், குடிமைப்பணி தேர்வு எழுதுவோர் மற்றும் தங்களது தொழிலை ஏற்படுத்த ஆர்வமுள்ள ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும், வேறு எந்த திட்டங்களிலும் உதவிபெறாத மற்றும் மானியம் பெற தகுதியுடையவர் என கருதும் நபர்களுக்கும் 100 விழுக்காடு மானிய உதவியினை தாட்கோ வழங்குகிறது.

(i) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி

இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதி திராவிடர் இளைஞர்கள் முதன்மைத் தேர்விற்கு (Main Examinations) *தங்களை தயார்படுத்திக்கொள்ள ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்படுகிறது.*

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் 100 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) மாநில குடிமைப் பணிகள் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் மாநில குடிமைப் பணிகள் தொகுதி-1 தேர்வில் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் 50 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி

தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் முறையான பாடத்திட்டத்தில் பயின்ற, 23 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் மற்றும் மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற ஆதிதிராவிடர் சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின்கீழ் ஒரு முறை நிதியுதவியாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் 500 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2019 ஜூலை 17]

(iv) பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் புரிய நிதி உதவி

பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிப்பதற்காக ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் 10 பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்களுக்கு (Cost Accountant) நிதியுதவி வழங்க ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) விருப்புரிமை நிதி

(அ) தாட்கோ தலைவர் விருப்புரிமை நிதி

2016-17-ல் அறிமுகப்படுத்தப்பட்ட தாட்கோ தலைவர் விருப்புரிமை திட்டத்தின்கீழ், ரூ.40,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அவசரகால நிவாரணம் வழங்குவதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் விருப்புரிமை நிதி

2012-13-ல் அறிமுகப்படுத்தப்பட்ட மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை திட்டத்தின்கீழ் ரூ.30,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள், நலிந்த கலைஞர்கள், மருத்துவம் செய்ய இயலாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், திறன் மேம்பாட்டுப் படிப்பு, தொடக்கக் கல்வி முதல் தொழிற்கல்வி வரை தொடர்வதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி உதவிகள், சாதிக் கலவரம் / தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் தகுதி வாய்ந்தவர்களுக்கு தேவைக்கேற்ற உதவி, நடைமுறை விதிகளுக்குட்பட்டு இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.1.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், நலிந்த கலைஞர்கள், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் மற்றும் மாவட்ட

ஆட்சியாளர்களால் தகுதியானவர்கள் என கண்டறியப்படுபவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ஒருவருக்கு ரூ.20,000/- வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் 280 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) துரித மின் இணைப்புத் திட்டம்

ஆதி திராவிடர் விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட மின்வாரிய வைப்புத் தொகை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு ரூ.75,000/- என வைப்புத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 1000 பேர் பயன்பெற ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இ. பழங்குடியினருக்காகச் செயல்படுத்தப்படும் நிதியுதவித் திட்டங்கள்

பழங்குடியினருக்காக பின்வரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோவால் 2012-2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) நிலம் வாங்கும் திட்டம்

நில உடைமை மகளிரது சமூக நிலையை உயர்த்தும் கோல் என்பதால் பழங்குடியின மகளிர், இத்திட்டத்தின்கீழ் நிலம் வாங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்ச திட்டத் தொகையான ரூ.7.50 இலட்சத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினர் அல்லாதவர்களிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு நடைமுறையில் உள்ளது.

2019 ஜூலை 17]

(ii) நில மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் தங்கள் நிலத்தை மேம்படுத்த நீராதாரங்களை உருவாக்குதல், பாசன வசதிகள் மற்றும் பாசனத்திற்காக மின்சார இணைப்புகள் அமைத்தல் உள்ளிட்ட நில மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இத்திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது. அதிகபட்ச நிதியுதவியாக 50 விழுக்காடு மானியத்துடன் ரூ.7.50 இலட்சம் வழங்கப்படுகிறது.

(iii) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

இத்திட்டத்தின் வாயிலாக பழங்குடியினர் தங்களது சமூக, பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில் வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்ச திட்டத்தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். திட்டத்தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் வரை மானியமாக நபர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

(iv) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்கு பயணியர் வாகனம் / சரக்கு வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் வரை மானியமும், கனரக வாகனத்திற்கு ரூ.5.50 இலட்சம் மானியமும் வழங்கப்படுகிறது.

(v) மகளிர் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன்

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, பூஞ்செடிகள் வளர்த்தல், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி மற்றும் பிற கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சார்ந்த தொழில்கள் செய்ய நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

(vi) இந்திய குடிமைப் பணி/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-1 முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-1 தேர்வு மாநில அளவிலான உயர்ந்த குடிமைப் பணி தேர்வாகும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி-1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மை தேர்வு மற்றும் இந்திய குடிமைப் பணி முதன்மைத்தேர்வு (Main Exam) *எழுதும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2015-16 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது.*

(vii) துரித மின் இணைப்பு திட்டம்

பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற நபர் ஒருவருக்கு ரூபாய் 75,000/- மின்வாரிய வைப்புத் தொகையாக செலுத்திட நிதியுதவி அளிக்கப்படுகிறது.

2.2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தகுதியான வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு/சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டு வழங்கப்படுகின்றன.

தாட்கோமூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்

- *மல்டிமீடியா & அனிமேஷன்* (Multimedia & Animation)
- *கட்டடக் கலை மற்றும் ஆட்டோகேட் உடன் இணைந்த கட்டட 2D வரைகலை* (Architcctural & Civil 2D Drafting with Auto CAD)
- *நவீன ஆடை தொழில்நுட்பம்* (Fashion Technology)
- *ஆடை வடிவமைப்பு* (Apparel Pattern Making)
- *அழகுக் கலை பயிற்சி* (Beautician)

2019 ஜூலை 17]

- முடி ஒப்பனையாளர் பயிற்சி (Hair Stylist)
- குளிர்சாதனப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு (Repair & Maintenance of Airconditioner)
- மின் வினைஞர் (Electrician)
- துணி வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (Cutting & Tailoring)
- கணினி வன்பொருள் மற்றும் இணைவமைவு (Computer Hardware & Networking)
- சில்லறை விற்பனை மேலாண்மை (Retails Management)
- தொலைத் தொடர்பு மேலாண்மை (Telecom Management)
- சூரிய மின் நிறுவி மற்றும் சேவை அளிப்பவர் (Solar Electric Installer & Service Provider)
- சுற்றுலா ஏஜென்ட் மற்றும் போக்குவரத்து பயண நடத்துநர் பயிற்சி (Tour Agent & Travel operator)
- கணக்காளர் (Accountant)
- பயணச்சீட்டு முன்பதிவு (Ticket Reservation)
- கை எம்ப்ராய்டரி (Hand Embroidery)
- பிளாஸ்டிக் செயல்முறை (Plastic Processing)
- ஊசி மோல்டிங் (Injection Moulding)
- ப்ளோ மோல்டிங் (Blow Moulding)
- இயந்திரம் இயக்குபவர் பயிற்சி (Machine Operator)

2013-2014 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை ரூ.41.02 கோடி செலவில் 100 நிறுவனங்கள்மூலம் 27,711 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

2.3. கட்டுமானப் பிரிவு

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நவீன சமுதாயக் கூடங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும்

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

(i) மைய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டம்மூலம் விடுதிக் கட்டடங்கள், பழங்குடியின மாணாக்கர்களுக்கு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் வன்பந்து கல்யான் யோஜனா திட்டத்தின்கீழ் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம், விடுதிகளில் அமைக்க பெற்றிருக்கும் RCC அலமாரிகளுக்கு தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி வசதி ஏற்படுத்துதல், ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள், சுற்றுச்சுவர், நவீன சமுதாயக் கூடங்கள், கழிப்பறைகள் கட்டுதல், தார் சாலைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், பழங்குடியினர் விடுதிகள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல் போன்ற பணிகள் மாநில அரசுத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டப் பணிகள் (நபார்டு)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிக் கட்டடங்களில் பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நபார்டு வங்கியின்

2019 ஜூலை 17]

ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டங்களின்கீழ் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தாட்கோ கட்டுமானப் பிரிவுமூலம் தற்போது பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.339.69 கோடி மதிப்பிலான 476 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

IV. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2019-2020ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் கோடியில்)

வ. எண்.	அலுவலகங்கள்	வருவாய்	மூலதனம்	மொத்தம்
1.	தலைமைச் செயலகம்	8.79	0	8.79
2.	ஆதி திராவிடர் நலத் துறை	3218.69	100	3318.69
3.	பழங்குடியினர் நலத் துறை	454.78	28.02	482.80
	மொத்தம்	3682.26	128.02	3810.28

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS